LOKAMANYA TILAK
(TAMIL)

J2:51y7M56
N24
19709

T.D.R.C No: 3939

R.No: 1690-1-1924

லோகமான்ய

# பாலகங்காதர திலக்

## (LOKAMANYA TILAK)

21 MAR 19[illegible]

**KRISHNASWAMI SARMA**

**CONGRESS PUBLICITY BUREAU**
SOWCARPET POST, MADRAS

ஸ்ரீ

# லோகமான்ய
# பாலகங்காதர திலக்

(ஜீவிய சரிதை)

கிருஷ்ணஸ்வாமி சர்மா
எழுதியது.

MAR 1924

காங்கிரஸ் விளம்பர சபை
சாவகார்பேட்டை போஸ்ட், சென்னை.
1924

[விலை ரூ. 1-8-0

V2:5147M56
N24

# முகவுரை

லோகமான்ய பால கங்காதர திலகரின் ஜீவிய சரித்திரத்தை எழுதுவதென்பது மிகவும் பிரயாசையான காரியம். இந்தியாவின் சுதந்திர உணர்ச்சிக்குப் பிதாமகராய் விளங்கின ஸ்ரீ திலகரின் சரித்திரத்தைச் சிறந்த மேதாவிகளான ஸ்ரீ அரவிந்தர், லாலா லஜபதிராய், [illegible] கேல்கார் முதலானோர் எழுதவே ஒருதலைப்பட்டதென்றால், அம்மகானின் சரித்திரத்தை நான் எவ்வளவு எழுதி உலகினரை மகிழவைக்க முடியும்? இந்தியாவில் இராஜ்யப்போராட்டத்திற்கு முதன் முதல் விதை விதைத்தவர் லோகமான்யர். சுதந்திர உணர்ச்சியைக் கிராமங்களிலும் பரவும்படிச் செய்தவர் லோகமான்யர். அன்னிய ஆட்சி ஆவியை ஒழிக்குமென பாரத மக்களுக்கு எச்சரிக்கை செய்தவர் லோகமான்யர். லோகமான்யர் சிறந்த தியாகி; உயர்ந்த ஞானி; மேலான தேசாபிமானி; இன்றியமையாத பரோபகாரி; இணையற்ற இராஜதந்திரி; நல்ல கர்மயோகி; முதிர்ந்த சாஸ்திர அறிஞர்; திடமான மனோவலிமை கொண்டவர். இம்மகானின் ஜீவியசரித்திரம் தமிழுலகினருக்கு ஒரு வழிகாட்டியாக இருக்குமென்றே நான் விரிவாக எழுதலானேன். லோகமான்யருடைய உபந்யாசங்களை இரண்டாவது பாகமாக அச்சிட உத்தேசித்திருக்கிறேன். இம்முயற்சிக்குத் தமிழ் உலகு உற்சாகம் ஊட்டுமாக!

கிருஷ்ணஸ்வாமி சர்மா.

## அவையடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கம். |
| 1. | சுதந்தர உதயம் ... ... ... | 1 |
| 2. | திலகரின் முதல் சம்ஸ்காரம் ... ... | 19 |
| 3. | குருமகாராஜ் திலகர் ... ... | 35 |
| 4. | திலகரும் மித்யாசாரமும் ... ... | 49 |
| 5. | இராஜமான்ய ஸ்ரீ திலக் ... ... | 67 |
| 6. | பண்டித திலக் ... ... ... | 101 |
| 7. | பாரத சனசபை பிரவேசம் ... ... | 124 |
| 8. | மிதவாதிகளின் சூழ்ச்சி ... ... | 162 |
| 9. | புதிய கட்சி ... ... ... | 179 |
| 10. | கர்மயோகி ... ... ... | 196 |
| 11. | கீதாரகஸ்யம் ... ... ... | 220 |
| 12. | லோகமான்ய திலகர் ... ... | 234 |
| 13. | இங்கிலாந்து வாசம் ... ... ... | 250 |
| 14. | திலகரும் காந்தியும் ... ... ... | 276 |
| 15. | மகா நிர்வாணம் ... ... ... | 294 |
| 16. | குறிப்பு ... ... ... | 302 |



லோகமான்ய திலகர்

லோகமான்ய

# பாலகங்காதர திலகர்

## சுதந்தர உதயம்

கிறிஸ்து பிறந்த பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைகாலத்தில், பாரதநாட்டில் சுதந்தர வெளிச்சம் தோன்றிற்று. அருணோதயத்திற்குமுன் இருள்படலங்கள் திரண்டிருப்பதுபோல சுதந்தரவெளிச்சம் உண்டாவதற்கு முன் பாரதநாட்டில் கம்பெனி அரசாங்க உத்தியோகஸ்தர்களின் கொடுமைப் படலங்கள் பல குவிந்தன. கி. பி. 1857-ம் ஆண்டில் வட இந்தியாவெங்கும் சிப்பாய்க் கலகத்தினால் இராஜீயப்புரட்சி யுண்டாயிற்று. அக்கலகத்திற்கு முன் இராஜப் பிரதிநிதியாயிருந்த டெல்ஹௌஸி பிரபு செய்த அட்டூழியங்களுக்கு அளவேயில்லை. அவர் பாரதநாட்டில் தொன்றுதொட்டு வந்த சுதேச சமஸ்தானங்களிற் பலவற்றைக் கெடுத்து கம்பெனி அரசாங்கத்துடன் அவைகளைச் சேர்த்துக்கொண்டார். பஞ்சாப் மாகாணத்தை யாண்டு வந்த இரஞ்சித்ஸிங் இறந்ததும் அப் பாஞ்சால சமஸ்தானத்தை அவருடைய மகன் திலீப்ஸிங் வழியாக விடாமல் அச் சமஸ்தானத்தை டெல்ஹௌஸி பிரபு, கம்பெனி அர

சாங்கத்துக்கு சுவாதீனப்படுத்திக் கொண்டார். பிறகு அயோத்தி சமஸ்தானத்தையும் மற்ற பல சமஸ்தானங்களையும் வட இந்தியாவில் அவர் கைப்பற்றினார். மகாராஷ்டிர சாம்ராஜ்ய ஸ்தாபகரான சிவாஜி மகாராஜாவின் வம்சத்தைச் சேர்ந்த ஸதாரா சமஸ்தானாதிபதி தனக்குப் பிள்ளையில்லாக் குறையினால், ஓர் பிள்ளையை இந்துதர்ம சாஸ்திரப்படி ஸ்வீகாரஞ் செய்துகொண்டு பிறகு மாண்டார். அந்த ஸ்வீகாரத்தை இராஜப் பிரதிநிதி ஹெண்டிங்ஸ் பிரபு அங்கீகரித்தும், அவர் பின் வந்த டல்ஹௌஸி பிரபு அங்கீகரிக்காமல், அச் சமஸ்தானத்தைக் கம்பெனி அரசாங்கத்திற்குச் சேர்த்துக்கொண்டார். பிறகு, மகாராஷ்டிர வம்சத்தைச் சேர்ந்த கிரௌலி சமஸ்தானமும் அவ்வண்ணமே கைப்பற்றப்பட்டது. ஜான்ஸி சமஸ்தானமும் அப்படியே பறிபட்டது. ஜான்ஸி சமஸ்தானத்தை யாண்டுவந்த இராஜா கங்காதாராவ் ஓர் பிள்ளையை ஸ்வீகாரஞ் செய்துகொண்டு, கி. பி. 1853-ம் வருடத்தில் இறந்தார். அவர் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு மிக்க உதவிபுரிந்து வந்தவர். அவருடைய இராணியார் லக்ஷ்மிபாய் தன் ஸ்வீகார மைந்தனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்து சமஸ்தானத்தை ஆளவைக்க எண்ணங்கொண்டிருந்ததெல்லாம் வீணாயிற்று. இராஜா கங்காதாராவ் கொண்ட ஸ்வீகாரத்தை டல்ஹௌஸி பிரபு அங்கீகரிக்கவில்லை. இராணி லக்ஷ்மிபாய் பலமுறை வேண்டியும் பிரயோஜனமில்லாமற் போகவே, பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மீது! கொடும் பகை கொண்டார். 1857-ம் வருடத்தில் நடந்த சிப்பாய்க் கலகத்தில் சேர்ந்து இராணி லக்ஷ்மிபாய் பல பிரிட்டிஷ் வீரர்களுடன் எதிர்த்து, அவர்களைக் கொன்றார். இராணி லக்ஷ்மிபாய், தாந்தியாதோபி, நானாராவ் முதலானோருடன் சேர்ந்து ஜான்ஸி சமஸ்தானத்தில் ஆங்கிலேயர் தலை காட்டாதபடி காத்துக்கொண்டார்.



இவர் ஆண் உடை தரித்துக் கையில் கத்தி தாங்கி, கடும் போர்புரிந்து யுத்தரங்கத்தில் கடைசியாக இறந்தார்.

பிறகு, நாகபூர் சமஸ்தானத்தை யாண்டுவந்த ரகோஜி போன்ஸ்லே அவர்கள் இறந்ததும், அந்த சமஸ்தானமும் கைப்பற்றப்பட்டது. இங்ஙனம், வட இந்தியாவிலும் தட்சிணத்திலும் பல சமஸ்தானங்கள் ஒன்றன்பின்னொன்றாக டல்ஹௌஸி பிரபுவின் ஆக்கிரகத்தால் கைப்பற்றப்பட்டன. இக்காரியம் பலருக்கு ஆத்திரத்தை யுண்டாக்கிற்று. 1857-ம் வருடத்தில் உண்டான சிப்பாய்க் கலகத்திற்கு இது ஒரு காரணமாகவுங் கூறப்படுகிறது. மகாராஷ்டிர சமஸ்தானங்கள் பல உரிமையிழந்து அவதிப்பட்ட காலத்தில், மகாராஷ்டிர வட்டத்தில் ஓர் அவதார புருடன் சுதந்தர ஸ்தாபனத்திற்காகப் பிறந்தான். மகாராஷ்டிர சாம்ராஜ்யத்திற்கு அடிகோலியாயிருந்த சிவாஜி மகாராஜாவைப் போலவே, பாரத ஸ்வராஜ்ய சாம்ராஜ்யத்திற்கு அடிகோலியாக அம்மஹா புருடன் அவதரித்தார். இவர் சாலிவாகன சகாப்தம் 1778-க்கு சரியான இராட்சத வருடம் ஆடிமாதம் ஆஷாட நட்சத்திரம் ஷஷ்டி, புதன்கிழமை நல்ல சுப லக்கினத்தில் பிறந்தார். (கி. பி. 1856-ம் வருடம் ஜூலைமாதம் 23-ந் தேதி.) சிவாஜி மகாராஜாவுக்குப் பிறகு புனா சமஸ்தானத்தை யாண்டுவந்த பேஷ்வாக்களின் வமிசத்தில் இவர் பிறந்தவர். பாலாஜி விஸ்வநாத்பேஷ்வா பிறந்த இடத்திற்குச் சமீபத்திலேயே இவரும் பிறந்தார். பாஜீராவ் பல்லால், பாலாஜீராவ், மாதவராவ், நாராயணராவ் முதலியோர் பாரதநாட்டின் பெரும்பாகத்தை நூறுவருடகாலம் ஆண்டு வந்ததின் பயனாக, மீண்டும் பாரதநாடு ஸ்வராஜ்யத்தையே பெற்றிருக்க வேண்டுமென்று சிவாஜியே திலகராக அவதரித்தாரெனவும் கூறலாம்.

ஸ்ரீ பால கங்காதர திலகர் சிறந்த இராஜ தந்திரிகள்

பிறந்த வம்சத்திற் றோன்றினவர்; சமஸ்தானங்களை ஸ்தாபித்து அரசாண்ட வம்சத்திற் றோன்றினவர். இராஜதந்திரம் அவர் இரத்தத்தில் கலந்திருந்தது. ஸ்வராஜ்யம் அவர் பிறப்புரிமையாக விருந்தது. சுதந்தரத்தேவி பாரதநாட்டில் பிரசன்னமாகவேண்டி, அவர் இடைவிடாது இராஜீய யாகஞ் செய்து வந்தார். ஸ்ரீ பால கங்காதர திலகர் மகாராஷ்டிர மண்டலத்தில் இரத்னகிரி என்னும் புரியில் பிராமண வருணத்தில் சாண்டில்ய கோத்திரத்தில் கங்காதரபண்ட் திலகர் (கங்காதர இராமசந்திரரால்) செய்த தவப்பயனால் அவர் குமாரராய்த் தோன்றி, இளமைப் பருவத்திலேயே வடமொழி வியாகரண முதலியவற்றில் வல்லவராய், தாம் பிறந்துள்ள சமயத்தில் முக்தி பெறுதற்குக் காரணமாகிய ஞான நூல்களையும் நவி, அவற்றின் பொருளைத் தந்தையிடம் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்துகொண்டு, அன்பு, அருள், அடக்கம், ஒழுக்கம், வாய்மை முதலிய நற்குண நற்செய்கைகளில் மிகச் சிறந்தவராய் இல்லறங்கொண்டு ஒழுகுவா ராயினர்.

1909-ம் வருடத்தில் ஸ்ரீமான் கோகலே இங்கிலாந்துக்குப் போயிருக்கையில், ஆங்கிலேய னொருவர் ஸ்ரீ திலகரின் விஷயமாக விசாரிக்கையில், 'திலகர் நூற்று இருபது வருடங்களுக்கு முன்னர் பிறந்திருப்பாரே யாகில், தமக்கென ஓர் ராஜ்யத்தை ஸ்தாபித்திருப்பார்' என்று கோகலே கூறினார். இது முற்றிலும் உண்மையே. ஸ்ரீ பால கங்காதர திலகர், மேனாட்டு சம்பிரதாயத்தை யனுசரித்தவர்களைப்போல விராமல், தனிவழியாகவே தொன்று தொட்டு வந்த பாரதநாட்டு சம்பிரதாயத்தையே பின்பற்றி ஒழுகுவா ராயினர். நான்கு அல்லது ஐந்து தலைமுறையாக பாரத நாட்டில் சுயராஜ்யங்கொண்டு அரசாண்டவர்களின் வம்சத்தில் உதித்தவராதலால், ஸ்ரீ திலகர் சதா தேசவிடுதலை



யொன்றையே நாடிவந்தார். காலத்தின் கொடுமையினால் அவருக்கு அவர் எடுத்தகாரியம் முடிவுபெற வில்லை யொன்றைத் தவிர, அவர் செய்த முயற்சி, தியாகம் யாவும் இவ்வளவென கூறற் பாலதல்ல. பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அவருடைய முயற்சியைத் தடுத்தும் அவரைப் பல்கால் துன்புறுத்தி வந்தும், அவர் இறக்கும்வரையில் பாரதநாட்டில் நடுநாயகமாய் விளங்கிவந்தார். ஸ்ரீ பாலகங்காதர திலகர் தனிமனிதனாய் நின்று நாற்பது வருடகாலம் இந்தியாவின் ஸ்வராஜ்யத்திற்காக அதிகார வர்க்கத்தினருடன் அரும் போர் புரிந்துவந்தார். பாரதநாட்டின் புதிய உணர்ச்சிக்குத் தாயுந் தந்தையுமாயிருந்தவர் திலகரே. ஸ்வராஜ்ய உணர்ச்சியும் தேசிய ஊக்கமும் பாரதவாசிகளுக் குண்டானது திலகராலேயே. ஸ்ரீ பாலகங்காதர திலகர் தம் தகப்பனுக்கு இரண்டாவது மகனாக அவதரித்தவர். இவரது தகப்பனார் கங்காதர பண்ட் என்பவரை நானு என்றும் அழைப்பர். நானுவுக்குப் பிறந்த மூத்தபிள்ளை சிறு வயதிலேயே இறந்துவிட்டபடியால், இரண்டாவது மகனான ஸ்ரீ பாலகங்காதர திலகரை வெகு செல்வமாகத் தகப்பனார் ஆதரித்து வந்தார். பாலகங்காதர திலகரை பலவந்தராவ் என்றும் அழைப்பர். திலகருடைய தாய் பார்வதிபாய் மிக்க தெய்வபக்தி வாய்ந்தவள். மகா உத்தமி. எவரிடத்தும் அன்புவாய்ந்த குணசீலி. பாலகங்காதர திலகரை இமைபோல் காத்து வெகு பட்சமாய்ப் பாராட்டிச் சீராட்டிவந்தாள். திலகரும் அன்னையைத் தெய்வமாகக்கொண்டு வணங்கிவந்தார். தாயும் தந்தையும் பிரத்யக்ஷ தெய்வமென்பதை யறிந்து திலகர் அவர்களை வணங்கிவருவர். சின்னஞ் சிறுவயதிலேயே திலகர், தாயும் தந்தையும் தரணியிற் கிடைக்கக்கூடாத அபூர்வ வஸ்துக்கள் என்பதை யறிந்தார். கனவிலும் நினைவிலும் சதா எப்பொழுதும் எவ்வேளையிலும் மாதா பிதாக்களின்

வார்த்தையைத் திலகர் தட்டுவதில்லை. தாய் தகப்பன்மார்களைச் சந்தோஷிக்கச் செய்வதே முக்கிய விரதமென ஸ்ரீ திலகர் கொண்டிருந்தார். திலகர் ஓர் சிறந்த புத்திரன் என அவர்கள் அகமகிழ்ந்து ஆநந்தப் பரவசங்கொண்டிருந்தார்கள். திலகரால் தங்கள் பெயரும் குலமும் சிறப்படையுமென்பதை அவர்கள் அறிந்து திலகர் பூர்ண ஆயுள் கொண்டிருக்கவேண்டுமென்று தெய்வங்களைப் பிரார்த்தித்து வந்தார்கள். திலகருடைய தகப்பனார் - காறு கி. பி. 1820-ம் ஆண்டில் ஆகஸ்டு மாதத்தில் பிறந்தார். அவர் ரத்னகிரி ஜில்லாவைச் சேர்ந்த டாபோல் என்னு மிடத்தில் கல்விகற்றார். அவர் நல்ல சமஸ்கிருத பண்டிதர். சதாசார சம்பன்னர். சாஸ்திர அறிஞர். ஆங்கிலம் படிக்கவேண்டுமென்றும் அவாகொண்டு கால்நடையாக வழிநடந்து புனா நகர் வந்து ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்ந்து கல்விகற்றுவந்தார். அக்காலத்தில் ஆங்கிலம் படிப்பது மிகவும் அர்வம். பிராம்மண குலத்தில் வைதிக வம்சத்திற் றோன்றியவர்கள் ஆங்கிலம் படிப்பது சாஸ்திர விரோதமென்று இருப்பர். திலகருடைய தகப்பனார் எத்தகைய வசைமொழியையுங் கேளாது, ஆங்கிலம் படிக்கவேண்டுமென்னும் அவா ஒன்றையே பெரிதாகக்கருதிப் பாடசாலையிற் சேர்ந்து ஆங்கிலம் கற்றுவந்தார். ஆங்கிலம் கற்றுவருங் காலில் குடும்பத்தில் பல துன்பங்கள் உண்டானதின்பேரில் பள்ளிக்கூடத்திற்குப் போவதை நிறுத்திவிடும் படியாக நேர்ந்தது. ஆங்கிலப் படிப்பை விர்த்திசெய்ய முடியாதபடி பல இடையூறுகள் உண்டாகவே, காறு, மனம்வருந்தி கடைசியாக ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயராகச் சென்றார்.

அக்காலத்தில் பள்ளிக்கூட உபாத்தியாயருக்கு மிக்க மரியாதையுண்டு. என்றாலும், பணவரும்படி மிகவும் சொற்பம். பூர்வம், பள்ளி உபாத்திமார்கள் கேவலம்



பணத்திற்காகக் கல்விகற்பித்து வருவதில்லை. அவர்கள் வித்யா தானத்தை யுத்தேசித்தும், அறிவைப் புகட்டவேண்டும் என்னும் மேலான தர்மத்தை யுத்தேசித்தும் உபாத்தியாத் தொழிலில் அமர்ந்து கல்வி கற்பித்து வந்தார்கள். காறுவும் அவ்வண்ணமே உபாத்தியாயர் தொழிலில் அமர்ந்து மாதம் 10 ரூபா சர்க்கார் சம்பளம் வாங்கிக்கொண்டிருந்தார். அப்பத்துரூபாய் சம்பளம் அக்காலத்தில் மிகவும் பெருமையாகவே கொண்டாடப்பட்டு வந்தது. காறு கல்வி கற்பித்து வந்ததோடல்லாமல் தவிர, மற்றநேரங்களில் கணிதம், சமஸ்கிருதம், மாராடிபாஷை முதலியவைகளை வாக்குத்துடன் பயின்று வந்தார். அவர் கணிதத்தில் மிக்க நுட்பமான அறிவைப் பெற்றிருந்தமையால், முக்கோண சாஸ்திர (Trignometry) விஷயமாக ஓர் புத்தகத்தை எழுதி வெளியிட்டார். தவிர, மாராடி பாஷைக்கு இலக்கண மொன்றையும் எழுதி வெளியிட்டார். அவ்விரண்டு புத்தகங்களும் காறுவின் பாண்டித்தியத்தை வெளிப்படுத்தின. பல பள்ளி வித்தியார்த்திகளுக்குச் சாதகமாக அவ்விரண்டு நூல்களுமிருந்தன வென்பதைப் பல பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்கள் நற்சாட்சி பத்திரங்களை அனுப்பினார்கள். 17-வருட காலம் உபாத்தியாயர் தொழிலில் இருந்து பின்னர், அரசாங்க வித்தியா பரிசோதகராக (Inspector) அவர் நியமனம் பெற்றார். அதிகாரிகளுடைய தயவுக்கு நச்சிநிற்பதும், அவர்கள் பின்னேடிப் பல்லிளித்து நிற்பதுமான செய்கைகளை இயற்கையிலேயே கொண்டிராத காறு, மிக்க மரியாதை யுள்ளவராகவே சுயமதிப்பைப் பெரிதும் போற்றி வந்தார். அதனால், அவருக்குக் கீழ்ப்பட்டவர்களுக்கு வித்யா பரிசோதகர் உத்தியோகங் கிடைத்தும் தொகுதாலவரை காறுவுக்குக் கிடைக்காமலிருந்தது. ஆனால், காறுவின் பாண்டித்தியம், பிரபலமாகவே, அவரைப் புறக்கணிக்க முடியா

வில்லை. கடைசியாக வித்தியா இலாகா அதிகாரிகளும் காருவுக்கு வித்யா உதவி பரிசோதகர் உத்தியோகம் கொடுத்தார்கள். அவ்வுத்தியோகத்தைப் பெற்ற காரு குடும்பத்துடன் புனாநகர் வந்து சேர்ந்தார்.

ஸ்ரீ திலகரும் தாய் தகப்பன்மார்களுடனே புனாவில் வசித்து வந்தார். ஐந்தாம் ஆண்டு நிறைந்ததும், அந்தணர் மரபினருக்குரிய அட்சராப்பியாசம் திலகருக்குச் செய்யப்பட்டது. அட்சராப்பியாசம் நடந்தும், திலகர் வெகுநாள் வரை பள்ளிக்கூடத்திற்கு போகவில்லை. சிறுவயதில் ஸ்ரீ திலகர் வெகு பலஹீனமுள்ளவராகவே யிருந்தார். பலஹீனமுள்ள குழந்தைக்குப் படிப்பதினால் இன்னும் பலஹீனமேற்படுமென்று தகப்பனார் அறிந்து, ஸ்ரீ திலகரைப் பதினொரு வயது வரை வீட்டிலேயே வைத்துக் கொண்டு, ஓழிந்த நேரங்களில் கல்வி கற்பித்து வந்தார். காரு சிறந்த சமஸ்கிருத பண்டிதராயிருந்ததினால், திலகருக்கு சமஸ்கிருதம் சொல்லிவைத்தார். வீட்டிலேயே திலகர், சமஸ்கிருதம், மராடி முதலிய பாஷைகளை நன்கு கற்றுவந்தார். காருவுக்கு சமஸ்கிருத காவியத்தில் பிரீதி; அதிலும் பாணகவியின் காதம்பரியில் வெகு பிரீதி. சதா காதம்பரியைப் படித்துக்கொண்டே யிருப்பார். காதம்பரியைப் படிக்கும் பொழுதெல்லாம் ஸ்ரீ திலகர் வெகு கவனமாய்க் கேட்டுக் கொண்டிருப்பார். ஒருநாள், திலகர் தன் தகப்பனாரிடம் சென்று 'அப்பா! நீங்கள் படிக்கும் அப்புத்தகத்தை எனக்குப்படிக்கக் கொடுங்கள்' என்று கேட்டார். காரு, பிள்ளையின் வேண்டுகோளை மறுக்க இஷ்டப்படவில்லை. காதம்பரியோ திலகருக்குச் சரியாக அர்த்தமாகாது. என்ன செய்வதென்று யோசித்து காரு, உடனே தன் மகனைக் கூப்பிட்டு, 'பிள்ளாய்! இதோ! இந்த கணக்கை நீ போடுவாயேயானால், காதம்பரி புத்தகம் உனக்கே கொடுக்கப்



படும்' என்று கூறி கஷ்டமான ஒரு கணக்கைக் கொடுத்தார். ஸ்ரீ திலகர் உடனே பலகையும் பலபமும் (எழுதுகோல்) கையில் பிடித்து ஒன்றரை மணிநேரம் மிக்க பிரயாசைப்பட்டு அக்கணக்கைப் போட்டு முடித்தார். தகப்பனார், திலகரின் விடாமுயற்சியையும் சமஸ்கிருத பாஷையைப்படிக்கவேண்டுமென்கிற அவாவையும் கண்டு சந்தோஷித்து, காதம்பரியை வெகு உற்சாகத்துடன் கொடுத்தார். ஸ்ரீ திலகர் பரிசுபெற்ற காதம்பரியைத் தாய்க்கும் சகோதரிக்கும் காண்பித்து ஆனந்தக் கூத்தாடினார். அவர்களும் திலகரின் புத்தியையும் கல்வியில் அவர் கொண்டிருந்த ஊக்கத்தையும் கண்டு வெகு சந்தோஷத்துடன் திலகரை ஆசிர்வதித்தார்கள். திலகர் பெற்றமுதல் வெற்றி இதுவே. திலகரின் தாயார் தன் மகன் அடைந்த முதல் வெற்றியைப் பார்த்தது அதுவே கடைசிதரம். திலகரின் மற்ற வெற்றிகளைக் காணும் பாக்கியத்தை அன்னை பெறவில்லை. திலகரின் தாய் சதா உபவாசமிருப்பதும் நோன்பு பூண்டிருப்பதுமாகவேயிருந்து வந்ததால், தேகம் இளைத்து வெகுநாள் பூமியில் வாழமுடியாமல் இறந்தாள். மகாராஷ்டிர மாதர்கள் நல்ல நோன்புடையவர்கள். சதா உபவாசமும் விரதமும் அனுஷ்டித்து வரும் இயல்பினை அவர்கள் பெற்றவர்கள். வீட்டிற்கு மகாலட்சுமிபோல் தாண்டவமாடி வந்த தாய் இறந்ததைக் காண திலகருக்கு மனம் சகிக்கவில்லை. தாய் இறந்ததைக் கண்ட திலகர் சோர்வடைந்தார். விம்மி விம்மி யழுதார். தன் துரதிருஷ்டத்தை நொந்தார். தாயைப் பறிகொடுத்தவன் என்று உலகம் பழிக்குமே யென்று மிகவும் ஏங்கினார். தாயின் மரணத்தைப்பற்றி மிகவும் துக்கித்தார். இவள் கி. பி. 1866-ம் ஆண்டில் ஆவி துறந்தாள். தாய் இறந்த சில நாட்களுக்குப் பிறகு ஸ்ரீ திலகர் பள்ளிக்குச் சென்றார். பள்ளிக்கூடத்தில் வெகு திறமை

யாகப் படித்துவந்தார். உபாத்தியாயர்கள் இவருடைய புத்தி நுட்பத்தைக் கண்டு மெச்சுவார்களாயினும், தாங்கள் போதிக்கும் முறையை அலட்சியஞ் செய்து வருகிறாரென்று மட்டும் இவரிடத்தில் அவர்களுக்குக் கோபம் இருந்தது. உபாத்தியாயர்களின் போதனா முறைகளைத் திலகர் அங்கீகரிக்கவில்லை. கேவலம் 'குருட்டு பாடம் பண்ணுவது' என்று இருப்பதை திலகர் சகிக்காமல் தம் புத்தி நுட்பத்தைக் கொண்டு பாடங்களைக் கற்றுவந்தார். கணக்கு உபாத்தியாயர் ஒருநாள் வகுப்பில் ஒரு கஷ்டமான கணக்கைக் கொடுத்துப் போடும்படி எல்லா பிள்ளைகளுக்கும் கட்டளையிட்டார். திலகர் ஐந்து நிமிஷத்தில் அக்கணக்கைத் தன் மனதிலேயே ஆராய்ந்து அதின் முடிவை மட்டும் பலகையில் போட்டுக் காண்பித்தார். உபாத்தியாயர் 'இதனுடைய வழியெங்கே' என்று கேட்கவும், திலகர் உபாத்தியாயரைப் பார்த்து, 'ஐயா! இந்த கணக்கின் வழியெல்லாம் என் தலைக்குள்ளே யிருக்கிறது' என்று தம் மண்டையைத் தொட்டுக் காண்பித்தார். அன்னப் பக்ஷி பாலையும் நீரையும் வேறு பிரித்துப் பாலை மாத்திரம் உட்கொண்டு நீரை நீக்கிவிடுதல் போலவும், பசு மிக்க புல்லுள்ள இடத்தைக் கண்டால் அப்புல்லை வயிறு நிரம்ப மேய்ந்து பின்பு அவ்விடத்திலிருந்து சிறிது சிறிதாக வாயில் வருவித்துக் கொண்டு மென்று தின்னுதல் போலவும், நல்ல மாணாக்கரியல் பிருப்பதால், அவ்வியல்பினையே திலகரும் பெற்றிருந்தமையால் மொழிதனை இன்மையும் இழிதனை இயல்பும் கொண்ட ஆசிரியர்களின் போதனையைத் திலகர் சரிவர ஏற்றுக்கொள்ளவில்லை. ஆசிரியர்களின் வகுப்பில் போதிக்கும் பாடங்களை ஒருமுறை கேட்பதாலேயே கிரகிக்கும் சக்தியைத் திலகர் பெற்றிருந்ததால், அவர் உபாத்தியாயர்களின் போதனைப் பாடங்களை மற்ற பிள்ளைகள் எழுதுவதுபோல்



எழுதுவது கிடையாது. அதனால் உபாத்தியாயர்கள் திலகருடைய தந்தையிடம் போய் அடிக்கடி முறையிடுவார்கள். திலகர் ஒரு வருடத்திலாவது பரீட்சையில் தேறாமலில்லை. பிரவேசப் பரீட்சையில் தேறும் வரையில் திலகர் வகுப்பில் அநேகமாக முதன்மையாகவே யிருந்துவந்தார். திலகர் சிறுபிராயத்திலேயே தாயை யிழந்ததால், அவருக்குச் சிறு வயதிலேயே விவாகம் முடித்துவைக்க வேண்டுமென்று உறவினர் தந்தையை வற்புறுத்தினர். தவிர, வித்யா உதவி பரிசோதகராக சர்க்கார் உத்தியோகம் பெற்றவருடைய பிள்ளை சிறுவயதில் கலியாணமில்லாமல் இருக்கலாமா என்னும் நோக்கத்தைப் பலர் அக்காலத்தில் கொண்டிருந்தனர். பலர் ஸ்ரீ திலகருக்குப் பெண் கொடுக்க முன்வந்தனர். இரத்னகிரி ஜில்லாவைச் சேர்ந்த லட்கார் கிராமத்திலிருக்கும் பலால் பால் என்பவருடைய குமாரத்தி சௌபாக்கியவதி * தாபிபாயை ஸ்ரீ திலகருக்குக் கொடுத்து விவாகஞ் செய்ய [illegible]ச்சயஞ் செய்தார்.

ஸ்ரீ திலகர் தம்பதினையாண்டளவில் இல்லறத்தைக் கொண்டார். சின்னஞ் சிறுவயதில் விவாகம் என்னும் சடங்கு முறை அறியாத ஒரு பாலனுக்கும் பாலிகைக்கும் விவாகம் நடத்தப்பட்டது. மகாராஷ்டிரத்தில் பாலிய விவாகம் வெகு பிரபலமாகப் பூர்வம் நடந்துவந்ததின் காரணமாகவே, பல சீர்திருத்தக்காரர்கள் மகாராஷ்டிர தேசத்தில் தோன்றினார்கள். பாலிய விவாகம் மிகவும் கொடியதென பல சௌகிகர்கள் அபிப்பிராயப்படுவதுபோலவே, வைதிகர்களும் இப்பொழுது அபிப்பிராயப்படலானார்கள். சிறந்த, ஸ்ரீ திலகர் விவாகஞ்செய்த மறுவருடம் பிரவேசப்

---

* தாபி என்பது யமுனை நதி - நதிகளின் பெயரை மகாராஷ்டிரத்தில் ஸ்திரீகளுக்கு வைப்பது இயற்கை.

பரீட்சையில் தேறினார். ஆனால், விவாகமாகிச் சில மாதங்களுக்குப் பிறகு ஸ்ரீ திலகர் தந்தையையும் இழந்தார். ஸ்ரீ திலகர் சிறுபிராயத்தில் தாயும் தந்தையும் இழந்தவராய்த் தாரணியில் தனியே நிற்கலானார். அனாதைப் பிள்ளையென இவரைக் கூறி பலர் வருந்திவந்தனர். எனினும், கல்வி கற்பதை விடாமல் பிரவேசப் பரீட்சையில் தேறினதும் 1873-ம் வருடத்தில் ஸ்ரீ திலகர் தக்ஷிண சர்வ கலாசாலையில் உயர்தர கல்விக்காகப் போய்ச் சேர்ந்தார். ஸ்ரீ திலகர் அத் தக்ஷிண சர்வ கலாசாலையிலேயே மாணவர்களுக்காகத் தனியே ஏற்பட்டிருக்கும் போஜன சாலையில் உண்டு அக் கலா சாலையில் ஏற்பட்டிருக்கும் விடுதிகளிலொன்றில் தங்கியிருந்தார். இதற்கு ஆங்கிலத்தில் ஹாஸ்டல் என்பார். பூர்வம், பாரத நாட்டில் குருகுலவாசஞ் செய்துகொண்டிருக்கும் வித்யார்த்திகள் எங்ஙனம் ஆசாரியருடைய வீட்டிலேயே அன்னமுண்டு, குருகுலத்தில் தங்கி வருவார்களோ, அந்த மாதிரியாகவே ஏற்பட்ட இந்த ஹாஸ்டல் முறையானது குருகுலத்தைப்போன்ற மேலான தன்மையும் புனிதவடிவமும், தெய்வத் தன்மையும் இல்லாமலிருக்கும். சாதாரணமாக நகரங்களில் உள்ள கேவலமான சாப்பாட்டு கிளப்புகளைக் காட்டிலும் சௌக்கியமாகவும் சுத்தமாகவுமிருக்கும்.

ஸ்ரீ திலகர் சர்வ கலாசாலையில் கல்விகற்று வந்த காலத்தில் இங்கிலாந்திலுள்ள ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் முதலிய ஊர்களிலுள்ள சர்வ கலாசாலைகளினின்றும் ஆங்கில போதகாசிரியர்கள் ஒருவர் பின்னொருவராக இந்தியாவுக்கு வரலானார்கள். அதற்குமுன், கம்பெனி அரசாட்சியில் இராணுவ உத்தியோகத்தைச் சேர்ந்தவர்களிற் பெரும்பாலார் போதகாசிரியர்களாக அறையுங் குறையுமாகக் கல்வி கற்பித்து வந்தனர். கம்பெனி அரசாங்கத்தாரால் ஆங்காங்கு ஸ்தாபிக்கப்பட்ட சில கலாசாலைகளுக்கு இரா



ணுவ உத்தியோகஸ்தர்களே மேல்விசாரணைக்காரர்களாகவும் அத்யட்சகர்களாகவு மிருந்துவந்தனர். கம்பெனி அரசாட்சி நீங்கி, விக்டோரியா மகாராணியார் பொன்முடி தரித்து அரசாள வந்ததும் சர்வ கலாசாலைகள் சற்றே ஒழுங்குபட்டன. கம்பெனி காலத்தில் இருந்ததைவிட கல்விச்சாலைகள் ஒழுங்குள்ளவைகளாகத் திருத்தப்பட்ட போதிலும், அவை இந்தியர்களின் தேசிய உணர்ச்சியை யூட்டக் கூடியவைகளாயில்லை. ஆங்கிலக் கல்வியைப் பாரத நாட்டில் பரவச்செய்யவேண்டு மென்ற தாராள நோக்கம் ஒருவாறு அக்காலத்திய ஆங்கில கல்விமான்களுக்கு இருந்த போதிலும், அக்கல்வி [illegible]ரத சமூகத்தின் தொன்மை வாய்ந்த நாகரீகத்தையும், ஆஸ்திக புத்தியையும், டாம்பீக மற்ற வாழ்க்கையையும், தேசிய உணர்ச்சியையும் அழித்தது. இங்கிலாந்திலுள்ள சர்வ கலாசாலைகளில் போதனா முறைக்கு அனுகுணமாயுள்ள பாடபுத்தகங்களே இந்தியாவிலுள்ள சர்வ கலாசாலைகளுக்கும் வைக்கப்பட்டன. காளிதாஸன், பாணன் முதலிய கவிசிரேஷ்டர்களுக்குப் பதிலாக ஷேக்ஸ்பியர், ஷெல்லி, பைரன் முதலானவர்களை இந்தியர்கள் ஆஸ்ரயிக்கலானார்கள். சுருங்கச் சொல்லின் எல்லாம் ஆங்கில மயமாகவே யிருந்து வந்தது. இந்திய வித்தியார்த்திகள் [illegible] உருக, தேகம் இளைக்க, இரவும் பகலும் படித்துப் பரீட்சையில் தேறிவரலானார்கள். பி. ஏ. பட்டம் (வித்யாவினோதன்) பெறும் மாணவர்களில் 100-க்கு 75 பேர்கள் அங்கம் மெலிந்த கூழைகளாகவே யிருப்பதைக் காண்கிறோம். இத்தகைய விபரீதத் தோற்றங்களை ஸ்ரீ திலகர் வித்யார்த்தியாக விருக்கையிலேயே காணலானார். ஸ்ரீ திலகரு[illegible] தேகம் மெலிந்த வாதலால், உடனே தேகத்தைப் பலப்படுத்தின பிறகே கல்வியில் கவலை செலுத்தவேண்டுமென்[illegible] தீர்மா

னித்து, ஒருவருடகாலம் பாடங்களைச் சிறிதும் கவனிக்கா
மல் தேகத்திற்குப் பலமுண்டாக்கத்தக்க பயிற்சிகளைச்
செய்துவந்தார். ஸ்ரீ திலகர், ஆறுகளில் நீந்துவதும், படகு
ஏற்றம், குஸ்தி முதலியவைகளைச் செய்வதுமாக இருந்தார்.
அக்காலத்தில் ஸ்ரீ திலகர் வெகு நன்றாக நீந்தக்கூடியவ
ரென பரிசும் பெற்றார். படகு பந்தயம் விடுவதிலும் ஸ்ரீ
திலகர் வெகு சமர்த்தர். குஸ்தி, சண்டை போடுவதிலும்
நல்ல திறமை வாய்ந்தவர். அக்காலத்திலிருந்தே ஸ்ரீ தில
கர் ஆங்கில வழியாகத் தேகப்பயிற்சிசெய்ய எள்ளளவும்
மனங்கொள்ளவில்லை. டென்னிஸ், கிரிக்கட் முதலிய விளை
யாட்டுகளிலும் புட்பால் பழகுவதிலும் ஸ்ரீ திலகருக்கு இஷ்ட
மில்லை. தொன்று தொட்டு பாரதநாட்டில் பழகிவந்த
பயிற்சியையே ஸ்ரீ திலகர் மேற்கொண்டார். ஸ்ரீ திலகர்,
எப். ஏ பரீட்சையில் அவ்வருடம் தேறவில்லை; ஆனால்,
தேகம் வலிமைபெற்று தேகப்பயிற்சியில் தேறினார். கா
லை ஆகாரம் அதிகமாகப் புசிக்கத் தொடங்கினார். பம்பா
யில், இரண்டொருவரும் ஒரு சாப்பாட்டு ஹோட்டலில்
ஸ்ரீ திலகர் தங்கவேண்டிவந்தது. இவரை யொத்த மற்ற
பிள்ளைகளும் அந்த சாப்பாட்டு ஹோட்டலில் தங்கினர்.
திலகர் மற்ற பிள்ளைகளைவிட அதிகமாக உண்பதையும், ஸ்ரீ
திலகருக்குக் கொடுக்கும் அன்னம் அவர் கொடுக்கும்
பணத்திற்கு மேற்பட்டிருக்கிறதென்றும் அவ்வோட்டல்காரன்
முறையிட்டான். இப்பொழுதும், சென்னைக்கு வெளியே
யுள்ள ஊர்களினின்றும் வரும் மாணவர்கள், சென்னையி
லுள்ள சாப்பாட்டு ஹோட்டலில் தங்கி சில மாதங்கள்
வரை நன்றாக உண்டு தேகத்தைப் பாதுகாப்பது வழக்கம்.
ஆனால், வரவர, நாகரிகமென்னும் மயக்கால் சிற்றுண்டிகளை
அடிக்கடி உண்டு ஜீர்ணக்கருவிகளை ஓடவிடாமற்படி செய்
கின்றனர். ஸ்ரீ திலகர் அன்ன முண்பது தவிர, அடிக்கடி



சிற்றுண்டிகளை யாயினும் பானங்களை யாயினும் அருந்துவது
இல்லை. வெகு நிர்ணயமாகக் குறித்தகாலத்தில் நன்றாகப்
புசிப்பார். காலைவேளையில் ஒன்றும் புசிப்பது கிடையாது.
திலகர் இரண்டுவேளையே புசிப்பார். இடைவேளையில் பழங்
கள் தின்பார்.

ஸ்ரீ திலகர் 1897-98-ம் வருடத்தில் சிறைவாசம் செய்த
கஷ்டத்தால் தேகம் மெலிவடைந்த நிலைமையிலும் காசி
க்ஷேத்திரத்திற்குப் போயிருந்த காலத்தில் இவர் கங்கையில்
காலைமைல் தூரம் நீந்திவருவார். 'ஒருவன் தன்னுடைய
16-ம் பிராயத்திலிருந்து 25-ம் பிராயம் வரை அடிக்கடி
உண்ணாமலும், கெட்ட பழக்கமில்லாமலும், தேகத்தைச்
சரிவர காப்பாற்றி வருவானேயானால், அவன் தன்னுடைய
தள்ளாதவயதிலும் சோர்வின்றி எத்தகைய காரியத்தையும்
செய்துவருவான்' என்று ஸ்ரீ திலகர் கூறுவார். கலாசாலை
யில் ஸ்ரீ திலகர் படித்துவருங் காலில் சதா விளையாட்டும் புன்
சிரிப்பும் கொண்டவராகவே யிருப்பார். மறைந்துப் பேசுங்
குணம் இவரிடத்தில் பிறக்கவில்லை. கண்டது கண்டபடியே
பேசுவர். உள்ளதை உள்ளபடியே கூறுவர். அங்ஙனம்,
ஒளித்தும்வஞ்சப்புகழ்ச்சி செய்தும் பேசுவது இவருடைய
இயற்கையில் உண்டாகவில்லை. ஆதலால், இவரை ஆங்கில
பாஷையில் மிஸ்டர் பிளண்ட் என்று பிள்ளைகள் பெயரிட்டு
அழைக்கலானார். பிளண்ட் என்னும் வார்த்தைக்கு நேருக்கு
நேராகக் கண்டிப்பாய்ப் பேசுபவனென்பது பொருள். இவ
ருக்குக் குறுக்குவழி யென்பது தெரியவே தெரியாது.
எவ்வளவு கடினமாயிருந்தாலும் நேர்வழியே யன்றி குறுக்கு
வழியிலே இவர் இறங்குவதில்லை. ஸ்ரீ திலகர் தம்முடைய
பிரதம போதகாசிரியர் ஓர்ட்ஸ்வொர்த் என்பவரிடமும்,
ஆசிரியர் சத்ரி என்பவரிடமும் அளவில்லாத அன்பும் மரி
யாதையும் வைத்திருந்தார். அவ்வாசிரியர்களும் ஸ்ரீ திலக

மைச் சிறந்த வித்தியார்த்தி யெனப் பாராட்டிவந்தார்கள். ஆசிரியர் சத்ரீ அக்காலத்தில் பம்பாய் மாகாணத்தில் சிறந்த கணித சாஸ்திர வல்லோர்களில் முக்கியமானவர். ஸ்ரீ திலகருடைய கணித ஞானத்தைக் கண்டு ஆசிரியர் வியப்படைந்தார். வருங்காலத்தில் ஸ்ரீ திலகர் மிக்க அபூர்வமான கணித சாஸ்திரியாக ஆவார் என்று ஆசிரியர் சத்ரீ அடிக்கடி கூறுவார். ஸ்ரீ திலகருடன் அக்காலில் பலர் படித்துவந்தார்கள். அவர்களனைவரும் ஒவ்வோர் வழியில் நல்ல திறமைவாய்ந்தவர்களானார்கள். ஸ்ரீமார் பாலகிருஷ்ண உபாஸனி, கோபால் கணேஷ் அகர்கார், வாமன்ராவ் ஆப்டே, நாஜீ ஆபாஜீ காரே, கணேஷ். எஸ். கபார்தே, ஆர். என். முத்தோல்கார், தயாராம் கிடுமல், சதாசிவ, சாரங்கபாணி, பியூல் முதலானோர் ஸ்ரீ திலகருடன் படித்தவர்கள். டாக்டர் ஸர். என். ஜீ. சந்தாவர்க்கரும் ஸ்ரீ திலகருடன் படித்தவராவாரும், இவர் வேறுகலாசாலையில் படித்தவர். 1876-ம் வருடத்தில் இவ்விருவர்களும் பீ. ஏ. பட்டம் ஒன்றாகப் பெற்றார்கள். ஸ்ரீ திலகரும் சந்தாவர்க்காரும் பீ. ஏ. பரீட்சையில் முதல் வகுப்பில் தேறினவர்கள். ஆனால் ஸ்ரீ திலகருக்கு சந்தாவர்க்கார் ஜன்ம சத்துருவானார். மாண்டேகு சீர்திருத்தத்தின் பயனால் பம்பாய் சட்டசபை அக்கிராசனராக விருந்து சமீபத்தில் இறந்தார். இவர் காங்கிரஸ் மகாசபைக்கு அக்கிராசனராகவும் இருந்தார். இவர் பம்பாய் உயர்தர நீதி மன்றத்தில் நீதிபதியாக விருந்து உபகார சம்பளம் பெற்றவர். மிக்க மிதவாதி; இவரைப்பற்றி இனிவரும் அத்தியாயங்களில் காணலாம்.

நிற்க, ஸ்ரீ திலகர் அக்காலிலேயே நல்ல தர்க்க சாஸ்திரியென்றும், தத்துவநூல் வல்லவர் என்றும் பெயர் வாங்கினார். கணிதத்திலும், தர்க்க சாஸ்திரத்திலும், தத்துவநூலிலும் ஸ்ரீ திலகருக்குச் சிறந்த பாண்டித்தியம் இருந்த



தென்பதற்கு அவர் இயற்றிய கீதாரகஸ்யம், வேதங்களின் துருவநிலயம், மிருகசீருட நட்சத்திரம் ஆகிய இம் மூன்று ரத்தினங்களே சான்றாகும். ஸ்ரீ திலகர், கேவலம் பரீட்சை தேறுவதற்காகப் படிப்பதே கிடையாது. அறிவை விருத்தி செய்யவேண்டுமென்னும் நோக்கத்தையே கொண்டு கல்வி கற்றுவந்தார். வகுப்புக்கு ஏற்பட்ட சரித்திர பாட புத்தகங்களைமட்டும் படிக்காமல், அவைகளுக்கு அநுகூலமாகவும் ஆதாரமாகவுமுள்ள மற்ற புத்தகங்களையும் ஸ்ரீ திலகர் படித்து வருவார். உதாரணமாக, எலிஜபத் மகாராணி, மேரி மகாராணிகளைப்பற்றிய சரித்திரங்களைமட்டும் கற்க ஏற்பட்ட ஒரு பாட புத்தகத்தைமட்டும் இவர் படிக்காமல், பத்துப் பன்னிரண்டு இதர சரித்திர புத்தகங்களையும் படித்து வந்தார். ஆராய்ச்சியில் மிகவும் ஆவல் கொண்டவர். சரித்திரம், சாஸ்திரம், சட்டம், கணிதம், சோதிடம் ஆகிய இவை ஸ்ரீ திலகருக்கு சர்வ சாதாரணமாகவே யிருந்தன. மேற்கூறிய ஒவ்வொன்றிலும், ஸ்ரீ திலகர் நல்ல ஞானங் கொண்டவர். ஸ்ரீ திலகருடைய படிப்பும் அறிவும் கேவலம் மேற்பூச்சல்ல. நல்ல ஆழ்ந்த படிப்பையும் அறிவையும் அநுபவத்தையும் இவர் பெற்றிருந்தார். ஸ்ரீ திலகர் சட்ட பரீட்சைக்கு (L. L. B.)ப் படித்து வருகையில் இந்நூலை யெழுதிய ஆங்கில கிரந்த கர்த்தாக்களின் நூல்களைப் படிப்பதைத் தவிர்த்து, இந்நூலுக்கு ஆதாரமாயிருக்கும் யாக்ஞவல்கிய ஸ்மிருதி முதலிய ஸ்மிருதிகளைப் படித்துவந்தார். தவிர, இந்தியா கவர்ன்மெண்டாரால் 1827-ம் வருடத்திலிருந்து உண்டாக்கின எல்லா சட்டங்களையும் நன்றாகப் படித்து வந்தார். சட்டத்தில் அபாரமான ஞானத்தையும், சட்டங்களின் பிரமாணங்களைத் தக்கபடி பிரயோகிக்கும் சக்தியையும் ஸ்ரீ திலகர் விசேஷமாகப் பெற்றிருந்தார். 1908-ம் வருடத்தில் ஸ்ரீ திலகர்மீது இராஜ நிந்தனை குற்றஞ்

யைச் சிறந்த வித்தியார்த்தி யெனப் பாராட்டிவந்தார்கள். ஆசிரியர் சத்ரி அக்காலத்தில் பம்பாய் மாகாணத்தில் சிறந்த கணித சாஸ்திர வல்லோர்களில் முக்கியமானவர். ஸ்ரீ திலக ருடைய கணித ஞானத்தைக் கண்டு ஆசிரியர் வியப்படைந் தார். வருங்காலத்தில் ஸ்ரீ திலகர் மிக்க அபூர்வமான கணித சாஸ்திரியாக ஆவார் என்று ஆசிரியர் சத்ரி அடிக்கடி கூறு வர். ஸ்ரீ திலகருடன் அந்நாளில் பலர் படித்துவந்தார்கள். அவர்களனைவரும் ஒவ்வோர் வழியில் நல்ல திறமைவாய்ந் தவர்களானார்கள். ஸ்ரீதார் பாலகிருஷ்ண உபாஸனி, கோபால் கணேஷ் அகர்கார், வாமன்ராவ் ஆப்டே, தாஜி ஆபாஜி கரே, கணேஷ். எஸ். கபார்தே, ஆர். என். முத் தோல்கார், தயாராம் கித்மல், சதாசிவ, சாரங்கபாணி, மியூல் முதலானோர் ஸ்ரீ திலகருடன் படித்தவர்கள். டாக் டர் ஸர். என். ஜீ. சந்தாவர்கரும் ஸ்ரீ திலகருடன் படித்தவ ராயினும், இவர் வேறுகலாசாலையில் படித்தவர். 1876-ம் வருடத்தில் இவ்விருவர்களும் பீ. ஏ. பட்டம் ஒன்றாகப் பெற்றார்கள். ஸ்ரீ திலகரும் சந்தாவர்க்காரும் பீ. ஏ. பரீக் ஷையில் முதல் வகுப்பில் தேறினவர்கள். ஆனால் ஸ்ரீ திலக ருக்கு சந்தாவர்க்கார் ஜன்ம சத்துருவானார். மாண்டேகு சீர்திருத்தத்தின் பயனால் பம்பாய் சட்டசபை அக்கிரா சனராக யிருந்து சமீபத்தில் இறந்தார். இவர் காங்கிரஸ் மகாசபைக்கு அக்கிராசனராகவும் இருந்தார். இவர் பம் பாய் உயர்தர நீதி மன்றத்தில் நீதிபதியாக யிருந்து உப கார சம்பளம் பெற்றவர். மிக்க மிதவாதி; இவரைப்பற்றி இனிவரும் அத்தியாயங்களில் காணலாம்.

நிற்க, ஸ்ரீ திலகர் அந்நாளிலேயே நல்ல தர்க்க சாஸ்திரி யென்றும், தத்துவநூல் வல்லவர் என்றும் பெயர் வாங்கி னார். கணிதத்திலும், தர்க்க சாஸ்திரத்திலும், தத்துவநூலி லும் ஸ்ரீ திலகருக்குச் சிறந்த பாண்டித்தியம் இருந்த



தென்பதற்கு அவர் இயற்றிய கீதாரகஸ்யம், வேதங்களின் ஆருவநிலயம், மிருகசிருட நட்சத்திரம் ஆகிய இம் மூன்று ரத்தினங்களே சான்றாகும். ஸ்ரீ திலகர், கேவலம் பரீட்சை தேறுவதற்காகப் படிப்பதே கிடையாது. அறிவை விர்த்தி செய்யவேண்டுமென்னும் நோக்கத்தையே கொண்டு கல்வி கற்றுவந்தார். வகுப்புக்கு ஏற்பட்ட சரித்திர பாட புத்தகங் களைமட்டும் படிக்காமல், அவைகளுக்கு அனுகுணமாகவும் ஆதாரமாகவுமுள்ள மற்ற புத்தகங்களையும் ஸ்ரீ திலகர் படித்து வருவார். உதாரணமாக, எலிஜபத் மகாராணி, மேரி மகா ராணிகளைப்பற்றிய சரித்திரங்களைமட்டும் கற்க ஏற்பட்ட ஒரு பாட புத்தகத்தைமட்டும் இவர் படிக்காமல், பத்துப் பன்னிரண்டு இதர சரித்திர புத்தகங்களையும் படித்து வந் தார். ஆராய்ச்சியில் மிகவும் ஆவல் கொண்டவர். சரித் திரம், சாஸ்திரம், சட்டம், கணிதம், சோதிடம் ஆகிய இவை ஸ்ரீ திலகருக்கு சர்வ சாதாரணமாகவே யிருந்தன. மேற்கூறிய ஒவ்வொன்றிலும், ஸ்ரீ திலகர் நல்ல ஞானங் கொண்டவர். ஸ்ரீ திலகருடைய படிப்பும் அறிவும் கேவலம் மேற்பூச்சல்ல. நல்ல ஆழ்ந்த படிப்பையும் அறிவையும் அனுபவத்தையும் இவர் பெற்றிருந்தார். ஸ்ரீ திலகர் சட்ட பரீட்சைக்கு (L. L. B.) ப் படித்து வருகையில் இந்நூலை யெழுதிய ஆங்கில கிரந்த கர்த்தாக்களின் நூல்களைப் படிப் பதைத் தவிர்த்து, இந்நூலுக்கு ஆதாரமாயிருக்கும் யாக்ஞ வல்கிய ஸ்மிருதி முதலிய ஸ்மிருதிகளைப் படித்துவந்தார். தவிர, இந்தியா கவர்ன்மெண்டார் 1827-ம் வருடத்தி லிருந்து உண்டாக்கின எல்லா சட்டங்களையும் நன்றாகப் படித்து வந்தார். சட்டத்தில் அபாரமான ஞானத்தையும், சட்டங்களின் பிரமாணங்களைத் தக்கபடி பிரயோகிக்கும் சக்தியையும் ஸ்ரீ திலகர் விசேஷமாகப் பெற்றிருந்தார். 1908-ம் வருடத்தில் ஸ்ரீ திலகர் மீது இராஜ நிந்தனை குற்றஞ்

சாட்டப்பட்டு பம்பாய் கோர்ட்டில் திலகரே தாம் வியாஜ்யத்தை நடத்தி வாதாடினதைக் கண்ட அநேகர் பிரமித்தனர். வங்காளவாசியும் இந்தியாவில் சிறந்த சட்ட நிபுணரெனவும் பெயர் பெற்ற காலஞ்சென்ற ராஷ் விகாரிகோஷ், ஸ்ரீ திலகரின் சட்ட வாதத்தைக் கண்டு, தம் நண்பரொருவரிடம் 'திலகர் ஒருக்கால் அவருடைய கேஸ் விஷயமாக நடத்த என்னை அழைத்திருந்தபோதிலும், அவர் செய்த வாதத்தில் கால்பங்குகூட அவ்வளவு சாமர்த்தியமாக நான் நடத்தி யிருக்கமாட்டேன்' என்று தெரிவித்துள்ளார். ஸ்ரீ திலகர் சட்ட பரீட்சைக்குப் படித்துவருங் காலில் அவருடைய அறையில் பாலகிருஷ்ண உபாஸனியும் படித்து வந்தார். அவர் "நானும் திலகரும் பம்பாயில் சட்ட பரீட்சைக்குப் படித்து வருகையில் ஒருநாளிலாகிலும் உபயோகமற்ற எண்ணமும் செய்கையும் அவருக்கு உண்டானதே யில்லை; சதா சமூகத்தைப்பற்றியும் தேசத்தைப்பற்றியும், பொதுசனங்களுக்கு உழைக்க வேண்டுமென்பதைப் பற்றியுமே அடிக்கடி ஸ்ரீ திலகர் பேசிவருவார்' என்று கூறியுள்ளார். வாடி வதங்காத அன்றலர்ந்த தாமரைபோல் திலகர் உண்டாகி, பாரதமாதாவின் திருவோலக்கத்தில் உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணஞ் செய்தார். ஸ்ரீ திலகர் 1879-ம் வருடம் சட்டப் பரீட்சையில் தேறினார்.

## 2. ஸ்ரீ திலகரின் முதல் சம்ஸ்காரம்

ஸ்ரீ திலகர் வித்யாவினோத (பி.ஏ.) பட்டம் பெற்ற காலத்தில் மகாராஷ்டிர வம்சத்தைச்சேர்ந்த பரோடா மகாராஜா அந்த சமஸ்தானத்திலிருந்த பிரிட்டிஷ் ரெஸிடெண்ட் கர்னல் பய்ரி என்பவரை விஷம் வைத்துக் கொல்ல முயற்சி செய்தாரென்று ஓர் அபாண்டமான குற்றம் அவர் மீது உண்டாகி, மூன்று ஆங்கில நீதிபதிகளும் மூன்று சுதேச மன்னர்களும் சேர்ந்து விசாரணை செய்தார்கள். அக்காலத்தில், நார்த்ப்ருக் பிரபு இராஜப்பிரதிநிதியாக யிருந்தார். பரோடா மகாராஜா அத்தகைய குரூரமான செயலைச் செய்யவில்லையென்றும், அவர் முற்றிலும் நிரபராதியென்றும் பலர் உண்மையாக நம்பியிருந்தனர். சார்ஜண்ட் பாலன்டைன் என்பவர் தானிறக்கும்வரை மகாராஜா நிரபராதியென்றே எண்ணினார். அவ்வறுவர் சேர்ந்து விசாரணை செய்ததில், அபிப்பிராயபேதம் ஏற்பட்டது. கடைசியாக, மகாராஜா சரிவர பரோடா சமஸ்தானத்தை யாளும் சக்தியைப்பெற்றிருக்கவில்லையென்றும், வெகு தாறுமாறாக இராஜ்யத்தைப் பரிபாலித்து வந்தாரென்றுங்கூறி, அவரை சிம்மாஸனத்தினின்றும் நீக்கி, 1858-ம் வருடத்திய மகாசாஸனப்படி அச்சமஸ்தானத்தைப் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் சேர்க்காமல், இராஜவம்சத்தைச் சேர்ந்த ஒரு சிறு பையனை அரசனாக்கி, இராஜ்ய பொறுப்பை வகிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இச்செயல் ஸ்ரீ திலகரின் மனதை இழுத்தது. நிரபராதியான ஒரு மகாராஜாவைச் சதியில் இழுத்துக் குற்றவாளியாக்கினதைப்பற்றி ஸ்ரீ திலகர் மனம் வருந்தி, அன்றுமுதல் தேசவிடுதலை யொன்றையே நாடி உழைக்க வேண்டுமென்று தீர்மானித்தார்.

தவிர, சிவாஜி மகாராஜாவின் இராஜ்ய ஸ்தாபனமும் 17-18-வது நூற்றாண்டின் மகாராஷ்டிர சரித்திரமும் ஸ்ரீ திலகரை எழுப்பிற்று. மகாராஷ்டிர வம்சத்தின் சரித்திரத்தையும் அவர்களின் வீரச் செயல்களையும், இராஜ்ய பரிபாலன முறைமையையும், சுதந்தரத்தன்மையையுங்கண்டு ஸ்ரீ திலகர் புத்துயிர் பெற்றார். மகாராஷ்டிரர்களின் அடிமைத் தனத்தையும், பயங்கொண்ட கோழைத்தனத்தையும் ஸ்ரீ திலகர் கண்டு, மகாராஷ்டிர சமூகத்தைத் திருத்தி மீண்டும் சுதந்தரத்தை யடையவேண்டுமென்று தீர்மானித்தார். இந்நிலைமையில் 1876-ம் வருடத்தில், பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கவிழ்க்க மகாராஷ்டிரத்தில் இரகசியமான சில ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்தன. பிரிட்டிஷ் அரசாங்கத்தில் சர்க்கார் உத்தியோகஞ் செய்துவந்த வாஸுதேவ பல்வந்த பாட்கி என்பவன் அந்த இரகசிய கூட்டத்திற்குத் தலைவனானான். மகாராஷ்டிரர்களுடைய வீரத்தன்மையும் தேசாபிமானமும் மத உணர்ச்சியும் நீங்கி, கேவலம் அடிமைகளாக வாழ்ந்து வந்ததே அச்சிறு கூட்டத்தின் எழுச்சிக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. ஒரு சிறு கூட்டத்தார் போதுமான சகாயமின்றியும் பொது சனங்களுடைய உதவியின்றியும் என்னசெய்யமாட்டும்? வாஸுதேவ பல்வந்த பாட்கியின் கூட்டத்தார் செய்த விபரீதகாரியமே மகாராஷ்டிரத்திலுள்ள சித்பவன பிராம்மணர்களின்மீது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் சந்தேகங்கொள்ள ஏற்பட்டது. புனா பிராம்மணர்களின்மீது அந்நாள்முதல் இன்னும் கவர்ன்மெண்டாருக்குள்ள சந்தேகம் நிவர்த்தியாகவில்லை. காலஞ்சென்ற மகாதேவ கோவிந்த ரானடே அவர்கள் மிக்க மிதவாதியாகவும் அரசாங்க உத்தியோகஸ்தராகவும் இருந்தும், அவர் சிறுவயதில் சிவாஜியைப்பற்றி எழுதிய வியாசமே உயர்தர உத்தியோக பதவிக்குச் சின்னாள்வரை தடையாயிருந்தது.



தவிர, எல்பின்ஸ்டன் கல்லூரியில் ஸ்தானம் பெறவும் ரானடேக்கு அவ்வியாசம் சிலகாலம் தடையாக விருந்தது. மிதவாதிகள் அமிதவாதிகள் உள்பட புனா பிராம்மணர்களின்மீது கவர்ன்மெண்டாருக்கு அருவெறுப்பு இருந்து வந்தது. அவ்வருவெறுப்பையும் சந்தேகத்தையும் நீக்கிக் கொள்வதற்கே மிதவாதிகளில் கோகலே, ரானடே, பாஞ்சபே, சந்தாவர்க்கர் முதலானோர் ஸ்ரீ திலகரின்மீது பகைமை கொண்டு அரசாங்கத்தை யாதரித்து வந்தனர்.

1857-ம் வருடத்தில் உண்டான சிப்பாய்க் கலகம், 1875-ம் வருடத்தில் ஏற்பட்ட பரோடா மகாராஜா சம்பவம், 17-வது 18-வது நூற்றாண்டுகளில் உண்டான மகாராஷ்டிரர்களின் சரித்திரம், 1877-78-ம் வருடத்தில் சம்பவித்த கொடிய பஞ்சம் ஆகிய இவைகள் ஸ்ரீ திலகரை தேச சேவை செய்ய இழுத்தன. 1877-78-ம் வருடத்தில் உண்டான பஞ்சத்தில் சுமார் 50-லட்சம் சனங்களுக்கு மேல் மாண்டதை யறிந்த ஸ்ரீ திலகர் மனச்சோர் வடைந்தார். இரவும் பகலும் ஊண் உறக்கமின்றி பஞ்சத்தின் காரணத்தையும் அதற்குரிய நிவாரணவழியையும் பற்றி நினைத்தார். ஸ்ரீ திலகர் பஞ்சத்தை நினைக்க நினைக்க, அவர்முன் பாரதநாட்டின் உற்பாத தோற்றங்கள் காணப்பட்டன. கடைசியாக மகாசனங்களைக் கல்வியிலும் தேச உணர்ச்சியிலும் மேம்பாடு அடையச் செய்வதே எல்லா உற்பாதங்களுக்கும் சரியான மார்க்கமென்று தீர்மானஞ் செய்துகொண்டு, அன்றுமுதல் தேச கைங்கரியத்தில் ஈடுபட ஸ்ரீ திலகர் முன் வந்தார். 1874-ம் வருடத்திலிருந்தே புனாவில் மகாராஷ்டிர யுவர்களுக்குள்ளே ஓர் புதிய உணர்ச்சி ஏற்பட்டது. விஷ்ணுசாஸ்திரி சிப்ளோங்கார் அப்புதிய உணர்ச்சிக்குக் காரணமாக விருந்தார். விஷ்ணு சாஸ்திரி சிப்ளோங்கார், கிருஷ்ணசாஸ்திரியின் குமாரர். கிருஷ்ணசாஸ்திரி நல்ல

பண்டிதர். மகாராஷ்டிரத்திலுள்ள பல பண்டிதர்கள் சுதா கிருஷ்ணசாஸ்திரி வீட்டில் கூடியிருப்பர். விஷ்ணுசாஸ்திரி சிப்ளோங்கார் 1872-ம் வருடத்தில் வித்யா விநோத பட்டம் பெற்று பள்ளிக்கூட உபாத்தியாயர் தொழிலில் அமர்ந்தார். ஆனல், 1874-ம் வருடத்தில் சிப்ளோங்கார் 'நிபந்த மாலா' என்னும் ஓர் மாதாந்தரப் பத்திரிகையை ஸ்தாபித்து மகாராஷ்டிரர்களுடைய தேசாபிமானத்தை யெழுப்பினர். அப்பத்திரிகை அரசாங்கத்தாருடைய குறைகளைக் கண்டித்தும், மகாராஷ்டிர சமூகத்தின் சீர்திருத்தங்களைக் கூறியும் வந்தது. சிப்ளோங்காரின் வியாசம் மிகவும் அழகாகவும் அர்த்த புஷ்டியுள்ளதாகவு மிருந்ததால், பல பண்டிதர்களும் அப்பத்திரிகையைக் கௌரவித்தனர். தேசிய முறையில் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்க வேண்டுமென்கிற உணர்ச்சியை முதல்முதல் மகாராஷ்டிரத்திற்கு ஊட்டினவர் சிப்ளோங்கார். சிப்ளோங்கார் "நிபந்தமாலா" பத்திரிகையின் வாயிலாக தேசியக் கல்வியையும் தேசியக் கல்விச் சாலைகளையும் பற்றி இடைவிடாது வியாசங்கள் எழுதிவந்தார். ரானடே சிப்ளோங்காரைவிட புத்தி நுட்பமுள்ளவரெனக் கொண்டாடப்பட்டு வந்தபோதிலும், சிப்ளோங்காருக்கிருக்கும் தேசாபிமானம், மதாபிமானம், பாஷாபிமானம் அவருக்கில்லை. சிப்ளோங்கார் வைதிகதர்மத்தை யநுஷ்டிப்பவர். ரானடே சீர்திருத்தக்காரர். ஆகவே, சிப்ளோங்கார் காலிலிருந்தே மகாராஷ்டிரத்தில் சீர்திருத்தக் கட்சி யொன்றும் வைதிக தர்ம கட்சியொன்றும் இரு கட்சிகள் ஏற்பட்டன. சீர்திருத்தக் கட்சிக்கு ரானடே முக்கியர். சிப்ளோங்கார் தேச விடுதலைக்கும் ஜனங்களின் அபிவிர்த்திக்கும் தேச சேவைசெய்ய வேண்டுமென்றும் தியாகமே முக்கியமானதென்றும் கூறி, அவர் தம்முடைய உபாத்தியாயர் தொழிலையும் விட்டு விட்டுப் பொது ஜனங்களுக்கு உழைக்க முன்



வந்தார். உடனே ஓர் அச்சுக்கூடமொன்றை ஸ்தாபித்தார். விஷ்ணுசாஸ்திரி சிப்ளோங்கார் தேச சேவையில் ஈடுபட்டுத் தியாக மூர்த்தியாய் முன் வந்ததும், ஸ்ரீ திலகர், சிப்ளோங்காருடன் சேர்ந்தார். ஏற்கனவே தேச சேவைசெய்ய இரவும் பகலும் யோசித்துவந்த ஸ்ரீ திலகர் நல்ல சமயமறிந்து வெளிவந்தார். அதன்றியும் ஸ்ரீ திலகர் தம்முடன் படித்துச் சகபாடியாயிருந்த கோபால கணேஷ் அகர்காரையும் அவ்வண்ணமே வெளிவரத் தூண்டினர்.

கோபால கணேஷ அகர்கார் டக்கின கலாசாலையில் ஸ்ரீ திலகரோடு படித்தவர். மிகவும் ஏழை. மிகுந்த கஷ்டஜீவனஞ் செய்து படித்து வந்தவர். சிற்சில சமயங்களில் இரண்டொரு மூன்றுநாள் உணவின்றி பள்ளிக்கூடஞ் செல்வார். உறவினர்கள் அவரை ஆதரவு செய்தனர். சிற்சிலர் அகர்காருக்கு உதவிசெய்து வந்தனர். அவர்களும் சில சமயங்களில் அகர்காரை வைவர். யாசகஞ்செய்து படித்துவந்த அகர்கார் பலவித திக்கங்களைக்கொண்டு கல்வி கற்றுவந்தார். உபாத்தியாயர்களிற் சிலரும் அகர்காரைப் பரிகசித்துவந்தார். அதற்கு அகர்கார் 'நானும் கூடிய சீக்கிரத்தில் வித்யாபண்டிதனாக (எம். ஏ) வருவேன்' என்று சாந்தமாகப் பதில் கூறுவார். அகர்கார் தாழ்ந்த நிலைமையில் இருந்த காலத்திலும் தேசாபிமானம் ததும்பியிருந்தது. குடும்பத்தின் ஏழ்மையை நீக்கிச் சுகப்படச் செய்வான் என்று எண்ணியிருந்த தாய்க்கு அகர்கார் "தாயே! நான் எம். ஏ. பட்டம் பெற்றுப் பணம் சம்பாதித்து உன்னையும் குடும்பத்தையும் ரட்சிப்பேன் என்று எதிர் பார்க்கிறாய். ஆனல், நானோ தாய்நாட்டின் திருத்தொண்டில் ஈடுபட்டுப் பணம் சம்பாதிப்பதில் புத்தியில்லாதவனாயிருக்கிறேன்' என்று கூறினர். இத்தகைய தியாகஞ்செய்து தேச சேவையில் ஈடுபட்ட அகர்காரும்

சிப்ளோங்கார்—திலகர்களுடன் வந்து சேர்ந்தார். திலகரும் அகர்காரும் கல்லூரியிலேயே நெருங்கிய நண்பர்கள். இவ்விருவர்களும் நல்ல ஆழ்ந்த தேசாபிமானிகள். தேச கைங்கரியத்தில் அவ்விருவர்களும் ஒருவரையொருவர் விட்டுப் பிரியாமல் ஈடுபட்டிருந்தார்களென்றாலும், ஆசார சீர்திருத்த விஷயமாக அகர்காரும் ஸ்ரீ திலகரும் ஒருவருக்கொருவர் அபிப்பிராய பேதங்கொண்டிருந்தனர். சமூகத்தின் கேவலமான நிலைமையை இருவர்களும் அறிந்திருந்தார்கள். சீர்திருத்தம் வேண்டுமென்றே அவ்விருவர்களும் கூறினர். ஸ்ரீ திலகர் தற்பொழுதுள்ள சமூகத்தின் உள்ளுக்குள்ளேயே கொஞ்சங் கொஞ்சமாக சீர்திருத்தஞ் செய்யவேண்டுமென்றும், இடையென்று பகிர்முகமாக வழக்கங்களை மாற்றப் புகுந்தால் பெரிய ஆபத்து வருமென்றும் உறுதியாக நம்பினர். அகர்காரோ, சீர்திருத்தங்களை பகிர்முகமாக உண்டாக்க சமூக சீர்திருத்தக் கிளர்ச்சி செய்யவேண்டுமென்றும் நம்பினர். ஆகவே, அவ்விருவர்களுக்கும் ஏற்பட்ட அபிப்பிராய பேதம் இதுவே. ஸ்ரீ திலகர் ஆசார சீர்திருத்த விஷயமாக மேனாட்டு சம்பிரதாயத்தை அவலம்பிக்கும் சில சீர்திருத்தக்காரர்களின் கொள்கையை யனுசரிக்க வில்லையாயினும், இவர் ஒரு பெரிய ஆசார சீர்திருத்தக்காரர் என்பதற்கு இனி வரும் அவருடைய செய்கைகளே தக்க சான்றாகும். ஸ்ரீ திலகரும் அகர்காரும் ஆசார சீர்திருத்த விஷயமாக அபிப்பிராய பேதங் கொண்டிருந்தபோதிலும், பொதுவாக கல்வியைப் பரவச்செய்யும் விஷயங்களிலும், மற்ற பொதுக் காரியங்களிலும் அவர்கள் ஒருவருக்கொருவர் கலந்து வேலை செய்து வந்தனர்.

மகாராஷ்டிர நாடெங்கும் தேசீய வழியில் பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்துக் கல்வி கற்பித்து வரவேண்டுமென்



றும், சாமானிய ஜனங்களுக்குக் கல்வியை யூட்டி இராஜீய ஞானத்தைப் போதிக்க வேண்டுமென்றும் யோசித்து அதற்குரிய மார்க்கங்களை ஸ்ரீ திலகரும் அகர்காரும் சிப்ளோங்காருடன் தேடி வந்தனர். முதன் முதல் ஓர் ஆங்கில கல்லூரியை ஸ்தாபித்தனர்; மகாராஷ்டிர ஜனங்களுக்குப் பொது உணர்ச்சி யுண்டாக்க 'கேஸரி' என்னும் ஒரு மராதி பத்திரிகையையும் 'மராட்டா' என்னும் ஓர் ஆங்கில பத்திரிகையையும் அவர்கள் ஸ்தாபித்தனர். மகாராஷ்டிரத்தில் இந்த ஸ்தாபனங்கள் ஒரு நவசக்தியை யுண்டுபண்ணின. யுவர்களும் வயோதிகர்களும் மகாராஷ்டிரத்திற்கு முச்சுடர்போல் விளங்கின ஸ்ரீ சிப்ளோங்கார், திலகர், அகர்கார் இவர்களைப் புகழ்ந்து ஆசிகூறினர். மகாதேவ கோவிந்த ரானடேயும் இம்மூவர்களின் ஊக்கத்தையும் தேசாபிமானத்தையும் தியாகத்தையுங் கொண்டாடினார். அம்மூவர்களுக்கு மகாதேவ பலால் நாமஜோஷியை அறிமுகஞ் செய்வித்து, அவர்களுடன் உழைக்க அனுப்பினார். நாமஜோஷி நல்ல அனுபவம் பெற்றவர். வியாசம் எழுதலில் நல்ல சாமர்த்திய முள்ளவர். விஷயங்களையறியும் அதி நுட்பம புத்தி யுள்ளவர். பரமசாது. கோபமும் டாம்பீகமும் இல்லாதவர். மிக்க சுறுசுறுப்புள்ளவர். மகாதேவ நாமஜோஷியின் சேர்க்கை அம்மூவர்களுக்கு மிக்க பலத்தை யுண்டாக்கிற்று. மகாராஷ்டிரத்திற்கு நான்கு தூண்களாக அந் நால்வரும் நின்று சகல பொறுப்பையுந் தாங்கி வந்தனர். ஸ்ரீ திலகரிடம் நாமஜோஷிக்கு மிக்க அன்பு. அவ்விருவர்களும் உடன் பிறந்தவர்கள்போல அவ்வளவு அன்னியோன்னியமாக இருந்து வந்தனர். கடைசியாக நாமஜோஷி 1895-ம் ஆண்டில் ஆவி துறந்தார். மரண காலபரியந்தம் நாமஜோஷி ஸ்ரீ திலகருடன் மிக்க அன்னியோன்னியமாக இருந்து வந்தார். அந்நால்வர் சகல பொறுப்பையும் வகித்து வேலை செய்து

வருகையில் வாமன் சிவராம் ஆப்டே என்பவரும் வந்து சேர்ந்தார். இவர் சமஸ்கிருத பாஷையில் மிக்க பாண்டித்யம் பெற்றவர். சமஸ்கிருத ஆங்கில அகராதி யொன்றை இவர் எழுதியுள்ளார். இவர் வித்யா பண்டிதர் (எம். ஏ.) பட்டம் பெற்று, ஒரு கிறிஸ்தவ கல்லூரியில் தலைமை உபாத்தியாயராகச் சின்னாள் இருந்து, பிறகு அதை விட்டு விட்டு மற்றொரு கலாசாலையில் உதவி போதகாசிரியராக இருந்து வந்தார். வித்யா இலாகாவில் நல்ல உத்தியோக மொன்றைப் பெறவேண்டுமென்று இவர் செய்த பிரயத்தனங்களெல்லாம் வீணாயின. இப்படி இருக்கையில், ஸ்ரீ திலகரும் அகர்காரும் ஆப்டேயைத் தங்கள் புதிய ஆங்கில கல்லூரிக்கு மேல் விசாரணைக்காரராக வரும்படி அழைத்தனர். வாமன் சிவராம் ஆப்டேயும் அவ்விருவர்களின் தேசாபிமானத்தையும் தியாகத்தையும் கண்டு, ஆச்சரியங்கொண்டு தாம் வருவதாக சம்மதித்தார். புதிய ஆங்கில கலாசாலைக்கு ஆப்டேயின் வரவு மிகவும் போற்றத்தக்கதா யிருந்தது. மகாராஷ்டிரத்திலேயே ஆப்டேயைப்போன்ற போதனாசிரியர் அக்காலில் இல்லை. தவிர, அப் பள்ளிக்கூடத்திற்கு வேண்டிய ஒவ்வொரு சிறிய சிறிய காரியங்களையும் செவ்வனே சீர்தூக்கிப் பார்த்துவருவார். பள்ளிக்கூடத்தின் விஷயமாக ஒவ்வொரு திட்டமான வேலையையும் சோம்பலின்றி வெகு திறமையாகவும் நிதானமாகவும் வாமன் சிவராம் ஆப்டே செய்துவந்தார். சிப்ளோங்கார், திலகர், அகர்கார், நாம ஜோஷி, ஆப்டே இவ்வைவரும் மகாராஷ்டிரத்திற்குப் பஞ்ச ரத்தினங்களாகப் பிரகாசித்துவந்தனர். கிராமங்களிலும், பட்டணங்களிலும், நகரங்களிலும் இவர்களுடைய கீர்த்தி பெருகிற்று. இதர மாகாணங்களிலும் இவ்வைவர்களுடைய தேசாபிமானத்தைப் பலர் கொண்டாடிவந்தனர். பம்பாய் மாகாணத்தில் அக்காலத்தில் சற்றேறக்குறைய 77-பத்திரிகை



கள் இந்தியர்களால் நடத்தப்பட்டு வந்தன. தேசபாஷையிலுள்ள பத்திரிகைகள் பெரும்பாலும் பொதுஜனங்களின் அபிவிருத்தியையும் இராஜீய உணர்ச்சியையும் ஊட்டக் கூடியவையல்ல. அப் பத்திரிகைகளின் சொந்தக்காரர்கள் பெரும்பாலும் சுயநலம் பாராட்டுபவர்களாகவே இருந்து வந்தனர். இந்து பிரகாஷ், ஞானபிரகாஷ், நேடிவ் ஒபினியன், சுபோதபத்ரிகா ஆகிய இந்நான்கும் சற்றேறக்குறைய பொதுசனங்களின் விஷயத்தைத் தாங்கிவந்தன. உள்ளது உள்ளபடியே எடுத்துரைக்கவும், பொதுசனங்களின் காரியத்தில் நல்ல உறுதியுடன் போராடவும், தக்க பத்திரிகைகள் அக்காலத்தில் இல்லாமலிருப்பதை யுணர்ந்தே, சிப்ளோங்கார், திலகர், அகர்கார் இவர்கள் மராடி பாஷையில் ஒரு வாரப்பத்திரிகையையும் ஆங்கில பாஷையில் ஒரு வாரப் பத்திரிகையையும் ஸ்தாபித்தார்கள். மராடி பாஷையில் பிரசுரமாகிவரும் 'கேசரி' பத்திரிகையும், ஆங்கில பாஷையில் பிரசுரமாகிவரும் 'மராட்டா' பத்திரிகையும் வெகு தைரியமாக அரசாங்கத்தின் கோளாறுகளையும், அதிகார வர்க்கத்தினர்களின் அட்டூழியங்களையும் பொதுசனங்களின் அநாதையையும் பற்றித் தெரிவித்துவந்தன. இவ்விரண்டு பத்திரிகைகளின் மீது அரசாங்கத்துக்குக் கண்ணோட்டம் விழுந்தது. 'கேசரி' பத்திரிகையில் வெளிவரும் வியாசங்கள் ஒவ்வொன்றும் ஜனங்களின் மனதைக் கவர்ந்தது. மூன்று வருடத்திற்குள்ளாக 'கேசரி' பத்திரிகைக்கு 4350 சந்தாதார்கள் சேர்ந்தனர். சுதேச பத்திரிகைகளைப் பற்றிய அறிக்கையொன்றில் கவர்ன்மெண்டார் 1882-ம் வருடத்திலேயே 'கேஸரி' பத்திரிகை அரசாங்கத்திற்கு சிநேகமின்மையைக் காட்டுகின்றதெனத் தெரிவித்துள்ளார்.

'கேஸரி' பத்திரிகை சற்றேனும் பயமு தாட்சண்ணியமின்றி அரசாங்க உத்தியோகஸ்தர்களின் குரூரத்தை

யும் நடத்தைகளையும் பற்றி கண்டித்துவந்தது. 'கேஸரி' பம்பாய் மாகாணத்தில் கேஸரியாகவே விளங்கிவந்தது. "மராட்டா' பத்திரிகையும் ஆங்கில உத்யோகஸ்தர்களையும் இந்திய உத்தியோகஸ்தர்களையும் பட்சபாதமின்றி கண்டித்துவந்தது. சுதேச சமஸ்தானங்களின் இராஜ்ய நிலைமையையும் பரிபாலன முறைமையையும் ஸ்ரீ திலகர் கவனித்து வந்தார். 1870-ம் வருடத்திலிருந்து கோலாப்பூர் சமஸ்தான விவகாரம் சரிவர திருப்தியில்லாமலிருந்தது. அவ்வருடத்தில் கோலாப்பூர் மன்னன் இராஜாராம் மகாராஜ் இறந்தார். அவருக்குப் புத்திரப்பேறு இல்லை. அவருக்கு இரண்டு மனைவிமார்களிருந்தனர். அவ்விரு மனைவிமார்களும் அரச வம்சத்தைச் சேர்ந்த பிள்ளையொன்றை ஸ்வீகாரஞ்செய்து கொண்டனர். அப்பிள்ளை சிவாஜிராவ் இளவரசரானார். ஆரம்பத்தில், அப்பிள்ளை வெகு சுறுசுறுப்பாக இராஜ்ய நிர்வாகஞ் செய்யக்கூடிய வல்லமையைக் காட்டும் வண்ணம் இருந்துவந்தான். பிறகு 1877-ம் வருடம்முதல் அப்பிள்ளை பைத்தியம் பிடித்தவன்போல் இருப்பதும், பிரமை பிடித்து வாய்க்குவந்தபடி உளறுவதுமான பலமாறுதல் கொண்டிருந்தான். அப்பிள்ளைக்கு இத்தகைய விபரீதமாறுதலுக்குக் காரணம் அவனுக்கு மருந்திட்டதினால் என்று பலர் கூறினர். காலஞ்சென்ற கோலாப்பூர் மகாராஜாவின் மனைவிமார்களில் ஒருத்தி சக்வாரபாய், இளவரசன் சிவாஜிராவைச் சிம்மாசனத்தினின்றும் நீக்கி, வேறொரு பிள்ளையைப் புதிதாக ஸ்வீகாரஞ் செய்துகொள்ள வேண்டுமென்னும் விருப்பத்தால் அரண்மனை காரியஸ்தர் (திவான்) ராவ்பகதூர் பார்வி என்பவரைக்கொண்டு இளவரசப்பிள்ளைக்கு விஷம்வைத்துக் கொல்லவோ அல்லது மருந்திட்டுப் புத்திமாறாட்டமுண்டாக்கவோ செய்யத் தூண்டினதாகவும், அந்தராணி கூறியபடி பார்வி அந்த இளவரசனுக்கு மருந்திட்டதாகவும் கோலாப்பூர்



சனங்கள் கூறிவந்தனர். அதுகாரணமாக, 1881-ம் வருடம் நவம்பர்மாதம் 24-ந் தேதியன்று புனாவில் ஒரு பெரிய ஜனக்கூட்டம் கூடிற்று. அந்த ஜனக்கூட்டத்திற்கு கனம். ராவ்பகதூர் கோபாலராவ் ஹரி தேஷ்முக் என்பவர் அக்கிராசனம் வகித்தார். அந்த மகாநாட்டில் நிறைவேறின தீர்மானமொன்றில் அவ்விளவரசனை உடனே நல்ல அந்தஸ்தும் கௌரவமும் வாய்ந்த ஓர் காரியஸ்தரின் பாதுகாப்பில் வைக்கவேண்டுமென்று கூறப்பட்டது. அம்மகாநாடு முடிந்ததும், உண்மையில் அவ்விளவரசனைக் கொல்ல விஷம் வைக்கப்பட்டதெனப் பலமான வதந்தி புனாவிலும் உலாவி வந்தது. ஸ்ரீ திலகரும் அகர்காரும் பத்திரிகைகளுக்கு பத்திராதிபர்களாக இருந்து வந்ததினால் கோலாப்பூர் இளவரசருக்கு விஷம் வைத்துக்கொல்ல எப்படி முயற்சி செய்யப்பட்டதென்றும் விவரமாகக் காரியஸ்தரே எழுதினதாக மூன்று பெரிய கடிதங்கள் பத்திரிகைகளில் பிரசுரிக்க வரப்பெற்றன. அம்மூன்று கடிதங்களையும் பெற்ற திலகரும் அகர்காரும் வெகுநேரம் யோசித்துக் கடைசியாக 'மராட்டா' பத்திரிகையிலும் 'கேஸரி' பத்திரிகையிலும் அக்கடிதங்களைப் பிரசுரித்தனர். அன்றி, கோலாப்பூர் அரண்மனை காரியஸ்தரின்மீது வந்த பழியை, நீக்கிக் கொள்ளத்தக்க சமாதான மொன்றையும் சொல்லவேண்டுமென இவ்விரு பத்திராசிரியர்களும் எழுதினர். ராவ்பகதூர் பார்வி, உடனே பம்பாய் ஹைகோர்ட்டில் திலகர்மீதும் அகர்கார் மீதும் வியாச்சியமொன்றைத் தொடுத்தார். கோலாப்பூரில் காரியஸ்தராக (திவான்) இருந்த பார்வி, நா[illegible]பைட் என்பவருக்கு வக்கீல் சன்னத் கொடுக்க மறுத்ததாகவும், அதன்பேரில் அந்த நாஜு, திவானை எப்படியாகிலும் குற்றஞ்சாட்டித் தொலைக்க வேண்டுமென்று பிரயத்தனஞ் செய்து வந்ததாலும், கோலாப்பூர் சமஸ்தானத்

தில் காருணைபட் என்பவருக்கு ஒன்றும் நடக்கமுடியாமற் போகவே, புனாவில் புதிதாக ஏற்பட்ட பத்திரிகைகளில் பிரசுரஞ் செய்ய, அனுபோகமில்லாத இரண்டு சிறு பத்திரிகாசிரியர்களின் மூலமாக காருணைபட் தன் இஷ்டத்தைப் பூர்த்திசெய்து கொண்டானென்றும் அக்காரியஸ்தர் தெரிவித்தார். மகாராஷ்டிரத்திலுள்ள சனங்கள் திலகரையும் அகர்காரரையும் கௌரவமாகக் கொண்டாடுகிறார்கள். சிவாஜி மகாராஜாவின் வம்சத்தைச் சேர்ந்த கோலாபூர் சமஸ்தானத்தின் பெருமையைக் காப்பாற்ற திலகரும் அகர்காரும் பாடுபட்டார்களென சனங்கள் இவ்விருவர்களையும் மெச்சினார்கள்.

கேஸ் விசாரணை பம்பாயில் நடந்தது. பம்பாய் ஹைகோர்ட்டில் வக்கீலாக இருந்த மேடாவும் தெலாங்கும் திலகருக்கும் அகர்காருக்கும் வக்கீலாக அமர்ந்தனர். மேடா முதல் முதல் திலகரின்மீது எவ்வளவு அன்புகொண்டு அவர்மீது வந்த வழக்கையும் நடத்திப் பிரயத்தனப்பட்டாரோ, அவ்வளவுக்கும் கடைசியாக, திலகர்மீது தீராப் பகைமையைக் கொண்டு இறந்தார். பத்திரிகைகளில் பிரசுரமான அம்மூன்று கடிதங்களின்மேலே வழக்கு தொடரப்பட்டது. அக்கடிதங்கள் உண்மையாகவே அரண்மனை காரியஸ்தரால் எழுதப்பட்டனவா? அரண்மனை காரியஸ்தர் தன்னால் எழுதப்படவில்லையென்றார். காருணைபட் அக்கடிதங்கள் அரண்மனை காரியஸ்தராலேயே எழுதப்பட்டவை யென்று கூறினார். இத்தகைய நிலைமையில் எது உண்மை எது பொய் என்று நிர்மாணிக்க வழியில்லை. கோலாபூரில் சில சாட்சிகள் இருந்தனர். அவர்களால் உண்மை எது வென்பதைச் சொல்ல முடியும். ஆனால், அந்த சாக்ஷிகளுக்கு சம்மன் பிறப்பித்து, அவர்களைக் கோர்ட்டில் ஆஜராகும்படி செய்ய பம்பாய் ஹைகோர்ட்டுக்கு அதிகாரமில்லை. கோலாபூர் சுதேச



சமஸ்தானமாக விருந்ததால், சுதேச சமஸ்தானத்திலுள்ளவர்களுக்கு சம்மன் பிறப்பிக்க ஹைகோர்ட்டுக்கு வழியில்லை. பம்பாய் கவர்ன்மெண்டாரிலும், கோலாபூர் சமஸ்தானத்திலுள்ள இராஜீய ஆங்கில உத்தியோகஸ்தராகிலும் அது விஷயமாகச் செய்திருக்கக்கூடும். ஆனால், அவர்கள் அவ்வழக்கு நபர்களைப்பற்றியதால் அரசாங்கத்திற்கு யாதொரு சம்பந்தமுமில்லை யென்று தலையிட முடியாதென்றனர். கடைசியாக, ஹைகோர்ட்டார், வேறு வழியொன்றுமில்லாமல் காருணைபட்டுக்கு விரோதமாகத் தீர்மானஞ் செய்தனர். கடிதங்கள் ஆதாரமற்றவை யெனத் தீர்மானிக்கப்பட்டது. திலகரும் அகர்காரும் வெகு கம்பீரத்துடன் தங்கள் அந்தஸ்துக்குத் தக்கபடி மன்னிப்பு கேட்டுக் கொண்டனர். அங்ஙனம், அவர்கள் மன்னிப்பு கேட்டுக்கொண்டும் சாவ்பக்தாரின் கோபம் தணியவில்லை. பத்திராதிபர்களைத் தண்டிக்கவேண்டுமென்று வற்புறுத்தினார். மானபங்கப்படுத்தின குற்றம் உண்டாகி 1882-ம் வருடம் ஜூலை மாதம் 16-ந் தேதியன்று திலகரும் அகர்காரும் பம்பாய் ஹைகோர்ட்டாரால் 4-மாதம் சாதாரண காவல் தண்டனை அடைந்தனர்.

பம்பாய் ஹைகோர்ட்டார் அவ்விருவர்களுக்கும் விதித்த தண்டனை அநீதியெனச் சனங்கள் முறையிட்டனர். சனங்கள் முறையிடுவதைக் கேட்பார் யார்? மகாராஷ்டிரத்தில் அவர்களுடைய தண்டனையினால் ஒரு கிளர்ச்சி யுண்டாயிற்று. அவ்விருவர்கள் தண்டனையடைந்ததும் கைதிகளைக் கொண்டு போகும் மூடு வண்டியில் ஏற்றப்பட்டு டாங்கிரி சிறைக்குக் கொண்டு போகப்பட்டனர். சிறைக்குட் சென்றதும் திலகரும் அகர்காரும் ஓர் அறையில் சேர்ந்து அடைக்கப்பட்டனர். சிறைச்சாலை உணவும் மற்ற வசதியும் சரியாகவில்லை. என்றாலும், அவ்விருவர்கள் தனித்தனி பிரிக்

கப்படாமல் ஒரே அறையில் இருந்து வந்ததினால், உணவினாலாய கஷ்டங்களும் மற்ற வகையினால் உண்டான கஷ்டங்களும் கஷ்டங்களாக அவர்களுக்குப் புலப்படவில்லை. அவ்விருவரும் அடிக்கடி பல விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்யவும், புதிய புதிய நோக்கங்களைக் கொள்ளவும், சனங்களுக்கு இன்ன இன்ன மாதிரி சேவைசெய்ய வேண்டுமென்றும், பள்ளிக்கூடத்தை இன்னின்ன மாதிரி நடத்த வேண்டுமென்றும் அடிக்கடி யோசித்து வருவார். இரவு நேரங்களில் மூட்டைப் பூச்சிகளின் உபத்திரவத்தாலும், கொசுக்கடி உபத்திரவத்தாலும் சரியானபடி நித்திரை செய்வதில்லை. இரவெல்லாம் விழித்துக்கொண்டு தேசகாரியங்களைப்பற்றிப் பேசுவதும் யோசிப்பதுமாகவே யிருந்தனர். அடிக்கடி ஜெயில் வார்டர்கள் அவ்விருவர்களைப் பேசக்கூடாதென்று எச்சரிக்கை செய்வர். சில சமயங்களில் அவ்வார்டர்கள் (Warder) கோபித்தனர். சகல கஷ்டங்களையும் தாங்கி வெகு பொறுமையுடன் அவ்விருவரும் சிறைச்சாலை உத்தியோகஸ்தர்களின் மனங்கோணாவண்ணம் நடந்துவந்தனர். சிறைச்சாலையின் கேவலமான உணவினால் ஸ்ரீ திலகர் 24 ராத்தல் எடை குறைந்தார். பொழுது போக்குவது மிகவும் கஷ்டமாக யிருந்ததினால் அவ்விருவர்களும் தங்களுக்கு ஏதாகிலும் வேலை கொடுக்க வேண்டுமென்று சிறைச்சாலை சூப்பரின்டென்டைக் கேட்டனர். சிறைச்சாலைகளில் கடின தண்டனை யடைந்தவர்களுக்கே வேலை கொடுக்கப்படும். அவ்விருவர்களும் சாதாரண தண்டனை (Simple Imprisonment) யை யடைந்தவர்களாதலால் வேலை யொன்றும் கொடுக்கப்படவில்லை. பிறகு, அவ்விருவர்களும் பொழுது போக்கக் கஷ்டமாயிருப்பதை யறிந்து, வேலை கொடுக்கக் கேட்டனர். சூப்பிரன்டெண்டு அவர்களுடைய குறைகளைத் தீர்க்கச் சில புத்தகங்



களையும் எழுதுங் கருவிகளையும் கொடுத்தார். அவ்விருவர்கள் பெருமகிழ் வடைந்து தங்கள் காலத்தைப் படிப்பதிலும் எழுதுவதிலும் போக்கினார்.

திலகரும் அகர்காரும் சிறையில் தன்னந் தனியே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கையில், சனம் மண்டலிக் என்பவரும் திலகர்—அகர்கார் கல்வி கற்றுவந்த கல்லூரியின் பிரதம போதகாசிரியர் மிஸ்டர் ஓர்ட்ஸ்வொர்த் அவர்களும் மற்ற சில கனவான்களும் சேர்ந்து, சிறையில் கஷ்டப்படும் அவ்விருவர்களையும் விடுதலைசெய்ய கவர்ன்மெண்டாருக்கு மனு செய்துகொண்டனர். கவர்ன்மெண்டார் அம்மனுவைத் தள்ளிவிட்டு சும்மாயிருந்தனர். அதுகாலை, 'தீனபந்து' என்னும் பத்திரிகை பின்வருமாறு எழுதியது. 'சிறையில் கஷ்டப்படும் அவ்விருவர்களின் தண்டனை[illegible] விடுதலை செய்யும்படி அரசாங்கத்தாரைக் கேட்பதைவிட, விடுதலை யடைந்தவுடன் அவ்விருவர்களையும் ஊர்வலஞ் செய்வித்து மிக்க மரியாதையுடன் வரவேற்பு விழாகொண்டாடுவது மிக்க பொருத்தமாகும்! சிறைச்சாலையில் அவ்விருவர்களும் மிக்க மரியாதையாகவும் நன்னடத்தையாகவு மிருந்ததினால், 21 நாள் அவர்களுக்குப் பொறுதி கொடுக்கப்பட்டது. அங்ஙனம் கொடுக்கப்பட்டதினால், 1882-ம் வருடம் அக்டோபர்மாதம் 26-ந்தேதி அவ்விரு தேசாபிமானர்களும் சிறைச்சாலையினின்றும் வெளிவந்தனர். திரளான சனங்கள் சிறைவாயிலில் வந்து குழுமினர். அவர்களுக்கு ஊர்கோலம் செய்யப்பட்டது. வரவேற்பு பத்திரங்கள் கொடுக்கப்பட்டன. பல கனவான்கள் திலகரையும் அகர்காரையும் வாயாறப் புகழ்ந்தனர். திலகரும் அகர்காரும் அதுகாலை 'இனி சிறைச்சாலையைப்பற்றிய பயம் இல்லை. சிறைச்சாலை என்பது விசிராந்திசாலையாக நாங்கள் கொண்டோம். இனி எத்தகைய கஷ்டங்களுக்கும் பயப்படாமல் தைரியமாக

தேசசேவையைச் செய்ய முற்படுவோம்' என்றனர். சின்னாள் கழிந்தபிறகு, அகர்கார் இராஜீயத்துறையில் அதிகமாகப் பாடுபடுவதைத் தவிர்த்து, ஜனசார சீர்திருத்தத் துறையில் பாடுபட்டனர். ஸ்ரீ திலகரோ இராஜீயத்துறையிலேயே பாடுபட்டு அடிக்கடி சிறை புகுந்து வந்தார். ஸ்ரீ திலகரும் ஸ்ரீ அகர்காரும் குற்றஞ் சாட்டப்பட்டு ஹைக்கோர்ட்டில் வழக்கு நடந்து வருகையில், காலஞ்சென்ற கோபால கிருஷ்ண கோகலே கல்லூரி மாணவராக இருந்து வந்தார். திலகர் அகர்காரின் வழக்குக்காக சகாயநிதிதிரட்ட நாடகமொன்றை நடத்தினதில் பெண்வேஷம்பூண்டு கோகலே நடித்தார். திலகர் - அகர்கார் வழக்கின் மூலமாக, முதல் முதல் கோகலேயின் பெயர் நாடகத்தின் வழியாய் பொதுசனங்களுக்குத் தெரிந்தது. ஆரம்பத்தில் ஸ்ரீ திலகருடன் சிநேகம் பாராட்டி அவரைக் கொண்டாடிவந்த, மேடா, கோகலே, ரானடே, முதலானோர் பிற்காலத்தில் விரோதப்பான்மையைக் கொண்டது திலகரின் இராஜீயக்கொள்கையே முக்கிய காரணமாகும். ஸ்ரீ திலகரின் முதல் சிறைவாசமே சுதந்தரசித்திக்கு முதல் சம்ஸ்காரமாக ஆயிற்று.

## 3. குரு மகாராஜ் திலகர்

கிறிஸ்து பிறந்த 1880-ம் வருடம் ஜனவரி மாதம் முதல் தேதியன்று புனாநகரில் புதிய ஆங்கில கல்லூரியொன்றை ஸ்ரீ திலகரும் அவருடைய நண்பர்களும் சேர்ந்து ஸ்தாபித்தனர். அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட கலாசாலைகளும் அரசாங்கத்தின் ஆதரவைப்பற்றியிருக்கும் கலாசாலைகளும் மாணவர்களுக்குத் தகுந்தவிதமாகக் கல்வியையூட்டவில்லையென்றும், தேசாபிமானம், ஆஸ்திகத்தன்மை முதலிய நற்குணங்கள் உண்டாகப் போதிக்கப்படவில்லையென்றும், போதனாமுறை அதிக செலவுள்ளதாகவும் ஏழைகளுக்குத் தக்கபடி சிக்கனமாகவில்லையென்றும் அறிந்தே ஸ்ரீ திலகர் முதலானோர் புதிய ஆங்கில கல்லூரியை புனாநகரில் ஸ்தாபித்தனர். புதிய ஆங்கில கல்லூரி திறப்பு விழா தினம் 19 பிள்ளைகளைச் சேர்த்தனர். இரண்டுமாதம் கழிந்த பின் கல்லூரிக்கு மாணவர்கள் பலவிடங்களினின்றும் வந்து சேர்ந்தனர். வருடமுடிவில் மாணவர்களின் தொகை 336. 1881-ம் வருட முடிவில் 600 மாணவர்களிருந்தனர். 1884-ம் வருடம் ஜனவரி மாதத்தில் 858 மாணவர்கள் அப்புதிய ஆங்கில கல்லூரியில் கல்விகற்று வந்தனர். அக்கல்லூரியை நடத்துபவர்கள் மாதம் 30 ரூ. சம்பளம் பெற்று வந்தனர். குடும்பகாலட்சேபத்துக்கு எவ்வளவு சிக்கனமாக செலவு செய்பவரோ அவ்வளவு தொகையைமட்டும் மாதம் மாதம் பெற்றுக்கொண்டு மாணவர்களுக்குக் கல்வி கற்பித்து வந்தார்கள். மாதம் அத்தொகையைவிட பன்மடங்கதிகமான தொகையை வேறிடங்களில் பெறும் யோக்கியதையிருந்தும் அவர்கள் தேசநன்மை யொன்றையே கருதி,

சொற்ப சம்பளம் பெற்று கல்வி கற்பித்து வந்தார்கள். 1882-ம் வருடத்தில் இந்தியாவில் கல்வி அபிவிர்த்தி செய்ய வேண்டுமென்கிற நோக்கத்தைக்கொண்டு வித்யாகமிஷன் ஒன்று டாக்டர் ஹண்டரின் தலைமையின் கீழ் ஏற்படுத்தப்பட்டது. அக்கமிஷன் மெம்பர்கள் இந்தியாவிலுள்ள பல பாகங்களுக்குச்சென்று கல்விச்சாலைகளின் ஸ்தாபிகர்களையும் பிரபல போதகாசிரியர்களையும் கல்வி விஷயமாக விசாரணை செய்தனர். டாக்டர் ஹண்டர் அப்புதிய ஆங்கில கல்லூரியின் நிலைமையையும் அக்கல்லூரியின் போதகாசிரியர்களையும் கண்டு பின்வருமாறு எழுதியுள்ளார். 'இந்தியாவெங்கும் புனாவில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட கல்லூரியைப்போல் ஒன்றும் இல்லை. இந்த புதிய கல்லூரியானது அரசாங்கத்தாரால் ஸ்தாபிக்கப்பட்ட பள்ளிக்கூடங்களுடன் போட்டி போடுவதுடன் உலகத்திலுள்ள மற்ற தேசங்களிலுள்ள பள்ளிக்கூடங்களுடனும் போட்டி போடக்கூடிய நிலைமையில் அவ்வளவு சிறப்பாய் இருந்து வருகிறது.' திலக, மகாராஷ்டிரத்திலுள்ள நடுத்தர கல்விச் [illegible] பெல்லாம் ஜனங்களுடைய ஆதினத்திலேயே விட்டுவிடும்படி [illegible] அரசாங்கத்தைத் தூண்டிவந்தார். அதுகாரணமாகப் புதிய ஆங்கில கலாசாலையை ஸ்தாபித்து அக்கலாசாலை மற்ற கலாசாலைகளைவிட சிறப்புற்றிருக்கிறதெனக் கூறுமாறு ஸ்ரீ திலகரும் அவருடைய நண்பர்களும் பாடுபட்டனர்.

மகாராஷ்டிரத்திலுள்ள நடுத்தர கல்விச்சாலைகளை ஜனப் பிரதிநிதிகளிடத்தில் ஒப்படைத்துவிட வேண்டிய விஷயமாக அரசாங்கத்துக்கும் ஸ்ரீ திலகரும் பல கடிதப் போக்குகள் நடந்துவந்தன; கவர்ன்மெண்டாரும் ஒப்படைத்து விடலாம் என்னும் எண்ணத்தைக் கொண்டிருந்த சமயத்தில் ஸ்ரீ திலகருக்கும் அவருடைய நண்பர்களுக்கும் விரோதமாக இரண்டொருவர் இரகசியமாகப் புறங்கூறி அரசாங்கத்



தாரை ஒப்படைக்காவண்ணஞ் செய்தனர். புதிய ஆங்கில கல்விச்சாலைக்குப் பணம் அதிகமாக வரவில்லை. என்றாலும், ஸ்ரீ திலகரும் அவருடைய நண்பர்களும் வெகு ஊக்கமாக மேன்மேலும் பாடுபட்டுவந்தனர். புதிய ஆங்கில கல்விச்சாலையின் அபிவிர்த்தி விஷயமாகவும் ஸ்ரீ திலகர் முதலானோரின் பெரு முயற்சியைப்பற்றியும் 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகையும் பெருமையுடன் கூறிற்று. ஸ்ரீ திலகரே அக் கல்விச்சாலையின் விஷயமாக நடுநாயகமாய் விளங்கினார். பள்ளிக்கூடத்தில் ஸ்ரீ திலகர் கணிதம் ஆங்கிலம் முதலிய பாடங்களைப் போதித்து வந்தார். ஸ்ரீ திலகர் நல்ல போதகாசிரியர். மாணவர்களுக்கு அவரிடம் மிக்க மரியாதை. வகுப்பில் மாணவர்களுடன் வீண்காலம் போக்கி, அவர்களைச் சிரிக்கவைத்து வம்பு செய்வது அவருடைய வழக்கமல்ல. சதா மாணவர்களுக்கு நல்ல அறிவைப் புகட்டும் நல்லாசிரியராக விருந்தார். நல்லாசிரியனுக்கு வேண்டிய இலட்சணம் ஸ்ரீ திலகரிடத்திற் பொருந்தியிருந்தது. உயர் குடிப்பிறப்பும், ஜீவகாருண்யமும், கடவுள் வழிபாடும் ஆகிய இவற்றாலும் பிறவற்றாலும் மேம்பாடும், பல நூல்களிற் பழகிய தேர்ச்சியும், நூற்பொருளை மாணாக்கர்கள் எளிதில் உணரும்படி தொடுத்துச் சொல்லுகின்ற சொல்வன்மையும், பிறரால் அறியப்படாத கல்வியறிவின் பெருமையும், பெரிய வாதஞ்செய்து தன்மேல் நெருங்கினவரால் கலங்காத வல்லமையும், தன்னை யடுத்தவர் இகழ்தல் முதலிய குற்றங்களைச் செய்யினும் பொறுக்கும் பொறுமையும், மாணாக்கர் செய்யும் முயற்சியளவிற்குத் தக்க அவர்க்குப் பயனைத் தருதலுமாகிய இலட்சணங்கள் ஸ்ரீ திலகரிடத்து இருந்தன. தவிர, அளவு காணக்கூடாத கல்வியினளவும், பல வகை நூற்பொருள்களும், எப்படிப்பட்ட புலமையுடையோராலும் அசைக்கப்படாத கல்வி யறிவின் நிலையும், நெடுந்

காரத்திலுள்ளாராலும் அறியப்படும் உயர்ச்சியும், பொருள் வழி வருவதாலும் தன்னைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கல்விப் பொருளைக் கொடுக்கும் கொடையும் ஸ்ரீ திலகரிடத்திலிருந்தன. மற்றும், விளைப்பட்ட சொற்பொருளின் இயல்பைச் சந்தேகம் இல்ல அறிவித்தலும், உண்மையை அறிந்த அறிவும், இவைபோல்வன மிக உயர்ந்த குணங்களும் ஸ்ரீ திலகரிடத்து பொருந்தியிருந்தன. புதிய ஆங்கில கல்விச் சாலையில் சுதேசபாஷை முறையாகவே சகல பாடங்களும் கற்று கற்பிக்கப்பட்டு வந்தன. ஆரம்பத்தில் சரித்திரம், பூகோளம், சாஸ்திரம், கணிதம் ஆகிய இப் பாடங்களைப் போதிக்கும் விஷயமாகச் சில கஷ்டங்களுண்டாயின. இந்த விஷயங்களை திலகர், அகர்கர், ஆப்டே இவர்கள் இம் மொழிகளுக்கும் போதிக்கக்கூடிய வகையைக் கரிய இட்டுப்படுத்தாமல் இருந்த காரணப்பற்றியே, ஆரம்பத்தில் சில கஷ்டங்கள் ஏற்பட்டன. பிறகு அம் முறைகளும் உடனுக்குடன் போதிக்கவேண்டிய முறைகளையும் திட்டங்களையும் தயாரித்தனர். அது முதற்கொண்டு மாணவர்களுக்கு தக்கப் போதனாமுறை ஏற்பட்டு வந்தது. பரீட்சைகளில் எல்லா கல்விச்சாலைகளின் மாணவர்களைவிட ஸ்ரீ திலகரின் கல்விச் சாலை மாணவர்கள் உயர்வாகத் தேறுவார். தேறுபவர்களின் தொகையும் அதிகம். அவர்களுடைய போதனா முறைகளைக் கண்டு சிலர் குறைகூறி வந்தனர். அன்னம் குறை கூறினவர்கள் இதர கல்விச்சாலைகளைப் பெரும்பாலும் சேர்ந்தவர்கள். அந் நிலைமையில், ஸ்ரீ திலகர், ஒரு கலாசாலையும் ஸ்தாபிக்க முயற்சி செய்தார். புனாவில் ஓர் ஸ்பர்தா கலாசாலையை ஸ்தாபித்தால், நல்ல போதகர்கள் பலர் வருவார்களென்றும், மகாராஷ்டிர மெங்கும் கல்விச்சாலைகளை ஸ்தாபிப்பதற்கு வழி யுண்டாகுமென்றும் ஸ்ரீ திலகர் எண்ணினார்.



புதிய ஆங்கில கல்விச்சாலையின் அபிவிர்த்தியில் அபிமான முன்னவர்களைக் கொண்ட ஓர் காரியக் கூட்டம் நடைபெற்றது. அதன் பிரயோசனமாக 1884-ம் வருடம் அக்டோபர் மாதம் 24-ந் தேதி 'தட்சிண வித்யாசங்கம்' எனப் பெயர்கொண்ட ஓர் வித்யா அபிவிர்த்தி சபை ஸ்தாபிக்கப்பட்டது. இந்த சங்கத்தின் ஸ்தாபனத்திற்கு அஸ்திவாரமாக யிருந்தது ஸ்ரீ திலகர். ஸ்ரீ திலகருடைய பெரு முயற்சியாலேயே அச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. உடனே பம்பாய் சர்வ கலாசபைக்கு புனாவில் புதிய கலாசாலை (College) ஸ்தாபிக்க உத்திரவுகொடுக்க மனுவொன்று செய்யப்பட்டது. கலாசாலையும் ஸ்தாபிக்கப்பட்டது. ஸ்ரீ திலகரும் சாமஜோஷியும் அக்கலாசாலைக்குப் பணம் திரட்ட பல் பிரயாசைகள்பட்டனர். இரவும் பகலும் ஓய்வின்றி சதா திரிந்துகொண்டே அவ்விருவர்களும் இருந்தனர். கலாசாலையை ஸ்தாபித்து நல்ல பதவிக்குக் கொண்டு வந்ததும், 1890-ம் வருடத்தில் சில அபிப்பிராய பேதங்களினால் ஸ்ரீ திலகர் அக்கலாசாலையினின்றும் விலகினதுடன் அச்சங்கத்தினின்றும் விலகிக்கொண்டார். கலாசாலை ஸ்தாபிக்கப்பட்ட காலத்தில் அக் கலாசாலையில் ஸ்ரீ திலகர் கணிதம், சமஸ்கிருதம், சாஸ்திரம் இவைகளைக் கற்பித்து வந்தார். மாணுக்கர்க்குக் கற்றுக் கொடுக்கும்போது காலத்தையும் இடத்தையும் செவ்வையாக ஆராய்ந்து பார்த்து, மேம்பட்ட இடத்தில் இருந்து, தான் வழிபடும் கடவுளைத் துதித்து, பாடஞ் சொல்லப்படும் சொற்பொருளை தன் மனத்தில் பொருத்தமாக முன்னமே நிறுத்தி வைத்துக் கொண்டு, துரிதப்படாமலும், கோபியாமலும் விருப்பத்தோடு கூடி மலர்ந்த முகமுடையவராய், கற்றுக்கொள்ளும் மாணுக்கன் தன் மனத்திற் கொள்ளும் தன்மையை அறிந்து கொண்டு, அவன் மனதிற் பதியும்படி மாறுபாடில்லாத நன்

மனத்துடனே நூற்பொருளைக் கற்றுக் கொடுக்கும் இயல்பினை ஸ்ரீ திலகர் பெற்றிருந்தார். நிற்க, புதிய ஆங்கில கல்விச்சாலை அபிவிருத்தி யடைந்து வருவதைக் கண்ணுற்று பலர் கலாசாலை ஸ்தாபிக்கப்பட்டவுடன் இன்னும் அநேகர் தக்ஷிண வித்யா சங்கத்திற்கு ஜீவியகால அங்கத்தினர்களாக (சாசுவித அங்கத்தினர்) வந்து சேர்ந்தனர். அங்ஙனம் விதம் விதமான அபிப்பிராயங்களும் குணங்களும் அநுஷ்டானங்களும் இலட்சியங்களும் கொண்ட பலர் அங்கத்தினர்களாக வந்து சேர்ந்ததும், சங்கத்தில் பல சிறிய சிறிய விஷயங்களுக்கும் அபிப்பிராய பேதமுண்டாகி சச்சரவு ஏற்பட்டது. தியாகமே பெரிதென்னக் கொண்டவர்களுக்கும் தியாகத்தைச் சிறிதேனு மறியாதவர்களுக்கும் அபிப்பிராயபேதம் உண்டாயிற்று. ஸ்ரீ திலகரும் அவருடைய நண்பர்களும் முதல் முதல் மகா ராஷ்டிரத்தில் மிக்க குறைவான செலவில் கல்வியைப் பரவச்செய்யவேண்டுமென்னும் நோக்கத்தைக் கொண்டிருந்தனர்.

இந்திய வித்தியாபிவிருத்தி சங்கமொன்றை ஸ்தாபித்து, சில கிறிஸ்துவ பாதிரிமார்கள் சிறந்த தியாகத்துடன் போக போக்கியங்களை நீக்கி கல்வி அபிவிருத்தியை எங்ஙனம் செய்து வருகிறார்களோ அங்ஙனமே மகா ராஷ்டிரத்தில் தேசிய வழியில் செய்யவேண்டுமென்று ஸ்ரீ திலகரும் அவருடைய நண்பர்களும் முதல் முதல் தீர்மானித்தனர். 1879-ம் வருடத்தில் ஸ்ரீ திலகர், அகர்காருடன் நேபினை காலத்தில் இந்நோக்கத்தைப் பற்றியே கூறினர். அகர்காரும் அந்நோக்கத்தை ஒப்புக்கொண்டார். பின்னர் பல தடவைகளில் அந்நோக்கத்தைப் பகிரங்கப்படுத்தியும் வந்தனர். 1882-ம் வருடத்தில் கல்வி கமிஷன் விஜயகாலத்தில் நண்பர்களின் பிரதிநிதியாக அந்நோக்கத்தைக் கொண்டே வாக்குமூலம் கொடுத்தார். 1884-ம் வருடம் பிப்ரவரி



மாதத்தில் பம்பாய் கவர்னர் ஸர் ஜேம்ஸ் பர்குஸன் பூனாவுக்கு விஜயஞ் செய்தகாலத்திலும் அந்நோக்கத்தையே கூறப்பட்டது. இவ்வளவுதாம் அந்நோக்கத்தைப் பற்றிப் பல விடங்களில் பல சமயங்களில் பலமாகக் கூறப்பட்டும், கடைசியாக அந்நோக்கத்திற்கு விரோதமாகவும் சௌகரியப்படியும் பல அங்கத்தினர்கள் புதிய புதிய நிபந்தனைகளை இஷ்டப்படி யுண்டாக்கிக்கொண்டும் பழைய நிபந்தனைகளை மாற்றிக் கொண்டும் வந்தனர். எந்த நோக்கத்துடன் ஆரம்பிக்கப் பட்டதோ அந்த நோக்கத்திற்கு விரோதமாகப் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தக்ஷிண வித்யாசங்கத்தைச் சேர்ந்த சாசுவித அங்கத்தினர்கள். சம அந்தஸ்தையும், சம உரிமையும், சம சம்பளத்தையும் பெற்று வந்தார்கள். அவர்களுடைய மாதசம்பளமோ அதிகமாகயில்லை, குறைவாகவே யிருந்தது. அங்ஙனம் சம்பளம் குறைவாக யிருந்ததினால் விசேஷ சம்பவத்தைக் கொண்டு அங்கத்தினர்களுக்கு உபகாரச்சம்பளம் நன்கொடையாகக் கொடுக்கலாமென்னும் அச்சங்கத்தில் ஒரு நிபந்தனையிருந்தது. தவிர, சாசுவித அங்கத்தினர்களுக்கு ஏதாவதும் நோயொன்று ஆபத்து வந்தால் அதற்காக இரட்சக நிதி 3000-ம் ரூ. ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படுமென்னும் மற்றொரு நிபந்தனையு மிருந்தது. இத்தகைய நிபந்தனைகளை ஆரம்பத்தில் ஏற்படுத்தி ஸ்ரீ திலகர் அதன் அநுஷ்டானத்திற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் செவ்வனே செய்து வந்தார். அன்றிவராம நன்றாகப் பலப்பட்டு கலாசாலை பெருமையுடன் அபிவிருத்தி யடைவதைக் கண்ட சில அங்கத்தினர்கள்; தங்கள் குடும்பச்செலவுக்கு சம்பளம் போதாதென முறையிட்டனர். ஆனால் புதிதாகச் சேர்ந்த அங்கத்தினர்கள் அம்முறையீடுகளைப் பற்றிக் கவனிக்காமல் தாராளமாகப் பேசி வந்தனர். அங்கத்தினர்களிற் சிலர் 1880-ம் வருடம்வரை

யாதொரு சம்பளமின்றி உழைத்தனர். சிலர் அதிக தொகைவாங்கிக் கொண்டிருந்தனர். அந்த வித்தியாசத்தை யொழிக்கச் சில நிபந்தனைகள் 1881-ம் வருடத்திலிருந்து செய்யப்பட்டன. அதல்லாமல், கல்விச் சாலையோடு 'கேஸரி,' 'மராட்டா' பத்திரிகைகளையும் சேர்க்கப்பட்டிருந்தன. அப்பத்திரிகைகள் ஆரம்பத்திலிருந்து அநேகமாக கஷ்டப்பட்டுக் கொண்டே வந்தன. கலாசாலைகளின் பணவருவாயில் அதிகரித்தும் பத்திரிகைகளின் பணவருவாயில் அதிகரிக்கவில்லை. பத்திரிகாசிரியர்கள் அப்பத்திரிகைகளினின்றும் யாதொரு இலாபத்தையும் பெறவில்லை. பொதுவாக எல்லா அங்கத்தினர்களும் ஒன்றுசேர்ந்து உழைத்து வருங்காலத்தில் கஷ்டம் தெரியவில்லை, சில அங்கத்தினர்கள் தங்களுடைய உழைப்பைக் கணக்கிட ஆரம்பிக்கவே, பல கஷ்டங்கள் ஏற்பட்டன. பத்திரிகைகளுக்கு வழக்கமாக வியாசம் எழுதிவந்த சில அங்கத்தினர்கள் வியாசம் எழுதுவதை நிறுத்தினர். பணம் வரும்படி வரும் காரியத்தையே கண்ணுக்கொண்டு அதில் உழைத்துவந்தனர். சிலர் வேறு வேலைகளில் புகுந்து பணம் சம்பாதித்துக்கொண்டு வரவும், பத்திரிகைகளில் இருப்பவர் யாதொரு இலாபமுமின்றி உழைத்துவரவுமாயினர். கடைசியாக, சங்கத்தைச்சேர்ந்த அங்கத்தினர்கள் தங்கள் சுயலாபத்திற்காக சங்கவேலை தவிர இதர வெளிவேலைகளில் பிரவேசிக்கலாமா? என்றும் கேள்வி உண்டாயிற்று. இதுவிஷயமாகப் பலமான அபிப்பிராய பேதங்கள் உண்டாயின. ஆரம்பத்தில் அங்கத்தினர்கள் பள்ளிக்கூட காரியங்கள் தவிர, இதர வெளிவேலைகளைச் செய்யக்கூடாதென்று கண்டிப்பான நிபந்தனையேற்பட்டிருந்தது. பிறகு, 1885-ம் வருடத்திலிருந்து புதிய அங்கத்தினர்களின் சேர்க்கையால் சமசம்பளமும் சம உரிமையும் எல்லா அங்கத்தினர்களுக்கும் ஏற்பட்டவுடனே, அங்கத்தினர்கள்



தினம் கல்லூரியில் 4-மணிநேரம் வேலைசெய்து விட்டுப்பிறகு ஒழிந்த நேரங்களில் அவரவர்களிஷ்டப்படி வேறு வெளி வேலைகளைச் செய்து பணம் சம்பாதித்துக் கொள்ளலாமென்று வற்புறுத்தப் பட்டது. புனாவிலுள்ள பல வித்யா பட்டம் பெற்றவர்கள் ஆரம்பத்தில் தங்களுடைய அந்தஸ்து உயர்வதற்காகவும் நிலைமை செம்மையாவதற்கும் புகலிடமாக அதை உபயோகப் படுத்திக்கொண்டு வெளிவேலைகளில் பணம் சம்பாதிப்பதும் கௌரவம் பெறுவதுமாக இருந்து வந்ததால், ஆரம்பத்தில் எந்த தியாகபுத்தியுடன் ஸ்தாபிக்கப் பட்டதோ அந்த தன்மைக்குப் பங்கம் வந்துவிடுமெனக் கண்டு, ஸ்ரீ திலகர் அவ்வழியை முற்றிலும் கண்டித்தார். அங்கத்தினர்கள் வெளிவேலைகளைச் செய்யக்கூடாதென்றாகிலும் அல்லது வெளிவேலைகளில் வரும் ஆதாயங்களைச் சங்கத்திற்குச் சேர்த்துவிட வேண்டுமென்றாகிலும் நிபந்தனை யொன்று ஏற்படுத்த வேண்டுமென்று ஸ்ரீ திலகர் வற்புறுத்தினர். இதுவிஷயமாக கோபால கிருஷ்ண கோகலேயும் ஸ்ரீ திலகருடைய அபிப்பிராயத்திற்கு மாறாக நடந்துவந்தார். என்றாலும், கோகலே அவர்கள் புனாவில் ஏற்படுத்திய, 'ஊழியர் சங்கம்' (Servants of India Society) என்னும் சங்கத்தின் நிபந்தனைகளில் 9-வது பிரிவின் நான்காவது உட்பிரிவில் கீழ்க்கண்டபடி நிபந்தனை யொன்றை செய்துள்ளார்.

சங்கத்தைச் சேர்ந்த அங்கத்தினர், சங்கத்தாரால் அந்த அங்கத்தினருக்கும் அவருடைய குடும்பத்திற்கும் கொடுக்கப்படும் தொகையைப் பெற்றுக்கொண்டு திருப்தியுடனிருக்கவேண்டும்; அந்த அங்கத்தினர் தனக்காகப் பணம் சம்பாதிக்கும் வேலையில் ஈடுபடக் கூடாது.

இந்த நிபந்தனையைத் தான் ஸ்ரீ திலகர் தட்சிண வித்யாசங்கத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று வற்புறுத்தி

ஞர். அதற்குப் பலர் விரோதமாக யிருந்தனர். விரோதமாக யிருந்த கோகலே, பிறகு அநுபவம் பெற்றதின்பேரில் இந்திய ஊழியச் சங்கத்திற்கு ஸ்ரீ திலகரின் நிபந்தனையை யேற்படுத்தினர் போலும்! நிற்க, 1888-ம் வருடம் பிப்ரவரி மாதத்தில் கூடிய காரிய ஆலோசனை கூட்டத்தில் தட்சிண வித்யாசங்கத்தைச் சேர்ந்த அங்கத்தினர்கள் பலர் சேர்ந்து! பள்ளிக்கூடத்திற்கு வேண்டிய பாட புத்தகங்களைத் தயாரிப்பதில் அங்கத்தினர்களுக்குள்ளே போட்டா போட்டிவைத்துப் பிறகு தெரிந்தெடுத்து அப்புத்தகத்தின் பிரசுர உரிமையாவையும் நிர்வாக சங்கத்தாரே பெறவேண்டும்' என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இந்த தீர்மானத்திற்கு விரோதமாக முதன் முதல் கணக்கு புத்தக விஷயமாகச் செய்யப்பட்டது. 7-வது வகுப்புக்குக் கணக்கு ஆசிரியராகக் காலஞ்சென்ற கோகலே யிருந்தார். அவ்வகுப்புக்கும் மற்ற வகுப்புகளுக்கும் தக்க மாதிரியான ஒரு கணக்கு புத்தகம் அவசியமென்பதை ஸ்ரீ கோகலே யறிந்து தயாரித்தார். அப்புத்தகம் வெளி வருவதற்கு முன்னரே 1889-ம் வருடத்திற்குக் கணக்குப் பாட புத்தகமாக நிர்வாக சங்கத்தார் ஏற்படுத்தினர். நிற்க, ஸ்ரீ கோகலே அச்சமயத்தில் சில காலம் சர்வஜனச் சபையினின்றும் வெளி வரும் பத்திரிகை (மூன்று மாதத்திற் கொருமுறை பிரசுரிக்கப்படும் சஞ்சிகை)யை நடத்திவரும் காரியத்தில் இருந்தார். தவிர அச்சங்கத்தின் காரியதரிசியாக யிருக்கவும் ஒத்துக்கொண்டார். அங்ஙனம் காரியதரிசியாக ஒத்துக்கொண்டால் தினம் 3-மணி நேரத்திற்குக் குறையாமல் வேலைசெய்ய வேண்டிய அலுவல்களிருக்கும். ஆகவே, ஸ்ரீ திலகர் தட்சிண வித்யாசங்கத்தின் அங்கத்தினர்கள் வெளி வேலைகளைச் செய்து வந்தால், சங்க வேலைக்கு நாளடைவில் இடையூறு உண்டாகும் என்று அத்தகைய



வெளி வேலைகளைச் செய்ய சங்கம் இடந்தரலாகாதென ஆட்சேபித்தார். அந்த சர்வஜனச் சபையின் காரியதரிசி பதவியை ஸ்ரீ திலகருக்கு முதன் முதல் அச்சபையார் கொடுக்க வந்தும், அவர் மேற்கூறிய காரணத்தாலேயே காரியதரிசி பதவியை நிராகரித்தார். ஸ்ரீ கோகலே விஷயமாக ஸ்ரீ திலகர் ஆட்சேபித்ததைச் சிலர் சகிக்கவில்லை. அபிப்பிராய பேதங்கள் உண்டாயின. ஸ்ரீ திலகரின்மீது பொறாமையும் அருவெருப்பும் கொண்டனர். 1887-ம் வருடம் பிப்பிரவரி மாதத்தில் ஸ்ரீ அகர்காருக்கு பணமுட்டு ஏற்பட்டது. சதாரணமாகப் பணம் வேண்டியதாயின் சங்கத்திற்கு மனுபோட்டிருந்தால், அகர்கார் விஷயத்தில் உபசாரச் சம்பளம் ஏதாகிலும் கட்டாயம் கொடுத்திருப்பார்கள். அதை விட்டுவிட்டு, ஸ்ரீ அகர்கார், சங்கத்தின் அங்கத்தினர்களின் சம்பளத்தை உயர்த்தவேண்டுமென்று தீர்மான மொன்றைக் கொண்டு வந்தார். அதைத் திலகர் ஆட்சேபித்தார். கலாசாலைக்குப் பணவருவாயில் வந்து கொண்டிருந்த போதிலும், இன்னும் போதுமான தொகை சேரவில்லையாதலால், இப்பொழுது இடவொன்று எல்லா அங்கத்தினர்களுடைய சம்பளத்தையும், உயர்த்துவது பாதகமாயிருக்குமென்றும், ஸ்ரீ அகர்காருக்குப் பணம் முட்டு ஏற்பட்டதால், அவருக்கு நன்கொடையாகப் பண உதவி செய்யலாமென்றும் கூறினர். இது போன்ற பல சிறிய விஷயங்களில் பலமான அபிப்பிராயபேதம் ஏற்பட்டு வர வர பகைமை வளரலாயிற்று. தட்சிண வித்யாசங்கத்தின் அநுஷ்டான முறைக்குரிய பொதுவான தர்மம், சாப்பாட்டு விடுதி, கைத்தொழில் பாடசாலை, ஐரோப்பிய போதகாசிரியரை நியமித்தல் முதலிய விஷயங்களில் ஸ்ரீ திலகருக்கும் வேறு சில அங்கத்தினர்களுக்கும் அபிப்பிராய பேதம் உண்டாகி, ஸ்ரீ திலகரை எப்படியாகிலும் சங்கத்தை

விட்டு விடும்படி செய்யவேண்டுமென்று சூழ்ச்சிசெய்ய சிலர் ஆரம்பித்தனர்.

1889-ம் வருடம் ஜூன் மாதத்தில் ஸ்ரீ திலகர் ரஜா பெற்றுக் கொண்டு பிறகு நின்றுவிடுவதென நிச்சயித்தார். கடைசியாக, வெளிவேலை, சம்பளம், நிர்வாக வேலை முதலிய விஷயமாக சமாதானம் ஏற்பட்டது. ஸ்ரீ திலகர் மீண்டும் கலாசாலைக்கு வந்து சேர்ந்தார். பழையபடியே அங்கத்தினர்கள் நடந்து வரலானார். உண்மையான தியாகத்தை மதிக்காமல், போலியாகக் காண்பித்து வருவதை பார்த்து, 'இனி நாம் இருத்தல் சாத்தியமில்லை' என்று கண்டு ஸ்ரீ திலகர் கடைசியாக 1890-ம் வருட முடிவில் தட்சிண வித்யாசங்கத்தைவிட்டு நீங்கினார். ஸ்ரீ திலகர் தட்சிண வித்யாசங்கத்தை விட்டுப் பிரிகையில் தன் பிரிவுக்குத் தக்க காரணங்களை எடுத்து வெகு கோர்வையாகச்சங்க நிர்வாகிகளுக்கு அனுப்பினார். சங்க நிர்வாகக் கூட்ட மொன்றொன்றிலும் அபிப்பிராய பேதத்தினால் குறிக்கப்பட்ட குறிப்புகள் சங்க குறிப்புப் புத்தகங்களிலிருந்தும், கனம் பரஞ்சபே அவர்கள் வீணாக ஸ்ரீ திலகரைப் பழித்துள்ளார். கனம் பரஞ்சபே பம்பாய் மாகாணத்தில் தற்பொழுது மான்டேகு சீர்திருத்தத்தினால் மந்திரிபதவி யிலிருக்கிறார். வெகு காலமாக ஸ்ரீ திலகரிடத்தில் இவருக்குப் பொறாமையுண்டு. ஆய்ந்து பார்க்காமல் கனம் பரஞ்சபே அவர்கள் ஸ்ரீ திலகரின் மீது பழி சுமத்தியிருப்பது எள்ளளவும் பாராட்டத் தக்கதல்ல. உண்மையை மறைத்துக் கூறுவதில் பிரதிவாதிகளுக்குண்டாகும் சந்தோஷம் தான் என்னே? ஒரு விஷயத்தில் இருவர் அபிப்பிராய பேதங்கொண்டிருப்பினும் மற்ற பல விஷயங்களில் ஒற்றுமையாய் வேலை செய்யலாமென்பதை ஸ்ரீ திலகர் அறியவில்லையென்றும், தனக்குச் சமமாக விருப்பவர்களுடன் வேலை செய்ய மனமொப்புவதில்லை யென்றும்



கனம்பரஞ்சபே ஸ்ரீ திலகரின்மீது குற்றஞ் சாட்டியுள்ளார். இதற்கு ஆதாரமுண்டா வென்பதைச் சற்று ஆராய்வோம். தட்சிண வித்யாசங்க விஷயமாக ஸ்ரீ திலகரின்மீது சாட்டப்பட்ட குற்றம் சற்றேனும் ஆதாரமில்லாதவை. ஏனெனில், சங்க குறிப்பு புத்தகங்களில் அப்போதைக் கப்போது குறிக்கப்பட் டிருக்கும் நடவடிக்கைகளைக் கவனித்தால் புலனாகும். அப்படி, அகர்கார் முதலானோரைக் காட்டிலும் ஸ்ரீ திலகர் தியாகத்திலும் முயற்சியிலும் அறிவிலும் மற்று பலவித காரியங்களிலும் மேம்பட்டவரென்பது யாவரும் ஒப்புக்கொண்ட விஷயம். ஸ்ரீ கோகலேயே" அக்காலத்தில் மிகவும் பாலியமுள்ளவராக விருந்தார். புதிதாகக் கலாசாலையிலிருந்தும் வெளிவந்த சிறுவன் என்றே கோகலே சரித்திரத்தை எழுதியவர்களும் கூறியுள்ளார். அப்படியிருக்க, ஸ்ரீ திலகர் எவரிடத்து பொறாமை கொண்டார்; தனக்குச் சமானமானவரோடு எப்பொழுது வேலை செய்யவில்லை என்னும் கேள்விகளுக்கு இன்னும் பிரதிவாதிகளும் கனம்பரஞ்சபேயும் பதில் கூறவில்லை. ஸ்ரீ திலகர் டாக்டர் பந்தர்காருடன் பல விஷயத்தில் அபிப்பிராய பேதங்கொண்டிருந்தும், 1908-ம் வருட ஆரம்பத்தில் புனாவில் கள்ளுக்கடை மறியல் செய்வதற்கு திலகர் பந்தர்காருடன் சேர்ந்து உழைத்து வந்தார். டாக்டர் பட்டவேட்காரைப்பற்றிப் பல சமயங்களில் பொதுக் கூட்டத்தில் ஸ்ரீ திலகர் கடுமையாகவே தாக்கியுள்ளார். ஆனால் மகா ராஷ்டிரத்தில் நடந்த வான சாஸ்திர கான்பரன்ஸில் ஸ்ரீ திலகர் சதா டாக்டர் பட்டவேட்காருடனிருந்து பழைய பஞ்சாங்கத்தைப் பரிசோதித்து வந்தார். 1897-ம் வருடத்தில் உண்டான பிளேக் வியாதி காலத்தில் ஸ்ரீ திலகர் அரசாங்கத்துடன் ஒத்து உழைத்தார். சுயஆட்சிக் கிளர்ச்சியில் ஸ்ரீ திலகர் அன்னி பெசன்ட் அம்மாளுடன் சேர்ந்து உழைத்தார். பல சந்

தர்ப்பங்களில் ஸ்ரீ திலகர் கனம் பரஞ்சபேயுடனும் கலந்து உழைத்துள்ளார். ஆகவே, ஸ்ரீ திலகரின்மீது பரஞ்சபே கொண்டுவந்த குற்றமானது மிகவும் அபாண்டமானது. ஸ்ரீ திலகருடைய பெருமுயற்சியினாலேதான் தட்சிண வித்யாசங்கத்திற்கு, ரானடே, பந்தர்கார், தெலாங், மண்டலிக், நூட்டன் வொர்த் முதலானோர் போஷகர்களாக ஆயினர். தட்சிண வித்யாசங்கத்தில் பதினொரு வருடகாலம் ஸ்ரீ திலகர் இருந்தும், கலாசாலை பிரதம போதகாசிரியராகவோ அல்லது பிரதம உபாத்தியாயராகவோ அல்லது விசாரணைக்காரராகவோ யிருக்க ஒருநாளும் ஆசைப்படவில்லை. அப்படியிருந்தும், கனம் பரஞ்சபே ஸ்ரீ திலகர் பொறுமையுள்ளவர் என்று கூறினது பரஞ்சபேயின் பொறுமைக் குணமே சான்றாகும். ஸ்ரீ திலகர் சமயோசித வேடந்தரித்தாடக் கூடியவராயிருந்தால், கோகலே, மேடா, பரஞ்சபே முதலானோருக்கு மேல் பன்மடங்கதிகமான உயர்வையும் அந்தஸ்தையும் அரசாங்கத்தாரிடம் பெற்றிருப்பார். ஸ்ரீ திலகர் சிறுவயது முதற்கொண்டே பிரஜா பந்துவாகயிருந்ததால், அவருடைய பெருமையையும் உயர் குணங்களையும் பிரஜைகளே யறிந்து வந்தார்களே யல்லாது அரசாங்கத்தாரும், அரசாங்கத்தாரின் தயவுக்கு நச்சியிருந்தவர்களும் அறியவில்லை. ஸ்ரீ திலகர் முதல் 15-வருடகாலம் தேசத்தின் கல்வியபிவர்த்திக்காக உழைத்து வந்தார். கல்வி அபிவிர்த்தித் துறையில் உழைத்த காலத்தில் முழுமூரமான இராஜீய வேலையைச் செய்யவில்லை. தவிர, சமூக அபிவிர்த்திக்கும் முழுமூரமாகப் பாடுபடவில்லை. ஏனெனில், ஒரு சமயத்தில் ஒரே காரியத்தைச் 'செய்வன திருந்தச் செய்' என்பது ஸ்ரீ திலகருடைய முக்கிய கொள்கை.

## 4. திலகரும் மித்யா சாரமும்.

பாரதநாட்டின் சுதந்தரத்திற்கு ஆசார சீர்திருத்தமே முதன்மையானதென்றும், மேனாட்டார் போல் இந்தியர் தங்கள் வாழ்க்கையைச் சீர்திருத்திக் கொள்ளவேண்டுமென்றும் பொதுவாகப் பல ஆசார சீர்திருத்தக்காரர்கள் நாற்பது வருடங்களுக்குமுன் எண்ணியிருந்தனர். ஆங்கிலேயர்களோடு பழகுவதினாலும், அவர்களுடைய நடையுடை பாவனைகளை மேற்கொண்டு ஒழுகுவதினாலும், அவர்களுடைய உணவுகளைப்போல உண்டு அவர்களைப்போல ஆடிப்பாடி வருவதினாலும், அவர்களுடைய பாஷையை நன்கு ஆதரித்து வருவதினாலும் இந்தியர்கள் ஆங்கிலேயர்களோடு சம அந்தஸ்தை வகிப்பார்களென்றும், அங்ஙனம் சம அந்தஸ்து இந்தியர்களுக்கு ஏற்படுமானால் இந்தியா இராஜீய உணர்ச்சிபெற்று ஸ்வராஜ்யம் அடையுமென்றும் பல சீர்திருத்தக்காரர்கள் பூர்வம் நம்பிவந்தார்கள். அத்தகைய நம்பிக்கையினாலேயே மாதர்கள் தாராளமாகப் புருஷர்களுடன் பழகவேண்டுமென்றும், மாதர்களும் ஆங்கிலம் முதலிய பாஷைகளைக் கலாசாலைக்குச் சென்று கல்விகற்கவேண்டுமென்றும், கைம்பெண்கள் புனர்விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்றும், ஜாதிவித்தியாசம் பாராட்டாமலிருக்கவேண்டுமென்றும், சமபந்தி போசனம் முதலியவைகளைச் செய்யவேண்டுமென்றும் ஆசாரசீர்திருத்தக்காரர்கள் சதா கூறிக்கொண்டே யிருப்பர். இந்தியாவில் இராஜீயத்துறையில் பூர்வம் பாடுபட்டு வந்தவர்கள் அநேகமாக ஆசாரசீர்திருத்தக்காரர்களே. ஆசாரசீர்திருத்தக்காரர்களாக யிருந்தால், அவர்கள் ஏதோ மற்றவர்களைவிட அந்தஸ்தில் உயர்ந்தவர்களெனப் பெருமை பாராட்டியே வருவர். ஆதலால், காங்கிரஸ் மகாசபையைச் சேர்ந்த

வர்களிற் பலர் தாங்கள் ஆசாரசீர்திருத்தக்காரர்கள் என்று மார்புதட்டிக்கொள்வர். இவர்களுக்குச் சதாமேனாட்டு சம்பிரதாயத்திலேயே கண்ணோட்டம். ஆங்கிலேயர்கள் என்ன என்னவிதமாக உடைதரித்து வருகின்றனர். ஆங்கிலேயப் பெண்மணிகள் எவ்விதமாகச் சட்டைகளை உபயோகப் படுத்துகின்றனர். எப்படி உட்காருகின்றனர், எங்ஙனம் நடக்கின்றனர் என்பதே அந்த சீர்திருத்தக்காரர்களுடைய எண்ணம். அதையே கடைப்பிடித்துத் தாங்கள் அவ்வண்ணம் நடக்கவும் முயற்சி செய்வர், சகலமும் மேனாட்டு மயமாகவே தங்களை அவர்கள் ஆக்கிக்கொள்வர். இத்தகைய விபரீத ஆசாரசீர்திருத்த உணர்ச்சியுண்டானதிலிருந்து காங்கிரஸ் மகாசபையிலும் அதைச்சார்ந்து நிற்கும் பல சபைகளிலும் ஆங்கிலதேசத்தாரின் போக்காகவே சகலமும் இருந்துவந்தது. மகாராஷ்டிரத்தில் மகாதேவ கோவிந்த ரானடே ஆசாரசீர்திருத்தக்கட்சிக்குத் தலைவரானார். ஆசார சீர்திருத்தக்காரர்கள் பாரதநாட்டின் ஒழுக்க வழக்கங்களையும் தேசிய உணர்ச்சியையும், நடையுடைபாவனைகளையும் விலக்கி, கேவலம் பிறநாட்டு வழக்கமே தலைதூக்கி வருவதைக்கண்ட விஷ்ணுசாஸ்திரி சிப்ளோங்கார் முதல் முதல் ஆசாரசீர்திருத்தக்காரர்களின் விபரீத எண்ணத்தைத் தைரியமாகக் கண்டித்தார்.

பாரத சமூகத்திற்கு ஆசார சீர்திருத்தம் வேண்டுவது அவசியமாயினும், அத் திருத்தம் தேசிய சம்பந்தமாகவும், சீதோஷ்ணஸ்திதியையும் நடையுடை பாவனைகளையும் ஒத்ததாகவுமிருக்கவேண்டுமென்றும், சிப்ளோங்கார் கூறி வந்தார். பூர்வ மிருந்த ஆசார சீர்திருத்தக்காரர்களுக்குத் தெய்வத்தினிடத்தும் மதத்தினிடத்தும் நம்பிக்கை யில்லாமையைக் கண்ட விஷ்ணு சாஸ்திரி சிப்ளோங்கார் பலமாக அவர்கள் முறையைக் கண்டித்து வந்தார். ஸ்ரீ திலகர், சிப்



ளோங்கார் அடிச் சுவட்டைப்பற்றியே வந்தார். ஆசார சீர்திருத்தக்காரர்களின் வாசா ஞானத்தில் சற்றேனும் ஸ்ரீ திலகருக்கு நம்பிக்கையில்லை. கப்பல் பிரயாணஞ் செய்து கடல் தாண்டுவதை ஸ்ரீ திலகர் மற்ற ஆசார சீர்திருத்தக் காரர்களைப் போலவே அங்கீகரித்தார்; ஆனால் கப்பல் பிரயாணஞ்செய்து மேனாடுகளுக்குச் செல்பவர்கள் சாக வஸ்துக்களையே புசிக்கவேண்டுமென்றும், அவர்கள் திரும்பி வந்ததும் பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டுமென்றும் ஸ்ரீ திலகர் கூறினார். அவ்வண்ணமே ஸ்ரீ திலகர் இங்கிலாந்து சென்று திரும்பி பிராயச்சித்தம் செய்துகொண்டார். சமுத்திராயனம் விஷயமாக ஸ்ரீ திலகர் அநுஷ்டானத்தில் காண்பித்தார். இளம் கைம்பெண்களுக்கு மறு விவாகஞ் செய்தலை ஸ்ரீ திலகர் அங்கீகரித்தார்; ஆனால் வேத விதிப்படி விவாகம் நடைபெற வேண்டுமென்று வற்புறுத்தினார். பெண்கள் படிக்க வேண்டுமென்றும், அப்படிப்பு குடும்பத்திற்கு உபகாரமாகவும் சிறப்பாகவுமிருக்க வேண்டுமென்றும் ஸ்ரீ திலகர் கூறினார். ஸ்ரீ திலகர் சமபந்தி போசனத்தை அங்கீகரித்தார்; ஆனால், அவசியமான சமயங்களிலேயே அந்த அநுஷ்டானத்தை மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினார். வெறும் சமபந்தி போசனத்தினாலேயே சமூக சீர்திருத்தம் உண்டாகாதென்றும், சமத்துவ உணர்ச்சி இதனாலேயே ஏற்பட்டு விடாதென்றும் ஸ்ரீ திலகர் கூறுவர். சாதிக்கு சாதி விவாக சம்பந்தம் ஏற்படுத்துவதற்குமுன் ஒரு சாதிக்குள்ளேயே யிருக்கும் உட்சாதிப் பிரிவுகளுக்குள்ளே விவாக சம்பந்தம் ஏற்பட வேண்டுமென்று ஸ்ரீ திலகர் கூறி வந்தார். ஆசார சீர்திருத்தக்காரர்கள், கேவலம் மேனாட்டு சம்பிரதாயத்தை அவலம்பித்து விவாக முறையை நடத்துவதை ஸ்ரீ திலகர் கண்டித்தார். தீண்டாமை ஒழியவேண்டுமென்றும் அத் தீண்டாமை ஒழிவ

தற்குத் தீண்டாதார்களுக்குக் கல்வி, மத வழிபாடு முதலியவைகளை யூட்டவேண்டு மென்றும் ஸ்ரீ திலகர் கூறுவர். சமூகத்தின் தீவிர ஆசார சீர்திருத்தம் அழிவையும் விபரீதத்தையும் கொடுக்கும் என்றே ஸ்ரீ திலகர் நம்பி யிருந்தார். குடியை யொழிக்கவும் ஸ்திரீபுருஷர்கள் பரிசுத்தமான வாழ்க்கையைக் கொள்ளவும் பாடுபடுவதே முக்கிய ஆசார சீர்திருத்தமென ஸ்ரீ திலகர் அடிக்கடி கூறுவர். ஆசார சீர்திருத்தக்காரர்கள் தங்கள் வாழ்க்கையைப் புனிதமாக்கி சனங்களின் வாழ்க்கையையும் புனிதமாக்க இடைவிடாது பிரசாரஞ் செய்து வரவேண்டு மென்றும் தீர்மானங்களாலும், கான்பரன்ஸுகளாலும் சீர்திருத்தமாகாதென்றும் ஸ்ரீ திலகர் கூறி வந்தார். மேனாட்டு அநுஷ்டானமும், மேனாட்டு ஒழுக்கமும் சீர்திருத்தத்திற்கு அடையாள மல்லவென்றும், அவை பாரதநாட்டின் புனித வாழ்க்கையைக் கெடுக்குமென்றும் ஸ்ரீ திலகர் அடிக்கடி கூறிவந்தார். புத்தர், கபீர், துக்காராம், இராமாநுஜர் முதலானோரின் சமூக சீர்திருத்தக் கொள்கையைக் கொண்டவர் ஸ்ரீ திலகர். ஆசார சீர்திருத்தத்தை நாடுபவன் வெகு சாந்தமுள்ளவனாக யிருக்கவேண்டு மென்றும், பாரத சமூகத்தின் தொன்மை வாய்ந்த வாழ்க்கையைக் கெடுக்கக் கூடாதென்றும், பாரத தேசத்தின் நாகரீகத்தை யொட்டியும் சரித்திர சாஸ்திரங்களை யொட்டியும் சீர்திருத்தஞ் செய்ய முயலவேண்டு மென்றும் ஸ்ரீ திலகர் கூறிவந்தார். ஆசார சீர்திருத்தக்காரர்கள் மிகவும் தெய்வ பக்தியுள்ளவர்களாக யிருக்கவேண்டும். தீரர்களாக யிருக்க வேண்டும். எத்தகைய ஆபத்து காலத்திலும் சலியாத நெஞ்சத்தினர்களாக இருக்க வேண்டும். சமூகத்தை யொட்டியே அதைத் தழுவிக்கொண் டிருக்கவேண்டும். சமூகத்தைவிட்டுத் தனியே பிரிந்துபோகக் கூடாது. ஒவ்வொன்றையும் தான் அநுஷ்டித்துக் காண்பித்து வரவேண்



டும் என்கிற நியதிகளை ஸ்ரீ திலகர் ஆசார சீர்திருத்தக் காரர்களுக்குக் கூறிவருவார். பொது சனங்களின் நன்மையைக் கருதாமலும், அவர்களுடைய அபிப்பிராயத்தை மதிக்காமலும் தலைவிரி கோலமாய்த் தங்களிஷ்டப்படி ஆசார சீர்திருத்தக்காரர்கள் நடந்துவந்தார்கள். அநாதியாக வந்த சாஸ்திரங்களின் வழியையும், சம்பிரதாயங்களின் நிலைமையையும் சமூக வாழ்க்கையின் ஸ்திதியையும் சற்றேனும் கவனிக்காமல் ஆசார சீர்திருத்தக்காரர்கள் செய்து வந்ததினாலேயே சமூக சீர்திருத்தம் சரியானபடி நிறைவேறவில்லை. சீர்திருத்தம் சனங்களின் மனோபாவத்தை யறிந்து கொஞ்சங் கொஞ்சமாக உண்டாகவேண்டும். பல வருடங்களாக அன்னிய நாட்டார்களின் பழக்கத்தாலும், பாரதநாட்டில் உண்டான இராஜீய குழப்பங்களினாலும் அநேக விபரீதமான அநுஷ்டானங்கள் இடையே யுண்டாயின. அவைகளை யொழிக்கக் கொஞ்சங் கொஞ்சமாக சமூகத்தின் மனோ நிலைமையை யறிந்து பாடுபடவேண்டும்.

1884-ம் வருடத்திலிருந்து பம்பாயில் பார்ஸீ குலத்தைச் சேர்ந்த மலபாரி என்பவர் இந்து பாலிகைகளின் விவாக விஷயமாக சீர்திருத்தமொன்றை யுண்டாக்க கவர்ன்மெண்டார் சட்டம் செய்யவேண்டுமென்று பாடுபட்டு வந்தார். மலபாரி என்பவர் இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய மேனாடுகளிலும் அறிமுக முள்ளவர். இந்தியாவிலும் செல்வாக்குள்ளவர். அவர், சனங்களின் மனோ நிலைமையைச் சற்றேனும் அறியாமல் 'அங்கீகார வயதுசட்டம்' (Age of Consent Bill) என்னுமொரு சட்டத்தை இராஜப் பிரதிநிதி சட்டசபையார் சட்டமாக்க வேண்டுமென்று வற்புறுத்தினார். மலபாரியின் தீர்மானங்களில் முக்கியமானவை பின்வருமாறு :—

i. பன்னிரண்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட மனைவியுடன் ஒருகணவன் புணர்வதைக் குற்றமாகச் செய்யவேண்டும்.

ii. குழந்தையிலேயே விவாகஞ் செய்யப்பட்ட பெண் பக்குவயது வந்ததும் அந்த விவாகத்தை ரத்து செய்ய வேண்டுமென்று அபிப்பிராயப் படுவாளானால், அவ்விவாகம் அவளிஷ்டப்படி ரத்துசெய்துக் கொள்ளும்படி இருக்க வேண்டும்.

iii. இல்லறவாழ்க்கையினின்றும் மனைவி தன் கணவனைவிட்டுப் பிரிய ஏற்படுமானால், நஷ்டஈடுக்காக கணவன் மனைவியின் மீது கொண்டுவரும் வியாச்சியங்கள் அங்கீகரிக்கக்கூடாது.

iv. கணவனிறந்த கைம்பெண் மறுவிவாகஞ் செய்து கொண்டபிறகும் இறந்த கணவனுடைய சொத்துக்குப் பாத்தியதையுள்ளவளாகவே யிருக்கவேண்டும்.

மேற்கூறியவைபோன்ற இன்னுஞ் சில திருத்தங்களை மலபாரியும் ஆசார சீர்திருத்தக்காரர்களும் கொண்டுவந்தனர். இந்துசமூகத்தின் அஸ்திவாரத்தையே பறிக்கக் கூடியவையென பல வைதிகர்கள் பலமாக ஆசார சீர்திருத்தக்காரர்களைத் தாக்கினர். ஸ்ரீ திலகரோ மலபாரியின் சீர்திருத்தங்களைக் கண்டித்ததற்குக் காரணம் இந்துசமூக வாழ்க்கையின் சீர்திருத்தங்களுக்கு அரசாங்கத்தார் சட்டமுண்டாக்குவது மிகவும் அநீதியானதென்றும், சமூகவாழ்க்கையின் சீர்திருத்தத்திற்கு அன்னிய அரசாங்கத்துக்கு இடங்கொடுத்தால் விபரீதமுண்டாகிவிடும் என்பதே. விவாகச்சடங்குக்குரிய பரிசுத்தமும் தெய்விகமும் ஒழிந்து போகுமென்றே ஸ்ரீ திலகர் மலபாரியின் சீர்திருத்த ஏற்பாடுகளைக் கண்டித்தார். 'அங்கீகார வயது சட்டத்தை (Age of Consent Bill) ஸ்ரீ திலகர் எதிர்த்ததுபோல பல சீர்திருத்தக்காரர்களும் எதிர்த்தனர். காலஞ்சென்ற ஸர்.



சோமேசு சந்திர மித்தர், டப்ளியு. ஸி. பானர்ஜீ, ஸர். டி. மாதவராவ், ஸர். சுரேந்திரநாத பானர்ஜீ, ஸர். ஸிமன்லால் எச். ஸிடல்வாட், ஜீ. எஸ். கபர்தே முதலானோரும் அச்சட்டத்தைக் கண்டித்தனர். என்றாலும் ஸ்ரீ திலகரின்மீதே ஆசார சீர்திருத்தக்காரர்கள் பாணந்தொடுத்து சதா தூற்றி வந்தனர். அன்னிய அதிகாரவர்க்கத்தார் இந்திய சமூக வாழ்க்கையின் நிலைமையையறியாமல் சட்டஞ் செய்வதென்பது கொடியதென்னும் ஒரு காரணத்தையே ஸ்ரீ திலகர் ஆதாரமாகப் பற்றி வந்தார். மகாராஷ்டிரமெங்கும் பெரிய கிளர்ச்சியை ஸ்ரீ திலகர் அச்சட்டத்திற்கு விரோதமாக உண்டுபண்ணினார்.

பம்பாயில் பிரசுரமாகும் டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகைக்கு ஸ்ரீ திலகர் வியாசங்கள் கோர்வையாக எழுதி வந்தார். நாடெங்கும் கண்டனக் கூட்டங்கள் நடந்தன. தீர்மானங்கள் செய்யப்பட்டு அரசாங்கத்தாருக்கு அனுப்பப்பட்டன. ஆனால், அரசாங்கத்தார் பொது சனங்களின் மனதை யறியாமலும் அபிப்பிராயங்களைக் கொள்ளாமலும், டாக்டர் பந்தர்கார், ஜட்ஜி தெலாங், திவான்பகதூர் ரகுநாதராவ் இவர்களின் வார்த்தைகளைக்கொண்டு சட்டமாக்கினர். கடைசியாக 1891-ம் வருடம் மார்ச்சுமாதம் 19-ந்தேதி அங்கீகார வயது சட்டம் சட்டமாகி இந்தியன் பீனல் சட்டத்தில் 375-ம் பிரிவில் 10-12-வது உட்பிரிவுகளாகச் சேர்க்கப்பட்டுள்ளது. அதே வருடத்தில் மே மாதத்தில் நடந்த பம்பாய் மாகாண கான்பரன்ஸில் அரசாங்கத்தார் மேற்படி சட்டத்தின் விஷயமாகப் பொது சனங்களின் அபிப்பிராயத்தை மதிக்கவில்லையென்பதைப்பற்றிய கண்டனத் தீர்மானமொன்றை ஸ்ரீ திலகர் கொண்டுவந்தார். ஆனால், அதை ஆசார சீர்திருத்தக்காரர்கள் உட்பட எதிர்க்காமல் இருந்தனர். தீர்மானம் நிறைவேறிற்று.

ஸ்ரீ திலகர் கேவலம் கண்டிப்பதையே ஒரு நோக்கமாகக் கொண்டவரல்ல; சீர்திருத்தவிஷயமாக ஸ்ரீ திலகர் சில ஏற்பாடுகளைத் தயாரித்துச் சனங்களுக்கும் சீர்திருத்தக்காரர்களுக்கும் தெரிவித்தார். பிரௌடையாகும் வயதையே விவாக வயதாகப் பெண்களுக்கு வைக்கவேண்டுமென்று ஸ்ரீ திலகர் கூறினார். ஸ்ரீ திலகர் பலவைதிக பண்டிதர்களுடன் வாதாடி சாஸ்திரம் இதுவிஷயமாக இடங்கொடுக்கிறதெனக்கூறி அவர்களுடைய சம்மதத்தையும் பெற்றார். ஆனால், சீர்திருத்தக்காரர்கள் ஸ்ரீ திலகரின் ஏற்பாட்டுக்கு வரவில்லை. சீர்திருத்தக்காரர்கள் ஸ்ரீ திலகரின் ஏற்பாட்டை அங்கீகரித்திருப்பார்களானால், பம்பாய் மாகாணத்தில் பொதுவாகக் கட்சிபேதம் பலப்பட்டிராது. மகாராஷ்டிரத்திலும் பம்பாயிலும் உண்டான கட்சிப் பிரிவுக்கு சீர்திருத்தக்காரர்களே முக்கியகாரணம். தவிர, 1890-ம் வருடம் அக்டோபர் மாதம் 26-ந்தேதி ஸ்ரீ திலகர் சீர்திருத்தவிஷயமாகச் சில நிபந்தனைகளைக் கொண்டுவந்தார். அவை பின்வருமாறு:—

1. பெண்கள் 16 வயதுக்கு வந்தாலன்றி விவாகஞ் செய்யக்கூடாதென்றும், பிள்ளைகள் 20 வயது நிறைந்தாலன்றி விவாகஞ் செய்யக்கூடாதென்றும் சட்டம் ஏற்படுத்தவேண்டும்.

2. கணவனிழந்த கைம்பெண்களை மணந்தாலன்றி எவனும் 40 வயதுக்குமேல் விவாகஞ் செய்துகொள்ளக் கூடாது.

3. குடி முதலிய போத வஸ்துக்களை உபயோகித்தல் கூடாது.

4. விவாகத்தில் வரசுல்கம் வாங்கக்கூடாது.

5. கைம்பெண்களின் கூந்தலைக்கழித்து விகாரப்படுத்தக்கூடாது.



6. சீர்திருத்தக்காரர்கள் மாதவரும்படியில் 10-ல் 1 பங்கை பொதுசன நன்மைக்காக உபயோகப்படுத்த வேண்டும்.

மேற்கூறிய நிபந்தனைகளைப் பலர்கண்டு ஆச்சரியப்பட்டனர். 1890-ம் வருடம் நவம்பர்மாதம் முதல்தேதியன்று கனம் ராவ்பகதூர் நல்கார் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் ஸ்ரீ திலகரின் நிபந்தனைகளை யோசிக்க ஒருகூட்டம் கூடிற்று. அக்கூட்டத்திற்கு டாக்டர் பந்தர்காரும் ரானடேயும் வந்திருந்தனர். ஸ்ரீ திலகர் வெகு தெளிவாகத் தன் நிபந்தனைகளையும் ஆசார சீர்திருத்தங்களின் வழியையும் எடுத்துக் கூறினார். ரானடே ஸ்ரீ திலகரின் உபந்யாசத்தைக் கொண்டாடினார். என்றாலும் ஸ்ரீ திலகருடைய நிபந்தனைகளை அநுஷ்டிக்க முன் வருபவர்கள் இல்லையென்று ரானடே தெரிவித்தார்.

சீர்திருத்தக்காரர்களில் நால்வகையார் இருந்தனர். (1) மடாதிபதிகள், ஆசாரியர்கள் முதலானோர்களின் சம்மதம்பெற்று ஆசாரசீர்திருத்தஞ்செய்பவர்கள் (2) ஜாதிக்கட்டுப்பாட்டையும் சம்மதத்தையும் பெற்று ஆசார சீர்திருத்தத்தை எதிர்பார்ப்பவர்கள் (3) தங்களுடைய ஆவசியத்திற்காகவே சீர்திருத்த விஷயமாக சர்க்கார் சட்டம் செய்தலை அங்கீகரித்து ஆசார சீர்திருத்தங்களை மேற்கொள்பவர்கள் (4) சர்வ சனங்களையும் கட்டுப்படுத்தக் கூடிய சட்டம் செய்தலை அங்கீகரித்து ஆசார சீர்திருத்தங்களை நடத்துபவர்கள். மேற்கூறிய இந்நால்வகையினரில் ஸ்ரீ திலகர் மூன்றாவது வகையைச் சேர்ந்தவராதலால் எனக்கும் ஸ்ரீ திலகருக்கும் அதிக வித்தியாசமில்லையென்று காலஞ்சென்ற ரானடே கூறியுள்ளார். ரானடே யவர்களுக்கும் ஸ்ரீ திலகருக்கும் உள்ள வித்தியாசம் யாதென்பதைக் கவனிப்போம். ரானடே சீர்திருத்த விஷயமாக ஆசார சீர்திருத்தங்களின் சௌகரியத்திற்காக

சாஸ்திரத்தையும் மதவழிபாடுகளையும் மீறுவர். ஸ்ரீ திலகர் சாஸ்திரத்தையும் மதவழிபாடுகளையும் மீறாமல் அவைகளை அனுசரித்த வண்ணமாக ஆசார சீர்திருத்தங்களைக் கொள்வர். ரானடே மேனாட்டு சம்பிரதாயத்தையே பெரிதும் அவலம்பித்து வந்தார். ஸ்ரீ திலகர் மேனாட்டு சம்பிரதாயத்தைக் கண்டித்து வந்தார். ஆசார சீர்திருத்த விஷயமாக அரசாங்கத்தார் சட்டம் செய்யவேண்டு மென்பதையே ரானடே ஆதரித்தார். ஸ்ரீ திலகர் ஆசார சீர்திருத்த விஷயமாக அரசாங்கத்தாரின் உதவியின்றியே பொது சனங்களின் உதவியால் உண்டாகவேண்டுமென்று ஜனங்களின் சம்மதத்தையே ஆதரித்தார். இத்தகைய வித்தியாசங்களினாலும் மற்ற பலவித காரணங்களினாலும் சீர்திருத்தக்காரர்களுக்கும் ஸ்ரீ திலகருக்கும் பலமான பகை ஏற்பட்டது. 1891-ம் வருடம் பிப்ரவரி மாதம் 25-ந் தேதி புனா நகரில் 'கிரீடாபுவனம்' என்னுமிடத்தில் சீர்திருத்தக்காரர்கள் ஒரு கூட்டமொன்றைக் கூட்டினர். அக்கூட்டத்தில் சீர்திருத்தக்காரர்கள் வைதிகர்களை வாய்க்கு வந்த வண்ணம் வைததினாலேயே வைதிகர்களிற் சிலர் அக்கூட்டத்தில் கலகஞ்செய்து கூட்டத்தைக் கலைத்தனர். அதற்கு, சீர்திருத்தக் கட்சியைச் சேர்ந்த கனவானொருவர் 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகைக்கு ஆசார சீர்திருத்தக் கூட்டத்தைக் கலைத்ததற்கு திலகரும் நாமஜோஷியுமே காரணம் என்று எழுதியனுப்பினர். ஸ்ரீ திலகர் 1891-ம் வருடம் மார்ச்சு மாதம் 2-ந் தேதியில் டைம்ஸ் பத்திரிகைக்கு லாயர் நோட்டீஸ் விட்டார். பிறகு சீர்திருத்தக்காரர்கள் ஸ்ரீ திலகரைப் பற்றிக் குறைகூறுவதையொழித்தனர். ஆனால், கலகஞ்செய்ததாக ஐவர் மீது பிராது செய்யப்பட்டது. ஆனால், அவர்கள் மீது குற்றம் ருசுவாகாமற் போகவே மாஜிஸ்டிரேட் அவர்களை விடுதலை செய்தார். ஆசார சீர் திருத்தக்காரர்கள் அந்நாளில்



ஸ்ரீ திலகரின் மீது சுமத்திவந்த அபாண்டமான பழிகளுக்கு எல்லையில்லை. அங்கீகார வயது சட்டத் (Age of Consent Bill) தினால் ஏற்பட்ட குழப்பம் தணியாமல் புகைந்து கொண்டிருக்கையில் இன்னொரு சம்பவம் புனா நகரில் உண்டாயிற்று. இந்திய கிறிஸ்தவ சாதியைச் சேர்ந்த மாது பண்டிதை ராமாபாய் என்பவள் அமெரிக்காவுக்குச்சென்று புனா நகரில் இந்திய பெண்களுக்கு அதிலும் முக்கியமாகக் கைம்பெண்களுக்குக் குருகுல வித்யாலயமொன்று ஸ்தாபிக்கும் நிமித்தம் நிதி திரட்டி வந்தாள். ராமாபாய் புனாநகரில் குருகுல வித்யாலயமொன்றை ஸ்தாபிக்க அந்நகர கனவான்களை உதவி செய்ய நாடினாள். ரானடே, டாக்டர் பந்தர்கார் முதலானோர் உதவி செய்ய ஒத்துக்கொண்டனர். ஸ்ரீ திலகர் மட்டும் அங்கீகரிக்கவில்லை. இந்திய பெண்மணிகளுக்கு அதிலும் கைம்பெண்களுக்கு கிறிஸ்தவ மாதொருத்தி வித்யாலயமொன்றை ஸ்தாபித்து கல்வி கற்பிப்பதை ஸ்ரீ திலகர் சற்றேனும் ஒப்பவில்லை. என்றாலும், ஸ்ரீ திலகர் பெண் கல்வியிலுண்டான தன்னுடைய அபிமானத்தைக் காட்ட அத்தகைய வித்தியாசாலைக்கு உதவி செய்பவர்களிலொருவராக விருக்கக் கையெழுத்திட்டார். ஸ்ரீ திலகர், அடிக்கடி அக்கல்விச் சாலைக்குப்போய் இந்திய பெண்மணிகளுக்குக் கிரகங்களிலேயே கல்வி கற்பித்து வருவதைப் போன்ற சௌகரியமும் அபிவிர்த்தியும் இதில் உண்டாகாதென ராமாபாய்க்கு அடிக்கடி கூறிவந்ததுமன்றி, பொது சனங்களுக்கும் அறிவித்து வந்தார். தவிர, ராமாபாய் கிறிஸ்துவ மத போதனையைச் செய்து வரக் கூடாதென்றும் சாதாரண கல்வியையே போதித்து வரவேண்டு மென்றும் ஆரம்ப காலத்திலேயே அக்கலாசாலையின் அபிமானிகள் தெரிவித்திருந்தார்கள். ஆனால், 1889-ம் வருடம் டிசம்பர் மாதம் 21-ந் தேதியில் நியூயார்க் என்னும் அமெரிக்காவின்

நகரத்தில் பிரசாரமாகும் கிறிஸ்துவ வாரப்பத்திரிகை யொன்றில் ராமாபாய் மாதால் புனாவில் ஸ்தாபிக்கப்பட்ட பெண்கள் குருகுல வித்யாலயத்தில் பெண்கள் நால்வர் கிறிஸ்துவ மத போதனையைக் கற்று மாதாக்கோயிலுக்குப் போய்க்கொண்டு வருகின்றனரென்று எழுதப்பட்டிருந்தது. உடனே, ஸ்ரீ திலகர், அப்பத்திரிகையைக் கையில் எடுத்துக்கொண்டு ராமாபாய் மாதிடம் சென்று இதன் காரணத்தைத் தெரிவிக்கும்படி கேட்டார். ராமாபாய் அப்பெண்கள் விஷயமாக ஏதோ சாக்கு போக்குச் சொன்னார். அக் கல்விச்சாலையின் நிர்வாக விஷயத்தில் ஆலோசனை சொல்ல ரானடேயும் பந்தர்காரும் நிர்வாக அங்கத்தினர்களாகயிருந்து வந்தார்கள். ஸ்ரீ திலகர் அவர்களிடம் சென்று முறையிட்டனர். அவர்கள் அடுத்த நிர்வாக சபைக்கூட்டத்தில் ராமாபாயின் நடத்தையைக் கண்டித்து இனி அவ்வண்ணம் செய்யாமலிருக்கும்படி கேட்டுக் கொண்டனர். ராமாபாயும் தற்கால சாந்தியாக அவர்களுடைய வார்த்தையை யங்கீகரித்தாள். சிலகாலம் கழித்த பிறகு, அமெரிக்காவினின்றும் திரவியம் வந்ததின் காரணமாக ராமாபாய் ஆலோசனை சபையாரை லட்சியஞ் செய்யாமலே தன் இஷ்டப்படி காரியங்களைச் செய்துகொண்டு போயினள். சுயேச்சையாகக் கல்விச்சாலையின் நிர்வாகங்களை பண்டிதை ராமாபாய் செய்துகொண்டு போவதை யறிந்தும், ரானடேயும் பந்தர்காரும் வாய்மொழி கூறாமல் சும்மாயிருந்தனர். கிறிஸ்துவ போதனை வரவர அக்கல்விச் சாலையில் பலப்பட்டது. ஸ்ரீ திலகர் பகிரங்கமாகக் கண்டித்தார். ஆனால், சீர்திருத்தக்காரர்கள் பண்டிதை ராமாபாயின் காரியங்களைக் கவனிக்காமலும், அம்மாது. தன்னுடைய வார்த்தையை மீறி இந்து சமூகத்திற்கு விரோதமாகவே செய்து வரும் காரியங்களைப் பார்க்காமலும், ஸ்ரீ திலகரின் மீதுள்ள பொறாமையால் கண்



தெரியாமற்படி ஸ்ரீ திலகரைத் தூற்றினர். 'சுபோத பத்திரிகையும்' 'சுதாக்' பத்திரிகையும் ஸ்ரீ திலகரை மரியாதையின்றி வசைமொழியிட்டுக் கூறி வந்தன.

புனாவிலுள்ள ஆசார சீர்திருத்தக்காரர்கள் இந்து சமூகத்தின் அபிவிருத்தியில் பூர்ணவிசுவாச முள்ளவர்களாயிருந்தால், ஏன் அவர்கள் அதுபோன்ற கல்விச்சாலை யொன்றை ஸ்தாபிக்கக்கூடாது? ஆசார சீர்திருத்தக்காரர்களுக்குச் சமூக அபிவிருத்தியில் நம்பிக்கை யில்லையென்பது இதனால் விளங்குகிறது. ஸ்ரீ திலகரை எப்படியாகிலும் ஒழிக்கவேண்டுமென்பதே அவர்களுடைய கருத்தாக யிருந்ததால், அக்கருத்தொன்றையே கொண்டு, அதற்கு வேண்டிய பிரயத்தனங்களைச் செய்து வந்தார்களேயன்றி உண்மையில் சமூக சீர்திருத்த விஷயத்தில் ஒருவித முயற்சியையும் அவர்கள் செய்யவில்லை. கடைசியாக, பண்டிதை ராமாபாய் மாதால் ஸ்தாபிக்கப்பட்ட 'சாரதா சாதன்' என்னும் அக்கன்னியா வித்யாலயம் கிறிஸ்துவமத சம்பந்தமாக ஆயிற்று. இது, இப்பொழுது புனாவுக்குச் சமீபத்தில் கத்கான் என்னுமிடத்திலுள்ளது. கிறிஸ்துவமத சம்பந்தமாகப் போவதைக் கண்ட ஆசார சீர்திருத்தக்காரர்கள் கடைசியாக 1893-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 13-ந்தேதி அவ்வித்யாசாலையினின்றும் விலகிக்கொண்டனர். 'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி' என்றபடி, புனாநகரில் ஆசார சீர்திருத்தக்காரர்களுக்கு இஷ்டமில்லாமல் ஒரு கிளர்ச்சி யுண்டாகுமானால், உடனே அக்கிளர்ச்சிக்கு விரோதமாக நின்று, ஸ்ரீ திலகரைத் தூஷிப்பதே அவர்களுடைய இயல்பாக யிருந்தது. ஆசார சீர்திருத்தக்காரர்களுடைய மித்யாசாரத்தைக் கண்டு ஸ்ரீ திலகரும் வரவர அவர்களின் மீது அருகை கொண்டார். புனா நகரில் 1890-ம் வருடத்தில் இன்னொரு சம்பவம் நடந்தது. கிறிஸ்துவ

பாதிரியார் ஒருவர் தம்முடன் தேநீர்ப் பானம் செய்ய புனேயில் ஸ்ரீ திலகர், ரானடே, கோகலே உள்பட 42 கனவான்களை யழைத்திருந்தார். எல்லோரும் சென்று தேநீர்ப் பானம் பருகினர். இதை யறிந்த வைதிக கோஷ்டியார் உடனே ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிக்குத் தெரிவித்து அந்த 42 பேர்களையும் தண்டிக்கும்படி ஏற்பாடு செய்தனர். ரானடே முதலானோர் ஸ்ரீ திலகருக்கு சாஸ்திரத்தில் நல்ல பரிச்சயமிருப்பதால், அவருக்கு வருவது நமக்கும் வரட்டும் என்று கருதியிருந்தனர். தவிர, ரானடே ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் தண்டிப்பதினால் ஒருவித அவமானமுமில்லையென்று கூறினதை வைதிகர்களும் சீர்திருத்தக்காரர்களும் ரானடே மீது கோபங்கொண்டனர். வைதிகர்களோ ஸ்வாமியை அலட்சியஞ் செய்தாரென்றும் சீர்திருத்தக்காரர்கள் சங்கராசாரிய ஸ்வாமியின் தண்டனைக்கு உட்படுவது மானக்குறைவும் கோழைத்தனமென்றும் முறையே இருதிறத்தாரும் கூறினர். ஸ்ரீ திலகர் கடைசியாக, தேநீர்ப் பானத்தின் விஷயமாகவும் சந்தர்ப்பத்தின் போக்கையும் ஸ்வாமியிடத்தில் கூறி பிராயச்சித்தமும் செய்து கொண்டார். அப்பொழுது ஸ்ரீ திலகர் 1892-ம் வருடம் ஜூன்மாதம் 7-ந்தேதி 'கேஸரி' பத்திரிகையில் பின்வருமாறு எழுதினார்.

'இராஜீயத் துறையில் நமக்கு எவ்வளவு கஷ்டங்களிருக்கின்றனவோ, அவ்வளவு கஷ்டங்களும் ஆசார சீர்திருத்தத் துறையிலு மிருக்கின்றன. தற்காலத்திலுள்ள அரசாங்க நிர்வாக முறைமையும், நமது சமூக வாழ்க்கையின் முறையும் நம்மைத் திருப்தி செய்யக்கூடியவைகளாகவில்லை. நாம் இவ்விரண்டையும் சீர்திருத்த வேண்டும். இவ்விரண்டு அரசாங்கமும் இந்திய சமூகமும் நல்ல பலமான அஸ்திவாரங்களைக் கொண்டதாகவே யிருக்கின்றன. ஆகவே, நாம் வெகு ஜாக்கிரதையாகவே செல்ல வேண்டியதா யிருக்கி



றது. இராஜீய சீர்திருத்தங்களைச் சமாதானமாகவும் மிதமாகவும் படிப்படியாகவும் அங்கீகரித்து வருபவர்கள், சமூக சீர்திருத்தங்களில் ஏன் அதே முறைமையை மிதமாகவும் சமாதானமாகவும், படிப்படியாகவும் அங்கீகரிக்கக் கூடாது? பார்லிமெண்டார் 1892-ம் வருடத்தில் தீர்மானஞ் செய்த கௌன்ஸில் சட்டம் விஷயமாக சமாதானஞ் செய்ய சாத்தியப்படுகையில் ஏன் விதவா விவாக விஷயம்போன்ற இதர விஷயங்களில் நாம் சமாதானமாக ஒத்துப் போகக் கூடாது? பலாத்கார எதிர்ப்பு தற்கால சாத்தியமாக வெற்றியைக் கொடுத்தபோதிலும், பிரமாணமாக இராஜீய விஷயத்திலும் சமூக சீர்திருத்த விஷயத்திலும் அப் பலாத்கார எதிர்ப்பு மிருக்க ஆபத்தை விளைவிக்கும்.' இந்த அற்புதமான மொழிகளை எத்துணை சீர்திருத்தக்காரர்கள் யோசித்தனர். ஸ்ரீ திலகரின் மீதிருந்த பொறாமையினாலும் பகைமையினாலும் அவர்களுக்கு யோசனைகூட நீங்கிற்று. மேலும், 1890-ம் வருடத்தில் கல்கத்தா நகரில் கூடின ஆசார சீர்திருத்த கான்பரன்ஸில் பால்ய விவாகத்தைக் கண்டிக்க தீர்மான மொன்றை ஆர். என். மத்தோல்கர் பிரேரேபித்ததை ஸ்ரீ திலகர் ஆமோதித்தார். 1891-ம் வருடத்தில் நாகபுரியில் நடந்த ஆசார சீர்திருத்த கான்பரன்ஸில் விதவா விவாக விஷயமாக திருத்தப் பிரேரேபணை யொன்றைக் கொண்டுவந்து, 'விதவா விவாக விஷயமாக ஜனங்கள் உதவி புரியவேண்டுமென்றும், வெறும் வாய்வார்த்தை பயனில்லையென்றும், வாய் மொழியால் விதவைகளுக்கு ஆவதல் இல்லை யென்றும், விதவா விவாகத்தை ஆதரிப்பவர்கள் விவாகத்திற்கு விஜயமாவதுடன், அவ்விவாகத்தில் நடக்கும் விருந்துக்கும் போகவேண்டுமென்றும்' பேசினார். ஆனால், ஆசார சீர்திருத்தக்காரர்களே வெகு சாதுரியமாக 'கூடிய வரையில்' என்னும் வார்த்தையை ஸ்ரீ திலகர் கொண்டுவந்த

திருத்தப் பிரேரேபணையில் சேர்த்தனர். சமுத்திராயண விஷயமாக வந்த தீர்மானத்தில் ஸ்ரீ திலகர் கப்பல் பிரயாணஞ் செய்பவர்கள் மாக்கறி பதார்த்தத்தையே யுண்டு பிராயச்சித்தம் செய்யவேண்டு மென்று ஒரு திருத்த பிரேரேபணை கொண்டுவந்தார். அதை பண்டித மதனமோகன் மாளவியா ஆமோதித்தார். இன்னும் அநேக வழிகளில் ஸ்ரீ திலகர் ஜனசார சீர்திருத்தத்தைக் கொண்டார். 1889-ம் வருடத்தில் ஜனசார சீர்திருத்தத் தலைவர்கள் ஆசார சீர்திருத்தத்தில் நம்பிக்கை யுள்ளவர்கள் உறுதிமொழிச் சீட்டில் கையெழுத்திட வேண்டு மென்று அறிக்கை யொன்றை வெளியிட்டார். ஸ்ரீ திலகரும் அந்த உறுதிமொழிப் பத்திரத்தில் கையெழுத்திட்டார். ஆசார சீர்திருத்த விஷயமாக சர்க்கார் தயவை நாடி சட்டமுண்டாக்குவதைத் தவிர்க்கப் படும் என்றும் அத்தகைய வழியைத் தேடாதென்றும் அவ் வுறுதிமொழியில் கூறப்பட்டுள்ளது. ஆனால், பம்பாய் அரசாங்கத்தார், அங்கீகார வயது சட்டத்தைச் சட்டமாகப் பிறப்பிக்க இஷ்டப்படுகையில் சீர்திருத்தக்காரர்களில் ரானடே முதலானோர் உள்பட மற்ற சீர்திருத்தக்காரர்களுக்குச் சொல்லாமலும், கூட்டம் கூடி யோசிக்காமலும் இதுவென்று உறுதிமொழிப் பத்திரத்திற்கு விரோதமாக அத் தலைவர்கள் சென்றனர். அன்றுமுதல் ஸ்ரீ திலகர் ஆசார சீர்திருத்தக்காரர்கள் கேவலம் பயங்கொள்ளிகளென்றும், சமயோசித வேடதாரிகளென்றும், தைரியமாகக் காரியங்களைச் செய்ய முன்வரமாட்டார்களென்றும், சர்க்கார் தயவையே அதிகமாக நச்சியிருக்கும் மனோ நிலைமையைக் கொண்டவர்களென்றும் அறிந்தார். அம்மாதிரியாகவே சீர் திருத்தக்காரர்களுக்குத் தலைவர்களென முன் வந்தவர்களெல்லாம் சர்க்கார் உத்தியோகங்களிலும், சர்க்கார் அபிமான புத்திரர்களாகவும் இருந்து வந்தனர். சனங்கள் சீர்



திருத்தக்காரருக்குத் தயாராக முன்வந்தாலன்றி தீவிர சீர்திருத்தம் பயனில்லை யென்றும், சமூகத்தி லிடையே கொஞ்சங் கொஞ்சமாக ஜனசார சீர்திருத்தம் விர்த்தியாக வேண்டுமென்றும் ஸ்ரீ திலகர் கூறுவார். ஸ்ரீ திலகர் தீண்டாமை யொழிப்பதற்கும் வெகு பாடு பட்டாரென்பதற்கு அடையாளம் அவர் இங்கிலாந்துக்குப் போவதற்கு முன் தீண்டாமை சாதியார் அவரை வரவழைத்து உபசார பத்திரம் கொடுத்ததும் அதற்கு அவர் பதிலளித்ததுமே யாம். பட்டேல் விவாக மசோதாவைப் பற்றிச் சில சமயங்களில் ஸ்ரீ திலகர் அபிப்பிராயப்பட்டார், என்றாலும், அத்தகைய மசோதாவுக்கு ஜனங்கள் இன்னும் தயாராக வில்லை யென்பதே அவருடைய நம்பிக்கை. தவிர, இந்து சமூக வாழ்க்கைக்கும் மதவழி பாட்டுக்கும் பட்டேலின் மசோதா விரோதமான தென்று ஸ்ரீ திலகர் கூறினார். ஸ்ரீமான் பட்டேலோடு இங்கிலாந்தில் காங்கிரஸ் பிரசாரம் செய்து வெகு பலமாக உழைத்து வந்தார். புனாவில் 1895-ம் வருஷத்தில் நடந்த காங்கிரஸ் பந்தலில் ஆசார சீர்திருத்த கான்பரன்ஸ் நடத்தாமல் பந்தலைக் கொளுத்தி விடும்படி ஸ்ரீ திலகர் முயற்சி செய்தாரென்று அபாண்டமாக சீர்திருத்தக்காரர்கள் அவர்மீது பழி சுமத்தினதைப்பற்றி காங்கிரஸ் விஷயமாக வரும் அத்தியாயத்திற் காண்க. ஸ்ரீ திலகரின் இராஜீய கொள்கையை யழிக்கவும், அவர் மேற்கிளம்பாதபடி என்ன என்ன விதமாக வேலை செய்யலாமோ, அவ்வளவு விதமாகப் பொய் சொல்லுதல், புறங்கூறுதல், தூஷித்தல், வருத்தல், தூற்றுதல், பகைத்தல் முதலிய எல்லா வேலைகளையும் மிதவாதிகளும் ஆசார சீர்திருத்தக் கட்சியாரும் செய்துவந்தனர். ஆனால், ஸ்ரீ திலகர் எல்லாவற்றையும் பொறுமையுடன் ஏற்றுக்கொண்டு அகழ்வாரைத் தாங்கும் சிலம் போலத் தன்னை இகழ்வாரையும் போற்றிக்கொண்டு வந்

நாயகமாய்ப் பாரத நாட்டில் விளங்கினார். சிப்ளோங்கர் 1882-ம் வருடத்திலும் ஆப்டே 1892-ம் வருடத்திலும், அகர்காரும் நாமஜோஷியும் 1895-ம் வருடத்திலும், அகால மரணத்தை யடைந்தனர். ஸ்ரீ திலகர் ஒருவரே கடைசி வரை நன்மை தீமைகளை வகித்தும் தூஷணை பூஷணைகளைத் தாங்கியும் இலாப நஷ்டங்களை யடைந்தும் வந்தார்.

## 5. இராஜமான்ய ஸ்ரீ திலக்

ஸ்ரீ பாலகங்காதர திலகர் தக்ஷிண வித்யா சங்கத்தி லின்றும் விலகின நாள்முதல் இராஜீயத் துறையில் வெகு ஊக்கமாகப் பாடுபடலானார். புனா நகரில் ஜனங்களுடைய குறைகளைத் தீர்க்க வரி செலுத்துவோர் சங்கங்களை முதல் முதல் ஸ்ரீ திலகர் ஸ்தாபித்தார். அதற்கு முன் வரி செலுத்துவோர் சங்கத்தைப் பற்றி அநேகர் அறியார். முனிஸிபல் விஷயமாகப் பொது ஜனங்கள் அதிக ஊக்கங் கொள்ளவேண்டு மென்றும், முனிஸிபாலிடியும் பொது ஜனங்களின் அபிப்பிராயங்களைக் கொண்டு நடக்கவேண்டு மென்றும் ஸ்ரீ திலகர் முயற்சி செய்து வந்தார். புனா நகரில் ஜனங்களுக்குச் சௌகரியமாக சாக்கடைகள், கிணறுகள், பாதைகள், ஆஸ்பத்திரி முதலியவை சீர்திருத்தப்பட்டன. ஜனங்கள் ஸ்ரீ திலகரைத் தங்கள் பிரதிநிதியாக முனிஸிபாலிடியில் இருக்கவேண்டு மென்று மன்றாடினர். ஸ்ரீ திலகர் முனிஸிபாலிடி தேர்தலுக்கு நின்று எல்லாருக்கும் அதிகமாக வோட் பெற்று முனிஸிபாலிடியில் ஸ்தானம் பெற்றார். ஸ்ரீ திலகர் 1895-ம் வருடம் மே மாதம் முனிஸிபாலிடி மெம்பராக இருந்து கடைசியாக 1897-ம் வருடத்தில் இராஜீநாமா கொடுத்தார். அவர் இருந்த இரண்டு வருடங்களில் ஜனங்களுக்குப் பல சௌகரியங்கள் செய்யப்பட்டன. புனா முனிஸிபாலிடி சீர்திருத்தங் கொண்டது. தவிர, மத்திய டிவிஷனைச் சேர்ந்த ஜில்லா போர்டு, லோகல் போர்டுகளின் மூலமாக ஸ்ரீ திலகர் பம்பாய் சட்டசபைக்கு மெம்பராகவும் தெரிந்தெடுக்கப்பட்டார். ஸ்ரீ திலகர் 1895-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 7-ந் தேதி சட்டசபைக்குத் தெரிந்தெடுக்கப்பட்டு, ஜனம் திலகர் ஆனார். சட்ட சபையில்

சம்பிரதாயப்படி இராஜ விசுவாசப் பிரமாணம் செய்யப்பட்டது. அன்று முதல் 1897-ம் வருடம் இராஜ நிந்தனை குற்றத்திற்காகத் தண்டிக்கப்படும் வரை ஸ்ரீ திலகர் இராஜ மான்யராகப் போற்றப்பட்டு விளங்கினர். ஸ்ரீ திலகர் இருந்த இரண்டு வருடகாலத்தில் சட்ட சபை 8 தினங்களில் கூடிற்று. ஏறக்குறைய 36 மணிநேரம் சட்ட சபை நடவடிக்கை நடந்தது. வழக்கம்போல் கேள்விகள் கேட்கப்பட்டன. அக் கேள்விகளுக்குச் சர்க்கார் தரப்பில் நேரான பதில்களும் சில சமயங்களில் அசந்தர்ப்பமான பதில்களும் கூறப்பட்டு வரும். அரசிறை விஷயமாக அதிக காலம் செலவு செய்யப்பட்டது. மிகுதி நேரங்களில்

(1) 1869-ம் வருடத்திய பம்பாய் ஸிவில் கோர்ட்டு சட்டங்களின் திருத்த மசோதா.

(2) சட்ட சபை விவகார முறைப்படி நடத்த நிபந்தனைகள்.

(3) பம்பாய் பாயிலர் பரிசோதனைச் சட்டத்தைத் திருத்த மசோதா ஒன்று.

(4) பம்பாய் பொதுச் சட்டங்களைத் திருத்த ஒரு மசோதா.

(5) 1870-ம் வருடத்திய 8-வது சட்டத்தைத் திருத்த ஒரு மசோதா.

(6) 1888-ம் வருடத்திய பம்பாய் நகர முனிஸிபாலிடி சட்டத்தை மீண்டும் திருத்த ஒரு மசோதா.

ஆகிய இச்சட்டங்களைப்பற்றிய விவாதங்கள் நடந்தன. மிண்டோ-மார்லி சீர்திருத்தத்தின்படியானாலும் சட்டசபை அங்கத்தினர்கள் மயில் தன் தோகையை விரித்தாடுவது போல, பிரசங்கமாரி பொழியலாம். ஆனால் 1892-ம் வருடத்திய அரசியல் சீர்திருத்தச் சட்டப்படி அங்கத்தினர்கள் ஒன்றும் செய்ய முடியாது. கனம் ஸயானி, கனம் ஜவரி



லால், கனம் மிடல் வாட் முதலானவர்கள் வெகு பிரயாசைப்பட்டுப் பக்கம் பக்கமாகத் தங்கள் உபந்யாசங்களை அச்சிட்டுக்கொண்டு வருவார்கள். அவைகளை அரசாங்கத்தைச் சேர்ந்த அங்கத்தினர்களும் கவர்னரும் காதுகொடுத்துக் கேளாமல், 'நீங்கள் கொண்டுவந்ததைப் படித்தது போல நாங்கள் அங்கீகரிக்கிறோம்; வீணில் காலதாமதஞ் செய்யாதீர்கள்: சட்டசபையை லைக்கிஸ் மாதிரி செய்யாதீர்கள்' என்று இறுமாப்புடன் கூறுவர். ஸ்ரீ திலகர் அஞ்சாநெஞ்சம் படைத்தவராதலால், அரசாங்க அங்கத்தினர்களின் வார்த்தையைக் கவனிக்காமல் அவர்களுடைய பதிலைக் கண்டித்து வந்தனர். சட்டங்கள் சபையில் நிறைவேறுங் காலத்தில் ஸ்ரீ திலகர் தம் சட்டஞானத்தை வெகு அமரிக்கையுடன் காண்பித்தார். ஸ்ரீ திலகர் விசேஷ சட்டஞான முன்னவரென்று பலர் கௌரவித்தனர். அரசாங்கத்தாரால் வருடமுடிவில் தயாரிக்கப்படும் அரசிறை கணக்கு (Budget) விஷயமாக உண்டாகும் விவாதங்களில் ஸ்ரீ திலகர் வெகு சாமர்த்தியமான கேள்விகளைக் கேட்பார். இதர அங்கத்தினர்களைப்போல சென்ற வருடத்திய அரசிறை கணக்கையும் பிரஸ்தாப வருடத்திய கணக்கையும் மட்டும் ஒப்பிட்டுப் பார்த்துக் கேள்விகளைக் கேட்காமல், கடந்த 25 வருடகாலத்தில் அரசாங்கத்திற்கு வருமானம் எவ்வளவு உயர்ந்தது; உயர்ந்த வருமானத்தில் ஜனங்களின் அபிவிர்த்திக்காகவும் நன்மைக்காகவும் எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டு வந்ததென்னும் கேள்விகளை ஸ்ரீ திலகர் கேட்டு வந்தார். 25 வருடகாலத்தில் 5½ கோடி ரூபாய் வருமானத்தில் அதிகப்பட்டும் ஜனங்களுடைய நன்மைக்குச் சிறிய தொகையையே செலவழித்தது சாலவும் விசனிக்கத் தக்கதெனக்கூறி வருவார். அரசாங்க அங்கத்தினர்களை அடிக்கடி கௌரவிப்பதும் மிதமிஞ்சின பாஷைகளினால் ஸ்தோத்

சுரீப்பதுமான வழக்கம் ஸ்ரீ திலகரிடத்தில் இல்லை. ஸ்ரீ திலக ருடைய வார்த்தைகள் நேராக ஒருவரை எப்பொழுதும் குறிக்காது. ஆட்களைத் தாக்குவது அவருடைய இயற்கை யல்ல. அப்காரி (கலால்) விஷயமாக, "அரசாங்கத்தைச் சேர்ந்த சட்ட நிரூபணசபையால் சட்டமொன்று உண் டானால், அச்சட்டத்தை கவர்ன்மெண்டார் தங்களுடைய நிர்வாக அதிகாரத்தைக்கொண்டு ரத்துசெய்யக்கூடுமல்லவா" என்னும் கேள்வியை ஸ்ரீ திலகர் கேட்டார். அவர் கேட்ட கேள்வியைக் கண்டு பதில் கூற முடியாமற்படி வெகுநேரம் அரசாங்க அங்கத்தினர்கள் தடுமாறினர். இதுபோன்ற பல கேள்விகளை வெகுசுட்டமாகக்கேட்டு அரசாங்கத்தைத் திக்க வைப்பர். ஸ்ரீ திலகருடைய வார்த்தைகள் வெறும் வார்த்தைகளாகவே யிராது. ஒவ்வொன்றும் பசுமரத்தி லடித்த ஆணிபோல் மனதிற்படும்படி விஷயங்களை யொட்டி யிருக்கும். அதிகமாகப் புள்ளிக் கணக்குகளைக்கூறி சபை யைக் கஷ்டப்படுத்தமாட்டார். ஸ்ரீ திலகர்மீது இராஜ நிந் தனை குற்றத்திற்காக நடவடிக்கை யெடுக்க வாரம்பித்ததும் அவர் சட்டசபை அங்கத்தினர் ஸ்தானத்தை இராஜிநாமா கொடுத்தார். ஸ்ரீ திலகரோடு சட்டசபையில் ஸர். பி. எம். மேதா, தாஜீ ஆபாஜீ காரே, ஸர். சிமன்லால் ஸிடல்வாட் முதலானோர் சக அங்கத்தினர்களாக யிருந்து வந்தனர். 1896-97-ம் வருடங்கள் ஸ்ரீ திலகருடைய வாழ்க்கையில் கவ னம் செலுத்த மிகவும் முக்கியமான தெனக்கொள்ள வேண் டும். ஸ்ரீ திலகர் கீர்த்தி அவ்வருடம் எண்டிசையுஞ் சென் றது. பர்வதம்போல் அசைக்கமுடியாத மனோவலிமையைப் பெற்றிருந்த ஸ்ரீ திலகர் விசாலமான ஜீவகாருண்யத்தையும் கொண்டிருந்தாரென்பதற்கு 1896-97-ம் வருடத்திலுண் டான பஞ்சத்திலும் பிளேக் வியாதியிலும் அவர் செய்த நிவாரணவேலையும் பேருபகாரமுமே அத்தாட்சி. ஏற்கனவே,



1877-ம் வருடத்திலுண்டான பஞ்சத்தைப்பற்றி ஸ்ரீ திலகர் மனம்நொந்து பஞ்சத்தை யொழிக்கப் பாடுபடவேண்டு மென்றிருக்க 1896-97-ம் வருடத்தில் மீண்டும் கொடிய பஞ்ச முண்டாயிற்று. பஞ்சநிவாரணவேலையில் அரசாங்கத்தைச் சேர்ந்த அதிகாரவர்க்கத்தினர் சாமானிய சனங்களுக்குப் பழுத்த இந்தியனை வேலைசெய்யும்படி விடுவதில்லை. சாமானிய சனங்களுக்குத் தாங்களே இரட்சகர் என்று மார்புதட்டிப் பொதுசனப் பிரதிநிதிகளைக் கிட்டவராதபடி செய்வது அவர் களுக்கு இயற்கை. 1896-ம் வருடத்தில் கொடிய பஞ்ச முண் டாயிற்று. இராஜப்பிரதிநிதி எல்ஜின்பிரபு வெகு மும்முர மாக அநேக சமஸ்தானங்களுக்குச் சுற்றுப் பிரயாணஞ் செய்துகொண்டிருந்தார். மற்ற ஆங்கில உயர்தர உத்தியோ கஸ்தர்களும் இந்திய உத்தியோகஸ்தர்களும் உலகத்தில் நடப்பதென்ன வென்பதையும் அறியாமல் தங்கள் போக போக்கியங்களையே பெரிதாகக் கருதியிருந்தனர். சாதாரண இந்திய உத்தியோகஸ்தர்களோ தங்கள் எசமானர்களைச் சந் தோஷிக்கச் செய்வதையே சிறந்த மோட்சமெனக்கண்டு, அக்கொடிய பஞ்சகாலத்தில் ஊருராகச் சென்று சனங்களை வருத்தி வரி வசூலித்து வந்தனர். ஆசாரசீர்திருத்தக்காரர் களோ விதவாவிவாகத்தையும், சமபந்தி போசனத்தையுமே எண்ணிக்கொண்டிருந்தனர். கிறிஸ்துவ பாதிரிமார்களோ இதுவே நல்ல தருணமென அவர்கள் தங்கள் வலைகளை வீசப் புறப்பட்டனர். காங்கிரஸ் மிதவாதிகளோ கொடிய பஞ்ச விஷயமாக உபந்யாசங்களைத் தயார் செய்து வந்தனர். இந்நிலைமையில் ஸ்ரீ திலகர் ஒருவரே நிவாரணவேலைக்குரிய ஏற்பாடுகளைச் செய்ய முன்வந்தார். முதல் முதல் ரெவின்யூ சிப்பந்திகள் தங்களுடைய எசமானர்களுக்கு உண்மைக்கு விரோதமாகக் கிராமங்களிலுள்ள நிலைமையைக் கூறுவதைத் தடுக்க ஸ்ரீ திலகர் தம்முடைய ஆள்களைப் பல கிராமத்

களுக்கு அனுப்பி பஞ்சத்தின் விஷயமாக நிலைமையை யறிந்துவர அனுப்பினார். அவர்கள் ஊருராகச் சென்று அந்தந்த ஊர்களிலுள்ள தலைவர்களைக் கண்டுபேசி, பஞ்சநிவாரண சம்பந்தமாக ஒரு நல்ல திட்டத்தை தயாரித்து கவர்ன்மெண்டுக்கு அனுப்பப்போவதாக எடுத்துக் கூறி வந்தார்கள். பஞ்ச நிவாரணசட்டம் அரசாங்கத்திற்கு வழிகாட்டியாக யிருந்தபோதிலும், ஸ்ரீ திலகருக்கு ஜனத்தலைவர்களிடத்தில் அதிக நம்பிக்கை. தவிர, ஜனங்கள் பஞ்சநிவாரண சட்டத்தை யறியாதவர்களாய்த் தங்கள் நிலங்களையும் ஆடுமாடுகளையும் விற்று சர்க்கார் தீர்வை கட்டினர். அச்சமயத்தில் ஸ்ரீ திலகர் பஞ்ச நிவாரண சட்டத்தினால் ஜனங்களுக்குக் கொடுக்கப்படும் உதவியைச் ஜனங்கள் நன்கு அறியுமாறு லட்சக்கணக்கான துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு வழங்கினார். ஸ்ரீ திலகர் அனுப்பின பிரசாரகர்கள் அப்பிரசுரங்களை வழங்கியும் படித்துக் காண்பித்தும் வந்தனர். இங்ஙனம், ஜனங்களுக்குத் தங்கள் உரிமைகளைக்கூறி அவர்களைத் தம் நிலங்களையும் ஆடுமாடுகளையும் விற்று சர்க்காருக்கு வரி கொடுக்காம லிருக்கும்படி ஸ்ரீ திலகர் கூறிவந்தார்.

ஒவ்வொரு வாரமும் 'கேஸரி பத்திரிகையில் பஞ்சத்தைப்பற்றியும் பஞ்சநிவாரணத்தைப்பற்றியும் ஜனங்களுக்குப் பல வியாசங்கள் எழுதி வந்தார். 'பஞ்சத்தினால் இந்திய குடிமக்கள் எவரும் மரணமடையக்கூடாதென்று விக்டோரியா இராணியார் கூறியிருக்க, பம்பாய் கவர்னர் எல்லோரும் வாழவேண்டுமென்று சொல்லி யிருக்க, 'இந்தியா மந்திரி, கடன்பட்டாகிலும் ஜனங்களைக் காப்பாற்றுவோம் என்று வாக்களித்திருக்க, நீங்கள் ஏன் சாமானிய உத்தியோகஸ்தர்களுக்குப் பயந்து நிலங்களையும் சாமான்களையும் ஆடுமாடுகளையும் விற்று கஷ்டப்படுகிறீர்கள்? சாகுந்தருவாயிலும் நீங்கள் தைரியமாக யிருக்கவேண்டும். உணவுப்



பொருள்களில்லாத காரணத்தால் ஏன் கடைகளைக் கொள்ளையடிக்கிறீர்கள்? கலெக்டரிடம் சென்று அவர் வாசலின் முன் உங்கள் கஷ்டங்களை முறையிட்டு உணவு கொடுக்கச் சொல்லுங்கள். உங்களுக்கு உணவு கொடுக்க அவர் கடமைப்பட்டிருக்கிறார்' என்றிவ்விதம் ஸ்ரீ திலகர் எழுதி வந்தார். ஸ்ரீ திலகருடைய உதவியை அரசாங்க அதிகாரிகள் நாடியிருப்பின் எவ்வளவோ கஷ்டங்கள் நீங்கியிருக்கும். ஜனங்களுக்காகப் பாடுபடுவர்களிடம் பகைமை காட்டுவது அதிகாரிகளுக்கு இயற்கையாதலால், ஸ்ரீ திலகரின் பஞ்ச நிவாரண வேலையை யங்கீகரிக்காமல், அவருக்குத் தீங்கிழைக்க முன்வந்தார். 'கேஸரி' 'மராடா' பத்திரிகைகளின் மூலமாகவும், சர்வஜனிக சபையின்மூலமாகவும் அரசாங்கத்துக்குப் பஞ்ச விஷயமாக ஸ்ரீ திலகர் எடுத்துக் கூறி வந்தார். அரசாங்கத்தார் சற்றும் அசையவில்லை. 1896-ம் வருடம் டிசம்பர் மாதம் 13-ந் தேதி தத்தல்வாட் என்னும் கிராமத்தில் ஸ்ரீ திலகரால் அனுப்பப்பட்ட பிரசாரகர் பண்டிதர் ஸாதே என்பவர் உபந்யாசஞ் செய்தார். பண்டிதர் ஸாதே புனாவிலுள்ள மகாராஷ்டிர கலாசாலையைச் சேர்ந்தவர். நல்ல மேதாவி. அவர் உபந்யாசஞ் செய்கையில் அஸிஸ்டெண்டு கலெக்டரும் சில இராணுவவீரர்களும் அங்கு இருந்தனர். தங்கள் முன்பாக ஒருவன் தைரியமாகப் பிரசங்கம் செய்து ஜனங்களுடைய அறியாமையை எங்ஙனம் ஒழிக்கலாமெனக் கொண்டு, பண்டிதர் ஸாதேயைத் துன்பப்படுத்த அக் கலெக்டர் எண்ணங் கொண்டார். ஆனால், பண்டிதர் வெகு அழகாகச் சட்டவிரோதமின்றி உபந்யாசஞ் செய்ததால் அவரை கலெக்டர் ஒன்றுஞ் செய்ய முடியவில்லை. பண்டிதர் அலிபாக் என்னும் கிராமத்துக்குச் சென்றார். காட்டிலாக்கா கவல் சம்பந்தமான குற்றங்களைச் செய்யச் ஜனங்களைத் தூண்டினரென்று பண்டிதர் ஸாதே

மீது நடவடிக்கை யொன்றைத் தொடுத்தார். நடவடிக்கை சட்டப்படி நிற்கவில்லை. மீண்டும் மற்றொரு நடவடிக்கை நடத்தப்பட்டது. பண்டிதர் ஸாதேயோடு இதர மூன்று தனவான்களைச் சேர்த்து நடவடிக்கை நடத்தப்பட்டது. அம்மூவரும் தாறு பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். இந்த நடவடிக்கையும் பிரயோசன மில்லாமற்போயிற்று. கடைசியாக ஆப்டே என்பார் ஒருவர் ஒருவருட சாதாரண தண்டனையடைந்தார். சர்வஜனிக சபை பஞ்சநிவாரண விஷயமாகப் பல கிளர்ச்சிசெய்து வந்ததால், அரசாங்கத்தாருக்கு மனுசெய்து கொள்ள சர்வஜனிக சபைக்கிருந்த யோக்கியதையையும் நம்பிக்கையையு மிழந்ததென அரசாங்கத்தார் ஓர் உத்திரவைப் பிறப்பித்தனர். ஸ்ரீ திலகர், புனாவில் செய்துவந்த காரியங்களில் பஞ்ச நிவாரண விஷயமாகச் செய்த ஏற்பாடுகளே மிகவும் சிலாக்கியமானது. ஜனங்களில் எண்ணிறந்தவர். ஸ்ரீ திலகரிடமிருந்து உதவிபெற்று சுகமடைந்தனர். ஸ்ரீ திலகர் தம்முடைய முயற்சியால் பல நன்மைகள் உண்டாயினவென்பதையும் கிராமத்திலுள்ள ஜனங்களுக்கும் இராஜீய ஞானம் ஊட்டுவதற்கு சாதகமாக யிருந்ததையும் கண்டு, இனி காங்கிரஸ் மகா சபையானது இவ்வழியில் உழைத்து வந்தால் உண்மையான ஜனசபையாக ஏற்படுவதுமன்றி, பொதுஜனங்களும் இராஜீயத் துறையில் அபிவிர்த்தி யடைவார்களென்று 1896-ம் வருடத்தில் கல்கத்தாவில் நடந்த 12-வது காங்கிரஸின் விஷயமாக 'கேஸரி' பத்திரிகையில் பின்வருமாறு ஸ்ரீ திலகர் எழுதினார். 'கடந்த 12 வருடகாலமாக கவர்ன்மெண்டார் நமது கூக்குரலைக் கேட்பார்களென்று பெருத்த தொனியுடன் கத்தி வந்தோம்; நம்முடைய சப்தம் கவர்ன்மெண்டை ஒன்றுஞ் செய்யவில்லை. கொசுக்கத்தல் போல நம்முடைய கூக்குரலை அவர்கள் கொண்டிருக்கின்றனர். நம்முடைய முறையீடு



களையும் வாக்கு மூலங்களையும் பொய்யென அவர்கள் நினைத்து வருகின்றனர். நாம் நம்முடைய முறையீடுகளை அவர்கள் கவனிக்கும் வண்ணம்பலமான கிளர்ச்சியொன்றை நியாய வழியில் நடத்துவோம். பிரபஞ்ச ஞானமேயில்லாத கிராமத்தார்களுக்கு இராஜீய அறிவைத் தக்கபடி ஊட்ட முதன்முதல் ஆரம்பிப்போம். நாம் அவர்களைச்சம அந்தஸ்துடனும் சமத்துவ உணர்ச்சியுடனும் வரவேற்று அவர்களுக்குரிய உரிமைகளைக் கூறி எவ்விதமாக அவ்வுரிமைகளைப்பெற நியாய வழியில் அரசாங்கத்துடன் போராட வேண்டுமென்று கற்றுக்கொடுக்க வேண்டும். அப்பொழுதே அரசாங்கத்தார் காங்கிரஸ் மகா சபையின் முறையீடுகளைக் கவனிப்பார். காங்கிரஸ் முறையீடுகளைக் கவனிக்காமலிருந்தால் இந்திய ஜனசமூகத்தையே கவனிக்கவில்லையென நாம் குறை கூறலாம். அக்காலத்தில் தான் காங்கிரஸ் தலைவர்களின் முயற்சி பயனளிக்கும். அவர்களுடைய காரியங்கள் வெற்றிபெறும். இத்தகைய வேலைக்கு நல்ல திறமையான பிரசாரகர்கள் பலர் வேண்டும். அவர்கள் இராஜீயத் துறையில் பாடுபடுவதைத் தங்கள் நித்திய தர்மமாகக் கொள்ளவேண்டும். ஏதோ விடுமுறை நாளில் கூடும் வேடிக்கையென்று நினைக்கக் கூடாது.'

ஸ்ரீ திலகர் என்ன கூறியும் காங்கிரஸ் தலைவர்கள் காங்கிரஸ் நடவடிக்கைகளை வேடிக்கை விநோதக் காட்சியாகவே நினைத்தார்களேயன்றி ஜனங்கள் தங்கள் சுதந்தரத்தை அனுபவிக்க வேண்டுமென்ற பொறுப்பை நடத்துபவர்களாக அவர்கள் கருதவேயில்லை. நிற்க, பஞ்சம் ஒருவாறு நீங்கியும் நீங்காததுமாக யிருக்கையிலேயே பிளேக் வியாதி உண்டாயிற்று. இந்த வியாதியினுல் 1 கோடி ஜனங்கள் மாண்டனர். பிளேக் வியாதி மும்முரமாக புனாவில் வந்ததும் வைத்திய சிகிச்சை முறைகள் சரிவர அரசாங்கத்தார்

சால் செய்யப்படவில்லை. என்றாலும், பிளேக் வியாதி பரவாமலிருக்கத் தக்க பரிகாரங்களைச் சனங்களின் மனோபாவத்தை யறிந்து செய்யாமல், முரட்டுத்தனமாக அதிகாரிகள் செய்துவந்தனர். பிளேக் வியாதிக்குக்கூட சனங்கள் பயப்படவில்லை. பிளேக் வியாதியைத் தடுக்க அதிகாரிகள் செய்த ஏற்பாடுகளுக்கே சனங்கள் மிகவும் பயந்தனர். புனாநகரில் பிளேக் வியாதி வந்ததும் அவ்வூரிலுள்ள ஆசார சீர்திருத்தக்காரர்கள், காங்கிரஸ் தலைவர்கள், மற்ற பல கனவான்கள் தங்கள் தங்கள் சுகத்தை நாடி ஊரைவிட்டுப் போயினர். ஸ்ரீ திலகர் பிளேக் வியாதி உண்டான இடத்தின் நடுவே பிரசன்னமாயிருந்து நான்கு மூலைகளிலும் பிரசண்டமாருதம் போலச் சுற்றிக்கொண்டு ஜனங்களுக்கு உதவி புரிந்து வந்தார். ஸ்ரீ திலகர் வியாதியால் வருந்தும் சனங்களுக்கு பிளேக் ஆஸ்பத்திரி யொன்றை யேற்படுத்தினார். கணக்கற்ற சனங்கள் அந்த ஆஸ்பத்திரிக்கு வந்தனர். கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட ஆஸ்பத்திரிகளுக்குப்போக சனங்கள் பயந்தனர். ஏனெனில், அதிகாரிகள் சனங்களுடைய மனோநிலைமையை யறிந்து தக்கபடி பரிகாரஞ் செய்யாததே. சில அரசாங்க உத்தியோகஸ்தர்களுடன் ஸ்ரீ திலகர் சேர்ந்து சனங்களுக்குப் பரிகாரஞ் செய்வதில் கவனஞ் செலுத்திவந்த காலத்தில், ஆசார சீர்திருத்தக்காரர்களிற் சிலர் ஸ்ரீ திலகர் அரசாங்கத்தோடு கூடிக் குலாவுகிறார் என்றும் சட்டசபை அங்கத்தினராக ஆனதும் சர்க்கார் வலையில் வீழ்ந்துவிட்டாரென்றும் பரிகாசஞ் செய்தனர். ஸ்ரீ திலகருக் குண்டான கஷ்டம் இதில் யாதொன்று மில்லை. அந்த ஆபத்து சமயத்தில் ஸ்ரீ திலகர் சில அரசாங்க உத்தியோகஸ்தர்களுடன் கலந்து உழைக்காமற் போனால் ஜனங்களுடைய பிராணனல்லவா போகும். ஸ்ரீ திலகருக்கும் ஆசார சீர்திருத்தக்காரர்களுக்கும் அரசாங்கத்



தாருக்கும் ஒன்றுமில்லை. ஆகவே, ஸ்ரீ திலகர் தம் சகோதரர்களை ரட்சிக்க அரசாங்கத்தாருடன் ஒத்துழைக்க வேண்டிய காலங்களில் ஒத்துழைத்தும், கண்டிக்க வேண்டிய காலங்களில் கண்டித்தும் வந்தார். நிற்க, பிளேக் வியாதியைத் தடுக்கப் பலமான முறையை யனுஷ்டிக்க அரசாங்கத்தார் 'பிளேக் கமிட்டி'யொன்றை ஸ்தாபித்தார். முனிஸிபாலிடியி னின்றும் சகல உரிமைகளையும் வசப்படுத்திக்கொண்டு இந்த பிளேக் கமிட்டி தனியாக புனாநகரில் ஸ்தாபிக்கப்பட்டது. அந்த கமிட்டியில் ஐரோப்பியர்களே யிருந்தனர். அதற்கு மிஸ்டர் ராண்டு என்பவர் தலைவர். அவர் பிடிவாதமுள்ளவர். ஜனங்களிடத்தில் காருண்யமற்றவர். இந்தியர்களின் வாழ்க்கையை யறியாதவர். முரட்டுத் தன்மையைக் கொண்டவர். அவர் பிளேக் வியாதியுள்ள வீடுகளைப் பரிசோதிப்பதும், நபர்களை அப்புறப்படுத்தி சர்க்கார் ஆஸ்பத்திரிக்கு அனுப்புவதும், தொத்து சாமான்களைத் தீக்கிரையாக்குவதுமான காரியங்களைச் செய்துவரும் காரியத்தை மேற்கொண்டார். பல பிளேக் இன்ஸ்பெக்டர்கள், சில்லரை உத்தியோகஸ்தர்கள், இராணுவவீரர்கள் பிரிவு பிரிவாகப் புனாநகரில் வீடு வீடாகப் புகுந்து பரிசோதனை செய்தனர். பரிசோதனை செய்கையில், அவர்கள் சற்றேனும் தயையின்றியும் காருண்யமின்றியும் பல அத்துமீறின காரியங்களைச் செய்தார். வீட்டில் வசித்து வந்தவர்களை அப்புறப்படுத்தி வீடுகளைத் திறந்தவண்ணம் வைத்தனர். சாமான்கள் பல கொளுத்தப்பட்டன. பல உறவினர்கள் பிரிக்கப்பட்டனர். ஆஸ்பத்திரிகளிலும் கூடாரங்களிலும் தனித்தனியே வைக்கப்பட்டனர். இத்தகைய விபரீதங்களைக் கண்ணுற்ற சனங்களிற் பலர் சர்க்கார் ஆஸ்பத்திரிகளுக்குப் போகாமலும், பிளேக் வியாதி யிருக்கிறதென்று கூறாமலும் பயந்தவண்ண மிருந்தனர். ஸ்ரீ திலகரால் ஏற்படுத்

தப்பட்ட ஆஸ்பத்திரிகளுக்குத் தாராளமாகச் சனங்கள் வந்தனர். ஸ்ரீ திலகர், உடனே பிளேக் வியாதியை யொழிக்கத் தக்க சில ஏற்பாடுகளையும், ஜனங்களுக்கு சிகிச்சை செய்ய வேண்டிய சில முறைகளையும்பற்றி யோசனை சொன்னார். கவர்ன்மெண்டார் அதைச் சற்றுங் கவனிக்கவில்லை. 'யுத்த பூமியில் பிரிட்டிஷ் இராணுவ வீரனொருவன் எவ்வளவு பிரயோசன முள்ளவனாக யிருந்தபோதிலும், பொது சனங்களின் நிவாரண வேலைக்கும் சிகிச்சா வேலைக்கும் அவன் ஏற்றவனல்ல' என்று ஸ்ரீ திலகர் கூறினார். இராணுவ வீரர்களைக் கொண்டு பிளேக் வியாதியைத் தடுக்க ஏற்பாடு செய்ததை விட சாதாரண ஸிவில் அதிகாரிகளைக் கொண்டு செய்திருந்தால் புனாவில் விபரீத சம்பவமொன்றும் நடந்திருக்கமாட்டாது. இந்த புனா சம்பவம் இங்கிலாந்தில் பெருத்த குழப்பத்தை யுண்டாக்கிற்று. கோகலே அச்சமயம் இங்கிலாந்திலிருந்தார். அவர், புனாவில் உண்டான பிளேக் வியாதியைப்பற்றியும், அதைத் தடுக்க எத்தனித்ததில் இராணுவ உத்தியோகஸ்தர்கள் செய்த அக்கிரம முறைகளைப்பற்றியும் எடுத்து லண்டன் வாசிகளுக்குக் கூறி வந்தார். பிரிட்டிஷ் இராணுவ வீரர்களின்மீது அபாண்டமான பழியை கோகலே சுமத்தினதாக அரசாங்கத்தார் கோகலே பம்பாய்க்கு வந்ததும், அவர்மீது நடவடிக்கை யெடுப்பதாகப் பயமுறுத்தினர். ஸ்ரீ கோகலே கடைசியாக பிளேக் வியாதி விஷயமாகவும் பிரிட்டிஷ் இராணுவ வீரர்களின்மீது கூறின விஷயமாகவும் 'தவறுதலாகக் கூறினேன்' என்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். ஸ்ரீ கோகலே, சற்று நிதானித்திருந்திருப்பாரானால், பிரிட்டிஷ் இராணுவ வீரர்களின்மீது ஏற்பட்ட பழிக்குப் பலமான சாட்சியங்கள் கிடைத்திருக்கும். கோகலேயோ பல பிரதிவாதிகளுடைய தூண்டுதலினால் உண்மையாக நடந்த விஷ-



யங்களுக்கும் மன்னிப்பு கேட்டுக்கொண்டு வீண் அபவாதத்தைத் தேடிக்கொண்டார். ஆனால், அரசாங்கத்தாருக்கு அபிமான முள்ளவரானார். பிளேக் வியாதியினால் உண்டான குழப்பமும், பிளேக் கமிட்டியாரால் ஏற்பட்ட விபரீதங்களும் சற்று [illegible]ய்த்தும் அதிகாரிகளின் அட்டூழியங்களைக் கண்டு சகிக்காத தாமோதர சாபேகார் என்பவன் குரூர புத்தியையும் வெறி குணத்தையுங் கொண்டு மிஸ்டர் ராண்டு என்பவரைக் கொல்லப் பிரயத்தனஞ் செய்து வந்தான். கடைசியாக அவனுக்கும் சமயம் வாய்த்தது. காலஞ் சென்ற விக்டோரியா மகாராணியாரின் டைமண்ட் (வைரம்) ஜூப்ளி கொண்டாட்டம் விசேஷமாக கவர்னர் கிரகத்தில் நடந்தது. அதற்கு மிஸ்டர் ராண்டு போயிருந்தார். அதை தாமோதர சாபேகார் அறிந்து மிஸ்டர் ராண்டு திரும்பி வரும் வரையில் எந்தாவில் காத்திருந்தான். மிஸ்டர் ராண்டும் வந்தார். உடனே கொலையாளி கைத் துப்பாக்கியால் மிஸ்டர் ராண்டைச் சுட்டுக் கொன்றான். பின்னால் லப்டினண்டு எயர்ஸ்டு வந்துகொண்டிருந்தார். மிஸ்டர் ராண்டு சுடப்பட்டதையும் அறிந்தார். கொலையாளி உடனே தன்னுடைய குற்றம் அவரால் வெளிவரும் என்று நினைத்து எயர்ஸ்டையும் சுட்டுக் கொன்றான். அவ்விரு உத்தியோகஸ்தர்களும் 1897-ம் வருடம் ஜூன் மாதம் 22-ந் தேதி இரவில் கொல்லப்பட்டார்கள். அந்தோ! அவர்களுடைய கொலையில் ஆங்கிலேயர்கள் மனக் கொதிப்படைந்து ஸ்ரீ திலகரின்மீது அபாண்டமான பழியைச் சுமத்தி அவரைத் தண்டிக்கப் பலமான கிளர்ச்சி செய்தனர். ஆராக்கிரகங் கொண்டு படுவதை செய்தவனைத் தூற்றாமல், ஸ்ரீ திலகரைக் கண்டவிதமாகத் தூற்றினர். ஆசார சீர்திருத்தக்காரர்களும், பிரதிவாதிகளும் ஸ்ரீ திலகருடைய உபத்திரவம் ஒழியுமென்று பிரார்த்தனை செய்து வந்தனர். ஸ்ரீ கோகலேயின் மன்-

னிப்பு ஸ்ரீ திலகருக்கு விபரீதமாயிற்று. ஸ்ரீ கோகலே மன்னிப்பு கேட்டுக்கொண்டிராமலிருந்திருந்தால் இராணுவ வீரர்கள் செய்த அக்கிரமங்கள் வெளிவந்திருக்கும். அவ்வளவு அக்கிரமங்களும் வெளி வராமற்படி யிருந்ததற்குக் காரணம் கோகலேயின் மன்னிப்பேயாம். ஆங்கில பத்திராசிரியர்களும் மற்ற ஆங்கில வர்க்கத்தாரும் பலமான அடக்கு முறையை அரசாங்கத்தார் கைக்கொள்ள வேண்டுமென்றும், புனா நகரில் பிரசுரமாகி வரும் தேச பாஷா பத்திரிகைகளின் வியாசங்களே அக் கொலைகளுக்குக் காரணமென்றும் கூக்குரலிட்டு வந்தனர். ஸ்ரீ திலகருடைய சத்துருக்களும் அதுவே தருணமெனக் கண்டு அரசாங்க உத்தியோகஸ்தர்களைத் தூண்டலானார்கள். ஸ்ரீ திலகரின் மனம் ஆடிய சதங்கைபோல ஊசலாடிக்கொண்டிருக்குமென்று நாம் நினைக்கக் கூடும். ஆனால், ஸ்ரீ திலகரோ சற்றேனும் அஞ்சாமல் மேரு பர்வதம்போல் அசைவற்று இருந்தனர். தனக்கு ஆபத்து உண்டாகும் என்பதை ஸ்ரீ திலகர் நன்கு அறிந்தார். என்றாலும், அவர் சற்றேனும் அதற்கு மனங் கொடுக்காமல் வழக்கப்படி தன் காரியத்தையே செய்து வந்தார். இராஜ நிந்தனை குற்றத்திற்காகப் பலரைப் பிடித்து தண்டிக்க வேண்டுமென்று அதிகாரிகளும் ஆங்கிலவர்க்கத்தாரும் கூக்குரலிட்டும் பம்பாய் கவர்னர் சாண்ட் ஹர்ஸ்ட் பிரபு அடக்கு முறையைத் தொடுக்கவில்லை. இங்கிலாந்திலுள்ள இந்தியா மந்திரியின் தூண்டுதலினால் பம்பாய் கவர்னர் அடக்கு முறையைக் கொள்ள வாரம்பித்தனர். 'கேஸரி' பத்திரிகையில் எழுதின சில வியாசங்களுக்காக ஸ்ரீ திலகர் இராஜநிந்தனை குற்றஞ் சாட்டப்பட்டார். சிவாஜி மகோத்சவத்தன்று ஸ்ரீ திலகர் அப்ஸல்கான் வதையைப்பற்றி சிவாஜி செய்ததை பரிசீலித்துப் பேசினர். இந்துஸ்தானத்தை மிலேச்சர்கள் (மகம்மதியர்கள்) ஆளும்படி செய்த



தகட்டில் சாஸனம் கொடுக்கப்படவில்லையென்று ஸ்ரீ திலகர் சொன்னதை ஒரு நீதிபதி மிலேச்சர் என்னும் வார்த்தை இறின்றவர்களையும் குறிக்கும் என்று கூறினர். தவிர, ஸ்ரீ திலகர் தம்முடைய 'கேஸரி' பத்திரிகையில், பல தலைவர்களும் கனவான்களும் ஊரைவிட்டுப் போகாமல் புனா நகரிலேயே யிருந்து ஜனங்களைக் காவல்காக்கவும் உதவி புரியவும் ஆஸ்பத்திரிக்குச் சகாயஞ் செய்யவுமான வேலைகளைச் செய்திருந்தால் 'வியர்த்தமான கூக்குரல் உண்டாயிராது' என்று 'வியர்த்தமான கூக்குரல்' என்னும் மகுடமிட்ட வியாசமொன்றைத் தலையங்கமாக 1897-ம் வருடம் மேமாதம் 11-ந் தேதியில் எழுதினர். ஜூன்மாதம் 12-ந் தேதி அப்ஸால்கான் வதையை பரிசீலித்துக் கூறினர். ஆகவே இவைகளை யெல்லாம் ஒன்று சேர்த்து யோசித்தால் கொலை செய்யும்படி தூண்டவில்லையா வென்று ஆங்கிலவர்க்கத்தார் வெகு புத்திசாலித்தனமாகக் கூறினார்கள். ஆனால், பம்பாய் கவர்னர் அவ் வண்ணம் எண்ணவில்லை. என்றாலும், இந்தியாமந்திரியின் தூண்டுதலினால் ஸ்ரீ திலகரை இராஜ நிந்தனை குற்றத்திற்காகக் கைதுசெய்ய பம்பாய் கவர்னர்கடைசியாக உத்திரவு கொடுத்துவிட்டார். புனா ஜில்லா கலெக்டர் மிஸ்டர் லாம்ப் 'இதுவரையிலும் எதிர்பாராத ஒரு அவஸ்தையை சனக்கன் படும்படி' செய்கிறேன் என்று சௌரியம் பேசினர். அவ் விருவர்களுடைய கொலையினால் புனா பிராமணர்களின் மீது ஆங்கிலேயர்களுக் குண்டான கோபம் இவ்வளவவ்வளவல்ல. பம்பாயில் பிரசுரமாகும் டைம்ஸ் பத்திரிகை தாறுமாறாய் ஸ்ரீ திலகரைப் பழித்ததினால், அப்பத்திரிகையின் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள பம்பாயிலுள்ள தம் வக்கீலிடம் யோசனைகேட்கப் போயிருந்தார். அதுகாலை, ஸ்ரீ திலகர் பம்பாய் நகரில் 1897-ம் வருடம் ஜூலைமாதம் 27-ந் தேதி இராஜ நிந்தனை குற்றத்திற்

காக சிறைப்படுத்தப் பட்டார், 'கேஸரி' பத்திரிகையை அச்சடிப்பவரும் கைது செய்யப்பட்டார். தவிர, 'பூனா வைபவம்,' 'மோதவிரதம்,' 'பிரதோத்!' ஆகிய பத்திரிகைகளின் பத்திரிகாசிரியர்களும் சிறைபடுத்தப்பட்டனர். 'ஞானப்பிரகாஷ்' 'சுதாரக்' பத்திரிகாசிரியர்கள் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதின் பேரில் அவர்கள் சிறைபடுத்தப் படவில்லை. 1818-ம் வருடத்திய நாடுகடத்தும் சட்டப்படி நாட்டு சகோதரர்கள் நாடுகடத்தப் பட்டனர். ஆகவே, பூனா அதிகாரிகள் சொல்லியவண்ணம் அடக்கு முறையை தொடுத்து ஜனங்களைப் பயமுறுத்தினர். பூனாவில் தண்டபோலீஸ் ஏற்படுத்தப்பட்டது. தண்டபோலீஸார் பூனாவில் செய்த அட்டூழியங்களுக்கு எல்லையில்லை, போலீஸார் ஸ்ரீ கோகலேயின் வீட்டிலும் கண்ணோட்டம் செலுத்தினர். ஆனால், ஸ்ரீ கோகலே லார்ட் ஹாரிஸ் பிரபுவுக்கும், பிளேக் கமிட்டிக்கும், பிரிட்டிஷ் இராணுவ வீரர்களுக்கும் திருப்தியாக மன்னிப்பு கேட்டுக்கொண்டார். சிறக, ஸ்ரீ திலகர் கைது செய்யப்பட்டதும் வழக்கமான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஸ்ரீ திலகரை ஜாமீனில் விடும்படி கேட்கப்பட்டது. ஆகஸ்டுமாதம் 4-ந் தேதி பம்பாய் உயர்தர மன்றத்து நீதிபதி பத்ருதீன் டியாப்ஜி அவர்கள் ஸ்ரீ திலகரை ஜாமீனில் விடும்படி உத்திரவு செய்தார். பம்பாய் உயர்தர நீதி மன்றத்தில் நீதிபதி ஸ்ட்ராட்சியின் முன்பாக ஆகஸ்டுமாதம் 8-ந் தேதி விசாரணை தொடங்கிற்று. ஒன்பதுபேர் கொண்ட ஜூரிகள் பிரத்தியேகமாக நியமிக்கப்பட்டனர். அந்த ஒன்பது பேர்களில் ஆறுபேர் ஆங்கிலேயர்கள். மராடி பாஷை தெரியாதவர்கள். இரண்டு ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள். பூனாவில் சொல்லப்பட்டதின் நிமித்தம் இந்தியாவிலுள்ள ஐரோப்பிய சமூகம் கோபாக்கினியில் மூழ்கியிருந்த சமயத்தில், ஸ்ரீ திலகரை இராஜ நிந்தனை குற்றத்திற்காக



விசாரணைசெய்ய நூர் ஆங்கிலேய நீதிபதியும் அவருக்குத் துணையாக விருக்க ஆறு ஆங்கிலேய ஜூரிகளும் நியமிக்கப் பட்டதிலேயே ஸ்ரீ திலகருக்கு நியாயம் கிடைக்காதென அனைவரும் நிச்சயித்தனர். நீதிபதி ஆர்தர் ஸ்ட்ராட்சியோ அனுபவமில்லாத இளைஞரானதால் மிகவும் கடினமானதும் சிக்கலானதுமான இராஜ நிந்தனை வழக்கை. சரிவர நடத்த எங்ஙனம் முடியும்? தவிர, அக்காலத்தில் பொதுவாக அவ்விரு ஐரோப்பியர்களின் கொலையினின்றும் பூனாவைச் சேர்ந்த மராடியர்களைக் கண்டால் ஐரோப்பியர்களுக்கு இராட்சதர்களைக் காண்பதுபோ லிருந்தது. விசாரணை தொடங்கினதும், மராடி பாஷையினின்றும் ஆங்கிலத்தில் செய்த மொழிபெயர்ப்பு மிகவும் தவறுதலாக இருக்கிறதென்று ஸ்ரீ திலகர் தெரிவித்தும் பிரயோசனமில்லை, ஸ்ரீ திலகரின் பக்கமாக பாரிஸ்டர் மிஸ்டர் ப்யூ என்பவர் வாதித்தார். அட்வொகேட் ஜெனரல் மிஸ்டர் லாங் அவர்களும் பிரதிவாதியுடன் தாமதில் வெகு மரியாதையாகவும் கௌரவமாகவும் நடந்துகொண்டார். ஆனால், நீதிபதி அதற்கு மாறாக நடந்துகொண்டது விந்தையே. நீதிபதி பூனாவில் உண்டான பிளேக் வியாதியையும் அக்காலத்தில் பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் வேலை புரிந்ததையும், அதன் காரணமாக பூனாவிலுள்ள சனங்களுக்கு ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களைக் காண மனம் பொறுக்காமையால் தலைவது முன்றாம் அக்கொலைகள் நடந்தன வென்றும், அந்நாளை சுதேச பத்திரிகைகளும், கேஸரி பத்திரிகையும் இடைவிடாமல் ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களைத் தாக்கிக்கொண்டு வந்தன வென்றும் கூறி, கடைசியாக, ஸ்ரீ திலகரைக் குற்றவாளி என்று நிரூபித்து 18-மாத கடினகாவல் தண்டனையை 1897-ம் வருடம் செப்டம்பர்மாதம் 14-ந் தேதி விதித்தார். ஆங்கில ஜூரிகள் அறுவரும் ஸ்ரீ திலகர் குற்றவாளி எனக்

கூறினார். நீதிபதி, தம்முடைய நியாயத் தீர்ப்பில் ஸ்ரீ திலகருடைய சிறந்த ஞானத்தையும் அவருக்கிருக்கும் செல்வாக்கையும் பற்றிப் புகழ்ப்படக் கூறினார். ஸ்பெஷல் அப்பீல் லண்டனிலுள்ள ப்ரீவி கௌன்ஸிலுக்குச் செய்யப்பட்டும் பிரயோசனமில்லாமற் போயிற்று. ஸ்ரீ திலகர் தண்டனையடைந்ததும் எர்வாடா சிறைக்குக் கொண்டுபோகப்பட்டார். அந்நாள் முதல் மரணபரியந்தம் இந்தியகவர்ன்மெண்டாரும் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரும் ஸ்ரீ திலகரைத் தங்கள் சத்துருவெனக் கருதி பல விதத்திலும் துன்புறுத்தி வந்தனர். மிதவாதிகளும் ஸ்ரீ திலகரை அந்நாள்முதல் தங்களுக்கு ஆகாதவரென பஹிஷ்கரித்தனர். அரசாங்கத்தாருக்கும் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும் வேண்டியவர்களே மிதவாதிகளுக்கு வேண்டியவர்கள். அரசாங்கத்தாரால் கௌரவிக்கப் படாதவர்கள், மிதவாதிகளுடைய கௌரவத்திற்கும் சிநேகத்திற்கும் பாத்திரமில்லாதவர்களாவார்கள். ஸ்ரீ திலகர் தாம் தண்டனையடைந்தநாள் தொடங்கி மகாசனங்களால் மிக்க கௌரவிக்கப்படலானார். மிதவாதிகளுடைய கௌரவத்தையும் சிநேகத்தையும் ஸ்ரீ திலகர் இழந்தாராயினும் பொது சனங்களுடைய மதிப்பையும் சிநேகத்தையும் ஆதரவையும் ஸ்ரீ திலகர் விசேஷமாகப் பெற்றார். ஸ்ரீ திலகருடைய தண்டனையால் நாட்டில் ஒரு புதிய கிளர்ச்சி யுண்டாயிற்று. தேசாபிமானத்திற்குத் தக்க சன்மானம் சிறைவாசமே யென்றும், உண்மையாக ஒருவன் தாய்நாட்டிற்கு உழைக்க முன்வந்தால் சகல கஷ்டங்களையும் மனச்சோர்வின்றி தாங்கவேண்டு மென்றும், அரசாங்கத்தின் ஊழல்களையும் அதிகார வர்க்கத்தினரின் அட்டூழியங்களையும் உள்ளபடி கண்டித்து வருபவனை மித்திரர்களும் உறவினர்களும் கூட கைவிடுவார்க ளென்றும் ஸ்ரீ திலகருடைய தண்டனையால் உலகினருக்கு நிதர்சனமாயிற்று.



சர்க்கார் அபிமானத்தை நாடுவதும், வெகு அழகாகப் பலர் மெச்சும்படி சபைகளில் பேசுவதும், ஜனங்களுக்காக உழைப்பதுபோல நடித்துக் காண்பிப்பதுமான காரியங்கள் ஸ்ரீ திலகருடைய தண்டனையில் பறந்துபோயின. ஸ்ரீ திலகர் இராஜமான்னியராக இருந்தது நீங்கி அன்றுமுதல் லோகமான்னியராக விளங்கினார். ஸ்ரீ திலகரைத் தண்டித்த நீதிபதி இராஜநிந்தனை விஷயமாக ஆலோசனையற்ற விபரீத அர்த்தத்தைத் தெரிவித்தார். 'அப்பிரியம்' அல்லது 'பிரியமின்மை' என்னும் சொல் இராஜ நிந்தனையைக் குறிக்குமென்று அந்த நீதிபதி மேதாவி கூறினார். 1897-ம் வருடத்தில் அமராவதி நகரில் கூடின காங்கிரஸ் மகாசபையில் ஸ்ரீ திலகர் விஷயமாக பாபு சுரேந்திர நாதபானர்ஜி அனுதாபத் தீர்மான மொன்றைக் கொண்டுவந்து வெகு சிறப்பாகப் பேசினார். காங்கிரஸ் அக்கிராசனர் ஸர் சங்கரன் நாயரவர்களும் ஸ்ரீ திலகரின் தண்டனையின் அநீதியைப் பற்றிக் கூறினார். ஸ்ரீ திலகர் எர்வாடா சிறையில் முதல் முதல் செக்கு இழுக்கும் வேலையைச் செய்தார். பிறகு பிரம்பு பின்னும் வேலையும் சுவர்களுக்கு வர்ணம் இட்டும் வேலையும் அவருக்குக் கொடுக்கப்பட்டது. சுவர்களுக்கு வர்ணம் இட்டும் வேலையை வெகு அழகாக ஸ்ரீ திலகர் செய்து சிறைச்சாலை உத்தியோகஸ்தர்களைக் களிக்கச்செய்தார். சிறைச்சாலை வேலைகளிலும் தம்முடைய சிறந்த புத்தியை உபயோகப்படுத்தி யாவரும் ஆச்சரியப் படும்படியாக ஸ்ரீ திலகர் ஒவ்வொன்றையுஞ் செய்துவந்தார். சிறைச்சாலை உணவினால் ஸ்ரீ திலகர் தேகம் இளைத்துப் பலஹீன மடைந்தார். ஸ்ரீ திலகர் தண்டனை யடைந்ததும் 135-ராத்தல் இருந்தார், சிறைச்சாலையின் உணவினால் 3 அல்லது 4 மாதங்களுக்குப் பிறகு 31 இராத்தல் எடை குறைந்து 104 ராத்தலாக ஆனார், சிறைச்சாலையின் கேவலமான உணவினால் ஸ்ரீ திலகர் சரீ

முடிவு வியாதியைக் கொண்டார். அவ்வியாதி ஸ்ரீ திலகர் மரணமடையும் வரை அவரைத் துன்பப்படுத்தியது. ஸ்ரீ திலகரின் தண்டனை இந்தியாவில் ஒரு புதிய கிளர்ச்சியை யுண்டாக்கினதுபோல இங்கிலாந்திலும் ஒரு புதிய கிளர்ச்சியை யுண்டாக்கியது. ஸ்ரீ திலகர் மகா வித்வான் என்றும் வானசாஸ்திரம் முதலிய சரித்திர ஆராய்ச்சியில் மிக்க தேர்ந்தவரென்றும் அறிந்த பல பண்டிதர்கள் ஐரோப்பாவில் ஸ்ரீ திலகருடைய தண்டனையைப் பற்றித் துக்கித்தனர். ஸ்ரீ திலகர் தாம் இயற்றிய 'மிருகசிருடம்' (Orion) என்னும் நூலினால் ஐரோப்பாவிலுள்ள பல பண்டிதர்கள் இவரைச் சிறந்த மேதாவியென்று எண்ணிக் கௌரவித்தனர். அப்படி கௌரவித்தவர்களில் பண்டிதர் மாக்ஸ் முல்லர் ஒருவர். இவர் பாரதநாட்டு வேதாங்கங்களையும் உபநிடதங்களையும் சாஸ்திரங்களையும் சமஸ்கிருத பாஷையினின்றும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இவர் சிறந்த சமஸ்கிருத வித்வான். சாஸ்திர சரித்திர ஆராய்ச்சியில் சமர்த்தர். அவர் ஸ்ரீ திலகரின் தண்டனையை யறிந்து, ஒரு மனு தயார்செய்து அதில் இன்னும் பல பண்டிதர்கள் கையெழுத்தும் வாங்கி, விக்டோரியா மகாராணியாரிடம் கொடுத்தனர். ஸ்ரீ திலகரின் விசேஷ ஞானத்தையும் செல்வாக்கையுங் கூறி விடுதலை செய்யும்படி மாக்ஸ் முல்லர் மகாராணியை வேண்டினார். மகாராணியும் பண்டிதர்களின் வேண்டுகோளுக் கிணங்கி ஸ்ரீ திலகரை விடுதலை செய்யும்படி இந்திய கவர்ன்மெண்டுக்கு உத்திரவு கொடுத்தார். ஸ்ரீ திலகர், கடைசியாக ஒருவருட காலம் சிறைவாசஞ் செய்துவிட்டு 1898-ம் வருடம் செப்டம்பர் மாதம் 6-ந் தேதி விடுதலையடைந்தார். மாக்ஸ் முல்லர் மகாராணியாரிடம் மனுகொடுக்க உத்தேசித்திருப்பதை யறிந்த பம்பாய் கவர்ன்மெண்டார் ஸ்ரீ திலகருக்குச் சற்றே சலுகைகளைக் கொடுத்துவந்தனர். இரவு நேரத்தில்



இரண்டுமணிநேரம் விளக்கு வைத்துக்கொண்டு படிக்க ஸ்ரீ திலகருக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. ஸ்ரீ திலகர் தாமடைந்த கஷ்டத்தைச் சற்றேனும் நினையாமல் வேதத்தின் ஆராய்ச்சி விஷயமாக் கவனஞ்செலுத்தி யோசித்து வந்தார். பகவானிடத்து அத்யாத்ம சித்தாந்தாற் சர்வ கர்மங்களையுஞ் சமர்ப்பணஞ் செய்து இச்சையற்று, மமதையற்று, சோகமற்று தம்முடைய மேலான ஸ்வதர்மத்தையே ஸ்ரீ திலகர் செய்துகொண்டிருந்தார். ஸ்ரீ திலகர் பூர்வ ஆரியர்களின் வாசஸ்தானத்தை நினைத்து ஆராய்ச்சி செய்துவந்தார். ரிக்வேதத்திலுள்ள ஸ்லோகங்களுக்குச் சரியான அர்த்தத்தைச் செய்வதாக ஸ்ரீ திலகர் மனங்களித்து ஆநந்தப் பரவசமானார். ரிக் வேதத்தில் 'தனி துகனி பருலான் நியாஸன்' என்னும் ஸ்லோகத்திற்குச் சரியான அர்த்தத்தைச் செய்து சந்தோஷப்பட்டார். ஸ்ரீ திலகர் சிறைவாசத்தில் 'வேதங்களின் துருவ நிலயம்' அல்லது வேதங்களிலுள்ள ஆரியர்களின் உத்தர துருவ நிவாஸம்' (Arctic Home in the Vedas) என்னும் ஒரு மகா கிரந்தத்தை எழுதினார். இந்நூல் பல மேதாவிகளால் இந்தியாவிலும் மேனாட்டிலும் கொண்டாடப்பட்டு வருகிறது. சிறந்த, ஸ்ரீ திலகரின் விடுதலை பாரதநாட்டிலுள்ளவர்களுக்கு ஆச்சரியத்தை யுண்டு பண்ணியது. ஸ்ரீ திலகர் தாம் அடைந்த தண்டனையால் சரீர விருத்தத்தில் ஏற்பட்ட அசௌகரியங்களால் தளர்ந்த வயது ஏற்பட்டதுபோல, அங்கந் தளர்ந்து, பலஹீனமடைந்து முகம் சுருங்கி காணப்பட்டார். விடுதலை யானதும், ஸ்ரீ திலகர் தம்முடைய தேகத்தை முதல் முதல் பாதுகாக்கக் கருதி சிம்மகடாவி லுள்ள தம் பழைய கிரகத்திற்குச் சென்று சில மாதகாலம் தங்கி யிருந்தார். சிம்மகடா கோட்டை பூர்வம் சிவாஜி மகாராஜாவுடையது. அப்பழைய கோட்டை இப்பொழுது

ஸ்ரீ திலகருக்குச் சொந்தமாக விருக்கிறது. அதைப்பற்றி எச். டப்ளியூ. நெவின்ஸன் சிறப்பித்துக் கூறியுள்ளார். இங்கிலாந்தில் பிரசுரமாகி வந்த 'குளோப்' பத்திரிகை புனாவில் நடந்த கொலை ஸ்ரீ திலகருடைய தூண்டுதலினாலேயே யேற்பட்டதென எழுதி வந்தது. பம்பாய் டைம்ஸ் பத்திரிகையும் அவ்வண்ணமே எழுதிற்று. ஸ்ரீ திலகர் தாம் விடுதலையானதும் அப் பத்திரிகைகளின்மீது மானநஷ்ட பிராது செய்தார். டைம்ஸ் பத்திரிகை வெகு சீக்கிரமாக ஸ்ரீ திலகரை மன்னிப்புக் கேட்டுக்கொண்டது. ஸ்ரீ திலகரும் வெகு கௌரவமாக அம் மன்னிப்பை அங்கீகரித்தார். குளோப் பத்திரிகையும் தானெழுதியது தவறென ஒத்துக் கொண்டு மன்னிப்பு கேட்டுக் கொண்டது. ஸ்ரீ திலகர் இரண்டொரு மாதகாலம் விசிராந்தி எடுத்துக்கொண்டு 1898-ம் வருடத்தில் சென்னையில் நடந்த காங்கிரஸ் மகா சபைக்கு விஜயமானார். அங்கிருந்து, காஞ்சீபுரம், ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம் முதலிய திவ்விய க்ஷேத்ர யாத்திரை சென்று ஸிலோனுக்குப் பிரயாணமானார். ஸிலோனில், புத்த தர்ம விஷயமாகவும் புத்த மத சித்தாந்தங்களின் சில ஆராய்ச்சி விஷயமாகவும் பல புத்தமத பண்டிதர்களோடு பழகி சில நாள் அவர்கள் இடையே தங்கியிருந்து பிப்ரவரி மாதம் கடைசியில் புனா நகர் வந்து சேர்ந்தார். ஸ்ரீ திலகருக்கு விடுதலையாகியும் அவருடைய நண்பர் பாபா மகாராஜ் அவர்களின் விஷயமாகப் பெரிய கவலை யுண்டாயிற்று. அவ் விஷயம் ஸ்ரீ திலகருடைய ஜீவிய காலத்தில் 18 வருடகாலம் அவரை விடாமற்படி பற்றிக்கொண் டிருந்தது. அவ்விவகாரத்தால் ஸ்ரீ திலகர் அடைந்த பணநஷ்டம், சரீர பல நஷ்டம், மானநஷ்டம் இவ்வள வவ்வளவல்ல. அரசாங்க உத்தியோகஸ்தர்கள் ஸ்ரீ திலகரைச் சாதாரண சொந்த விவகாரங்களிலும் எவ்வளவு தூரம் துன்பப்படுத்தி வந்



தார் என்பதைச் சற்று ஆராய்வோம். ஸ்ரீ திலகருக்கு பாபா மகாராஜ் என்னும் பால்ய சிநேகிதர் ஒருவர் இருந்தார். அவர் தட்சிண ஸர்தார். நல்ல அந்தஸ்து வாய்ந்தவர். தனவந்தர். ஸ்ரீ திலகரிடத்தில் மிக்க பிரீதிகொண்டவர். 1897-ம் வருடம் ஆகஸ்டு மாதத்தில் பாபாமகாராஜ் மரணாவஸ்தையிலிருந்தார். ஸ்ரீ திலகரோ 1897-ம் வருடம் ஜூலை மாதம் 27-ந் தேதி சிறைபடுத்தப் பட்டார். ஆனால், நல்ல வேளையாக நீதிபதி பத்ருதீன்தியாப்ஜீ அவர்கள் ஸ்ரீ திலகரை ஜாமீன்மீது விட்டார். ஸ்ரீ திலகர் ஜாமீன்மீது விடுதலை யடைந்ததும் தமது பால்ய நண்பர் பாபா மகாராஜரைப் பார்க்கச் சென்றார். ஸ்ரீ திலகர் ஜாமீனில் விடுவிக்கப்படாம லிருந்தால் பாபாமகாராஜா இறந்தபிறகு உண்டான 'தாய் மகாராஜா' வியாச்சியம் ஸ்ரீ திலகரைப் பற்றியிராது. ஸ்ரீ திலகரும் தேச காரியத்தில் பலவிதமான வேலைகளைச் செய்திருக்கக் கூடும். ஸ்ரீ திலகர் பாபா மகாராஜரைப் பார்க்கப் போனதும் அவர் சந்தோஷமடைந்து தான் இன்னும் இரண்டொரு நாளில் மரணமடைந்து விடும்படியாக விருக்கு மென்றும், தன்னுடைய சொத்துக்கு தர்மகர்த்தாக்களை நியமிக்க வேண்டுமென்றும் திலகரிடத்தில் கூறினார். ஸ்ரீ திலகர் தன் பழைய நண்பருக்குத் தம்மால் செய்யக்கூடிய உதவியைச் செய்ய நினைத்து உடனே தாம் தர்மகர்த்தாவாக விருப்பதாக ஒத்துக் கொண்டார். பாபா மகாராஜ் இறக்கும் தருவாயில் இருந்ததினால் ஒரு உயிலைத் தயாரிக்கும்படி ஸ்ரீ திலகர் அவரிடம் கூறினார். ஏனெனில், பாபா மகாராஜாவுக்குப் பிறகு அவருடைய சொத்துக்களைப் பாதுகாக்கத் தக்க புருஷ ஸந்ததி இல்லை. அவருக்குப் பதினைந்து வயதினைக் கொண்ட பால்ய மனைவி இருந்தாள். பாபா மகாராஜாவுக்குச் சொத்து அதிகமாக விருந்தும் கடனும் அதிகமாகவே யிருந்தது. உயில் விஷயமாக ஸ்ரீ திலக

ருடைய யோசனையை யங்கீகரித்து ஸ்ரீ திலகரையே தயா
ரிக்கும்படி பாபா கூறினார். ஸ்ரீ திலகர் தாமொருவரே தர்ம
கர்த்தாவாக விருப்பதை விட இன்னும் இரண்டொருவர்
இருப்பதும் நலமென்று கூறினார். கடைசியாக, பாபா
மகாராஜ் அவர்களின் சொத்துக்களுக்கு தர்மகர்த்தாக்கள்
ஐவர் ஏற்பட்டனர். ஸ்ரீ திலகர், ராவ்சாஹிப் கிர்த்திகார்,
கபர்தே, கும்போஜ்கார், நாகபூர்கார் ஆகியவர்களே. கடைசி
இருவர் ஏற்கெனவே பாபா மகாராஜாவினிடம் இருக்கும்
குமாஸ்தாக்கள். கிர்த்திகார், சொத்து விஷயமாகத் தயா
ரிக்கப்பட்ட உயிலையும் மற்ற காரியங்களையும் பார்க்க இஷ்
டப்படவில்லை. கடைசியாக ஸ்ரீ திலகர்மீது எல்லா பொறுப்
பும் விழுந்தது. ஸ்ரீ திலகர் சிறைச்சாலையில் இருந்த காலத்
தில் கனம் கபர்தே அவர்கள் பாபா மகாராஜாவின் ஸ்தாவர
சங்கம சொத்துக்கள் முதலியவைகளைப் பரிசோதித்தும்,
உயில் சாஸனத்திற்கு வேண்டிய ஊர்ஜித காரியங்கள்
யாவையும் பார்த்து வந்தார். பாபா மகாராஜாவின் உயிலில்
முக்கியமானது பின்வருமாறு :—

'என் மனைவி கர்ப்பவதியா யிருக்கிறாள். அவள் வயிற்
றில் ஆண் பிள்ளை பிறக்காமற் போனால், அல்லது பிறந்து
அற்ப ஆயுளைக் கொண்டு இறந்துபோனால், என்னுடைய
குலம் விளங்க, தர்மகர்த்தாக்களின் யோசனையைக் கொண்டு
சாஸ்திரப்படி எவ்வளவு தடவை ஆவசியம் ஏற்படுமோ
அவ்வளவு தடவை ஒரு பிள்ளையை என் மனைவி மடியின்
மீது வைத்து ஸ்வீகாரஞ் செய்து வைக்கவேண்டும். தவிர,
அந்த ஸ்வீகாரப் புத்திரனுக்காக அந்த ஐந்து தர்மகர்த்தாக்
கள் அவன் யுக்த வயது அடையும் வரை என்னுடைய
சொத்திலுள்ள ஸ்தாவர சங்கமப் பொருள்கள் யாவையும்
பார்த்துக்கொண்டு வரவேண்டும்.'

இது விஷயமாகப் பல சிக்கல்கள் உண்டாயின. பிறகு,



1898-ம் வருடம் ஜனவரி மாதம் 18-ந் தேதி பாபா மகா
ராஜாவின் மனைவி ஒரு ஆண் பிள்ளையைப் பெற்றாள்.
ஆனால், அச் சிசு இரண்டு மாதத்திற்குள்ளேயே யிறந்தது.
ஸ்ரீ திலகர் விடுதலை யடைந்ததும் பாபா மகாராஜாவின் பத்
தினி, தாய் மகாராஜின் சொத்துக்களைப் பார்வை யிட
ஆரம்பித்தார். சொத்துக்களின் மீது கடன் தொகை அதி
கரித்திருப்பதைக் கண்டார். பின், செலவைக் குறைத்து
சிக்கனமாக நிர்வாகஞ் செய்துவரும்படி ஏற்பாடு செய்வதே
தக்க வழி என ஸ்ரீ திலகர் கூறினார். ஆனால், அந்த பாலிய
கைம்பெண்ணுக்கு இஷ்டமில்லை. பாபா மகாராஜ் இறந்தது
முதல் பல காரியஸ்தர்கள் அப் பாலிய கைம்பெண்ணுக்கு
அநேக டாம்பீகத்தை யுண்டாக்கி வீண் செலவு செய்துவர
உடந்தையா யிருந்தனர். அப் பெண்ணுக்கு மனம் திருப்தி
யாக அக் காரியஸ்தர்கள் பற்பலமாதிரி கூறி அப் பெண்ணை
சந்தோஷப்படுத்தி வந்தனர். அப் பெண்ணும் தன்னு
டைய நிலைமையையும் கௌரவத்தையு மறியாமல் காரியஸ்
தர்களின் வார்த்தைகளுக் கிணங்கி ஸ்ரீ திலகர் முதலானோ
ருடைய நன்மொழிகளைக் கேட்கவில்லை. பிறகு, ஸ்ரீ திலகர்
மூன்று வருடகாலம் தாய் மகாராஜாவையும் மற்ற தர்ம
கர்த்தாக்களையும் அடிக்கடி ஸ்வீகார விஷயமாக ஆலோ
சித்து வந்தார். பாபா மகாராஜாவுக்குப் பந்துக்கள் அநேக
ருண்டு. கோலாபூரிலுள்ள உறவினர் முறையிலும் புனா
நகரிலுள்ள உறவினர் வர்க்கத்திலும் ஸ்வீகாரஞ் செய்து
கொள்ளத் தக்க பிள்ளை அகப்படவில்லை. இவ்வளவில்
கோலாபூரைச் சேர்ந்த பண்டித மகாராஜ் அவர்களின் தம்பி
பால மகாராஜை ஸ்வீகாரஞ் செய்து கொள்ளும்படி ஸ்ரீ
திலகருக்கும் கபர்தே யவர்களுக்கும் தெரியாதபடி சிலர்
தாய் மகாராஜாவிடம் இரகசியமாக ஏற்பாடு செய்து வந்த
னர். 1901-ம் வருடம் ஜூன் மாதம் 18-ந் தேதி தர்ம

கர்த்தாக்களுக்குள் ஒரு ஆலோசனை கூட்டம் கூட்டப்பட்டது. கோலாபூர் வழியில் ஸ்வீகாரத்திற்குப் பிள்ளைகளொன்றுமில்லையென்றும் புனவழியில் சில பிள்ளைகளிருந்தும் அவர்கள் ஸ்வீகாரத்திற்குத் தக்கபடியில்லையென்றும் அக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. ஒளரங்கபாத் ஜில்லாவிலுள்ள பாப்ரி வழியில் ஏதாகிலும் பிள்ளைகளிருக்கின்றனவாவென்று பார்க்கலாமென்று தர்மகர்த்தாக்கள் தாய் மகாராஜாவிடம் தெரிவித்து ஆலோசனை கேட்டனர். அப் பெண்ணும் சம்மதித்தாள். பிறகு, ஸ்ரீ திலகர், கபர்தே அப் பெண் ஆகிய மூவரும் ஒளரங்கபாத்துக்குச் சென்று உறவினர்களுக்குள்ளே ஐந்து பிள்ளைகளைப் பொறுக்கினர். அப் பிள்ளைகள் தனித்தனி முறையே அப் பெண்ணிடம் பலநாள் வரை வசித்தனர். வசித்து வந்த காலத்தில் அப் பிள்ளைகளுடைய நடவடிக்கை குண விசேஷம் முதலியவைகள் பரீட்சிக்கப்பட்டன. சில சோதிடர்கள் அப் பிள்ளைகளின் ஜாதகங்களைப் பார்த்து கடைசியாக ஜகன்னாத் என்னும் பிள்ளையின் ஜாதகத்தைச் சிறந்ததெனத் தெரிவித்தனர். அப் பெண்ணும் அப்படியே அப் பிள்ளையை அங்கீகரிக்க இஷ்டங்கொண்டாள். ஜூன் மாதம் 27-ந் தேதி சாஸ்திரமறிந்த பண்டிதர்களையும் ஒளரங்கபாத்திலுள்ள சில பேர்களையும் வரவழைத்தனர். அப் பிள்ளையின் தகப்பனாரும் வந்திருந்தார். அதுகாலை தர்மகர்த்தாக்கள் ஸ்வீகாரத்திற்காக அப் பிள்ளை வரிக்கப்பட்டதென அனைவரும் அறியும்படி தெரிவித்தனர். தகப்பனும் தன் பிள்ளையை ஸ்வீகாரஞ் செய்து கொடுக்க சம்மதித்தார். அப்பெண்ணும் சாஸ்திர முறைப்படி ஸ்வீகாரத்திற்குப் பிள்ளையைக் கேட்டாள். ஸ்வீகாரப் பத்திரம் அங்கு தயாரிக்கப்பட்டுத் தகப்பனாரும் அப்பெண்ணும் கையெழுத்திட்டு முறையே, அவ்விருவர்களும் தனித்தனி பத்திரங்களை வைத்



துக்கொண்டனர். தகப்பனாரும் பிள்ளையைக் கொடுத்தார். அம்மாளும் பிள்ளையை வசித்துக் தன் மடிமீது உட்கார வைத்துக்கொண்டாள். ஸ்வீகாரச்சடங்கு யாவும் புனவில் நடத்திக் கொள்ளலாமென்று தெரிவித்து, அதற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் ஒளரங்கபாத்திலேயே முடித்துக் கொள்ளப்பட்டன. பிறக, புனவில் சில விஷமக்காரர்கள் சேர்ந்து ஸ்வீகார விஷயமாகத் திலகருக்குத் தீங்கிழைக்க யோசித்தனர். ' தர்மகர்த்தாக்களுக்குள் நாகபூர்கார் சிலருடைய தூண்டுதலினால், அவர் ஸ்ரீ திலகருக்குத் தீங்கு செய்ய முன்வந்தார். அவர் தாய் மகாராஜாவிடம் சென்று ஸ்ரீ திலகர் மீது குற்றங்குறைகளைக் கூறி உயிலை ரத்துசெய்துவிடும்படி தூண்டினர். தாய் மகாராஜாவும் சம்மதித்தாள். உடனே, தட்சிணத்தைச் சேர்ந்த ஸர்தார்களுக்கு ஏஜண்டாகவும் ஜில்லா ஜட்ஜியாயும் இருந்த மிஸ்டர் ஆஸ்டின் துரையை தாய் மகாராஜாவே நேரில் போய் பார்த்துத் தன் குறைகளைக்கூறி ஸ்ரீ திலகர் முதலானோரிடமிருந்து தன்னைக் காப்பாற்றும்படி கூறவேண்டுமென்று நாகபூர்காரும் அவரைச் சேர்ந்த சில சூழ்ச்சிக்காரர்களும் யோசனை சொல்லினர். அப்பெண்ணும் அதற்கு உடன்பட்டு அவ்வண்ணமே மிஸ்டர் ஆஸ்டினைக் கண்டு பேசினாள். மிஸ்டர் ஆஸ்டின் ஸ்ரீ திலகரிடத்தில் மிக்க பகைமை பாராட்டி வந்தார்; புனவில் இராஜநிந்தனை குற்றத்திற்காக ஆயுள்பரியந்தம் தீவாந்தர சிட்சை விதித்த புண்ணியவான். உடனே, ஸ்ரீ திலகரைப் படுகுழியில் தள்ளுவதே சரியென்று நிச்சயித்து தாய் மகாராஜாவுக்கு உதவி செய்வதாக வாக்களித்தார். பம்பாய் கவர்ன்மெண்டாருக்கும் ஸ்ரீ திலகருக்கும் உள்ள பொருத்தத்தையும் மறந்து, ஸ்ரீ திலகர் விஷயத்தில் என்ன வேண்டுமானாலும் செய்யலாமென்று தைரியங்கொண்டார். 1901-ம் வருடம் ஜூலைமாதம் 29-ந் தேதி, தாய் மகாராஜா,

திலகர் முதலானோருக்குக் கொடுத்த உயில் சாஸனத்தை மாற்ற மனுவொன்றைத் தாக்கல் செய்தான். ஜில்லா ஜட்ஜி மிஸ்டர் ஆஸ்டின் முன்பாக அம்மனு பிராது வந்தது. அவர், தாய் மகாராஜாவுக்குப் பிள்ளை பிறந்ததும் (பிறந்து இறந்தது) அவ்வுயில் செல்லுமா அல்லது அவ்வுயிலின்படி திலகர் முதலானோர் தர்மகர்த்தாக்களாக இருக்க வழி யுண்டாவென்று யோசித்துத் தீர்ப்புச்சொல்லாமல், ஔரங்காபாத்தில் ஸ்வீகார விஷயமாகத் தீர்ப்பு சொன்னார். ஸ்ரீ திலகர் அது சட்டமுறையல்லவே என்று கூறினார். கூறியும் மிஸ்டர் ஆஸ்டின் கேளாமல், மனுதாருடைய பிராதுகளை அங்கீகரித்து ஸ்ரீ திலகரை 14 நாள் சாட்சியாக விசாரித்தார். அதுகாலை, மிஸ்டர் ஆஸ்டின் திலகருடைய சாட்சியத்தைப் பற்றி வெகு இழிவாகவும் உண்மைக்கு மாறுபாடாகவும் கூறியுள்ளார். மிஸ்டர் ஆஸ்டின் உயிலை மாற்ற உத்தரவு கொடுத்துவிட்டு, ஔரங்காபாத் ஸ்வீகாரம் ருசுவாகவில்லையென்று கூறி ஸ்ரீ திலகரை கிரிமினல் சட்டப்படி 476-வது பிரிவுப்படி குற்றஞ்சாட்டி அவர் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள புனாநகர மாஜிஸ்டிரேட்டுக்கு ஒப்புவித்தார். ஸ்ரீ திலகர்மீது கொண்டுவந்த குற்றங்கள் பின் வருமாறு:—

i. தர்மகர்த்தாக்கள் ஐவரில் ஒருவரான நாகபூர்கார் மீது நம்பிக்கைத் துரோகத்திற்காக ஸ்ரீ திலகர் பொய்யாக பிராது செய்தது.

ii. ஔரங்காபாத்துக்கு ஸ்வீகார விஷயமாகப் போன பிரயாணத்தில் உண்டான செலவுகளைப் பொய்யாக மாற்றியும், சேர்த்தும் ஸ்ரீ திலகர் தயாரித்தது.

iii. மேற்படி விஷயமாகத் தப்பு கையெழுத்திட்டது.

iv. பொய்யானசாட்சியம் என்று அறிந்தும் வேண்டுமென்றே உண்மையென ஸ்ரீ திலகர் உபயோகப்படுத்தினது.



v. ஸ்வீகார பத்திரம் உண்மையாக இல்லாததை உண்மையென ஸ்ரீ திலகர் அக்கிரமமாக உபயோகப்படுத்தினது.

vi. தாய் மகாராஜாவின் கையெழுத்திட்ட பத்திரத்தில் பொய்யாக ஸ்ரீ திலகர் உண்மையை மறைத்து ஏமாற்ற வைத்தது.

vii. வேண்டுமென்றே ஸ்ரீ திலகர் பொய் சாட்சியம் கூறியது.

ஸ்ரீ திலகர் மீது மிஸ்டர் ஆஸ்டின் கொண்டுவந்த அவ்வேழு குற்றங்களுக்காக ஒரு துண்டு கடிதத்தையும் ஆதாரமாகவோ அல்லது தமக்கு சாட்சியாகவோ ஆஸ்டின் முன்பாகக் கொடுக்கவில்லை. ஸ்ரீ திலகர் 1902-ம் வருடம் ஏப்ரல் மாதம் 4-ந்தேதி குற்றஞ்சாட்டப்பட்டார். மிஸ்டர் ஆஸ்டின் முன்பாக உயில் விஷயமாக விசாரணை நடந்து வருகையில், ஸ்ரீ திலகர் தக்க காரணத்தைக் காட்டி, அந்த விசாரணையை அவரிடமிருந்து மாற்ற ஹைகோர்ட்டாருக்கு மனு செய்து கொண்டார். ஆனால், அவர்கள் ஒன்றுஞ் செய்ய வில்லை. மிஸ்டர் ஆஸ்டின் தீர்ப்பின் பேரில் உண்டான அப்பீலில் ஹைகோர்ட்டார் உயிலை மீண்டும் பழையபடி ஊர்ஜிதப்படுத்தினர். ஸ்ரீ திலகரும் அவருடன் சேர்ந்த மற்ற நால்வரும் மீண்டும் தர்மகர்த்தாக்களாக ஆயினர். ஸ்ரீ திலகர் மீது கொண்டுவந்த ஏழுகுற்றங்களையும் விசாரிக்கப் பிரத்யேகமான ஒரு மாஜிஸ்டிரேட் நியமிக்கப்பட்டார். 1902-ம் வருடம் செப்டம்பர் மாதம் 15-ந்தேதி விசாரணை தொடங்கிற்று. முதல் குற்றமாகிய நாகபூர்கார் மீது நம்பிக்கைத் துரோகத்திற்காக ஸ்ரீ திலகர் பொய் பிராது செய்தது எடுத்துக் கொள்ளப்பட்டது. நாகபூர்கார் சம்பளம் வாங்கி வரும் குமாஸ்தாவாதலாலும், பாபா மகாராஜாவின் சொத்தைச் சேர்ந்த விலையுயர்ந்த நகைகளும் மற்ற பொருள்

களும் அவர் வசம் இருந்ததாலும், தனிக்கை செய்ய தர்ம கர்த்தாக்களுக்குக் கடமை யுண்டென்றும், அக்கடமையைக் கொண்டே ஸ்ரீ திலகர் நாகபூர்கார் மீது பிராது செய்தது தப்பில்லை யென்று நீதிபதி பீமென் தீர்ப்பு செய்தார். ஆகவே, முதல் குற்றம் ஸ்ரீ திலகர் மீது ஏற்படவில்லை. ஆனால், மற்ற ஆறு குற்றங்கள் இருந்தன. தப்பு கையெழுத் திட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டதற்கு ஜூரிகளின்றி விசாரணை நடத்த முடியாது. ஆகவே, பொய் சாட்சி சொன்னதாக ஒரு குற்றத்தை ஸ்ரீ திலகர் மீது கொண்டு வந்து ஸ்பெஷல் மாஜிஸ்டிரேட் மிஸ்டர் க்ளிமண்ட்ஸ் முன்பாக 1903-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 24-ந்தேதி விசாரணை தொடங்கிற்று. மாஜிஸ்டிரேட் ஸ்ரீ திலகரை 18-மாதம் கடின காவல் தண்டனையும் 1000 ரூபாய் அபராதமும் விதித்தார். ஸ்ரீ திலகர் தண்டிக்கப்பட்டதும் அப்பீல் செய்வதற்குத் தம்முடைய வக்கீல்களுக்கு யோசனை சொல்லவும் கூட அவகாசம் கொடுக்காமல் மிஸ்டர் கிளிமண்ட்ஸ் வாரண்டை வைத்துக்கொண்டு போலீஸாரிடம் ஒப்புவித்தார். ஆனால், ஸ்ரீ திலகரோ, கிளிமண்ட்ஸ் மனப்போக்கை ஏற்கனவே அறிந்தவராதலாலும், தனக்குத் தண்டனை கட்டாயம் ஏற்படும் என்று நிச்சயித்திருந்ததாலும், தண்டனையடைந்தால், உடனே அப்பீலுக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் முன் கூட்டியே செய்திருந்தார். செஷன்ஸ் ஜட்ஜியிடம் அப்பீலுக்கு மனுதாக்கல் செய்யப்பட்டதுடன் ஜாமீனில் திலகரை விடும்படி ஒரு மனுவும் கொடுக்கப்பட்டது. செஷன்ஸ் ஜட்ஜி மனுவை ஏற்றுக்கொண்டு ஸ்ரீ திலகருடைய வக்கீல் ஸ்ரீமான் கேர் அவர்களை யொன்றும் கேட்காமலே, ஸ்பெஷல் மாஜிஸ்டிரேட்டின் அவசரமும் ஆத்திரமும் வெறுக்கத் தக்கதெனக் கூறி ஸ்ரீ திலகரை ஜாமீனில் விடும்படி உத்திரவு செய்தார். அப்பீல் விசாரணை



செஷன்ஸ் ஜட்ஜி மிஸ்டர் ஆஸ்டன் முன்பாக வந்தது. அவர் ஸ்ரீ திலகரின் தண்டனையைக் குறைத்தார். ஸ்ரீ திலகர் 1904-ம் வருடம் ஜனவரி மாதம் 4-ந்தேதி எரவாடா ஜெயிலுக்குக் கையில் விலங்கிட்டுக் கொண்டு போகப்பட்டார். ஸ்ரீ திலகருக்குக் கையில் விலங்கு மாட்டின விஷயமாகப் பத்திரிகைகள் அரசாங்கத்தாரையும் ஜில்லா ஜட்ஜி முதலான அதிகாரிகளையும் கண்டித்தன. ஹைகோர்ட்டாரின் உத்திரவால் ஸ்ரீ திலகர் ஜனவரி மாதம் 8-ந்தேதி விடுதலையடைந்தார். ஹைக்கோர்ட்டில் புனராலோசனை அப்பீல் பிப்ரவரி மாதம் 24-ந் தேதி ஸ்ரீ திலகர் விஷயமாக விசாரணை உண்டாயிற்று. நீதிபதி ஸர் லாரன்ஸ் ஜென்கின்ஸ் ஸ்ரீ திலகருடைய தண்டனையை ரத்து செய்து, அபராதத் தொகையையும் திருப்பிக் கொடுத்து விடும்படி தீர்ப்பு செய்தார். ஸ்ரீ திலகரின் மீது ஏற்பட்ட ஏழு குற்றங்களில் இரண்டு குற்றங்களாலும் அவர் நிரபராதி என்று தீர்ப்பு செய்யப்பட்டவுடனே அட்வொகேட் ஜனரல் மற்ற குற்றங்களை வாபீஸ் வாங்கிக் கொண்டார். கிரிமினல் விசாரணை நடந்திருக்கையிலேயே, ஸ்வீகார அங்கீகார விஷயமாக 1901-ம் வருடம் செப்டம்பர் மாதம் ஸிவில் வியாச்சியம் ஒன்றைச் செய்ய ஸ்ரீ திலகர் தாக்கல் செய்தார். கிரிமினல் விசாரணைக்காக ஸிவில் வியாச்சியம் வெகுநாள் வரை ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. கடைசியாக, ஸ்ரீ திலகருடைய கிரிமினல் குற்றங்கள் நீங்கவே, சப்ஜட்ஜி முன்பாக ஸிவில் வியாச்சியம் 1904-ம் வருடம் ஜூன் மாதத்தில் எடுக்கப்பட்டது. ஔரங்கபாத், அமராவதி, கோலாபூர் முதலிய இடங்களிற்குச் சென்று சாட்சியங்களை விசாரிக்க ஏற்பட்டதால் அவ்வியாச்சியம் இரண்டு வருட காலம் நடந்து கடைசியில் 1906-ம் வருடம் ஜூலை மாதம் 31-ந்தேதி ஸ்ரீ திலகருக்குச் சாதகமாகத் தீர்ப்பு செய்யப்பட்டது. பிரதிவாதிகளோ

ஐக்கோர்ட்டுக்கு அப்பீல் செய்தனர். இந்த, 1903-ம் வருடம் செப்டம்பர் மாதத்தில் தாய் மகாராஜ் இறந்தாள். கோலாபூர் பிள்ளையை ஏற்கனவே ஸ்ரீ திலகர் முதலானோருடைய ஸ்வீகாரத்திற்கு விரோதமாக தாய் மகாராஜா ஸ்வீகாரஞ் செய்துகொண்டதால், அந்த ஸ்வீகாரப்பிள்ளை பால மகாராஜாவுக்கும் ஔரங்கபாத்தில் ஸ்வீகாரஞ் செய்யப்பட்ட பிள்ளை ஜகன்னாதமகாராஜாவுக்கும் ஸிவில் வியாஜ்ஜியம் நடந்தது. ஐக்கோர்ட்டில் நான்குவருடகாலம் விசாரணை நடந்தது. ஐக்கோர்ட்டு நீதிபதி ஸர். சந்தாவர்க்கார் அவர் ஸ்ரீ திலகரிடம் மிக்க அசூசைகொண்டவர். அது காரணமாக ஸர். சந்தாவர்க்கார் 1910-ம் வருடத்தில் ஸ்ரீ திலகருக்கு விரோதமாகத் தீர்ப்புசெய்தார். அவருடைய தீர்ப்பில் பல அசந்தர்ப்பமான மொழிகளைக் கூறியுள்ளார். நல்ல அந்தஸ்திலுள்ள பல தனவான்கள் ஒன்றுசேர்ந்து சூழ்ச்சிசெய்து தப்புசாட்சியம் கூறியிருக்கிறார்களென்றும், ஸ்ரீ திலகரையும் கபர்தேயையும்பற்றி அவர்கள் நல்ல படித்த விவேகிகளாகவும், சட்டத்தில் இணையற்றவர்களாகவும் நல்ல அந்தஸ்தும் செல்வாக்குமுள்ளவர்களாகவும் வயது முதிர்ந்தவர்களாகவுமுள்ளவர்களென்றும், வாதிதரப்பில் சாட்சியங் கொடுத்தவர்களும் நல்ல அந்தஸ்துள்ளவர்களென்றும், இன்னம் ஒருவித பிரயோசனமில்லாத ஒரு வியாஜ்ஜியத்தில் வீணாகச் சூழ்ச்சிசெய்து பொய்சாட்சி சொல்லியதில் என்ன பயன் அவர்களுக்கு உண்டென்றும்' ஸர் சந்தவார்க்கார் தன் மனப்போக்கின்படி நாமமாறும் சம்பந்தமில்லாத பல விஷயங்களை நுழைத்து எழுதினார். அதை பிரிவி கௌன்ஸில் நீதிபதிகள் கண்டித்துள்ளார். ஐக்கோர்ட்டு அப்பீல் ஸ்ரீ திலகருக்குப் பிரதிகூலமானதும் 1911-ம் வருடம் இங்கிலாந்திலுள்ள பிரிவிகௌன்ஸிலுக்கு அப்பீல் செய்யப்பட்டது. பிரிவிகௌன்ஸிலில் ° வியாஜ்ஜியம் வெகுநாள்வரை



நடந்து கடைசியாக அவர்கள் ஐக்கோர்ட்டாரின் தீர்மானத்தை உதறி எறிந்துவிட்டு சப்ஜட்ஜியின் தீர்ப்பை ஊர்ஜிதப்படுத்தினார்கள். 1915-ம் வருடம் மார்ச்சுமாதம் 26-ந்தேதி ஸ்ரீ திலகருக்குச் சாதகமாகத் தீர்ப்பு செய்யப்பட்டது. காலஞ்சென்ற பாபா மகாராஜாவின் சொத்துக்கள் யாவும் வியாஜ்ஜியகாலத்தில் அரசாங்கத்தாரிடமிருந்து வந்தது. 1915-ம் வருடத்தில் ஜகன்னாதமகாராஜாவுக்குச் சாதகமாகத் தீர்ப்பு ஏற்பட்டும், பம்பாய் கவர்ன்மெண்டார் சொத்துக்களைத் தங்கள் அதிகார தோரணையைக்கொண்டு ஒப்படைக்காமல் இருந்தனர். கடைசியாக, மீண்டும் மனு செய்துகொண்டதின்பேரில், 1917-ம் வருடம் பிப்ரவரி மாதத்தில் ஜகன்னாதமகாராஜா தம்முடைய உரிமையையடைந்தார். இந்த வியாஜ்ஜிய விஷயமாக புனாநகர் ஜில்லா ஜட்ஜி மிஸ்டர் ஆஸ்டின் ஸ்ரீ திலகர்மீது பகைமை பாராட்டாமற்படி நியாயத்தைச் சரிவர பாராட்டி வந்திருந்தால் இவ்வளவு துன்பம் ஸ்ரீ திலகருக்கு உண்டாயிராது. பம்பாய் கவர்ன்மெண்டுக்கும் இவ்வளவு அசட்டுப்பெயர் வந்திராது. ஸ்ரீ திலகரை வேண்டுமென்றே கெடுக்கச்செய்த சூழ்ச்சியாகும். ஸ்ரீ திலகர் அரசியல் வழியில் பெற்றிருந்த தீவிரகொள்கையினால், அதிகாரவர்க்கத்தினர், ஸ்ரீ திலகரை ஒழிக்க சங்கல்பித்துக்கொண்டு 'தாய் மகாராஜாவின் விசாரணையை ஒரு வியாஜமாகக்கொண்டு பல தீமைகளை ஸ்ரீ திலகருக்கு நேராகவும் மறைவாகவும் செய்துவந்தனர். ஸ்ரீ திலகர் இராஜீயத்துறையிலும் மற்ற துறைகளிலும் அதிகாரவர்க்கத்தினர்களின் தீமைக்கெல்லாம் உடன்பட்டு சிறந்த கர்மயோகிபோல சகல தூஷணைகளையும் துன்பங்களையும் தாங்கிக்கொண்டு புடம்போட்ட அபரஞ்சிபோல பிரகாசித்து விளங்கினர். ஸ்ரீ திலகருடைய இராஜீய கொள்கையைக்கொள்ளாத மிதவாதிகளோ ஸ்ரீ திலகர்மீதுவந்த துன்

யங்களுக்கும், அவரை அநீதியாக உத்தியோகஸ்தர்கள் செய்துவந்த கெடுதிகளுக்கும் அரசாங்கத்தாரைக் கண்டிக்காமல் மௌனமாகயிருந்ததால், அவர்களுடைய மௌனம் அதிகாரவர்க்கத்தினருக்குத் தைரியத்தைக் கொடுத்துப் பலவித இடுக்கண்களைச் செய்ய இடமேற்பட்டது. மிதவாதிகள் செய்த இக்குற்றம் என்றும் மறக்கற்பாலதன்று. மிதவாதிகளிற் பலருக்கு அரசாங்கத்தினிடத்து மிகுந்த செல்வாக் கிருந்தது. அப்படியிருந்தும் வியாச்சியம் விஷயமாக ஸ்ரீ திலகர்மீது அபாண்டமாகக் கொண்டுவந்த எழுகுற்றங்களைப்பற்றி ஒரு மிதவாதியாகிலும் அரசாங்கத்தின் நடத்தையைக் கண்டிக்கவில்லை. எவ்வளவுதான் இராஜீய விஷயத்தில் அபிப்பிராயபேதமிருந்தபோதிலும், அரசாங்கத்தார் துன்புறுத்துங்காலத்தில், ஒருகட்சி சும்மாயிருப்பது மிக்க பாதகமான காரியமாகும். இப்பழி எழுகடலுறையினும் தீராது. தாய் மகாராஜா வியாச்சிய விஷயமாக ஸ்ரீ திலகர் பாரதநாட்டில் விசேஷ பிரக்யாதியடைந்தார். ஸ்ரீ திலகர் சத்தியநெறியில் போகக்கூடியவராதலால், எவ்வளவு ஆபத்துகள் வந்தபோதிலும் கடைசியாக வெற்றி பெற்றார். சத்தியமே ஜயங்கொண்டது.

## 6. பண்டித ஸ்ரீ திலகர்

பேரறிவும் பெரும்புகழும் பெற்ற ஸ்ரீ திலகர் சிறு வயதிலிருந்தே நல்ல கல்வி கேள்விகளை யுடையவர். ஸ்ரீ திலகர் அதிமேதாவி. வேதம், உபநிடதம், தர்ம சாஸ்திரம், நியாயசாஸ்திரம், நீதிசாஸ்திரம், சோதிடம், வான சாஸ்திரம், கணிதம், தர்க்கம், வியாகரணம், சரித்திரம், பூகோள ககோள சாஸ்திரம், பூததத்துவ ஜடதத்துவ சாஸ்திரம், முதலிய பல சாஸ்திர ஞானம் ஸ்ரீ திலகரிடத்தில் முதிர்ந்திருந்தது. தவிர மேனாட்டு ஆங்கில பாஷா ஞானமும் மேனாட்டு தத்துவ சாஸ்திரம், நீதிசாஸ்திரம், சட்டம் முதலியவைகளில் பேரறிவும் ஸ்ரீ திலகருக்கு இருந்தது. விஷயங்களை அறிவதில் ஸ்ரீ திலகர் வெகு சூட்சும புத்தியைக் கொண்டிருந்தார். ஸ்ரீ திலகர் எழுதிய மூன்று புத்தகங்கள் மூன்று இரத்தினங்களாக உலகில் கருதப்பட வேண்டும். ஸ்ரீ திலகர் புனா நகரில் ஆசார சீர்திருத்தக்காரர்களோடு பெரிதும் போராடி வந்த காலத்தில் மிருகசீருடம் (Orion) என்னும் நூல் எழுதப்பட்டது. இரண்டாவது நூல் சிறையில் எழுதப்பட்டுப் பிறகு 1898-ம் வருட முடிவில் கையெழுத்துப் பிரதி பூர்ணமாகி 1903-ம் வருடத்தில் பிரசன்னமாயிற்று. மூன்றாவது நூல் கீதாரஹஸ்யம் (பகவத்கீதை வியாக்யானம்) 1910-11-ம் வருடத்திய குளிர் காலத்தில் எழுதப்பட்டது. முதல் இரண்டு நூல்கள் ஆங்கில பாஷையிலும் மூன்றாவது நூல் மராடி பாஷையிலும் எழுதப்பட்டன. முதல் நூல் 'மிருகசீருடம்' (Orion) என்பதில் வேதங்களின் காலத்தைப்பற்றி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. வேதங்களின் தொன்மையைப்பற்றி அந் நூல் குறிப்பதுடன் கிறிஸ்து பிறப்புக்கு 6000 வருடங்களுக்கு

முன்னரே வேதங்கள் ஏற்பட்டிருக்கின்றனவென்று ஸ்ரீ திலகர் சித்தாந்தப் படுத்தியதையும் அது குறிக்கும். இரண்டாவது நூல் 'வேதங்களிலுள்ள ஆரியர்களின் உத்தர துருவ நிவாஸம்' (Arctic Home in the Vedas) என்பதில் ஆரியர்கள் மேனாட்டார் கூறியபடி மத்திய ஆசியாவிலுள்ள காகஸஸ் பர்வதத்தில் பூர்வம் வாசஞ் செய்தவரல்லவென்றும், அவர்கள் உத்தர துருவம் (North Pole) என்னும் இடத்திலேயே வசித்து வந்தார்களென்றும் ஸ்ரீ திலகர் நிச்சயப்படுத்தி கூறியுள்ளார். பல சரித்திரக்காரர்கள் ஆரியர்களுடைய சரித்திரத்தை முதன் முதல் எழுதியதை மீண்டும் ஸ்ரீ திலகருடைய சித்தாந்தத்திற்குப் பிறகு மாற்றி எழுதலானார்கள். மூன்றாவது நூல் கீதாரஹஸ்யம். பகவத்கீதைக்கு கர்மயோக பரமாக ஸ்ரீ திலகர் நூதன சித்தாந்தஞ் செய்து வியாக்கியானம் எழுதியுள்ளார். இம்மூன்று நூல்களும் பாரதநாட்டில் முச்சுடர்போல் விளங்குகின்றன. ஸ்ரீ திலகரின் அபார ஞானமும் முதிர்ந்த அறிவும், பல நூல்களின் அகன்ற ஆராய்ச்சியும், ஞாபகசக்தியும், இவ்வளவென நம்மால் வரையறுக்கப்பட்டுக் கூற முடியாது. ஸ்ரீ திலகர் தாம் எழுதிய 'வேதங்களிலுள்ள ஆரியர்களின் வட துருவ நிவாஸம்' என்னும் நூலில் ரிக் வேதத்திலுள்ள 80 ஸ்லோகங்களுக்கு பண்டிதர்களும் ஒப்புக்கூடிய வண்ணம் பொருள் கூறி உலகத்தை ஆச்சரியப்படுத்தியுள்ளார். இந்நூலினின்றும் விசேஷ அற்புதமான ஆராய்ச்சிகள் வெளிவந்தன. பூர்வம், இந்தியாவுக்கும் கால்டியாவுக்கும் அன்னியோன்னிய சம்பந்தம் ஏற்பட்டிருக்க வேண்டுமென்றும் ஸ்ரீ திலகர் அதர்வண வேதத்திலுள்ள ஒன்றிரண்டு ஸ்லோகங்களைக் கொண்டு ஆராய்ச்சி செய்து சித்தாந்தப் படுத்தியுள்ளார். தவிர, சமஸ்கிருத வார்த்தைகளில் பல பதங்களுக்குப் புதிய புதிய பொருள்களை ஸ்ரீ திலகர் தந்தார்.



மிகவும் கடினமானதும் சிக்கலானதுமான 'வேதாங்க ஜோதிஷம்' என்னும் நூலிலுள்ள ஸ்லோகங்களுக்கு விசேஷார்த்தங்களையும் ஸ்ரீ திலகர் கூறியுள்ளார். இந்த இரண்டாவது நூலில் சற்றேறக்குறைய 500 இதர கிரந்தங்களின் ஆராய்ச்சிக் குறிப்பு காணப்படுகிறது. கீதாரஹஸ்யத்திலோ சுமார் 1000 கிரந்தங்களின் ஆராய்ச்சிக் குறிப்பு காணப்படுகிறது. ஸ்ரீ திலகர் தம்முடைய சித்தாந்தத்திற்கு வேண்டிய ஆதாரங்களைப் பல வருடகாலமாகக் கஷ்டப்பட்டு சம்பாதித்தார். முதல் நூலுக்கு நான்கு வருட காலமும் இரண்டாவது நூலுக்கு ஒன்பது வருடகாலமும், மூன்றாவது நூலுக்கு 20 வருடகாலமும் ஆராய்ச்சி செய்து தம் சித்தாந்தத்தை ஸ்ரீ திலகர் நிச்சயப்படுத்தினார். ஆராய்ச்சிக்கு மட்டும் இவ்வளவு நீண்ட காலம் ஒவ்வொன்றுக்கும் ஏற்பட்டதேயன்றி, ஆராய்ச்சிக்குப் பிறகு நூல் எழுதுவதற்கு சொற்பகாலமே பிடித்தது. முதல் நூலை (மிருகசீருடம்) ஒரு மாதத்தில் எழுதி முடித்தார்; இரண்டாவது நூலை இரண்டு மாதங்களில் எழுதி முடித்தார். இந் நூல் 450 பக்கங் கொண்டது. கீதாரஹஸ்யம் ஐந்து மாதத்தில் முடிக்கப்பட்டது. மகாபாரதமும், ரிக்வேதமும் ஸ்ரீ திலகரின் இணைபிரியா நேச புத்தகங்கள். ஸ்ரீ பகவத்கீதையை ஸ்ரீ திலகர் 1889-ம் வருடத்தில் பாராயணஞ் செய்து வருகையில் அக்கீதையில் பத்தாவது அத்தியாயத்தில் 35-வது ஸ்லோகத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான், 'மாதங்களுக்குள் மார்கழி மாதம் நானாகின்றேன்' (மாஸாநாம் மார்க்க சீர்ஷோஹம்) என்றிருப்பதைக் கண்டு வேத பூர்வமான பழைய பஞ்சாங்கத்தை ஆராய்ச்சி செய்து, அதை விஷயமாக லண்டன் மாநகரில் கீழை நாட்டு சாஸ்திர காங்கிரஸ் சபையின் ஒன்பதாவது வருட கூட்டத்திற்கு 1892-ம் வருடம் ஸ்ரீ திலகர் வியாஸமொன்றை எழுதி யனுப்பினார். அவ்வியாசம் மேனாட்

டாரைத் திடுக்கிடச் செய்தது. 1893-ம் வருடத்தில் ஸ்ரீ திலகர் தம்முடைய நான்கு வருடத்திய ஆராய்ச்சியின் பயனாக 'மிருகசீருடம்' (orion) என்னும் நூலை அச்சிட்டு வெளிப்படுத்தினார். இந்த நூலின் கேவலம் மேனாட்டார்கள் பல பாஷைகளின் ஆராய்ச்சி யொன்றையே பற்றி சித்தாந்தப் படுத்துவதுபோல இல்லாமல், ஸ்ரீ திலகர், வானசாஸ்திர ஆராய்ச்சியின் ஆதாரத்தைப் பற்றியே சித்தாந்தப்படுத்தினார். வானசாஸ்திர ஆராய்ச்சியை மேனாட்டு சாஸ்திரஞர்கள் அதிகமாக ஒப்புவதில்லை, என்றாலும், ஸ்ரீ திலகரின் சித்தாந்தம் அவர்களுடைய மனதைக் கவர்ந்தது. சமஸ்கிருத பாஷையில் நல்ல ஞானம் பெற்றிருந்த ஐரோப்பிய மேதாவிகளான மாக்ஸ்முல்லர், வெபர், ஜகோபி முதலானோர் ஸ்ரீ திலகரின் சித்தாந்தத்தினால் மனக் குழப்பம் கொண்டனர். ஸ்ரீ திலகரின் சித்தாந்தத்தைக் கண்ட பிறகு அவர்கள் எந்தனவே சித்தாந்தப்படுத்தின சில விஷயங்களை மாற்றிக்கொண்டனர். அமெரிக்காவைச் சேர்ந்த ஜான் ஹாப்கின் சர்வ கலாசாலையில் பிரக்யாதி பெற்ற சமஸ்கிருத பண்டிதர் டாக்டர் ப்ளூம் பீல்ட் அவர்கள் 1894-ம் வருடத்தில் மிருகசீருடம் (ஓரியன்) நூலைப்பற்றிப் பின்வருமாறு எழுதியுள்ளார்:—

'கடந்த இரண்டு மூன்று மாதங்களில் மிகவும் ஆச்சரியமான சம்பவங்களை ஞானத் துறையில் உண்டாக்கி; உலக கல்விஞான சரித்திர ஞானவான்களை பிரமிக்கச் செய்தது. பன்னிரண்டு வாரங்களுக்கு முன்னர், இந்தியாவிலிருந்து, ஒரு சிறிய கிரந்தம் வெகு கேவலமாக அச்சிட்டும் பைண்டு செய்யப்பட்டும் எனக்கு வந்தது. பிரக்யாதியற்று எனக்கு அறிமுகமில்லாத கிரந்தகர்த்தாவின் வணக்கத்துடன் அப் புத்தகம் வந்தது. அவருடைய பெயரை நான் அதுவரை கேட்டதேயில்லை. தபால் மூலமாக வரக்கூடிய புத்தகங்களை இருவகைப் படுத்தி, இரண்டாம் பட்சமாக இருக்கும்



சில புத்தகங்களை போசனத்திற்குப் பின் வேடிக்கையாக அங்குமிங்கும் ஏடுகளைத் திருப்பி முடித்துவிடும் வழக்கப்படி, அப் புத்தகத்தையும் வைக்க வேண்டிய இடத்தில் வைத்தேன். அப் புத்தகத்தின் முகவுரையும் உருசியுள்ளதாகக் காணவில்லை. அந்த புத்தகத்தின் ஆசிரியர் வெகு சாந்தமாக ரிக்வேதத்தின் காலம் கிறிஸ்து பிறப்புக்கு 4000 வருடங்களுக்கு முன் என்றும், வேதங்களின் தொன்மை கிறிஸ்து பிறப்புக்கு 6000 வருடங்களுக்கு முன் இருக்க வேண்டுமென்றும் கூறியுள்ளார். இந்துக்களின் சாஸ்திர விஷயமாக ஆராய்ச்சி செய்வதில் மிக்க அவா கொண்ட நான், ஓர் இந்துவால் எழுதப்பட்ட அந் நூலை சற்று தள்ளிப் பார்த்தேன். ஏதோ கண்மூடி வைதிகத்தனமாக எழுதியிருப்பாரென்று புன்னகையுடன் பார்த்தேன். உடனே, என் புன்னகை நின்றது. சிந்தனை யுண்டாயிற்று. அப் புத்தகத்தின்மீது அதிக கவனஞ் செலுத்தினேன். அப் புத்தகம் எனக்கு ஓர் உணர்ச்சியைக் கொடுத்தது. வேதசாஸ்திரங்களையும் மேனாட்டு கிரந்தங்களையும் வெகு ஆதாரமாக அவ்வாசிரியர் உபயோகப்படுத்தி வந்திருப்பதையுங் கண்டு அப்புத்தகத்தில் ஏதோ மிக்க விசேஷமிருக்க வேண்டுமென்று யோசித்தேன். மேலாகப் படிக்கவேண்டுமென்னும் எண்ணம் நீங்கி, ஆழ்ந்த கருத்துடன் படிக்க எண்ணங் கொண்டேன். ஏதோ அசிரத்தையோடு முடிக்க எண்ணின என்னை அவ் வாசிரியர் எனக்குப் பூர்வம் சந்தேகமாக இருந்த எல்லா முக்கிய அம்சங்களையும் வெகு திருப்தியாகத் தெளிவுறச் செய்தார். இவ்விடத்தில் பிரசுரமான புத்தகங்களில் இது ஒரு மகா கிரந்தம் என்பதற்கு ஐயமேயில்லை. ஸ்ரீ திலகருடைய நூதன ஆராய்ச்சியின் மூலமாக சரித்திரக்காரர்கள் தங்களுடைய பழைய விஷயங்களை மாற்றிக் கொள்ளவேண்டும்".

திக, 'மிருகசீருடம்' என்னும் நூல் பிரசுரிக்கப் பட்ட பிறகு, ஸ்ரீ திலகர், பண்டிதர் மாக்ஸ்முல்லருடன் பாஷைகளின் உற்பத்தி, இலக்கணம் முதலிய ஆராய்ச்சி விஷயமாகவும், வானசாஸ்திர விஷயமாகவும் அடிக்கடி கடிதப் போக்குவரவு வைத்துக்கொண்டார். இராஜீயத் துறையில் அதி தீவிரமாக வேலைசெய்து வருகையிலும் நூதன ஆராய்ச்சி விஷயத்தில் மனம் வைத்து சிரத்தையுடன் கவனித்து வந்தார். ஸ்ரீ திலகருக்கு மனம் சர்வ சுவாதீனத்தி லிருந்தது. வேண்டியபோது சகல ஆராய்ச்சிகளையும் விட்டு விட்டு இராஜீயத் துறையில் அதி தீவிரமாகப் போராடு வதும், இராஜீயத் துறையில் போராடுகையில் அதற்குச் சிறிதும் விக்கினமின்றி சரித்திர சாஸ்திர ஆராய்ச்சிகளைக் கவனிப்பதுமான மனோசாதகம் ஸ்ரீ திலகரிடத்தி லிருந்தது. இரண்டாவது நூல், 'வேதங்களிலுள்ள ஆரியர்களின் வடதுருவ நிவாஸம்' என்பதை எழுதி முடித்ததும் ஸ்ரீ திலகருக்கு சில விஷயங்களில் சந்தேக மேற்பட் டிருந்தது. பிரிதிவி வித்தை, பழைய ஆராய்ச்சி வித்தை, பல தேச புராணங்களின் ஞானம் ஆகிய இவைகளில் ஸ்ரீ திலகருக்கு அதிகமான பரிச்சய மில்லாததினால், தம்முடைய நூதன சித்தாந்தத்திற்கு மேற்கூறிய வித்தைகளின் வழியாக ஏதாவதும் முகாந்தரம் ஏற்படுமோ வென்று யோசித்துக் கொண்டே ஸ்ரீ திலகர் வெகுநாள்வரை அந் நூலை பிரசுரிக் காமலே யிருந்தார். மேற்கூறிய விஷயங்களை ஆராய்ச்சி செய்ய இந்தியாவில் போதுமானபடி ஸௌகரியமும் உபகரணங்களும் இல்லாததைக் கண்டு, ஸ்ரீ திலகர், பண்டிதர் மாக்ஸ்முல்லருக்கு அடிக்கடி தமக்குண்டான சந்தேகங்களை எழுதி யனுப்புவார். மாக்ஸ்முல்லர் ஸ்ரீ திலகரின் பிரச்னைகளைக் கண்டு ஆச்சரியமுற்று, 'உம்முடைய சித்தாந்தத்தை வெகு தைரியமாக நீர் உலகில் தெரியப்படுத்தலாம்' என்று



எழுதி யனுப்பினார். ஸ்ரீ திலகரின் சிறந்த ஞானத்தையும் ஆராய்ச்சி சக்தியையுங் கண்ட மாக்ஸ்முல்லர், அம் மகா வித்வான், சிறையில் கஷ்டப்பட் டிருப்பது முறையல்ல வென்று எண்ணி விக்டோரியா மகாராணியாரிடம் ஸ்ரீ திலகரின் விடுதலைக்குப் பாடு பட்டார். மிருகசீருடம் நூல் நல்ல வித்வான்கள் எழுதக்கூடிய உயர்ந்த நடையில் ஆங்கில பாஷையில் எழுதப் பட்டது. ஆனால், இரண்டாவது நூல் யாவரும் அறிந்துகொள்ளக்கூடிய எளிய நடையில் வெகு சுலபமாக ஆங்கிலத்தில் எழுதப்பட்டது. பிருதிவி வித்தையில் அதிகமாகப் பரிச்சய மில்லை யென்று ஒருவாறு ஸ்ரீ திலகரே கூறி யிருந்தபோதிலும், அத் துறையில் அவர் கொண்ட சித்தாந்தம் பிருதிவி வித்யா பண்டிதர்களையும் ஆச்சரியப்படுத்துகிறது. பிருதிவி காலத்தின் ஆரம்பத்தில் ஐரோப்பாவிலுள்ள ஆல்ப்ஸ் பர்வதமும், இந்தியாவிலுள்ள இமாசல பர்வதமும் இப்பொழுது வானளாவி யிருப்பது போலிராமல் தாழ்ந்திருக்கையிலும், ஆசியா கண்டமும் ஆப்பிரிக்கா கண்டமும் இப்பொழுது இருப்பது போல அவ்வளவு விஸ்தீரணமின்றி சிறிய சிறிய தீவுக் கூட்டங்களாக யிருக்கையிலும், பூகோள சாஸ்திர கிரமப் படி குடகோளார்த்தம் குணகோளார்த்த மென்கிற இரண்டு கோளத்திலுமுள்ள எல்லா இடங்களிலும் சம சீதோஷ்ண ஸ்திதி நீருறை காலத்தில் (Glacial Period) இருந்ததென்று ஸ்ரீ திலகர் தாவர சாஸ்திரம், சிலாபவம் முதலிய ஆராய்ச்சியின் வழியாக சித்தாந்தப்படுத்தியுள்ளார். தவிர துருவத்தின் குணத்தைப்பற்றி ஸ்ரீ திலகர் பின்வருமாறு சித்தாந்தப்படுத்தியுள்ளார். (1) சூரியன் தெற்கிலுதிக்கிறுன். (2) நட்சத்திரங்கள் உதிப்பதும் அஸ்தமிப்பதும் இல்லை; ஆனால் அவை சக்கரவாளத்தின் சமபரப்பைச் சுற்றிக்கொண் டிருக்கின்றன. (3) ஒவ்வொரு

வருடத்திற்கும் ஒரு நீண்ட பகலும் ஒரு நீண்ட இரவுமே உண்டு; ஒவ்வொரு பகலும் ஒவ்வொரு இரவும் ஆறுமாத காலத்தைக் கொண்டது. (4) வருடத்திற் கொருமுறையே சூரியன் உதயமாகி அஸ்தமிக்கிறான்; காலை மாலைகளில் உண்டாகும் சந்தி வெளிச்சம் இரண்டு மாதம் வரை இடைவிடாமல் இருக்கும். ஆனால் துருவத்தைச் சுற்றியுள்ள இடத்தின் குணத்தைப்பற்றி ஸ்ரீ திலகர் பின்வருமாறு சித்தாந்தப்படுத்தியுள்ளார். (1) பார்க்கிறவனுடைய உச்சத்திற்குத் தென்திசையிலேயே எப்பொழுதும் சூரியன் இருப்பான் (2) சக்கிரவாளத் (திகாந்தம்) திற்கு மேலே அநேக நட்சத்திரங்கள் சுற்றுங் காலங்களிலேயு மிருப்பதால், அவை எப்பொழுதும் கண்ணுக்குப் புலப்பட்டுக் கொண்டிருக்கின்றன. (3) வருடம் மூன்று பாகமாக வுள்ளது; நீண்ட விரவு, சாதாரண இரவு பகல்களின் அநுக்கிரமம். (4) நீண்ட இரவுகளின் முடிவில் உண்டாகும் அருணோதயம் அநேக நாள் வரை இருக்கும்.

இம்மாதிரியாக அநேக நூதன சித்தாந்தங்களை வேதங்களைக் கொண்டு ஸ்ரீ திலகர் ஸ்தாபித்துள்ளார். தவிர, பாரஸிகத்தார்களின் வேதமாகிய 'ஜெண்ட் அவஸ்தா' என்னும் மகா கிரந்தத்தைக் கொண்டும் ஆரியர்கள் வடதுருவத்தை நிவாஸமாக முதன் முதல் ஏற்படுத்திக் கொண்டாரென்றும் ஸ்ரீ திலகர் சித்தாந்தப்படுத்தியுள்ளார். 'இந்தியன் கல்வி' (Indian Education) என்னும் பத்திரிகைக்கு பத்திராசிரியரான பண்டிதர் பிரேஸர் 'வேதங்களிலுள்ள ஆரியர்களின் வடதுருவ நிவாஸம்' என்னும் நூலைப்பற்றி வெகு சிறப்பாக விமரிசனஞ் செய்து எழுதியுள்ளார். ஏற்கனவே இது விஷயமாக ஆராய்ச்சி செய்த மாக்ஸ்முல்லரின் சித்தாந்தத்தையும், ஸயாணரின் சித்தாந்தத்தையும் களைந்து தம்முடைய சித்தாந்தமே சிறந்ததெனத் திலகர்



சனஞ் செய்துள்ளார். பகவத் கீதையிலும் பல நூதன ஆராய்ச்சி கொண்டு பல புதிய சித்தாந்தங்களைச் செய்துள்ளார். ஸ்ரீ திலகர் 16 பிராயத்தவராக விருக்கையிலேயே தந்தையாரின் அநுக்கிரகம் பெற்று பகவத்கீதையைப் பாராயணஞ் செய்யத் தொடங்கினார். இரவு காலங்களில் விளக்கண்டை உட்கார்ந்து கொண்டு வெகு நேரம் வரை பகவத்கீதையையும் மராடி பாஷையிலுள்ள அதன் வியாக்கியானத்தையும் ஸ்ரீ திலகர் படிப்பார். ஸ்ரீ திலகர் படிப்பதை அவர் தகப்பனார் பக்கலில் உட்கார்ந்து கொண்டு கேட்டுக் கொண்டிருப்பார். பகவத்கீதையின் சுலோகங்கள் ஸ்ரீ திலகரைப் பரவசப்படுத்தின. சிறுவயதிலிருந்தே பகவத்கீதைக்கு வியாக்கியானகர்த்தாக்கள் யாவரும் ஞான யோகத்தைக் கொண்டே எழுதியிருக்கின்றனரே யென்னும் சந்தேகம் ஸ்ரீ திலகருக் குண்டாயிற்று. பகவானுக்கு ஞானமே சிறந்ததானால் அர்ச்சுனனைக் கர்மத்தில் இறங்கும்படி அவர் உபதேசிப்பானேன்? இவ்விதமாக ஸ்ரீ திலகர் வெகுநாள் வரை யோசித்த வண்ணம் இருந்தார். கடைசியாக பகவத்கீதைக்கு விசேஷார்த்தங்களோடு நூதன ஆராய்ச்சி செய்து ஒரு வியாக்யானத்தை கர்மயோக வழியாக ஸ்ரீ திலகர் செய்துள்ளார். இந்த கர்மயோக சாஸ்திரம் மிகவும் சிறந்ததென எல்லோரும் கொண்டாடுகின்றனர். இது மண்டலே சிறைச்சாலையில் ஸ்ரீ திலகர் இருந்த காலத்தில் எழுதியது. ஸ்ரீ திலகர் 1911-ம் வருடத்தில் என். ஸீ. கேல்கருக்குப் பின்வருமாறு மண்டலே ஜெயிலிலிருந்து கடிதமொன்றை எழுதியுள்ளார்:—

* * * * *

பகவத்கீதையைப்பற்றி ஆராய்ச்சிசெய்து அதற்கு 'கீதாரஹஸ்யம்' என்று பெயரிட்டேன். இவ்வாராய்ச்சி நூதனமாகவே பலருக்கு இருக்கும். நீதிதர்மம் நம்முடைய

வாழ்க்கையில் கலந்து ஸ்திரமாக நிற்க, நம்முடைய தத்துவ சாஸ்திரம் எப்படி உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றதென்பதை விளங்க வைக்க பகவத்கீதையை நான் ஆதாரமாகக் கொண்டு வியாக்கியானம் எழுதியுள்ளேன். பகவத்கீதையானது கேவலம் தத்துவ விஷயமாகப் போதிக்கக்கூடிய நூல் மட்டுமல்ல; அது தர்ம சாஸ்திரம் நீதி சாஸ்திரம் இவைகளையும் போதிக்கக்கூடிய நூல் என்பதே எனது அபிப்பிராயம். மேனாட்டு மதசித்தாந்தங்களையும் தர்மநூல்களையும் நீதி சாஸ்திரங்களையும், கீதையுடன் ஒப்பிட்டுப் பார்த்ததில், மேனாட்டு சாஸ்திரங்களுக்கு கீதை எவ்வளவும் குறைந்ததல்லவென்றும் சில சமயங்களில் அவைகளுக்கு மேம்பட்டதாகவே யிருக்கிறதென்றும் நான் உறுதியாக நிச்சயித்தேன். கீதா ரகஸ்யமானது 15 அத்தியாயங்களைக் கொண்டு நிற்பதுடன் மகா பாரதத்தில் ஓர் உறுப்பாய் பகவத்கீதையுள்ளதென்பதைப்பற்றிய ஓர் அநுபந்தமும் அக்கீதா ரகஸ்யத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. சற்றேறக்குறைய 300 அல்லது 350 பக்கம் அடங்கக் கூடும். இத்துடன் பகவத்கீதை ஸ்லோகங்களுக்கு பொருள் உரையும் சேர்க்கப்படும். ஆகவே, இதைத் தான் நான் இப்பொழுது எழுதிக்கொண்டிருக்கிறேன். இது அவ்வளவு கஷ்டமான காரியமல்ல. என்னுடைய 'மிருக சீருடம்' நூலைப் போலவே இது நூதன நூலாகவேயிருக்கும். நான் ஆரம்பித்த வழியை இதுவரை யாரும் கண்டுபிடித்து கீதைக்கு வியாக்கியானம் செய்யவில்லை. கடந்த 20 வருடகாலத்திற்கு மேலாக என்மனதில் சதாயிருந்து வேதனை செய்துவந்த இவ்விஷயம் ஒருவாறு முடிவுபெற்றது. இங்கு, என்னிடத்தி லிருக்கும் எல்லா புத்தகங்களையும் நான் உபயோகப் படுத்திவிட்டேன். ஆனால், சில புத்தகங்கள் என் கீதாரகஸ்யத்திற்கு வேண்டியதாக விருந்தும் அவைகள்



தற்பொழுதும் என்வசம் இல்லாததினால், நான் அப்புத்தகங்களைப் படித்த ஞாபகத்தைக் கொண்டு ஒருவாறு கீதா ரகஸ்யத்தில் உபயோகப்படுத்தியுள்ளேன். விடுதலையாகி கீதா ரகஸ்யம் அச்சுக்குக் கொடுக்கப் படுவதற்கு முன் அப்புத்தகங்களை ஒருமுறை படித்து நான் ஞாபகத்தைக் கொண்டு எழுதின விஷயங்கள் சரியாக விருக்கின்றனவாவென்று பார்க்கவேண்டும். தத்துவஞானி காண்ட் என்பவரின் நூலும் கிரீன் என்பவரின் நூலும் என் கீதாரகஸ்யத்திற்குத் தக்க ஆதார நூல்களாகக் கொண்டு அவைகளை உபயோகப்படுத்தியுள்ளேன்; தவிர, மகாபாரதத்தையும் விசேஷமாக உபயோகப்படுத்தினேன்.

இவ்வாறு லோகமான்ய திலகர் எழுதினார். ஸ்ரீ திலகர் விடுதலையடைந்ததும் கீதாரகஸ்யம் அச்சிடப்பட்டு 1915-ம் வருடத்தில் பிரசுரிக்கப்பட்டது. அப்புத்தகம் மராடி பாஷையில் எழுதப்பட்டது. சுமார் 854-பக்கங்களைக் கொண்டது. முதல் பதிப்பில் 6000 பிரதிகள் அச்சிடப்பட்டு, அப்பிரதிகள் யாவும் ஒருவாரத்தில் செலவாகி விட்டன. பின்னர், இரண்டாம் பதிப்பு, மூன்றாம் பதிப்பு, நான்காம் பதிப்புகளும் செலவாகி, இப்பொழுது ஐந்தாம் பதிப்பு செலவாகி வருகின்றது. தவிர, கீதா ரகஸ்யத்தை மராடி பாஷையிலிருந்தும் குஜராதி, ஹிந்தி, கன்னடம், தெலுங்கு, தமிழ், வங்காளி முதலிய பாஷைகளில் மொழிபெயர்த்து பிரசுரிக்க எண்ணங்கொண்டார். அங்ஙனமே, ஸ்ரீ திலகர் இறப்பதற்கு முன்னமே, குஜராதி, ஹிந்தி, கன்னடம், தெலுங்கு, பாஷைகளில் புத்தகங்கள் வெளிவந்தன. தமிழ்பாஷையில் இன்னும் வரவில்லை. தமிழ் நாட்டாருக்கு சிரத்தையில்லாததினால், திலகர் திரவிய சகாயஞ் செய்தும் சுலபமா பிரசுரிக்க முன்வந்தவர்களைக் காணோம். நிற்க, ஸ்ரீ திலகர், ஜோதிஷ சாஸ்திரம், இந்துலா, கணிதசாஸ்திரம் இவைகளை எழுத

உத்தேசித் திருந்தார். பாரதநாட்டின் துர்ப்பாக்கியமே அவரை உலகினின்றும் நீக்கிற்று. பாரதநாட்டில் பல சமஸ்கிருத வித்வான்களும் சரித்திர ஆராய்ச்சிக்காரர்களு மிருந்தும் ஸ்ரீ திலகரைப்போல ஆராய்ச்சியும் பேரறிவும் கொண்டவர்களில்லை என்பது யாவரும் அறிந்ததே. பம்பாய் மாகாணத்தில் ஸ்ரீ திலகர் அயக்கிரீவ அவதாரம்போல் விளங்கி யிருந்தார். பம்பாய் சர்வகலா சங்கத்தில் ஸ்ரீ திலகர் ஓர் அங்கத்தினராக 1894-ம் வருடம் ஜனவரி மாதத்தில் தெரிந்தெடுக்கப்பட்டார். ஸ்ரீ திலகர் இராஜ நிந்தனைக் குற்றத்திற்காக 1897-ம் வருடத்தில் தண்டிக்கப்பட்ட பிறகு, சர்வகலா சபை அங்கத்தினர் உரிமையை பம்பாய் கவர்ன்மெண்டார் எடுத்துவிட்டார்கள். பிறகு, ஸ்ரீ திலகர் மகாராஷ்டிரத்திலுள்ள மகா சனங்களுக்கு இராஜீய ஞானம் உண்டாக்க பத்திரிகைகளை ஸ்தாபித்தார். 1887-ம் வருடம் அக்டோபர் மாதம் 22-ந் தேதி 'கேஸரி' பத்திரிகைக்கு பத்திராசிரியராக பதிவு செய்துகொண்டார். 'மராடா' பத்திரிகைக்கு பத்திராசிரியராக ஸ்ரீ திலகர் 1891-ம் வருடம் செப்டம்பர் மாதம் 3-ந் தேதி பதிவு செய்துகொண்டார். அது முதல், கடைசிவரை அப்பத்திரிகைகளுக்குச் சொந்தக்காரராகவே யிருந்து வந்தார். பத்திராசிரியர் ஸ்தானம் மாத்திரம் ஸ்ரீ திலகர் சிறைக்குப் போயிருந்த காலங்களிலெல்லாம் மாறிக் கொண் டிருக்கும். ஆரம்பமுதல் 'மராடா' பத்திரிகையை அஸ்வாரஸ்யமாகவே நடத்திவந்தார். ஆங்கிலபாஷை பத்திரிகைகளில் ஸ்ரீ திலகருக்கு பிடித்தமில்லை. ஜாதீய உணர்ச்சிக்கு சுதேசபாஷா பத்திரிகைகளே முக்கியமென ஸ்ரீ திலகர் நம்பிவந்தார். ஆகவே, 'மராடா' பத்திரிகையை வாரப் பத்திரிகையி லின்றும் தினசரியாகச் செய்ய ஸ்ரீ திலகர் சற்றேனும் இஷ்டப்படவில்லை. ஆங்கில பாஷையில் பிரசுரமாகும் வாரப்பத்திரிகைகளுக்கு இந்தியாவில் இலாபம்



கிடைக்காது, அநேகமாக நஷ்டமே உண்டாகும். அவ்வண்ணமே 'மராடா' பத்திரிகை கேஸரி பத்திரிகையினாலேயே ஜீவித்துவருகிறது. ஸ்ரீ திலகர் இறக்கும் தருணத்தில் 'மராடா' பத்திரிகைக்கு 2000 சந்தாதார்க ளிருந்தனர். கேஸரி பத்திரிகையோ முப்பது வருடகாலமாக மகாராஷ்டிரத்தை புத்துயிர் பெற உழைத்துவந்தது. 'கேஸரி' பத்திரிகைக்கு 50 ஆயிரம் சந்தாதார்கள் சில சமயங்களில் இருந்தனர். ஆனால், ஸ்ரீ திலகர் இறக்குஞ் சமயத்தில் அப்பத்திரிகைக்கு 35000 சந்தாதார்கள் இருந்தனர். கேஸரி பத்திரிகை ஆரம்பித்த 10 வருடகாலம் வரையில் ஸ்ரீ திலகர் திரவிய நஷ்டமடைந்து வந்தார். பிறகு, கேஸரி பத்திரிகைக்கு நஷ்டமில்லாமலே யிருந்தது. என்றாலும் யுத்தகாலங்களில் காகிதங்களின் விலை அதிகமாக ஏறினதால் கொஞ்சம் கஷ்டமேற்பட்ட போதிலும், கூடியவரை நஷ்டமில்லாமலே அது இருந்தது. கேஸரி மூலமாக வரும் திரவியம் அப்போதைக்கப்போது ஸ்ரீ திலகர் பொது ஜனங்களின் உபயோகத்திற்குச் செலவழித்து வருவார். இராஜீயத் துறையில் பாடுபடுபவர்கள் பலருக்கு ஸ்ரீ திலகர் கேஸரியின் நிதியே பேருதவியாக விருந்தது. தவிர, கீதா ரகஸ்யத்தில் வந்த இலாபத்தையும் பொது விஷயங்களுக்கே உபயோகித்து வந்தார். தாய் மகாராஜ் வழக்கிலும், ஸர். வேலன்டையன் சிரால் வழக்கிலும் ஸ்ரீ திலகர் அடைந்த நஷ்டம் அபரிமிதமானது. ஸ்ரீ திலகர் மிக்க தனவந்தரல்ல; எனினும் இலட்சம் இலட்சமாக அவரிடம் திரவியம் நடமாடிக்கொண்டிருந்தது. கேஸரி பத்திரிகை ஜனங்களுக்கென்றே ஸ்ரீ திலகர் அர்ப்பணஞ் செய்தார். குறைந்த சந்தா தொகையை வைத்து ஏழைகளும் எளிதில் வாங்கக்கூடிய விதமாக கேஸரி பத்திரிகையை அமைத்து அவர் நடத்திவந்தார்.

கேஸரி பத்திரிகையைத் தினசரியாக்க வேண்டுமென்று

பலர் வற்புறுத்தியும், ஸ்ரீ திலகர் வார பத்திரிகையாகவே யிருக்க வேண்டுமென்று கூறிவந்தார். கடைசியாக, 1920-ம் வருடத்தில் கேஸரி வாரம் இருமுறையாக ஆயிற்று. மகாராஷ்டிரத்தில் கடந்த 30 வருடங்களாக ஸ்ரீ திலகரும் கேஸரியும் செய்த அருஞ் செயல்கள் கூறற்பாலன வல்ல. மகாராஷ்டிர சரித்திரத்தில் ஸ்ரீ திலகர் ஒரு ஸ்தானம் பெறுவதுபோல கேஸரியும் ஓர் ஸ்தானம் பெறும். ஸ்ரீ திலகர் எவ்வண்ணம் பலவித துன்பங்களுக்கு உட்பட்டாரோ அவ்வண்ணமே கேஸரியும் பலவித கஷ்டங்களுக்கு உட்பட்டிருந்தது. ஸ்ரீ திலகர் எங்ஙனம் காடு முரடான பாதை வழிகளில் சென்று உயர்ந்த மலை உச்சியை யடைந்தாரோ, அங்ஙனமே கேஸரியும் சென்று உச்ச ஸ்தானத்தை யடைந்தது. ஒருவருடைய தயவையும் எதிர் பார்க்காதபடி ஸ்ரீ திலகர் தம் கடமையைச் செவ்வனே செலுத்தி வந்தது போல, கேஸரியும் தன் கடமையைச் சனங்களின் மனப்படி செலுத்தி வந்தது. இராஜீயப் போராட்டத்திற்கு மகாராஷ்டிரத்தில் கேஸரி ஓர் அரண்போ லிருந்தது. அதிகார வர்க்கத்தினர்களின் அடக்குமுறைத் தாண்டவங்களிலும் கேஸரியைத் தகர்க்க அவர்களால் முடியவில்லை. நல்ல வஜ்ஜிரக்கோட்டை போல சனங்களுக்கு கேஸரி இருந்து வந்தது. கேஸரி பத்திரிகையை தற்பொழுது நரசிம்ம சிந்தாமணி கேல்கார் நடத்தி வருகிறார். ஸ்ரீ திலகரின் பாஷை நடை பிரம்ம சூத்திரம்போல சிறியதாயிருக்கும். ஆனால், ஒவ்வொரு வார்த்தையும் அஸ்திரம் போல மனதைத் துளைக்கும். நல்ல அர்த்த புஷ்டியுள்ளது. முதிர்ந்த விவேகமும் ஆழ்ந்த யோசனையும் கூடியதாகவே ஸ்ரீ திலகரின் வியாஸங்க ளிருக்கும். வீணான வார்த்தைகளை அடுக்கி வரைவது ஸ்ரீ திலகருடைய ஸ்வபாவமல்ல. நியாயாநியாயங்களை யறிந்தும், தர்மா தர்மங்களை யுணர்ந்தும் விஷ



யங்களை நன்றாகச் சீர்தூக்கி சனங்களுக்குப் புலப்படும்படி எழுதுவதில் ஸ்ரீ திலகருக்கு மிஞ்சின கிரந்தகர்த்தா மகாராஷ்டிரத்தில் இல்லை. *என். ஸி. கேல்காரின் வியாஸங்களைப்போல ஹாஸ்யம் நிறைந்தில்லை யாயினும், 'முமுட்சு' பத்திரிகாசிரியர் †பங்கர்காரின் வியாசங்களைப் போல உருதியுள்ளதாக யில்லையாயினும், ‡பண்டிதர் சிவராம மகாதேவ பராஞ்சபேயின் வியாசங்களைப் போல் வஞ்சப் புகழ்ச்சியாக யில்லையாயினும் ஸ்ரீ திலகரின் வியாஸங்கள் பகைவர்களால் தகர்க்கவும் நுழையவும் இயலாத பத்மவியூகம்போ லிருக்கும்.

கேஸரி பத்திரிகை ஆரம்பித்த காலத்தில் ஸ்ரீ திலகர் கடின நடையைக் கொண்டே வியாஸங்கள் எழுதி வந்தார். பிறகு, தம்முடைய அவிவேகத்தை தாமே அறிந்து 'சாமானிய சனங்களை இராஜீயத் துறையில் இறக்கிப் பாடுபடச் செய்வதற்கு என் பாஷையின் நடை தடையாக வல்லவோ யிருக்கிறதென்று' அவரே யோசித்தார். அந் நாள் முதல் இன்றுவரை கேஸரி எளிய நடையைக் கொண்டே வருகிறது. ஆரம்பத்தில், ஸ்ரீ திலகர் கேஸரியின் வாயிலாக, மத தர்மம், நீதி தர்மம், பொருள் நூல், விவசாயம், வானசாஸ்திரம், சரித்திரம், அரசியல் முதலிய பல அற்புத விஷயங்

---

* என். ஸி. கேல்கார் தற்பொழுது மகாராஷ்டிரத்தில் ஜனநாயகத் தலைவர். ஸ்ரீ திலகரின் நெருங்கின பந்து. நல்ல மேதாவி.

† பங்கர்கார் சிறந்த கிரந்தகர்த்தா. துக்காராம், மோரோபண்ட் முதலானோரின் சரித்திரங்களை எழுதியவர். வைதிக சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர். நல்ல உபந்யாஸி.

‡ இவர் 'கால்' என்னும் பத்திரிகைக்கு ஆசிரியராக யிருந்தார். 1908-ம் வருடத்தில் சிறை புகுந்தவர். தீவிர இராஜீய கொள்கையைக் கொண்டவர். வெகு அழகாகப் பேசும் இயல்பினையுடையவர். இவரிடத்தில் மிதவாதிகளுக்கு நடுக்கம்.

கள மகா சனங்களுக்குப் போதித்து வந்தார். அவர் இராஜீயத் துறையில் சனங்கள் முயற்சி செய்ய இஷ்டப்படுவதை யறிந்த ஸ்ரீ திலகர் 'கேஸரி' பத்திரிகையில் இராஜீய சாஸ்திரங்களைப் பற்றிய பல விஷயங்களையும், அரசாங்கத்தின் அமைப்பையும் பிரஜைகளின் சுதந்தரங்களையும் பற்றி எழுதுவாருர். அரசாங்க உத்தியோகஸ்தர்களின் நடத்தை, மிதவாதிகளின் கொள்கை, சீர்திருத்தக்காரர்களின் போக்கு, ஆகிய இவைகளை ஸ்ரீ திலகர் வெகு தைரியமாகக் கண்டித்து சனங்களுக்குத் தைரியத்தை யுண்டு பண்ணினுர். அரசாங்க உத்தியோகஸ்தர்களைக் கண்ட மாத்திரத்தில் நடுநடுங்கும் பிரஜைகளுக்குத் தைரியத்தை யுண்டுபண்ணி அவர்களின் பிறப்புரிமை இன்னதென விளங்க வைத்தார். கேஸரியைக் காணுந்தோறும் பிரஜைகள் சந்தோஷங் கொள்வர்; மிதவாதிகளும் அதிகார வர்க்கத்தினர்களும் பயந்திருப்பார்கள். இராஜீயத் துறையில் உபயோகப்படும் பல ஆங்கில வார்த்தைகளுக்கு ஸ்ரீ திலகர் புதிய புதிய வார்த்தைகளை மராடி பாஷையில் உண்டாக்கினுர். ப்யூராக்ரஸி, (Bureaucracy) ரெஸ்பான்ஸிபல் கவர்ன்மெண்ட் (Responsible Government) இம்பீரியல் பெடரேஷன் (Imperial Federation) பாஸிவ் ரெஸிஸ்டென்ஸ் (Passive Resistance) டெஸ்பாடிஸம், (Despotism) லிமிடெட் மானர்கி (Limited monarchy) பட்ஜட் (Budget) டிஸென்ட்ராலிஸேஷன் (Decentralization) போன்ற பல ஆங்கில வார்த்தைகளுக்குப் புதிய புதிய மராடி வார்த்தைகளை யுண்டாக்கி உபயோகப்படுத்தி வந்தார். ப்யூராக்ரஸி (Bureaucracy) என்னும் வார்த்தைக்கு 'அதிகாரவர்க்கம்' என்று வெகு காலம் ஸ்ரீ திலகர் உபயோகப்படுத்திவந்தும் அப்பதம் அவருக்குத் திருப்தியைத் தரவில்லை. ஒருநாள், அமள் மாத்தாய் தாம் செய்த பிரசங்கத்தில் 'நவுகர் ஷாஹி' என்



விஷயமாகப் பல மேனுட்டு சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் ஒருவித நிச்சயமுறுங் கொள்ளாமல் அவரவ ரிஷ்டப்படி வேதங்களின் காலங்களை நிர்ணயித்தனர். பண்டிதர் மாக்ஸ் முல்லர் வேதசாஸ்திரங்களை நான்கு காலங்களாகப் பிரித்தார். சந்தஸ் உண்டான காலம், மந்திரம் ஏற்பட்டகாலம், பிராமணம் உண்டானகாலம், சூத்திரம் பிறந்தகாலம் என நான்குகாலங்களைப் பிரித்து, ஒவ்வொருகாலத்திற்கும் 200 வருடங்கள் என்று நிர்ணயஞ்செய்து வேதம் உண்டானகாலம் கிறிஸ்து பிறப்புக்குமுன் 1200 வருடங்கள் என்று நிச்சயித்துக் கூறினுர். ஆனல், மேனுட்டு ஆராய்ச்சிக்காரர்களில் அநேகர் வானசாஸ்திர வழியாக ஆராய்ச்சி செய்வதை ஒப்புக்கொள்வதில்லை. வேதங்களிலும், பிராமணங்களிலும், சூத்திரங்களிலும் வானசாஸ்திரத்தைப் பற்றிய பல குறிப்புகள் இருக்கின்றன. ரிக்வேதத்தில் யக்ஞ ரிக்குகள் பல இருக்கின்றன; யாகமந்திரங்கள் பல இருக்கின்றன. மாதங்கள், ருதுக்கள், சம்வத்ஸரம் முதலிய காலங்களைப்பற்றிய ஞானமில்லாமல் யாகாதி யக்ஞங்கள் நிகழ்ந்திரா. ஆகவே, பூர்வ ரிஷிகள் தங்கள் ஆஸ்ரமத்தில் அக்கினி ஹோத்திர வருடம் பூராவும் யக்ஞங்களைச் செய்துகொண்டே காலப்போக்கைக் கணக்கிட்டு வந்தனர். ரிஷிகள் செய்யும் யாகயக்ஞங்கள் முதலான கர்மங்களினின்றுமே கால அளவை நிர்ணயித்து சம்வத்ஸரம், அயனம், ருது, மாதம், பக்ஷம், இரவு, பகல், முதலியவைகளை அறிந்து வந்தனர். வேதாங்க ஜோதிஷமானது வருட ஆரம்பத்தை உத்தராயண மகர சங்கராந்தியில் என்று கூறியிருப்பதை ஸ்ரீ திலகர் இல்லையென்று நிர்த்தாரணஞ் செய்துள்ளார். இரவும் பகலும் சரியாக இருக்கும் பொழுதை விஷுவான் என்று கூறுவர்; சைத்திரமாதமே வருடாரம்பம் என்றும் ஸ்ரீ திலகர் நிச்சயித்துக் கூறினுர். சதபத

பிராம்மணத்தில் வசந்தருது, கிரீஷ்மருது, வர்ஷருது இம்மூன்றும் தேவருதுக்கள் என்று கூறப்படுவதால் வருட ஆரம்பம் உத்தராயணகாலத் திலென்றேனக் கூறுகிறார். தற்காலம் பஞ்சாங்க கணிதத்தை விஷுவசங்கராந்தி ரேவதி நட்சத்திரத்தின் முடிவோடு சேருகிறதென்று நினைத்துக் கொண்டே, அஸ்வினியை முதலாக வைத்துக்கொண்டு குறிக்கின்றனர். ஆனால் ஸ்ரீ திலகர், ரேவதியினின்றும் விஷுவசங்கராந்தி ஒதுங்கிப்போய்விட்டபடியால் பஞ்சாங்கக் கணிதக்குறிப்பு சரியான தில்லையென்றும் கூறுகிறார். ஆனால், கி. பி. 490-ம் வருடத்தில் சரியாயிருந்ததென்றும் பிறகு சரியல்லவென்றும் அவர் தெரிவிக்கிறார். வானசாஸ்திர அறிஞர் வராஹமிஹிரர் தோன்றினதற்கு முன்னர் ஏற்பட்டிருந்த கணிதப்படி மக மாதத்தில் மகாசங்கராந்தியுடன் வருடம் பிறக்குமென்று இருந்தது. விஷுவ சங்கிராந்தி பரணிநட்சத்திரத்தின் நான்காம் பாதத்திலும் அல்லது கிருத்திகையின் ஆரம்பத்திலும் இருந்ததென்றும் கூறப்படுகிறது. தைத்திரிய சம்ஹிதையிலும் தைத்திரிய பிராமணத்திலும் நட்சத்திரங்களில் கிருத்திகையே முதல் என்று பல ஆதாரங்களிருக்கின்றன. ஆகவே, தைத்திரிய ஸம்ஹிதை ஏற்பட்டகாலத்தில் விஷுவ சங்கராந்தி கிருத்திகை நட்சத்திரத்தோடு இருந்திருக்கவேண்டும். தைத்திரிய பிராமண நட்சத்திரங்கள் தேவதைகளின் கிருகங்கள் என்றும், தேவதைகளின் நட்சத்திரங்கள் கிருத்திகையை முதலாவதாக கொண்டதென்றும் கூறுகிறது. தைத்திரிய ஸம்ஹிதையானது கிறிஸ்து பிறப்புக்கு 2350-ம் வருடங்களுக்கு முன் உண்டாயிருக்க வேண்டுமென்று ஸ்ரீ திலகர் ஸித்தாந்தப் படுத்தி யுள்ளார். மற்றும் தைத்திரிய ஸம்ஹிதையானது மகமாதத்தில் மகாசங்கராந்தி உண்டாவதென்று கூறினதுடன், வருட ஆரம்பத்தின் பிரதம தினம் பற்



னும் வார்த்தையை ஸ்ரீ திலகர் உபயோகப்படுத்தினார். உடனே, பிரசங்கம் முடிந்ததும் அளவிலா ஆனந்தங் கொண்டு 'ப்யூராக்ரஸீ' என்னும் வார்த்தைக்கு 'நவ்கர் ஷாஹி' என்னும் வார்த்தையே சரியெனத் தீர்மானித்தார். இங்ஙனம், பற்பல நூதன வார்த்தைகளை ஸ்ரீ திலகர் இராஜீயத் துறையில் உபயோகப்படுத்தி மகா சனங்களுக்கு அரசியல் ஞானத்தை யூட்டினார். ஸ்ரீ ரானடே இந்திய பொருளாதார சாஸ்திரத்தில் எப்படி நம்பிக்கை வைத்திருந்தாரோ, அதுபோல இவர் இந்திய சமூக சமத்துவ சாஸ்திரத்தில் நம்பிக்கை வைத்திருந்தார். ஸ்ரீ திலகருக்கு சட்டத்தில் அதிக ஞானமிருந்ததினால், கேஸரி பத்திரிகையை வெகு தைரியமாக நடத்திவந்தார். இங்கிலாந்து முதலிய பல மேனாடுகளில் வழங்கும் பல சட்டங்களையும் இராஜரீக முறையையும், ஸ்ரீ திலகர் நன்கு அறிந்திருந்தார். அரசியல் விஷயமாக ஸ்ரீ திலகருக்கு இருந்த ஞானம் அபாரமானது. இராஜரீக சாஸ்திர விஷயமாக நூலொன்றை எழுதவேண்டுமென்று எண்ணி யிருக்கையில் காலன் வசப்பட்டுக் காலகதி யடைந்தார். மண்டலே சிறையில் ஸ்ரீ திலகர் இருக்கையில் பிரான்சு பாஷையையும் ஜர்மன் பாஷையையும் அபிவிருத்தி செய்தார். ஸ்ரீ திலகர் படித்த கிரந்தங்களுக்குக் கணக்கில்லை. ஸ்ரீ திலகர் படிப்பதும் சிந்திப்பதுமாக இருந்ததினாலேயே அவருடைய வார்த்தைகளொவ்வொன்றும் தர்ம சூத்திரமாக இக்காலத்தவர்களுக்கு இருக்கிறது. இதர புத்தகங்களில் இருக்கும் அன்னிய பொருள்களைக் குறித்துக்கொள்வதென்னும் வழக்கம் ஸ்ரீ திலகருக்கு இல்லை. எல்லாவற்றையும் தம் மூளையில் ஏற்றிக்கொள்வதே அவருடைய ஸ்வபாவம். கேஸரி பத்திரிகைக்குத் தலையங்கம் எழுதுகையில் விஷயங்களுக்கு வேண்டிய மேற்கோள்களைத் தம்முடைய ஞாபகத்தாலேயே எழுதுவர். அது முதற்

னும் சரியாகவே யிருக்கும். ஒரு தரம் ஓர் அருமையான விஷயத்தைப் படித்துவிட்டால், ஸ்ரீ திலகர் இரண்டாம் முறை படிக்கமாட்டார். ஒரே தடவையில் விஷயங்களைக் கிரகிக்கும் அபூர்வமான சக்தி ஸ்ரீ திலருக்கு இருந்தது. ஸ்ரீ திலகர் தம்முடைய உதவிபத்திரி காசிரியர்களுக்குக் கூறும் புத்திமதி வெகு முக்கியமானது. நன்றாகப் படித்தவர்களுக்கு நீங்கள் எழுதுவதில்லை யென்றும், சாமானிய கிராமவாசிகளுக்கே நீங்கள் எழுதுகிறீர்களென்றும் உணர வேண்டும். சமஸ்கிருத வார்த்தைகளை உபயோகப்படுத்தாதீர்கள். புள்ளிக் கணக்குகளைக் கூறுவதை இயன்றவரை தவிர்த்து, நேருக்கு நேரே குறிப்புகளைக் கூறுங்கள். உங்களுடைய வசனநடை மிகவும் எளியதாகவும் சாமானியமாக வீட்டில் பேசுவதுபோலவு மிருக்கவேண்டும். பகல் வெளிச்சம்போலப் பிரகாசமாக இருக்கவேண்டும். வார்த்தைகளின் அர்த்தங்கள் கடினமாகவும் பலருக்குப் புலப்படாமலு மிருக்கக்கூடாது. என்றிவ்வாறு ஸ்ரீ திலகர் தம்முடைய உதவி பத்திரிகாசிரியர்களுக்குக் கூறுவார். கேஸரி பத்திரிகையின் பாஷா நடையையே மகாராஷ்டிரத்திலுள்ள மற்ற மராடி பத்திரிகைகள் அவலம்பித்து வந்தன. கேஸரி பத்திரிகையின் வியாசங்கள் ஒவ்வொன்றும் சாஸ்திர வசனமாகவே யிருக்கும். மகாராஷ்டிரத்தில் இப்பொழுதுள்ள இராஜீய உணர்ச்சிக்குக் காரணம் ஸ்ரீ திலகரும் கேஸரியுமேயாம். நிற்க, ஸ்ரீ திலகர் எழுதிய முதல் இரண்டு நூல்களைப்பற்றி சிறிது ஈண்டு குறிப்போம்.

## மிருகசீருடம் (Orion)

மிருகசீருடம் என்னும் நூலிலுள்ள சில முக்கிய குறிப்புகளைமட்டும் நாம் அறிவோம். வேதங்களின் காலத்தைப் பலர் பலவிதமாக நிர்ணயித்திருக்கின்றனர். இவ்



குனி பௌர்ணமியும் சித்திரை பௌர்ணமி என்றும் கூறுகிறது. வருட ஆரம்பத்தில் இவ் 1 மாதகால அளவு இரண்டு பௌர்ணமிக்கும் மத்தியில் ஏற்பட மாட்டாது. பங்குனி பௌர்ணமியைக் கொண்டு வருடப் பிறப்பு ஏற்படுமானால், விஷுவத்காலத்தி மிருக சிருட நக்ஷத்திரத்திலேயே யிருக்கவேண்டும். அப்பொழுது தான் தேவயானம் பிறக்கிறது. மிருக சிருடத்திற்கு முன் புனர்வஸு என்றும் புனர்வஸுவுக்கு அதிகார தேவதை அதிதி என்றும், சகல யாகங்களும் யக்ஞங்களும் இந்த தேவதையினின்றுமே ஆரம்பித்துக் கடைசியாக அங்கேயே முடிவு ஆகவேண்டு மென்றும் கூறப்படுவதால், ஆரியர்களின் நாகரிகத் தொன்மை அதிதியின் காலத்தைக் கணக்கிட்டு கிறிஸ்து பிறப்புக்கு 6000 வருடத்திற்கும் 4000 வருடத்திற்கும் இடையே யிருக்கவேண்டு மென்றும்; ஸ்ரீ திலகர் கூறியுள்ளார். மிருக சிருட நக்ஷத்திர காலம் சுமார் கிறிஸ்து பிறப்புக்குமுன் 4000 வருடத்திலிருந்து 2500 வருடங்களுக்குள்ளே யிருக்க வேண்டு மென்றும், வேதாங்க ஜோதிஷம் கிறிஸ்து பிறப்புக்குமுன் 2500 வருடங்களிலிருந்து 1400 வருடங்களுக்குள்ளே யுண்டாயிருக்க வேண்டுமென்றும், ஸமஸ்கிருத கிரந்தகாலம் கிறிஸ்து பிறப்புக்குமுன் 1400 வருடங்களிலிருந்து 500 வருடங்களுக்குள்ளே யிருக்கவேண்டு மென்றும் ஸ்ரீ திலகர் சித்தாந்தப் படுத்தினார். ஆகவே, ஆரியர்களின் பழைய நாகரிகப் பிறப்பு கிறிஸ்து பிறப்புக்கு 6000 வருடங்களுக்கு முன்னரே யுண்டாயிற்றென ஸ்ரீ திலகர் நிச்சயப்படுத்திக் கூறியுள்ளார்.

## வேதங்களிலுள்ள ஆரியர்களின் உத்தர துருவவாஸம்.
## (Arctic Home in the Vedas)

சரித்திர ஆராய்ச்சிக்கு முன் மனித இருப்பிடத்தைப்பற்றி

யறிய புராணங்கள், கதைகள், கர்ண பரம்பரையாக வந்த மகான்மியங்கள் ஆகிய இவைகளையே ஆதாரமாகப் பலர் கொண்டிருந்தனர். பௌராணிகர்கள் மட்டும் தங்கள் ஆராய்ச்சியை கிருதை காலத்திற்குப் பின்னால் நிறுத்தி, பூர்வ மனிதன் தற்காலத்திலுள்ள மனிதனைவிட அதிகமான வித்தியாசத்தை யடையவில்லை யென்று கூறினர். 19-வது நூற்றாண்டின் இடைகாலத்தில் ஏற்பட்ட ஆராய்ச்சியின் பயனாகப் பூமியில் தோண்டப்பட்டதில் பல கத்திகள், ஆயுதங்கள், வெண்கல சாமான்கள் அகப்பட்டன. ஆராய்ச்சிக்காரர்கள், சரித்திர காலத்திற்குமுன் ஏற்பட்ட இரும்பு யுகம், வெண்கல யுகம், சிலாயுகம் ஆகிய அக்காலங்களிலிருந்த சாமான்களாக விருக்கவேண்டு மென்று தீர்மானித்தனர். ஆகவே, மனிதன் கிருதைகாலத்திலும் கிருதை காலத்திற்கு முன்னும் இருந்ததாகத் தெரியவந்ததால், ஆரியர்களின் துருவ நிவாசத்தைப்பற்றி ஆராய்வோம். வேதத்திற் கூறப் படும் சில ரிக்குகளின் பொருளை யறிந்தால், வேதகாலத்து மனிதர்கள் கிருதை காலத்திற்கு முன்னர் வட துருவத்திலும் வட துருவத்தைச் சேர்ந்த பக்கங்களிலும் வசித்திருந்த தாகத் தெரியவருகிறது. பூர்வகாலத்தில் வசித்த மனிதர்கள் தங்கள் ஞாபகத்தின் பொருட்டுப் பல சாமான்களை ஆதார மாகப் பூமியில் விட்டுவிட்டுப் போயினர். அவைகளைக் கண்டு பிடித்த ஆராய்ச்சிக் காரர்கள் சிலா காலமே எல்லாக் காலத் திலும் மிக்க பழமையானதென்று நிர்ணயித்தனர். பற்பல ஆராய்ச்சிக் காரர்கள் பூர்வ மனிதர்களின் காலத்தைக் குறிக் கிட்டுப் பல பல மாதிரியாகக் கூறியிருக்கின்றனர். சிலர் கிறிஸ்து பிறப்புக்குமுன் 5000 வருடங்கள் என்பார்; பண்டி தர் லைகி என்பவர் 50 ஆயிரத்திற்கும் 60 ஆயிரத்திற்கும் இடையே ஏற்பட்ட வருடங்கள் என்று கூறினார்; அமெ ரிக்கா ஆராய்ச்சிக்காரர்கள் சிலர் கிறிஸ்து பிறப்புக்குமுன்,



8000 வருடங்கள் என்றார். பூர்வம் ஐரோப்பாவில் வசித்து வந்தவர்களின் மண்டை ஓடுகள் முதலியவைகள் அகப்பட்டு ஆராய்ச்சி செய்ததில், இப்பொழுது ஐரோப்பாவில் பல தேசங்களில் வசிப்பவர்கள் அவர்களுடைய சந்ததியார்க ளென்பது தெரியவருகிறதென நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், ஆரியர்களின் வழி தெரியவில்லை. அவர்கள் ஐரோப்பாவி லாவது அல்லது மத்திய ஆசியாவிலாவது வசித்து வந் தார்கள் என்று சொல்லமுடியாது. ஆனால், அவர்கள் வட துருவத்தில் வசித்து யக்ஞ யாகாதிகளை யனுஷ்டித்து வந் தார்க ளென்றும் பிறகு, சீதோஷ்ண ஸ்திதியின் மாறுபாட்டி னால், அவ்விடத்தில் வசிக்கவும் யாகாதிகள் செய்யவும் ஏற்ற நிலைமையாக யில்லையெனக் கண்டு, அவ்விடத்தை விட்டுவிட் டுத் தட்சிண திசை நோக்கிவந்தனர் என்று கூறப்படுகிறது. சதபத பிராமணம், தைத்திரிய சம்ஹிதை, சூரிய சித்தாந் தம் ஆகிய இவைகளை ஆதாரமாகக்கொண்டும் ரிக்வேதம் முதலிய வேதங்களை ஆதாரமாகக் கொண்டும், இந்திரனுக் கும் விருத்திராசுரனுக்கும் நடந்த யுத்தத்தை ஆதாரமாகக் கொண்டும் ஸ்ரீ திலகர் பல ஆராய்ச்சி மேற்கொள்கைகளைக் கொண்டு பூர்வம் வேதகாலத்து ஆரியர்கள் வட துருவ ப்ரதேசத்தில் நிவாசஞ்செய்து வந்தார்களென சித்தாந்தப் படுத்தினர்.

## 7. பாரத ஜனசபை பிரவேசம்

பால கங்காதர ஸ்ரீ திலகர் தம்முடைய நண்பர்களுடன் 'தட்சிணை வித்யாசங்கத்தில் அபிப்பிராய பேதங்கொண்டு விலகினதும் 1889-ம் வருடத்தில் முதல் முதல் பாரத ஜன சபைக்குள் பிரவேசித்தார். ஸ்ரீ திலகர் காங்கிரஸ் மகா சபையின் அழிவைத் தேடினவரென்றும், காங்கிரஸ் சபைக்குள் சதா கலகத்தை யுண்டுபண்ணி மனஸ்தாபத்தை வளர்த்தவரென்றும், விருதா கவர்ன்மெண்டாரின் கோபத்தை மூட்டிப் பாரத சமூகத்தை அல்லோல கல்லோலப்படுத்தியவரென்றும் மிதவாதிகள் பலர் சதா கூறிக்கொண்டிருக்கின்றனர். புனாநகரில் 1895-ம் வருடத்தில் நடந்த காங்கிரஸ் மகா சபையில் சீர்திருத்தக்காரர்களுக்கும் ஸ்ரீ திலகருக்கு முண்டான சச்சரவையும் சூரத் நகரில் காங்கிரஸ் பிளவு பட்டதைப் பற்றியும் ஸ்ரீ திலகர்மீது வீண் பழி சுமத்தி மிதவாதிகள் அவரைக் குறை கூறியே வந்தனர். அவைகளின் உண்மையைச் சரித்திர பூர்வமாக நாம் அறிந்தால் உண்மை புலப்படும். ஸ்ரீ திலகர் காங்கிரஸ் மகா சபையை எங்ஙனம் அபிவிருத்தி செய்தாரென்றும், காங்கிரஸ் சபையைப்பற்றிக் கிராமத்தார்களும் அறிந்துகொள்ளும்படி பலமான பிரசாரம் எங்ஙனம் செய்து அச்சபைக்கு மரியாதையை யுண்டுபண்ணினுரென்றும், காங்கிரஸ் மகா சபையை உண்மையான பாரத ஜன சபையாக்க ஸ்ரீ திலகர் மிதவாதிகளை எங்ஙனம் தூண்டி வந்தாரென்றும், அங்ஙனம் அவர் தூண்டியும் மிதவாதிகள் சற்றேனும் அவர் வழி வாராமல் அவரை எதிர்க்க எங்ஙனம் பாடுபட்டனரென்றும், சூரத் நகரில் நடந்த காங்கிரஸ் சபை எப்படி யாரால் பிளவு உண்டாக்கப்பட்டதென்றும், சூரத்



பிளவுக்குப் பிறகு காங்கிரஸ்சபை எங்ஙனம் உறக்கங்கொண்டிருந்ததென்றும், மீண்டும் ஸ்ரீ திலகரின் பிரவேசத்தால் 1916-ம் வருடத்திலிருந்து பாரத ஜனசபை எங்ஙனம் நாட்டின் நாயகமாய் விளங்கி வருகிறதென்றும் நாம் அறிய வேண்டும். ஸ்ரீ திலகர் முதல் முதல் வித்யாபிவிருத்தித் துறையில் பத்துப் பன்னிரண்டு வருடகாலம் உழைத்து வந்தார். பிறகு இராஜீயத்துறையில் இறங்கினார். ஒரே காலத்தில் எல்லாத் துறைகளிலும் இறங்கி, ஒன்றையுஞ் சரிவரச் செய்யாமல் இலர் இருப்பதுபோல ஸ்ரீ திலகர் இருக்க மாட்டார். ஒரு சமயத்தில் ஒன்றையே செய்யவேண்டுமென்னும் உறுதி அவரிடம் இருந்தது. வித்யா அபிவிருத்தித் துறையில் உழைத்த காலத்தில் இராஜீய விஷயங்களையும் மற்று சீர்திருத்த விஷயங்களையும் அவர் கவனிக்கவில்லை. வித்யா அபிவிருத்தித் துறையை விட்டு விட்டு இராஜீயத் துறையில் இறங்கினதும், அவர் தம் மாணவரியத்தும் அத்துறையை விடாமற்படி ஜனங்களால் பூசிக்கப்பட்டவராய் இருந்தார். ஆசார சீர்திருத்த விஷயத்தில் ஸ்ரீ திலகருக்கு அதிக நம்பிக்கையில்லை. இராஜீய உணர்ச்சி பெருகினால் ஆசார சீர்திருத்தம் தானாகவே உண்டாகும் என்பதே அவருடைய நம்பிக்கை. அந்த நம்பிக்கை யொன்றையே பற்றி ஸ்ரீ திலகர் முதல் முதல், 1889-ம் வருடத்தில் பம்பாய் நகரில் ஸர் வில்லியம் வெடர்பர்ன் அவர்களுடைய அக்கிராசனத்தின்கீழ் கூடின பாரத ஜனசபையில் புனா பிரதிநிதியாகப் பிரவேசித்தார். அவ்வருடம் சட்டசபைகளின் விரிவைப்பற்றிய தீர்மானத்தை அவர் ஆதரித்துப் பேசினார். 'சட்ட சபைகளின் விரிவும் சீர்திருத்தமும்' என்னும் தீர்மானத்தை நார்டன் துரை பிரேரேபித்துப் பிறகு பண்டிதர் அயோத்திய நாதர், பண்டிதர் பிஷன் நாராயணதார், பாதிரி ராமசந்திர போஸ், ஜீ. ஸுப்பிரமணி

ஜியர், விபின சந்திரபாலர், லாலா லஜபதிராய், பண்டித் மதன் மோகன் மாளவியா, பாபு சுரேந்திரநாத பானர்ஜி முதலானோர் ஆமோதித்தும் ஸ்ரீ திலகர் ஒரு சிறிய திருத்தத்தைக் கொண்டு பேசினார். 'இராஜப் பிரதிநிதி சட்டசபைக்கு மாகாண சட்டசபையில் தேர்ந்தெடுக்கப் பட்ட அங்கத்தினர்களின் மூலமாகத் தேறுதல் உண்டாக வேண்டு' மென்பதே ஸ்ரீ திலகருடைய திருத்தப் பிரேரே பணை. பிறகு 1891-ம் வருடத்தில் நாகபுரியில் ராவ் சாஹிப். பி. ஆனந்த சார்லு அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் கூடின காங்கிரஸ் மகாசபையில் 'ஆயுதச் சட்டத்தைப் பற்றிய விதிகள்' என்னும் ஒரு தீர்மானத்தை ஸ்ரீ திலகர் பிரேரேபித்துப் பேசினார். 1893-ம் வருடத்தில் லாகூர் நகரில் தாதாபாய் நௌரோஜியின் அக்கிராசனத்தின் கீழ் கூடின மகாசபையில் 'சாசுவித நிலத்தீர்வை' விஷயமாக ஒரு தீர்மானத்தை பீடர்பால் பிள்ளை பிரேரேபித்து, பாபு வைகுண்டநாதசேனர், ஷைக்வாசெப்புதீன் ஆமோதித்ததை ஸ்ரீ திலகர் பம்பாய் மாகாணத்திற்காக அதை ஆமோதித்தார். 1895-ம் வருடத்தில் புனாநகரில் கூடின காங்கிரஸ் மகாசபை வெகு சிறப்பாக சுரேந்திரநாத பானர்ஜியின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. அந்த காங்கிரஸ் விஷயமாக புனாநகரில் சீர்திருத்தக்காரர்களுக்கும் ஸ்ரீ திலக ருக்கும் ஏற்பட்ட சச்சரவைக் கவனிப்போம். புனாநகரில் சில காலமாக ஆசாரசீர்திருத்தக்காரர்களுக்கும் வைதிகர் களுக்கும் பலமான அபிப்பிராயபேதம் உண்டாகி வந்தது. ஸ்ரீ திலகரோ ஆசாரசீர்திருத்தக்காரர்களின் வழியையும் வைதிகர்களின் வழியையும் அநுசரிக்கவில்லை. ஆசாரசீர் திருத்தக்காரர்களின் வீண்டம்ப வார்த்தைகளையும் வைதிகர் களின் மூர்க்கத் தன்மையையும் ஸ்ரீ திலகர் நன்கு அறிந்து அவ்விரண்டுக்கும் இடையே பொதுவான ஒரு தர்ம வழி



யைப்பற்றி வந்தார். ஸ்ரீ திலகருடைய வழி வைதிகர்களும் ஆசாரசீர்திருத்தக்காரர்களும் அநுசரிக்கக் கூடியதாகவே யிருந்தது. என்றாலும், ஸ்ரீ திலகரை எப்படியாகிலும் முன் னுக்கு வரவொட்டாமற்படி தடுப்பதே முக்கிய கடமையாக ஆசாரசீர்திருத்தக்காரர்கள் கொண்டிருந்ததால், புனாநகரில் நடக்க காங்கிரஸுக்கு முன் சில ஆசாரசீர்திருத்தக்காரர்கள் வீணாக ஆசாரசீர்திருத்த கான்பரன்ஸும் காங்கிரஸ் மண்ட பத்திலேயே நடக்கும் என்று வைதிகர்களுடைய ஆத்தி ரத்தைக் கிளப்பிவிட்டனர். ஸ்ரீ திலகர் காங்கிரஸ் விஷயத் தையே முக்கியமாகக் கருதியிருந்ததால், ஆசாரசீர்திருத்தக் காரர்களின் விஷமத் தனமான அறிவிப்பு காங்கிரஸ் நட வடிக்கைகளைப் பாதிக்கும் என்று வெகு பலமாக ஆசாரசீர் திருத்தக்காரர்களைக் கண்டித்தார். ஸ்ரீ திலகர் கண்டிக்க முன் வரவே, ஆசார சீர்திருத்தக்காரர்கள் தங்கள் வசைமொழிப் பாணத்தைப் பிரயோகம் செய்தார்கள். ஸ்ரீ திலகரை வேண்டுமென்றே துன்புறுத்துவதில் சந்தோஷங்கொண் டிருந்தவர்களைப் புனாநகரில் 'ஸ்ரீ திலகரைத் துன்புறுத்துஞ் சங்கம்' என்று வேடிக்கையாகப் பலர் அந்நாளில் கூறி வந் தனர். ஸ்ரீ திலகருக்கும் ரானடே அவர்களுக்கும் அந்நாளில் ஏற்பட்டிருந்த வித்தியாசத்தை ஸ்ரீ திலகர் பம்பாயில் பிர சுரமாகும் டைம்ஸ் பத்திரிகைக்கு எழுதினதை 1895-ம் வரு டம் நவம்பர் மாதம் 8-ந் தேதி 'மராட்டா பத்திரிகை' பிரசுரித் தது. அது பின் வருமாறு:—

'வைதிகனாயினும் லௌகிகனாயினும், ஆசார சீர்திருத் தக் காரனாயினும் அல்லது விரோதக் கட்சிக்காரனாயினும் ஒவ்வொருவனும் காங்கிரஸில் சேர்ந்து அதை ஆதரிக்க வேண்டும், ஜனங்களுக்குள் பெரும்பாலார் காங்கிரஸில் சேர்ந்து அதை ஆதரிக்க வேண்டும். ஜனங்களுக்குள்ளே பெரும்பாலார் காங்கிரஸில் சேராமற்போனால், காங்கிரஸ்

வெகு நன்றாக புனா நகரில் நடைபெற்றதெனக் கூற முடியாது. வியாபாரிகளையும், தொழிலாளர்களையும், கைவினைஞர்களையும், படித்தவர்களையும் நாம் வெகு சாக்கிரதையாக அவர்களுடைய மனம் புண்ணாகாமற்படியும் அவர்களுடையக் கொள்கைக்கு விரோத மில்லாமற்படியும் வெகு சாக்கிரதையுடன் காங்கிரஸ் மகா சபைக்குப் பணம் திரட்ட அவர்களை நாம் நெருக்கவேண்டும். காங்கிரஸ் மகா சபையானது உண்மையில் ஜனங்களுடைய மகா சபையாகவிருக்க நோக்கம் கொண்டிருப்பதால், அந்த நோக்கம் நிறைவேறும் வண்ணம், எந்த ஜனங்களின் ஆதரவையும் உதவியையும் இதுகாறும் கொள்ளாமல் இருந்ததோ அந்த மகா ஜனங்களின் ஆதரவையே பற்ற காங்கிரஸ் மகா சபை பிரதி வருடமும் அத் துறையில் பாடு படவேண்டும். மகா ஜனங்கள் காங்கிரஸ் மகா சபையை பகிஷ்கரிக்க இடங்கொடுத்தால், அவர்கள் ஆசார சீர்திருத்த இயக்கத்தை ஆதரிக்காமலிருக்கக் கூடும்; ஆகவே, இந்த ஒரு பயத்தையே கொண்டு ஆசார சீர்திருத்தக்காரர்கள் காங்கிரஸ் மகா சபையைத் தங்கள் இனத்தைச் சேர்ந்தவர்களுடைய ஆதீனத்திலேயே வைத்துக்கொண்டிருக்கின்றனர். ஆசார சீர்திருத்த விஷயமாயினும் எந்த விஷயமாயினும் சரி, அதைப் பொருட்படுத்தாமல் சர்வ ஜனங்களும் காங்கிரஸ் மகா சபையில் சேர்ந்து அதை ஆதரிக்கும்படி செய்ய வேண்டுமென்று ஒரு கட்சி எண்ணுகிறது; மற்றொரு கட்சியோ ஆசார சீர் திருத்தத்தை ஆதரிப்பவர்களுக்குப் புறம்பாக காங்கிரஸ் சபை போகக்கூடாதென்று எண்ணுகிறது. புனாவில் நடைபெறும் காங்கிரஸ் மகா ஜனங்களின் காங்கிரஸ் சபையா, அல்லது ஆசார சீர்திருத்தக்காரர்களைச் சேர்ந்த இனத்தாரின் காங்கிரஸ் சபையா வென்பதே இப்பொழுது உண்டான பிரச்னை. பொதுஜன அபிப்பிராயத்தை மதித்து



காரியங்களை நடத்த ஆசார சீர்திருத்தக்காரர்களுக்கு இஷ்டமில்லாமல் பொது ஜனங்களின் வார்த்தையை அலட்சியஞ் செய்து பலாத்காரத்தைப்பற்றி காங்கிரஸ் சபையில் பிளவு உண்டாக்க விரும்புவார்களானால், அவ்வண்ணம் காங்கிரஸில் பிளவு உண்டாக்க நான் எப்பொழுதும் சம்மதியேன்.

இப் பெருந் தன்மையான மொழிகளை எத்தனை மிதவாதிகள் படித்து ஆலோசித்திருப்பார்கள்? புனா நகரில் காங்கிரஸ் கூட்டும் விஷயமாகச் செய்யவேண்டிய ஏற்பாடு [illegible]களிடமே வைத்துவிடு மென்று ஆசார சீர்திருத்தக்காரர்கள் களித்தனர். காங்கிரஸ் நிர்வாக கமிட்டியில் ஆசார சீர்திருத்தக்காரர்களே பெரும்பான்மையோராக விருப்பதென்னும் தைரியத்தைக் கொண்டு அவர்கள் தங்கள் இஷ்டப்படி செய்ய வாரம்பித்தனர். ஆனால், ஸ்ரீ திலகரோ அதற்குச் சற்றேனும் இடங்கொடுக்காமல், நிர்வாக கமிட்டியில் இரு கட்சியினரும் சம எண்ணிக்கையைக் கொண்டிருக்க வேண்டுமென்று வற்புறுத்தினர். ஆசார சீர்திருத்தக்காரர்களுக்கு இன்ன செய்வதெனத் தெரியவில்லை; கடைசியாகக் காரிய கமிட்டி யொன்றை ஏற்படுத்தி அதில் சம எண்ணிக்கையுள்ள இரு கட்சியினர்களையும் நியமித்தனர். ஆசார சீர்திருத்தக் காரர்கள் இதைக் கண்டு சகிக்காமல் சூழ்ச்சி செய்ய வாரம்பித்தனர். உடனே, ஸ்ரீ திலகரை அசந்தர்ப்பமான நிலைமையில் சிக்கவைக்க வேண்டுமென்று கருதி, காங்கிரஸ் பந்தலிலேயே ஆசார சீர்திருத்த கான்பரன்ஸும் நடக்கப் போவதென பறை சாற்றினர். வைதிக கோஷ்டிக்குத் தலைவராயிருந்த ஸர்தார் பாலாசாகெப் நாட்டு அவர்களும் அவரைச் சேர்ந்த சில வைதிகர்களும் ஒன்று சேர்ந்து காங்கிரஸ் பந்தலில் ஆசார சீர்திருத்த கான்பரன்ஸ் நடக்கக் கூடாதென ஓர் அறிக்கையை வெளியிட்டனர். உடனே, வைதிக கோஷ்டியில் இரு கட்சியுள்

டாயிற்று. 1886-ம் வருடத்தில் தாதாபாய் நௌரோஜி யின் அக்கிராசனத்தின் கீழ் நடந்த கல்கத்தா காங்கிரஸ் மகா சபையில் அவ் வருஷம் பெருந் தலைவரான, ஆசார சீர் திருத்த விஷயத்தைப்பற்றி சோஷலோ அல்லது மதை வாகவோ காங்கிரஸுக்கு ஆகவேண்டிய தொன்றுமில்லை யென்று கூறி யிருந்ததை வைதிக பத்திரிகைகள் பிரசுரித் தன. '1887-ம் வருடம் முதல் 1894-ம் வருடம் வரை ஆசார சீர்திருத்த கான்பரன்ஸ் காங்கிரஸ் மகா சபையின் வாலைப் பிடித்துக்கொண்டே நடந்தது' என விலாயத்தில் பிரசுரிக்கப்பட்டு வந்த 'ஹோப்' என்னும் பத்திரிகை கூறிற்று. நிற்க, மூட்டுத்தனம் எப்படி மூட்டுத் தனத்தை விர்த்தி செய்த தென்பதைக் கவனிப்போம். 'அங்கீகார வயது சட்டத்' (Age of Consent Bill) தைப் பற்றி பல மான அபிப்பிராய பேதம் உண்டாயிருந்த காலத்தில், காங் கிரஸ் மகா சபைக்குத் தந்தையெனக் கூறப்படும் ஏ. ஓ. ஹியூம் அவர்கள் 'பாரத ஜன சபையைச் சேர்ந்த பெரும் பாலரான பிரமுகர்கள் அங்கீகார வயது சட்டத்தை எதிர்த்தால், காங்கிரஸ் சபையை விட்டு நீங்குவேன்' என்று பயமுறுத்தினார். மற்றும் 'காங்கிரஸ் சபையானது நேர்மையான வழியிற் செல்லாமல் அராஜக வழியில் செல்ல மனங் கொண்டிருக்கிறதென நான் தெரிவிப்பேன்' என்று கூறினதாகவும், அதன்பேரில், ரானடே, மேடா, கோகலே முதலானோர், ஸ்ரீ திலகரையும் அவர் வழியாகக் கருது பவர்களையும் புறக்கணிக்க நிச்சயித்தன ரென்றும் கூறப்படு கிறது. இந்த கூற்று எவ்வளவு தூரம் உண்மையோ நாம் அறியோம். ஹியூம் துரை காங்கிரஸ் சபையைவிட்டு நீங் குவதற்காக ஒருவர் தம் மனச்சாட்சியையும் மதக்கொள்கை யையும் விற்பது மிகவும் இழிவானது. ஆசார சீர்திருத் தத்தை யொட்டி ஹியூம் துரையின் பய முறுத்துதலினால்



இந்தியாவுக்கு வரும் இராஜீய சுதந்தரம் தடைபடுமானால், அச்சுதந்தரம் அரைக்காசுக்கும் பிரயோசனப் படாதென் பதே ஸ்ரீ திலகர் முதலானோருடைய கொள்கை. ஆசார சீர்திருத்தக்காரர்களை முன்னிட்டு ஹியூம் அவ்வண்ணம் தீவிரமாக ஒருபுறஞ் சென்றால், வைதிகர்களை முன்னிட்டு ஸர்தார் பாலசாஹிப் நாட்டு மற்றொருபுறஞ் சென்றது அநி யாயமா? நிற்க, ஸ்ரீ திலகர் காங்கிரஸ் சபையில் பிளவு உண்டா காதபடி ஒரு யோசனை சொன்னார். காங்கிரஸ்சபை மண்ட பத்தில் ஆசார சீர்திருத்த கான்பரன்ஸ் நடப்பதும் நடக்காத தும் என்னும் விஷயமாக காங்கிரஸ் சபையேனும் அல்லது வரவேற்பு கமிட்டி, அங்கத்தினர்களேனும் தீர்மானஞ்செய் யட்டும் என்று ஸ்ரீ திலகர் கூறியும், ஆசார சீர்திருத்தக் காரர் கள் கவனியாம லிருந்துவிட்டனர். நாட்டு வகையாரையே ஸ்ரீ திலகர் ஆதரித்து வருகிறாரென்று சீர்திருத்தக் காரர்கள் ஒரு பொய் வதந்தியையும் கட்டிவிட்டனர். ஆசார சீர்திருத் தக் காரர்களில் காவிநாத பண்ட் நாட்டு, கேசவராவ் பட் வர்த்தன் இவர்கள் காங்கிரஸ் மண்டபத்தில் ஆசார சீர் திருத்த கான்பரன்ஸ் நடைபெறுமற் போனால் நாங்கள் பணம் கொடுக்கமாட்டோம் என்றார்கள். இவ்விஷயமாக ஸ்ரீ திலகரை சீர்திருத்தக்காரர்கள் தூற்றினர். தவிர, காங் கிரஸ் ஏற்பாடு விஷயமாக ஸ்ரீ திலகர் யாதொன்றும் செய்ய வில்லை யென்று மற்றொருபக்கம் அவதூறு கூறி வந் தனர். செப்டம்பர் மாதத்திற்கூட காங்கிரஸ் பந்தல் தயாராக வில்லை என்று ஜனங்கள் குறை கூறுகின்றனரென்று சீர் திருத்தக்காரர்கள் கூக்குரலிட்டனர். அதற்கு ஸ்ரீ திலகர் மழைகாலம் நின்றவுடன் பந்தல்வேலை வெகு மும்முரமாக ஆரம்பித்து ஒன்றரை மாதத்திற்குள் முடித்துவிடுவேன் என்றார். நாற்காலிகளைப் பற்றி என்ன? என்று கேட் டனர். ஒருவார அறிவிப்பில் பம்பாயிலிருந்து கணக்

கற்ற நாற்காலிகள் வரும் என்று ஸ்ரீ திலகர் கூறினார். இச்சா சேவகர்களைப் பற்றி என்ன? என்றனர். டிசம்பர் மாதம் 15-ம் தேதிக்குமுன் அவர்கள் தேவையில்லையென்று ஸ்ரீ திலகர் கூறினார். அப்படியிருந்தும் காரியகமிட்டிக்குப் பல சீர்திருத்தக்காரர்கள் அடிக்கடி பிராது செய்து கொண்டிருந்தனர். ஸ்ரீ திலகர் ஏற்கனவே, காங்கிரஸ் நடக்கவேண்டிய இடத்தை வாங்கி பந்தல்போட வேண்டிய மாதிரியைத் தயாரித்து பந்தலுக்குப் பிடிக்கும் தொகையையும் திட்டமாக மதிப்பிட்டு, சுற்றுக் கடிதங்களைப் பலருக்கு வெளியூர்களிலிருப்பவர்களுக்கு அனுப்பி, பல மனிதர்களை நிதி திரட்ட அனுப்பி வந்ததுந் தவிர, கொஞ்சம் தொகையையும் ஏற்கனவே திரட்டியும் வைத்திருந்தார். 1894-ம் வருஷத்தில் நடந்த சென்னை காங்கிரஸ் மகா சபைக்குச் செய்ய வேண்டிய காரியங்கள் செப்டம்பர் மாதத்தில் எவ்வளவு நடந்ததோ அதற்குமேல் புனேயில் நடந்ததென்று ஸ்ரீ திலகர் காண்பிக்கவே, காரிய கமிட்டியிலிருந்த சீர்திருத்தக்காரர்கள் மௌனஞ் சாதித்தனர்.

பின்பு, ஸ்ரீ திலகர் காங்கிரஸுக்கு நிதி திரட்ட வெளியூர்களுக்கு இரண்டொரு வாரம் போயிருந்தார். அவர் புனேயில் இராததைக் கண்ட மற்ற சீர்திருத்தக்காரர்கள் அவருடைய வீட்டிலேயே யிருந்த காங்கிரஸ் ஆபீஸை வேறொரு இடத்திற்கு மாற்றினார். உட்பிரிவு கமிட்டிகளில் சீர்திருத்தக்காரர்களே ஸ்தானம் பெற்று விளங்கினர். 50 ரூபாய் காங்கிரஸுக்குக் கொடுக்கும் கனவான் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு 'வோட்' உண்டு என ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்ததை மாற்றி, 50 ரூபாய்க்கு மேலே கொடுப்பவர்கள் தங்களுக்காக வோட் செய்வதுடன் அவர்களுடைய மனைவி மக்களுக்காகவும் வோட் செய்யலாமென்று தீர்மான மொன்றைப் பிறப்பித்தனர். இதுபோன்ற அதிசயம் எங்கும்



கண்டதில்லை. ஒருவன் 50 ரூபாய்க்கு மேலே கொடுப்பதினால் அவன் தம்வீட்டிலுள்ள எல்லோருக்கும் வோட் உரிமை பெற்றவனாகிறா னென்பது இதுவரை எங்கும் கேள்விப் பட்டதில்லை. ஸ்ரீ திலகர் தம் சுற்றுப்பிரயாணத்தி லிருந்து திரும்பிவந்ததும் நடந்த விஷயங்கள் ஒவ்வொன்றையும் எழுதி அச்சிட்டு காங்கிரஸ் தலைவர்களுக்கும் காங்கிரஸ் மகா சபைக்கு அனுகூலமாயுள்ள எல்லா சபைகளுக்கும் வெளியூர்களிலுள்ள பல கனவான்களுக்கும் சுற்றுக்கடிதம் அனுப்பினார். அக்டோபர் மாதம் 22-ம் தேதி நடந்த பொதுசனக் கூட்டத்தில் ஸ்ரீ திலகர் ஒவ்வொன்றையும் குறிக்காமற்படி சனங்களறியக் கூறினார். சீர்திருத்தக் காரர்களே பெரும்பாலும் எல்லா உட்பிரிவு கமிட்டிகளில் பெருவாரியாக ஸ்தானம் பெற்றதால், புதிய வரவேற்பு கமிட்டியொன்று கூடி சம எண்ணிக்கையுள்ள அங்கத்தினர்களைத் தெரிந்தெடுக்க வேண்டுமென்று அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. சீர்திருத்தக்காரர்கள் ஸ்ரீ திலகரின் வழியைக் குறைகூறி நிர்வாக கமிட்டிக்கு மனுசெய்துகொண்டனர். நிர்வாக கமிட்டியார் அவர்களுடைய வழக்கைத் தீர்க்க, ஒரு வழியைக் காட்டி முடிவுசெய்தனர். இரு கட்சியிலும் ஒவ்வொரு காரியதரிசி யாக இரு காரியதரிசிகள் புனேவுக்கும், மூன்று காரியதரிசிகள் பம்பாயிக்கும் ஆக நான்கு காரியதரிசிகள் மற்ற வேறு சில பேர்களாக அங்கத்தினர்களைச் சேர்த்து சகல வேலைகளையும் செய்யவேண்டுமென்று தீர்ப்பு செய்தனர். சீர்திருத்தக் காரர்களின் தீர்ப்பு நடுநிலைமையற்றதைக் கண்ட ஸ்ரீ திலகர் மனம் வருந்தினார். பிறகு பலருடைய வேண்டுகோளுக் கிணங்கி ஸ்ரீ திலகர் காரியதரிசியாக யிருக்க ஒத்துக்கொண்டார். ஆனால், கமிட்டியிலுள்ள மெம்பர்கள் ஸ்ரீ திலகரைப் புறக்கணித்து அவருடைய அபிப்பிராயத்தைக் கேட்காமல் ஒவ்வொன்றையும் இஷ்டப்படி செய்து வருவதைக் கண்ட

ஸ்ரீ திலகர் 'இனி கமிட்டியில் காரியதரிசியாக இருக்க முடியாது' என்று தீர்மானித்து உடனே, நவம்பர் மாதம் 4-ந் தேதி ஸ்ரீ திலகர் காரியதரிசி பதவியை இராஜிநாமா செய்தார். சீர்திருத்தக்காரர்களோ தாங்கள் வெற்றியடைந்ததைக்கண்டு சந்தோஷித்தனர். என்றாலும், அவர்களுக்குப் பயம் நீங்கவில்லை. காரியதரிசியைவிட்டு விட்டாலும் ஸ்ரீ திலகர் என்ன செய்வாரோ என்ற பயம் அவர்களுக்கு இருந்தது. ஸ்ரீ திலகர் காங்கிரஸில் கலகம் செய்தால் என்ன செய்வது? என்று ஒரு சீர்திருத்தக்காரர் சொல்வதும், மற்றொரு சீர்திருத்தக்காரர் போலீஸ் படையை வரவழைத்து நிறுத்தினால் போகிறது என்று கூறுவதுமாக வீண் கவலைப்பட்டுக்கொண்டிருந்தனர். அன்றி, ஸ்ரீ திலகருடைய ஆட்கள் காங்கிரஸ் பந்தலையே கொளுத்திவிட்டால் என்ன செய்கிறது என்றிவ்விதமாக யோசனையில்லாமல் மனதிற்குத் தோன்றினவற்றைப் பேசிக்கொண்டே சீர்திருத்தக்காரர்கள் பகைமையை வளர்த்து வந்தனர். வரவேற்பு கமிட்டியாரால் பண உதவிபெற்ற ஒரு பத்திரிகை தாறுமாறாய் ஸ்ரீ திலகரை வைதது. நிலைமை மிகவும் கேவலமாக இருந்தது. அக்காங்கிரஸுக்கு அக்கிராசனராகத் தெரிந்தெடுக்கப்பட்ட பாபு சுரேந்திரநாத பானர்ஜீ அந்நிலைமையையுணர்ந்து, 'சீர்திருத்த கான்பரன்ஸ் காங்கிரஸ் பந்தலில் வேண்டுமென்கிற ஏற்பாட்டைப் பிடிவாதமாகக் கைக்கொண்டால் நான் அக்கிராசனம் வகிக்கமாட்டேன்' என்று ரானடே அவர்களுக்குக் கடிதமொன்றை எழுதியனுப்பினார். ரானடே, உடனே அக்கிராசனர் மனப்படி வாதஞ் செய்வதில்லையென்று பதில் எழுதினார். ரானடே அவர்களும் அவருடைய வர்க்கத்தாரும் வீண் பிடிவாதஞ் செய்யாமல் முதலிலேயே இக்காரியத்தைச் செய்திருந்தால் புனாவில் வீண்குழப்பம் உண்டாயிராது. உடனே,



சீர்திருத்தக்காரர்கள் தங்கள் கான்பரன்ஸை காங்கிரஸ் பந்தலில் நடத்துவதில்லையென்று கூறினதும், ஸ்ரீ திலகரும் அவரைச் சேர்ந்த பலரும் காங்கிரஸ் மகாசபையின் ஏற்பாடுகளை நடத்த முன் வந்தனர். இப்படியிருக்க, புனாவில் காங்கிரஸ் மகாசபைக்கு உள்ளூர் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்க ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. ஸ்ரீ திலகருடைய வர்க்கத்தாரை வேண்டுமென்றே ஒதுக்கக்கருதி ஒரு சிறு கட்டடத்தில் பொதுக்கூட்டம் கூட்ட ஏற்பாடு செய்யப்பட்டது. சீர்திருத்தக்காரர்களின் எண்ணத்தை யறிந்த ஸ்ரீ திலகர் வர்க்கத்தார், சபை ஆரம்பிக்கும் காலத்திற்கு வெகுநேரத்திற்கு முன்னரே அக்கட்டடத்தில் நிறைந்திருந்தனர். சபை ஆரம்பிக்குங்காலம் வந்ததும் அக்கட்டடத்திலுள்ள ஸ்ரீ திலகர் வர்க்கத்தார் தங்களைச் சேர்ந்த ஒருவரை அக்கிராசனம் வகிக்கப் பிரேரேபணை செய்தனர். சீர்திருத்தக்காரர்களுக்கு ஒன்றும் வழியில்லாமல், உடனே, கோபித்துக்கொண்டு, கோகலே உள்பட 15 கனவான்கள் சபையைவிட்டு நீங்கினர். சீர்திருத்தக்காரர்கள் பலவிதமாக ஸ்ரீ திலகரைத் துன்புறுத்தி, அவரால் காங்கிரஸ் நடவடிக்கைக்கு ஏதாகிலும் பங்கம் வருமோவென்று பயந்திருந்தும், கடைசியாக ஒன்றுமில்லாமல் வெகுசிறப்பாய் காங்கிரஸ் மகாசபை நடந்தது. சுரேந்திரநாத பானர்ஜிக்கு விசேஷ மரியாதையுடன் வரவேற்பு கொண்டாடப்பட்டது. காங்கிரஸ் நடவடிக்கை முடிந்ததும் ஸ்ரீ திலகருடைய சிநேகிதர் ஸர்தார் பாபா மகாராஜ் அவர்கள் காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கும் அக்கிராசனருக்கும் ஒரு தோட்டக் கச்சேரிவைத்து விருந்திட்டார். பிறகு ஸ்ரீ திலகரால் ஏற்படுத்தப்பட்டிருந்த சிவாஜி ஞாபகச் சின்ன விழாக் கூட்டம் கூடிற்று. பாபு சுரேந்திரநாத பானர்ஜி சிவாஜி மகாராஜரைப்பற்றிக் கூறி, ஸ்ரீ திலகரால் ஏற்படுத்தப்பட்ட சிவாஜி மகோத்சவத்திற்கு ஒவ்வொருவரும் பாடுபட

வேண்டுமென்று கூறினர். காங்கிரஸ் நடவடிக்கை 'வெகு சிறப்பாக நடந்தும் சீர்திருத்தக்காரர்களின் பிடிவாதம் புனாவில் சரிவர நடக்கவில்லையென்று மன ஆயாசப்பட்டனர். என்றாலும், புனாவைச்சேர்ந்த சீர்திருத்தக்காரர்கள் பம்பாய் முதலிய பல இடங்களைச் சேர்ந்த சீர்திருத்தக்காரர்களின் மனதைக் கவர்ந்தனர். பம்பாய் நகரைச் சேர்ந்த சீர்திருத்தக் காரர்கள் புனாவைச்சேர்ந்த ஸ்ரீ திலகர் வர்க்கத்தாரிடம் பகைமை பாராட்டலாயினர்கள். பம்பாய் நகருக்கு ஈசுரமாய் விளங்கின மேடா புனாவில் நாயகமாய் விளங்கின ஸ்ரீ திலகருடன் பகைமையைக்கொள்ள ஆரம்பித்தார். இப்பகைமை கடைசியாக 1907-ம் வருடத்தில் பகிரங்கமாக வெடித்தது. இரண்டாவது காங்கிரஸ் மகாசபை கல்கத்தாவில் நடந்தகாலத்தில் தாதாபாய் நௌரோஜியைப்போல சீர்திருத்தக்காரர்கள் நடந்திருப்பார்களானால் இருவரின் சண்டையே யிருந்திராது. மூன்றாவது காங்கிரஸில் பத்ருடீன் தயாப்ஜி அக்கிராசனம் வகித்திருந்தபோது 'விஷயமாக ஒரு தீர்மானத்தைக்கொண்டு வர பலர் இருந்தும், முஸ்லீம்கள் மனம் புண்படுமாதலால், அத்தகைய தீர்மானம் வேண்டாமென்று ஒதுக்கினதுபோல, ரானடே அவர்கள் ஒற்றுமையைப் பெரிதாயெண்ணி ஆரம்பத்திலேயே காங்கிரஸ் பந்தலில் சீர்திருத்த கான்பரன்ஸ் நடத்தப்படமாட்டாதென்று கூறியிருந்தால் எவ்வளவு சௌஜன்யமாக இருந்திருக்கும். ஒற்றுமையை யோசிக்காமல், அவரவர் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று பிடிவாதமாகயிருப்பதினாலேயே நாட்டில் பல கட்சிகள் உண்டாகின்றன. உண்மையான அபிப்பிராய பேதத்தால் கட்சியுண்டாவது சகஜம். ஆனால், மனிதனுக்கு மனிதன் காட்டும் பகைமையால் கட்சியை யுண்டாக்கி நாசம் செய்வதைப்போன்ற தேசத்துரோகம் ஏதுமில்லை. 1895-ம் வருடத்திய புனா



காங்கிரஸில் சுரேந்திரநாத் பானர்ஜியின் அக்கிராசனத்தின்கீழ் 'நிலவரி நிர்ணயம்' என்னும் தீர்மானமொன்றை என். எம். சமர்த் பிரேரேபிக்க, சென்னை ஸ்ரீ. வெங்கடரத்னம் பந்துலு ஆமோதிக்க, ஸ்ரீ பாலகங்காதர திலகர் அதை ஆக்ஷேபித்துப் பேசினர். 1896-ம் வருடத்தில் கல்கத்தாவில் கனம் ரஹிமதுல்லா மகமது ஸயானி அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் கூடின காங்கிரஸ் மகாசபையில் 'வரவு செலவு தொகை திட்டத்தை மத்திய கவர்ன்மெண்டார் மாகாண கவர்ன்மெண்டாருக்கே விட்டுவிட சில அதிகாரங்களைக் கொடுக்கவேண்டும்' என்னும் ஒரு தீர்மானத்தை அப்பொழுது பம்பாய் சட்டசபை அங்கத்தினராய் இருந்த கனம் பாலகங்காதர திலகர் பிரேரேபித்தார். பிறகு, 1900-ம் வருடத்தில் லாகூரில் நடந்த காங்கிரஸுக்கு ஸர் நாராயண கணேச சந்தாவர்க்கரை அக்கிராசனராகத் தெரிந்தெடுத்தனர். ஸ்ரீ திலகரும் சந்தாவர்க்கரும் சமவயதுள்ள ஒரே காலத்தவராயிருந்தும், சந்தாவர்க்கரைவிட இராஜீயத் துறையில் அதிகமாயுழைத்த ஸ்ரீ திலகருக்கு அக்கிராசன பதவி கொடுக்காமல் சந்தாவர்க்கருக்குக் கொடுத்ததேன்? ஸ்ரீ திலகர் இளையவரென்றால் சந்தாவர்க்கர் இளையவரல்லவா? காரணம் வேறு. காங்கிரஸ் சபையை ஆதீனப்படுத்தி வந்த இராஜீயவாதிகள் தங்கள் அபிப்பிராயத்திற்கு வேறுக யிருப்பவர்களைக் கிட்ட நெருங்க விடுவதில்லை. மற்றும் காங்கிரஸ் அக்கிராசனபதவிக்கு அக்காலத்தில் இருக்கவேண்டிய குணம் (1) உணர்ச்சியும் ஆழ்ந்த திடமான பக்தியு மில்லாமல் காளான்களின் பெருக்கம்போல வசனங்களை அமோகமாக வர்ஷித்தல் (2) சமயோசித வேடம்பூண்டு நடித்தல் (3) ஐரோப்பிய நடையுடை பாவனை முதலிய ஒழுக்க வழக்கங்களைக் கொள்ளுதல் (4) ஐரோப்பியர்களுடன் நெருங்கிப் பழகி அவர்களுடைய தயவையும் அபிமானத்தையும் பெற்

திருத்தல் (5) சர்க்கார் உத்தியோகஸ்தர்களிடம் அறிமுகங் கொண்டு அவர்களுடைய ஆதரவைப் பெற்றிருத்தல் ஆகிய இவைகளேயாம். இத்தகைய விசேஷ குணங்கள் ஸ்ரீ திலகரிடத்தில் இல்லாமையினாலேயே அவர் காங்கிரஸ் அக்கிராசனருக்குத் தகுதியற்றவரல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. ஸ்ரீ திலகருக்கு காங்கிரஸ் அக்கிராசன பதவி முதலிய உத்தியோக பதவியில்லாவிடினும் கௌரவபதவியாயினும், அல்லது எதற்கும் தாம் முன் நிற்கவேண்டுமென்று வரும் நிலைமையில்லாவிடினும் சற்றேனும் இஷ்டங் கிடையாது. பம்பாய் மாகாணத்தில் 1900-ம் வருடம் வரை நடந்த ஆறு மாகாண காண்பரன்ஸ்களும் ஸ்ரீ திலகரும் காலஞ்சென்ற நாமஜோஷியுமே ஏற்பாடு செய்தது. அந்த ஆறு காண்பரன்ஸில் இரண்டு பூனாவில் நடந்தது. ஸ்ரீ திலகர் இவ்வளவு பிரயாசையுடன் காங்கிரஸ் சபையைச் சிறப்பிக்கச் செய்தும் மிதவாதிகள் அவருக்கு இரண்டாம் பட்சம் மூன்றாம் பட்சமான ஒரு தீர்மானத்தைக் கொடுத்து ஆமோதிக்கவும் ஆதரிக்கவும் செய்யச் சொல்வர். முக்கியமான தீர்மானங்களை அவர்களே பிரேரேபிப்பது ஆமோதிப்பது ஆதரிப்பது வழக்கம். இங்ஙனம், ஸ்ரீ திலகரை ஒரு பிரஷ்டராக அவர்கள் நினைத்துக் காரியங்களைத் தங்களிஷ்டம்போல் செய்து வந்தனர். ரானடேயின் அந்தரங்க சிஷ்யரொருவர் 'ஸ்ரீ திலகர் இறந்தாலன்றி காரியம் சரிவர தேசத்தில் நடக்காது' என்று பகிரங்கமாகத் தெரிவித்தார். கடைசியாக அவர் ஸ்ரீ திலகருடைய அபார சக்தியையும் உண்மையான வேலையையும் கண்டு பார்க்காமற்படி அற்ப ஆயுளைக் கொண்டு இறந்தார். 1900-ம் வருடத்தில் லாகூரில் நடந்த காங்கிரஸ் சபையில் 'இந்திய சனங்களின் குடித்தனக் கீழ்மையைப் பற்றி' சென்னை தேசாபிமானி காலஞ்சென்ற ஸ்ரீ. சுப்பிரமணிய ஐயர் பிரேரேபிக்க ஆர். என். முத்ஹோல்



கார் ஆமோதிக்க, பாலகங்காதர திலகர் அதை ஆதரித்துப் பேசினர். 1901-ம் வருடத்தில் கல்கத்தா நகரில் டி. ஈ. வாச்சா அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் கூடின காங்கிரஸ் மகா சபையில் 'இந்தியாவின் கல்வி' என்னும் தீர்மானத்தை வி. ஆர். பண்டிதர் பிரேரேபிக்க ஸ்ரீ திலகர் நீண்ட கரகோஷத்தினிடையே அதை ஆமோதித்து வெகு அழகாகப் பேசினர். 1904-ம் வருடத்தில் பம்பாயில் நடந்த காங்கிரஸில் ஸர் ஹென்றி காட்டன் துரை அக்கிராசனத்தின் கீழ் 'இங்கிலாந்துக்கு தூது' அனுப்பும் விஷயமாக ஒரு தீர்மானத்தை ஸர் உல்லியம் வெட்டர்பர்ன் பிரேரேபணை செய்ய பாலகங்காதர திலகர் ஆமோதித்து சபையார் அடிக்கடி சிரிக்கும்படி பேசினர். 1905-ம் வருடத்தில் கோபால கிருஷ்ண கோகலே யவர்களின் அக்கிராசனத்தின் கீழ் ஸ்ரீ காசியில் கூடின பாரத சன சபைக் கூட்டத்தில் 'இந்தியாவின் பஞ்சம், வறுமை' விஷயமாக ஸ்ரீ பாலகங்காதர திலகர் பேசினர். 1906-ம் வருடத்தில் அரும்பெருங் கிழவனார் தாதாபாய் நௌரோஜியின் அக்கிராசனத்தின் கீழ் கல்கத்தா மாநகரில் கூடின காங்கிரஸ் மகா சபைக் கூட்டத்தில் 'சுதேசி இயக்கம்' என்னும் விஷயமாக ஒரு தீர்மானத்தை ராய்பகதூர் பி. ஆனந்தசார்லு பிரேரேபிக்க, பண்டித மதன்மோகன் மாளவியா அவர்கள் ஆமோதிக்க, ஸ்ரீ திலகர் விசேஷ ஆரவார கோஷத்தினிடையே ஆதரித்துப் பேசினர். நிற்க, 1897-ம் வருடமுதற்கொண்டு மிதவாதிகள் இராஜீயத் துறையில் ஐக்கியமின்றியும் உற்சாகமின்றியும் உழைத்து வந்ததைக் கண்ட ஸ்ரீ திலகர் பாரதஜன சபையை உண்மையான ஜன சபையாக்க இஷ்டப்படுகையில் மிதவாதிகள் ஸ்ரீ திலகருடைய உணர்ச்சியையும் உற்சாகத்தையும் தேசாபிமானத்தையுங் கண்டு சகியாமல் அவருக்கு விரோதமாகவே யிருந்தனர் என்பது அங்கைக்கனியாகும்.

1897-ம் வருடத்தில் இராஜ நிந்தனை குற்றத்திற்காகத் தண்டனை யடைந்து விடுதலை யடைந்து வந்ததும் ஸ்ரீ திலகர் 1899-ம் வருட முதல் காங்கிரஸ் சபையிலும் சபைக்கு வெளியிலும் தீவிர உணர்ச்சியை ஜன சமூகத்துக்கு ஊட்டக்கப் பாடுபட்டு வந்தார். ஸ்ரீ திலகர் மகாராஷ்டிரத்தில் பற்பல துறைகளைக் கொண்டு ஜனங்களுக்கு இராஜீய உணர்ச்சி அபிவிருத்தியாகப் பெரும்பாடு பட்டார். காங்கிரஸ் மகாசபை 1905-ம் வருடத்தில் புத்துயிர் பெறலாயிற்று. (1) அரசாங்க உத்தியோகஸ்தர்களின் தயவையும் ஆதரவையும் பெறும் வழக்கத்தை காங்கிரஸ் மகாசபை இனி உதறித்தள்ளவேண்டும் (2) ஜாதீய உணர்ச்சி காங்கிரஸ் மகா சபையின் தீர்மானங்களில் பிரதிபலித்து இருக்க வேண்டும், (3) கேவலம் வருடாந்தர கூட்டமாக காங்கிரஸ் இல்லாமல், இனி வருடம் பூராவும் தொடர்ந்தியல்ல இராஜீய இயக்கம் ஏற்பட்டு வரவேண்டும் என்னும் இம்மூன்று நோக்கங்களை ஆதாரமாகக்கொண்டு ஸ்ரீ திலகர் பாரதநாட்டில் ஜனநாயகத் தலைமை உண்டாகவேண்டுமென்று போராட முன்வந்தார். ஸ்ரீ திலகர் ஜனங்களின் சக்தியை ஆதரிப்பவர்; மேடா முதலானோர் தலைவர்களென்கிற பிரபுக் கட்சியை யாதரிப்பவர். ஸ்ரீ திலகர் ஜனங்களின் உதவியை நாடுபவர்; மேடா முதலானோர் அதிகாரிகளின் உதவியை நாடுபவர். ஸ்ரீ திலகர் தேசவிடுதலைக்குத் தியாகமே வேண்டுமென்பவர்; மேடா முதலானோர் தேசவிடுதலைப் பற்றிய கவலை[illegible] முயல்வர்கள். ஸ்ரீ திலகர் தம் தேசவிடுதலையைத் தம் தேசத்தாரிடமே எதிர்ப் பார்த்தார்; மேடா முதலானோர் தேசவிடுதலையை அன்னிய அரசாங்கத்தாரிடம் எதிர்பார்த்திருந்தார்கள். ஆகவே, ஸ்ரீ திலகருக்கும் மேடாவுக்கும் உண்டான பகைமை அவர்களுடைய இராஜீயக் கொள்கையிலேயே. ஸ்ரீ காசி



யில் நடந்த காங்கிரஸ் மகாசபையில் ஸ்ரீ திலகர் ஜனநாயக உணர்ச்சிக்கு வேண்டிய தீர்மானங்கள் நிறைவேறும்படி செய்தார். மேடா அக்கூட்டத்திற்கு வரவில்லை. ஸ்ரீ காசியில் கூடின காங்கிரஸ் சபையின் அக்கிராசனர் ஸ்ரீ கோபால கிருஷ்ண கோகலே வங்காளிகளின் போராட்டத்தை இங்கிலாந்திலும் நடத்தி சுதேசி பகிஷ்கார கிளர்ச்சியையும் பிர[illegible] செய்தார். கோகலேயின் நடத்தை பலருக்கு ஆச்சரியமாயிருந்தது. மிதவாதிகளிற் பலர் கோகலே கண் தெரியாமல் கடின பாதையில் இறங்குகிறார் என்று பரிகசித்தனர். ஸ்ரீ கோகலே தம்முடைய அக்கிராசன பிரசங்கத்தில் இராஜப்பிரதிநிதி கர்ஸன் பிரபுவின் ஆட்சியைப் பலமாகக் கண்டித்து ஔரங்கசீப் ஆட்சிக்கு ஒப்பிட்டுப் பேசினதுமல்லாமல், சுதேசியம்—பகிஷ்காரம் இவைகளுக்குச் சாதகமாகவும் அவர் கூறினார். சுதேசியம்—பகிஷ்காரம் இவ்விரண்டும் தனித்தனி தீர்மானமாக இருக்க வேண்டுமென்று ஸ்ரீ திலகர் கூறினார். என்றாலும் மிதவாதிகளின் பயத்தை உத்தேசித்து [illegible] விட்டு விட்டு அடுத்த வருடம் பார்த்துக் கொள்ளலாமென்று தீர்மானித்தார். பிரிட்டிஷ் சாமான்களின் பகிஷ்காரமே வங்காளிகளுக்கு ஏற்ற நியாயமான ஆயுதம் என்று தீர்த்து அதையும் தீர்மானிக்கும்படி செய்தார். வங்காளிகள் தங்கள் மாகாணத்தில் உண்டான கஷ்டங்களைப் பரிகாரஞ் செய்து கொள்ள ஓர் ஆயுதமாகக் கொண்ட பகிஷ்காரத்தை மற்ற மாகாணத்தவர்களும் வங்காளிகளுக்குச் சகாயமாக கைக்கொள்ள வேண்டுமென்று ஓர் தீர்மானத்தை ஸ்ரீ திலகர் கொண்டுவர உத்தேசித்தார். ஆனால், மிதவாதிகள் பலர் பலமான கூக்குரலிடவே, அடுத்த வருடத்திற்கு ஒத்தி வைத்தார். 1906-ம் வருடம் ஜூன் மாதம் ஸ்ரீ திலகர் சிவாஜி மஹோத்சவத்தை முன்னிட்டு கல்கத்தா

சென்றார். அங்கு சிவாஜி மகாராஜாவின் உற்சவத்தைப் பற்றி வெகு அழகாகப் பேசினார். 7-ந்தேதி பாபு மோதிலால் கோஷ் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் ஸ்ரீ திலகர் 'தற்கால இராஜீய நிலைமை' என்னும் விஷயமாகப் பேசினார். ஸ்ரீ திலகரிடத்தில் வங்காளிகளுக்கு அன்பு மேலிட்டு அன்னோன்னிய பாவம் ஏற்பட்டது. பாபு மோதிலால் கோஷ் அவர்களை ஸ்ரீ திலகர் தம் தமையனார் என்றும், பாபு சிஷிர் குமார கோஷ் அவர்களைத் தம் தகப்பனார் என்றும் ஸ்ரீ திலகர் எண்ணிவந்தார். கல்கத்தாவுக்கு வந்த ஸ்ரீ திலகர் திரும்பினதும் பாபு விபினசந்திர பாலர் 1906-ம் வருடத்திய கல்கத்தா காங்கிரஸுக்கு ஸ்ரீ திலகரையே அக்கிராசனராகத் தெரிந்தெடுக்க வேண்டுமென்று தெரிவித்தார். பாலர் தெரிவித்தது மில்லாமல் அதற்கு வேண்டிய பிரசாரத்தையும் கூடவே செய்யத் தொடங்கினார். சிறைக்குப் போனவரின் பெயரை காங்கிரஸ் அக்கிராசனராக தெரிந்தெடுக்க வேண்டுமென்று முதல் முதல் [illegible]ன்று இதுவேயாம். மிதவாதிகள் [illegible] பம்பாய் தலை[illegible] மேடா நாட்டிற்கு உற்பாதம் வந்து விட்டதென கூவினார். சுரேந்திரநாத பானர்ஜிக்குக் கடிதங்கள் எழுதப்பட்டன. அவ் வங்க நாட்டு சிங்கமானது பம்பாய் தலைவரிடத்தில் கட்டுண்டது. மிதவாதிகளுக்கு இன்னா செய்வதென ஒன்றும் புலப்படவில்லை. இங்கிலாந்திலுள்ள தாதாபாய்க்குத் தந்தி யடித்து அவரை அக்கிராசனம் வகிக்க ஒத்துக் கொள்ளும்படியும் ஏற்பாடு செய்யப்பட்டது. 'காங்கிரஸ் அபாய நிலைமையிலிருக்கிறது; தாங்கள் உடனே அக்கிராசனம் வகிக்க ஒத்துக்கொள்ள வேண்டும்' என்று சுரேந்திரநாத பானர்ஜி கூற அவருடைய மித்திரர் பாபு பூபேந்திரநாத வஸு தந்தி யடித்தார். கல்கத்தாவிலுள்ள மற்ற மித்திரர்களைக் கலக்காமலும் வரவேற்புக்



கமிட்டியாருக்குத் தெரிவிக்காமலும் பூபேந்திரநாத வஸு தாதாபாயிக்குத் தந்தி யடித்து ஸ்ரீ திலகர் அக்கிராசனம் வகிக்காவண்ணம் செய்ய ஏற்பாடு செய்தார். காங்கிரஸுக்குத் தம்மாலான உதவியைக் கனவிலும் செய்யாக் கங்கணங் கட்டியிருந்த தாதாபாய் உடனே அக்கிராசனம் வகிக்க ஒத்துக் கொண்டார். மிதவாதிகளின் மனம் சற்று சந்தோஷங் கொண்டது. தாதாபாய் நௌரோஜியின் தேர்தலை ஒருவரும் எதிர்க்க மாட்டார்களென்ற தைரியம் மிதவாதிகளுக்கிருந்தது. பிறகு, ஸ்ரீ திலகர் கல்கத்தாவிலிருந்து திரும்பி வந்ததும், கனம் கப்ர்தே அவர்கள் திலகருடைய ஆலோசனையைக் கொண்டு, காங்கிரஸ் மகா சபையின் வழியை மாற்றி புதிய உணர்ச்சிக்குத் தக்கபடி சீர்திருத்தஞ் செய்யவேண்டுமென்று ஓர் அறிக்கையை அச்சிட்டு காங்கிரஸ் தலைவர்களுக் கெல்லாம் அனுப்பினார். அவ் வறிக்கையில் இனி காங்கிரஸ் செய்யவேண்டிய வேலை திட்டம், அவ் வேலையைச் செய்யும் வழி முதலியனவைகள் தயாரிக்கப்பட்டிருந்தன. [illegible] உணர்ச்சியை புண்டாக்கிற்று. ஆங்கிலோ இந்திய பத்திரிகைகள் அக்கடிதத்தின்மீது வியாக்கியானஞ் செய்தன. இந்த கட்சியினர்களுக்குச் சற்றேனும் இடங் கொடுக்கலாகாதென கோகலேயைத் தட்டிக் கொடுத்து மிதவாதிகளை அப் பத்திரிகைகள் உற்சாகப் படுத்தின. கோகலே[illegible]யும் ஸர் பிரோஜ்ஷா மேட்டாவையும் 1904-1905-ம் வருடங்களில் ஆதரித்த அப்பத்திரிகைகள் 1906-ம் வருடத்தில் தூஷிக்கவாரம்பித்தன. 1906-ம் வருடத்திய காங்கிரஸ் விஷயமாகப் பெருங்கவலை அனைவருக்கும் உண்டாயிற்று. தாதாபாய் நௌரோஜி அக்கிராசனம் வகித்து, 'ஸ்வராஜ்யமே காங்கிரஸின் இலட்சியம்' என்று கூறி ஸ்வராஜ்ய விஷயமாக அவர் நீண்டதோர் உபந்நியாசம் செய்தார். 'எரிகிற நெருப்பில் எண்ணெயைக்

கொட்டுகிறதுபோல் அவருடைய உபந்யாஸம் இருந்ததென இங்கிலீஷ் மென் பத்திரிகை கூறிற்று. காங்கிரஸ் சபை கட்டுக்கோப்பதற்கு முன்னே இளம் புதிய கட்சியைச் சேர்ந்த பிரதிநிதிகளின் கூட்டமொன்று கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் (1) சுதேசியம் (2) பஹிஷ்காரம், (3) ஜாதீய கல்வி இம் மூன்று தீர்மானங்களும் காங்கிரஸ் மகாசபையில் தீர்மானமாக்கி வைக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அக் கூட்டத்தில் பாபு விபினசந்திர பாலரும், ஸ்ரீ திலகரும் புதிய கட்சியின் நோக்கத்தைப் பற்றிப் பேசினார்கள். இந்த, இம் மூன்று தீர்மானங்களில் கடைசி தீர்மானமான ஜாதீய கல்வி காங்கிரஸ் விஷயாலோசனை கமிட்டியில் ஒருவித ஆக்ஷேபமின்றி ஏகமனமாய் நிறைவேறிற்று. ஆனால் சுதேசியம் — பஹிஷ்காரம் இவ்விரண்டு தீர்மானங்களைப் பற்றிப் பலமான வாதங்கள் நடந்தன. ஒவ்வொரு கட்சியினரும் ஆத்திரப்பட்டனர். கவர்ன்மெண்டாரின் அடக்கு முறைகளின் மீது பலமான பஹிஷ்காரமே அஸ்திரம் நாம் கையாள வேண்டுமென்று [illegible]யினர் வற்புறுத்தினார். மேடாவுக்கும் ஸ்ரீ திலகருக்கும் ஆக்ரோசமான வாதமுண்டாயிற்று. கடைசியாக ஸ்ரீ திலகர் வெகு கம்பீரமான தொனியுடன் அங்கு கூடியிருந்தவர்களைப் பார்த்து 'பஹிஷ்கார இயக்கம் நியாயமானதே; அது எப்பொழுதும் ஸித்திமான அஸ்திரம்' என்று கூறினார். ஸ்ரீ காலியில் பிரிட்டிஷ் சாமான்களின் பஹிஷ்காரம் மட்டும் நிறைவேறிற்று. ஆனால் கல்கத்தாவில் இராஜீய வழியில் பஹிஷ்காரம் செய்யவேண்டுமென்று ஸ்ரீ திலகர் தீர்மான மொன்றைக் கொண்டுவந்தார். வங்காளத்தில் ஆரம்பிக்கப்பட்ட பஹிஷ்கார இயக்கத்தை காங்கிரஸ் அங்கீகரித்தது; ஆனால் இதர மாகாணத்தவர்களும் அவ்விஷயத்தில் சேரக் கேட்கவில்லை. கடைசியாக ஒரு முடிவு ஏற்பட்டது. சுதேசிய விஷயமாகத்- 'விலை



அதிகமாயிருந்தாலும், சுதேசி சாமான்களை வாங்கவேண்டும்' என்னும் பாகத்தை எடுத்து விட்டனர். ஸ்ரீ திலகர் அதுவே முக்கியமெனப் போராடி வருகையில் தீர்மானம் நிறைவேறிற்று என்று கூறினார்கள். உடனே, ஸ்ரீ திலகர் தீர்மானத்திற்கு, சாதகமாகவும் பாதகமாகவும் எத்தனை பேர்களிருக்கிறார்களென்றும் கணக்கு வேண்டும் என்று கேட்டார். அது மறுக்கப்பட்டது. உடனே, ஸ்ரீ திலகர், பாலர், அஸ்வினி குமாரதத்தர் முதலிய 60 விஷயாலோசனை அங்கத்தினர்கள் சபையைவிட்டு வெளியேறினர். மறுநாள், காங்கிரஸ் மகாசபையில் அத்தீர்மானம் [illegible] வருவதைத் தீர்மானித்தார். சபாபதி 25 ரூ. தன்னுடைய எண்ணத்தை எழுதி அனுப்பினார். ஸ்ரீ திலகருடைய புதியகட்சியாரின் பலத்தையறிந்த தாதாபாய்-நௌரோஜி ஸ்ரீ திலகரின் இருத்தலை அங்கீகரித்தார். தீர்மானம் ஸ்ரீ திலகருடைய இஷ்டப்படி நிறைவேறிற்று. பிறகு, லாலா லஜபதிராய், காங்கிரஸ் மகாசபை அடுத்த வருடத்தில் நாகபுரியில் கூடவேண்டுமென்று பிரேரேபித்து அனுமதித்தார். ஆனால், மத்திய மாகாணத்தில் தீவிர கட்சியினர்களின் தொகை அதிகமாகயிருக்குமென்று கருதி, மேடா முதலானோர் மிதவாதிகள் அதிகமாயிருக்கும் நாகபுரியில் அடுத்த காங்கிரஸ் கூட்டவேண்டுமென்று தெரிவித்தனர். நாகபுரியில் கூடத் தீர்மானிக்கப்பட்டது. கல்கத்தா [illegible] அவர்கள் காங்கிரஸுக்கு வந்திருந்த காலத்திலேயே அடுத்த நாகபுரி காங்கிரஸுக்கு டாக்டர் ராஷ்பிஹாரி கோஷ் அவர்களையே அக்கிராசனராகத் தெரிந்தெடுக்கவேண்டுமென்று மேடா முதலானோர் தீர்மானித்தனர். பிறகு. 1907-ம் வருடத்தின் முதல் இரண்டு மூன்று மாதங்களில் நடந்த பல மாகாண கான்பரன்ஸில் 1906-ம் வருடத்தில் கல்கத்தாவில் நடந்த மகாசபையில் தீர்மானமான அத்தீர்மானங்களுக்கு விரோதமாக வேறு சில

தீர்மானங்களைச் செய்யவேண்டிய ஏற்பாடுகளை மிதவாதிகள்
செய்து வந்தனர். வங்காளத்தில் நடந்த மகாஜன கான்
பரன்ஸில் அத்தனையும் மாறுதலின்றி காங்கிரஸ் தீர்மானங்
களை நிறைவேற்றின. பம்பாய் மாகாணத்தில் சூரத்தில்
நடந்த மாகாண கான்பரன்ஸுக்கு ஸ்ரீ திலகர் போக முடிய
வில்லை. ஸ்ரீ திலகர் இல்லாததைக் கண்ட மிதவாதிகள்
மெஜாரிடி பலத்தால் காங்கிரஸ் தீர்மானங்களை அங்கீ
கரிக்காமல் 'பகிஷ்காரம்' 'ஜாதீயகல்வி' இவ்விரண்டு தீர்
மானங்களையும் கொண்டுவராமலே விட்டுவிட்டனர். பீரார்
மாகாணத்தில் ராய்பூர் நகரில் நடந்த மாகாண கான்பரன்
ஸில் 'வந்தேமாதரம்' கீதம் பாடக் கூடாதென மிதவாதி
கள் தடுக்கப்பிரயத்தனப்பட்டனர். ஆனால், கபர்தே அவர்
களின் பிடிவாதத்தால் கடைசியாக வந்தேமாதர கீதம்
பாடப்பட்டது. அலகாபாத்நகரில் நடந்த மாகாண கான்
பரன்ஸில் பண்டித மதன்மோஹன் மாளவியா அவர்கள் தீவிர
கட்சியைச் சேர்ந்த 200 பிரதிநிதிகளை உள்ளே விட முடி
யாதெனக் கூறி பகிஷ்காரஞ் செய்தார். தவிர, மகாஜன
கமிட்டி யொன்று நாகபுரியில் ஏற்படுத்த 1907-ம் வருடம்
ஜனவரி மாதம் 27-ந்தேதி ஒரு கூட்டம் கூடவேண்டுமென
யோசித்துக் கடைசியாக பிப்ரவரி மாதம் 22-ந்தேதி கூடி
வரவேற்பு கமிட்டியொன்று ஏற்படுத்தப்பட்டது. காங்
கிரஸ் மகாசபையின் புதிய விதிப்படி காங்கிரஸ் அக்கிராசன
ரைத் தெரிந்தெடுக்கும் சுதந்தரம் வரவேற்பு கமிட்டிக்கே
விடப்பட்டது. தவிர, வரவேற்பு கமிட்டியில் முக்கால்
பாகம் கொண்ட பெரும்பான்மையோர் தெரிந்தெடுக்க
வேண்டுமென்றும் அவ்விதி கூறும். ஆகவே, நாகபுரியில்
மிதவாதிகளும் தீவிரகட்சியினரும் தங்கள் தங்கள் கொள்
கையைக் கொண்ட தலைவர் ஒருவரே அக்கிராசனராகத்
தெரிந்தெடுக்க வேண்டுமென்று இருகட்சியினரும் முனைந்



து வரவேற்பு கமிட்டிக்கு அங்கத்தினர்களைச் சேர்த்தனர்.
செப்டம்பர் மாதம் முதல் தேதியில் மிதவாதிகளைச் சேர்ந்த
வர்கள் 800 அங்கத்தினர்களும் தீவிர கட்சியைச் சேர்ந்த
வர்கள் 1800 அங்கத்தினர்களும் இருந்தனர். என்றாலும்
காங்கிரஸ் விதிப்படி முக்கால் பாகமுள்ள பெரும்பான்மை
யோர் தீவிர கட்சியினர்களுக்கும் இல்லாததால் ஸ்ரீ திலகர்
அக்கிராசனராக இருக்க முடியாதெனத் தெரிந்ததும்,
தீவிர கட்சியினர்கள் தாங்கள் சேர்த்த 1900 அங்கத்தினர்
களின் தொகை 45000 ரூபாயையும் கொடுக்காமல் 26 அங்
கத்தினர்களின் பெயரை மட்டும் கொடுத்து அவர்களின்
தொகையை நபர் 1-க்கு 25 ரூ. வீதமாகச் செலுத்தினார்
கள். ஆனால், மிதவாதிகளோ தொகை பூராவையும்
கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். தீவிர கட்சியி
னர்கள் முடியாதெனத் தெரிவிக்கவே, தீவிர கட்சியினர்களை
கமிட்டியினின்றும் நீக்கிவிட ஆரம்பித்ததுமன்றி, நிர்வாக
கமிட்டியிலுள்ள தீவிர கட்சியினர்களையும் நீக்க ஆரம்பித்த
னர். [illegible] அங்கத்தினர்களை நீக்க அவர்களுக்கு அதி
காரமில்லை. கடைசியாக, வரவேற்பு கமிட்டிக் கூட்டு
காரியதரிசிகளில் ஒருவரான டாக்டர் முஞ்சே அவர்களுக்
கும் தெரிவிக்காமல் வரவேற்பு கமிட்டியின் அங்கத்தினர்க
ளுடைய கூட்டமொன்று கனம் சித்னவிஸ் அவர்களுடைய
முயற்சியால் நடந்தது. 1907-ம் வருடம் செப்டம்பர் மாதம்
22-ந் தேதியில் நடந்த அக்கூட்டம் கலைக்கப்பட்டு
போயிற்று. கனம் சித்னவிஸை ஜனங்கள் கண்டபடி தூற்றி
னர். கடைசியாக டாக்டர் கோஷ் சமாதானஞ் செய்ய முன்
வந்தார். அவர் மிதவாதியே. மிதவாதிகளால் சேர்க்கப்
பட்ட 800 அங்கத்தினர்களின் தொகையிலிருந்து 20000
ரூபாயை மிதவாதிகள் கொடுத்து காங்கிரஸ் வேலையை ஆரம்
பிக்க வேண்டுமென்றும் அதுடன் ஒவ்வொரு கட்சியினரும்

5000 ரூபாயைக் கடனாகக் கொடுத்து உதவவேண்டுமென்றும் அவர் கூறினார். ஆனால், மற்ற மிதவாதிகளோ பிடிவாதமாக முடியாதெனக் கூறினர். தீவிர கட்சியினர்களோ காங்கிரஸ்சபையை நடத்த விட்டுவிடவும் அவர்கள் சம்மதிக்கவில்லை. மிதவாதிகளோ தீவிர கட்சியினர்களின்றி காங்கிரஸ் சபையை நடத்த முடியாதென அறிந்து, மகா கவலையானதும் அவசரமானதுமான காரியத்தைச் செய்தனர். நாகபுரியில் காங்கிரஸ் சபையைக் கூட்டத் தங்களால் முடியாதென அகில பாரத சனசபை கமிட்டிக்கு அம்மிதவாதிகள் தெரிவித்தனர். நவம்பர் மாதம் 10-ந் தேதி பம்பாயில் அகிலபாரத சனசபை கமிட்டி கூடிற்று. ஸ்ரீ திலகரும் கபர்டேயும் தங்களாலியன்றளவு வாதாடியும், நாகபுரியில் உள்ள தீவிர கட்சியினர்கள் தங்கள் நகர மரியாதையைக் காக்கக் கமிட்டியாரின் தீர்மானப்படி எத்தகைய சமாதானத்திற்கும் ஒத்து வருவதாக அவர்கள் கூறியும், மேடா முதலியோர் ஒரே பிடிவாதமாக காங்கிரஸ் சபைக் கூட்டத்தை நாகபுரியினின்றும் மாற்றி சூரத்நகரில் கூட்ட ஏற்பாடு செய்தனர். சூரத்நகரில் மிதவாதிகளின் பலம் அதிகம். [illegible]க, 1907-ம் வருஷத்தில் அரசாங்கத்தாருடைய அடக்குமுறைத் தாண்டவம் ஆரம்பித்தது. 'பஞ்சாபி' பத்திரிகையின் ஆசிரியரும் சொந்தக்காரருமான அத்வாலியும் ஜஸ்வந்தராயும் சிறைபட்டார்கள். லாலா லஜபதிராயும் ஸர்தார் அஜித்ஸிங்கரும் நாடு கடத்தப்பட்டனர். வங்காளத்தில் 'யுகாந்தர' பத்திரிகையின் பத்திராதிபர் ஸ்வாமி விவேகானந்தரின் சகோதரரான பூபேந்திரநாத தத்தர் சிறைபட்டார். 'சந்தியா' பத்திரிகையின் பத்திராசிரியர் பிரம்ம பாந்த உபாத்தியாயவர் சிறைபட்டார். இராஜநிந்தனை குற்றத்திற்காக ஸ்ரீயுத. அரவிந்தர் கைது செய்யப்பட்டார். இராஜரீகக் கூட்ட



சட்டமொன்று 1907-ம் வருடம் நவம்பர் மாதம் முதல் தேதி இராஜப்பிரதிநிதி சபையில் பிறந்தது. கோகலே அவர்களும் டாக்டர் ராஷ்பிஹாரி கோஷும் அச்சட்டத்தை எதிர்த்துப் பேசியும் பிரயோசனப்படவில்லை. சென்னை இராஜதானியிலும் இராஜமகேந்திரபுரம் காகிநாடா முதலிய இடங்களில் பலர் சிறைபட்டனர். 1907-ம் வருடம் நவம்பர் மாதம் 11-ந் தேதி லாலா லஜபதிராயும் ஸர்தார் அஜித்சிங்கரும் விடுதலையடைந்தனர். உடனே, லாலா லஜபதிராயவர்களை காங்கிரஸ் அக்கிராசனராக இருக்கவேண்டுமென்று பல ஊர்களிலுள்ளவர்கள் கூறினர். நவம்பர் மாதம் 21-ந் தேதி சூரத்நகரில் வரவேற்பு கமிட்டியொன்று ஸ்தாபிக்கப்பட்டது. மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த பல அங்கத்தினர்கள் வரமுடியாதவாறு அவ்வளவு நெருக்கடியான சந்தர்ப்பத்தைப் பார்த்து அக்கிராசனருடைய தேர்தல் நவம்பர் மாதம் 24-ந் தேதி என்று தீர்மானிக்கப்பட்டது. மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த பல தீவிர கட்சியினர்கள் வரமுடியாமலிருந்தும் சூரத்நகரிலும் அதைச் சுற்றியுமுள்ள பல தீவிர கட்சியினர்கள் லாலா லஜபதிராயையே தெரிந்தெடுக்க வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். ஸ்ரீ கோகலே அவர்கள் ராஷ்பிஹாரி கோஷுக்காகப் பலவாறு வாதாடினர். தீவிரகட்சியினர்களை வேண்டினர். கடைசியாக ஒன்றும் முடியாமற்போகவே, வெகு கோபத்துடன், மிதவாதிகள் பெரும்பாலாருடைய இஷ்டத்துக்கு விரோதமாக லாலா லஜபதிராய் அவர்கள் அக்கிராசனம் வகிக்க இஷ்டப்படுவாரா வென்றும் அவருடைய சம்மதத்தை தீவிர கட்சியினர்கள் பெறுவார்களாவென்றும் கூறினர். உத்தமதேசாபிமானியொருவரை இங்ஙனம் அவமானப்படுத்துவதைச் சகிக்காமல் பல தீவிர கட்சியினர்கள் 'ஐயா! கோகலே அவர்களே! உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள்' என்று கூறினார்கள்.

கடைசியாக டாக்டர் ராஷ் விகாரி கோஷ் அக்கிராசனராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். கல்கத்தாவில் நடந்த காங்கிரஸில் நிறைவேறின தீர்மானங்களை மாற்றித் தங்களிஷ்டப்படி செய்யவும், இனிவரும் காங்கிரஸ் சபைக்கூட்டங்களில் தீவிர கட்சியினர்களை ஒதுக்கவுமான ஏற்பாடுகளுக்கு சாதகமாக யிருக்கவே டாக்டர் ராஷ் விகாரி கோஷ் அவர்களை அக்கிராசனராக நியமித்தனர். 'இங்லிஷ்மான்' பத்திரிகையும் 'இந்தியன் சோஷல் ரிபார்மர்' பத்திரிகையும் வெகு தெளிவாக மிதவாதிகளின் முன்னணிவேலையைப்பற்றிக் கூறின. சூரத் காங்கிரஸ் சபையில் தீர்மானிக்கவேண்டிய தீர்மானங்களைத் தயாரிக்க மிதவாதிகளின் கடமையாகப் போயிற்று. மிதவாதிகள் தங்கள் தலைவரான ஸ்ரீ கோகலேயிடம் அப்பொறுப்பை விட்டு விட்டனர். காங்கிரஸ் மகாசபை ஆரம்பிப்பதற்கு 10-நாட்களுக்கு முன்னரே காங்கிரஸ் சபையில் கொண்டுவரும் தீர்மானங்களின் ஜாப்தாவை காங்கிரஸ் கமிட்டியார் வெளியிட்டனர். அந்த தீர்மானங்களின் ஜாப்தாவில் ஸ்வராஜ்யம், பஹிஷ்காரம், ஜாதீயக்கல்வி முதலிய இவ்விஷயங்களைப் பற்றின தீர்மானங்கள் இல்லை. அங்ஙனம், அத்தீர்மானங்கள் பிரசுரிக்கப்படாமையால், மிதவாதிகள் உண்மையில் கல்கத்தாவில் தீர்மானமான தீர்மானங்களை மாற்றிப் பிற்போக்கான தீர்மானங்களைச் செய்யப் போகிறார்களென்ற ஐயப்பாடு பல தீவிர கட்சியினர்களுக்கு உண்டாயிற்று. பத்திரிகைகளும் அத்தீர்மானங்கள் விடுபட்டிருப்பதைக்கண்டு பலமாதிரி வியாக்கியானங்கள் செய்தன. ஸ்ரீ திலகர் டிசம்பர்மாதம் 23-ந்தேதி காலையில் சூரத்நகர் வந்து சேர்ந்தார். அன்று மாலையில் கூடின பெருங்கூட்டத்தில் மிதவாதிகளின் பிற்போக்கான காரியம் தேசத்திற்கே பெருந்தீங்கை விளைவிக்குமென்றும், தீவிர கட்சியினர்கள் அப்பிற்போக்கான காரியங்களுக்கு இடந்தரலாகா



தென்றும், கல்கத்தாவில் இருகட்சியினர்களும் சம்மதப்பட்டு நிறைவேறின தீர்மானங்களைப் பழையபடி சூரத் காங்கிரஸில் அங்கீகாரஞ் செய்துவைப்பதே காங்கிரஸ் பிரதிநிதிகளின் கடமையென்றும், அதிலும் சிறப்பாகத் தீவிர கட்சியினர்களைச் சேர்ந்த ஒவ்வொருவர்களுடைய முதற்கடமையென்றும் ஸ்ரீ திலகர் வெகு உக்கிரமாகப் பேசினார். மறுநாள், சூரத்நகரில் சுமார் 500 தீவிர கட்சியைச்சேர்ந்த காங்கிரஸ் பிரதிநிதிகளின் கூட்டமொன்று ஸ்ரீ அ. அரவிந்தகோஷின் அக்கிராசனத்தின்கீழ் நடந்தது. 'நியாயமான எல்லாவழிகளாலும் கல்கத்தாவில் தீர்மானமான தீர்மானங்களை விட்டுவிட்டுப் பிற்போக்கான தீர்மானங்களைச் செய்யும் முயற்சியைத் தடுத்து, அவசியம் ஏற்படுமானால், அக்கிராசனரின் தேர்தலையே ஆட்சேபிக்கவேண்டும்' என்று அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அக்கிராசனர் தேர்தல் தீர்மானம் நிறைவேறாதத்திற்குரிய எல்லா தீர்மானங்களிலும் சபையை இரண்டாகப் பிரிக்க முன் ஏற்பாடு செய்துவைக்கும்படி காங்கிரஸ் காரியதரிசிகளுக்குக் கடிதமொன்று அக்கூட்டத்தினின்று எழுதியனுப்பப்பட்டது. அதற்குள்ளாக, கல்கத்தாவில் கூடின காங்கிரஸ் மகாசபையில் நிறைவேறின தீர்மானங்களை மாற்றப்போவதாக உண்டான வதந்தி ஆதாரமற்றதென வரவேற்பு கமிட்டியார் ஓர் அறிக்கையை வெளியிட்டனர். ஆனால், தயாரிக்கப்பட்டிருந்த தீர்மானங்களின் ஜாப்தா வேண்டுமட்டும் பிரதிநிதிகளுக்கும் மற்ற சனங்களுக்கும் தெரிவிக்காமற்படி வெகு இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது. டிசம்பர் மாதம் 25-ந்தேதி காலையில் காங்கிரஸ் பிரமாண சட்டத்தைப் பற்றிய நகல் ஒன்று ஸ்ரீ திலகருக்குக் கிடைத்தது. அப்பிரமாணசட்டம் ஸ்ரீ கோகலேயால் தயாரிக்கப்பட்டது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த இதர்கள் அனைய

விப்பதுபோல இந்தியா சுய ஆட்சியை யடைவதே இந்திய ஜாதிய காங்கிரஸ் சபையின் இலட்சியம்' என்று இருந்தது. ஸ்ரீ திலகர், அன்று காலையிலேயே தீவிரகட்சியைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்கு உபந்யாசஞ் செய்தார். திலகர் கட்சியினர்கள் காங்கிரஸ் மகாசபையில் வராவண்ணம் தடுக்க 'காங்கிரஸ் பிரமாணம்' தயாரிக்கப்பட்டிருக்கிறதென்றும், அங்ஙனம், அவர்கள் இப்பிற்போக்கான பிரமாணத்தை வாய்க வாங்கிக்கொண்டால், அக்கிராசனரின் தேறுதலை ஆட்சேபிப்பதில்லையென்றும் ஸ்ரீ திலகர் கூறினார். உடனே அங்கு கூடியிருந்த பிரதிநிதிகள் கையெழுத்திட்டு, பழைய நான்கு தீர்மானங்களை மீண்டும் அங்கீகாரஞ் செய்ய எடுத்துக்கொள்ளவேண்டுமென்று டாக்டர் கோஷுக்கு விண்ணப்ப மொன்றை யனுப்பினார்கள். 25-ந் தேதி காலையில் லாலாஜபதிராய் சூரத் நகர்வந்து சேர்ந்தார். பலவின் அபிப்பிராயபேதம் ஏற்பட்டிருக்கும் விஷயத்தை சமரஸப்படுத்த இருகட்சியைச் சேர்ந்த சில தலைவர்களுடைய ஆலோசனைக் கூட்டமொன்றைக் கூட்டுவிக்க தாம் இஷ்டப்படுவதாக ஸ்ரீ திலகருக்கும் கபர்தேயுக்கும் தெரிவித்தார். ஸ்ரீ திலகரும் கபர்தேயும் அதற்குச் சம்மதித்தார்கள். லாலா ஸ்ரீ கோகலேயிடம் சென்றார். அன்று மாலையில் தீவிர கட்சியினர்களின் மகா நாட்டுக்கு ஸ்ரீ திலகரும் கபர்தேயும் சென்றார்கள். அந்த மகா நாட்டில், சமாதான விஷயமாக ஆலோசித்துத் தீர்ப்பு செய்ய ஒவ்வொரு மாகாணத்தைச் சேர்ந்த முக்கிய பிரதிநிதியொருவரை நியமித்து கமிட்டி யொன்று ஏற்படுத்தப்பட்டது. தவிர, கல்கத்தா தீர்மான விஷயங்களை ஒருவித சமாதானமும் உண்டாகாமற் போகுமானால், தீவிர கட்சியினர்கள் காங்கிரஸ் சபையில் அக்கிராசனர் தேறுதல் முதலியவை ஆட்சேபித்து வரவேண்டுமென்றும் அம் மகா நாட்டில் தீர்மானிக்கப்பட்டது. லாலா



ஜபதிராய் 25-ந் தேதி இரவிலும் மறுநாள் உதயத்திலும் ஸ்ரீ திலகர் முதலானோரைப் பார்க்க வரவில்லை. சமாதான விஷயமாக ஒரு தகவலும் ஸ்ரீ திலகர் முதலானோருக்குத் [illegible] தீர்மான நகலும் ஸ்ரீ திலகருக்காகிலும் மற்ற பிரதிநிதிகளுக்காகிலும் கிடைக்கவில்லை. 26-ந் தேதி காலையில் ஸ்ரீ திலகரும் இதர தீவிர கட்சியைச் சேர்ந்த பிரதிநிதிகள் சிலரும் சுரேந்திரநாத பானர்ஜியிடம் சென்றனர். (1) ஏற்கனவே தீர்மானமான நான்கு தீர்மானங்களை மாற்றாமற்படி அப்படியே அங்கீகரிக்க வேண்டும். (2) லாலா லஜபதிராயே அக்கிராசனராக இருக்க வேண்டுமென்று சனங்கள் விரும்பின விஷயமாக அவரை கௌரவிக்க சில சொற்கள் கூறவேண்டும் என்று இவ்விரண்டே தீவிர கட்சியினர்களின் நோக்கம் என்பதை ஸ்ரீ திலகர் பானர்ஜிக்குத் தெரிவித்து அதுவிஷயமாக ஏதாகிலும் சமாதானஞ் செய்யும்படி கேட்டார். பானர்ஜி அக்கிராசனர் தேறுதல் பிரேரபணையைத் தாமே ஆமோதிக்கப் போவதால், கட்டாயம் லாலா விஷயமாகக் கூறுவேன் என்று உறுதிகாட்டி, முதல் தீர்மான விஷயமாக என்னைப் பொறுத்தமட்டில் எனக்கு ஆட்சேபணை இல்லையென்றும், இதர மிதவாதிகள் எவ்வாறு இருக்கிறார்களோ தெரியாதெனக்கூறி, ஸ்ரீ கோகலேயைப் பார்க்கும்படி ஸ்ரீ திலகருக்குக் கூறினார். ஸ்ரீ திலகர் உடனே, ஒரு துண்டு கடிதத்தை எழுதி வரவேற்பு கமிட்டித் தலைவர் ஸ்ரீ மாலவி அவர்களை பானர்ஜி இருக்கும் இடத்திற்கு வரும்படி இச்சா சேவகனிடம் அனுப்பினார். ஸ்ரீ மாலவியோ, தாம் பூஜையிலிருப்பதால் வரமுடியாதென்று பதில் சொல்லி யனுப்பிவிட்டார். மணி 11 மணி ஆய்விட்டபடியால் ஸ்ரீ திலகர் தம்முடைய போசனத்திற்குச் சென்றார். ஒரு மணி நேரம் கழித்த பிறகு ஸ்ரீ திலகர் காங்கிரஸ் மண்டபத்திற்கு வந்தார். ஸ்ரீ மால்வியைப் பார்க்கத் தம்மா

லான பிரயத்தனங்களைச் செய்தார். கடைசியாக மாலை 3-மணிக்கு முன்னே, 'அக்கிராசனர் ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்யத் தாம் இருப்பதாகவும் இப்பொழுது ஸ்ரீ திலகரைப் பார்க்க முடியாதென்றும் கூறி அனுப்பினார். டிஸெம்பர் மாதம் 26-ந் தேதி காங்கிரஸ் சபை 2½-மணிக்கு ஆரம்பிக்கும் வரை இருகட்சிக்கும் இருந்த நிலைமை எத்தன்மையதென நம் வாசகர்களே யறியட்டும். காங்கிரஸ் சபையின் நடவடிக்கை ஆரம்பம் வரை சமாதானத்திற்கு ஒரு மார்க்கமும் ஏற்படவில்லை. லாலா விஷயமாக ஒன்றையும் கூற வேண்டாமென்று ஸ்ரீ திலகர் பானர்ஜிக்கு ஒரு கடிதம் எழுதியனுப்பினார். பிறகு தயாரிக்கப்பட்டிருந்த தீர்மானங்களை வேண்டுமென்று ஸ்ரீ மாலவியக்குக் கடிதமொன்றை எழுதியனுப்பினார். 25-ந் தேதியே 'அட்வொகேட் ஆப் இந்தியா' பத்திரிகையின் நிருபருக்கு அத்தீர்மான நகல் கிடைத்தும் ஸ்ரீ திலகருக்கு 26-ந் தேதி மாலை 3 மணிக்கே கிடைத்தது. சபை தொடங்கிற்று. வரவேற்பு கமிட்டித் தலைவர் ஸ்ரீ மால்வியின் பிரசங்கமும் முடிந்தது. அக்கிராசனரைத் தெரிந்தெடுக்கும் தீர்மானத்தை திவான் பகதூர் அம்பாலால் சாகர் லால் பிரேரேபித்தார். பிறகு, அந்த ஆமோதிக்க சுரேந்திரநாத பானர்ஜி எழுந்து பிரசங்கிக்க வாய் திறந்தார். வங்காள மாகாணத்தில் மித்நபூரியில் நடந்த கான்பரன்ஸில் போலீசாரை விட்டு ஸ்ரீயுத அரவிந்தர் முதலிய பல தீவிர கட்சியினர்களை அப்புறப்படுத்த பானர்ஜி காரணமாயிருந்ததை நினைத்துப் பல தீவிர கட்சியினர்கள் சுரேந்திரநாத பானர்ஜியைப் பேச விடாமற்படி. கூக்குரலிட்டனர். பானர்ஜி பேசும்படி பல முயற்சி செய்தும் ஒன்றும் பலிக்கவில்லை. கடைசியாக அன்று சபையை மறுநாள் கூட்ட ஒத்தி வைக்கப்பட்டது. அன்று இரவு 8-மணிக்கு காங்கிரஸ் வரவேற்பு கமிட்டியின் உபதலைவரும்



இந்தியன் ஸ்பீசி பாங்கு மனேஜருமான ஸ்ரீ சன்னிலால் சாய்யுது அவர்களும் மற்ற இரு கனவான்களும் ஸ்ரீ திலகரிடம் வந்து, ஸ்ரீ கோகலேயும் ஸ்ரீ திலகரும் சம்பாஷிக்கும்படி [illegible] ஏற்பாடு செய்வதாகக் கூறினர். ஸ்ரீ திலகர் அதற்குச் சம்மதித்து, 'நான் கோகலேயைப் பார்க்க வேண்டிய இடமும் நேரமும் தயவு செய்து குறிப்பிட்டால் அவ்வண்ணமே நான் வருகிறேன்' என்று தெரிவித்தார். ஸ்ரீ சன்னிலால் அவர்கள் அன்றிரவு வரவேயில்லை. மறுநாள் டிஸம்பர் மாதம் 27-ந் தேதி வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு ஸ்ரீ சன்னிலால் ஸ்ரீ திலகரிடம் வந்து, 'தாங்கள் கபர்தேயுடன் கூடி காங்கிரஸ் பந்தலுக் கருகாமையிலுள்ள பண்டிதர் கஜார் அவர்களின் பங்களாவுக்குப் போனால், உங்களுக்காக அவரும் டாக்டர் ருதர் போர்ட்டும் காத்திருப்பார்கள்' என்று கூறினர். ஸ்ரீ திலகரும் ஸ்ரீ கபர்தேயும் அவ்வண்ணமே பண்டிதர் கஜார் கிருகத்திற்குச் சென்றார்கள். டாக்டர் ருதர் போர்ட் அங்கில்லை. ஸ்ரீ திலகர் கட்சியினுடைய நோக்கத்தையும் சமாதானத்துக்குரிய வழியையும் கூறி, ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் தீவிர கட்சியைச் சேர்ந்தவ ரொருவரும் மிதவாதி கட்சியைச் சேர்ந்தவ ரொருவருமாக ஒரு கமிட்டியை ஏற்படுத்தி அதில் டாக்டர் ருதர் போர்டையும் சேர்த்துக் கொண்டு இரு கட்சியினுடைய வாதங்களையும் அவைகளுக் குரிய காரணங்களையும் ஆலோசித்துப் பார்த்து, கடைசியில் அக்கமிட்டி எங்ஙனம் முடிவு செய்கிறதோ அவ்வண்ணமே தாங்கள் கட்டுப்பட்டு இருக்கிறோமென்றும் தெரிவித்தார். பிறகு அக்கிராசனருடைய [illegible] ருக்கமாக அங்கீகரிக்கலாம் என்றும் ஸ்ரீ திலகர் கூறினர். பண்டிதர் கஜாரும் ஸ்ரீ சன்னிலாலும் மேடா முதலானோர்க்கு ஸ்ரீ திலகரின் எண்ணத்தைத் தெரிவிக்க ஒத்துக் கொண்டார்கள். அங்

ஜனாமே மேடா முதலானோரைக் கண்டனர். அவர்கள் முடியா தென்றார்கள். கன்னிலால் மீண்டும் ஸ்ரீ திலகரிடம் வந்து உங்கள் விருப்பமாக ஒன்றும் செய்ய முடியா தென்றார். அங்ஙனம் பதில் வந்தபொழுது மணி 12½ ஆயிற்று. அப் பதில் வந்ததும் ஸ்ரீ திலகர் உபசாரணை கமிட்டித் தலைவர் ஸ்ரீ மாள்வி அவர்களுக்குப் பின் வருமாறு கடிதமொன்றை எழுதியனுப்பினார்.

ஐயா,

அக்கிராசனர் தேர்தலைப் பிரேரேபித்து ஆமோதித்த உடன் பிரதிநிதிகளைப் பார்த்துப் பேச நான் எண்ணியுள்ளேன். கட்டுப்பாடான ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதால், காங்கிரஸ் நடவடிக்கையைச் சற்று நிறுத்தி வைக்க நான் பிரேரேபிக்கப் போகிறேன். தயவு செய்து எனக்குத் தெரிவியுங்கள். உங்கள் உண்மையுள்ள,

பாலகங்காதர திலகர்
தக்ஷிண பிரதிநிதி (புனா)

அன்று காங்கிரஸ் நடவடிக்கை பகல் 1-மணிக்கு ஆரம்பமாயிற்று. சுரேந்திரநாத பானர்ஜீ தம்முடைய அக்கிராசனர் தேர்தலை ஆமோதிக்கும் பிரசங்கத்தை ஆரம்பித்தார். முந்தின நாள்போல ஒருவரும் சத்தஞ் செய்யாமல் நிதானமாய்க் கேட்டனர். அவர் பிரசங்கம் முடிந்தது. ஸ்ரீ திலகர் தாம் அனுப்பின கடிதத்துக்குப் பதில் வாராதிருக்கவே மீண்டும் ஞாபகமூட்ட ஒரு கடிதத்தை யனுப்பினார். அப்பொழுதும் ஸ்ரீ மாள்வி மௌனமாயிருந்தார். அதற்குள் சுரேந்திரநாத பானர்ஜீ பிரசங்கித்[illegible] அவர் முடித்ததும் ஸ்ரீ திலகர் மேடையின் முன்பாகப் போனார். போகையில் ஒரு தொண்டன் அவரைத் தடுத்தான். ஸ்ரீ திலகர் அத் தொண்டனைத் தள்ளிவிட்டு மீண்டும் மேல்நோக்கிச் சென்



றார். அந்த காலை டாக்டர் கோஷ் தம்முடைய அக்கிராசனர் ஸ்தானத்தை வகிக்கப் போகையிலேயே தான், ஸ்ரீ திலகர் மேடையின்மீது நின்றது. ஸ்ரீ திலகர் பிரசங்க மேடையின்மீது அக்கிராசனருக்கு முன்பாக நிற்பதைக் கண்ட வரவேற்புக் கமிட்டி அங்கத்தினர் பலர் ஆரவாரஞ் செய்தனர். உடனே, இதர மிதவாதிகளும் கூக்குரலிட வாரம்பித்தனர். பிரதிநிதிகளுக்குத் தாம் பேசவேண்டிய உரிமையைக் கொண்டு பேசப்போகிறேன் என்றார். டாக்டர் கோஷ் கூடாதென்றார். உடனே, ஸ்ரீ திலகர் 'நீங்கள் இன்னும் சரிவர அக்கிராசனர் பதவிக்குத் தெரிந்தெடுக்கப் படவில்லை' என்றார். ஸ்ரீ திலகரின் பிரேரேபணையை நீதியல்லவென்று தாம் நிராகரித்துவிட்டதாக ஸ்ரீ மாள்வி, தம்முடைய உபசாரணைத் தலைவர் ஹோதாவில் கூறினார். நீதியல்லவென்று ஒருக்கால் இருக்குமாகில், பிரதிநிதிகளிடம் தெரிவிக்க எனக்கு உரிமையுண்டென்று ஸ்ரீ திலகர் தெரிவித்தார். சபையிலுள்ள மிதவாதிகள் ஸ்ரீ திலகரை 'உட்கார்' 'உட்கார்' என்றும் தீவிர கட்சியினர்கள் 'பேசுங்கள்' 'பேசுங்கள்' என்றும் கூறினார்கள். அந் நிலைமையில் டாக்டர் கோஷும் ஸ்ரீ மாள்வியும் ஸ்ரீ திலகரை, உடனே, அப்புறப்படுத்த வேண்டுமென்றார்கள். வரவேற்பு கமிட்டி காரியதரிசி பதவியை வகித்திருந்த ஒரு கனவான் ஸ்ரீ திலகரைத் தொட்டு இழுக்க ஆரம்பித்தார். ஸ்ரீ திலகர் தம்முடைய கையால் அவரைத் தள்ளிவிட்டு, 'இந்த இடத்தினின்றும் பலவந்தமாக அப்புறப்படுத்தப் பட்டாலன்றி மேடையைவிட்டு நான் போகேன்' என்று கைகளைக் கட்டிக்கொண்டு வெகு கம்பீரமாக நின்றார். ஸ்ரீ திலகரைத் தொட்டிழுத்த கனவானை ஸ்ரீ கோகலே, ஸ்ரீ திலகருடைய தேகத்தைத் தொடாதீர்கள் என்று எச்சரிக்கை செய்தார். பலர் ஸ்ரீ திலகரை வாயில் வந்தவண்ணம் தூற்றினர். அந்த

அல்லோல கல்லோலத்தில்தான், ஒரு செருப்பு ஸுரேந்திர நாத பானர்ஜியின்மீது பட்டு மேடாவின் முகத்தில் அடித்தது. ஸுரேந்திரநாதரும் மேடாவும் ஸ்ரீ திலகர் நின்ற இடத்திற்கு ஒருகஜதூரத்திற்குள் மேஜைக்கு அடுத்த பக்கமாக உட்கார்ந்திருந்தனர். ஸ்ரீ திலகரை அடிக்க அச் செருப்பு எறியப்பட்டதென தீவிர கட்சியினர்களும், மேடாவை அடிக்கவே அச் செருப்பு எறியப்பட்டதென மிதவாதிகளும் இன்னும் கூறிக்கொண்டே யிருக்கின்றனர். அது விஷயம் உண்மை புலப்படவில்லை, ஸ்ரீ திலகர்மீது நாற்காலிகளை எறிய பல மிதவாதிகள் ஆரம்பித்தனர். ஆனால், தீவிர கட்சியைச் சேர்ந்த சிலர் ஸ்ரீ திலகரை ரக்ஷிக்க முன் வந்தனர். டாக்டர் கோஷ் தம்முடைய அக்கிராசனோபந்யாசத்தைப் படிக்க இருமுறை ஆரம்பித்தும், 'வேண்டாம்' 'வேண்டாம்', என்று கூக்குரலிட்டு அடக்க முடியாவண்ணம் பிரதிநிதிகள் செய்தனர். சபையில் சமாதானத்தை உண்டாக்க முடியாவண்ணம் இருந்ததால் சபையை கால் குறிக்காமல் ஒத்திவைத்தனர். காங்கிரஸ் பந்தலில் டாக்டர் கோஷின் உபந்யாசம் படிக்கப்படவில்லையாயினும், அத்தனை பத்திரிகைகளில் அப்பிரசங்கம் வெளிவந்தன. கல்கத்தா பத்திரிகைகளில் பிரசுரமான அப் பிரசங்கத்தைப் படித்த சில தீவிர கட்சியினர்கள் தங்கள் கட்சியைப் புண்படும்படியாகத் தாக்கி எழுதப்பட்டுள்ளதென சூரத் நகரில் வந்திருக்கும் அரவிந்தர் முதலானோருக்குத் தந்திஅடித்தனர். தீவிர கட்சியினர்களுக்கு அடக்க முடியாத கோபம் உண்டாயிற்று. ஸ்ரீ மோதிலால் கோஷ், ஏ. ஸி. மித்ர, ஸி. சாட்டர்ஜி, லாலா ஹரிகிஷன்லால் ஆகிய இவர்கள் ஸ்ரீ திலகரிடம் வந்து ஒரு சமாதானத்தை பண்ணுவதென்ன யோசித்து தீவிர கட்சியினருடைய நோக்க மென்னவென்று கேட்டனர். ஸ்ரீ திலகர் தம்முடைய யோசனையைக் கூறி தம்



கைப்பட ஒருகடிதமொன்றையும் உறுதிமொழியாக எழுதிக் கொடுத்தார். அது பின்வருமாறு :—

சூரத், டிசம்பர் 28, 1907.

அன்புள்ள ஐயா,

[illegible], சென்ற வருடத்திய காங்கிரஸ் தீர்மானங்களான ஸ்வராஜ்யம், ஸ்வதேசியம், பஹிஷ்காரம், ஜாதிய கல்வி இவைகளை மீண்டும் இவ் வருடம் அங்கீகரித்து உறுதிப்படுத்தவேண்டும். இரண்டாவதாக, தீவிர கட்சியினர்களுக்கு மன வருத்தத்தைக் கொடுக்கக்கூடிய வார்த்தைகள் டாக்டர் கோஷின் உபந்யாசத்தில் இருந்தால், அவைகளை நீக்கிவிடவேண்டும். இவ்விரண்டையும் செய்தால், நாம் [illegible]படி நானும் என்னுடைய கட்சியினரும் காங்கிரஸ் மகா சபையின் நன்மையை யுத்தேசித்து 23-வது காங்கிரஸ் மகா சபைக்கு டாக்டர் ராஷ் விஹாரி கோஷின் அக்கிராசனபதவி தேர்தலை ஆட்சேபிக்காமல், நடந்தவை யாவற்றை மறந்தும் மன்னித்தும் விட்டு விடுகிறோம்.

உங்கள் உண்மையுள்ள,
பாலகங்காதர திலக்.

இக் கடிதத்தை எடுத்துக்கொண்டு மிதவாதிகளிடம் போய் காண்பித்து சமாதானமுண்டாக்க முயன்றும் பயன்படவில்லை. மிதவாதிகள் கல்கத்தா தீர்மானத்தை மாற்றிப் பிற் போக்காகப் போக நிச்சயித்திருந்ததால் ஒருவித சமாதானமும் உண்டாகவில்லை. சமாதானத்திற்கு அவர்கள் வர [illegible]மதுதான் மிதவாதிகள் காங்கிரஸ் பந்தலிலேயே தங் [illegible]டன்படிக்கைக் கூட்டம் கூடினர். அக்கூட்டத்தில் ஒரு தீவிர கட்சியினரும் வரவிடவில்லை. இரண்டொரு தீவிர கட்சியினர் மிதவாதிகளின் ஒப்பந்த உடன்படிக்கையில் கையெழுத்திடுகிறோம் என்று கூறியும் அவர்கள் உள்ளே

வர வொட்டாமற்படி தடுக்கப்பட்டனர். தீவிர கட்சியினர்களும் தனியே ஓரிடத்தில் கூடி இனி நாட்டில் செய்யக்கூடியவன்றிய வேலை திட்டங்களைப்பற்றி யோசித்தனர். இந்தியாவின் இலட்சியம் ஸ்வராஜ்யமே என்று கூறுபவர்களைக் காங்கிரஸ் சபைக்குள் பிரவேசிக்காமற்படி செய்ததைப் பற்றிப் பல பத்திரிகைகள் இகழ்ந்தன. [illegible] நீதிமன்றத்திலும் பூர்ண சுதந்தரத்துடன் கூடிய ஸ்வராஜ்யத்தைக் கேட்பது சட்ட விரோதமல்லவென்று தீர்மானிக்கப்பட்டிருக்க மிதவாத நீதிவான்கள் அதை அங்கீகரிக்கவில்லை. ஸ்ரீ கோகலே அவர்கள் சூரத் நகரில் காங்கிரஸ் உடைபட்டதற்குப் பிறகு தீர்மானங்களை மாற்றின விஷயத்தில் வேண்டுமென்று செய்யவில்லையென்றும் பகிஷ்கார தீர்மானம் ஒன்று தவிர, மற்ற சுதேசியம், ஜாதிய கல்வி இவ்விரண்டு தீர்மானங்களிலும் சிற்சில சொற்கள் சேர்க்கப்பட்டன என்றும் சமாதானம் சொல்லியுள்ளார். சில சொற்களின் அவசியத்தைப் பெரிதாகக் கருதினாரேயன்றி, நாட்டின் விஷயத்தில் ஐக்கியத்தைப் பெரிதாக ஸ்ரீ கோகலே கருதினதாகத் தெரியவில்லை. ஸ்ரீ கோகலேயும் தன் ஆயுள் பரியந்தம் தாய்நாட்டுக்கு விசேஷமான தியாகமும் ஊழியமும் செய்தவராதலால், அவரைப்பற்றி அதிகமாகக் கூற யாம் இஷ்டப்படவில்லை. என்றாலும், ஸ்ரீ திலகர் விஷயத்தில் அவர் நடந்து கொண்டது மட்டும் மிக குரூரமான தென்பதே எமது அபிப்பிராயம். சுருக்க, 1908-ம் வருடத்திலிருந்து 1915-ம் வருடம் வரை காங்கிரஸ் மகா சபையானது கேவலம் ஜனரஞ்சக உணர்ச்சியற்று உயிரற்றிருந்து வந்தது. 1916-ம் வருடம் லக்ஷ்மணபுரி (லக்னௌ)யில் காலஞ்சென்ற அம்பிகாசரண் மஜும்தார் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் கூடின காங்கிரஸ் மகாசபை மீண்டும் ஸ்ரீ திலகருடைய புனர்ப் பிரவேசத்தால் புத்துயிர் பெற்றது. தாமரை இல்



லாத தடாகம் போலும், சந்திரனில்லாத வானம் போலவும் ஸ்ரீ திலகர் இல்லாமல் காங்கிரஸ் சபை சிறப்புற்றிருக்கவில்லை. மிதவாதிகளின் காங்கிரஸ் இப்பொழுது தீவிரகட்சியினரின் மகா சபையாக ஆயிற்று. மிதவாதிகள் தனி சபையை ஏற்படுத்திக் கொண்டனர். ஆனால், தீவிரகட்சியினர் சில காலம் காங்கிரஸ் சபையைவிட்டு நீங்கியிருந்தும் காங்கிரஸுக்கு விரோதமாகத் தனிச் சபையொன்றை அவர்கள் ஸ்தாபிக்கவில்லை. இத்தேசாபிமான உணர்ச்சியே இருவர்க்கும் உண்டான வித்தியாசம்.

## 8. மிதவாதிகளின் சூழ்ச்சி.

சூரத் காங்கிரஸ் பிளவுக்குக் காரணம் யார்? கல்கத்தா தீர்மானங்களை உறுதிப்படுத்தாமல் பிற்போக்கடையச் செய்தது யார்? சூரத்காங்கிரஸ் பிளவைக் கண்டு களித்தது யார்? என்னும் இக்கேள்விகளுக்குப் பதில் மிதவாதிகளே கூறட்டும். சூரத் காங்கிரஸ் பிளவுக்குப் பிறகு ஸ்ரீ திலகர் பின்வருமாறு கூறியுள்ளார்.

'நாட்டின் நன்மையை விருத்தி செய்யும் உண்மையான பக்தியுடனேயே மிதவாதகட்சி, தீவிரகட்சி ஆகிய இவ்விரு கட்சியைச் சேர்ந்த நபர்கள் தேச ஊழியம் செய்து வருகின்றனரென்பதை இருகட்சியினர்களும் ஞாபகத்திலிருத்திக் கொள்ள வேண்டும்; நாட்டின் க்ஷேமத்திற்கு எவரும் உழைக்கவில்லை என்பதை மட்டும் ஒவ்வொருவரும் அறிய வேண்டும். இவ்வெண்ணத்தை மனதிற் கொண்டு அபிப்பிராய பேதம் நாட்டின் அபிவிருத்தித் துறையில் இருக்கத்தான் செய்யுமென்று கொண்டும்; அபிப்பிராய பேதம் நாட்டின் அபிவிருத்தியைக் காட்டும் இலட்சணமென்று கொண்டும், ஒவ்வொரு கட்சியினரும் உழைத்து வருவார்களானால் பகைமைக்கும் சச்சரவுக்கும் இடமில்லை. சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை என்பதை ஒவ்வொரு கட்சியினரும் அறியவேண்டும்; அபிப்பிராய பேதங்களிருப்பினும் பல காரியங்களில் ஒற்றுமையுடன் சேர்ந்து உழைக்கலாம். ஒரு கட்சியினர் மற்றொரு கட்சியினரை இல்லாமற்படி செய்யவேண்டுமென்பது உதவாது. நாட்டின் அபிவிருத்தியை வளர்க்கக் கூடிய சபைகளில் மிதவாதிகளின் ஆதிக்கம் அதிகமாயிருப்பினும் அல்லது தீவிர கட்சியினர்களின் ஆதிக்கம் அதிகமாயிருப்பினும் ஒருவர் மற்றொருவரை அடித்துத் தாக்குவதென்பதை விட்டுவிட வேண்டும். புதிய கட்சியார் உண்டானதின் நிமித்தம் அதிகாரவர்க்கத்தினர் மிதவாதிகளைத் தட்டிக் கொடுத்து வருகின்றனர். தங்களுடன் சேரும்படி அழைக்கின்றனர். மிதவாதிகளுடைய போக்குக்கு அருவெறுப்பைக் கொடுக்கக் கூடியதாக தீவிர கட்சியினருக்கு இருப்பினும், மிதவாதிகளின் சொல்வார்த்தையும் சௌகரியத்தையும் மறுக்க முடியாது. ஆகவே, இருகட்சியும் ஒன்றோடொன்று சேர்ந்து உழைப்பதால் ஒவ்வொரு கட்சியும் பரஸ்பரம் நன்மையைக் கொள்ள இடமுண்டு. நாட்டில் உண்டாகும் கஷ்டங்களை தீவிர கட்சியினர்களே சகித்து வரவேண்டும்; மிதவாதிகளோ அதனுடைய பலன்களை அநுபவிப்பவர்களாயிருப்பார்கள். தீவிர கட்சியினர்களோடு சேருவதால் அதிகாரிகளின் கோபத்திற்கும் நிந்தைக்கும் மிதவாதிகள் பாத்திரமாகக் கூடும். அங்ஙனம், அதிகாரிகள் மிதவாதிகளைத் அன்புறுத்த நேர்ந்தால் அல்லது கோபிக்க நேர்ந்தால் 'ஐயா எங்களுக்கும் தீவிர கட்சியினருக்கும் இராஜீய விஷயங்களில் அபிப்பிராய பேதங்களுண்டு; என்றாலும், அவர்கள் எங்களைச் சேர்ந்திருக்கும் வரையில் நாங்கள் அவர்களை விட்டுக் கொடுக்க மாட்டோம்' என்று தைரியமாகக் கூறவேண்டும். தீவிர கட்சியினர்களிற் சிலர் அன்னிய அரசாங்கமின்றிப் பூர்ண சுதந்தரமுள்ள ஸ்வராஜ்யத்தை இலட்சியமாகக் கருதுகிறது வாஸ்தவமே. அங்ஙனம், கருதுவதை லார்ட் மார்லி கூட சட்டவிரோதம் என்றேனும் தீயதென்றேனும் கூறவில்லை. தவிர, தீவிர கட்சியினர்களிற் சிலர் பிரிட்டிஷ் சாமான்களின் பகிஷ்காரத்துடன் இராஜீயத் துறையில் அரசாங்க உத்தியோக முதலிய பகிஷ்காரங்களையும் கையாளுகின்றனர். அப்பொழுதும் மிதவாதிகள் தீவிர கட்சியினர்களுடன் ஒத்துழைக்கலாம். இந்

தழைப்பதில் ஒருவித தவறுமில்லை. ஆகவே, இவ்விஷயங்களை ஒவ்வொருவரும் மனதில் பதிய வைத்துக்கொண்டு வேலைசெய்ய முன் வருவார்களானால், இருகட்சிக்கும் உள்ள ஒற்றுமை சாசுவதமாகவே யிருக்கும்.'

ஸ்ரீ திலகர் இங்ஙனம் கூறினதற்கு விபரீதமாக டாக்டர் ராஷ் விஹாரிகோஷ் தம்முடைய அக்கிராசனர் பிரசங்கத்தில் பின்வருமாறு கூறியுள்ளார். 'தீவிர கட்சியோ, நாட்டின் வருங்கால நன்மையைத் தடுக்கவந்த தூர்க்குறியான ஒருசாரை. காங்கிரஸ் சபையில் அதற்கு இடமில்லை. காங்கிரஸை விட்டு நீங்குவதே அதற்கு சரியானவழி. தீவிர கட்சியினர்கள் மிக்க ஆபத்துக்குள் ளிருக்கின்றனர். அவர்கள் இல்லையென்று மறுக்கலாம். ஆனால் அவர்களை இராஜத் துரோகத்தி லிறக்குகின்றனர்.'

டாக்டர் கோஷ் 1908-ம் வருடத்தில் மேற்கூறிய வசனங்களைக் கூறினாரென்றாலும், கடைசியாக ஸ்ரீ திலகரின் கொள்கையே சரியென்றும், தீவிர கட்சியினர்களுக்கே நாட்டில் இடமுண்டென்றும் தம்முடைய நண்பரொருவருக்குப் பின்னர் கூறினாரென்று தெரியவந்தது. சிறந்த, மிதவாதிகளில் அநேகர் புனா நகரில் ஆசார சீர்திருத்தங்களின் வழியைப்பற்றி விதவாவிவாகம், சமபந்தி போசனம், ஜாதி வித்தியாசம் பாராட்டாமை முதலியவைகளால் ஜனங்களுக்குரிய இராஜீய சுதந்தரங்களைப் பிரதிஷ்டை செய்யப்பட்டு வந்தகாலத்தில், ஸ்ரீ திலகர் பாரத ஜாதீய உணர்ச்சியை மகா ஜனங்களுக்கு நாட்டின் மதவழியின் மூலமாகவும், சரித்திரவழி மூலமாகவும், சமூக வாழ்க்கையின் மூலமாகவும் உண்டுபண்ணி வந்தார். ஸ்ரீ திலகர் மகாராஷ்டிரத்தில் முதல் முதல் கணபதி உற்சவத்தையும் சிவாஜி உற்சவத்தையும் பிரதிஷ்டை செய்தார். ஸ்ரீ திலகர் இறந்தும்,



இவ் வுற்சவங்கள் மகா ராஷ்டிரத்தில் வெகு விமரிசையாகப் பிரதிவருடமும் நடந்து வருகின்றன. ஸ்ரீ திலகருடைய ஞாபகச் சின்னங்களாக இவ்விரண்டு உற்சவங்களும் நடந்து வருகின்றன. கணபதி உற்சவம் 1893-ம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஜனங்களின் மத உணர்ச்சியையும் படித்தவர்களின் தேசாபிமான உணர்ச்சியையும் இவ் வுற்சவம் எழுப்பிற்று. இவ்வுற்சவம் மகாராஷ்டிர நாட்டுக்கும் சர்வ சாதாரணமாய் விட்டது. கணபதி உற்சவ காலத்தில் கணக்கற்ற ஜனங்கள் கூடி விழா நடத்திப் பல பிரசங்கங்களைச் செய்வர். சாமானிய ஜனங்களுக்கு இவ் வுற்சவம் சிறந்த இராஜீய போதனையாக யிருந்தது. யுவர்கள் இச்சா சேவகர்களாகச் சேர்ந்து பொதுஜன சேவகம் செய்ய சந்தர்ப்பம் ஏற்பட்டது. சமூக ஊழியம், தேசாபிமானம், மதாபிமானம் முதலிய நற்குணங்கள் இந்த உற்சவத்தினால் ஏற்பட்டன. மிதவாதிகளிற் பலரும் சீர்திருத்தக்காரர்கள் அனைவரும் இந்த உற்சவத்தையும் ஸ்ரீ திலகரையும்பற்றி ஏளனஞ் செய்தனர். ஜனங்களின் மூட பக்தியையும் ஜாதிப் பிரிவினையையும் அதிகப்படுத்துவதற்கே ஸ்ரீ திலகர் இந்த உற்சவத்தை ஏற்படுத்தினரென அவர்கள் கூறித் திலகரைத் தூற்றினர். காங்கிரஸ் மகா சபையைச் சேர்ந்த மாகாண ஜில்லா சபைகளின் இருப்பை சனங்கள் அறியமாட்டார்கள்; ஆனால் ஸ்ரீ திலகரையும் கணபதி உற்சவத்தையும் அறியாத பாமரனில்லை. பிறகு ஸ்ரீ திலகர், பிராமணர்கள் பிராமணர்க ளல்லாதவர்கள், மிதவாதிகள் மற்று இராஜீயவாதிகள், ஜமீன்தார்கள், சாதாரண குடித்தனக்காரர்கள் ஆகிய இவர்களை ஒன்று சேர்க்கவேண்டுமென்று கருதி, பாமரர்களுக்குச் சிறந்த இரத்தினமாயிருந்து தேசத்தை அன்னியர் வசத்தினின்றும் நீக்கித் தனி இராஜ்ய மொன்றை ஸ்தாபித்து அறத்தாலும் மறத்தாலும் மிக்கே

சினைப் புகழ்பெற்ற * சிவாஜி மகாராஜாவின் உற்சவத்தைக் கொண்டாட சிவாஜி உற்சவத்தை ஸ்ரீ திலகர் 1895-ம் வருடத்தில் பிரதிஷ்டை செய்தார். முதல் சிவாஜி உற்சவத்திற்கு மகாராஷ்டிரத்திலுள்ள பல ஸமஸ்தான மன்னர்களும், பல ஜாகீர்தார்களும் இனாம்தார்களும் வந்தனர். பல சீர்திருத்தக்காரர்களும் வந்தனர். ஸ்வாமி இராமதாஸ் அவர்களின் வழியாக வந்த சந்நியாஸி யொருவரும் அவ்வுற்சவத்திற்கு விஜயஞ் செய்தார். முகம்மதியர்களிற் சிலரும் வந்திருந்தனர். தனவந்தர்களும் ஏழைகளுமாகப் பல வகையினர் வந்திருந்தார்கள். இங்ஙனம் இரண்டு வருடகாலம் வெகு ஆடம்பரத்துடன் எல்லா ஜாதியாரும் வந்து கூடிவருவதைக் கண்ட அதிகார வர்க்கத்தினர்கள் சகிக்கவில்லை. 1897-ம் வருடத்தில் ஸ்ரீ திலகர் தம்முடைய 'கேசரி' பத்திரிகையில் சிவாஜி மகாராஜாவால் ஸ்ரீமுகம் ஒன்று கூறப்பட்டதாக ஒருகவி தம்முடைய கவி சாதுர்யத்தைக் காட்டிப் பாமாலை தொடுத்திருந்ததை வெளியிட்டார். அதற்காக ஸ்ரீ திலகரை இராஜ நிந்தனை குற்றத்திற்காகச் சிறைப்படுத்தினதிலிருந்து அரசாங்கத் தயவுக்கு நச்சி யிருப்பவர்களும், அரசாங்கத்தாரால் ஜீவிப்பவர்களுமான பலர் சிவாஜி உற்சவத்திற்கு அன்று முதல் வருவதைத் தவிர்த்தனர். தவிர, மிதவாதிகளும் ஆசார சீர்திருத்தக்காரர்களும் அரசாங்கத்தின் கோபத்திற்குப் பாத்திரமாகக் கூடாதென்று கருதி, ஸ்ரீ திலகரைத் தன்னந் தனியே விட்டு விட்டு சிவாஜி உற்சவத்தண்டை வரப் பயந்து ஒதுங்கி நின்றனர். இவ்வளவு நிலைமையிலும் சிவாஜி உற்சவம் வருடந்தோறும் மிகச் சிறப்பாய் நடந்து வருகிறது. பஜனைக் கூட்டங்களும், உபந்யாசங்களும், ஊர்

* இந் நூலாசிரியரால் எழுதப்பெற்ற சிவாஜி மகாராஜாவின் சரித்திரம் விலை ரூ. 1.



வலங்களும் விசேஷமாக நடைபெறும். சிவாஜி உற்சவம், மகாராஷ்டிரத்தில் மட்டுமின்றி பாரதநாடெங்கும் கொண்டாடப்பட்டு வருவதுடன், ஜப்பான், இங்கிலாந்து முதலிய தேசங்களிலும் கொண்டாடப்பட்டு வருகின்றது. சிவாஜி உற்சவத்தை யுண்டாக்கி முகம்மதியர்களின் ஆத்திரத்தையுண்டாக்கவே ஸ்ரீ திலகர் பாடுபடுகிறார் என்று பல மிதவாதிகள் கூக்குரலிட்டனர். இந்து முகம்மதிய ஒற்றுமையைப்பிரித்து முகம்மதியர்களை யாதரிக்கப் புகுவில் அதிகார வர்க்கத்தினர் பாடுபடுவதை யறிந்த ஸ்ரீ திலகர், அரசாங்கத்தார் 'பிரித்து ஆள்' என்னும் இராஜதந்திரத்தைக் கையாளயிருக்கின்றனரென முதல் முதல் ஜனங்களுக்கு எச்சரிக்கை செய்தார். பல மிதவாதிகள் ஸ்ரீ திலகர் அவ்வண்ணம் கூறினதைக் கண்டித்தனர். பிறகு, ஸ்ரீ திலகர் கூறியது உண்மையென அவர்களே யறிந்தனர் என்றாலும், ஸ்ரீ திலகர் வாயால் ஒன்றும் வரக்கூடாதென்பதே மிதவாதிகளின் நோக்கமாதலால், அவர் எதைச் சொன்னபோதிலும் அதற்கு விரோதமாகச் செய்வதையே மேற்கொண்டு வந்தனர். 1906-ம் வருடத்தில் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மகா சபை சமயத்தில் ஸ்ரீ திலகரும் மற்ற சில மராட்டி நண்பர்களும் தேசபந்து சித்தரஞ்சன தாஸ் அவர்களுடைய கிரகத்தில் வந்திறங்கினர். அப்பொழுது லக்னௌ நகரைச் சேர்ந்த மிதவாதி யொருவர் ஸ்ரீ திலகரிடம் வந்து, காங்கிரஸ் கட்சிக்குள் பேதமுண்டாக்கிப் பிரிவினை ஏற்படுத்துகிறீர் என்று அவரைக் குறைகூறி, ஐயா! 'முகம்மதியர்கள் என்ன செய்து வருகின்றார்கள் என்பதை நீங்கள் அறிவீர்களா? அவர்கள் இந்துக்களுக்கு விரோதமாக ஒற்றுமைப்பட்டு சர்வ இஸ்லாம் சமூக (Pan Islamic) இயக்கமொன்றை ஆரம்பிக்கப் போகின்றனர் என்று அம் மிதவாதி கூறினார். அப்பொழுது, அம் மிதவாதியின் வார்த்தையைக் கண்டு புன்முறுவ

துடன். 'நீங்கள் கூறுவது உண்மைதானு' என்று ஸ்ரீ திலகர் கேட்டார். அந்த நண்பர் 'நான் உங்கள் முன் எப்படி யிருப்பது உண்மையோ அப்படியே, அதுவும் உண்மை. நான் சில கடிதங்களைக் கண்டேன். நீங்கள் இந்துக்களைப் பிரிக்கப் பிரிக்க, முகம்மதியர்கள் ஒன்று சேர்ந்து நம்மை அழுத்தப் பார்க்கின்றனர்' என்றார். உடனே ஸ்ரீ திலகர் சிறு நகைகொண்டு, கம்பீர தொனியுடன், 'அப்படியானால் நமக்கு விடுதலை சீக்கிரமே வந்துவிட்டது. முகம்மதியர்கள் ஒன்று சேர்ந்திருப்பதாக அரசாங்கத்தார் நினைத்தால், அத் தட்சணமே அவர்கள் முகம்மதியர்களுக்கு விரோதமாக இருப்பர். கவர்ன்மெண்டார் தங்கள் பேரில் விரோதம் காட்டித் துன்புறுத்த நினைக்கிறார்களென்று முகம்மதியர்கள் அறிந்தால், அவர்கள் நம்முடன் சேர்வர்' என்றார். ஸ்ரீ திலகர் கூறியபடி பாரதசனசபைக்கு விரோதமாக முதல் முதல் முஸ்லிம் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. முஸ்லிம் சங்கம் காங்கிரஸ் சபையுடன் ஒத்துழைக்க 1916-ம் வருடத்தி லிருந்து ஆரம்பித்தது. அங்ஙனம் உழைத்துவர ஆரம் பித்ததும், இந்து முகம்மதிய ஒற்றுமை பஞ்சாப் மாகாணத் தில் குற்றமாக ஆயிற்று. ஆகவே, ஸ்ரீ திலகர் வரும் பொருளை யுணர்த்தும் சிறந்த ஞானியென நாம் அறிய லாம். சிறக, ஸ்ரீ திலகரின் இராஜீயக் கொள்கையையும் உண்மையை யுள்ளபடி அறிவிக்கும் தன்மையையும் கண்ட மிதவாதிகள் அவருடைய சேர்க்கையை யொழிக்கப் பல விதத்திலும் முயன்று வந்தனர். 1895-ம் வருடத்தில் உண்டான அபிப்பிராய பேதத்தினுல் புனு சார்வ ஜனிக சபையில் பலமான கட்சி ஏற்பட்டது. 1899-ம் வருடமுதல் ராணடே அவர்கள் நடுநாயகமாய் விளங்கி வந்தார். அவருடைய வார்த்தை வசிஷ்டர் வாக்கென அங்கத்தினர்கள் கொண்டு தலையசைத்து வந்தனர். அவருடைய ஒவ்வொரு வார்த்தை



யையுஞ் சரிசரியென்று கூறி தலையசைக்குந் தன்மையை ஸ்ரீ திலகர் கொண்டிராததால், சிற்சில விஷயங்களில் அவருடைய அபிப்பிராயத்திற்கு விரோதமாகவே ஸ்ரீ திலகர் போரும் படியாகவே நேர்ந்தது. அபிப்பிராய பேதங்கொண்டிருந்த தினுல் ஸ்ரீ திலகரை ராணடே கட்சியினர் தங்கள் விரோதி யெனக் கருதிவந்தனர். இந்தியாவில் சாதாரணமாக அபிப் பிராயபேதம் உண்மையில் கொண்டிருப்பவர்களை விரோதிக ளென வெகு சீக்கிரத்தில் தீர்மானித்து விடுகின்றனர். ஒரு சபையில் ஒன்றிரண்டு அங்கத்தினரோ அல்லது சில அங்கத்தினர்களோ தங்கள் மனதிற் படும் எண் ணங்களைத் தைரியமாக வெளியிட்டுக் கூறுவதைப் பலர் சகிப்பதில்லை. அபிப்பிராய பேதங்களை முகமலர்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளும் குணம் பல தலைவர்களுக்கு இந்தி யாவில் உண்டாகவில்லை. அபிப்பிராய பேதம் இராஜீயத் துறையில் கொண்டிருப்பவர்கள் மற்ற பொதுக் காரியங்களி லும் சில சமயங்களில் குடும்ப காரியங்களிலுங் கூட பேதத்தை வளர்த்து வேறுச் சண்டையிட்டுப் பகைமை யைக் கொண்டு நிற்கின்றனர். சுதந்தர ஸ்தாபனத்திற்குப் போராடும் இராஜீயவாதிகள் இராஜீய அபிப்பிராய பேதத் தைக்கொண்டிருப்பவர்களின் வார்த்தைகளை நாராசம் காய்ச்சி நடுச் செவியில் ஊற்றினற்போலக் கொண்டு சதா அவர்களைத் தூற்றுவதையே பெரிய கடமையென்று பாராட்டி வருகின்றனர். இராஜீய விஷயங்களில் உண்டா கும் அபிப்பிராய பேதங்கள் ஒவ்வொன்றையும் அமரிக்கை யுடன் போற்றிக் கவனித்து வரவேண்டும். இக் குணமில் லாததினுலேயே இந்தியாவில் பல சபைகள் பல கட்சிப் பிரிவுகளுக்கு உட்பட்டு வந்தன. அவ்வாறே, 1895-ம் வருடத்தில் புனு சார்வ ஜனிக சபையில் கட்சி ஏற்பட்டது. ராணடே அதனுடைய பெரும்பான்மையோரின் பக்கத்தைக்

கொண்டிருந்தார். ஸ்ரீ திலகர் பிறகு அப் பெரும்பான்மையோரின் பலத்தைப் பெற்றார். சானடே கட்சியினரது காலமாகத் தங்களிஷ்டப்படி அச்சபையின் நடவடிக்கைகளை நடத்திக்கொண்டு வந்ததால், ஸ்ரீ திலகர் அவர்களுக்கு முட்டுக்கட்டையாயிருப்பதை அவர்கள் சகிக்கவில்லை. அது விஷயமாகக் கட்சி பேதம் உண்டாயிற்று. ஸ்ரீ திலகரைச் சேர்ந்தவர்களின் தொகை அச் சபையில் அதிகமாக இருந்தது. ஒவ்வொரு காரியத்தையும் ஸ்ரீ திலகர் தமக்குச் சாதகமாகவே சாதித்துக் கொண்டு இருக்கக்கூடுமானாலும், அவர் அவ்வண்ணம் எண்ணவில்லை. கட்சி பேதம் அதிகப்படுவதை யறிந்து கோகலே அவர்கள் இரு கட்சியினர்க்கும் மத்தியஸ்தஞ் செய்ய ஆரம்பித்தார். ஆனால், அவர் தம் கட்சிக்குச் சாதகமாக இருப்பதை வற்புறுத்தி மத்தியஸ்தம் செய்ய வந்தாரே யன்றி, நடுநிலைமையைக் கொண்டு செய்ததாகத் தெரியவில்லை. (1) அச்சபையின் நிர்வாக அங்கத்தினர்கள் இருகட்சியைச் சேர்ந்தவர்களில் சமதொகையினராக இருக்கவேண்டும் (2) அக்கிராசனர் இப்பொழுது இருப்பவரே இருக்கவேண்டும் (3) இது காறும் சபைக்கு இருகாரியதரிசிகள் இருந்ததை விட்டு மூன்று காரியதரிசிகள் நியமிக்கப்படவேண்டும்; அம்மூன்று காரியதரிசிகளில் பெருந்தொகையாளர் (ஸ்ரீ திலகரின் கட்சியினர்)களைச் சேர்ந்தவர் ஒருவரே காரியதரிசியாக இருக்கவேண்டும் என்று ஸ்ரீ கோகலே சமாதான உடன்படிக்கைத் திட்டமொன்றைக் கொண்டு வந்தார். ஸ்ரீ திலகரின் கட்சியினர் பெரும்பான்மையோராகச் சபையிலிருந்தும் அக்கட்சிக்கு ஒரே காரியதரிசி யென்றும் சிறுபான்மையோரைச் சேர்ந்த கட்சிக்கு இருகாரியதரிசி யென்றும் கோகலே கூறினது விந்தையே. அக்கிராசனர் சிறுபான்மை கட்சியைச் சேர்ந்தவர். ஸ்ரீ கோகலே தம் கட்



சிக்கு [illegible]பலமுண்டாக்க அவ்வேற்பாடு செய்தது சகி[illegible] போக்கையாகும். ஸ்ரீ திலகர் கட்சியினர் அவ்வேற்பாட்டிற்கு ஒப்புக்கொள்ளவில்லை. உடனே மிதவாதிகள் ஸ்ரீ திலகரைக் காரியதரிசி பதவியை விட்டு நீக்கப் பாடுபட்டனர். ஸ்ரீ திலகர் அம்மிதவாதிகளின் மனப்படியே தம்முடைய காரியதரிசி பதவியை இராஜீநாமா செய்தார். அப்பொழுதும், மிதவாதிகள் திருப்தியடையவில்லை. அவர்களுக்குச் சாதகமாக மற்ற பெரும்பான்மையோரை அங்கத்தினர்களில்லை. கடைசியாக, ஸ்ரீ திலகர் இருக்கும் சபையில் தாங்களிருப்பது கூடாதென வெண்ணி, அம்மிதவாதிகள் தங்களுக்கென்றே ஒரு புதியசபையை ஸ்தாபித்து போ[illegible] செய்து 1895-ம் வருடம் நவம்பர் மாதத்தில் '[illegible] சபை' என்னும் பெயரைக் கொண்ட ஒரு சபையை [illegible]த்தனர். அன்று முதல் தட்சிணசபை மிதவாதிகளின் சபையாகவும் சர்வஜனிகசபை தீவிர கட்சியினர்களின் சபையாகவுமாயிற்று. இராஜீயத்துறையில் அபிப்பிராய பேதமுண்டாகிப் புதியசபைகள் ஸ்தாபிப்பதினால் பாதகமில்லை. ஆனால், புதிய சபையை ஸ்தாபிப்பவர்கள் பழைய சபையைத் தூற்றிப் பிறகு ஸ்தாபிப்பது பெருந்தன்மை யாகமாட்டாது. தட்சிணசபை புண்டானதும் சானடே விஷயமாகவும் கட்சி விஷயமாகவும் ஸ்ரீ திலகர் பின்வருமாறு எழுதியுள்ளார்.

"ஆசார சீர்திருத்தத்துறையில் உண்டாகும் அபிப்பிராய பேதங்களில் மிதவாதிகளென்றும் தீவிர கட்சியினரென்றும் நாம் கூறக் கேட்டிருக்கிறோம். ஆனால், இராஜீயத்துறையில் அத்தகைய பெயரினைக்கொண்ட கட்சிகளை நாம் அங்கீகரிக்கமாட்டோம். பிரிட்டிஷ் அரசாங்கத்தை ஸ்ரீ திலகர் அழித்துவிடப் போகிறாரா? அல்லது சானடேயும் கோகலேயும் அரசாங்கத்தைக் காப்பாற்றப் போகின்றார்

களா? மிதவாதியென்று தன்னைத்தான் அழைத்துக்கொண்டு மற்றவர்கள் ஏதோ இராஜநிந்தனை வழியில் இறங்கி அதற்குரிய காரியங்களைச்செய்து கஷ்டத்தில் இறங்குகின்றனர் என்று சாற்றுவது மிகவும் அவிவேகத்தனம். சர்வஜனிக சபை எப்பொழுதாகிலும் முடியாத காரியங்களில் இறங்கி தீவிர வழியைப்பற்றி யிருந்திருந்தால், அது கோகலேயின் காலத்திலேயே தீவிரமாகப்போய் அரசாங்கத்தினிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டது. இராஜநிந்தனைச் சின்னங்கள் இருக்கிறதென்று அரசாங்கத்தார் சந்தேகப்பட்டிருப்பதை எப்படியாகிலும் ஒழித்துவிட அச்சபையின் அக்கிராசனர் ரானடே அவர்களே மிக்க பிரயாசை எடுத்துக்கொண்டார். அவர் சபையின்மீது அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருந்த சந்தேகத்தை நீக்க மன அமைதியின்றி இரவும் பகலும் உழைத்திருந்ததை நாமெல்லோரும் அறிவோம். அதையெல்லாம் அறிந்திருந்த ரானடே சபையின்மீது குற்றஞ் சொல்லித் திரிவது தனக்குப் பெரும்பான்மையோருடைய பலம் இல்லாத காரணத்தினாலன்றோ''?

இந்தப் பிரிவினை காரணமாகவே அதிகாரவர்க்கத்தினர் மிதவாதிகளைத் தட்டிக்கொடுத்து தீவிரகட்சியினர்களை அரசாங்கத்தார் துன்புறுத்தி வந்ததற்கு மிதவாதிகள் தனியே ஒதுங்கி நின்றதே சான்றும். மிதவாதிகள் தனிப்பட்டு ஒதுங்கி நின்றதிலேயே, பூனாவில் 1897-ம் வருடத்தில் ஸ்ரீ திலகர் இராஜநிந்தனை குற்றத்திற்காகத் தண்டனை யடைந்தார். 1899-ம் வருடத்தில் ஸ்ரீ திலகர் மீண்டும் இருகட்சி ஒற்றுமைப்பட்டு சேர்வதைத் தெரிவித்தும் மிதவாதிகள் அதைக் கவனிக்கவில்லை. கனம் பராஞ்சபே அவர்கள் இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் உயர்ந்த பட்டம் பெற்றுப் பூனாவுக்குத் திரும்பிவந்ததற்காக, அவருக்கு மரியாதைசெய்ய ஒருகூட்டம் கூடின காலத்தில் மித



வாதிகள் ஸ்ரீ திலகரை யழைக்கவேயில்லை. அக்கூட்டத்தைக் கூட்டினவர்கள் அரசாங்கத்தின் ஆதரவையும் அதிகாரிகளின் தயவையும் சம்பாதிப்பதிலேயே கருத்தைச் செலுத்தினார்களாதலால் ஸ்ரீ திலகர் முதலானோர்கள் வருவதை அவர்கள் இஷ்டப்படவில்லை. மிதவாதிகளின் மனப்பான்மையும்மட்டோடு நிற்கவில்லை. 1900-ம் வருடம் பிப்ரவரிமாதத்தில் பம்பாய் கவர்னர் ஸாண்ட்ஹர்ஸ்ட் பிரபு வேலையினின்றும் நீங்கி இங்கிலாந்துக்குப்போக யிருந்தார். கவர்னர் பதவியினின்றும் விலகின அவருக்குப் பொதுசனங்களின்பேரால் நல் உபசாரப்பத்திரமும் ஒரு ஞாபகச் சின்னமும் ஏற்படுத்த டாக்டர் பாலசந்திரரும், ஸர் சந்தாவர்க்காரும் இயக்கமொன்றை யுண்டாக்கினர். ஸர் டின்ஷா வாச்சாவும் ஸர். சிமன்லால் ஸெடல்வாடும் அவ்வியக்கத்துக்கு விரோதமாக யிருந்தும், ஸர் மேத்தா அவர்கள் அவ்வியக்கத்திற்குச் சாதகமாக யிருந்து வந்ததால், மேத்தாவுக்கு விரோதமாக வாச்சாவும் ஸெடல்வாடும் போக இஷ்டப்படவில்லை. ரானடே அவர்கள் அவ்வியக்கத்தில் பட்டும் படாததுமாக யிருந்தார். என்றாலும், ஸாண்ட் ஹர்ஸ்ட் பிரபுவுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு தோட்டக்கச்சேரி விருந்தில் ரானடே, அவரைச் சந்தோஷப்படுத்தித் தானும் சந்தோஷங்கொண்டார். பம்பாய் மாகாணத்தின் தலைநகரில் இவ்வளவு கேவலமாகத் தலைவர்கள் நடந்துகொண்டு வருவதைப்பற்றி ஸ்ரீ திலகர் மிகவும் வருந்தினார். ஸர் ரிச்சர்ட் டெம்பில், லார்ட் ஹாரிஸ் முதலிய கவர்னர்கள் வேலையினின்றும் நீங்கின காலங்களில் அவர்களுக்கு உபசாரப் பத்திரங்கள் கொடுக்க வேண்டுமென்று சிலர் முன்வந்ததைக் கண்டித்த ஸர் மேத்தா இப்பொழுது ஸாண்ட் ஹர்ஸ்ட் பிரபுவுக்குச் சம்மதித்ததைக் கண்டு ஸ்ரீ திலகர் வியப்படைந்தார். 1899-ம் வருடத்தில் லக்னௌ நகரில் நடந்த காங்கிரஸ் மகாசபைக்கு அக்கிராச

னம் வகித்த ரோமேஷ சந்திர தத்தர் முன்னிலையில் விஷய ஆலோசனை சபையில் ஸ்ரீ திலகர் பம்பாய் மாகாணத்தில் ஸாண்ட் ஹர்ஸ்ட் பிரபுவின் ஆட்சிமுறையின் ஆக்ஷேபணையைக் கண்டிக்கத் தீர்மான மொன்றைக் கொண்டுவந்தார். ஆனால், பலர் அதற்கு விரோதமாக இருந்தனர். அத்தீர்மானத்தை எதிர்த்த பிரதிநிதிகளுக்கெல்லாம், வெகு ஆதாரமாக ஸாண்ட் ஹர்ஸ்ட் பிரபுவின் அரசாட்சியில் உண்டான அநியாயங்களை ஒன்றொன்றாக எடுத்துக் கூறிவந்தார். அவருடைய வார்த்தைகளுக்குக் குறுக்கே ஒருவரும் போக முடியவில்லை. என்றாலும், மிதவாதிகள் அத்தீர்மானம் கூடாதென்று பிடிவாதம் பிடித்தார்கள். 'ஸ்ரீ திலகர் தம்முடைய தீர்மானத்தைக் கொண்டுவர வற்புறுத்துவாரானால், நான் அக்கிராசனப் பதவியினின்றும் விலகிக்கொள்வேன்' என்று ரோமேஷ தத்தர் பயமுறுத்தினார். ஸ்ரீ திலகர் இந்த அற்ப விஷயத்திற்காகக் காங்கிரஸில் பிரிவினை வேண்டாமென்று கொண்டு தம் தீர்மானத்தை வாபஸ் வாங்கிக்கொண்டார். 1900-ம் வருடம் மே மாதத்தில் ஸதாரா நகரில் நடந்த பம்பாய் மாகாண கான்பரன்ஸில் மீண்டும் ஸாண்ட் ஹர்ஸ்டின் ஆட்சிமுறையைக் கண்டிக்கும் தீர்மானமொன்றை ஸ்ரீ திலகர் கொண்டு வந்தார். மாகாண மகாநாட்டு அக்கிராசனர் கோகுல்தாஸ் கே. பரேக் என்பவரும் அக்கிராசனர் பதவியைவிட்டு விலகிக்கொள்வதாகப் பயமுறுத்தினார். ஸ்ரீ திலகர் பக்கம் பல பிரதிநிதிகள் அத்தீர்மானத்தை ஆதரிக்க விரும்புவதை யறிந்த அக்கிராசனர் ஒரு சமரஸ ஏற்பாட்டைச் செய்தார். அத்தீர்மானத்தை வெளிப்படையாக பிரேரேபிக்காமல், மகாநாடு நடவடிக்கைக் குறிப்பில் குறிக்கப்பட்டால் போதுமென்று அக்கிராசனர் கூறவே, ஸ்ரீ திலகரும் மற்ற அவருடைய நண்பர்களும் ஒற்றுமையை நாடி அதற்கு ஒத்துக்கொண்டார்கள். அம்மகாநாட்டுக்கு வந்த



180 பிரதிநிதிகளில் ஸ்ரீ திலகருக்குச் சாதகமாக 124 பிரதிநிதிகள் இருந்தனர்.

மிதவாதிகள் கேவலம் சமயோசித வாதிகளாக நின்று நாட்டின் ஜனநாயக உணர்ச்சியை விருத்தியாக வொட்டாமல் அடிக்கடி முட்டுக்கட்டை யிட்டுவந்தது சாலவும் விசனிக்கத்தக்கது. காங்கிரஸ் மகாசபையை 1890-ம் வருடத்திலேயே விட்டுவிட்டு அதன் இயக்கத்தில் 10 வருடகாலம் கலக்காமலிருந்தவர் சந்தவர்க்காரை இடைசென்று 1900-ம் வருடத்திய காங்கிரஸுக்கு அக்கிராசனராகத் தெரிந்தெடுத்ததின் காரணமும், அன்னார் அரசாங்கத்தாரிடம் மிக்க மதிப்பும் ஆதரவும் பெற்றிருந்ததே. தவிர, சந்தவர்க்கார் ஐகோர்ட் ஜட்ஜியாக நியமிக்கப்போவதையும் அறிந்து, மிதவாதிகள் அவரை அக்கிராசனர் பதவிக்குத் தெரிந்தெடுத்தார்கள். ஆனால், 20 வருடகாலம் தேசமகாசனங்களின் இடையே பல ஆபத்துக்களைத் தாங்கிக் கஷ்டப்பட்டு சதா தியாக புத்தியுடன் ஊழியஞ்செய்த ஸ்ரீ திலகரை மிதவாதிகள் தெரிந்தெடுக்காததின் காரணம் அவர் அரசாங்கத்தினிடத்தில் ஆதரவு பெறாததேயாம். மிதவாதிகள் பேருக்கு மாத்திரம் காங்கிரஸ் மகாசபையில் சேர்ந்து சுதந்தரத்திற்குப் பாடுபடுவதாகக் காட்டி, தங்கள் இலட்சியத்தையெல்லாம் அரசாங்க உயர்தர உத்தியோகங்களுக்கும், கௌரவப் பட்டங்களுக்கும் கொண்டிருந்தனர். மிதவாதிகளில் ஸ்ரீ கோகலே ஒருவர் தவிர, ஏனைய மிதவாதிகளைவரும் அரசாங்க உத்தியோகங்களையும் மற்ற ஆதரவுகளையும் கொண்டு வாழ்ந்து வந்தனர். மிதவாதிகளின் தாமஸத்தன்மையை யறிந்தே 'காங்கிரஸ் பிதா' என்று அழைக்கப்படும் ஏ. ஓ. ஹியூம் என்பவர் பின்வருமாறு கூறியுள்ளார்.

'இந்தியாவிலும் இங்கிலாந்திலும் நீங்கள் செய்யும் விடாமுயற்சியினாலுமே, சீக்கிரமாகவோ

அல்லது சந்தர்ப்ப தாமதமாகவோ உங்களுடைய உரிமையைப் பற்றிக் கவனிக்க கவர்ன்மெண்டுக்கு ஓர் உணர்ச்சியுண்டாகும். நீங்கள் காங்கிரஸில் கூடுகிறீர்கள்; காங்கிரஸ் நடவடிக்கை நடக்கும்பொழுது சந்தோஷத்தையும் அபரிமிதமான உற்சாகத்தையும் காட்டுகிறீர்கள். நீங்கள் நன்றாகவும் தங்குதடங்கலின்றியும் பேசுகிறீர்கள். காங்கிரஸ் முடிவானதும் ஒவ்வொருவனும் வீட்டுக்குத் திரும்பி அவனவன் சொந்த அலுவல்களைப் பார்க்கிறான். சில வருடங்களுக்கு முன் நீங்கள் முன்னின்று வெகு முயற்சியுடன் பிரயாசப்பட வேண்டும் என்று கூறினேன். அந்தந்த சமூகத்திலேயே அந்தந்த சமூகம் ஸ்தாபிக்கப்படும் என்று உங்களுக்கு நான் எச்சரிக்கை செய்தேன். நீங்கள், அதைக் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை. ஆனால், நீங்கள் அரசாங்கத்தைப் பின்பற்றி வீணில் அலைகிறீர்கள். எத்தனைபேர்கள் கஷ்டம் அனுபவிக்கத் தயாராக யிருக்கிறீர்கள்? ஏ. ஓ. ஹியூம் இவ்வண்ணம் கூறினதைத் தான் பற்பல சமயங்களில் ஸ்ரீ திலகர் மிதவாதிகளுக்குக் கூறினார். 'மாமி உடைத்தால் மண் கலம், மருமகள் உடைத்தால் பொன்கலம்' என்பதுபோலாயிற்று. ஸ்ரீ திலகருடைய இடைவிடாத முயற்சிக்கும் மிதவாதிகளின் மயக்கத்திற்கும் ஒற்றுமை எப்படி யுண்டாகும்? தீவிர கட்சியினர்களை மிதவாதிகள் பகைத்து வெறுத்ததினாலேயே அரசாங்கத்தார் மிதவாதிகளின் துணை தமக்குண்டென நினைத்துத் தலைதெரியாமற்படி அடக்குமுறைத் தாண்டவமாடினர். தீவிர கட்சியினர்களின் மகத்தான கஷ்டங்களுக்கு மிதவாதிகளே ஜவாப்தாரிகள் என்பது மிகையல்ல; அரசாங்கத்தார் அடக்குமுறைகளைத் தொடுத்த காலங்களில் மிதவாதிகள் அம்முறைகளைச் சற்றேனும் கண்டிக்காமல் ஒதுங்கி நின்றதின் காரணமாய்ப் பல தீவிர கட்சியினர்கள் சிறைபுகுந்து கஷ்டப்பட்டனர். தீவிரகட்சியினர்



கள் சிறைபுகுந்து புகுந்து வரவும் மிதவாதிகள் படிப்படியாக அதிகார உத்தியோகங்களை வகித்து வரவுமாயிற்று. சூரத் காங்கிரஸ் பிளவுக்குக் காரணமாய் நின்ற மிதவாதிகளின் அடாத செயல்களினாலேயே 1908-ம் வருடத்தில் நாடெங்கும் அடக்குமுறை யுண்டாயிற்று. ஸ்ரீ திலகர் 1908-ம் வருடத்தில் இராஜத்துவேஷக் குற்றத்திற்காகத் தண்டனை பெற்றது மிதவாதிகளின் அசிரத்தையும் ஸ்ரீ திலகரிடத்தில் அவர்கள் காண்பித்த வெறுப்புமே காரணம். ஸ்ரீ திலகர் தண்டனையடைந்த துக்க சமாசாரத்தைக் கேள்வியுற்ற பாரதமக்கள் பல இடங்களிலும் அனுதாபக் கூட்டம் கூடினார்கள். பம்பாய் நகரில் அனுதாபக்கூட்டம் கூடிற்று. ஸர் மேடா பம்பாயிலிருந்தும் அக்கூட்டத்திற்கு வரவில்லை. கனம் கோகலே அவர்கள் அப்பொழுது இங்கிலாந்தி லிருந்தார். லண்டன்மாநகரில் ஸவர்க்கார் முதலான யுவதேசாபிமானிகள் ஸ்ரீ திலகருக்கு அனுதாபக் கூட்டம் ஒன்று கூட்டினர். கோகலேயை வரும்படிவேண்டியும் அவர் வரவில்லை. கோகலே அந்தக் கூட்டத்திற்கு அக்கிராசனம் வகிக்கும்படி பிரார்த்திக்கப்பட்டும் அவர் அந்தக் கூட்டத்தில் எவ்வழியிலும் சேர்ந்துகொள்ள சம்மதிக்கவில்லை. ஸ்ரீ திலகருக்காக ஒரு கூட்டம் கூட்டக் கோகலே கடமைப்பட்டும், அவர் தம் கடமையை வழுவினது அவர் வாழ்க்கையில் பெரிய தவறுதலாக ஆயிற்று. ஸ்ரீ கோகலேயின் நடத்தை பலருக்கு மிக்க வருத்தத்தை யுண்டுபண்ணிற்று. தன்னைப் பெரிதாகக் கருதினரேயல்லாது, ஸ்ரீ திலகருடைய கஷ்டத்தையும் தேசத்தின் ஜனங்களுடைய வேண்டுகோளையும முக்கியமாக அன்னார் கருதவில்லை. ஸ்ரீ திலகருக்கு அனுதாபங்காட்டுவதற்காக ஏற்பட்ட கூட்டத்தில் தாம் கலந்து கொண்டால் அரசாங்கத்தார் தம்மை இராஜாங்க விரோதியென்று எங்கு அழைக்கின்றனரோ அல்லது சந்தேகப்படு

யின்றனரோ என்ற பயத்தாலன்றோ கோகலே லண்டனிலிருந்த தம்தேசத்தாரின் வேண்டுகோளுக் கிணங்காமல் இருந்தார். இவ்வளவும், மிதவாதிகள் காட்டிவந்த வெறுப்பும் பகைமையுமே அடக்குமுறைக்குக் காரணமாயிருந்ததால், மிதவாதிகளே தீவிரகட்சியினர்களின் துன்பத்திற்குக் காரணமா யிருந்தவர்கள் என்று கூறுவது எவ்வளவும் மிகையாகாது. நாட்டில் அதிகாரவர்க்கத்தாரால் அடக்குமுறை யுண்டாகும் காலங்களிலெல்லாம் மிதவாதிகள் அரசாங்கத்தாருடன் சேர்ந்தோ அல்லது ஒதுங்கியோ யிருந்தார்களே யல்லாது, உண்மையாக அரசாங்கத்தின் முஷ்டிகளைக் கண்டிக்கவில்லை என்பதை நாம் மிக்க வருத்தத்துடன் ஈண்டு கூறுகிறோம்.

## 9. புதிய கட்சி

மிதவாதிகளின் உணர்ச்சியற்ற செயல்களினின்றுமே காங்கிரஸ் சபையில் புதியகட்சி யுண்டாயிற்று. நாட்டின் ஜனநாயக உணர்ச்சிக்கு ஆதாரமாய் நின்றது இப்புதிய கட்சியே. நாட்டின் அரசியல் சீர்திருத்தங்களுக்குக் காரணமாய் நின்றதும் இக்கட்சியே. இக்கட்சி 1905-ம் வருடத்தில் பகிரங்கமாகப் பிரசன்னமாயிற்று. 1899-ம் வருடத்திலிருந்தே புதிய கட்சியுண்டாகும் சின்னங்கள் இருந்தன. ஸ்ரீ காசியில் கூடிய காங்கிரஸ் மகாசபையில் தக்க முஸ்திப்புடன் இக்கட்சி அணிவகுத்து நின்றது. வங்காளப் பிரிவினை யுண்டாயிற்று. வங்கநாட்டில் ஜனநாயக உணர்ச்சி ஆரம்பித்தது. சுதேசியம், பகிஷ்காரம் என்னும் இரு அஸ்திரங்களைப் புதிய கட்சியினர்கள் தங்கள் சுதந்தரங்களின் தற்காப்புக்காகத் தாங்கினர். சாத்வீக எதிர்ப்பையும் அவர்கள் மேற்கொண்டனர். பல யுவர்கள் தேசத் தொண்டு செய்ய இச்சாசேவகப்படையில் சேர்ந்தனர். கவர்ன்மெண்டார் மாணவர்களை இராஜீயப் பிரசங்கங்களின் கூட்டங்களுக்குப் போகக்கூடாதென உத்திரவு செய்தனர். உடனே பல மாணவர்கள் பள்ளி பகிஷ்காரஞ் செய்தார்கள். வங்காளத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் வெளிவந்ததைக் கண்ட புதியகட்சித் தலைவர்கள் ஜாதீய கலாசாலைகளை ஸ்தாபித்தனர். ஸ்ரீ அரவிந்தர் போதகாசிரியராக முன்வந்தார். அதிகாரவர்க்கத்தைச் சேர்ந்த சிப்பந்திகளின் தூண்டுதலினால் பல முகம்மதியர்கள் இந்துக்களைத் தாக்கினர். இந்து வியாபாரிகளின் கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன. மாதர்கள் கற்பழிக்கப்பட்டார்கள். இவ்வித துன்பங்களைப் புதிய கட்சியினர் ஆரம்பத்தில் தாங்கினர். லாலா லஜபதிராயும்

ஸர்தார் அஜித் ஸிங்கும் நாடுகடத்தப்பட்டதுபோலவே வங்காளத்தில் அசுவினி குமாரதத்தர் உள்பட ஒன்பதுபேர்கள் நாடு கடத்தப்பட்டனர். விபின சந்திரபாலர், அரவிந்தர், கபர்டே, ஜி. சுப்பிரமணிய ஐயர் முதலானோர் ஸ்ரீ திலகருக்குச் சகாயமாகப் புதியகட்சியைப் பலப்படுத்த வாரம்பித்தனர். காங்கிரஸ் சபையைச் சீர்திருத்தி ஜனநாயக உணர்ச்சியை யூட்டும் உயிருள்ள சபையாக்க வேண்டுமென்னும் நோக்கத்தையே பெரிதாகக்கொண்டு புதியகட்சி காங்கிரஸ் சபைக்குள்ளும் வெளியும் வேலைசெய்து வந்தது. ஒரு இயக்கத்தை யறிவதற்கு மூன்று குணங்கள் வேண்டும். (1) அவ்வியக்கத்தால் உண்டான காரியசித்தி (2) அவ்வியக்கத்தால் ஜனங்களுக் குண்டான மனோதிடமோ அல்லது மனோசக்தி (3) அவ்வியக்கத்தால் நாட்டில் உண்டான மாறுதல் ஆகிய இம்மூன்றேயாம். சுதேசிய உணர்ச்சியினால் அன்னிய நாட்டுச் சாமான்களின் இறக்குமதி குறைந்தது. மகாராஷ்டிரத்தில் பைசாநிதி சேகரித்துத் தொழிற்சாலையை ஸ்ரீ திலகர் ஸ்தாபித்தார். பம்பாய், மத்திய மாகாணம், வங்காளம் முதலிய மாகாணங்களில் தொழிற்சாலைகள் உண்டாயின. தேசியக் கல்வியின் பிரசாரம் பலப்பட்டது. மதுவிலக்கு பிரசாரம் செய்யப்பட்டது. தேச பாஷைகளுக்கு ஓர் உணர்ச்சியுண்டாயிற்று. தேச ஆசாரங்களுக்கும் தேச பாஷைகளுக்கும் தேச சம்பிரதாயங்களுக்கும் புதிய சகாப்தம் ஏற்பட்டது. புதிய கட்சியினர் அரசாங்கத்தாரிடம் நம்பிக்கை வைக்காமல் தேசத்தினிடத்தில் நம்பிக்கை வைத்தனர். இங்கிலாந்திலுள்ள மகா சனங்களிடத்தும் பார்லிமெண்ட் சபையாரிடத்தும் நம்பிக்கை வைக்காமல் பாரத சனங்களிடத்து நம்பிக்கை வைத்து வரலாயினர். மிதவாதிகளோ, பிரிட்டிஷ் அரசாங்கத்தினிடத்தும் இந்திய அதிகார வர்க்கத்தினரிடத்தும் நம்பிக்கை கொண்டு அவர்களைத்



தாங்கி வரலானார்கள். அதிகாரிகளின் செயல்களைக் கண்டிக்கும் பாவனையை நீக்கினர்; அரசாங்கத்தினிடத்தில் உயர்ந்த சக்தியுண்டென நினைத்தும், சனங்களிடத்தில் பலக் குறைவுண்டென நினைத்தும், சதா அரசாங்கத்தைத் தழுவியே வரலானார்கள். ஆகவே, புதியகட்சியினர் தங்களுடைய இலட்சியத்தையும் அந்த இலட்சியத்தை யடைய மார்க்கங்களையும் அம்மார்க்கங்களில் உபயோகப்படுத்தும் கருவிகளையும் நன்றாக அமைத்தனர். புதிய கட்சி முதல் முதல் வங்காளத்தில் பிறந்ததாயினும் கடைசியாக பாரதநாடெங்கும் பரவிற்று ஸ்ரீ திலகரே புதிய கட்சிக்குத் தலைவரானார். ஸ்ரீ திலகர் சுரேந்திரநாத பானர்ஜியைப்போன்ற வாக்குவல்லமை பெற்றிருந்தால், பழைய கட்சியை இருந்த இடந்தெரியாமல் செய்திருக்கக்கூடும் எனப் பலர் கூறினர். ஸ்ரீ திலகர் வசனமாரி பொழியும் இயல்பினைப் பெற்றிருக்கவில்லையாயினும், அவருடைய உபந்யாசம் ஒவ்வொன்றும் மனதைப் பரவசமாக்கக் கூடியது. பானர்ஜீ முதலானோரின் பிரசங்கம் பிரசங்க காலத்தில் மட்டும் உணர்ச்சியை யுண்டாக்குமேயல்லாது மற்ற காலங்களில் உணர்ச்சியை யூட்டக்கூடியதாக இராது. ஸ்ரீ திலகரின் பிரசங்கம் சதா மனதைத் தூண்டிக்கொண்டே யிருக்கும்; உணர்ச்சியை யூட்டிக்கொண்டே யிருக்கும். ஸ்ரீ திலகர் புதுக்கட்சியின் நோக்கத்தைப்பற்றிப் பின்வருமாறு கல்கத்தாவில் 1907-ம் வருடவாரம்பத்தில் கூறியுள்ளார். "நம்முடைய இராஜீயத் துறையில் இரண்டு புதிய வார்த்தைகள் ஏற்பட்டுள்ளன. அவை மிதவாதிகள், அமிதவாதிகள் (தீவிர கட்சியினர்) என்பன. இவைகள் காலத்தை யநுசரித்து உண்டானவை யாதலால், காலத்தின் தன்மைப்படியே மாறும். இன்று தீவிர கட்சியினர் எனப்படுவோர் நாளை மிதவாதி எனப்படுகின்றனர். மிதவாதிகள் என்று இன்று அழைக்கப்படுவோர்கள்

சேர்ந்து தீவிர கட்சியினராகவிருந்தனர். பாரத ஜனசபை முதல் முதல் ஆரம்பிக்கையில் தாதாபாய் நௌரோஜியின் கொள்கை தீவிர கட்சியினரின் சார்பாகவே யிருந்தது. அவரை, அக்காலத்தில் அமிதவாதி யென்றே அழைத்தனர். ஆனால் அவர் இப்பொழுது மிதவாதியாகவுள்ளார். ஆகவே அமிதவாதம் என்பது அபிவிர்த்தியின் அடையாளம். நாம் இன்று அமிதவாதிகளாக யிருக்கிறோம். நம் பின்சந்ததி நம்மை மிதவாதிகளென்று அழைத்துத் தங்களைத் தீவிரக் கட்சியினர் என்று சொல்லிக்கொள்வர். ஒவ்வொரு புதியகட்சியும் அதிக வாதத்தையே முதல் முதல் கொண்டு பிறகு மிதவாதத்தை யடைகின்றது. நாம் தற்கால நிலைமையை யறிந்து அந்நிலைமைக்குப் பரிகாரமாக ஒரு திட்டத்தைத் தயாரிக்கவேண்டும். முதல் முதல் இந்த அரசாங்கம் நமக்குச் சரிப்படாது. ஒரு நாட்டின் அரசாங்கம் மற்றொரு நாட்டிற்கு நன்மையைச் செய்யாது. ஆகவே அவ்வரசாங்கம் சாசுவதமாகவும் இருக்கமாட்டாது. இவ்விஷயமாகப் புதிய கட்சிக்கும் பழைய கட்சிக்கும் அபிப்பிராய பேதமில்லை. இந்த அந்நிய அரசாங்கமானது நாட்டை யழித்தது. முதல் முதல் இந்த அரசாங்கத்தைக் கண்டு பிரமித்துப் போய்விட்டோம். நம்மை ஆளுபவர்கள் செய்யும் ஒவ்வொன்றும் நம்முடைய நன்மைக்கே யென்று நம்பியிருந்தோம்; தாமுர்லேன், ஜெங்கிஸ்கான் முதலானோருடைய படையெடுப்பினின்றும் நம்மைக் காக்க வானத்தினின்றும் உதித்ததென இவ்வரசாங்கத்தை எண்ணியிருந்தோம். இவ்வரசாங்கம் அந்நியப் படையெடுப்பினின்றும் நம்மைக் காப்பதல்லாமல், உள்நாட்டுக் கலகத்தினின்றும் நம்மைக் காக்கவே வந்ததென உண்மையில் நாம் நம்பினோம். நாம் சிலகாலம் கவலையற்று களித்திருந்தோம். உண்மையில், நம் சுகமெல்லாம் பரமதுக்கமாக மாறிற்று.



நாம் ஒருவரை யொருவர் தாக்குவதினின்றும் அல்லது நாம் ஒருவரை யொருவர் சண்டையிட்டுக் கழுத்தை யறுத்துக் கொள்வதினின்றும் காப்பாற்றுவதற்குப் பதிலாக அன்னியர் நம் ஒவ்வொருவருடைய கழுத்தையும் அறுத்துக் கொண்டு வருவதைக் கண்டோம். அன்னிய அரசாங்கம் நம் நாட்டை யழிப்பதற்கு ஏற்பட்டதென்றே யுணர்ந்தோம்.

* * * * * *

தாதாபாயி நௌரோஜி இந்தியாவின் * வறட்சியைப் பற்றி நமக்கு எச்சரிக்கை செய்தார். இவ்வறட்சி இன்னும் சில காலம் நீடித்திருக்குமானல் இந்தியாவுக்கு என்ன ஆபத்து உண்டாகுமோ அறியோம் என்று அப்பெரியார் கூறி, இங்கிலாந்துக்குச் சென்று இந்தியாவின் விஷயமாக இங்கிலாந்து மகா ஜனங்களுக்கு 25 வருடகாலம் போதித்து வந்தார். அங்ஙனம் போதித்தும் அவர் தம்முடைய 82-ம் வயதில் தாம் செய்த காரியம் இங்கிலாந்தில் பிரயோசனமில்லாமற் போயிற்றென திரும்பிவந்து நமக்குத் தெரிவித்தார். ஆனல், கோகலே அவர்கள் இங்கிலாந்து ஜனங்களிடத்தில் அதிக நம்பிக்கையுள்ளவராக யிருக்கிறார். ஸ்ரீ கோகலே தாம் கொண்ட நம்பிக்கையை யிழந்து, தாதாபாய் அவர்களைப் போல ஏமாற்றத்தையடைய இன்னும் 80 வருடம் ஆகவேண்டும். அவர் வாலிபராதலால், ஏமாற்றம் அவ்வளவு சீக்கிரத்தில் [illegible] தான் இங்கிலாந்தில் [illegible] பார்லிமெண்ட் அங்கத்தினர்களின் அறிமுகம் [illegible]திருக்கிறார். ஒரு வருட காலத்திற்குள் அவர் நம்பிக்கை யிழக்க முடியுமா? தாதாபாய் அவர்களே கடைசி காலத்தில் நம்பிக்கை யிழந்தவராகப் போனரென்

---

* இந்தியாவின் வறட்சியைப்பற்றி ‘ இந்தியா இழந்தனம் ’ என்னும் புத்தகத்தில் காண்க. விலை ரூ. 1.

ருக்கு, ஸ்ரீ கோகலே பிரதமராகமாட்டாரென்பதற்கு என்ன
தடை? பார்லிமென்டத்தில் மிதவாதிகள் நம்பிக்கை
வைத்திருக்கின்றனர். ஆனால், புதிய கட்சியினருக்கு அந்த
நம்பிக்கை போய்விட்டது. பார்லிமென்ட் லிபரல் கட்சி
யார் வசம் வந்தால் இந்தியாவுக்கு நன்மை யுண்டாகு
மென்று அவர்கள் கூறுகின்றனர். லிபரல் கட்சி வரும்
வரை நாம் சகோரப் பட்சிகள் மழைத் துளிகளுக்கு வாய்
திறந்து காத்துக் கொண்டிருப்பது போலச் சீர்திருத்தங்க
ளுக்குக் காத்துக்கொண் டிருக்கவேண்டுமா? அங்ஙனம்
காத்திருக்கும் அவர்கள் நமக்குச் செய்வார்களென்ற உறுதி
என்ன? லிபரல் கட்சியைச் சேர்ந்தவர்கள் பலர் இந்தியா
வுக்கு வந்தும் ஆங்கிலோ இந்தியர்களின் பழக்கத்தால்
அவர்கள் தங்கள் லிபரல் கொள்கையை புறந்தள்ளி கன்
சர்வேடிவ் கொள்கையைக் கொண்டவர்களாக மாறுவதை
நாம் காண்கிறோம். லார்ட் மார்லி அவர்கள் இந்தியா மந்
திரியாக நியமனம் பெறப்போவதைக் கேள்வியுற்று சில
மிதவாதிகள் கல்கத்தாவில் கூடின ஒரு கூட்டத்தில் கிளாட்
ஸ்டன் சரிதையை எழுதிய மார்லி அவர்களின் புத்தகத்தி
லின்றும் சில அருமையான மொழிகளை எடுத்துக் காட்டி
லார்ட் மார்லி இந்தியாவுக்கு மிக்க நன்மையைச் செய்யும்
லிபரல் கொள்கை யுடையவரெனச் சந்தோஷப்பட்டனர்.
அந்தோ! என்ன மதியீனம். பகவத் கீதையிலின்றும் சில
வாக்கியங்களைப் படித்திருந்தால் புண்ணிய முண்டாயிருக்
கும். தத்துவ ஞானிக்கும் இராஜ தந்திரிக்கும் வித்தியாச
முண்டு என்பதை மிதவாதிகள் அறியாமலிருக்கின்றனர்.
இராஜ தந்திரி யொருவன் தற்காலம் நடக்கும் விஷயத்தை
மதித்து அதற்குத் தக்கபடி காரியங்களைச் செய்வான். இந்
தியாவிலுள்ள ஆங்கிலோ இந்தியர்களின் கிளர்ச்சிக்கும் பல
மான அபிப்பிராயத்திற்கும் முன்னும் மார்லி என்ன செய்ய



மாட்டும்? ஆகவே, மார்லியைப்பற்றியாகிலும், இங்கி
லாந்து மகா ஜனங்களை இந்தியா விஷயமாகப் போதிக்கும்
விஷயத்திலாகிலும், பார்லிமென்டில் லிபரல் கட்சியினர்கள்
வந்து இந்தியாவுக்கு நன்மை செய்வார்களென்ற விஷயத்தி
லாகிலும் புதிய கட்சியினர்க்கு என்னவும் நம்பிக்கையே
யில்லை. பழைய கட்சியினர்கள் பிரிட்டிஷ் பிரஜைகளுக்கு
முறையிட்டுக் கொள்வதை நம்புகின்றனர். புதிய கட்சி
யினர்கள் நம்பவில்லை. ஆகவே, வேறு வழிகளினால் நம்
இலட்சியத்தை நாம் அடையப் பாடுபடுவோம். புதிய
கட்சியினர் மனச் சோர் வடையவில்லை. நாங்கள் ஒரு
திட்டத்தைத் தயார் செய்து வந்திருக்கிறோம். அந்த
அக்கிரிப்பிர்களாலும் நாமனைவரும் ஒன்று சேர்ந்து பாடு
படலாம். உங்களுடைய கைத்தொழில்கள் அழிந்தன.
அன்னிய பிரபுத்துவத்தினால் அவை முழுதும் அழிந்தன.
உங்களுடைய தனம் நாட்டைவிட்டு அன்னிய நாட்டுக்குப்
போகின்றது. நீங்களும் வெகு தாழ்ந்த நிலைமையை
யடைந்து விட்டீர்கள். இந்த நிலைமையில் நம்மை நாமே
தேற்றிக்கொள்ள வழியுண்டாவென்று யோசிப்போம்.
அங்ஙனம் தேற்றிக்கொள்வதற்கு வழியுண்டு. அது அர
சாங்கத்தாருக்கு மனுச் செய்து கொள்வதல்ல; பகிஷ்கார
முறை. உங்களுடைய காரியங்களை நன்கு சீர்செய்துகொண்டு
முஸ்திபுடன் பலப்படுத்தித் தயாராக நின்றால், அரசாங்
கத்தார் உங்களுடைய வேண்டுகோளுக்கு இணங்குவார்கள்.
பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் சண்டை உண்டாகப்
பாண்டவர் பக்ஷமாக ஸ்ரீ கிருஷ்ண பகவான் கௌரவர்க
ளிடம் தூது சென்றிருந்த போதிலும், இருதிறத்தாரும் தங்கள் தங்
கள் சேனைகளைத் தயாராக அணிவகுத்து வைத்திருந்தனர்.
ஆகவே, இதுதான் இராஜ தந்திரம். அத்தகைய இராஜ
தந்திரத்தை நாம் உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

நமக்குப் பகிஷ்கார அஸ்திரம் இருக்கும் வரை ஆயுதங்களும் மற்ற யுத்த கருவிகளும் வேண்டா. பகிஷ்கார அஸ்திரத்தைக் கொண்டு நாம் இந்த அரசாங்கத்திற்கு உதவி செய்யாமலிருக்கலாம். அவர்களுக்கு நாம் வரி வசூல் செய்ய உதவி செய்ய மாட்டோம். நாட்டில் சமாதானத்துடனிருக்கவும் மாட்டோம். இந்திய வீரர்களைக் கொண்டும் இந்தியாவின் பண உதவியைக் கொண்டும் இந்தியாவுக்கு வெளியேயும் இந்தியாவின் எல்லைப் புறங்களிலேயும் அரசாங்கத்தாருக்கு உதவியாக நாம் போர் செய்யமாட்டோம். நீதி பரிபாலனஞ் செய்ய அவர்களுக்கு நாம் உதவிபுரிய மாட்டோம். நாம் நம்முடைய பஞ்சாயத்து சபைகளை ஸ்தாபித்துக் கொள்வோம். சமயம் வருமானால் அரசாங்கத்துக்கு வரியையும் கொடுக்க மறுப்போம். இவை யாவையும் நீங்கள் செய்ய முடியுமா! நீங்கள் செய்ய முடியுமானால் நாளைக்கே நீங்கள் சுதந்தர முள்ளவர்களாவீர்கள். முழு ரொட்டிக்குப் பதிலாகப் பாதி ரொட்டியே போதுமென ஒரு கனவான் பேசினார். எனக்கு முழு ரொட்டியும் வேண்டும். அம்முழு ரொட்டியும் எனக்கு வர நான் முயற்சி செய்வேன். முழு ரொட்டியும் கிடைக்காமல் அரைரொட்டியையே அவர்கள் கொடுத்தால், அந்த அரை ரொட்டியையும் வாங்கிக்கொண்டு திருப்தியுடன் நின்று விடாமல், மற்ற பாதி ரொட்டியையும் போராடுவேன். ஆகவே, இதுவே புதுக்கட்சியினர்களின் தீர்மானம். இத்தீர்மானத்தைக் கொண்டு உறுதியுடன் முன் வருவீர்களானால் நம்முடைய லட்சியத்தை வெகு விரைவில் நாம் அடையலாம். காங்கிரஸ் சபையை விட்டுப் போக நான் இஷ்டப்படவில்லை. காங்கிரஸ் சபையை நாட்டின் தற்கால நிலைமைக்குத் தக்கபடி ஜன நாயக வழியில் திருப்ப வேண்டுமென்



பதே எங்களுடைய எண்ணம்!' ஆகவே, புதிய கட்சியினர்கள் அந்த நோக்கத்தைக் கொண்டே பல மாகாணங்களிலும் தீவிர கட்சியினர் உழைத்து வந்தனர். தீவிர கட்சியினர்களின் வழியை யனுசரிக்க இஷ்டப்படாத மிதவாதிகள் எப்படியாகிலும் அவர்களை விட்டுப் பிரியவேண்டுமென்று தீர்மானங்கொண்டு சூரத் காங்கிரஸில் பிளவுண்டாக்கித் தீவிர கட்சியினர்களினின்றும் சேராமல் ஒதுங்கி நின்றனர். சூரத் காங்கிரஸ் சபை பிளவுபட்டதும் ஸ்ரீ திலகர் புனாகர் திரும்பிவந்து, புதிய கட்சியினர்களின் நிர்மாண வேலைத் திட்டங்களைச் செய்யவாரம்பித்தார். மகாராஷ்டிரத்தில் புதிய கட்சியினர்களை அனைத்து ஒருங்கு சேர்த்து வேலைசெய்ய மராடி தினசரிப் பத்திரிகையொன்றை ஸ்தாபிக்கக் கருதி, அதற்குப் பணந்திரட்டி வந்தார். 'இராஷ்டிரமாதா' என்னும் மராடி பத்திரிகையை ஸ்தாபித்தார். அப்பத்திரிகை சில காலமே உயிருடனிருந்தபோதிலும் அது மகாராஷ்டிரத்தில் செய்த வேலை மிகவும் சிரேஷ்டமானது. 1908-ம் வருடம் பிப்ரவரி மாதம் மகாராஷ்டிர மண்டலத்திலுள்ள பல ஊர்களுக்குச் சென்று புதிய கட்சியைப் பலப்படுத்தி நிர்மாண வேலையைச் செய்ய வாரம்பிக்க ஸ்ரீ திலகர் பிரசாரஞ் செய்யப் பிரயாணமானார். ஸமர்த்த வித்யாலயம் என்னும் மகாராஷ்டிர ஜாதிய சர்வகலாசாலை யொன்றை பண்டிதர் விஜபுர்கார் அவர்கள் ஸ்தாபித்தார். அக்கலாசாலைக்காக ஐந்து லட்சம் ரூபாய் வசூலிக்க ஸ்ரீ திலகர் பிரயாணமானார். முதல் முதல் ஷோலாபூருக்கு வந்தார்; ஷோலாபூரில் புதிய கட்சியை ஸ்தாபித்துப் பணம் திரட்டினார். அங்கிருந்து பார்ஸி நகர் வந்தார். பார்ஸி நகர ஜனங்கள் ஸ்ரீ திலகரை வரவழைத்து உபசரித்தனர். 50000 ரூபாய் புதிய கலாசாலைக்காக அந்நகரவாசிகள் ஸ்ரீ திலகரிடம் கொடுத்தார்கள். ராயல் கமி

ருடன் முன்பாக சாட்சியம் கொடுக்க ஸ்ரீ திலகர் மார்ச்ச மாதம் 9-ந்தேதி பம்பாய் நகர் வந்து சேர்ந்தார். இந்தியாவின் இராஜ்ய நிலைமையையும் மகாஜனங்களின் லட்சியத்தையும், கல்வி, வியாபாரம், குடித்தன வாழ்க்கை முதலியவைகளைப் பற்றியும் ஸ்ரீ திலகர் வெகு நன்றாக உறுதியுடன் ராயல் கமிஷன் சபைக்குத் தெரிவித்தார். மார்ச்ச மாதம் 20, 21, 22 தேதிகளில் புனா ஜில்லா இராஜ்ய மகாநாட்டை ஸ்ரீ திலகர் கூட்டினார். ஜாதிப் பிளவு பத்திரிகையில் ஆரவம் பொங்கிக்கொண்டிருக்கையிலேயே ஸ்ரீ திலகர் தம்முடைய பிரசாரகர்களை நாடெங்கும் அனுப்பி, தாலுக்கா சபைகளை ஸ்தாபிக்க அனுப்பினார். பிரசாரகர்கள் பல ஊர்களுக்குச் சென்று இராஜ்ய சுதந்தரங்களை ஜனங்களுக்குப் போதித்து தாலுக்கா சபைகளை ஸ்தாபித்து வந்தார்கள். புனாவில் கூடின ஜில்லா கான்பரன்ஸுக்கு ராவ்பகதூர் ஜோஷி அக்கிராசனம் வகித்தார். அவர் பொருளாதார சாஸ்திரத்தில் நல்ல பாண்டித்தியம் பெற்றவர். அரசிறை கணக்கு மற்று பல பொதுவிஷய புள்ளிக் கணக்குகளைப் போடுவதில் ஸ்ரீ கோகலேயை விட சிறந்தவர். அவருடைய அக்கிராசனத்தில் ஜாதிப் பிளவுக்குப் பிறகும் மிதவாதிகளும் தீவிர கட்சியினர்களும் கூடி ஏகோபித்துப் பல தீர்மானங்களைச் செய்தனர். 11-தீர்மானங்கள் நிறைவேறின. அப்பதினொரு தீர்மானங்களில் ஒன்று மிதவாத தலைவர்களும் தீவிர கட்சித் தலைவர்களும் [illegible]பட்டிருப்பதைப் பற்றியது. கல்கத்தா காங்கிரஸ் தீர்மானங்கள் யாவும் நிறைவேறின. இரண்டொரு மிதவாதிகள் 'பகிஷ்காரம்' [illegible]னும் தீர்மானத்தில் அன்னியச் சாக்கு பகிஷ்காரமென்று [illegible]த்தை உபயோகப்படுத்த வேண்டுமென்று கூறியும், அது அங்கீகரிக்கப் படாமல் 'பகிஷ்கார இயக்கம்' என்பதையே சபையினர் ஆதரித்து நிறைவேற்றினர். ஜாதீயக் கல்வி தீர்மானம்



நிறைவேறினதுமன்றி, அக்கல்வியை ஸ்தாபிக்க ஒரு ஆலோசனை கமிட்டியொன்றும் ஏற்படுத்தப்பட்டது. கான்பரன்ஸில் தீர்மானமான தீர்மானங்களெல்லாம் ஜனங்களின் ஆதரவையும் சமூக ஒற்றுமையையும் ஆத்ம பலத்தையுமே பற்றி உண்டாயின. சர்க்கரைத் தொழிலைப் புனா நகரில் ஸ்தாபிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஒரு வருடத்திற்குள் குறைந்த பட்சம் 25 ஆரம்ப பாடசாலைகளை ஸ்தாபிக்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. பஞ்சாயத்து சபைகளை ஸ்தாபிக்கவும், கள்ளுக்கடை மறியல் வேலை செய்யவும் தீர்மானிக்கப்பட்டது. மதுபானத் தீமையைப்பற்றி வெகு சிறப்பாக ஸ்ரீ திலகர் ஜில்லா மகாநாட்டில் பேசிக்கள்ளுக்கடை மறியல் செய்ய திட்டமொன்றைத் தயாரித்தார். ஜால தீபத்தின் (Magic-lantern) மூலமாகக் கள்ளுக்கடையை யொழிக்கப் பிரசாரஞ் செய்வது நம் நாட்டுக்குப் பிரயோசனமில்லை யென்று கண்டித்து அது மேனாடுகளுக்குத் தக்கதாக இருக்கலாமென்று கூறி, கள்ளுக்கடையை இந்தியாவில் எம்மதமும் அங்கீகரிப்பதில்லை யென்றும், ஒரு சமூகத்தினாராகினும் வெறுக்காமலில்லையென்றும் எடுத்துக் காட்டி மறியல் வேலையொன்றினாலேயே கட்குடியை யொழிக்க முடியுமென்று ஸ்ரீ திலகர் கண்டிப்பாகக் கூறினார். ஸ்ரீ திலகரின் உருக்கமான வார்த்தைகளைக் கேட்ட பல யுவர்கள் மறியல் வேலை செய்யத் தொண்டர்களாக விருக்க [illegible] வந்தனர். பிரிவு பிரிவாகத் தொண்டர் கூட்டம் வகுக்கப்பட்டு அவர்களை ஊரூராக அனுப்பி மறியல் வேலை செய்து வரும்படி ஸ்ரீ திலகர் ஏற்பாடு செய்தார். 'கள்ளுக்கடைகளின் அருகே தொண்டர்கள் நின்று கள்குடிக்கப் போகிறவர்களை நமஸ்காரஞ் செய்து இன்மொழியுடன் குடிக்காதிருக்கும்படி வேண்டிக் கொள்வார்கள். புனாவிலுள்ள கள்ளுக்கடைகள் தோறும் பலமான மறியல் வேலை செய்யப்

டாட்டு வந்தது. தாணா ஜில்லா, பெல்காம், அகமத்நகர் ஜில்லாக்களிலும் பலமான மறியல் வேலைகள் செய்யப்பட்டு வந்தன. இலட்சக்கணக்கான துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டு நாடெங்கும் வழங்கப்பட்டன. தொண்டர்கள் அணி அணியாக நின்று பலாத்காரத்தைச் சிறிதும் மனோ வாக்குக் காயங்களால் பிரயோகிக்காமல் சாந்தத்துடன் இன்மொழி கூறி, மறியல் வேலை செய்துவந்தார்கள். தொண்டர்களிற் பலர் கள்ளுக்கடை சொந்தக்காரர்களால் பலவிதமாய்த் துன்புறுத்தப்பட்டனர். போலீஸாரோடு கை கலக்காமல் அவர்களை எதிர்க்காமல் ஒதுங்கியே தொண்டர்கள் சென்றனர். கல்கத்தாவில் சுதேசி வஸ்து பிரசார விஷயமாகத் தொண்டர்கள் மறியல் வேலை செய்ததைப்போல் புனாவிலும் அதைச் சுற்றியுள்ள ஜில்லாக்களிலும் மறியல் வேலை மும்முரமாக நடத்தினர். கள்ளுக்கடை மறியல் வேலைகளில் மிதவாதிகளும் ஐரோப்பியர்களிற் சிலரும் ஸ்ரீ திலகருடன் கலந்து வேலை செய்தனர். டாக்டர் மான் என்பவரும், கிறிஸ்துவ பாதிரியார் மக்நிக்கல் என்பவரும் தொண்டர்களுக்கு அடிக்கடி யோசனை சொல்லி ஸ்ரீ திலகருடைய பெரு முயற்சியில் கலந்து வந்தார்கள். புனாவில் மதுவிலக்குச் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. அச்சங்கத்தின் ஆதரவின் கீழ் அத்தொண்டர்கள் வேலை செய்து வந்தனர். தொண்டர்களைத் தெரிந்தெடுப்பதில் ஸ்ரீ திலகரும் அவர்களும் மிக்க சிரத்தை காட்டிப் பலவிதமாக பரீட்சை செய்து வருவர். ஸ்ரீ திலகர், கணம் கோகலே, கிறிஸ்துவ பாதிரியார் மக் நிக்கல் ஆகிய இவர்களும் மற்றுஞ் சிலரும் கட்குடியை நிவர்த்திக்கச் சில விதிகளைச் செய்து புனா கலெக்டரிடம் சென்றார்கள். புனா கலெக்டரிடம் வெகு நாழிகை பரியந்தம் கள்குடியை ஒழிக்கும் விஷயமாகப் பல விதிகளை எடுத்துக் கூறி வந்தார்கள். என்றாலும்,



கலெக்டர் செவி சாய்க்காமல், வர்த்தகர்களின் கண்களைத் துடைக்க ஒன்றிரண்டு விதிகளைச் செய்தார். மறியல் வேலை பலமாக நடந்துவந்தது. போலீஸாருக்குப் பிடிக்கவில்லை. பல அநீதியான உத்திரவுகளைப் பிறப்பித்துத் தொண்டர்களைத் தண்டிக்க ஏற்பாடு செய்ய அவர்கள் முயற்சித்தனர். போலீஸாருடைய உத்திரவுகளை மீறி நடந்த குற்றத்திற்காக புனாவில் மறியல் வேலை செய்துவந்த 150 தொண்டர்களில் 10 தொண்டர்கள் குற்றஞ்சாட்டப்பட்டனர். அவர்கள் மாஜிஸ்ட்ரேட் முன்பாகக் கொண்டுவரப்பட்டனர். சிலருக்கு அபராதத் தண்டனையும் மற்றுஞ் சிலருக்குக் கடின காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது. மறியல் வேலை மும்முரமாக நடப்பதைத் தடுக்க அதிகாரிகள் பிரயத்தனஞ் செய்தனர். புனாவுக்குச் சமீபத்திலுள்ள லோனவ்லா என்னுமிடத்தில் மறியல் வேலை நன்றாக நடந்ததைக் கண்ட ஜில்லா மாஜிஸ்டிரேட் கிரிமினல் ப்ரோஸீஜர் சட்டம் 144-வது பிரிவுபடி கர்லா, லோனவ்லா இடங்களிலுள்ள கள்ளுக்கடைகளைச் சுற்றியோ அல்லது அவைகளுக் கெதிரே கள்ளுக்கடைக்குப் போகிறவர்களைத் தடுப்பதற்காகத் தினம் கூட்டம் கூடக்கூடாது என உத்திரவு பிறப்பித்தார். கள்ளுக்கடைக்கு வழக்கமாகப் போகிறவர்களைக் காப்பாற்ற மாஜிஸ்ட்ரேட் மிக்க பிரயாசை எடுத்துக்கொண்டார். இவ்வுத்திரவு 1908-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 11-ந்தேதி பிறந்தது. புனாவில் அம்மறியல் வேலை இயக்கத்தைத் தடுக்க 17-ந்தேதி அம்மாஜிஸ்ட்ரேட் போலீஸாருக்கு உத்திரவு அனுப்பினார். ஏப்ரல் மாதம் 23-ந்தேதி பன்னீராயிரம் மேல் ஜனங்கள் கூடின ஒரு மகாநாட்டில் டாக்டர் பந்தார்கார் அவர்கள் அக்கிராசனம் வகித்து ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டின் அநீதியான உத்திரவுகளைக் கண்டித்து மீண்டும் மறியல் வேலையை விடாமல் செய்துகொண்டுபோக ஏற்பாடு செய்

யப்பட்டது. டாக்டர் பந்தர்கார், ஸ்ரீ திலகர், மந்திரிகள் ஆகிய இவர்களுடன் மற்றுஞ்சிலரும் பம்பாய் கவர்னரிடம் சென்று கட்குடியை யொழிக்கும் விஷயமாகப் பேச அம் மகாநாட்டில் நியமிக்கப்பட்டார்கள். ஜூலை மாதம் 6-ந் தேதி கவர்னரவர்களைப் பார்ப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், ஸ்ரீ திலகர் ஜூன் மாதம் 24-ந் தேதி இராஜத்துரோக குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டார். சைதன்ஹாம் பிரபு அப்பொழுது கவர்னராக இருந்தார். இந்தியாவில் கவர்னராக இருக்கையில் ஸர் ஜார்ஜ் க்ளார்க் என்னும் நாமத்தால் விளங்கி வந்தார். பிரதிநிதிகள் கவர்னர் அவர்களைப் பேட்டி கண்டார்கள்! மறியல் வேலை செய்வது கட்குடிப்பவர்களின் சுதந்தரத்தைத் தடுப்பதாகு மென்றும், மறியல் வேலையினால் போலீஸாருக்கும் மறியல் வேலை செய்பவர்களுக்கும் கைகலப்பு உண்டாகுமென்றும், அவ்வளவு கைகலப்பு ஏற்படுவதால் சில அடக்குமுறைகளை யெடுத்துக்கொள்ளும்படி நேரிடுமென்றும், அதனால் நீங்கள் எடுத்த காரியத்திற்குச் சாதகமுண்டாகாதென்றும் கூறி, அன்னிய அரசாங்கத்தின் நியாய விரோதமான தீர்ப்பென்று நீங்கள் நினைத்துக் கொள்ளக் கூடாதென்றும், உங்களுடைய மதுவிலக்குச் சங்கத்தில் அரசாங்கத்திற்கு அபிமான மில்லையென்று எண்ணக்கூடாதென்றும், அரசாங் கத்திற்கும் மதுபானத்தை யொழிக்கவேண்டு மென்ற அக்கரை யிருக்கிறதென்றும், வெகு நயமாகப் பதில் கூறி அப்பிரதிநிதிகளை அனுப்பினார். அரசாங்கத்தார் குடிப்பவர்களின் சுதந்தரங்களைக் காப்பதில் கொண்ட சிரத்தையை மற்ற பொது ஜனங்களிடத்தில் காண்பித்து, சமூகத்தின் நன்மார்க்கத்திற்குரிய சட்டவிதிகளைச் செய்தால் ஜனசமூகம் எவ்வளவு விர்த்தியாகும் என்பதை அவர்கள் அறியாமலில்லை போலும்! பூர்வம் பாரதநாட்-



டையாண்ட பல இந்துமன்னர்கள் பிரஜைகளின் குடித்தன வாழ்க்கைக்கு இல்வரம்பாகிய நல்லொழுக்கத்தை ஸ்தாபிக்கத் தக்க பல திட்டங்களைச் செய்துவந்தார்கள். அரசாங்கம் அன்னிய அரசாங்கமாக இருப்பதினாலும், மது முதலிய கள் சம்பந்தமான வழிகளில் அரசாங்கத்திற்கு வரும் வருமானம் போய்விடும் என்ற விபரீத புத்தியினாலும் இந்தியாவிலுள்ள அதிகார வர்க்கத்தினர் மதுவிலக்கு விஷயமாக ஏற்பாடு செய்யவில்லை யாயினும், மதுவிலக்கு விஷயமாகப் பாடுபடுவோர்களைத் தண்டிக்க முன்வருகின்றனர். இதுக, புதிய கட்சியினர் நாடெங்கும் பலமான இராஜிய கிளர்ச்சியை உண்டாக்கினர். ஆங்கில ஆசாரம் நீங்கி சுதேச ஆசாரமுண்டாயிற்று. உணவிலும் உடையிலும் நடையிலும் மற்று பல விதமான பாவனைகளிலும் புதிய கட்சியினர், சுத்த ஸ்வதேசியாக மாறினர். புதிய கட்சியினர்களுக்குள்ளே தேசாபிமானம் ததும்பிக்கொண்டிருந்தது. தியாகத்தையே பெரிதெனக் கொண்டு பலர் பாரத நாட்டின் விடுதலைக்கு ஊழியஞ்செய்ய சர்வ சங்க பரித்தியாகஞ் செய்தனர். ஒவ்வொருவனுடைய மனதிலும் சமூகாய ஊழிய உணர்ச்சி யுண்டாயிற்று. புதிய கட்சியினர்கள் தாங்கள் செய்யும் ஒவ்வொன்றும் தேசத்தின் விடுதலைக்காகவே செய்து வந்தனர். கனவிலும் நனவிலும் தேசமொன்றையே கருதிவந்தனர். வங்காளத்தில் பாப்னா என்னு மிடத்தில் சூரத் பிளவுக்குப் பிறகு மகா கவி ரவீந்திரநாத தாகூரின் அக்கிராசனத்தின் கீழ் மிதவாதிகளும் புதிய கட்சியினரும் ஒருங்கு கூடி கல்கத்தா காங்கிரஸ் தீர்மானங்களையே உறுதி செய்தார்கள். மகாராஷ்டிரத்திலும் பம்பாயிலும் புதிய கட்சிக்கும் பழைய கட்சிக்கு முண்டான பிளவு அப்படியே யிருந்து வந்தது. ஏப்ரல் மாதத்தில் பழைய கட்சியினர் அலகாபாத்தில் கூடி ஒப்பந்த உடன்பாடொன்றை யேற்

படுத்தி, புதிய கட்சியினர்கள் காங்கிரஸுக்கு வாவொட்டாமற்படி செய்தனர். இப்படியிருக்க, பரத நாட்டின் துர்ப்பாக்கியத்தைப் பெருக்க வங்காளத்தில் வெடிகுண்டு சம்பவம் நிகழ்ந்தது. ஏப்ரல் மாதம் 30-ந் தேதி கல்கத்தாவைச் சேர்ந்த முஸபர்பூர் வெடிகுண்டு நிகழ்ச்சியால் இரு ஐரோப்பிய மாதர்கள் மாண்டனர். கென்னடி ஜட்ஜ் கிங்ஸ்போர்டைக் கொல்ல வெடிகுண்டு எறியப்பட்டு அகஸ்மாத்தாய் அவ்விருமாதர்களைக் கொன்றது. ஆங்கிலோ இந்திய பத்திரிகைகள் உடனே பழிக்குப் பழிவாங்கவேண்டுமென்று கிளம்பின. அப்பத்திரிகைகள் ஆவேசங்கொண்டு புதிய கட்சியினர்கள் பலரைத் தூக்கிலிடவும் அதிகாரிகளுக்குத் தெரிவித்தன. மிதவாதிகள் இதைப் பிடித்துப் பாடினர். ஸ்ரீ திலகரோ சற்றேனும் தளர்ச்சியடையாமல் வெடிகுண்டு சம்பவங்களைப்பற்றித் தம் 'கேஸரி'யில் கண்டித்தனர். வெடிகுண்டுகளைப் பிரயோகித்த வாலிபர்களைக் கண்டித்ததோடு தவிர, அச் செயல்களுக்குக் காரணம் அரசாங்கத்தாரின் நடத்தையே யென்றும், அரசாங்கத்தார் பிரஜா பரிபாலன முறையைச் சரிவர செய்யவேண்டுமென்றும் அவர்களையும் கண்டித்தார். தவிர, வெடிகுண்டு சம்பவங்கள் ஓய்வதற்கு அரசாங்கத்தின் சீர்திருத்தமே தக்க பரிகாரமென்றும் ஸ்ரீ திலகர் தைரியமாகத் தெரிவித்தார். தவிர, மகாராஷ்டிரத்திலுள்ள புதியகட்சித் தலைவர்கள் 24 பேர்கள் கையெழுத்திட்டு அச்சம்பவத்தைக் கண்டித்து ஓர் அறிக்கையைப் பத்திரிகைகளுக்கு அனுப்பினார்கள். மகாராஷ்டிரத்திலும் மற்ற பல மாகாணங்களிலும் புதிய கட்சியினர்களால் மும்முரமாகப் பிரசாரம் நடந்துவந்ததற்குத் தடை ஏற்பட்டது. அரசாங்கத்தார் அடக்குமுறைத் தாண்டவத்தைக் கொண்டனர். தீவிர கட்சியினர்களுடைய கிளர்ச்சியினாலேயே வெடிகுண்டு விபத்து உண்டானதென்



றும், புதியகட்சிப் பத்திரிகைகளின் பிரசாரமும் அவைகள் எழுதும் வியாசங்களுமே வெடிகுண்டுகளுக்குக் காரணமென்றும் நினைத்துப் பத்திரிகைகளின் சுதந்தரங்களைக் குறைக்க அரசாங்கத்தார் ஆலோசித்தார்கள். பல விபரீதமான சட்டங்கள் புதிது புதிதாகச் செய்யப்பட்டன. பல பத்திராதிபர்களையும் பிரசங்கிகளையும் இராஜநிந்தனை குற்றத்திற்காகத் தண்டித்தார்கள். பம்பாய் மாகாணத்தில் முக்கியமாக மகாராஷ்டிரத்தில் பல பத்திராதிபர்கள் தண்டிக்கப்பட்டார்கள். *சென்னைமாகாணம், மத்தியமாகாணம், பஞ்சாப் முதலிய பல மாகாணங்களிலும் பலர் தண்டிக்கப்பட்டனர். வங்காளத்தில் தண்டனை யடைந்தவர்களின் சங்கை அதிகம். ஸ்ரீ திலகர் 1908-ம் வருடம் ஜூன் மாதம் 24-ந் தேதி சிறைபட்டார். ஆனால், நான்கு தினங்களுக்கு முன்னர் 20-ந் தேதி பம்பாய் கவர்னர், 'அரசாங்கத்தாருக்கு விரோதமாகச் சனங்களைக் கிளப்பிப் பகைமையை யுண்டாக்கிச் சில செல்வாக்குள்ள ஜனத்தலைவர்கள் பிரசாரஞ்செய்து வருகின்றார்கள். அவர்கள் நெருப்புடன் விளையாடுகின்றனர்' என்று குறிப்பிட்டுக் கூறினார். அவர் ஸ்ரீ திலகரைக் குறிப்பிட்டே அங்ஙனம் பேசினாரென்பதைப் பலரும் அறிந்தனர். ஸ்ரீ திலகரும் தமக்குச் சிறைவாசம் சம்பவிக்குமென்று கருதி தயாராக யிருந்தார்.

---

* 1908-ம் வருடத்தில் சென்னைமாகாணத்தில் இராஜநிந்தனை குற்றத்திற்காக, தூத்துக்குடியில் ஸ்ரீ. வ. உ. சிதம்பரம்பிள்ளை சுப்பிரமணியசிவா ஆகிய இவ்விருவர்களும் கரூரில் ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி சர்மா அவர்களும், சென்னையில் யதிராஜ சுரேந்திரநாத ஆரியாவும், ஸ்ரீநிவாஸாசாரியாரும், ஆந்திரதேசத்தில் ஸ்ரீ ஹரிசர்வோத்தமராவும் கடின தண்டனையை யடைந்தார்கள். காலஞ்சென்ற ஸ்ரீ. சுப்பிரமணிய ஐயரும் சிறைபடுத்தப்பட்டுப் பிறகு மீட்சி பெற்றார்.

## 10. கர்ம யோகி

லோகமான்ய திலகர் சிறைபட்ட செய்தி காட்டுத் தீபோல் நாற்றிசையும் பரவிற்று. இந்தியன் பீனல் சட்டம் 124. ஏ. 153. ஏ பிரிவுபடி 1908-ம் வருடம் மேமாதம் 12-ந் தேதி 'கேஸரி' பத்திரிகையில் ஸ்ரீ திலகர் எழுதின வியாசத்திற்காகக் குற்றஞ் சாட்டப்பட்டார். மேமாதம் 12-ந் தேதி வியாசமொன்றினாலேயே ஸ்ரீ திலகரைத் தண்டிக்க சாத்தியமாயிராதென்றும், அவ்வியாசம் ஒருக்கால் நீதிமன்றத்தில் நிற்காமற் போகக்கூடுமென்றும் யோசித்து பம்பாய் கவர்ன்மெண்டார், கேஸரி பத்திரிகையில் ஜூன்மாதம் 9-ந் தேதி வெளிவந்த 'இந்த பரிகாரங்கள் சாசுவிதமாகா' என்னும் வியாசத்தைக்கொண்டு மீண்டும் இரண்டாவது வாரண்டொன்றை 124 ஏ, 153 ஏ பிரிவுபடி ஸ்ரீ திலகர் சிறையிலிருக்கையிலேயே பிறப்பித்தார்கள். ஸ்ரீ திலகருக்கு இரண்டு வாரண்டு பிறப்பித்து, 1908-ம் வருடம் ஜூன் மாதம் 29-ந் தேதி பம்பாய் ஐகோர்ட்டு செஷன்ஸ் கோர்ட்டில் விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டார். ஜூலை மாதம் 2-ந் தேதி ஸ்ரீ திலகரை ஜாமீனில் விடும்படி பாரிஸ்டர் முகம்மதுஅலி ஜின்னா அவர்கள் நீதிபதிக்கு மனுகொடுத்தார். 1897-ம் வருடத்தில் ஸ்ரீ திலகர் இராஜநிந்தனை குற்றஞ் சாட்டப்பட்டகாலத்தில் பாரிஸ்டராயிருந்த தேவார் என்பவர் ஸ்ரீ திலகரை ஜாமீனில் விடும்படி மனுகொடுத்தார். அப்பாரிஸ்டர் தேவார் இப்பொழுது ஸ்ரீ திலகரை விசாரிக்க நீதிபதியாக யிருந்தார். ஸ்ரீ திலகர் மிக்க கௌரவமுள்ளவரென்றும் விசாரணைக்கு வராமல் மறைந்துபோய்விட மாட்டாரென்றும் நியாயங்களை பாரிஸ்டராயிருந்த தேவார் நீதிபதி டியாப்ஜிக்குக் கூறி 1897-ம் வருடத்தில் நடந்த விசாரணையில் ஸ்ரீ திலகரை ஜாமீனில் விடுவித்தார். ஜின்னா அவர்களும் அக்காரணத்தையே நன்றாகக்காட்டி, ஸ்ரீ திலகரை ஜாமீனில் விடும்படி மன்றாடியும், நீதிபதி தேவார் மனமிரங்காமல் 'சாதாரணமாகக் குற்றவாளியை ஜாமீனில் விடும்படி கூறும் யோசனை வார்த்தைகளை நான் அங்கீகரிக்கவில்லை; தவிர, விசாரணை காலத்தில் குற்றவாளி கோர்ட்டில் ஆஜராகவேண்டிய விஷயமாகக் கோர்ட்டு குற்றவாளிக்கு ஜாமீன் கொடுப்பதா அல்லது மறுப்பதா வென்னும் தீர்மானத்தையும் நான் அங்கீகரிக்கவில்லை என்று கூறி ஸ்ரீ திலகரை ஜாமீனில் விட முடியாதெனக்கூறி ஜாமீன் மனுவைத் தள்ளிவிட்டார். ஸ்ரீ திலகரைத் தண்டிக்க வேண்டுமென்றே பம்பாய் கவர்ன்மெண்டார் நிச்சயஞ் செய்ததற்கு முதல் அடையாளம் ஜாமீன் மறுப்பு. சர்க்கார் தரப்பு வக்கீல் ஸ்ரீ திலகரை விசாரிக்கப் பிரத்யேகமான ஜூரிகள் நியமிக்கப்படவேண்டுமென்று கோர்ட்டுக்கு மனுசெய்துகொண்டது இரண்டாவது அடையாளம். ஸ்ரீ திலகருக்கு பாரிஸ்டர் ஜோசப் பாப்டிஸ்டா அவர்கள் ஆஜராகி பிரத்தியேக ஜூரிகள் நியமிக்கப்பட்டால் ஸ்ரீ திலகருக்கு மிக்க பாதகத்தை யுண்டாக்கக் கூடியதாக யிருக்குமென்றும், விசேஷ ஜூரிகள் நியமிக்கப்பட்டால் ஐரோப்பியர்களே பெரும்பாலராக யிருப்பார்களென்றும், மராடி பாஷையில் வெளிவந்த வியாசங்களின் பேரில் ஸ்ரீ திலகரைக் குற்றஞ் சாட்டியிருப்பதால், மராடி பாஷையிலுள்ள பல வார்த்தைகளின் அர்த்தங்களை நிர்ணயிக்கவேண்டி யிருக்குமாதலால், மராடி பாஷை தெரியாத ஐரோப்பியர்கள் ஸ்ரீ திலகரை விசாரிக்க ஜூரிகளாக யிருப்பது சற்றும் சாதகமில்லாமல் மகத்தான பாதகம் ஸ்ரீ திலகருக்கு உண்டாகுமென்றும், கவர்ன்மெண்டின் மீது நிந்தனையை அல்லது துரோகத்தை யுண்டாக்கின குற்றத்திற்

காக ஆறும் சாதியார்களை தீர்ப்புசெய்ய கோருமென்றும்,
தவிர, 153. ஏ பிரிவுபடி ஜரோப்பியர்களின் மீது பகைமையை
யுண்டாக்க இந்தியர்களைத் தூண்டினதற்காக ஐரோப்பியர்
களை குற்றவாளிக்குத் தீர்ப்பு செய்ய கோருமென்றும் பல
காரணங்களைக் கூறி விசேஷ ஜூரி நியமிக்கக் கூடாதென
வாதித்தார். ஜோஸெப் பாப்டிஸ்டா அவர்களின் வாதம்
விழலுக் கிறைத்த நீர் போலாயிற்று. விசேஷ ஜூரிகளின்
நியமனத்தைக் கோர்ட்டார் அங்கீகரித்து உத்திரவுசெய்தார்
கள். சாதாரண ஜூரிகளாக யிருந்தால், அதில் இந்தியர்
கள் பெரும்பான்மையோராக யிருப்பார்கள். இந்தியர்கள்
பெரும்பான்மையோராக யிருக்கும் சாதாரண ஜூரியினால்
ஸ்ரீ திலகருக்கு ஒருக்கால் சாதக முண்டாகலா மென்றெண்
ணியே விசேஷ ஜூரி நியமிக்கப்பட்டது. ஜூலைமாதம்
13-ந்தேதி திங்கட்கிழமை விசாரணை யாரம்பித்ததும்,
அட்வோகேட் ஜனரல் இ. பி. கோ. 234-வது பிரிவுபடி குற்ற
வாளியை இரண்டுவித குற்றங்களுக்கும் ஒரே விசாரணை
யில் நடத்த நீதிபதியைக் கேட்டார். 124-ஏ. பிரிவுபடி
இரண்டு குற்றங்களுக்கும் 152-ஏ பிரிவுபடி ஒரு குற்றத்
திற்கும் விசாரணை நடத்த கோர்ட்டார் உத்திரவு கொடுக்க
வேண்டு மென்றும், மேமாதம் 12-ந்தேதி வியாசத்தில்
உண்டாகும் 153-ஏ. குற்றத்தைத் தற்காலம் ஒதுக்கி வைக்க
உத்திரவு கொடுக்க வேண்டு மென்றும் அட்வோகேட்
ஜெனரல் நீதிபதியைக் கேட்கவும், நீதிபதி உத்திரவு கொடுத்
தார். இம்மாதிரியான விசாரணை மிக்க அநீதியென்றும்,
குற்றவாளிக்கு மிக்க பாதகமான தென்றும், விசாரணை
ஒழுங்கு தவறினதென்றும் பலவிதமாக ஜோஸெப் பாப்
டிஸ்டா வாதாடினார். ஜூன்மாதம் 9-ந்தேதி வெளிவந்த
ஒரு வியாசத்தின் பேரில் மூன்று குற்றம் சாட்டப்பட்டு
மூன்று தண்டனையை விதித்தார்கள். இம்மாதிரியான



விசாரணை எந்த நாட்டிலும் இதுவரை நடந்ததில்லையெனப்
பல சட்டவாதிகள் பிறகு அபிப்பிராயப்பட்டனர். விசா
ரணை தொடங்கிற்று. ஸ்ரீ திலகரே தம்முடைய விசாரணையை
நடத்தினார். பாப்டிஸ்டா முதலிய ஐவர் ஸ்ரீ திலகருக்குப்
பக்கத் துணையாக யிருந்தார்கள். ஜூன்மாதம் 9-ந்தேதி
வியாசம் முழுதும் குற்றமுள்ளதென அட்வோகேட் ஜன
ரல் பிராஸிகியூஷன் தரப்பில் ஆஜர்படுத்தினார். ஸ்ரீ தில
கர், அவ்வியாசத்திலுள்ள குற்றமுள்ள வார்த்தைகளை மட்
டும் பிராஸிகியூஷன் தரப்பார் ஆஜர்படுத்தினால் வாதிக்க
சௌகரியமாயிருக்குமென்று கூறியும், கோர்ட்டார் ஸ்ரீ தில
கரின் வேண்டுகோளுக்குச் சம்மதிக்கவில்லை. ஸ்ரீ திலகர்
தம்முடைய விசாரணையை நடத்தி சர்க்கார் தரப்பில் ஆஜ
ரான பல சாட்சிகளை விசாரித்தார். பம்பாய் கவர்ன்மெண்டா
ருக்கு மராடி பாஷை தர்ஜுமா செய்யும் பிரதம உதவி
உத்யோகஸ்தரான பி. வி. ஜோஷி என்பவரை மட்டும்
ஸ்ரீ திலகர் வெகு நாழிகை வரை குறுக்கு விசாரணை செய்
தார். சர்க்கார் தர்ஜுமா செய்த வார்த்தைகள் யாவும் சரி
யானவையல்லவென்று கூறும்படியாக ஸ்ரீ திலகர் வெகு
ஆழமாகக் குறுக்கு விசாரணை செய்தார். தர்ஜுமா சரி
யானதல்ல வென்று ஸ்ரீ திலகர் கோர்ட்டாருக்கு நிரூபித்
தார். ஸ்ரீ திலகருக்குச் சாதகமில்லாத சில வார்த்தைகள்
கேவலமாகவும் சாதாரணமாகவும் தர்ஜுமா செய்யப்பட்
டன. மராடி பாஷையில் ஸ்ரீ திலகருக்கு இருந்த அபார
ஞானம் உலகத்திற்கு வெளியாயிற்று. இராஜரீகத் துறை
யில் பலவிதமான புதிய வார்த்தைகள் உண்டாக்கப்பட்ட
தையும், பழைய வார்த்தைகள், சரியானவையல்லவென்ப
தையும் ஸ்ரீ திலகர் கோர்ட்டுக்கு எடுத்துக் காட்டி அவ்
வியாசத்திலுள்ள வார்த்தைகள் சரியாக மொழிபெயர்க்
கப்படவில்லை யென்றும் நிரூபித்தார். ஸ்ரீ திலகர் சிறை

பட்டதும் அவருடைய பத்திரிகாலயங்கள் சோதனை செய்யப்பட்டன. அச்சோதனையில் வெடிகுண்டு விஷயமாக இரண்டு * புத்தகங்களின் பெயர் குறிப்பிட்ட ஒரு தபால் கார்ட்டு அகப்பட்டது. அக்கார்ட்டை கோர்ட்டில் பிராஸிக்யூஷன் தரப்பார் சாட்சியமாகத் தாக்கல் செய்தனர். பத்திரிகைகளை நடத்துபவர்களும், பத்திராதிபர்களும் மேற்கூறிய புத்தகங்களை வைத்துக்கொண்டிருப்பது சகஜமே யென்றும், கவர்ன்மெண்டார் வெடிகுண்டு விஷயமாகச் சட்டமொன்றைப் பிறப்பிக்க யோசித்துக்கொண்டிருக்கையில், அப்புத்தகங்கள் பத்திராதிபர்களுக்கு மிக்க ஆவசியமென்றும் ஸ்ரீ திலகர் வாதித்தார். நிற்க, புத்தகம் வெடிகுண்டாகமாட்டாதபோது அதிலும் அப்புத்தகத்தின் பெயர் எங்ஙனம் வெடிகுண்டாகும்? இரு பத்திரிகைகளினின்றும் சுமார் 71 துண்டு வியாசங்களை ஸ்ரீ திலகர் ஆஜர்படுத்தி இராஜீய வாதத்தின் காரணமாக அவ்வியாசம் எழுதப்பட்டதென்றும் கூறினார். பிறகு, ஸ்ரீ திலகர் எழுத்து மூலமாக ஓர் வாக்குமூலத்தைக் கோர்ட்டில் ஆஜர்படுத்தினார். அதில் அப்பத்திரிகைகளின் வியாசங்கள் தம்முடைய பொறுப்பினாலேயே பிரசுரிக்கப்பட்டதென்று அவ்வியாசங்களிலுள்ள மராடி வார்த்தைகளுக்குத்தக்க ஆங்கில வார்த்தைகளைக் கூறி, தம்முடைய கொள்கையை மார்ச்சு மாதத்தில் பம்பாயில் வந்த ராயல் கமிஷன் முன்பாகத் தெரிவித்துள்ளதையும் பல பத்திரிகைகளின் வியாசங்களுக்கு விடையாக இவ்வியாசங்கள் எழுதப்பட்டனவென்றும் அவர் தெரிவித்தார். தபால் கார்ட்டு விஷயமாகவும் சந்தேகந் தெளியப் பதில் கூறினார். ஸ்ரீ திலகர் குறுக்கு விசாரணை முதலியவைகளை முடித்து

* Handbook on modern explosives and Niro-explosives.



வாக்குமூலத்தை ஆஜர்படுத்திப் பிறகு தம் விசாரணை விஷயமாக வாதிக்க கோர்ட்டில் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார். ஸ்ரீ திலகர் ஜூலை மாதம் 15-ந்தேதி புதன்கிழமை மாலை 4-மணிக்கு ஆரம்பித்தார். அவர் சுமார் 21-மணியும் 10-நிமிஷமும் வரை இடைவிடாமல் பேசினார். அவர் பேசுகையில் 'நீதிபதி, ஜூரி, பிராஸிக்யூஷன் தரப்பு வக்கீல் முதலானோர் இருளடைந்த வீட்டில் இருந்தது போலானார்கள்' என்று † 'மாடர்ன் ரிவ்யூ' பத்திரிகை கூறிற்று. ஆங்கில சட்ட பிரமாணப்படியும் இந்திய சட்ட பிரமாணப்படியும் ஸ்ரீ திலகர் 'இராஜ நிந்தனை' என்னும் விஷயமாக உயர்ந்த மேற்கோள்களைக் காட்டி பலிதமாக வியாக்கியானஞ் செய்தார். ஸ்ரீ திலகருக்குச் சட்டங்களில் அபார ஞானமுண்டென்பதை அவைகள் விளக்கின. ஸ்ரீ திலகர் நீதிபதியையும் ஜூரிகளிற் பெரும்பாலாரையும் தம் அபிப்பிராயத்திற் கிணங்க வைக்கத் தவறினபோதிலும், பொதுவாக பாரதநாட்டிலுள்ள பல சட்டஞானமுள்ளவர்களையும் மற்ற பலரையும் அவர் தம் அபிப்பிராயத்திற் கிணங்க வைத்தார். 124-ஏ. பிரிவைப் பிரித்து அதின்படி இரண்டு குற்றங்களைத் தம்மீது சாட்டப்பட்டிருப்பதைப்பற்றி வாதிக்கலானார். அந்த 124-ஏ. பிரிவிலுள்ள இரண்டு பாகங்களையும் முறையே ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு அபூர்வமான திறமையுடன் வாதித்தார். அரசர் பெருமான் மீது துவேஷத்தையோ அல்லது பகைமையையோ உண்மையில் மூட்டக்கூடிய தெனக் குறிப்பிட்டிருக்கும் முதல் பாகத்தைப்பற்றி வாதித்து, அது விஷயமாக பிராஸிக்யூஷன் தரப்பார் அக்குற்றத்தை ருசுப்படுத்தவில்லை யென்றும் இரண்டாவது பாகத்தில் துவேஷம் அல்லது அதி

† மாடர்ன் ரிவ்யூ பத்திரிகை ஆங்கில மாதாந்தரம். இது கல்கத்தாவில் பிரசுரிக்கப்படுகிறது.

துவேஷத்தை யுண்டாக்கப் பாடுபடுதல் என்னும் விஷயமாக வும் பல முகாந்தரங்களை எடுத்து ஸ்ரீ திலகர் வாதித்தார். துவேஷிக்கும் எண்ணங்களைக் கொண்டிருப்பதை சாமானிய மாக ஊகத்தால அறிந்து நிரூபிக்க முடியாதென்றும், அவ் வெண்ணத்தால் ஏற்படும் செய்கைகளைக் கொண்டே சாட்சி பூர்வமாக நிரூபிக்க வேண்டுமென்றும், அத்தகைய எண் ணம் ஜனங்களின் நன்மையை யுத்தேசித்து நல்லெண்ணத் துடன் ஒரு பத்திராதிபன் கூறக்கூடுமென்றும் பலமாதிரி யாக அவர் வாதித்தார். மேலும் ஸ்ரீ திலகர் குற்றஞ் சாட் டப்பட்ட அவ்வியாசங்கள் அதிகார வர்க்கத்தைச் சேர்ந்த கட்சியினருக்கும் காங்கிரஸ் கொள்கையை யாதரிக்கின்ற கட்சியினருக்கும் வாதத்தின்மேல் உண்டானவை. அதி கார வர்க்கத்தைச் சேர்ந்த கட்சியினர் முஸபர்பூரில் நேர்ந்த வெடிகுண்டு விபத்தை காங்கிரஸ் கட்சியினர்களே ஜவாப் தாரிகளென்ற ஒரு பழியைச் சுமத்தி அத் தீவிர கட்சியினர் களை அடியோடு ஒழிக்க அரசாங்கத்துக்கு எச்சரிக்கை செய் தது. நான் அதற்கு தீவிர கட்சியினர் பொறுப்பில் பதில் விடுத்தேன். ஆகவே, என் வியாசங்கள் (1) ஆங்கிலோ இந்திய பத்திராதிபர்களின் கூற்றுக்குப் பதில் (2) கவர்ன் மெண்டாருக்கு ஒரு யோசனை அல்லது கவர்ன்மெண்டா ருக்கு ஒரு மனு (3) நிலைமையைப்பற்றி ஆராய்ச்சி (4) இரு திறத்தாருக்கும் கண்டிப்பான எச்சரிக்கை (5) கவர்ன்மென் டார் அடக்குமுறை விஷயமாகச் செய்ய விருக்கும் யோச னையின்பேரில் கண்டனம் ஆகிய இவ் வைந்து அம்சங்களைக் கொண்டதாகும். மே மாதம் 7-ந்தேதி பிரசுரமான 'பயோ னியர்' பத்திரிகை ஒரு நகரத்தைச் சேர்ந்த அல்லது ஒரு ஜில்லாவைச் சேர்ந்த கலகக்காரர்க ளனைவரையும் சிறைப் படுத்தி, மீண்டும் எதாகிலும் பயங்கரமான குற்றத்தைச் செய்தால், பத்து பத்து பேர்களாக நிறுத்தி குண்டு



வாயில் வைத்து சுடவேண்டும் என்று அரசாங்கத்தாருக் குத் தெரிவித்தது. 'ஏஷியன்' என்னும் பத்திரிகையோ கிங்ஸ்போர்ட்டுக்குப் புத்தி கூறி, அவர் பங்களா வழியாக இரவிலோ அல்லது இருண்ட பிறகோ எந்த இந்தியனா கிலும் போவானே யானால், உடனே தாமதமின்றி சுடும்படி வற்புறுத்தியது. இங்கிலீஷ்மன் பத்திரிகையோ, கிளர்ச்சி செய்பவர்களைப் பிடித்து நாற்சந்தி வாசலில் முக்கோணங் [illegible]க்கவேண்டுமென்று கூறியது. ஆகவே, இவ்வாங் கிலப் பத்திரிகைகள் தாறுமாறாய் எழுதினதின் பேரில் உண் டான கோபத்தால், குற்றஞ் சாட்டப்பட்ட இந்த வியாசங் கள் என்னால் எழுதப்பட்டன. சிந்தனை செய்வதற்கென்றோ அல்லது பகைமையை யுண்டாக்குவதற் கென்றோ அவ் வியாசங்கள் எழுதப்படவில்லை. நான் எழுதின ஒவ்வொரு வாக்கியத்திற்கும் சரியாக தீவிர கட்சியினர்களின் இராஜிய கொள்கையை எடுத்துக் காட்டுவேன். காங்கிரஸ் கட்சி யைச் சேர்ந்த பத்திரிகைகளிற் பல வெளிக்கு விரோதமாக விருந்தும், அவைகளும் என் கொள்கையையே கொண்டு எழுதின. கலகத்தை யுண்டாக்கப் பிரயத்தனப்பட்டதாக என்மீது குற்றஞ் சாட்டப்பட்டது. என்னுடைய வியா சங்கள் மராடி பாஷையிலேயே யிருப்பதால் அவைகள் மகாராஷ்டிர நாட்டிற்கு மட்டுமே பொருந்தும். மகாராஷ் டிர நாட்டிலுள்ள பத்திரிகைகள் யாவும் நான் எழுதின அபிப்பிராயத்தையே தெரிவித்துள்ளன. என்மீது ஏதாவ தும் அருமை ஏற்பட்டு என்னைத் தண்டித்தாலன்றி அவ் வியாசங்களிலுண்டாகும் குற்றங்களினால் தண்டிப்பதற்கு இடமில்லை. நான் அவ் வியாசங்களை எழுதினாலின்றும் மகாராஷ்டிரத்தில் 'கேஸரி' சரியானபடி எழுதிற்று என்றே கூறுவர். 28 வருடகாலமாக நான் எழுதியதை இப்பொ ழுது புதிதாக ஒன்றும் எழுதப் போவதில்லை. தவிர, மராடி

பாஷையிலுள்ள பல வார்த்தைகளுக்கு ஆங்கில பாஷையில் தர்ஜமா செய்தது முற்றிலும் தவறுதலாகவே யிருக்கிறது. அந்த ஆங்கில தர்ஜமாவின் தவறுதல்களைக் கொண்டே என் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. என்னுடைய நன்மையை யுத்தேசித்தும் நான் எந்த காரியத்திற்காகக் கஷ்டப்படுகிறேனோ அந்த தேச காரியத்தின் நன்மையை யுத்தேசித்தும் மாறாடி பதங்களின் தப்பான ஆங்கில தர்ஜமாவைக் கொண்டு என்னைத் தண்டிப்பது தெய்வபட்சமில்லாத காரியமாகும். மாறாடி பதங்களுக்குத் தர்ஜமா செய்தவர் பல வருடங்களுக்கு முன் பிரசுரமான அகராதியை உபயோகப்படுத்தி யுள்ளார். 1908-ம் வருடத்தில் இராஜீயத் துறையில் உபயோகமாகும் பல இராஜீய தேசிய சொற்களுக்கு அகராதியில் பதங்களே கிடையாது. தவிர, புதிய புதிய வார்த்தைகளை மாறாடி பாஷையில் நாள்தோறும் தற்கால இராஜீய நிலைமையை யுத்தேசித்து நாங்கள் உபயோகப்படுத்தி வருகிறோம். அந் நிலைமையில் தவறான ஆங்கில பதங்களின் தர்ஜுமாவைக் கொண்டு குற்றத்தை நிரூபித்துத் தண்டிப்பது சரியாகமாட்டாது. ஆகவே, ஜூரிகளே! இந்த நாட்டின் நன்மைக்காக நீங்கள் உதவி புரியுமாறு வேண்டுகிறேன்; என்பொருட்டு உதவிபுரிய நான் அதிகமாகப் பிரயாசைப்படவில்லை. நான் இப்பொழுது கஷ்டமான நிலைமையில் இருக்கிறேன்; எனக்கு தண்டனை ஏற்படுமானால் அது சிலவருட காலந்தான்; அதைப்பற்றி எனக்குக் கஷ்டமில்லை. ஆனால், நீங்கள் செய்யும் தீர்மானத்தை இந்தியாவின் இனி வரும் சந்ததியார்கள் சரியா அல்லது தவறென்று பார்ப்பா ராதலால், அதை யோசித்துத் தீர்மானியுங்கள். உங்களில் ஒருவரேனும் நான் எழுதினது குற்றமல்ல வென்று தீர்மானிப்பீர்களே யானால், எனக்கு மிக்க சந்தோஷத்தைக் கொடுக்கும். ஜூரிகள் அனைவரும்



ஏகோபித்து இல்லாமற் போனால் இங்கிலாந்தில் மீண்டும் புனர் விசாரணை யுண்டாகும்; இந்தியாவிலோ அப்படி யில்லை. ஆகவே, உங்களுடைய தீர்மானத்தை நான் எதிர்பார்க்கிறேன். நான் எடுத்துக் கொண்ட தேச காரியமோ முற்றிலும் பரிசுத்தமானது. ஆகவே, அப் பரிசுத்தமான காரியத்திற்கு விக்கினமின்றி தீர்மானஞ் செய்யுங்கள். கடைசியாக நாம் ஒவ்வொருவரும் எதாவதொரு நாளில் கடவுள் சன்னிதியில் நின்று நாம் செய்த நல்வினை தீவினைகளைக் கூறவேண்டி யிருக்கும். ஆதலால், அக் கடவுளுக்குப் பயந்து நீங்கள் சரியானபடி தீர்மானஞ் செய்யுமாறு உங்களுக்கு நல்ல புத்தியைப் பகவான் கொடுக்குமாறு நான் பிரார்த்தனை செய்கிறேன்' என்று ஜூரிகளைப் பார்த்துக் கூறினார். ஸ்ரீ திலகர் கூறின விஷயங்கள் சுவர்களும் உருக்கக் கூடிய நிலைமையி லிருந்தன. ஸ்ரீ திலகர் தம் பிரசங்கத்தை முடித்து ஆசனத்தில் அமர்ந்ததும் நீதி சபையிலிருந்த ஒவ்வொருவருடைய கண்களும் அவரையே பார்த்தன. அட்வோகேட் ஜனரல், ஸ்ரீ திலகருடைய பிரசங்கத்தைக் கேட்டுப் பிறகு தம்முடைய பிரசங்கத்தைச் செய்தார். அவர் ஸ்ரீ திலகரைத் தம் வாயில் வந்தவிதம் தூற்றி மரியாதை யற்ற வசனங்களைப் பொழிந்தார். ஸ்ரீ திலகருடைய பெருந் தன்மையையும் அட்வோகேட் ஜனரல் மிஸ்டர் பிரான்ஸன் அவர்களுடைய சிறுமைத்தனத்தையும் நம்மால் இவ்வளவென சொல்லமுடியாது. நீதிபதி அன்றே விசாரணையை முடித்துவிட உத்தேசித்திருந்தால் அட்வோகேட் அவர்கள் 4 மணிநேரமே பேசி முடித்தார். விசாரணைக் குரிய வாதங்கள் யாவும் முடிந்ததும், நீதிபதி தம்முடைய குறிப்பைக் குறித்துக்கொண்டார். ஜூரிகள் ஒன்பது பேர்களும் தங்கள் தீர்மானங்களை யோசித்துக் கூற இரவு 8 மணிக்குத் தனியே சென்றார்கள். நீதி

சபை நிச்சப்தமாக விருந்தது. ஸ்ரீ திலகரை ஒவ்வொருவரும் பார்த்தவண்ண மிருந்தனர். நீதி மன்றத்தில் போடப்பட்டிருந்த வாயு விளக்குகளில் (Gas - lights) வரவர ஒளி குறைந்தது. அந் நிலைமையால், ஸ்ரீ திலகர் தம்மைச் சுற்றியுள்ள நண்பர்களிடம் வெகு கம்பீரமாக

'ஹதோவா ப்ராப்ஸ்யஸி ஸ்வர்க்கம் ஜித்வாவா போக்ஷ்யஸே மஹீம்' இப்போரின் கண் நீ ஒருக்கால் துரியோதனாதி பகைவரால் மரணத்தை (தோல்வியை) அடைந்தவனாயின் அவசியம் ஸ்வர்க்கத்தை அடைவாய்; ஒருகால் நீ, அவர்களை வெற்றி கொள்ளின் பகைவர்களற்று இம் மண்ணுலகைப் போகிப்பாய் என்னும் பகவத்கீதா ஸ்லோகத்தைக் கூறினார். ஸ்ரீ திலகரின் மனோ தைரியமும் சஞ்சலமற்ற தன்மையும் ஆபத்து காலங்களில் அவருக்குண்டாகும் நிச்சய புத்தியும் மிக்க கொண்டாடத்தக்கவை.

பிறகு, இரவு 8 மணிக்குச் சென்ற ஜூரிகள் கடைசியாக 9 அடித்து 20 நிமிஷத்திற்கு வெளிவந்து தங்களில் 7 பேர்கள் எதிரி எல்லா குற்றங்களிலும் குற்றவாளி யென்றும் 2 பேர்கள் எதிரி குற்றவாளி யல்லவென்றும் தீர்ப்பு செய்ததாகக் கூறினார்கள். நீதிபதியும் அப் பெரும்பான்மை ஜூரிகளின் அபிப்பிராயத்தையே அங்கீகரிப்பதாகக் கூறி, தண்டிப்பதற்கு முன் ஸ்ரீ திலகரை விளித்து 'உமக்கு ஏதாகிலும் சொல்லிக்கொள்ள வேண்டுமானால் சொல்லிக் கொள்ளலாம்' என்றார். ஸ்ரீ திலகர் வெகு கம்பீரமான பார்வையுடனும் புன் முறுவலுடனும் எழுந்து நின்று

'நான் கூறப்போவதெல்லாம் ஜூரிகள் நான் குற்றவாளியென்று தீர்மானித்த பிறகும் நான் நிரபராதி என்பதே; உலகத்திலுள்ள வஸ்துக்களின் விதியை ஆளுவது மகா சக்திகளே. நான் சுதந்தரத்துடனிருப்பதைவிட கஷ்டப்படுவதினால் நான் எடுத்த காரியம் விருத்தியாகுமென்



படி கடவுளுடைய கருணையாக விருக்கலாம்' என்று கூறினார். நீதிபதி, ஸ்ரீ திலகருக்கு 6-வருடகாலம் தீவாந்தர சிட்சை தண்டனையும் 1000 ரூ. அபராதமும் விதித்தகாலத்தில் பின்வருமாறு கூறினார்.

'உமக்கு இத் தண்டனையை விதிப்பது எனக்கு மிகவும் கஷ்டமான கடமையாகப் போயிற்று. இந்த நிலைமையில் உம்மைப்பார்க்க எனக்கு எவ்வளவு கஷ்டமாயிருக்கிறதென்பதை உமக்குச் சொல்லமுடியாது. நீங்கள் அதிமேதாவி; உம்முடைய சக்தி அபாரமானது; மிகுந்த செல்வாக்கையும் சக்தியையும் நீர் பெற்றவர். ஜனங்களுக்காகப் பாடுபடுவதாகக் கூறும் நீங்கள் உண்மையில் சரியாக உம்முடைய சக்தியையும் செல்வாக்கையும் சரிவர நாட்டின் நன்மையை யுத்தேசித்துச் சரியானவழியில் பிரயோகித் திருந்தால் ஜனங்கள் மிக்க சுகத்தை யடைந்திருப்பார்கள். 10 வருடங்களுக்கு முன்னர், நீங்கள் தண்டனை யடைந்தீர்கள்; கோர்ட்டார் உங்களுக்கு மிக்க இரக்கங் காட்டினார்கள்; பிரிவி கௌன்ஸில் தரப்பு மிக்க மரியாதையும் அன்பும் காட்டிற்று. நீங்கள் எழுதின வியாசங்கள் இராஜ்ய கிளர்ச்சிக்கு நியாயமான ஆயுதங்கள் என்று கூறும் உமது புத்தி மிக்க தாறுமாறாகவே யுள்ளது; உங்களுடைய மனமும் சிக்குள்ளதாகவே யுள்ளது. அந்த வியாசங்கள் இராஜநிந்தனை யுள்ளதாக விருக்கின்றன; அவைகள் பலாத்காரத்தைப் பிரசாரஞ் செய்கின்றன; கொலைகளைச் சம்மதித்து அங்கீகரிக்கின்றன; வெடிகுண்டு எறிந்து அநியாயமாகவும் குரூரமாகவும் கொலை செய்வதை நீங்கள் அங்கீகரிப்பதுடன், இந்தியாவின் நன்மைக்கு ஏதோ வந்துவிட்டதுபோல பாம் குண்டுகளின் பிரசன்னத்தைப்பற்றி நீங்கள் சந்தோஷப்படுகிறீர்கள். நான் கூறினதுபோல, சிக்குள்ள மனதும் தாறுமாறான புத்தியுமே இராஜ்ய கிளர்ச்சியில் வெடிகுண்டு பிரயோகம் நியாயமான

தென்று நினைக்கும். நீங்கள் எழுதின வியாசங்கள் நியாயமான தென்று, உங்கள் நீங்குள்ள மனத்தை நினைவில் எப்படி விட்டுக்கொடுத்தீர்? கடந்த 10 வருடகாலமாக ஆளும் சாதியார்களின் மீது உங்களுக்கு இருக்கும் பகைமை இன்னும் ஒழிந்தபாடில்லை; இந்த வியாசங்கள் நீங்கள் கூறியபடி கோபத்தால் அப்பொழுது திடீரென்று எழுதினதில்லை; பிரதிவாரமும் இடைவிடாமற்படி எழுதப்பட்டே வருகிறது. கல்கத்தாவில் ஆங்கிலேய மாதர்கள் இருவர்கள் கொல்லப்பட்ட பதினைந்து நாட்களுக்குப் பிறகு இராஜ்ய கிளர்ச்சியில் வெடிகுண்டுகளின் பிரயோகம் நியாயமானதென நீங்கள் வெடிகுண்டுகளைப் பற்றி வியாசங்கள் எழுதியிருக்கிறீர்கள். அத்தகைய பத்திரிகைகள் நாட்டிற்கு சனியன் போன்றது. உங்களைத் தண்டிப்பதில் எனக்கு மிக்க வருத்தம் ஏற்பட்டிருக்கிறது. ஜூரிகள் உங்களுக்குப் பாதகமாகத் தீர்ப்புசொன்னால், என்ன தண்டனை கொடுக்கலாம் என்று வெகு கவலைப்பட்டு ஆலோசித்தேன். உங்களுடைய வயதையும் அந்தஸ்தையும் யோசித்தும், உங்களால் பெரிதும் அபிமானிக்கப்பட்டு வரும் தேசத்தின் நன்மையையுந் தேசித்தும், நாட்டின் அமைதியையும் சமாதானத்தையுந் தேசித்தும், நீங்கள் கொஞ்சகாலம் நாட்டில் இல்லாமல் வெளியே யிருப்பதே நன்மை என்று நான் எண்ணுகிறேன்" என்று கூறிமுடித்தார். ஸ்ரீ திலகர் 1908-ம் வருடம் ஜூலை மாதம் 22-ந் தேதி இரவு 6 வருட தீவாந்தர சிக்ஷையும் 1000 ரூ. அபராதமும் விதிக்கப்பட்டார். ஸ்ரீ திலகர் தண்டனையடைந்ததும் வெகு இரகசியமாக ஒருவரு மறியாதபடி அவர் இரவோடிரவாய் பம்பாய் நகரைவிட்டு அமதாபாத் நகரிலுள்ள சபர்மதி சிறைச்சாலைக்குக் கொண்டுபோகப்பட்டார். பொழுது புலர்ந்ததும் ஸ்ரீ திலகருக்கு 53-வது வயது பிறந்த தினம். அப் பிறந்ததினத்தைக் கொண்டாட ஸ்ரீ திலகர்



சிறைக்கு அனுப்பப்பட்டார். ஸ்ரீ திலகர் தண்டனையடைந்த சங்கதி இராத்திரியே காட்டுத் தீப்போல் பம்பாய் நகரமெங்கும் பரவிற்று. ஸ்ரீ திலகர் தண்டனையடைந்ததற்காக பம்பாய் நகரிலுள்ள கடைகள் யாவும் மூடப்பட்டன. பள்ளிக்கூடங்களையும் கலாசாலைகளையும் மாணவர்கள் விட்டுவிட்டு வெளிவந்தனர். பம்பாய் நகரிலுள்ள தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் 6 நாள் வரை தொழில் நிறுத்தஞ் செய்தார்கள். பல இயந்திரத் தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தஞ் செய்யப்பட்டது. நாடெங்கும் அநுதாபக் கூட்டங்கள் கூட்டப்பட்டன. பம்பாயில் நடந்த பெரிய கூட்டத்திற்கு ஸர். மேதா அவர்கள் மட்டும் வரவில்லை. மிதவாதிகளிற் பலர் அநுதாபக் கூட்டங்களுக்கு வராமல் ஒதுங்கியே நின்றனர். பத்திரிகைகள் பற்பல மாதிரி எழுதின. லண்டன் டைம்ஸ் பத்திரிகை ஸ்ரீ திலகரின் தண்டனையைப் பற்றிக் கூறுகையில், அவருடைய அபார சக்தியையும் தீவிர கட்சியினர்களுக்குத் தலைமை வகித்துவந்த அந்தஸ்தையும் பற்றிப் புகழ்ந்து கூறிற்று. ஸ்ரீ திலகருக்குச் சரியானபடி நீதிமன்றத்தில் நியாயம் கிடைக்கவில்லை யென்பதே இந்திய பத்திரிகைகளின் கூற்று. பம்பாய் ஹைகோர்ட்டைச் சேர்ந்த புல்பெஞ்ச் (Full Bench) கோர்ட்டிலும் நியாயங் கிடைக்கவில்லை. ப்ரிவி கௌன்ஸிலிலும் நியாயம் கிடைக்கவில்லை. எவ்வாறுமென்றே தண்டிக்கக் கங்கணங் கட்டிவந்த அதிகார வர்க்கத்தினரிடம் ஸ்ரீ திலகருக்கு நியாயம் எங்கு கிடைக்கும்? சபர்மதி சிறையில் ஸ்ரீ திலகருக்குச் சாமானிய கைதிகள் உண்ணும் உணவையே கொடுத்தார்கள். பத்து தினங்களுக்குப் பிறகு எடையில் 10 இராத்தல் குறைந்ததும், ஸ்ரீ திலகருக்கு ஒரு இந்திய கனவானுக்குரிய சாப்பாடு கொடுக்கப்பட்டது. சபர்மதி சிறையி லிருந்து

1908-ம் வருடம் செப்டம்பர் மாதம் 13-ந்தேதி கப்பலில் மூலமாக பர்மாவிலுள்ள மண்டலே சிறைக்கு ஸ்ரீ திலகர் கொண்டு போகப்பட்டார். பம்பாய் கவர்னர் ஸ்ரீ திலகருக்கு விதிக்கப்பட்டிருந்த கடின தண்டனையை நீக்கி, சாதாரண தண்டனையாக்கினது மன்றி, 1000 ரூபாய் அபராதத் தொகையையும் ரத்து செய்தார். ஸ்ரீ திலகருக்குக் கடின தண்டனை அப்படியே யிருந்திருக்குமானால், 4½ வருடத்திற் குள்ளாகவே அவர் விடுதலை யடைந்திருப்பார். சாதாரண கைதிக்கு ஜெயிலில் நாள் குறைப்பு (Remission) கிடையாது. கடின தண்டனை யடைந்தவர்களுக்கு நாள் குறைப்பு வருடத்திற்குச் சற்றேறக் குறைய 1½ மாதம் உண்டு. அது தவிர வேறு இனங்களிலும் நாள் குறைப்பு உண்டு. ஸ்ரீ திலகர் 6 வருடகாலம் மண்டலே சிறையில் 20 அடி நீளமும் 12 அடி அகலமுமுள்ள அறையில் அடைபட்டிருந்தார். ஸ்ரீ திலகருடைய தேகம் அச் சிறிய அறையில் அடைபட்டிருந்ததே யன்றி, அவர் மனம் மகா பாரத யுத்தம் நடந்த குருக்ஷேத்திர பூமிக்கும், ஆரியர்களின் பூர்வ நிவாஸமான வட துருவத்திற்கும், மிருகசிருட நக்ஷத்திர கிரகத்திற்கும் வெகு சுதந்தரத்துடன் போய்க்கொண்டிருந்தது. மண்டலே சிறையில் ஸ்ரீ திலகருக்குச் சாப்பாடு சமைத்துப் போட இந்தியாவிலிருந்து மகாராஷ்டிர நாட்டைச் சேர்ந்த பிராம்மண கைதி யொருவனும் கூடவே மாற்றப்பட்டான். நீர்வியாதி வருகையில் அவருக்கு [illegible]மான உணவை உட்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது. ஸ்ரீ திலகர் எல்லா கஷ்டங்களையும் ஆனந்தத்துடன் தாங்கும் தன்மை யுள்ளவர். அவர் சம தரிசனமுடைய வித்வான். கர்மயோகி. அவர் சுகத்தைக் கொடுக்கும் பிரிய வஸ்துவை யடைந்து சந்தோஷப் படுவதில்லை. துக்கத்தைக்கொடுக்கும் அப்பிரிய வஸ்துவை யடைந்து கிலேசப் படுவதில்லை. இவ்



விரண்டையு மறிந்தெப்போதும் பிரகாசமாகவேயிருப்பார். அவர் பயமில்லாமலும், சம்சயமில்லாமலும், யோகத் தோடு கூடிய ஒருமை மனத்தோடும் ஜீவப்பிராணிகளிடத்தும் ப்ரீதியு முள்ளவர். அத்யாத்ம சித்தத்தால் சர்வ கர்மங்களையும் பகவானிடத்து ஸமர்ப்பணஞ் செய்து இச்சையற்று மமதை யற்று, சோக மற்று இச்சுதந்தரப் போராட்டத்தை ஸ்ரீ திலகர் நடத்தி வந்தார். அவர் சம்ஸார வாழ்க்கையிலிருந்தும், தாமரை இலையில் ஜலம் ஒட்டியும் ஒட்டாதது போலவே உலகத்தின் நல்வழிக்காக மேலான கர்மத்தை ஜனகாதி முனிவர்கள்போல அனுஷ்டித்து வந்தார். ஸ்ரீ திலகர் தண்டனையடைந்த பிறகு பல தீவிரகட்சியினர்கள் தண்டனை யடைந்தனர். தீவிரகட்சியினர்களிற் பலர் தண்டனை யடைந்ததினாலும், தீவிரகட்சியினர்களுக்குத் தலைவராய் விளங்கின ஸ்ரீ திலகர் இல்லாததினாலும், நாட்டில் ஒரு மகா அமைதி யுண்டாயிற்று. தீவிர கட்சியினர்களின் "பலத்த உழைப்பினால் ஸ்தாபிக்கப்பட்ட ஜாதீயகலாசாலைகளும் கல்விசாலைகளும் சரிவர நடத்துவாரின்றி மூடப்பட்டன. தேசீய சபைகள் பல உடைக்கப்பட்டன. சமிதிசபைகள் கலகக்கூட்டம் என்று அரசாங்கத்தாரால் தடுக்கப்பட்டன. பஞ்சாயத்து சபைகள் சீர்குலைந்தன. மிதவாதிகளோ, தங்கள் இருப்பிடத்திலேயே பதுங்கிக்கொண்டிருந்தனர். மின்டோ மார்லி சீர்திருத்தச் சட்டத்தில் உத்தியோக வேட்டைகளை நாடி மிதவாதிகளிற் சிலர் வட்டமிட்டிருந்தனர். அச்சுக்கூடச்சட்டம் பத்திரிகைகளின் சுதந்தரங்களைக் குறைத்தன. பல இராஜீய பிரசாரங்கள் தடுக்கப்பட்டுப் பறிமுதல் செய்யப்பட்டன. ஸ்ரீ திலகர் மாண்டலே சிறையில் இருக்கையில் அவருடைய பத்தினியார் 1912-ம் வருடம் ஜூன் மாதம் 6-ந் தேதி இறந்தார். கணவனோடு சகல கஷ்டங்களையும் தாங்கி மேலான கீர்த்தியைப் பெற்றுவந்த

தாபிபாய் தம் கடைசிகாலத்தில் கணவரின் முகம் பார்க்காமலே இறந்தார். ஸ்ரீ திலகர் மாண்டலே சிறையில் இருக்கையில் பத்திரிகைகளோ, இராஜீய சம்பந்தமான மாதாந்தர சஞ்சிகைகள் முதலியனவோ அவைகளைப் பெற அனுமதிபெறவில்லை. ஆனால், எழுதும் கருவிகளும் மற்ற பல புத்தகங்களும் அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தன. ஸ்ரீ திலகர் தமது சிறைவாசத்தில் பகவத்கீதைக்கு ஆதன வியாக்யானமொன்று கர்மயோக சாஸ்திரப்படி எழுதினார். ஸ்ரீ திலகர் தம்முடைய சிறைவாசத்தைக் கழித்துச் சுகமே உயிருடன் திரும்பி வருவாரென்று அநேகர் எண்ணவில்லை. சிறைச்சாலையிலேயே ஸ்ரீ திலகர் இறந்துவிடுவாரென்றே பலர் எண்ணியிருந்தார்கள். ஆனால், அவருடைய தெய்வபக்தியும், அஞ்சா நெஞ்சமும், சஞ்சலமற்ற மனமுமே அவரைக் காப்பாற்றின. தாம் உயிருடன் விடுதலையடைந்து மீண்டும் இந்தியா ஸ்வராஜ்யம் அடையப் பாடுபடுவோம் என்ற எண்ணம் ஸ்ரீ திலகருக்குத் திடமாகவிருந்தது. ஸ்ரீ திலகர் ஒவ்வொரு வருடமாகத் தம் ஆறுவருடத்தையும் கழித்தார். 1914-ம் வருடம் ஜூன்மாதம் 16-ந் தேதி நல்ல நள்ளிரவில் புனநகரிலுள்ள நாராயணவாடி என்னும் இடத்திலுள்ள தம் கிருகத்தில் ஸ்ரீ திலகர் மாண்டலேயினின்றும் கொண்டுவரப்பட்டு விடுவிக்கப்பட்டார். ஸ்ரீ திலகர் விடுதலைபெற்றுத் தம் கிருகத்திற்கு வந்துவிட்டார் என்ற செய்தி புனநகரில் பொழுது புலருவதற்குள் பரவிற்று. கூட்டம் கூட்டமாகச் சனங்கள் ஸ்ரீ திலகரைத் தரிசிக்கக் கூடினர். ஸ்ரீ திலகருடைய பழைய சிநேகிதர்கள் பலர் பல ஊர்களினின்றும் வந்தனர். ஸ்ரீ திலகர் தம்முடைய மிகுதிகாலத்தைத் தத்துவ ஆராய்ச்சியிலும், கடவுள் வழிபாட்டிலுமே இனி கழித்து வருவாரென்று பலர் கூற ஆரம்பித்தனர். மீண்டும் இவர் கட்சியினர்களுக்குத் தலைவராகநின்று இராஜீய போராட்டத்



தில் தலையிடுவாரா வென்னும் ஐயம் பலருக்கு இருந்தது. 1914-ம் வருடம் ஜூன் மாதம் 21-ந் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று புனவில் ஸ்ரீ திலகருக்கு வரவேற்பு உபசாரம் செய்யக்கூடின ஒரு பெரிய கூட்டத்தில் ஸ்ரீ திலகர் பின்வருமாறு கூறியுள்ளார்—

'ஆறுவருடங்களுக்குப்பிறகு நான் என் ஜன்மதேசம் வந்து வெளிப் பிரபஞ்சத்தினிடம் அறிமுகம் கொள்ளலானேன். உலகத்தையே நான் மறந்துவிடவும், உலகமே என்னை மறந்துவிடும்படியுமான எண்ணத்தைக்கொண்டு அதிகாரிகள் என்னை வெளி சம்பந்தமின்றித் தனியே வைத்திருந்தார்கள். ஆனால், நான் சனங்களை மறக்கவில்லை; சனங்களும் என்னை மறக்கவில்லை. ஆறுவருடகாலம் நான் சனங்களைப் பிரிந்திருந்தாலும் அவர்களிடத்தே உண்டான அன்பு எனக்கு எள்ளளவும் மாறாது; ஆறுவருடகாலத்திற்குமுன் அன்னோன்யத்துடனும் உணர்ச்சியுடனும் எங்ஙனம் எந்த அந்தஸ்துடன் நான் உழைத்துவந்தேனோ அவ்வண்ணமே மீண்டும் உழைக்க நான் சித்தமாயிருக்கிறேன். ஆனால், காலத்தையறிந்து, என் வழியைச்சற்று மாற்றிக்கொள்ளவேண்டியதாகமட்டும் ஏற்படும்.'

இவ்வாறு ஸ்ரீ திலகர் கூறினதைக்கேட்ட பலர் ஆச்சரியமடைந்தனர். ஸ்ரீ திலகர் மீண்டும் இராஜீயத் துறையிலேயே தளராமல் உழைக்க இருக்கிறார் என்பதைக் கேட்ட பலர் ஸ்ரீ திலகரிடத்தில் முன்னிலும் அதிகமான பக்தியைக் காட்டிவந்தார்கள். ஸ்ரீ திலகருக்கு ஆப்தநண்பர்களிற் சிலர் கீதாரகஸ்யம்போன்ற உயர்ந்த கிரந்தங்களை எழுதி அச்சிட்டு உலகத்தாருக்கு நன்மை புண்டாக்கவேண்டுமென்று ஸ்ரீ திலகரிடம் கூறினார்கள். ஸ்ரீ திலகர், அவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டுப் புன்னகைகொண்டு, 'புத்தகங்கள் எழுதுவதும் தத்துவ ஆராய்ச்சிசெய்வதும் எனக்குப்

பொழுதுபோக்குக்குரிய விளையாட்டுக் கருவிகள்; என்னுடைய வாழ்க்கையின் இலட்சியம் இராஜ்யப் போராட்டமே' என்று கூறினார். 1908-ம் வருடத்தில் இந்தியாவில் உண்டான தேசிய ஊக்கமும் இராஜ்ய உணர்ச்சியும் அடியோடு குறைந்துவிட்டதையும், தேசத்தில் ஒரு மகா தாமஸத்தன்மை யுண்டாகி பெரும் அமைதி ஏற்பட்டதையும் ஸ்ரீ திலகர் கண்டு வருந்தினார். இந்தியாவின் நற்காலத்திற்காக மீண்டும் இராஜ்ய உணர்ச்சியைப் பரவச் செய்ய சந்தர்ப்பம் உண்டாயிற்று. மிண்டோ மார்லி சீர்திருத்தச் சட்டம் பலருக்கு ஏமாற்றத்தைக் கொடுத்ததை ஸ்ரீ திலகர் அறிந்தார்; மிதவாதிகள் பலர் மார்லியிடம் நம்பியிருந்து மோசம் போனதையும் அவர் கண்டார்; முஸ்லிம் சமூகத்தினிடை ஒரு புதிய உணர்ச்சியுண்டாகி வருவதையும் அவர் கவனித்தார்; இந்திய இராஜ்யத்துறையில் சுதந்தரப் போராட்டத்திற்குப் பாடுபட மிஸஸ் பெஸண்டு இறங்கியிருப்பதையும் அவர் அறிந்தார்; ஐரோப்பிய யுத்தமொன்று தெய்வகதியாக வந்திருப்பதையும் ஸ்ரீ திலகர் அறிந்தார். இவ்வளவு சந்தர்ப்பங்களையும் வெகு நுட்பமாக அறிந்து, இராஜ்யத்துறையில் ஒரு திட்டத்தை யுண்டாக்கி உழைக்க அவர் மனங்கொண்டார். (1) காங்கிரஸ் உடன்படிக்கை. (2) இரு கட்சியினர்களை ஒன்று சேர்த்து அமைத்தல் (3) சுய ஆட்சி கிளர்ச்சியை யுண்டாக்கல் ஆகிய இம்மூன்றையும் செய்ய ஸ்ரீ திலகர் முன்வந்தார். 1908-ம் வருடத்தில் அலகாபாத்தில் சூரத்பிளவுக்குப் பிறகு கூடின ஒப்பந்தக்கூட்டத்தில் தீர்மானமானபடி தீவிர கட்சியினர்களுக்குக் காங்கிரஸ் சபைக்குள் சேர வழியில்லாமையைக்கண்டு, ஒருவழியை யுண்டாக்க ஸ்ரீ திலகர் யோசித்தார். இந்த, ஸ்ரீ திலகர் தம் வாழ்நாளை ஞானத்திலும் தத்துவ ஆராய்ச்சியிலும் கழிப்பதென்று எண்ணியிருந்த



அரசாங்கத்தார், ஸ்ரீ திலகர் மீண்டும் இராஜ்யத்துறையில் இறங்கப்போவதையறிந்து அவருடைய வீட்டுக்குச் சமீபமாக இரண்டு போலீஸ் ஸ்டேஷன்களை யேற்படுத்தி ஸ்ரீ திலகர்மீது வெகு ஜாக்கிரதையாகக் கண்ணோட்டஞ் செலுத்தி வந்தார்கள். ஸ்ரீ திலகர் வீட்டுக்குப் போகிறவர்களையும் வருகிறவர்களையும் தடுத்து அவர்களுடைய பெயர் விலாசம் முதலியவைகளைக் கேட்டும் வர ஏற்பாடு செய்தார்கள். ஆனால், ஐரோப்பிய யுத்தமாரம்பித்ததும் அப்போலீஸ் அமுல்கள் ஒருவாறு குறைந்தன. ஸ்ரீ திலகர் தம் வாழ்நாட்களில் பலதடவை அநியாயமாகத் தண்டிக்கப்பட்டும் பலவிதமாகத் துன்புறுத்தப்பட்டும் வந்ததற்கு அரசாங்கத்தின்பால் பகைமையைப் பாராட்ட நல்ல காரணமிருந்தது. ஆனால், ஸ்ரீ திலகரோ சற்றேனும், அத்தகைய அற்ப எண்ணத்தைக்கொள்ளாமல் கம்பீரமான தோற்றத்துடனும் மேலான எண்ணத்துடனும் ஐரோப்பிய யுத்தத்தில் பிரிட்டிஷாருக்குச் சகாயமாக உதவிபுரிய முன்வந்தார். 'என் விஷயத்தில் அரசாங்கத்தார் என்ன எண்ணியிருந்தபோதிலும், அரசாங்கத்திற்கு நேரான பகையாளி என்று என்னை அவர்கள் கருதினபோதிலும், ஜனங்களுக்கு அரசாங்கத்தினிடத்தில் . துவேஷத்தை யுண்டாக்குபவன் என்று நினைத்தபோதிலும், நான் என் மனப்பூர்வமாக பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கவிழ்க்கவேண்டுமென்ற எண்ணத்துடன் வேலை செய்யவில்லை. எப்படியிருப்பினும், பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு ஐரோப்பிய யுத்தத்தினால் ஏற்பட்ட நெருக்கடியான நிலையில் உயர்ந்தவனாகிலும் தாழ்ந்தவனாகிலும் சரி, அல்லது பணக்காரனாகிலும் ஏழையாகிலுஞ்சரி அவனவனுடைய சக்திக்குத் தக்கபடி மன்னர்பெருமானுடைய அரசாங்கத்துக்கு உதவிசெய்யவேண்டும்' என்று ஸ்ரீ திலகர் பகிரங்கமாகத் தெரிவித்தார். ஸ்ரீ திலகருடைய அறிக்கையைக்

கண்டபலர் ஆச்சரியப்பட்டனர். ஆங்கிலோ இந்திய பத்திரிகை வர்க்கத்தைச் சேர்ந்த 'அட்வோகேட் ஆப் இந்தியா' பத்திரிகையும் ஸ்ரீ திலகரின் இராஜபக்தியை மெச்சிற்று. ஸ்ரீ திலகர் பகிரங்கமாக வெளியிட்ட அறிக்கையைக் கண்ட அன்னி பெஸன்டு உடனே மிதவாதிகளுக்கும் தீவிர கட்சியினர்களுக்கும் சமரசமொன்றை யுண்டாக்கிவைக்க வேண்டிப் பிரயத்தனஞ்செய்ய வாரம்பித்தார். தேசசன்மையை யபுஷ்டிக்க ஸ்ரீ கோகலே ஸ்ரீ திலகருடன் ஒத்துழைக்க முன்வரலாமல்லவா? ஸ்ரீ கோகலேயோ சற்றேனும் ஒற்றுமையையும் நாட்டின் நன்மையையும் உத்தேசிக்காமல் ஸ்ரீ திலகரைக் காங்கிரஸில் மீண்டும் வராதபடி செய்தார். ஆனால் நல்லவேளையாகக் கடவுள் ஸ்ரீ திலகர்பக்கம் இருந்ததினால் காங்கிரஸ் சபைக்குள் மீண்டும் பிரவேசிக்க ஒருவழி யுண்டாயிற்று. பம்பாய் மிதவாதித் தலைவர் ஸர் பிரோஸிஷா மேதாவோ, ஸ்ரீ திலகரை ஒரு முறை காங்கிரஸுக்குள் நுழையவிட்டால் மறுபடியும் காங்கிரஸ் மகாசபையை சுவாதீனப்படுத்திக்கொள்வாரென்று கருதி ஸ்ரீ திலகருடைய பேச்சே கூடாதென அவ்வளவு பிடிவாதமாக யிருந்தார். தாய்நாட்டின் பொருட்டு 6 வருடகாலம் சிறைபுகுந்து படாத கஷ்டமெல்லாம் பட்டுப் பலவீனத்தினும் அதிகார வர்க்கத்தினர்களால் துன்புறுத்தப்பட்டு வந்த ஒருவரை மிதவாத தலைவர்கள் பகிஷ்கரிக்கப் பாடுபட்டதைத் தெய்வம் சகிக்காத தன்மையால், அவ்விருவர்களும் நின்ற நிலைமாறி இறக்கவும், ஸ்ரீ திலகர் தாழ்ந்த நிலைமாறி இருக்கவுமாயிற்று. ஸ்ரீ கோகலே அவர்கள் தம்முடைய ஜீவியகாலத்தின் கடைசியில் ஸ்ரீ திலகர் விஷயமாகச் சற்று சம்மதித்திருப்பாரானால், எவ்வளவு பெருந்தன்மையாக யிருக்கும்? என்ன படித்தும் என்ன? என்ன தேசாபிமானம் இருந்தென்ன? அரசாங்கத்தார் ஒருவரைத் துன்புறுத்துகின்றார்க



ளென்ற காரணத்தாலேயே அவருடன் சேராமல் அவரைச் சத்துருவாகக் கருதுவது நன்மையல்ல. தேசாபிமானத்துடன் காருண்ய குணமும் பெருந்தன்மையும் இருந்தாலன்றி அந்த தேசாபிமானம் பிரயோஜனப்படாது. அத்தகைய தேசாபிமானம் மிகவுந் தோஷமேயாம். திருமதி பெஸன்டும் 1914-ம் வருடத்திய சென்னை காங்கிரஸ் காரியதரிசியான ஸ்ரீ சுப்பராவ் அவர்களும் 1914-ம் வருடம் டிசம்பர் மாதத்திய முதல்வாரத்தில் புனா நகர் வந்து சேர்ந்து ஸ்ரீ கோகலே யவர்களையும் மற்ற மிதவாதிகளையும், ஸ்ரீ திலகரையும் இன்னுஞ் சிலரையும் கண்டார்கள். ஸ்ரீ கோகலேயிடமும் மற்றுஞ் சில மிதவாதிகளிடமும் பெஸன்டும் சுப்பராவும் 1908-ம் வருடத்தில் ஏற்கனவே தீர்மானமான காங்கிரஸ் விதிகளில் 20-வது விதியை மாற்ற யோசனை கேட்டார்கள். ஸ்ரீ கோகலே முதல் முதல் ஒத்துக் கொண்டதாகத் தெரிகிறது. பிறகு அவ்விருவர்களும் பம்பாய் நகர் சென்று மேதா அவர்களைக் கண்டார்கள். மேதாவோ அதற்கிணங்காமல் முடியாதென ஒரே பிடிவாதமாகக் கூறி விட்டார். மேதா முடியாதெனக் கூறினதை அவர்கள் புனா நகர் வந்து ஸ்ரீ கோகலேயிடம் தெரிவித்தார்கள். ஸ்ரீ கோகலே, உடனே, ஸ்ரீ திலகர் மீண்டும் காங்கிரஸுக்கு வருவாரானால் பழையபடி கட்சியுண்டாகிப் பின்பு கலகம் ஏற்படுமாதலால், தானும் மேதா அவர்களின் அபிப்பிராயப்படி அவ்விதியை மாற்ற இஷ்டப்படவில்லையென்று கூறிவிட்டார். அதோடு நிற்காமல், 1914-ம் வருடத்திய காங்கிரஸ் மகாசபைக்கு அக்கிராசனம் வகித்த பாபு பூபேந்திரநாத வஸுவுக்கு ஸ்ரீ கோகலே ஒரு இரகசியமாக தாம் இஷ்டப்படாததற்குக் காரணம் காட்டி கடிதமொன்றை யனுப்பினும், ஸ்ரீ கோகலே எழுதிய கடிதம் வெகு சீக்கிரத்தில் எவ்வண்ணமாகவோ பகிரங்கமாயிற்று. ஸ்ரீ திலகரின் கொள்

கையை மாறுபாடாகவும் விபரீதமாகவும் தாறுமாறும் அக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. அக்கடிதமும் வேறு சில கடிதங்களும் எச். பி. மோடி அவர்களால் பகிரங்கமாயின. ஸ்ரீ சுப்பாராவ் அவர்கள் ஸ்ரீ திலகரிடம் வந்து அவருடைய இராஜீய எண்ணத்தைப் பற்றிக் கேட்டார். ஸ்ரீ திலகர் கவர்ன்மெண்டை பகிஷ்கரிக்கவே எண்ணியிருக்கிறேனென்றும், காங்கிரஸ் சபையில் பிரவேசித்தால் ஐயர்லாந்து வாதிகளின் தடுப்பு (முட்டுக் கட்டையிடல்) முறையை அனுஷ்டிக்க நேரிடுமென்றும் ஸ்ரீ கோகலே அவர்கள் எழுதின கடிதத்திலிருப்பதைக்கொண்டு 1914-ம் வருடத்திய காங்கிரஸ் சபையின் விஷயாலோசனை கமிட்டியில் வாதம் உண்டாகி சமாதானப் பேச்சு நின்றுபோய் விட்டது. ஆனால், மிஸஸ் பெஸண்டு உடனே ஸ்ரீ திலகருக்குத் தந்தியடித்து உண்மையைக் கேட்டார். ஸ்ரீ திலகர் தாம் அவ்விதம் எவரிடமும் கூறவில்லையென்றும் தம் நண்பர் பலர் சட்ட சபைகளிலும் ஜில்லாபோர்டு, முனிஸிபாலிடி முதலிய சபைகளில் அங்கத்தினர்களாக யிருக்கிறார்களென்றும் தெரிவித்தார். ஸ்ரீ திலகருடைய பதில் தந்தி வருவதற்குள் சபை முடிந்து விட்டது. ஸ்ரீ திலகர்மீது அபாண்டமாகப் பழிசுமத்தின விஷயமாக மன்னிப்பு கேட்டுக்கொள்ளப் பட்டது. அந்த காங்கிரஸில் கடைசியாக சமாதானம் ஒன்றும் நடக்கவில்லையென்றாலும், அது விஷயமாக ஆலோசிக்கக் கமிட்டியொன்று ஏற்படுத்தப் பட்டது. ஸ்ரீ கோகலே யவர்களின் கடிதம் சமாதானத்திற்குத் தடையாக யிருந்ததைக் குறிக்க நாம் விசனிக்கின்றோம். ஸ்ரீ சுப்பாராவ் அவர்கள் ஸ்ரீ திலகரிடம் பேசியிருந்ததை தாம் அறிந்துகொண்டதாக ஸ்ரீ கோகலே அவர்கள் தெரிவித்தார். ஸ்ரீ சுப்பாராவ் அவர்கள் சமாதான விஷயமாக ஸ்ரீ திலகரிடம் பேசினதைச் சரிவர உண்மையுடன் தெரிவிக்கவில்லையென்பது பிறகு புலனா



யிற்று. சென்னையில் நடந்த காங்கிரஸ் சபையில் ஏற்படுத்தப்பட்ட கமிட்டி சரிவர தன்காரியத்தைச் செய்யவில்லை. 1915-ம் வருடம் பிப்ரவரிமாதம் 8-ந் தேதி ஸ்ரீ சுப்பாராவ் அவர்கள் பம்பாய் மிதவாதிகள் காங்கிரஸ் விதியை மாற்ற சம்மதிக்கவில்லையென்று 'நியூ இந்தியா' பத்திரிகைக்குக் கடிதமொன்றை எழுதினார். மிஸஸ் பெஸண்டின் முயற்சியால் 1915-ம் வருடத்தில் சத்யேந்திர பிரஸாத ஸின்ஹா (லார்ட் ஸின்ஹா) அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் பம்பாயில் நடந்த காங்கிரஸ் சபையில் காங்கிரஸ் விதி மாற்றப்பட்டு, காங்கிரஸ் இலட்சியத்தையே ஆதரிக்கும் சபைகள் இரண்டு வருடகாலத்திற்குக் குறையாத காலஅளவைக் கொண்டதாயின் அவைகள் மூலமாகப் பொதுக்கூட்டம் கூட்டி காங்கிரஸ் சபைக்குப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கலாம் என்று தீர்மானிக்கப் பட்டது. முன்னர் அப்படியல்ல. மிதவாதிகளின் சபைகளின்றுமே தெரிந்தெடுக்கப்படும். பிரதிநிதிகள் மிதவாதிகளின் தயவுக்குக் காத்துக்கொண்டிருக்கவேண்டும். இனி கட்சியினருக்கு வசதாப்பில்லை. ஆகவே 1915-ம் வருடம் விதியொன்றை உண்டாக்கினாலும், ஸ்ரீ திலகர் அவ்விதி அவ்வளவு திருப்திகரமானதல்லவென்று கூறியே தாமும் தம்முடைய கட்சியைச் சேர்ந்தவர்களும் காங்கிரஸ் சபைக்கு வரத் தயாராகயிருக்கிறோம் என்று பகிரங்கமாகத் தெரிவித்தார். பம்பாய் காங்கிரஸுக்கு முன்னரே ஸ்ரீ கோகலேயும் மேத்தாவும் இறந்தனர்.

# 11. *கீதா ரகஸ்யம்

ஸ்ரீமது பாரத நாட்டில் தொன்று தொட்டு நடந்திருக்கிற தர்மசாஸ்திர முதலிய கிரந்தங்களில் ஸ்ரீமத் பகவத்கீதை என்பது மிக்க பிரகாசமானதும் பரிசுத்தமானதுமான ஓர் இரத்தினமாகும். அண்டபிண்ட பிரம்மாண்ட ஞானங்களைப்பற்றியும் ஆத்ம வித்யா தத்துவங்களைப்பற்றிச் சிறிதுஞ் சந்தேகமின்றியும் மனிதர்களுக்குப் பரமபுருஷார்த்தமாயுள்ள பக்தி, ஞானம் கர்மம் முதலியவைகளைப் பற்றியும் இவைகளுக்கு ஏற்படும் வியவகாரங்களுக்கு யுக்தா யுக்தமுள்ளதும் மனோகரமானதுமான பொருள்களைப் பற்றியும் ஸ்ரீமத் பகவத்கீதை கூறும். சம்ஸாரத்தில் பிரமித்து நிற்கும் ஜனங்களுக்கு சாந்தியைக் கொடுத்து பலப் பிராப்தியற்ற நிஷ்காம கர்மங்களைச் செய்யத் தூண்டி [illegible]ந்தத்தை யடையும்படி செய்யும் இந்த பகவத்கீதைக்கு மிஞ்சின சாஸ்திரம் உலகத்திலில்லை. ஸ்ரீ பகவத்கீதையானது ஆத்ம ஞானத்தின் கூடார்த்த தத்துவத்தை எளிதில் பாலர்களும் வயோதிகர்களும் ஸ்திரீகளும் அறியக்கூடியதாயும் ஞானத்தோடு கூடிய பக்தியையே முக்கியமானதென்று தோற்றக்கூடியதாயுமுள்ளது. சகல வைதிக தர்மசாரமுள்ள அநேக கிரந்தங்களைக் காட்டிலும் ஸ்ரீமத் பகவத்கீதையானது மிக்க உயர்ந்த சிரமான கிரந்தமாகும். இம்மகா கிரந்தத்திற்கு லோகமான்ய ஸ்ரீ திலகர் தம் ஸ்வதந்தர சக்தியினால் புதிய வியாக்கியான மொன்றை கர்மயோக சாஸ்திர வழியாக எழுதியுள்ளார்.

* இக்கீதா இரகஸ்யம் கூடிய சீக்கிரத்தில் தமிழில் மொழி பெயர்த்துப் பிரசுரிக்கப்படும்.



பகவத்கீதைக்கு வியாக்கியானஞ் செய்தவர்களில் ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள், ஸ்ரீ இராமானுஜர், ஸ்ரீ மத்வர், ஸ்ரீ வல்லபாசாரியர், ஸ்ரீ நிம்பார்க்காசாரியர் ஆகிய இவர்களே முக்கியமானவர்கள். பலர் பிறகு மேற்கூறிய இந்த ஆசாரிய ஸ்வாமிகளின் சம்பிரதாயத்தைப்பற்றி வியாக்கியானம் எழுதி வந்தார்கள். ஸ்ரீ திலகருடைய வியாக்கியானம் புதிய சம்பிரதாயத்தைப் பற்றியது. இது வரை எவராலும் செய்யப்படாத வழியில் வியாக்கியானம் செய்து பாரத நாட்டைப் பிரமிக்கச் செய்தார்; ஆகவே, பூர்வமிருந்த அந்த ஆசாரிய கோஷ்டியில் ஸ்ரீ திலகரும் ஒருவராக யிருக்கக் கூடியவரென்பது மிகையாகாது. ஸ்ரீ திலகர் பத்தாவது பன்னிரண்டாவது நூற்றாண்டில் பிறந்திருப்பாரேயானால், அவர் ஸ்ரீ சங்கரர், இராமானுஜரைப் போன்ற ஓர் ஆசாரிய ஸ்வாமியாக விளங்கி அத்வைதம் விசிஷ்டாத்வைத சம்பிரதாயங்கள் ஸ்தாபிக்கப்பட்டதுபோல கர்மயோக பரமாகப் புதிய சம்பிரதாயத்தை அவர் ஸ்தாபித்திருப்பார். ஓர் ஆசாரிய பட்டத்தை வகிப்பதற்குரிய பாண்டித்தியம்; சீலம், சமதமாதி குணங்கள் அனுஷ்டானம், ஜீவகாருண்யம் முதலியவைகள் அவரிடத்தில் ஒருங்கே குடிகொண்டிருந்தன. நிற்க, ஸ்ரீ திலகருடைய கீதாரகஸ்யத்தைக் கவனிப்போம். ஸ்ரீ திலகர் 16-ம் பிராயத்தவராக யிருக்கையில் 1872-ம் வருடத்தில் முதல் முதல் தந்தை வழியாகக் கீதையைப்பற்றி அறிவார். மராடி பாஷையில் பகவத்கீதைக்கு வியாக்கியானஞ் செய்து பிரசுரமான 'பாஷாவிக்ருதி' என்னும் புத்தகத்தைத் தகப்பனாருடைய ஆக்ஞையைக் கொண்டு அவர் கேட்கும்படி படித்து வந்தார். அக்காலத்தில் பகவத்கீதையை மட்டும் அடிக்கடி வியாக்யான பூர்வமாகப் படித்துவந்தாரேயன்றி, பகவத்கீதையின் தர்மம் என்னவென்பதை அறியப்போது

மான ஞானம் ஸ்ரீ திலகருக்கு அப்பொழுது பரிபக்குவமாக வில்லை. பிறகு வரவர, சமஸ்கிருத பாஷாஞானம் அதிகரித்து ஆங்கில பாஷாஞானமும் அதிகரித்ததும் ஸ்ரீ பகவத் கீதைக்கு உண்டான வியாக்கியானங்களை யெல்லாம் ஒன்றன் பின்னொன்றாகப் படித்து, அவ்வியாக்கியானங்கள் யாவும் திருப்தியற்றவையா யிருக்கக்கண்டு, கீதையின் ஸ்லோகங்களை யாதொரு வியாக்கியானங்களின் சகாயமின்றித் தனியே ஆராய்ச்சி செய்ய ஸ்ரீ திலகர் ஆரம்பித்தார். சிறந்த, தன்னைச் சேர்ந்தவர்களுடன் யுத்தஞ் செய்தல் மிக்க அக்ர காரிய மென்றெண்ணி சோகமுற்றிருந்த அர்ஜுனனை அந்த யுத்தத்தையே பிரவிர்த்திக்கும்படி கூறின பகவத்கீதையில் பிரம்மஞானத்தினாலோ அல்லது பக்தியினாலோ மோக்ஷம் எப்படி உண்டாகும்? அல்லது இப்படிப்பட்ட கிரந்தத்தினால் மோக்ஷ மார்க்கத்தின் விவேசனத்தை ஏன் செய்ய வேண்டும்? என்ற ஐயம் ஸ்ரீ திலகருக்கு உண்டாயிற்று. பகவத்கீதைக்கு ஏற்பட்ட பாஷ்யங்களை யெல்லாம் பார்த்தும் அவருக்குச் சமாதானம் உண்டாகவில்லை. பாஷ்யகாரர்கள் எவரும் இவ் விஷயங்களைப்பற்றி கூறவில்லை. ஆகவே, ஸ்ரீ திலகர் பாஷ்யங்களை எல்லாம் விட்டுவிட்டு பகவத்கீதையின் மூல ஸ்லோகங்களைப் பல தடவை பாராயணஞ் செய்து அந்த ஸ்லோகங்களிலுள்ள பதங்களுக்குத் தனியான பொருள்களைச் செய்தார். கீதையானது நிவர்த்தி மார்க்கத்திற்கல்லவென்றும், கர்மயோக பரமாக வுள்ளதென்றும் ஸ்ரீ திலகர் அறியலானார். கீதையிலுள்ள 'யோக' என்னும் பதத்திற்கு கர்மயோகம் என்றே அர்த்தம் கொண்டு பிரயோகிக்கப்பட்டுள்ளதென்று அவர் அறிந்தார். மகாபாரதம், வேதாந்த ஸூத்திரம், உபநிடதங்கள், வேதாந்த சாஸ்திரத்தை யொட்டிய சமஸ்கிருத கிரந்தங்கள் ஆங்கிலேய நீதிதர்ம கிரந்தங்கள் ஆகிய இக்



கிரந்தங்களை ஐயந்திரிபறக் கற்று ஆராய்ச்சி செய்து ஸ்ரீ திலகர் தாம் கொண்ட அபிப்பிராயமே பகவானுடைய அபிப்பிராயம் கீதையில் கூறப்பட்டுள்ளதென நிச்சயங் கொண்டார். அந்நிச்சய அபிப்பிராயத்தை உலகினருக்கு வெளிப்படுத்த எண்ணங் கொண்டும், தாம் நிச்சயித்த அபிப்பிராயத்தின்மீது ஏதாவது ஆக்ஷேபமாக வாதமேற்பட்டு அது வழியாகச் சில நுண்ணிய பொருள்கள் உண்டாகலாமென்று கருதியும் ஸ்ரீ திலகர், பகவத் கீதைக்குத் தம் அபிப்பிராயப்படி கர்மயோக பரமாகச் சில விடங்களில் உபந்யாசஞ் செய்ய எண்ணினார். 1902-ம் வருடம் ஜனவரி மாதத்தில் நாகபுரி நகரில் பல பண்டிதர்கள் கூடிய ஒரு சபையில் பகவத்கீதா உபந்யாசஞ் செய்தார். அவ் வுபந்யாசம் மராட்டி பத்திரிகைகளில் பிரசுரமாயின. பிறகு கரவீர சங்கேஸ்வர மடாதிபதியான ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரிய ஸ்வாமிகளின் வேண்டுகோளுக் கிணங்கி ஸ்ரீ திலகர் மகா பண்டிதர்கள் கூடின வித்வத்சபையில் 1904-ம் வருடம் ஆகஸ்டு மாதத்தில் கர்மயோக பரமாக பகவத்கீதா உபந்யாசஞ் செய்தார். தவிர, தமக்கு ஒழிந்த வேளைகளிலெல்லாம் பிரபல பண்டிதர்களுடன் கீதா விஷயமாகப் பல விஷயங்களை வாதித்தும் தம் அபிப்பிராயத்தைப் பலப்படுத்தியும் வந்தார். ஸ்ரீ திலகருக்கு அத்யந்த மித்திரர் ஒருவருண்டு. அவர் ஸ்ரீபதி புவாபிங்கார்கர். அவருடைய சகவாசத்தால் ஸ்ரீ திலகர் பாகவத சம்பிரதாயத்தைப் பற்றிய சில மகாராஷ்டிர கிரந்தங்களைப் பார்க்கும் பாக்கியத்தைப் பெற்றார். ஸ்ரீ திலகருக்கும் புவாபிங்கார்கருக்கும் கீதா விஷயமாக முதல் முதல் உண்டான வாதத்தின் காரணமாகவே ஸ்ரீ திலகர் கர்மயோக பரமாக பகவத்கீதையை நிச்சயஞ் செய்தார். ஆகவே, பகவத் கீதையில் பிரதிபலித்துள்ள விஷயம் பிரவிர்த்தி பரமாகவே யுள்ளதென

ஸ்ரீ திலகர் நிச்சயஞ் செய்து கொண்டார். தாம் நிச்சயங் கொண்டதைப் புத்தக ரூபமாகப் பிரசுரிக்க இஷ்டப்பட்டாராயினும் தக்க அவகாசம் வெகு நாள்வரை அவருக்கு உண்டாகவில்லை. ஒன்றிரண்டு விஷயங்களில் சந்தேகம் ஏற்பட்டே வந்தது என்றாலும், பகவத்கீதைக்கு டீகா செய்தவர்களுடைய அபிப்பிராயங்களையெல்லாம் கூறி அவைகளிலுள்ள குற்றங் குறைகளைத் தெரிவித்து, கீதா தர்மத்தில் இதர தர்மங்கள் தத்துவஞானம் மற்றுபல நீதி தர்மங்கள் இவைகளை ஒவ்வொன்றாக எடுத்துக் கூறி அமைப்பது மிகவும் கடினமான காரியமென்று நினைத்தவராய், பகவத் கீதைக்குத் தம் அபிப்பிராயப்படி புதிய கிரந்தமொன்றையெழுத ஸ்ரீ திலகர் கடைசியாகத் தீர்மானித்தார். தவிர, அக்கிரந்தத்தை விரைவில் வெளிப்படுத்த வேண்டுமென்று ஸ்ரீ திலகருடைய அத்யந்த நண்பரான ஸ்ரீ தாஜீ சாஹெப் காரே அவர்கள் ஸ்ரீ திலகரைச் சதா வற்புறுத்திவந்தார். பல நண்பர்கள் தூண்டியும் ஸ்ரீ திலகர் தம் பாஷ்யத்தை வெளிப்படுத்த முன்வரவில்லை. சில சந்தேகங்கள் வரவர நீங்கின. கடைசியாக 1908-ம் வருடத்தில் தண்டிக்கப்பட்டு மாண்டலே சிறையில் வைக்கப்பட்டிருந்த காலத்தில் ஸ்ரீ திலகர் அத்யந்தமேனோ சாதனத்துடன் பகவத்கீதைக்கு கர்மயோக பரமாகப் புதிய கிரந்தமொன்றை எழுதி முடித்தார். புனாகரில் தம்முடைய கிரகத்திலிருந்த பல புத்தகங்களை வரவழைத்துக் கொள்ள அரசாங்கத்தார் அனுமதி கொடுத்தபின் ஜெயிலில் ஸ்ரீ திலகர் 1910-11-ம் வருடத்தினிடையே கார்த்திகை மாதத்திற்கும் பங்குனி மாதத்திற்கும் மத்தியில் கீதாரகஸ்யம் என்னும் மகா கிரந்தத்தை எழுதினார். சம்சார கர்மங்கள் ஞானமுள்ளவனை அல்லது விலக்குந் தன்மையனவா வென்று நிச்சயித்து பிரம்மஞானம், பக்தி முதலான கேவல நிவர்த்தி பரமான மோக்ஷமார்க்



கமே கீதையில் நிரூபிக்கப்பட்டதெனக் கூறப்படும் அபிப்பிராயத்தை ஸ்ரீ திலகர் அங்கீகரிக்கவில்லை. மோக்ஷ பிராப்திக்குத் தக்க மார்க்கத்தைச் சரியாக விவேசிக்கப் படவில்லை என்று ஸ்ரீ திலகர் கூறினார். பிரதி மனிதனும் சுத்தமான பரமேஸ்வர ஸ்வரூபமென்று தெரிந்துகொண்டு அதிலிருந்து தன்னுடைய புத்திக்குச் சக்தியுள்ளபடி நிர்மலமாகவும் பவித்திரமாகவும் செய்துகொள்ள கீதா சாஸ்திரம் இந்த ஜகத்தில் எப்படிப்பட்டவர்களுக்கும் அவசியமான கர்த்தவ்யமான விஷயமென்று ஸ்ரீ திலகர் ஸ்பஷ்டமாக நிரூபித்தார். யுத்தஞ் செய்வது க்ஷத்திரிய தர்மமாயினும் குலக்ஷயம் முதலிய கோரபாதகங்கள் விபரீதமாக உண்டாகும். அது மோக்ஷ பிராப்திரூபமென்று ஆத்ம கல்யாணத்தை நசிக்கச் செய்வதுபோல யுத்தத்தைச் செய்வதா அல்லது யுத்தஞ் செய்யாமலிருப்பதா என்று அர்ச்சுனன் யுத்தாரம்பத்திலேயே கர்த்தவ்விய மோகங்கொண்டான். அம்மோகத்தை நிவர்த்திக்கவே வேதாந்த சாஸ்திர ஆதாரமான சுத்தகர்மா கர்மங்கள் மோக்ஷோபாயமென்று பூர்ணமாக ஆராய்ச்சிசெய்து பிறகு, கர்மமானது எப்பொழுதும் விடாமலும், விடுவதற்கு அதிகாரமில்லையென்றும் நிச்சயித்து ஸ்ரீ திலகர் கீதாரகஸ்யத்தை வெளியிட்டார். ஞானமூலமாக பக்தி பிரதானமான கர்மயோகமே கீதையில் பகவான் உபதேசித்ததென்று ஸ்ரீ திலகர் சித்தாந்தப் படுத்தினார். தவிர, வேதாந்தம், மீமாம்ஸம், சாங்கியம், கர்மவிபாகம் முதலிய பல சாஸ்திர ஆதாரங்களைக்கொண்டு பகவத் கீதையில் கர்மயோகமே கூறப்பட்டுள்ளதென ஸ்ரீ திலகர் அவர்கள் கூறியுள்ளார். கேவலம் பகவத்கீதைக்கு சாஸ்திர சம்பந்தமின்றி ஸ்ரீ திலகர் தமக்குத் தோன்றினபடி எழுதினரென்று கருதாமலிருக்கவே, முதல் முதல் கீதாரகஸ்யத்தைப் பற்றி சாஸ்திர சம்மதமாக கர்மயோக பரமாக விஷயங்களை எழுதிப் பிறகு

மூல ஸ்லோகங்களுக்குப் பொருளையும் எழுதியிருக்கிறார். தவிர, கீதைக்குப் பூர்வம் பொருள் எழுதின பல டீகாகாரர்கள் எங்ஙனம் சிலசில ஸ்லோகங்களுக்குத் தங்கள் சம்பிரதாயப்படி அர்த்தஞ்செய்து பாஷ்யஞ் செய்திருக்கின்றனர் என்பதைத் தெரிவிக்கவே ஸ்ரீ திலகர் அந்த ஸ்லோகங்களுக்குத் தம் சித்தாந்தப்படி முறையே பொருள் செய்தார். தவிர, சாமானிய ஜனங்களும், நல்ல பண்டிதர்களும் எடுத்தாளும்படி வேதாந்தம், மீமாம்ஸம், பக்தி முதலிய விஷயங்களும், கீதையின் சித்தாந்தம், பாரதம், சாங்கிய சாஸ்திரம், வேதாந்த சூத்திரம், உபநிடதங்கள், மீமாம்சைக்குரிய கிரந்தங்கள், பூர்வ மிருந்த இதிகாசங்கள் ஆகிய இவைகளை ஆதாரமாகக் கொண்டு, கர்மயோகம், சந்நியாஸம் இவ்விரண்டுக்கும் உள்ள பேதங்களையும் வெகு தெளிவாக ஸ்ரீ திலகர் எடுத்துக்காட்டியுள்ளார். எந்த கர்மம் நன்மை எந்த கர்மம் தீமை என்று நிச்சயிக்க முடியாதபடியே பலர் கர்மங்களை விடுவதும் நிவர்த்தி தர்மமே மேன்மையென்று கூறுவதும் சகஜமாகப் போய்விட்டபடியால் ஸ்ரீ திலகர் பகவத்கீதையின் ஆதாரத்தைப்பற்றி கர்மயோகத்தைத் தெரிவித்துள்ளார். வெகு காலமாக நமது நாட்டில் கையாளப்பட்டு வந்த பகவத்கீதா பாஷ்யங்கள் யாவும் நிவர்த்தி பரமாகவே கூறப்பட்டு வந்ததால், பகவத்கீதா பாராயணஞ் செய்பவர்களுக்கு ஸ்ரீ திலகருடைய கர்மயோக சாஸ்திர பரமாகக் கூறப்படும் புதிய வியாக்கியானம் ஒரு அருவெறுப்பையேனும் அல்லது துவேஷத்தையேனும் கொடுக்கக்கூடும். ஆகவே, கேவலம் ஒரு வியாக்கியானம் புதிதாயிருப்பதென்பதிலேயே அஸூயையும் பழைமையாயிருப்பதிலேயே ஒரு ஸ்நேகமும் கொள்வதை விட்டு அவ்வியாக்யானத்தை நன்கு ஆராய்ச்சி செய்தல் வேண்டும் என்று ஸ்ரீ திலகரே தாம் எழுதிய முகவுரையில் எழுதியுள்ளார்.



தவிர, கீதையிலுள்ள கர்மயோக விவேசனம் அநேகருக்கு இப்பொழுது நூதனமாகவே தோன்றுகிறது. மற்றும், இந்த காலத்தில் மேனாட்டு ஆதிபௌதிக ஞானம் விசேஷமாக விருத்தியாகி வருவதினாலே அத்யாத்ம சாஸ்திர ஆதாரமாகப் பூர்வகாலத்தில் செய்யப்பட்ட கர்மயோக விவேசனம் தற்பொழுதுள்ள காலத்திற்குப் பூர்வகாலத்தது அநுகூலமாகவில்லையென்பதே அநேக பண்டிதர்களுடைய அபிப்பிராயம். கர்மயோக விவேசனத்தைச் சரிவர ஆராய்ந்து அந்தரங்க பகிரங்க பரீட்சை செய்து பகவத்கீதையை யங்கீகரிக்கவே ஸ்ரீ திலகர் தம்முடைய கீதாரகஸ்யத்தில் முதல் முதல் பற்பல சாஸ்திர ஆராய்ச்சி கொண்டு 699 பக்கங்கொண்ட முன்னுரை எழுதியுள்ளார். அம்முன்னுரையில் (1) விஷய பிரவேசம் (2) கர்ம ஜிஜ்ஞாஸை (3) கர்மயோக சாஸ்திரம் (4) ஆதிபௌதிக சுகவாதம் (5) சுகதுக்க விவேகம் (6) ஆதிதைவதபக்ஷம் — க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ விசாரம் (7) கபில சாங்கிய சாஸ்திரம் அல்லது க்ஷராக்ஷர விசாரம். (8) ஜகத்தின் சிருஷ்டி சம்ஹாரங்கள் (9) அத்யாத்மம் (10) கர்மவிபாகமும் ஆத்ம ஸ்வாதந்திரியமும் (11) சந்நியாஸமும் கர்மயோகமும் (12) சித்தாவஸ்தையும் வியவகாரமும் (13) பக்திமார்க்கம் (14) கீதா அத்யாய சங்கதி (15) உபஸம்ஹாரம் (16) கீதையின் பகிரங்க பரீக்ஷை பரிசிஷ்ட பிரகரணம்-கீதையும் மகாபாரதமும் (17) கீதையும் உபநிடதமும் (18) கீதையும் பிரம்மசூத்திரமும் (19) பாகவத தர்ம உதயமும் கீதையும் (20) கீதையின் காலம் (21) கீதையும் பௌத்த கிரந்தமும் (22) கீதையும் கிறிஸ்துவ பைபிளும் ஆகிய இத்தனை அத்தியாயங்களும் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு அத்தியாயத்திலும் கீழ்நாட்டு சாஸ்திரங்களும் மேனாட்டு சாஸ்திரங்களும் மேற்கோள்களாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றது. ஸ்ரீ பகவத் கீதையின் சித்

நூக்கத்தை பிரமாணப்படி கைக்கொண்டு, மேனாட்டு நீதி சாஸ்திரக்ஞர்களுடைய சித்தாந்தத்திற்கு எவ்வளவுதூரம் ஒத்து வருகின்றதோவென்று ஸ்ரீ திலகர் அவ்வழியாக ஆராய்ச்சி செய்து தம் கீதாரகஸ்யத்தில் மேனாட்டு சித்தாந்தத்தையும் கீழ்நாட்டு சித்தாந்தத்தையும் தெளிவுறக் கூறியுள்ளார். கர்மா கர்ம விவேகம் அல்லது நீதிசாஸ்திரத்திற்கு முதல்மார்க்க பிரதர்சகரான கிரந்தம் 'அரிஸ்டோடல்' என்னும் பெயர் கொண்ட கிரீக்தேசத்து தத்துவஞானியால் எழுதப்பட்டதென மேனாட்டு வித்வான்கள் கூறுகின்றனர். அரிஸ்டோடல் கிரந்தத்தைவிட பூர்வகாலத்தி லிருந்தே ஸ்ரீ மகாபாரதத்திலுள்ள பகவத்கீதையில் அத்யாத்மதிருஷ்டியோடு கூடின நீதிசித்தாந்தம் மிக்க சிரேஷ்டமானதென்றும், இதைக்காட்டிலும் வேறு நீதிதத்துவம் இன்றுவரை வெளிப்படவில்லையென்றும் ஸ்ரீ திலகர் கூறியுள்ளார்; சந்யாஸியாக விருந்து தத்துவஞான விசாரத்தைக்கொண்டு சாந்தமாக ஆயுள்காலம்வரை யிருப்பது நன்மையா? அல்லது அநேகவிதமாக இராஜ்ய விஷயங்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்து இருப்பது யுக்தமா? என்னும் இவ்விஷயமாக அரிஸ்டோடல் செய்த வியாக்கியானம் யாவும் பகவத்கீதையில் இருப்பதை ஸ்ரீ திலகர் எடுத்துக் காட்டியுள்ளார். மனிதன் செய்யும் பாபங்களெல்லாம் அஞ்ஞானத்தினாலேயே செய்யப்படுகின்றதென 'ஸாக்ரெடீஸ்' அவர்களுடைய மதமும் பகவத் கீதையில் பிரதிபலித்திருக்கின்றது. தவிர, ஸ்டுவர்ட்மில், ஸ்பென்ஸர், காண்ட் முதலான நீதிசாஸ்திரக்ஞர்களின் சித்தாந்தங்களும் பகவத்கீதையில் நன்கு பிரதிபலித்திருப்பதையும் ஸ்ரீ திலகர் விளக்கிக் காட்டியுள்ளார். தவிர, மேற்கூறிய ஆதிபௌதிகவாதிகளின் சித்தாந்தங்கள் கீதையில் வர்ணிக்கப்பட்ட 'ஸ்திதப்ரக்ஞன்' ஒருவனுடைய 'சர்வபூதஹிதேரத:' என்னும் பாஹ்ய (வெளி)



லட்சணங்களைக் கொண்டே கூறப்பட்டுள்ளன. தவிர, 'காண்ட்' கிரீன் முதலானவர்களுடைய நீதிசாஸ்திரமும் அவைகளை யொட்டிய முகாந்திரம் யாவும், இந்திரியவதந்தர விஷயமாயுள்ள சித்தாந்தங்களும் உபநிஷத்துக்களின் ஆதாரங்களைக்கொண்டு கீதையில் வர்ணிக்கப்பட்டுள்ளனவென்பதையும் ஸ்ரீ திலகர் தெளிவுறக் கூறியுள்ளார். பிரம்ம வித்யை, பக்தி முதலிய மூலசித்தாந்தங்களைப்போலவே கீதை நீதிதர்மத்திற்கும் சத்கர்மங்களுக்கும் மூலாதாரமாக விருக்கின்றதென நிரூபித்துக் காட்டியுள்ளார். பகவத்கீதை பிரதானமாக கர்மயோக பரமாகவே யுள்ளதென்பதற்கு 'பிரம்ம வித்யாந்தர்க்கத யோகசாஸ்திரம்' என்னும் பெயரைக்கொண்டு சமஸ்த வைதிக கிரந்தங்களில் இதற்கு முக்கிய ஸ்தானம் கொடுக்கப்பட்டுள்ளது. சிறக, 'எனக்கு இரண்டு மூன்று மார்க்கங்களைக்கூறி என்னை பிரமிக்கச் செய்யாமல், எனக்கு அவைகளில் சிரேயஸ்கரமான ஒரு மார்க்கத்தையே நிச்சயமாகக் கூறுங்கள்.'

(கீதை-3 அத். 2.) என்றும், 'தாங்கள் கருமத்தின் சந்யாஸத்தையும் கூறுகின்றீர்கள் மீண்டும் கர்மயோகத்தையும் கூறுகின்றீர்கள். இவ்விரண்டினுள் யாதொன்று மேலானதோ அதை எனக்கு நிச்சயஞ்செய்து கூறியருள்வீர்களாக' (கீதை. 5 அத். 1.) என்றும் அர்ச்சுனன் விவரணைக் கேட்டான். அதுவே பகவான் அவ்விரண்டினுள் எதாவதொன்றையே அர்ச்சுனனுக்குக் கூறினானென்பது ஸ்பஷ்டமாகும் என்று பல உதாரணங்களைக் காட்டி ஸ்ரீ திலகர் கூறியுள்ளார். நீதிசாஸ்திரத்தை கர்மயோக பரமாக முதன்முதல் ஆங்கிலபாஷையில் எழுதினவர் ப்ருக்ஸ் என்னும் ஆங்கிலேயர். இவர் சிலகாலம் பிரம்மஞான சபையைச் சேர்ந்திருந்தார். இரண்டாவதாக எஸ். இராதாகிருஷ்ணன் என்பவர் கீதையின் தர்மத்தை மேனாட்டு நீதி தர்.

யத்தை வெளியிட்டுத் தெரிவித்தார். இவர் சென்னை இராஜதானி கலாசாலையில் நீதிசாஸ்திர போதகாசிரியராயிருந்து தற்பொழுது கல்கத்தாவில் நீதிசாஸ்திர உபந்யாசகராக இருக்கிறார். ஆகவே இவருடைய அபிப்பிராயங்களையும் கல்கத்தாவிலிருந்த ஸ்ரீ ஆராத தத்துவஞானி அவர்களுடைய கீதாவியாக்கியானங்களையும் நன்கு பரிசீலனை செய்து ஸ்ரீ திலகர் தம்முடைய கீதாரகஸ்யத்தை வெளியிட்டார். இப்புத்தகம் எழுதினபிறகு ஸ்ரீ திலகர் தாம் எழுதிய முகவுரையில் பின்வருமாறு எழுதியுள்ளார் :—

'எந்த விஷயத்தை விசாரித்து இன்றுவரையிலும், அநேக வருடங்களாகக் காலட்சேபஞ் செய்துவந்தேனோ, எனதுடைய நித்தியசகவாஸத்தினால் சிந்தித்து மனதிற்கு விசிராந்திகொண்டு ஆனந்த முண்டாயிற்றோ, அவ்விஷயம் என்னைவிட்டு கிரந்தரூபமாக வெளிப்பட்டுப் போவதைப்பற்றிய துயரம் ஒருவாறு இருந்தாலும், நான் செய்த இந்த விசாரத்தை இனிவருபவர்கள் என்னைவிட அதிகமாகவோ அல்லது இன்னிதமாகவோ விசாரணைசெய்ய இடமேற்படுத்தினேன் என்பனை நினைக்க எனக்கு மிகுந்த சந்தோஷமுண்டாகிறது.'

நிற்க, பகவத்கீதைக்கு நிவர்த்திபரமாக வியாக்கியானஞ் செய்த அத்வைத சித்தாந்த ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளின் மதத்திற்கும் லோகமான்ய ஸ்ரீ திலகருடைய மதத்திற்கும் வித்தியாசமில்லை. ஆனால், லோகமான்யருக்கும் ஸ்ரீ சங்கரருக்கும் பகவத்கீதா விஷயமாக உண்டான அபிப்பிராயத்தை சற்று தெரிவிப்போம். ஞானம் உண்டான பிறகு நிவர்த்தி மார்க்கத்தை ஸ்வீகரிப்பது அதாவது சர்வகர்ம சந்யாஸஞ்செய்வது மிகவும் சிரேயஸ்கரமானதென்று கீதையில் இந்த மதமே சம்மதமானதென்று ஸ்ரீ சங்கரர் கூறியுள்ளார். ஞானம் உண்டானபிறகு பிர



விருத்தி மார்க்கத்தை ஸ்வீகரிப்பது அதாவது சர்வகர்மங்களையுஞ் செய்வது மிகவும் சிரேயஸ்கரமானதென்பது கீதையின் இந்த மதமே சம்மதமானதென்று லோகமான்ய ஸ்ரீ திலகர் கூறியுள்ளார். (கர்மசந்யாஸாத் கர்மயோகோ விசிஷ்யதே, கர்மேந்த்ரியை: கர்மயோக மஸக்த:) என்பது கீதையின் முக்கிய சித்தாந்தம் என்று கூறியுள்ளார்.

ஸந்யாஸம் கர்மணாம் கிருஷ்ண புனர்யோகஞ்ச ஸம்ஸஸி
யச்ச்ரேய ஏதயோ ரேகம் தன்மே ப்ரூஹி ஸுநிச்சிதம்.
(கீதை. 5 அத். 1.)

ஸ்ரீ கிருஷ்ணா! ஒருதடவை சந்நியாஸத்தையும் மற்றொருதடவை கர்மயோகத்தையும் உத்தமமென்று சொல்கிறாய். இந்த இரண்டில் எது நன்மையோ (சிரேயஸ்கரமோ) அந்த ஒன்றையே நிச்சயமாக எனக்குக் கூறுவாய். என்ற அர்ஜுனன் கேள்விக்குப் பகவான் பின்வருமாறு விடை பகர்கிறார்.

ஸந்யாஸ: கர்ம யோகஸ்ச நிச்ரேயஸ கராவுபௌ
தயோஸ்து கர்ம சந்யாஸாத் கர்ம யோகோ விசிஷ்யதே.
(கீதை அத். 5, 2.)

கர்ம ஸந்நியாஸமும் கர்மயோகமும் ஆகிய இவ்விரண்டும் மோக்ஷ சாதனங்களேயாம்; ஆனால் இவ்விரண்டினுள் கர்ம சந்நியாஸத்தினும் கர்ம யோகமே சிரேஷ்டமாம். இரண்டு மார்க்கங்களினுள்ள தாரதம்மியங்களைப் பற்றிய அர்ஜுனனுடைய கேள்விக்கே கர்மயோகம் மிகவும் சிறந்ததென பகவான் விடை பகர்ந்ததினால், கர்மயோக பரமே மிகவும் மேலானதெனக் கூறுவதற்குப் பிரமாணமென லோகமான்யர் கூறுகிறார். ஞானமுண்டானபிறகு கர்மஞ்செய்ய வேண்டியதில்லை என்னும் விஷயமே பகவானுக்கு சம்மதமாயிருந்தால், 'இவ்விரண்டினுள் கர்மசந்யாஸமே

ஸ்ரேஷ்டம்' என்று அர்ச்சுனனுக்கு ஏன் விடை பகரவில்லை? ஆகவே, சாதனாவஸ்தையின்பொருட்டு ஞானமுண்டாவதற்கு எந்த நிஷ்காமகர்மங்களைச் செய்யவேண்டுமோ, அக்கர்மங்களையே பிறகும் சித்தாவஸ்தைக்கு லோகசங்கிரஹார்த்தமாக ஞானி மரணபரியந்தம் கர்த்தவ்யங்களைச் செய்துகொண்டே யிருக்கவேண்டுமென்னும் மதமே பகவானுக்கு இஷ்டமானதென்றும் பூர்ணமாக சித்தாந்தமாயிற்று என்று லோகமான்யர் கூறியுள்ளார். அர்ச்சுனன் கேட்ட கேள்வியின்பேரில் பகவான் விடைபகர்ந்ததைக் கண்டு, 'ஞானம் உண்டாவதற்கு முன்னரே, சந்நியாஸம் நல்லதா? கர்மயோகம் நல்லதா? என்று அர்ச்சுனன் கேள்விக்கு அபிப்பிராயமென்று ஸ்ரீ சங்கரர் கூறியருளினர். ஸ்ரீ பகவானுடைய விடையைக் கொண்டு அர்ச்சுனன் ஞானம் உண்டானதற்குப் பிறகு சந்நியாஸ கர்மயோகங்களில் எது நல்லதென கேட்டானென்று, ஞானம் உண்டானதற்குப் பிறகு கர்மயோகமே நல்லதென பகவான் உத்திரவளித்தாரென லோகமான்யர் கூறுகிறார். ஆகவே, ஞானம் உண்டான பிறகு கர்மயோகத்தையே யனுஷ்டிப்பதற்கு அதிகாரமில்லையென்று சொல்வது ஆகாது. ஏனெனில் பகவான்,

ஸக்தா: கர்மண்ய வித்வாம்ஸோ யதாகுர்வந்தி பாரத
குர்யாத்வித்வாம் ஸ்ததா ஸக்த: சிகீர்ஷுர் லோக ஸங்கிரகம்.

(கீதை 3-25.)

ஹே! பாரத! எங்ஙனம் அஞ்ஞானியானவன் கர்மத்தின் கண்ணே அபினிவேச முடையவனாய்க் கருமத்தைச் செய்வானோ, அங்ஙனம் லோகசங்கிரகத்தைச்செய்ய விச்சித்த அறிஞனானவன் அபினிவேசமற்றவனாய்க் கருமத்தைச் செய்வன் என்னும் இவைபோன்ற பல ஸ்லோகங்களைக்கொண்டு லோகமான்யர் பகவத்கீதையில் பகவான்



கர்மயோக சாஸ்திரத்தையே அர்ச்சுனனுக்குத் திருவாய் மலர்ந்தருளினரென்றும், கர்மத்தைச் செய்தலை எவ்வாற்றானும் விடாமற்படி மரணபரியந்தம் அனுஷ்டித்துத் தீரவேண்டுமென்றும், மனிதன் இகலோகத்திலுள்ள குடும்ப வாழ்க்கை, இராஜீய வாழ்க்கை முதலிய வாழ்க்கைக்கும் பரலோக பிராப்திக்குரிய சாதனைகளுக்கும் அக்கர்மயோகமே சாதகமாக விருக்கிறதென்றும் ஸ்ரீ லோகமான்யர் கீதாரகஸ்யம் என்னும் அற்புத மகாகிரந்தமொன்றை பாரதநாட்டவர்களுக்கு விலையில்லா மாணிக்கம்போல் கொடுத்துதவினர்.

## 12. லோகமான்ய திலகர்

லோகமான்ய ஸ்ரீ திலகர் விடுதலையடைந்து மீண்டும் இராஜீயத் துறையில் பாடுபட முன் வருவதை யறிந்த பல தீவிர கட்சியினர்கள் எப்படியாகிலும் காங்கிரஸ் மகா சபையில் நுழைந்து வேலை செய்யவேண்டுமென்ற ஆவல் கொண்டிருந்தார்கள். தீவிர கட்சியினர்களின் ஆவலையும், அக்கருத்தையொட்டிப் பலயுவர்கள் தேசாபிமானங் கொண்டு தம் நாட்டுக்கு உழைக்க முன் வர விருப்பதையும் கண்டு ஸ்ரீ திலகர் மிதவாதிகளுடன் ஒற்றுமையாகக் கலந்து பாடுபட எண்ணங் கொண்டார். அவ் வெண்ணத்தை கோகலேயும் மேத்தாவும் ஈடேற்றச் செய்யவில்லை. காங்கிரஸ் சமாதான வியவகாரம் நடந்து வந்தது. அங்ஙனம் சமாதான விஷயமாகத் திலகருக்கும் கோகலேயிக்கும் பெஸண்டு மூலமாக வியவகாரங்கள் நடந்து வருகையில் கோகலே அவர்கள் திடீரென்று 1915-ம் வருடம் பிப்ரவரிமாதம் 19-ந் தேதி புனா நகரில் இறந்தார். அவர் சின்னாளாகத் தேக அசௌக்கியங் கொண்டிருந்தாரென்றாலும் திடீரென்று அகால மரணத்தை யடைவார் என்று எவரும் எதிர் பார்க்கவில்லை. ஸ்ரீ திலகர் தாம் விடுதலையடைந்த சில தினங்களுக்குப் பிறகு தம் தேக ஸ்திதியை யுத்தேசித்து சிம்மகடாவிலுள்ள தம் வசந்த மாளிகையில் வசித்து வந்தார். ஸ்ரீ கோகலே இறந்த செய்தியைக் கேள்வியுற்றதும், உடனே மோட்டாரில் ஏறிக்கொண்டு ரஸ்தா வழியாக நேரே கோகலேயைப் பார்க்க ஸ்ரீ திலகர் வந்தார். ஸ்ரீ திலகருக்குச் சொல்ல முடியாத துக்க முண்டாயிற்று. ஸ்ரீ திலகர் பலருடைய வேண்டுகோளுக் கிணங்கி கோகலே யவர்களின் மரணத்தைப்பற்றி இரண்டொரு



வார்த்தை கூறினார். அது பின்வருமாறு:—(ஸ்ரீ திலகர் பேசவாரம்பித்ததும் நீண்ட கரகோஷமுண்டாயிற்று.)

'கரகோஷத்திற்கு இது காலமல்ல; கண்ணீர் விடுவதற்கே உரிய காலமிது. இந்தியாவுக்கு ரத்தினமாய், மகாராஷ்டிர பூஷணமாய், தொண்டர்கட் கரசாய் விளங்கு மிவர் மீண்டும் எழுந்திராவண்ணம் இந்த சுடுகாட்டுத் தரையில் கிடக்கிறார். அவரைப் பார்த்து அவரைப்போல ஒழுக முயற்சியுங்கள். அவர் வாழ்க்கையைப்போல நடந்து நீங்கள் ஒவ்வொருவரும் அவரை மந்திரியாகக் கொள்ளுங்கள். அவர் இறந்ததினின்றும் உண்டான காலியிடத்தைக் கொள்ள நீங்கள் பாடுபட வேண்டும். உங்களாலியன்றளவு இவ் வழியில் அவரைப்போல நடக்கப் பாடுபடுவீர்களானால், அவர் அவ்வுலகிலும் ஆனந்தங் கொண்டிருப்பார்.'

தவிர, 1915-ம் வருடம் மே மாதத்தில் நடந்த பம்பாய் மாகாண கான்பரன்ஸ் மகா நாட்டில் ஸ்ரீ திலகர் கோகலேயின் மரணத்திற்காக அனுதாபங்காட்டும் ஒரு தீர்மானத்தைப் பிரேரேபித்துப் பேசுகையில் நாதடுமாற கண்ணீர் சொரிந்தவண்ணம் மிக துக்கத்துடன் இருந்தார். ஸ்ரீ கோகலே யவர்கள் ஸ்ரீ திலகர் மூலமாகவே பொது வாழ்க்கைக்கு வர ஏற்பட்டதால், ஸ்ரீ திலகர் கோகலேயைப்பற்றி வெகு சிலாக்கியமாகக் கூறி அவர் இறந்ததற்கு அதிக துக்கத்தைக் கொண்டார். கோகலே இராஜீயத் துறையில் இறங்கின நாள்முதல் மரண பரியந்தம் ஸ்ரீ திலகருக்கு எதிர்க் கட்சியில் இருந்து சிற்சில சமயங்களில் விரோத பாவம் காட்டிவந்தும், ஸ்ரீ திலகர் அதைச் சற்றேனும் பொருட்படுத்தாது கோகலேயின் தேசாபிமானத்தையும் தியாகத்தையும் சதா புகழ்ந்து பேசியுள்ளார். ஸர். மேத்தா 1915-ம் வருடம் நவம்பர் மாதத்தில் இறந்தபொழுதும் ஸ்ரீ திலகர் அவருடைய மரணத்திற்கு வருந்தி அவரைப்

புகழ்ந்து பேசியுள்ளார். சிறக, 1914-ம் வருடத்தில்
ஐரோப்பா யுத்தம் தொடங்கினதும் ஸ்ரீ திலகர் பிரிட்டிஷ்
சாம்ராஜ்யத்திற்கு உதவிசெய்ய முன் வந்தார். அரசாங்
கத்தார் இராணுவத்திற்கு ஆள்படை வேண்டு மென்று
தெரிவித்ததும், ஸ்ரீ திலகர் ஆள் சேர்த்துக் கொடுப்பதாகப்
பகிரங்கப்படுத்தினார். ஆனால் அரசாங்கத்தாரோ ஸ்ரீ தில
கரின்மீது கொண்ட பகைமையால் அவருடைய வார்த்
தையை இலட்சியஞ் செய்யவில்லை. லார்ட் செம்ஸ் போர்ட்
யுத்த கடன் திரட்டப் பாடுபடுவதுடன் இந்திய பாதுகாப்
புச் சேனைக்கு 6000 யுவர்கள் தேவையென்றும் தெரிவித்
தார். ஸ்ரீ திலகர் 30 கோடி மகா ஜனங்களில் 6000 யுவர்
கள் அகப்படுவது பிரயாசை யில்லையென்றும் ஆனால், அர
சாங்கத்தார் ஜனங்களுக்கு இராஜீய சுதந்தர விஷயமாக ஓர்
உறுதி கொடுக்கவேண்டு மென்றும், அங்ஙனம் உறுதி
கொடுத்தால் இந்தியாவே பிரிட்டிஷாருக்கு உதவி செய்யு
மென்றும், அமெரிக்கா முதலிய நாடுகளின் உதவியே தேவை
யில்லையென்றும் தெரிவித்தார். தவிர, புனா நகரிலும் பம்பாய்
நகரிலும் மாணவர்களுக்கும் யுவர்களுக்கும் உபந்யாசஞ்
செய்து இராணுவத்தில் சேரும்படி வற்புறுத்தினார். 'மூப்
பும் நரைமயிரும் தடையாக யில்லாமலிருந்தால், நான்
இராணுவத்திற் சேர்ந்து யுத்தரங்கத்தில் நிற்கத் தயாராக
யிருக்கிறேன்' என்று ஸ்ரீ திலகர் கூறினார். இங்ஙனம் இந்
திய பாதுகாப்புப் படையில் சேர யுவர்களைத் தூண்டிவரும்
ஸ்ரீ திலகருக்கு இந்திய பாதுகாப்புச் சட்டப் பிரயோகஞ்
செய்யப்பட்டது. பஞ்சாப் மாகாண கவர்னர் முதல் முதல்
இந்திய பாதுகாப்புச் சட்டப்படி ஸ்ரீ திலகர் பஞ்சாப் மாகா
ணத்திற்குள் வரக்கூடாதென்று ஓர் உத்திரவைப் பிறப்பித்
தார். அரசாங்கத்தார் கண்ட நிலையி லிருப்பதை யறிந்து
அச் சமயத்தில் வீரத் தன்மையின்றி சும்மா யிருக்கக்கூடா



தென்று அறிந்து ஸ்ரீ திலகர் பிரிட்டிஷ் வெற்றியை நாடி
இராணுவத்தில் யுவர்களைச் சேரத் தூண்டி வருவதையும்
அதிகாரிகள் சகிக்கவில்லை. பம்பாயில் ஸ்ரீ திலகர் செய்த
பிரசங்கத்தால் 800 யுவர்கள் இந்திய பாதுகாப்புப் படை
யில் சேரத் தங்கள் பெயரைத் தந்தனர். இந்தியாவிலுள்ள
அதிகார வர்க்கத்தினர் தாங்களும் ஒரு காரியத்தைச் சரிவர
செய்யமாட்டார்கள். செய்பவர்களையும் செய்யும்படி விட
மாட்டார்கள். இந்தியாவில் இராஜீய கலகக் கூட்டத்தாரின்
பிரசாரத்தால் இராணுவத்திற்கு ஆள் வரவில்லையென்று
பிரிட்டிஷாருக்குத் தெரிவித்து சதா அடக்குமுறை கொண்டு
ஆளவே அதிகாரவர்க்கத்தினர் எண்ணியிருந்தனர். தவிர,
பிரிட்டிஷ் பார்லிமெண்டார் இந்தியாவின் ஆள் உதவி யுண்
டாகாததற்குக் காரண மென்னவென்று கேட்டால், ஸ்ரீ தில
கர் முதலான இராஜத் துரோகிகள் இருப்பதினாலே சரிவர
ஆள்படை சேரவில்லையென்று கூறுவதற்கே, அதிகார வர்க்
கத்தினர் இத்தகைய சூழ்ச்சியுடன் ஸ்ரீ திலகரை இந்திய
பாதுகாப்புச் சட்டப்படி அடக்க ஆரம்பஞ் செய்தனர்.
ஸ்ரீ திலகரோ, அதிகாரவர்க்கத்தினர்களின் மனோபாவத்தை
40 வருட காலமாக அறிந்தவராதலால், நல்ல நெருக்கடி
யான சந்தர்ப்பத்தில் வீண்பழி சுமத்துவார்களென் றறிந்
தும், உடனே, இராணுவத்தில் இந்தியர்கள் சேரவேண்டு
மென்று வற்புறுத்தி வந்தார். அதிகாரிகளால் ஆகாத காரி
யத்தை ஒருக்கால் ஸ்ரீ திலகர் செய்து கணக்கற்ற யுவர்களை
இராணுவத்தில் சேர்ப்பித்தால், அரசாங்கத்தின் செல்வாக்
கைக் காட்டிலும் ஸ்ரீ திலகரின் செல்வாக்கு அதிகமாக
யிருப்பதை உலகினர் அறிவாரென் றெண்ணியே அதிகார
வர்க்கத்தினர் ஸ்ரீ திலகரின்மீது அநியாயமாகப் பழி சுமத்தி
அடக்குமுறை செய்ய வாரம்பித்தனர். பஞ்சாப் மாகாண
கவர்னர் உத்திரவு பிறப்பித்தவுடனே டில்லி கமிஷனர் அவ்

வண்ணமே ஓர் உத்திரவைப் பிறப்பித்து ஸ்ரீ திலகர் டில்லி பிராந்தியத்திற்குள் வரக்கூடாதென்று கட்டளையிட்டார். உண்மையில் ஸ்ரீ திலகர் பஞ்சாப் மாகாணத்திற்காகிலும் டில்லிக்காகிலும் போகக் கருதவேயில்லை. அப்படியிருந்தும், அவர்கள் உத்திரவு செய்தது விந்தையே. ஸ்ரீ திலகர் 1916-ம் வருட ஆரம்பத்தில் புனாவில் ஓர் மகா நாட்டைக் கூட்டி தீவிர கட்சியினர்களைச் சேர்த்தார். அம் மகா நாட்டிற்கு ஜோஸப் பாப்டிஸ்டா அக்கிராசனம் வகித்தார். சுமார் 1000 பேர்கள் வந்தனர். தீவிர கட்சியினர்களின் பலம் இன்னும் குறையவில்லையென்று கண்டு இனி செய்ய வேண்டிய முன்னணி வேலையைப்பற்றி ஸ்ரீ திலகர் கூறினார். சுய ஆட்சி (Home Rule) என்னும் நாமத்தைத் தெரியப்படுத்தி இந்தியாவுக்கு சுய ஆட்சி அளிக்கப்பட வேண்டுமாறு ஒரு கிளர்ச்சியை யுண்டாக்கினார். மகா ராஷ்டிரத்தில் பலர் ஸ்ரீ திலகருடைய கிளர்ச்சியில் சேர்ந்தனர். சென்னையில் மிஸஸ் பெஸண்டும் சுய ஆட்சிக் கிளர்ச்சியை யுண்டாக்கினார். பற்பல இடங்களில் சுய ஆட்சிச் சங்கங்கள் உண்டாயின. ஸ்ரீ திலகர் மகாராஷ்டிர சுய ஆட்சிச் சங்கமென்று ஏற்படுத்தி தீவிர வேலை செய்துவந்தார். மகாராஷ்டிரத்திலுள்ள இச் சங்கம் 1916-ம் வருடம் ஏப்ரல் மாதம் 23-ந் தேதி ஸ்தாபிக்கப்பட்டது. சுய ஆட்சிச் சங்கம் புனா நகரில் ஸ்தாபிக்கப்பட்டதும் ஸ்ரீ திலகர், பெல்காம், அஹமத் நகரம் முதலிய இடங்களுக்குப் பிரசார வேலை செய்யப் புறப்பட்டார். 1916-ம் வருடம் மே மாதத்தில் பெல்காம் அஹமத்நகர் இடங்களுக்குச் சென்று சுய ஆட்சிச் சங்கங்களை ஸ்தாபித்தார். 1916-ம் வருடத்திய ஜூலை 23-ந் தேதிக்கு ஸ்ரீ திலகர் 60 ஆண்டு நிறைவு பூர்த்தியானதைக் கண்ட அவருடைய மித்திரர்கள் ஸ்ரீ திலகருடைய சஷ்டி பூர்த்தி மஹோத்சவம் கொண்டாடி அவரை வாழ்த்த மகாராஷ்டிர



மெங்கும் 'சஷ்டி பூர்த்தி விழா' கொண்டாடப்பட்டது. ஜூலை மாதம் 23-ந் தேதி புனா நகரில் சுமார் பதினாயிரம் ஜனங்கள் கூடி ஸ்ரீ திலகரை வாழ்த்தினார்கள். மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த பல ஊர்களிலிருந்து மித்திரர்கள் பலர் வந்தனர். வாழ்த்துப் பாக்கள் பல பாடப்பட்டன. பத்திரங்கள் பல படிக்கப்பட்டன. ஸ்ரீ திலகருக்குப் பலர் அவரவர்களிஷ்டம் பூர்த்தியாக வெகுமதிகளும் காணிக்கைகளும் செலுத்தினர். ஸ்ரீ திலகருக்கு மரியாதை செய்ய ஒரு 'கௌரவ உடுப்பு' ஒன்று கொடுக்கப்பட்டது. தவிர, ஒரு லட்சம் ரூபாய் கொண்ட பணமும் அவருக்குக் கொடுக்கப்பட்டது. ஸ்ரீ திலகர் அப்பெருங் கூட்டத்தில் பலவிதமாக உபசரிக்கப்பட்டு மகா ஜனங்களால் போற்றப்பட்டார். அது காலை லோகமான்யர் தம்மைக் கௌரவித்த மகா ஜனங்களுக்குக் கீழ்க்கண்டவாறு கூறினார்.

'நீங்கள் கொடுத்த இத்தொகையை என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை. என் சுய காரியத்திற்காக இத்தொகை வேண்டுவதில்லை; என்னுடைய சுய பிரயோசனத்திற்காக இத் தொகையை உபயோகப்படுத்திக் கொள்வதும் சரியல்ல. இத் தொகையோடு நானும் என்னுடைய சக்திக்குத் தக்கபடி ஒரு தொகையைப் போட்டு தேச காரியத்திற்கு நன்மையான வழியில் செலவு செய்ய இத்தொகையை வைத்திருக்கவே நான் அங்கீகரிக்கிறேன்' என்றார்.

மகா ஜனங்களாற் கௌரவிக்கப்பட்டதை யுணர்ந்த அரசாங்கத்தார் ஸ்ரீ திலகருடைய சஷ்டி பூர்த்தியைக் கௌரவிக்க அவர்களும் மரியாதை செய்ய முன் வந்தனர். ஜனங்கள் செய்த கௌரவத்தைவிட அரசாங்கத்தார் செய்த கௌரவம் நாஸுதிக்கும் நன்கு பாயிற்று. அரசாங்கத்தார் ஒரு தாக்கீதைக் (நோட்டீஸ்) கொடுத்து, 10000 ரூபாயில்

இரண்டு ஜாமீன் 20000 ரூபாய்க்குச் சொந்த பொறுப்பிலேயே ஒரு வருடகாலம் நன்னடக்கைக்கு ஸ்ரீ திலகரை ஜாமீன் கேட்க, உத்திரவு அனுப்பினார்கள். அரசாங்கத்தின் காருண்யமே காருண்யம். இந்தியாவில் இதுவரை இராஜீயப் போராட்டத்தில் கண்டிராத ஒருவரை அரசாங்கத்தார் காண்பதால், அவருக்குக் கௌரவஞ் செய்வது தங்களுடைய கடமையென்று பம்பாய் அரசாங்கத்து அதிகாரவர்க்கத்தினர், நல்ல சமயத்தில் ஸ்ரீ திலகருடைய சஷ்டிபூர்த்தி தினத்தைப்பார்த்து மரியாதை செய்தார்கள். அரசாங்கத்தார் ஸ்ரீ திலகர் விஷயத்தில் செய்த கௌரவங்களில் இது சாமானியமே யாகும். சிறக, அரசாங்கத்தார் ஸ்ரீ திலகரைச் சிறைப்படுத்த இஷ்டப்படவில்லை. ஏனெனில் ஐரோப்பா யுத்தமொன்று இருந்ததினாலே ஸ்ரீ திலகரை மீண்டும் சிறைப்படுத்துவது உசிதமல்லவென்று நினைத்து, அவரை வாய்திறக்காதபடி செய்ய அதிகாரிகள் யோசித்து, ஸ்ரீ திலகர் பெல்காம் நகரிலும் ஆமதநகரிலும் பேசின சுய ஆட்சிப் பிரசங்கங்களின் மீது குற்றஞ் சாட்டினார்கள். ஸ்ரீ திலகருடைய சுய ஆட்சிப் பிரசங்கங்களைக் குற்றமுள்ளவைகளாகக் கொண்டிருக்கிறோமே யன்றி சுயஆட்சி என்பதைக் குற்றமெனக் கூறவில்லையென்று அதிகாரிகள் வெகு சாமர்த்தியமாகத் தெரிவித்தார்கள். 1916-ம் வருடம் மேமாதம் 7-ந் தேதி புனா ஜில்லா மாஜிஸ்ட்ரேட் முன்பாக விசாரணை தொடங்கிற்று. இராஜநிந்தனை சட்டத்திற் குட்படாமலிருக்கவே இராஜபக்தியைப் பகிரங்கமாக ஸ்ரீ திலகர் வெளிப்படுத்தினது வெளி வேஷமென்று பிராஸிகியூடர் தரப்பு வக்கீல் மிஸ்டர் பின்னின் கூறினார். ஆமதநகரம், பெல்காம் முதலிய இடங்களில் பேசின உபந்நியாசங்களின் இடையிடையே சிற்சில சொற்களைப் பொறுக்கிக் குற்றஞ்சாட்டி ஸ்ரீ திலகரைத் தண்டிக்க வேண்டுமென்று மிஸ்டர் பின்னின்



ஜில்லா மாஜிஸ்ட்ரேட் மிஸ்டர், ஜி. டப்ளியூ. ஹாட்ச் அவர்களிடம் தெரிவித்தார். ஜில்லா மாஜிஸ்ட்ரேட் அவர்கள் ஸ்ரீ திலகரின் உபந்யாசங்கள் நிந்தனைக் குரியவைகளாக வுள்ளனவென்று அபிப்பிராயப்பட்டு கி. பு. கோ. சட்டம்*108-வது பிரிவுபடி ஒருவருடத்திற்கு நன்னடைக்கை ஜாமீன் 20000-ரூபாய்க்குச் சொந்த பொறுப்பில் 10000-ரூபாயாக இரண்டு ஜாமீன் கொடுக்கும்படி ஸ்ரீ திலகருக்கு உத்தரவு செய்தார். ஸ்ரீ திலகர், ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டின் உத்திரவு மீது ஹைக் கோர்ட்டிக்கு அப்பீல் செய்தார். முகம்மத் அலி ஜின்னா அவர்கள் ஸ்ரீ திலகர் பக்கம் வாதித்தார். நீதிபதிகள் மிஸ்டர் பாட்செலர், ஸர் ஷஹ்புபாய்ஷா ஆகிய இவ்விருவர்களின் முன்பாக நவம்பர் மாதம் 9-ந் தேதி விசாரணை தொடங்கிற்று. அவ்விரு நீதிபதிகளும் தனித்தனியே நியாயத் தீர்ப்பு எழுதி ஸ்ரீ திலகருடைய உபந்நியாசங்கள் குற்றமுள்ளவைக ளல்லவென்று கூறி, ஜில்லா மாஜிஸ்ட்ரேட் அவர்களின் உத்திரவைத் தள்ளினார்கள். ஸ்ரீ திலகரின் வெற்றி சுய ஆட்சியின் வெற்றியே யாகும். சிறக, 1916-ம் வருடம் அக்டோபர் மாதத்தில் ஆமதாபாத் நகரில் நடந்த பம்பாய் மாகாண கான்பரன்ஸுக்கு ஸ்ரீ திலகர் விஜயஞ் செய்தார். அந்நகரவாசிகள் ஸ்ரீ திலகருக்கு விசேஷ மரியாதையுடன்

* கி. பு. கோ. சட்டம் 108-வது பிரிவுபடி இந்தியாவில் 1921-1922-ம் வருடங்களில் ஒத்துழையாமை இயக்கத்தில் பலருக்கு நன்னடக்கை ஜாமீன் கேட்கப்பட்டது. ஆனால் அவர்கள் ஜாமீன்கொடுக்க இசையாமல் 1 வருடகாலம் தண்டனையை யடைந்தார்கள். அங்ஙனம், தண்டனை யடைந்தவர்களுள் [illegible]பர், ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி சர்மா அவர்களும் நன்னடக்கை ஜாமீன் கொடுக்க மறுத்ததினால் 1 வருடம் சாதாரண தண்டனை (Simple Imprisonment) யை யடைந்தார். இச்சட்டப்படி தண்டனை யடைந்தவர்கள் இந்தியாவில் சுமார் 1200 பேருக்குமேலாகும்.

ஊர்வலஞ்செய்து கௌரவித்தார்கள். அக்கான்பரன்ஸுக்கு ஜின்னு அவர்கள் அக்கிராசனம் வகித்தார். வைஸ்ராய் சட்டசபையில் ஜனப்பிரதிநிதி அங்கத்தினர்களில், 19 பேர்கள் தயாரித்த அரசியல் சீர்திருத்தச் சட்டம் ஒருவாறு குறைவாகவே யுள்ளதென ஸ்ரீ திலகர் அபிப்பிராயப்பட்டும் ஒற்றுமையை நாடி அவர் அதை அங்கீகரித்து ஆமதாபாத் கான்பரன்ஸிலும் அதை அங்கீகரிக்கும்படி பேசினார். நவம்பர் மாதத்தில் அகில இந்திய காங்கிரஸ் சபை கமிட்டிக்கு அங்கத்தினராக ஸ்ரீ திலகர் தெரிந்தெடுக்கப்பட்டார். ஐக் கோர்ட்டில் ஸ்ரீ திலகர் வெற்றி யடைந்ததும் பல ஜில்லா அதிகாரிகள் தடை உத்திரவுகள் செய்தனர். சொந்த காரியமாக ஸ்ரீ திலகர் கடாக் (Gadag) நகரத்திற்குப் போனபோது ஸ்ரீ திலகர் வருவதையறிந்த சனங்கள் அவருக்கு மரியாதை செய்ய விருப்பதை யறிந்த ஜில்லா மாஜிஸ்ட்ரேட் லோக மான்ய திலகர் பேசாவண்ணம் வாய்பூட்டு உத்திர வொன்றைப் பிறப்பித்தார். ஸ்ரீ திலகரோ வெகு நிதானமாக அதிகாரிகளின் நடத்தையை யறிந்து காலத்தை யனுசரித்து சனங்களிடம் மரியாதையைப் பெற்றுக்கொண்டு அவர்களுக்கு வந்தனஞ் செலுத்திப் புனா திரும்பினார். ஸ்ரீ திலகர் 1916-ம் வருடத்தில் லக்நௌ புரியில் நடந்த காங்கிரஸ் மகாசபைக்கு விஜயமானார். 1907-ம் வருடத்தில் சூரத் நகரில் பிளவு உண்டானதற்குப் பிறகு முதன் முதலாக ஸ்ரீ திலகர் 1916-ம் வருடத்திலேயே காங்கிரஸ் சபைக்குப் பிரவேசமானார். ஸ்ரீ திலகருக்கு அந் நகரவாசிகள் செய்த ஊர்வலமும் உபசாரமும் இவ்வளவென சொல்ல முடியாது. காங்கிரஸ் அக்கிராசனருக்குக் காகிலும் மற்றவருக்காகிலும் அதுபோல் நடந்ததேயில்லை. ஸ்ரீ திலகர் காங்கிரஸ் மகாசபையில் பெருத்த கோஷத்தினிடை சுய ஆட்சி என்னும் விஷயமாக ஏற்பட்ட தீர்மானத்தை ஆமோதித்து வெகு அழகாகப் பேசினார். விஷயாலோசனைக் கமிட்டியில் ஹிந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்கும் பிரத்யேக பிரதிநிதித்துவ விஷயமாகப் பலமான வாதம் அவ்விரு சமூகத்தின் தலைவர்களுக்கும் ஏற்பட்டபோது ஸ்ரீ திலகர் அவ்விருசமூகத்தினரின் தலைவர்களுக்கும் சமாதான முண்டாக்கி வைத்தார்.



முகம்மதிய சமூகத்திற்கு விரோதமாக கணபதி உற்சவத்தையுண்டாக்கிப் புனாவில் ஸ்ரீ திலகர் வீண்கலகம் விளைத்து வருகிறாரென்று அசார சீர்திருத்தக் காரர்கள் கூறினதை நம் நண்பர்கள் மறந்திருக்க மாட்டார்கள். அத்திலகரே ஹிந்து முகம்மதிய ஒற்றுமைக்குக் காரண புருஷராய் விளங்கினார். ஆகவே, ஸ்ரீ திலகர் எக்காலத்திலும் ஒரு சாதியாருக்கு விரோதமாக விருக்கும் காரியத்தைச் செய்யவில்லை. ஒற்றுமையை நாடி பல தடவைகளில் தம்மைச் சாட்சிக்கு விரோதமான காரியங்களையும் விட்டுக் கொடுத்துள்ளார். இந்த லக்நௌ காங்கிரஸில் காங்கிரஸ்—லீக் திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. அத்திட்டம் ஜனங்களுக்குக் குறைவாகவே காணப்படினும் மிதவாதிகளின் ஒற்றுமையை நாடி ஸ்ரீ திலகர் அத்திட்டத்தை அங்கீகரித்தார். தவிர, சுய ஆட்சிச் சங்கங்களையும் காங்கிரஸ் அங்கீகரிக்கும்படி இவர் பாடுபட்டு வெற்றிபெற்றார். தவிர, அகில இந்திய காங்கிரஸ் சபை கமிட்டியில் அதிகமான அங்கத்தினர்களிருப்பதால் அநேக நிர்வாக காரியங்கள் சரிவர நடைபெறவில்லையென்பதைக் கண்ட ஸ்ரீ திலகர் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்குச் சாதகமாக ஒரு நிர்வாக கமிட்டியை யேற்படுத்துந் திட்டத்தைத் தெரிவித்தார். ஆனால், பல மிதவாதிகள் அதற்குச் சம்மதிக்காததால், ஸ்ரீ திலகர் வற்புறுத்தாமல் விட்டுவிட்டார். ஸ்ரீ திலகர் அப்பொழுது கூறினதை மகாத்மா காந்தி நிறைவேற்றி வைத்தார். தற்பொழுது காங்கிரஸ் மகாசபைக்குக் காரிய கமிட்டியொன்று அகில

இந்திய காங்கிரஸ் கமிட்டியை யாதரித்து வருகின்றது. 1917-ம் வருடம் ஆரம்பித்ததும், ஸ்ரீ திலகர் மகாராஷ்டிர தேசமெங்கும் சுற்றுப் பிரயாணஞ் செய்தார். தவிர, பல இடங்களில் பிரசங்கங்களுஞ் செய்தார். டில்லி, கல்கத்தா, வட மதுரை, நாகபுரி, அகோலா, கோத்ரா, காந், ஜல்கான், ஏவியா, பெல்காம், தாணா, ஷோலாபூர், ஸதாரா முதலிய பல விடங்களுக்குச் சென்று சுய ஆட்சிச் சங்கத்தின் ஆதரவில் இங்கிலாந்துக்குத் தூதனுப்ப ஜனங்களின் சம்மதத்தை யறிந்தார். மார்ச்சுமாதம் 17-ந்தேதி இந்தியா கவர்ன்மென்டார் மாகாண கவர்ன்மென்டார்களுக்கு அறிக்கையிட்டு இனி அவர்கள் சுயஆட்சிக்காரர்களுடன் நடக்கவேண்டிய முறைமையைத் தெரிவித்தனர். கலாசாலை மாணவர்கள் சுயஆட்சிக் கூட்டங்களுக்குப் போகக்கூடாதென்று தடுக்கப்பட்டனர். சென்னையில் * இந்திய பாதுகாப்புச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. பெஸன்டு முதலானோர் அச் சட்டப்படி சிறைப்படுத்தப்பட்டனர். பலர் பேசக் கூடாவண்ணம் தடுக்கப்பட்டனர். பலர் சுயஆட்சிச் சங்கத்தில் அங்கத்தினர்களாகச் சேர்ந்தனர். அகில பாரத ஜனசபை கமிட்டியில் ஸ்ரீ திலகருடைய வார்த்தை பிரகாசித்தது. சாத்விகப் போராட்டத்தைத் தொடுக்க காங்கிரஸ் தயாராக விருக்கவேண்டுமென்றும் அதற்கு முன்கூட்டியே பற்பல மாகாணங்களின் அபிப்பிராயங்களை யறிய அறிக்கையொன்றை விடவேண்டுமென்றும் ஸ்ரீ திலகர் அறிவித்தார்.

* சென்னை இராஜதானியின் தலைநகரான சென்னைபுரியில் முதல் முதல் 1917-ம் வருடம் மார்ச்சுமாதத்தில் இந்திய பாதுகாப்புச் சட்டப்படி பேசவும் எழுதவும் கூடாதென்று சென்னை கவர்னர் அவர்களோடு கூடிய ஆலோசனை சபையார் ஸ்ரீ [illegible] ஸ்வாமிசர்மா அவர்களுக்கு உத்தரவு பிறப்பித்தார். பிறகு பலர் அச் சட்டப்படி அடக்குமுறைக் குட்பட்டனர்.



அது நிறைவேறிற்று. ஆனால் பல மிதவாதிகள் மட்டும் அதை அங்கீகரிக்கவில்லை. பின்னர், பெஸன்டு அம்மையின் விடுதலைக்குப் பாடுபடுவதாகக் கூறுபவர்கள், அந்த மாதை 1917-ம் வருடத்தில் காங்கிரஸுக்கு அக்கிராசனராகத் தெரிந்தெடுக்க முன்வரவேண்டும் என்று ஸ்ரீ திலகர் கூறினார். இவ்விரண்டு விஷயங்களால், மிதவாதிகள் நம்மைச் சந்தியில் இழுக்க இவர் ஏற்பட்டாரென்று நினைத்து மௌனஞ் சாதித்தார்கள். கடைசியாக ஸ்ரீ திலகருடைய முயற்சி வெற்றி பெற்றது. பெஸன்டும் அக்கிராசனம் வகிக்கத் தெரிந்தெடுக்கப்பட்டார். ஆனால், அந்த அம்மாள் ஸ்ரீ திலகருக்கு விரோதமாக இங்கிலாந்தில் வேலைசெய்தது சாலவும் விசனிக்கத்தக்கது. பிறகு, மான்டேகு அவர்கள் 1917-ம் வருடம் ஆகஸ்டுமாதம் 20-ந் தேதி இராஜவிளம்பர மொன்றை பிரசுரித்தார். அதுவிஷயமாகப் பல வாதங்களும் அபிப்பிராய பேதங்களும் உண்டாயின. 1917-ம் வருடத்தில் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸில் ஸ்ரீ திலகர் நடுநாயகமாய் விளங்கினார். அவர் பொதுப்பாட்சி விஷயமாகப் பேசினார். மிதவாதிகளிற் சிலர் அந்த காங்கிரஸ் முடிந்ததும் காங்கிரஸினின்றும் பிரிந்துபோக ஏற்பாடு செய்தனர். காங்கிரஸ் மகாசபைக்கு அக்கிராசன பதவியை வகிக்க அரசாங்கத்தாருக்கு அறிமுக மானவர்களையும், அதிகாரிகளிடம் மிக்க செல்வாக்கு பெற்றவர்களையுமே தெரிந்தெடுக்கும் வழக்கம் போய், அரசாங்க விரோதியென்றும் கலகக்காரர் என்றும் நாட்டின் அமைதியைக் குலைப்பவ ரென்றும் கூறப்படும் ஒருவரைக் காங்கிரஸ் அக்கிராசனராக 1917-ம் வருடத்தில் தெரிந்தெடுத்தது ஓர் அபூர்வமான காரியமாகும். தவிர, இந்தியாவின் நிலைமையை யறிந்து இந்தியாவுக்கு இராஜீய சீர்திருத்தம் கொடுக்கும் உத்தேசத்துடன் இந்தியா மந்திரி மான்டேகு விஜயமானார். ஸ்ரீ திலகரும் பெஸன்

ரும் இருவரும் சேர்ந்து சுயஆட்சிச் சங்கத்தின் சார்பாக இந்தியாவுக்கு வேண்டிய சீர்திருத்தத்தைப் பற்றி இந்தியா மந்திரி மாண்டேகு வுக்குத் தெரிவித்தனர். மாண்டேகு அவர்களிடம் வெகு நாழிகை பரியந்தம் ஸ்ரீ திலகர் இந்தியாவின் இராஜ்ய நிலைமையைப் பற்றிப் பேசினார். ஸ்ரீ திலகர் அபூர்வ இராஜதந்திரி என்று மாண்டேகு தன் நண்பரொருவரிடம் தெரிவித்ததாக அறியப்படுகிறது. ஸ்ரீ திலகர் சுயஆட்சிச் சங்கத்தின் ஆதரவில் இங்கிலாந்துக்குத் தூது செல்ல ஏற்பாடு செய்துவந்தார். பெஸண்டு மாதும் அவ்வண்ணமே ஸ்ரீ திலகருடைய துணையை நாடி சுயஆட்சி தூது ஒன்றை சென்னையிலிருந்து அனுப்பத் தீர்மானித்தார். மாண்டேகு அவர்களின் சீர்திருத்த ரிபோர்ட்டு 1918-ம் வருடம் ஜூலை மாதத்தில் பிரசுரிக்கப்பட்டது. அத்திட்டம் வெகு ஏமாற்றத்தைத் தந்தது. உடனே பம்பாயில் ஒரு விசேஷ காங்கிரஸ் கூடிற்று. மிதவாதிகளிற் பலர் அதற்கு வரவில்லை. ஆனாலும், சிலர் வந்தனர். காங்கிரஸ் சபையில் மீண்டும் பிளவு உண்டாகயிருந்தது. நல்லவேளையாக ஸ்ரீ திலகருடைய சாமர்த்தியத்தால் அவ்வண்ணம் நடக்கவில்லை. சீர்திருத்தச் சட்டம் கேவலம் இந்தியர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தந்தபோதிலும், மிதவாதிகள் மட்டும் எத்தன்மையேனும் அதை அவ்வண்ணம் அங்கீகரித்தே தீரவேண்டுமென்று ஒரே பிடிவாதமாகக்கூடி லிபரல் லீக் என்னும் ஓர் சபையைத் தனியே ஸ்தாபித்துக் காங்கிரஸினின்றும் நீங்கினர். ஸ்ரீ திலகர் சீர்திருத்த விஷயமாகப் பார்லிமெண்டார் சட்டமாக்குவதற்கு முன் இங்கிலாந்தில் பெரிய கிளர்ச்சி செய்து பொதுசனங்களை எழுப்பி இந்தியாவுக்குச் சுயஆட்சி கொடுக்கத் தொழில் கட்சி மெம்பர்களைவிட்டு பார்லிமெண்ட் மகாசபையில் கேட்கும்படி செய்யவேண்டுமென்ற எண்ணத்



துடன் கொண்டு ஸ்ரீ திலகர், விபின சந்திரபாலருடனும் கேல்கருடனும் இங்கிலாந்துக்குப் புறப்பட்டார். அவர், சென்னைக்கு வந்து, சென்னையிலிருந்து ஸிலோன் சென்று, அங்கிருந்து நேரே செல்வதற்கு ஆயத்தமாயிருந்தார். சென்னையில், ஸ்ரீ திலகருக்குப் பெரிய ஊர்வலம் நடத்தப்பட்டது. பல்லாயிரம் பேர் கூடின ஒரு பெரிய மகாநாட்டில் ஸ்ரீ திலகர் இங்கிலாந்துக்குச் செல்லும் நோக்கத்தைப் பற்றிக் கூறினார். சென்னையைவிட்டு ஸிலோன் போய்ச் சேர்ந்து, கப்பல் பிரயாணஞ் செய்ய ஆயத்தமாயிருக்கையில், ஸ்ரீ திலகர் முதலானோர், இங்கிலாந்துக்குச் செல்லக்கூடாதென்று வழிச்சீட்டு (Passport) ரத்து செய்யப்பட்டது. இவ்வுத்திரவு இந்தியா கவர்ன்மெண்டார் செய்தது. இந்தியாவின் வைஸிராய் செம்ஸ்போர்ட் பிரபு டில்லிமா நகரில் யுத்த கான்பரன்ஸ் நடத்தின காலத்தில் ஸ்ரீ திலகரை வரவழைக்கவில்லை. தவிர, பம்பாய் கவர்னர் லார்ட் வெல்லிங்டன் யுத்த கான்பரன்ஸை நடத்தி ஸ்ரீ திலகர் முதலானோரை வரவழைத்து புத்திமதிகூற எத்தனிக்கவே, ஜின்னா, யமுனாதாஸ், கேல்கார், ஸ்ரீ திலகர் முதலானோர் அச்சபையை விட்டு வெளி வந்தனர். அச்சம்பவம் நடந்த இரண்டு மாதத்திற்குப் பிறகு ஸ்ரீ திலகர் இந்திய பாதுகாப்புச் சட்டப்படி பேசக்கூடாதென உத்திரவும் பெற்றார். இவ்வண்ணம், அவர் இங்கிலாந்துக்குப் போவதற்கு முன் பம்பாய், பஞ்சாப், டில்லி முதலிய மாகாண கவர்ன்மெண்டார் பலவிதமான தடை உத்திரவுகளைச் செய்து வந்தது போதாமல், இந்தியா கவர்ன்மெண்டார் ஸ்ரீ திலகர் இங்கிலாந்துக்குப் போகக்கூடாதென்று ஓர் உத்திரவையும் பிறப்பித்தனர். அவ்வுத்திரவு இங்கிலாந்தினின்றும் வந்ததாகவுந் தெரிய வருகிறது. பிறகு, ஸ்ரீ திலகர் 1918-ம் வருடத்தில் டில்லிமா நகரில் நடக்கும் காங்

கிரஸ் மகா சபைக்கு அக்கிராசனராக எல்லா மாகாண காங்கிரஸ் கமிட்டிகளாலும் தெரிந்தெடுக்கப்பட்டார். ஸ்ரீ திலகர் அக்கிராசனராகத் தெரிந்தெடுக்கப்பட்டும், அவர் இங்கிலாந்து சென்றதால், பண்டித மாளவியா அவர்கள் அக்கிராசனம் வகித்தார். இங்ஙனம், ஸ்ரீ திலகர், காங்கிரஸ் சபையில் சாதாரண அங்கத்தினராகவே யிருந்து வேலை செய்து காலத்தைக் கழித்தாரே யல்லாது, அக்கிராசன பதவி முதலிய கௌரவ பதவியை வகிக்கவேயில்லை. ஸ்ரீ திலகரை அவதூறாக வைது 'இந்தியா அமைதியின்மை' (Indian Unrest) என்னும் புத்தகத்தில் வாலன்டைன் சிரால் எழுதினதற்காக, அவர்மீது இங்கிலாந்தில் மான நஷ்டபிராது வியாச்சிய மொன்று இருந்ததினால், அதற்கு ஸ்ரீ திலகர் போகவேண்டிய நிமித்தமும் கடைசியாக அவருக்குப் பிரயாணச் சீட்டு கொடுக்கப்பட்டது. மற்றவர்களுக்கும் முறையே பிரயாண சீட்டு கொடுக்கப்பட்ட ஸ்ரீ திலகருடன் கூடவே அவர்கள் பிரயாணஞ் செய்தார்கள். இந்தியா வெங்கும் சுயஆட்சியின் பொருட்டுப் பலமான கிளர்ச்சியை யுண்டுபண்ணி அக்கிளர்ச்சியின் பலத்தால் இங்கிலாந்து தேசத்துப் பொதுசனங்களை எழுப்பி தொழிலாளர்களின் உதவியால் இந்தியாவுக்கு நன்மையை யுண்டாக்கவே ஸ்ரீ திலகர் சிறந்த இராஜதந்திர புத்தியுடன் ஒவ்வொரு காரியத்தையும் செவ்வனே செய்துவந்தார். ஸ்ரீ திலகர் இங்கிலாந்துக்குச் சென்றால் இந்தியாவிலுள்ள அதிகாரவர்க்கத்தினர்களின் ஊழல்கள் வெளிவருமென்றே கருதி, அவர்கள் ஸ்ரீ திலகருக்கு எந்தெந்த விதத்தில் துன்புறுத்திப் போகாமற்படி செய்யலாமோ அவ்வளவையும் செய்து பார்த்தார்கள். ஸ்ரீ திலகருக்குத் தெய்வசகாய மொன்று இருந்ததினால், அதிகாரவர்க்கத்தினர்கள் எவ்வளவு செய்தும் அவையொன்றும் அவரைத் துன்புறுத்த



வில்லை. ஸ்ரீ திலகர் ஆசாசீர்திருத்தத்திற்கு விரோதி என்று பூர்வம் கூறிவந்தவர்கள் ஸ்ரீ திலகருடைய ஒவ்வொரு காரியத்தையும் அறிந்து அவமான மடைந்தார்கள். ஸ்ரீ திலகர் இங்கிலாந்துக்குப் புறப்படப்போகையில் புனா நகரைச் சேர்ந்த கிண்டாத்திருமேனியர்கள் அவருக்கு வழியனுப்புப் பத்திரமொன்றை வாசித்துக் கொடுத்தார்கள். ஸ்ரீ திலகர் ஜன்மதேசத்திற்கு மீண்டும் சுகமாகத் திரும்பி வரவேண்டுமென்று பாரதநாட்டுப் பல மகா சனங்கள் கோயில்களில் அர்ச்சனை முதலியவைகளைச் செய்து தங்கள் தங்கள் இல்லுறைத் தெய்வங்களை வேண்டிக்கொண்டிருந்தனர். பாரதமக்கள் ஸ்ரீ திலகரைத் தங்கள் இல்லுறைத் தெய்வமென்றே கொண்டாடி வந்தனர்.

## 13. இங்கிலாந்து வாசம்

இங்கிலாந்துக்குத் தூது செல்லும் விஷயமாக ஸ்ரீ லோகமான்யர் 1904-ம் வருடத்திய காங்கிரஸ் மகா சபையில் மிதவாதிகளின் உணர்ச்சியைக் கிளப்ப காங்கிரஸ் தூது அனுப்பவேண்டுமென்று பேசினர். 1905-ம் வருடத்திலிருந்து இந்தியாவில் வங்காளப் பிரிவினையா லுண்டான பலமான தேசியக் கிளர்ச்சியால் ஜனங்கள் இராஜீயத் துறையில் அதிக ஊக்கங் காட்டி வந்த காலத்தில் ஸ்ரீ திலகர், இங்கிலாந்துக்குத் தூது செல்வதில் பிரயோஜனமில்லையென்றும், பாரத நாட்டின் கண்ணே ஸ்வதேசி பகிஷ்கார முறையால் இங்கிலாந்து மகா ஜனங்களை எழுப்ப முடியுமென்றும் கூறினர். 1917-ம் வருடத்தில் இந்தியாவின் இராஜீய நிலை வேறு விதமாக ஐரோப்பா யுத்தத்தை முன்னிட்டு மாறினதின் நிமித்தமாக ஸ்ரீ திலகர் மீண்டும் இங்கிலாந்துக்கு காங்கிரஸ் தூது அனுப்பவேண்டுமென்று கூறினர். இங்கிலாந்தில் நிரந்தரமானதோர் இராஜீய சபையை ஸ்தாபித்து அதன் மூலமாக இந்தியாவின் நிலைமையை இங்கிலாந்து மகா ஜனங்களுக்கு இடைவிடாமற்படி எடுத்துக்கூறி பிரசாரஞ் செய்யவேண்டுமென்றும், பிறகு, இங்கிலாந்தில் ஏற்படுத்துவது போலவே, அமெரிக்காவிலும் பிரான்ஸ் தேசத்திலும் இந்தியாவின் நிலைமையை அந்தந்த தேசமகாஜனங்களுக்குத் தெரிவித்து இந்தியாவும் சுயநிர்ணயம் பெற உரிமையுடைய தென்றும் காட்டி உலகப்பிரசாரம் செய்யவேண்டுமென்றும் ஸ்ரீ திலகர் கருதினர். இந்தியாவும் சர்வதேச சங்கத்தில் ஓர் உயர்ந்த ஸ்தானம் பெற முயற்சிசெய்ய வேண்டு மென்பதே ஸ்ரீ திலகரின் கொள்கை. இந்தியாவில் பலமான கிளர்ச்சியை யுண்டாக்



கிச் சுதந்தரப் போர்தொடுப்பதுடன், வெளி தேசங்களிலும் இந்தியாவின் இலட்சியம் இன்னதென்பதைக் காட்டப் பலமான பிரசாரஞ் செய்யவேண்டு மென்பதே ஸ்ரீ திலகருடைய கொள்கை. இக்காரணம் பற்றியே காங்கிரஸ் சபையைத் தூதனுப்ப 1917-ம் வருடத்தில் ஸ்ரீ திலகர் கேட்டும், பலர் அதைக் கவனிக்காமல் விட்டுவிட்டனர். தவிர, இந்தியா மந்திரி சீர்திருத்த யாதாஸ்தை பிரசுரித்த பிறகு விசேஷ காங்கிரஸ் சபையைக் கூட்டி, அந்த யாதாஸ்தின் பேரில் செய்யும் தீர்மானத்திற்கப்புறம் காங்கிரஸ் தூது இங்கிலாந்துக்கு அனுப்பப்படலாம் என்று பலர் கூறினர். ஸ்ரீ திலகர் அவர்களையே முழுதும் நம்பாமல், சுயஆட்சிச் சங்கத்தின் மூலமாக தூதொன்றை யனுப்ப எண்ணி முதல் ஜோஸப் பாப்டிஸ்டா அவர்களை இங்கிலாந்துக்கு அனுப்பினர். இங்கிலாந்தில் சைடன்ஹாம் கட்சியினர் இந்தியாவுக்கு விரோதமாகக் கிளர்ச்சிசெய்து வருவதையும், இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியாவின் பிரதிநிதிகளாக பிகானீர் மகாராஜாவையும் லார்ட் சின்ஹாவையும் அனுப்பினதையும் கண்ட ஸ்ரீ திலகர் ஜோஸப் பாப்டிஸ்டா அவர்களை யனுப்பித் தொழிலாளர்களும் மத்திய வகுப்பினர்களும் இந்தியாவின் விஷயமாகக் கவனிக்கப் பிரசாரஞ்செய்து வரும்படி அனுப்பினர். ஜோஸப் பாப்டிஸ்டா அவர்கள் இங்கிலாந்துக்குச் சென்று பல தொழிலாளர் தலைவர்களுடன் இந்தியாவின் நிலைமையைக் கூறி அவர்களுக்குச் சிரத்தையுண்டாக்கி வைத்தார். பல தொழிலாளர் மகா நாட்டில் இந்தியாவுக்கு சுயநிர்ணயம் கொடுக்கவேண்டு மென்னும் தீர்மானம் செய்யப்பட்டது. நாடிங்காம் என்னும் ஜில்லாவில் 1918-ம் வருடம் ஜனவரி மாதம் 23-ந் தேதியில் கூடின தொழிலாளர் மகாநாட்டில், இந்தியா சுயஆட்சி பெறும் வழியைத் தேடுவதாகவும் அதற்காக இந்தியா

வுக்கு உதவி செய்வதாகவும் ஓர் உறுதி கூறப்பட்டது. 1917-ம் வருடம் ஆகஸ்டு மாதத்திலிருந்து ஸ்ரீ திலகர் இங்கிலாந்து போய்ச் சேரும்வரை ஜோஸப் பாப்டிஸ்டா செய்த வேலை மிகவும் அருமையானது. ஸ்ரீ திலகர் சுய ஆட்சி சங்கத்தின் ஆதரவில் நாடு செல்லச் சகல ஆயத்தஞ் செய்தார். சுய ஆட்சி நிதிக்காக, மகாராஷ்டிர தேசத்திலுள்ள பெல்காம், நாசிக், ஷோலாபூர், தாணா, கொலாபா முதலிய இடங்களுக்கும், மத்திய மாகாணத்திலுள்ள பல இடங்களுக்குஞ் சென்று நிதி திரட்டினார். மத்திய மா[illegible] போய் இவ்விரண்டு மாகாணங்களிலும் மூன்று வாரம் இடைவிடாமல் பிரசாரஞ் செய்து சுமார் 2 லட்சம் ரூபாய் செலவுக்காக வசூல் செய்தார். ஸ்ரீ திலகர் தம்முடைய 61-வது வயதில் இங்கிலாந்து பிரயாணஞ் செய்யத் தீர்மானித்ததைக் கண்ட பலர் ஆச்சரியப் பட்டனர். முதன்முதல் ஸ்ரீ திலகர் இங்கிலாந்து யாத்திரை செல்லப் புறப்பட்டு கொழும்பு போய்ச் சேர்ந்ததும், அதற்கப்புறம் போகக் கூடாதென்று தடுக்கப்பட்டுத் திரும்பி வந்தார். ஆனால் அவருடைய வியாச்சியமொன்று இங்கிலாந்தில் இருந்ததினால், அவர் போவது அவசிய மென்பதைக் கண்ட அரசாங்கத்தார், மீண்டும் உத்தரவு கொடுத்தனர். என்றாலும், இங்கிலாந்தில் பொதுக் கூட்டத்தில் பேசுவதில்லை யென்ற நிபந்தனை யொன்றை யுண்டாக்கி அதற்குச் சம்மதமாயின் போகலா மென்று அரசாங்கத்தார் தெரிவித்தார். ஸ்ரீ திலகர், இங்கிலாந்துக்குப் போனபிறகு அத்தகைய உத்திரவை எப்படியாகிலும் ரத்து செய்துக் கொள்ளலா மென்ற நம்பிக்கை கொண்டு அரசாங்கத்தாரின் நிபந்தனைக்கு சம்மதப்பட்டு வாக்களித்தார்; ஸ்ரீ திலகர் கடைசியாக, பல சில்லறை உத்தியோகஸ்தர்களின் உபத்திரவங்களை யெல்லாம் தாண்டி இங்கிலாந்து போய்ச் சேர்ந்தார். இங்கிலாந்து சென்று சில தினங்களுக்



குப் பிறகு அவ் வுத்திரவு ரத்து செய்யப்பட்டது. பம்பாய் கவர்னர் வில்லிங்டன் பிரபு ஸ்ரீ திலகருக்குப் பலவிதத்திலும் கேடு செய்தே வந்தார். இந்திய கவர்ன்மெண்டும் ஸ்ரீ திலகரிடத்தில் பகைமை பாராட்டி வெகு அற்பமான விஷயங்களிலும் தலையிட்டு அவரைத் துன்புறுத்தி வந்தது. டில்லி நகரில் பண்டித மாளவியா அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் நடந்த காங்கிரஸ் மகா சபையில் காங்கிரஸ் தூது ஒன்றை இங்கிலாந்துக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப் பட்டதுடன், ஸ்ரீ தி[illegible] பிரிட்டிஷ் காங்கிரஸ் கமிட்டியைச் சீர்திருத்தி 'இந்தியா' என்னும் பத்திரிகையும் காங்கிரஸ் கொள்கையை யாதரித்து வரும்படி ஏற்பாடு செய்வதும் நியமனஞ் செய்தது. தவிர, சர்வ தேச சமாதான கான்பரன்ஸுக்கு இந்தியாவின் பிரதிநிதியாக ஸ்ரீ திலகரை நியமித்து காங்கிரஸ் தீர்மானஞ் செய்து அனுப்பிற்று. டில்லிமா நகரில் நடந்த காங்கிரஸ் மகாசபையில் செய்த இத்தீர்மானங்களால் ஸ்ரீ திலகருக்கு இங்கிலாந்தில் அதிகமான இராஜீய வேலை செய்ய ஒரு பொறுப்பும் அந்தஸ்தும் உண்டாயிற்று. ஸ்ரீ திலகர் தம்முடைய சுய ஆட்சிச் சங்கத்தின் ஆதரவாலும், காங்கிரஸ் மகாசபையின் பிரதிநிதி பொறுப்பாலும் பல அற்புதமான காரியங்களைச் செய்தாரெனப் பலர் கூறியுள்ளார். இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குச் சென்ற பல இந்தியர்களுக்குள்ளே ஸ்ரீ திலகர் செய்த வேலையை ஸெயின்ட் நிஹல்ஸிங் வெகு அழகாக 'மாடர்ன் ரிவ்யூ' என்னும் பத்திரிகைக்குப் பின்வருமாறு எழுதியுள்ளார்:—

'ஸ்ரீ திலகர் இங்கிலாந்தில் இருக்கையில் பல தடவை அவருடன் இராஜீய விஷயமாகப் பேச எனக்கு சந்தர்ப்பம் இருந்தது. ஒவ்வொரு தடவையிலும் நான் அவருடன் பேசும்பொழு தெல்லாம், அவர் கேவலம் இராஜீயவாதியாக

மட்டும் இல்லாமல், உயர்ந்த இராஜ தந்திரியாகவே காணப்பட்டார். இந்தியாவின் நிலைமையைப் பற்றி இங்கிலாந்தில் அவர் லண்டனுக்கு வந்த சில தினங்களுக்குள் வெகு நன்றாக அறிந்ததைக் கண்ட எனக்கு ஆச்சரியமுண்டானதுடன், அவருடைய ஆங்கில அறிவைக் கண்ட எனக்கு வியப்புமுண்டாயிற்று. இங்கிலாந்துக்கு வந்தவர்களின் எல்லா பிரசங்கங்களை விட காக்ஸ்டன் மண்டபத்தில் ஸ்ரீ திலகர் பேசினது உபயோகமாகவே மிகவும் சிறந்தது. ஸ்ரீ திலகர் தமது கால்சுளுக்கு கொண்டு நாற்காலியில் உட்கார்ந்த வண்ணமாகவே பேசினார். ஸ்ரீ திலகர் பாரத நாட்டின் பூர்வகாலச் சிறப்பை வர்ணித்து *அசோகர் சமுத்திர குப்தர் இவர்களுடைய இராஜரீகங்களைக் கூறி அவர்களுடைய இராஜ்யத்தின் சிறந்த சனங்கள் பலவிதத்திலும் மேம்பாடு கொண்டிருந்தார் என்று கூறிப் படிப்படியாக, தற்கால இந்தியாவின் நிலைமையையும் பிரிட்டிஷார் ஆட்சி முறைமையையும் எடுத்துரைத்தார். பிறகு இந்தியா சுய ஆட்சி பெறுவதற்குரிய நியாயங்களையும் இந்தியா சுய ஆட்சிக்கு லாயக்கல்லவென்று கூறினவர்களின் நியாயங்களையும் ஒவ்வொன்றாக எடுத்து அதற்குத் தக்க பதில்கூறி ஆங்கில சனங்களை வெகு நன்றாகத் தம் பிரசங்கத்தில் ஈடுபடச் செய்தார்.

பிறகு ஸ்ரீ திலகர் டில்லி காங்கிரஸ் மகாசபை தீர்மானஞ் செய்வதற்கு முன்னமே இங்கிலாந்துக்குப் போய்விட்டபடியால், அவர், லண்டனிலிருந்த பிரிட்டிஷ் காங்கிரஸ் கமிட்டியையும், 'இந்தியா' பத்திரிகையையும் சீர்திருத்த எண்ணங் கொண்டார். காங்கிரஸ் மகாசபையால் ஏற்பட்ட இரண்டொரு வருடத்திற்கெல்லாம் பிரிட்டிஷ் காங்

* அசோகர்—கிருஷ்ணஸ்வாமி சர்மா எழுதியது. விலை அணா 8.



கிரஸ் கமிட்டியும் 'இந்தியா' பத்திரிகையும் பிரிட்டிஷார்கள் இந்தியாவின் உண்மை நிலையை அறிவதற்கென்றே ஸ்தாபிக்கப் பட்டது. பிரிட்டிஷ் காங்கிரஸ் கமிட்டி 1889-ம் வருடத்திலும் 'இந்தியா' பத்திரிகை 1890-ம் வருடத்திலும் ஸ்தாபிக்கப்பட்டது. காங்கிரஸ் மகா சபையில் மிதவாதிகளின் ஆதிக்கம் பலமாக இருந்த காலங்களில் இப் பிரிட்டிஷ் கமிட்டியைப் பற்றியும், 'இந்தியா' பத்திரிகையைப் பற்றியும் அபிப்பிராய பேதமின்றி அவர்கள் இருந்தனர். 1917-ம் வருடமுதல் காங்கிரஸ் மகாசபை ஜன நாயக உணர்ச்சி கொண்டு இராஜீய விஷயங்களைத் தீவிரமாகக் காலத்தின் போக்கைக் கொண்டு வந்ததால், பிரிட்டிஷ் காங்கிரஸ் கமிட்டியும், இந்தியா பத்திரிகையும் இந்திய காங்கிரஸ் மகா சபைக்கு அநுகுணமாக இல்லாமல் மிதவாத தன்மையைக் காட்டியே வந்தது. மிதவாதிகள் காங்கிரஸ் சபையைவிட்டு நீங்கியும் அப்பத்திரிகை மிதவாத கொள்கையையே யனுஷ்டித்து வந்தது. காங்கிரஸ் அந்த பத்திரிகைக்கு ஆதரவளித்தும் வருடமொன்றுக்கு 30000 ரூ. பிரிட்டிஷ் கமிட்டியாரின் வேலைக்காக உதவிபுரிந்தும், 'இந்தியா' பத்திரிகையின் தன்மை காங்கிரஸ் சபையின் கொள்கைக்கு மாறுபாடாகவே இருந்தது. மிஸ்டர் போலாக் அப் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்தார். இவர் மகாத்மா காந்தியுடன் தட்சிண ஆப்பிரிக்காவில் இருந்தவர். மிதவாதிகளின் அநுசரணையையே கொண்டவர். ஆகவே, இவர் ஆசிரியராக இருந்ததினால், இந்தியா பத்திரிகையின் வியாசங்கள் யாவும் மிதவாதிகளின் கொள்கைகளாகவே இருந்தன. தவிர, 1918-ம் வருடத்தில் பம்பாயில் நடந்த விசேஷ காங்கிரஸ் மகாசபையின் தீர்மானங்களைக் கூட 'இந்தியா' பத்திரிகை பிரசுரிக்காததைக் கண்டு ஸ்ரீ திலகர் வியப்படைந்தார். காங்கிரஸ் ஆதரவால் நடந்து வரும் பத்திரிகை யொன்று காங்கிரஸ் மகா

சபையின் தீர்மானங்களைக் கூட பிரசுரிக்காமலிருப்பது முற்றிலும் கேவலமான தெனக் கொண்டு ஸ்ரீ திலகர் உடனே 'இந்தியா' பத்திரிகை இனி காங்கிரஸ் சபையை யனுசரித்தே நடக்கவேண்டுமென்று செய்த தீர்மானங்கொண்டார். ஆனாலும், காங்கிரஸ் சபையினின்றும் ஓர் உத்தரவைபெறவும் அவர் பெறவில்லை. எந்த விதமாக அப் பத்திரிகையையும் பிரிட்டிஷ் கமிட்டியையும் திருத்துகிற தென ஆலோசித்துக்கொண் டிருக்கையில் நல்ல வேளையாக, டில்லி காங்கிரஸில் தீர்மானமொன்று செய்து ஸ்ரீ திலகருக்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது. இந்தியாவி னின்றும் காங்கிரஸ் ஆக இங்கிலாந்துக்கு வரும் விஷயங்கள் முக்கியமானவைகளைக் கூட லட்சியஞ் செய்யாமல் பிரிட்டிஷ் கமிட்டியைச் சேர்ந்த சில மெம்பர்கள் காங்கிரஸ் சபையைவிட தாங்கள் புத்திசாலிகளென நினைத்து இறுமாப் புடைத்திருந்தனர். கமிட்டி கூட்டத்திற்கும் அவர்கள் வருவதில்லை. பிரிட்டிஷ் கமிட்டியும் இந்தியா பத்திரிகையும் சரிவர சீர்திருத்தப் பட்டாலன்றி இந்தியாவி னின்று பண உதவி செய்யப்படமாட்டாதெனவும் தெரிவிக்கப் பட்டது. என்றாலும் போலக் அவர்களும் அவரைச் சேர்ந்த இரண்டொரு நண்பர்களும் பிடிவாதமாகவே ஒன்றையும் கவனிக்காமலிருந்து வந்தனர். கடைசியாக, டாக்டர் கிளார்க், டாக்டர் ரூதர்போர்டு, மிஸ்டர் பரீக் ஆகிய இம் மூவரும் இந்தியா பத்திரிகைக்கு அறப்பட்சகர்களானதினால், அந்த ஹோதாவில் 'காங்கிரஸ் கொள்கையை இனி ஆதரிக்க முடியுமா முடியாதா வென்று' பத்திராசிரியர் மிஸ்டர் போலக் அவர்களைக் கேட்டார்கள். மிஸ்டர் போலக் அவர்கள் முடியாதெனக் கூறி விலகிக் கொண்டார். உடனே நார்மன்டன் என்னும் மாது ஆசிரியராக அமர்த்தப்பட்டார். அம்மாதுக்கு உதவி செய்ய கொஞ்சகாலம் வரை எஸ். வீ. கேல்கர் அவர்கள்



நியமிக்கப் பட்டார். பிரிட்டிஷ் கமிட்டியைச் சீர்திருத்தும் விஷயத்தில் லோகமான்யருக்கு டாக்டர் கிளார்க் என்பவர் மிக்க உதவி புரிந்தார். இவர் தொழிலாளர் தலைவர். பார்லிமெண்ட் மெம்பர். காங்கிரஸுக்கு மிக்க சகாயமாக யிருந்தவர். 1919-ம் வருடத்தில் பிரிட்டிஷ் காங்கிரஸ் கமிட்டி புதிய விதிகளை யுண்டாக்கிற்று. காங்கிரஸ் மகா சபையின் நோக்கத்திலும் கொள்கையிலும் சரிபட்டிருப்பவர்களே இனி பிரிட்டிஷ் காங்கிரஸ் கமிட்டியில் அங்கத்தினர்களாக யிருக்கலா மென்று தீர்மானிக்கப் பட்டது. இதற்கு டாக்டர் கிளார்க் அவர்கள் முக்கிய காரணஸ்தராக யிருந்தார். 1 வருடகாலம் இங்கிலாந்தில் ஸ்ரீ திலகர் பிரிட்டிஷ் கமிட்டியையும் இந்தியா பத்திரிகையையும் சீர்திருத்த முயன்று கடைசியில் வெற்றி யடைந்தார். ஸ்ரீ திலகர் தொழிலாளர் தலைவர்களுடன் கலந்து இந்தியா விஷயமாகப் பல ஏற்பாடுகள் செய்து வந்தார். பார்லிமெண்டில் இந்தியா கவர்ன்மெண்டு மசோதா கொண்டு வருகையில் அதற்குப் பல திருத்தப் பிரேரேபணைகள் கொண்டுவர தொழிலாளர் தலைவர்கள் ஸ்ரீ திலகருக்கு வாக்குறுதி செய்தனர். பெஸண்ட்டம்மை அவ்வண்ணம் செய்யக் கூடாதென. பல தொழிலாளர் தலைவர்களுக்குக் கூறி அவர்கள் மனதைக் கலைக்கப் பிரயத்தனஞ் செய்தும் முடியவில்லை. தொழிலாளர் தலைவர்கள் ஸ்ரீ திலகருக்கு உதவி செய்யவே நின்றனர். பஞ்சாப் மாகாணத்தில் நடந்த படுகொலை விஷயமாகக் காங்கிரஸ் தூதர்கள் பிரதானிகளிடம் சென்று ஒன்றுசேர்ந்து கிளர்ச்சி செய்யக் கேட்டும், அவர்கள் காங்கிரஸ் தூதர்களிடம் கிட்ட நெருங்கவே யில்லை. பிரிட்டிஷாருக்கு இந்தியா விஷயமாக ஸ்ரீ திலகர் பிரசங்கங்களாலும் அன்றி பிரசுரங்களாலும் பிரசாரஞ் செய்துவந்தார். ஸ்ரீ திலகர் அதிக பேச்சு வன்மை யுடையவரல்லவென்று இந்தியாவில் பலர் கூறின

தற்குப் பதிலாக, ஸ்ரீ திலகரின் பிரசங்கங்களை இங்கிலாந்தில் அதிசயமாகக் கொண்டாடப்பட்டன. ஸ்ரீ திலகர், பல பத்திரிகைகளுக்கு விஷயதானஞ் செய்துவந்தார். பத்திரிகைகளுக்குப் பணத்தைக் கொடுத்து இந்தியா விஷயமாகப் பெரிய எழுத்துக்களில் விளம்பரஞ் செய்ய ஸ்ரீ திலகர் ஏற்பாடு செய்தார். இங்கிலாந்தில் அச்சுக்கூடங்கள் சுதந்தரமுள்ளவை யென்றும் பத்திரிகைகள் சுயாதீனமுள்ளவையென்றும் கூறப்படினும் அவை யாவும் இந்தியாவின் விஷயத்தில் சுதந்தரமற்றவைகளாகவே யிருந்தன. இங்கிலாந்திலுள்ள சுதந்தரம் வெள்ளையர்களுக்கேயன்றி கறுப்பும் மங்கல வர்ணமுமுள்ள சாதியார்களுக்கு இல்லை. இங்கிலாந்து சுதந்தர நாடென்பது வீண் டம்பப்பேச்சு. ஸ்ரீ திலகர் இந்தியா விஷயமாகப் பிரசாரஞ் செய்ய பல பத்திரிகாலயங்கள் சென்றார்; பல அச்சுக்கூடங்களுக்குச் சென்று துண்டு பிரசுரங்களை அச்சிட்டுக் கொடுக்கும்படி கேட்டார். பல பத்திரிகைகள் காதிலே போட்டுக் கொள்ளவில்லை. இரண்டொரு பத்திரிகைகளும் அச்சுக்கூடங்களுமே இந்தியாவைப் பற்றி செய்ய முன்வந்தன. ஸ்ரீ திலகர் அவைகளைக்கொண்டு அவைகளின் ஆதரவால் பல துண்டு பிரசுரங்களை அச்சிட்டு வழங்கினார். 1918-ம் வருடத்திய பார்லிமெண்ட் தேர்தல்களில் ஸ்ரீ திலகர் இலட்சக்கணக்காக இந்தியாவின் விஷயத்தைப் பற்றி துண்டு பிரசுரங்களை வெகு அழகாய் அச்சிட்டு வழங்கினார். ஸ்ரீ திலகரின் 'சுயநிர்ணயம்' என்னும் பிரசுரம் பலருடைய மனதைக் கவர்ந்தது. லட்சக்கணக்காக அப்பிரசுரம் அச்சிட்டு இங்கிலாந்து முழுமையும் வழங்கினது மல்லாமல், பிரான்ஸு, அமெரிக்கா, இதாலி முதலிய பல தேசங்களிலும் வழங்கப்பட்டது. சமாதான கான்பிரன்ஸின் அக்கிராசனருக்கு ஸ்ரீ திலகர் அனுப்பிய மகஜரும் அச்சிடப்பட்டு விசேஷமாக வழங்கப்பட்டது. இவை



தவிர, பல இதர துண்டு பிரசுரங்களையும் இந்தியாவின் நிலைமையைப் பற்றி அச்சிட்டு இங்கிலாந்து தேசமெங்கும் வழங்கப்பட்டது. லண்டன்மா நகரிலுள்ள இந்தியன் சமாஜம் (London Indian Association) பிரிட்டன் - இந்தியா, (Britain and India) பேபியன் சங்கம், (Fabian Society) நாஷனல் லிபரல் கிளப் (National Liberal Club) ஆகிய இச் சங்கங்களின் ஆதரவில் லோகமான்யர் லண்டன் நகரில் பல பிரசங்கங்கள் செய்தார். தவிர, 'சுயநிர்ணயம்' என்னும் துண்டு பிரசுரம் ஒன்றை லட்சக் கணக்காக அச்சிட்டு வழங்கினார். தவிர, கவர்ன்மெண்டு மசோதாவின் குறைகளை எடுத்துக்கூறின யாதாஸ்து ஒன்றையும் அச்சிட்டு பிரிட்டிஷார் அறிய வழங்கினார். பஞ்சாப் படுகொலையைப் பற்றி மகாகவி ரவீந்திரநாத் டாகூர் இந்திய இராஜப்பிரதிநிதிக்கு எழுதிய கடிதத்தை அச்சிட்டு அவர் வழங்கினார், இந்தியாவில் தொழிலாளரின் நிலைமையைப்பற்றியும், பிரிட்டிஷ் காங்கிரஸ் கமிட்டியின் அறிக்கையைப்பற்றியும் ஆயிரக்கணக்கான துண்டு பிரசுரங்கள் அச்சிட்டு வழங்கினார். ஸ்ரீ திலகர் தம்முடைய வயதையும் கவனிக்காமல் ஜில்லா (கவுண்டி) ஜில்லாவாகப் பிரயாணஞ்செய்து பிரசாரஞ் செய்து வந்தார். இந்தியாவுக்குச் சீர்திருத்தங் கொடுக்கும் விஷயமாகத் தயாரித்த 'இந்தியா கவர்ன்மெண்டு மசோதா'வைப் பற்றி விசாரிக்க ஜனசபை (House of Commons) பிரபு சபை (House of Lords) ஆகிய இவ்விரு சபையும் சேர்ந்து ஏற்படுத்தின ஒரு விசாரணை கமிட்டிக்கு முன்பாக ஸ்ரீ திலகர் 1919-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 6-ந் தேதி இந்திய சுய ஆட்சிச் சங்கத்தின் ஆதரவில் வாக்குமூலங் கொடுத்தார். அவ்விசாரணை கமிட்டிக்கு அக்கிராசனம் வகித்தவர் செல்பர்ன் பிரபு. பிரபு வம்சத்தைச் சேர்ந்தவர்களிற் பலருக்கு ஸ்ரீ திலகரிடத்தில் அருவெறுப்பு

இருந்தது. தவிர, பிரபு சபையைச் சேர்ந்த பலர் ஸைடன்ஹாம் பிரபுவை ஆதரிப்பவர்களாதலால், ஸ்ரீ திலகரின் மீது அவர்களுக்கு அருவெறுப்பு மிக்க இருந்தது. ஸ்ரீ திலகரின் வாக்கு மூலம் முடிந்ததும் விசாரணை கமிட்டியைச் சேர்ந்த பல அங்கத்தினர்கள் அக்கிராசனர் உள்பட ஸ்ரீ திலகரைப் பல கேள்விகள் கேட்பார்களென்றும், அக்கேள்விகளுக்கு ஸ்ரீ திலகர் விடையளிப்பது அழகாக விருக்கும் என்று பலர் அன்று வந்தனர். ஆனால், கமிட்டியார் ஸ்ரீ திலகரின் மீது கொண்ட அசூயையினால் முதன் முதலிலேயே ஸ்ரீ திலகரைக் கமிட்டியில் வாக்குமூலங் கொடுக்கச் சொல்ல வேண்டுவது அவசியமா வென்று கேட்டவர்களாதலால், ஸ்ரீ திலகரை வாக்குமூலங் கொடுக்காமற்படி செய்தால் பெருத்த கிளர்ச்சி இங்கிலாந்திலேயே யுண்டாகும் என்று பயந்து அவருடைய வாக்குமூலத்தைப் பெற்றார்கள். வாக்குமூலம் முடிந்தபிறகு கேள்வி கேட்பார்களென்றே ஸ்ரீ திலகரும் எதிர்பார்த்த வண்ணம் இருந்தார். ஸ்ரீ திலகரைக் கேள்வி கேட்பதனால் எங்கே தங்கள் நிலைமை தடுமாறுமோ வென்ற ஐயங் கொண்டு அவர்கள் கேள்வி யொன்றையும் கேட்க இஷ்டப்படவில்லை. ஸெல்பார்ன் பிரபு, வெகு தந்திரமாக ஸ்ரீ திலகருடைய வாக்குமூலத்திற்கு மேல் அவரைக் கேள்வி கேட்க கமிட்டியார் இஷ்டப்படவில்லை யென்று சொல்லிவிட்டார். ஸ்ரீ திலகரைக் கேள்வி கேட்காமற்படி கமிட்டியார் அங்ஙனம் செய்ததைப் பற்றி பலர் இங்கிலாந்தில் ஸெல்பார்ன் முதலானோர்களை வெறுத்தனர். ஸ்ரீ திலகர் இங்கிலாந்தில் கிளர்ச்சி செய்து வருகையில் அமெரிக்காவிலும் கிளர்ச்சியுண்டாக்கக் கருதித் தம் நண்பர் லாலா லஜபதிராய் அவர்களுக்குத் தெரிவித்தார். லாலாவுக்குப் பணம் அனுப்பிப் பலமான கிளர்ச்சி அமெரிக்காவில் செய்ய ஸ்ரீ திலகர் ஏற்பாடு செய்தார். பிரான்ஸ் தேசத்திலும் அவ்வண்ணமே கிளர்ச்சி



செய்யத் தக்க ஏற்பாடுகளை ஸ்ரீ திலகர் செய்தார். இங்கிலாந்தில் கூட்டு பார்லிமெண்ட் கமிட்டியின் விசாரணை முடிந்தது. இந்திய கவர்ன்மெண்டு மசோதா சட்டமாக பார்லிமெண்ட் சபைக்கு வருமுன்னர், ஸ்ரீ திலகர் இந்தியாவில் பலமாகக் கிளர்ச்சி யொன்றை நடத்த இங்கிலாந்து தேசத்தை விட்டு 1919-ம் வருடம் அக்டோபர் மாதம் 30-ந் தேதி புறப்பட்டு நவம்பர் மாதம் 27-ந் தேதி பம்பாயிக்கு சுக சரீரயாய் வந்து சேர்ந்தார். இங்கிலாந்துக்குப் போனதால் ஸ்ரீ திலகர் இந்தியா விஷயமாக வெளிநாடுகளின் பிரசாரத்தின் ஆவசியத்தையும் பயனையும் கண்டறிந்தார். இங்கிலாந்திலுள்ள பல இராஜீய புரட்சிக்காரர்களையும், ஐயர்லாந்து ஸின்பின் கட்சிக்காரர்களையும், குடியாக கட்சிக்காரர்களையும், சமுதாய சமுத்துவ கட்சியினர்களையும், தொழிற் கட்சியாளர்களையும் முறையே ஸ்ரீ திலகர் கண்டு அவர்களுடன் அளவளாவி வந்தார். நிற்க, ஸ்ரீ திலகருடைய வியாச்சியம் ஒன்று விசாரணைக்கு வந்தது. ஸர் வேலன்டைன் சிரால் என்பவர் எழுதிய 'இந்திய அமைதியின்மை' என்னும் புத்தகத்தில் ஸ்ரீ திலகரைப் பற்றி திரித்திருப்பதினால், ஸ்ரீ திலகர் அப்புத்தகத்தை எழுதினவர் மீதும், அப்புத்தகத்தை பிரசுரித்த மாக்மிலன் கம்பெனியார் மீதும் மான நஷ்ட பிராது கொடுத்திருந்தார். 1910-ம் வருடத்தில் இந்தியாவில் இராஜீய உணர்ச்சியில்லாமல் ஒரு அமைதி ஏற்பட்டிருந்ததைக் கண்ட பலர் இந்தியாவின் உண்மையை யறிய அவா கொண்டிருந்தனர். அங்ஙனம் அவா கொண்டிருப்பதை யறிந்த லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகை இந்தியாவின் நிலைமையை உள்ளபடி அறிய விரும்பி ஸர் வாலன்டைன் சிரால் என்பவரை இந்தியாவுக்கு அனுப்பி அக்காட்டின் நிலைமையை யறிந்து வரக் கேட்டுக் கொண்டார்கள். ஸர் வாலன்டையன் சிரால் அவ்வண்ணமே

இந்தியாவுக்கு வந்தார். ஒவ்வொரு மாகாணங்களுக்குஞ் சென்று இரகசியப் போலீசாரால் அப்போதைக்கப்போது கவர்ன்மெண்டுக்கு அனுப்பப்படும் ரிபோர்ட்டுகளையெல்லாம் அவர் கண்டார். பம்பாய் மாகாணத்தில் பல வருடங்களாக விபரீதமாக இரகசியப் போலீஸார் பம்பாய் கவர்ன்மெண்டுக்கு ஸ்ரீ திலகர் விஷயமாக அனுப்பி வந்த பல ரிபோர்ட்டுகளையெல்லாம் அவர் பார்த்தும், ஸ்ரீ திலகருக்கு விரோதமாகவுள்ள பல மிதவாதிகளைக் கண்டு பேசியும் வந்தார். இந்தியாவில், இராஜீயத் துறையில் பாடுபடுபவர்களைப்பற்றி இரகசிய போலீஸார் இரகசியமான பல விஷயங்களைக் கற்பனைசெய்து கவர்ன்மெண்டுக்கு அனுப்புவதைப் பற்றிக் கண்டிக்காதவர்களொருவருமில்லை. என்றாலும், இரகசிய போலீஸார் சிறிதுந் திருந்தாமல் அம்மாதிரியாகவே இன்னும் நடந்து வருகின்றனர். காலஞ்சென்ற கோபால கிருஷ்ண கோகலே யவர்கள் ஒருநாள் பம்பாய் மாகாண கவர்ன்மெண்டின் பிரதான அங்கத்தினரொருவருடன் பேசிக்கொண்டிருக்கையில், அவர், கோகலேயை வினவி, "என்ன! நீங்கள் இராஜநிந்தனை பிரசங்கஞ்செய்து வருகின்றீர்கள்?" என்று கேட்டார். அதற்கு கோகலே, "நான் இராஜநிந்தனைப் பிரசங்கஞ் செய்யவேயில்லை" என்று விடையளித்தார். உடனே, அவ்வதிகாரி தமக்கு இரகசியப் போலீஸார் அனுப்பின ரிபோர்ட்டை கோகலேயிடம் காண்பித்து, அந்த ரிபோர்ட்டின் விபரீதத்தையும் அபத்தங்களையுங் கண்டு அவ்விருவரும் சிரித்தார்கள். இத்தகைய பாக்கியம் கோகலே பெற்றதுபோல ஸ்ரீ திலகர் முதலானோர் பெறுவதற்குச் சாத்தியமில்லாததால், ஸ்ரீ திலகர் மீது இரகசிய போலீஸார் அனுப்பும் ரிபோர்ட்டுகளைக் கண்டித்துக் கூறுஞ் சந்தர்ப்பமில்லாமற் போயிற்று. இந்த ரிபோர்ட்டுகளைக் கொண்டே ஸர் வாலன்டையன் சிரோல் ஸ்ரீ திலகர்மீது



நிந்தனை செய்துள்ளார். ஸர் வாலன்டையன் சிரோல் எழுதிய புத்தகத்தில் தம்மீது அபாண்டமாகப் பழி சுமத்தினதை மாற்ற ஸ்ரீ திலகர் இங்கிலாந்திலுள்ள சில பிரபல வக்கீல்களையும் இந்தியாவிலுள்ள சில பிரபல வக்கீல்களையும் கேட்டுப் பிறகு ஸர் வாலன்டையன் சிரோல்மீது வழக்குத் தொடுத்தார். அவ்வழக்கு தொடுத்ததும் ஸர் வாலன்டையன் சிரோல் இந்தியாவுக்கு வந்து தன்மீது வந்த வழக்குக்குச் சாதகமாகப் பல சாட்சியங்களைத் திரட்டினார். அவ்வளவும் அவர் திரட்டுவதற்குப் பல மாகாண அரசாங்கத்தைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் சாதகமாக யிருந்தார்களென்றும், பம்பாய் கவர்ன்மெண்டு உயர்தர அதிகாரிகள் சிரோல் அவர்களுக்குப் பேருதவி தந்தனரென்றும் பல பத்திரிகைகள் வெளியிட்டன. மான நஷ்டத்திற்குத் தொகையொன்றைக் கொடுக்கவும், அப்புத்தகம் மீண்டும் பிரசுரமாகாதபடி தடுக்கவும் ஸ்ரீ திலகர் சிரோல்மீது வாதுகொண்டு வந்தார். பல பூர்வாங்கமான நடவடிக்கைகள் நடந்த பிறகு கடைசியாக அவ்வழக்கு 1919-ம் வருடம் ஜனவரி மாதம் 29-ந் தேதி லண்டனில் ஜீஸ்டிஸ் டார்லிங் அவர்கள் முன்பாக வந்தது. ஸ்ரீ திலகர் பக்கம் ஸர் ஜான் ஸைமன் கே. ஸி. அவர்களும் மிஸ்டர் ஈ. எப். ஸ்பென்ஸ் அவர்களும் ஆஜரானார்கள். சிரோல் பக்கமாகவும், மாக்மிலன் கம்பெனி பக்கமாகவும் ஸர் எட்வர்ட் கார்ஸன் ஆஜரானார். ஸர் வாலன்டையன் சிரோல் தம்மை ஆறுவித வழியில் நிந்தனை செய்துள்ளார் என்று ஸ்ரீ திலகர் பிராதுசெய்தார். மகாராஷ்டிரத்தில் முகம்மதியர்களுக்கு விரோதமாக கோரக்ஷண சபைகளை ஸ்தாபித்து அவர்களுடைய கோபத்தை மூட்டி வைத்தாரென்றும், பலாத்காரத்தை உபயோகிப்பதற்காக மகாராஷ்டிரத்திலுள்ள பல இடங்களில் குஸ்தி கொட்டடிகளை ஸ்தாபித்து யுவர்களுக்கு இராணுவப் பயிற்சி யுண்டாக்க

வைத்தாரென்றும், அந்தஜையப் பவர்களைக் கொண்டு கொள்ளையடிக்க வைத்து ஸ்வராஜ்ய சித்திக்குப் பணஞ் சேகரிக்க ஏற்பாடு செய்தாரென்றும் தாய் மகாராஜ் வியாஜ்ஜிய விஷயமாகத் தம்மை உண்மைக்கு மாறுபாடாகக் குறை கூறினாரென்றும், ராண்ட், ஐயர்ஸ்ட், ஜாக்ஸன் இவர்களுடைய கொலையைப் பற்றி ஸ்ரீ திலகர் அறிந்திருப்பாரென்றுமாகப் பலவித அபாண்டமான பழிகளைச் சுமத்தினதென்று ஸ்ரீ திலகர் பிராது செய்தார். விசாரணை தொடங்கிற்று. ஸர் ஜான் ஸைமன் முதல் முதல் விசாரணைக்கு வந்திருக்கும் வழக்கைப்பற்றி ஏழுமணி நேரம் பேசினார். பிறகு ஸ்ரீ திலகர் சாட்சியாக விசாரிக்கப்பட்டார். ஸ்ரீ திலகருடைய வக்கீல் மிஸ்டர் ஸ்பென்ஸ் விசாரித்தார். அவர் விசாரணை முடிந்தவுடன், ஸர் எட்வர்ட் கார்ஸன் ஸ்ரீ திலகரை குறுக்கு விசாரணை செய்தார். ஸ்ரீ திலகரின் மீது ஸர் எட்வர்ட் கார்ஸனுக்கு ஏதோ கோபமிருந்தது. அதனாலேயாயினும் நீதிமன்றத்தில் வெகு அதிகாரமாக நடந்துகொண்டார். ஸ்ரீ திலகருடைய தற்கால வழக்குக்குச் சம்பந்தமில்லாத பல விஷயங்களை அவர் விசாரித்து வீணில் நீதிபதியின் மனதையும் ஜூரிகளின் மனதையும் கலைத்தார். ஸர் எட்வர்ட் கார்ஸன் ஸ்ரீ திலகரைப் பின்வருமாறு குறுக்கு விசாரணை செய்தார்.

வினா.—நீங்கள் கடைசியாக ஜெயிலிலிருந்தும் வெளிவந்தது எப்பொழுது?

விடை.—1914-ம் வருடம் ஜூன் மாதம்.

வினா.—உம்முடைய கட்சியை விளக்கிக்காட்ட இந்தியாவில் நீர் ஏதாகிலும் வழக்குத் தொடுத்தீரா?

விடை.—இல்லை.

வினா.—உம்முடைய கட்சியை விளக்கிக்காட்ட இவ்வளவுதூரம் பிரயாணமாகி இங்கிலாந்துக்கு வருவானேன்?



விடை.—ஏனெனில், அவர் எழுதிய புத்தகம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யமெங்கும் படிக்கப்பட்டுவருவதால், இங்கிலாந்திலுள்ள நீதிமன்றத்தில் தீர்ப்பு உண்டானால், அது எனக்கு ரொம்ப பலமாகவும் சாதகமாகவுமிருப்பதுடன் புத்தகங்கள் விற்கப்படுவதையும் தடுக்கலாம் என்பதைக்கொண்டே.

வினா.—நீங்கள் 6-வருடம் தீவாந்தர சிட்சை விதிக்கப்பட்டிருந்ததை அறிவீரா?

விடை.—ஆம்.

வினா.—நீதிபதி தீர்ப்பு சொல்லுங்காலத்தில் சொன்ன வார்த்தைகள் உமக்கு ஞாபகமிருக்கிறதா?

விடை.—ஆம்.

(ஸர் எட்வர்ட் கார்ஸன் நீதிபதி தேவாரின் தீர்ப்பிலுள்ள சில வார்த்தைகளைப் படித்து நீதிபதி டார்லிங் அவர்களுக்குக் காட்டினார்)

வினா.—நீதிபதி அங்ஙனம் சொன்னாரா?

விடை.—ஆம்.

வினா.—அதன்பொருட்டா நீங்கள் இந்தியாவில் உம்முடைய கட்சியை விளக்கிக்காட்ட வழக்கு தொடுக்காததற்குக் காரணம்.

விடை.—இல்லை.

வினா.—அந்த நீதிபதி சொன்னதைவிட ஸர் வாலன்டைன் சிரால் அவர்கள் எழுதிய புத்தகத்தில் ஏதேனும் அதிக கடுமையாக இருக்கிறதா?

விடை.—என்னை கொலைக்குச் சம்பந்தப்படுத்திக் கூறினதே என்பிராது. [பிறகு ஸர் எட்வர்ட் கார்ஸன் சில வாக்கியங்களைப் படிக்கும்படி ஸ்ரீ திலகரிடம் கொடுத்தார்.] ஸ்ரீ திலகர் அவைகளைப் படித்துப் பிறகு பின்வருமாறு கூறினார். 1909-ம் வருடத்தில் நாஸிக் நகரில் மிஸ்டர்

ஜாக்ஸன் துரையைக் கொன்றவர்களில் ஒருவன் ஒரு புத்தகத்தைப் படித்ததினால் அங்ஙனம் செய்ய நேர்ந்த தெனத் தெரிவித்துள்ளான். அப்புத்தகம் கேஸரி பத்திரிகையில் மதிப்புரை செய்யப்பட்டதே. ஆனால் அப் புத்தகத்திற்கு நான் மதிப்புரை எழுதவில்லை. அப் புத்தகம் *மாஜினியின் ஜீவிய சரித்திரம் எனக்காக அர்ப்பணஞ் செய்யப்பட்டுள்ளது. பலர் என்னுடைய உத்தரவின்றியே புத்தகங்களை அர்ப்பணஞ் செய்கின்றனர்.

—அக்கொலையாளி அப்புத்தகத்தைப் படித்ததினாலேயே தன் மனது கொலைசெய்யத் துணிந்ததெனக் கூறியுள்ளதை நீங்கள் பார்த்திர்களல்லவா ?

விடை.—அவன் அங்ஙனம் சொல்லி யிருக்கக்கூடும்.

வினா.—அவன் கொலை செய்தான் என்று நினைக்கிறீர்களா ?

விடை.—அவன் கொலை செய்தானென்று கேள்விப்படுகிறேன். எனக்குத் தெரியாது. நான் சிறையிலிருந்தேன்.

வினா.—நீங்கள் அதைக் கொலை யென்று எண்ணுகின்றீர்களா ?

விடை.—நிச்சயமாக நான் அதைக் கொலை யென்றே சொல்வேன்.

வினா.—சட்டத்தை எதிர்ப்பதை நீங்கள் அங்கீகரிக்கவில்லையா ?

விடை.—ஒருசட்டம் உங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால், அச்சட்டத்தை மாற்றக்கருதி சட்ட எதிர்ப்பு செய்ய வேண்டும். அங்ஙனம் எதிர்ப்பதற்குத் தண்டனையுண்டு. அதையே சட்டங்களின் சாத்விக எதிர்ப்பு என்பார்.

---

* மாஜினியின் ஜீவியசரிதம் ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி சர்மா எழுதியது.



வினா.—பிறகு ஸர் எட்வர்ட் கார்ஸன் கேஸரிபத்திரிகையின் சில வியாசங்களைப் படித்து அரசாங்கத்தை எதிர்ப்பதை அங்கீகரித்தது உண்மைதானேயென்று கேட்டார்.

விடை.—இல்லை. அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குக் கீழ்ப்படியாம லிருந்தது. அவ்விரண்டுக்கும் (அரசாங்கத்தை எதிர்ப்பதற்கும் அரசாங்க உத்தியோகஸ்தர்களை எதிர்ப்பதற்கும் அல்லது கீழ்ப்படியாம லிருப்பதற்கும்) வித்தியாச முண்டென்பதை நான் தெரிவிக்கிறேன்.

வினா.—அரசாங்கம் உத்தியோகஸ்தர்களைக் கொண்டிருப்பதல்லவா ?

விடை.—ஒருவீடு அறைகளைக் கொண்டிருக்கிறது. ஆனால் ஒரு அறை வீடாகமாட்டாது (சிரிப்பு)

வினா.—கல்கத்தாவில் இரண்டு ஸ்திரீகளும் வண்டியோட்டுபவனும் கொல்லப்பட்டது, மிஸ்டர் கிங்ஸ் போர்ட்டைக் கொல்வதற்காக வன்றோ எத்தனித்தது.

விடை.—ஆம். அப்படியேதான்.

[ஸர் எட்வர்ட் கார்ஸன் கேஸரிபத்திரிகையிலிருந்து சில மொழிகளைப் படித்து திலகருடைய பத்திரிகை அவ்வித கொலையை யுண்டாக்கத்தக்க விதம் எழுதியுள்ளதென்றார்.]

விடை.—அப்படி ஒருநாளுமில்லை. என்னுடைய பத்திரிகை மகாராஷ்டிர பாஷையில் பிரசுரமாவதால், அது கல்கத்தாவாசிகளுக்கு ஓர் அட்சரம்கூடத் தெரியாது.

மீண்டும் ஸர் எட்வர்ட் கார்ஸன் அரசாங்க பரிபாலன முறையை மாற்றுவதற்கு வெடி குண்டு பிரயோகம் அவசிய மென்பதையும் அப் பத்திரிகை பாதரிக்கிறதெனக் கூறினதை ஸ்ரீ திலகர் முற்றிலும் தவறு என்று கண்டித்துக் [illegible]னார்.

வினா:—மிஸ்டர் ராண்ட் அவர்களின் மரணத்திற்கு உங்கள் பத்திரிகையே காரணமென டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகை கூறிற்றல்லவா?

விடை.—ஆம்.

வினா.—ஏன் அப் பத்திரிகைமீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை?

விடை.—அதற்காகவே நான் பம்பாய் சென்றது. அதற்குள்ளே நான் சிறைபடுத்தப் பட்டேன். ஆதலால் நான் ஒன்றும் செய்ய முடியவில்லை.

வினா.—நீங்கள் சிறையினின்றும் வெளிவந்தவுடன் ஏன் நடவடிக்கை எடுத்துக்கொள்ளக் கூடாது?

விடை.—அப்படியே செய்தேன். அப் பத்திரிகை என்னிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டது.

பிறகு வங்காளத்தில் உண்டான வெடிகுண்டு விஷயமாகப் பல கேள்விகள் கேட்கப்பட்டன; அக் கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் ஸ்ரீ திலகர் விடையளித்தே வந்தார். பிறகு நீதிபதி பின் வருமாறு வினாக்களைக் கேட்டார்.

வினா.—ஸ்வராஜ்ய அரசாங்கத்தில் துன்பப்படுபவர்கள் இருந்தால், அவர்கள் வெடிகுண்டு பிரயோகஞ் செய்தல் நியாயமாகுமா?

விடை.—வெடிகுண்டு எறிதல் எவனுக்கும் தர்மமல்ல.

வினா.—புனாவில் உண்டான பிளேக் சமயத்தில், மிஸ்டர் ராண்டு அவர்களின் கொடுங்கோன்மையே கொலைக்குக் காரணமென்பது உம்முடைய அபிப்பிராயமா?

விடை.—பிளேக் வியாதியை நிவர்த்திக்கச் செய்த முறைகளும் அவைகளின் முரட்டுத்தனமுமே கொலைக்குக் காரணம்.

வினா.—வீடுகளைப் பரிசோதித்ததில் யுத்த வீரர்கள் மி



கொடுமை செய்தார்களென்று உம்முடைய பத்திரிகையில் நீங்கள் எழுதினதுண்டா?

விடை.—ஆம். உண்டு.

வினா.—அவர்கள் கோயில்களிலே புகுந்தும், வீடுகளிலிருந்து ஸ்திரீகளை வெளியிலே இழுத்தும், விக்கிரகங்களை யுடைத்தும், மத கிரந்தங்களைக் கொளுத்தியும் வந்தனரென்று நீங்கள் சொன்னதுண்டா?

விடை.—அவ்வுண்மைகளை நான் கூறினதுண்டு—அவைகள் உண்மையானவைகள்.

வினா.—மிஸ்டர் ராண்ட் மிக்க குரூரமானவனென்பது உமது அபிப்பிராயமா?

விடை.—அவருடைய செயல்கள் குரூரத்தன்மை யுள்ளவைகளாயிருந்தன வென்று நான் கூறினேன்.

வினா.—அவர் பயங்கரமான குரூரங்களைச் செய்தாரென்று நீங்கள் கூறினீர்களா?

விடை.—ஆம்.

வினா.—அப்படி கூறி வந்தும், உங்கள் வியாசங்களால் அக் கொலைக்கு ஒருவித சம்பந்தமுமில்லை யென்கிறீர்களா?

விடை.—நடந்தவைகளினால் கொலை யுண்டாயிற்றேயன்றி, என்னுடைய வியாசங்களின் தத்துவங்களாலல்ல.

வினா.—சிவாஜி செய்தவைகளில் முக்கியமானதென்ன?

விடை.—அவர் ஹிந்து சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தார்.

வினா.—அப்ஸல்கானை வதை செய்து ஸ்தாபித்தாரா?

விடை. அது அவர் செய்த காரியங்களில் ஒன்று.

வினா.—அவர் வதை செய்யாமலே ராஜ்யத்தை ஸ்தாபித்திருக்கக்கூடு மல்லவா?

விடை.—நான் எங்ஙனம் அதைக் கூறமுடியும்? இங்கிலாந்தில் கிராம்வெல் உற்சவம் நடந்ததென்றால் இங்கி

லாந்தியுள்ள அரசர்களைக் கொல்வதென்பது அர்த்த மல்ல.

பிறகு, ஸர் எட்வர்ட் கார்ஸன் 1897-ம் வருடத்தில் புனா நகரில் உண்டான சிவாஜி உற்சவத்தில் ஸ்ரீ திலகர் பேசின பிரசங்கத்திலிருந்தும் சில மொழிகளை யெடுத்து நீதிபதிக்குப் படித்துக் காட்டிய பிறகு, ஸ்ரீ திலகரைப் பார்த்து,

வினா.—சாமானிய நடத்தைகளுக்குப் பெரிய மனிதர்கள் அதீதமானவர்களென்று கூறினதற்கு அர்த்தமென்ன?

விடை.—சர்வ சாதாரணமாகச் சாமானிய ஜனங்களின் நடத்தையை உயர்ந்த மகான்களுக்கு ஒப்பிடலாகா தென்பதே.

வினா:—அத்தகைய கொள்கையை கொலைக்கு உபயோகப் படுத்தலாமா?

விடை.—முடியாது. ஏனெனில் உலகத்தை யாளவேண்டு மென்னும் பேராசை அவருக்கு இருந்தது.

அது முற்றிலும் பிசகு.

வினா.—சிவாஜியால் கூறப்பட்ட ஒரு ஸ்ரீ முகம் என்று ஓர் வியாசத்தை வெளியிட்டதில் அதில் பவானி பட்டாக் கத்தியின் அடையாளம் இருப்பதற்குக் காரண மென்ன?

விடை.—* சிவாஜிக்குப் படிக்கத் தெரியாதாகையால், அவர் தன்னுடைய குறியைப் பட்டாக்கத்தியின் அடையாளமாக வைத்தார் போலும்.

---

* சிவாஜி மகாராஜாவுக்கு எழுதப்படிக்கத் தெரியாதென்று சில சரித்திரக்காரர்கள் கூறியுள்ளார். சமீபத்திலுண்டான ஆராய்ச் சியினால் சிவாஜிமகாராஜா ஒளரங்கசீப்புக்கும், சமர்த்த ராமதாஸ் அவர்களுக்கும் தாமே கடிதமெழுதி யுள்ளாரென்னத் தெரிய லாயிற்று.



நீதிபதி:—அது அவருடைய வர்த்தகக் குறிபோலக் காணப் படுகிறது. [ஸர் எட்வர்ட் கார்ஸன் கேட்ட கேள்வி யொன்றுக்கு ஸ்ரீ திலகர் பிள்ளைகளுக்கு சுதேசியம் கற்பிக்க வேண்டுமென்றார்.]

வினா.—பிள்ளைகள் சகலவற்றையும் கொளுத்தவேண்டு மென்று நீங்கள் அங்கீகரித்ததுண்டா?

விடை.—அன்னிய வஸ்துக்களைத் தீவைத்துக் கொளுத்தப் பட்டது. அதுகாலை பிள்ளைகளைப் பார்த்து ஏதாவது தியாகஞ்செய்து சபதம் எடுத்துக்கொள்ளுங்கள் என் றேன்.

வினா.—இது பிரிட்டிஷ் விரோதத்தைக் காண்பிக்க அடை யாளமா?

விடை.—இல்லை.

நீதிபதி.—சாமான்கள் கொளுத்தப் பட்டனவா?

விடை.—ஆம்.

நீதிபதி.—உங்களுடைய தேசத்தில் செய்யக்கூடிய சாமான் களுமாகவா?

விடை.—எங்கள் நாட்டில் அதிகமான சாமான்கள் செய்யப் படுகின்றன.

நீதிபதி.—சுதேச கைத்தொழில்களை விர்த்தி செய்வதற் காகவே இப்படி நீங்கள் செய்வது?

விடை.—ஆம். சுதேச கைத்தொழில்களின் பாதுகாப்புக் காகவே.

நீதிபதி.—அதில் ஏதாகிலும் இராஜீய சம்பந்தமுண்டா!

விடை.—1905-ம் வருடம் வரை யொன்றுமில்லை.

வினா.—ஏன்? அது பிறகு இராஜீயமாகச் செய்யப்பட்டது.

விடை.—பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரின் உணர்ச்சியை எழுப்புவதற்காகவே. பிறகு, ஸர் எட்வர்ட் கார்ஸன், சுதேசி கல்வியைப்பற்றி கேள்விகளைக் கேட்டார்.

விடை.—1910-ம் வருடம் ஜூன்மாதம் 14-ந் தேதி கவர்னர் ஜாக்ஸன் அவர்கள் மகாராஷ்டிரத்திலுள்ள ஓர் கலாசாலையைச் சட்ட விரோதமான (கலகத்திற் குரிய தான) சங்கமென உத்திரவு செய்தார்.

வினா.—அக்கலாசாலை உங்களுடைய சிநேகிதர் ஒருவரால் நடத்தப்பட்டதில்லையா?

விடை.—எனக்குத் தெரிந்தவர் ஒருவரால்.

வினா.—அவர் பிறகு தண்டிக்கப்பட்டாரல்லவா?

விடை.—ஆம், இராஜ நிந்தனைக்காக.

வினா.—அவர் இன்னமும் உம்முடைய மித்திரர்தானா?

விடை.—அவர் இன்னமும் எனக்கு அறிந்தவரே.

வினா.—உம்முடைய சிநேகிதர்களில் அநேகர் தண்டிக்கப்பட்டவர்கள் போலக் காணப்படுகிறது.

விடை.—இல்லை. இன்னும் சிலர் தண்டனை யடையாமலிருக்கின்றனர். ஸர் எட்வர்ட் கார்ஸன், பிறகு சில நபர்களின் பெயர்களைக் கூறி அவர்களெல்லாம் உம்முடைய சிநேகிதர்களன்றோ?

விடை.—சிலர் சிநேகிதர்கள். சிலர் அறிந்தவர்கள்.

மீண்டும் ஸர் எட்வர்ட் கார்ஸன் ஒரு நபரின் பெயரைக் குறித்து அவர் இன்னமும் உம்முடைய ஆபிஸில் வேலை பார்த்து வருகின்றாரல்லவா?

விடை.—ஆம். அவர் என்னிடம் வேலைபார்த்திருந்தார். அவர் இப்பொழுது இன்னமும் இருக்கிறாரென்பது நான் அறியேன். நான் இங்கு இருக்கின்றேன்.

வினா.—அவரைக் கூற அவமானப் படாதீர்கள்.

விடை.—நான் அவரைப் பற்றிக்கூற அவமானப் படவில்லை. தண்டனை யடைந்தவர்கள் பார்லிமெண்ட் மகா சபையில் மீண்டும் ஸ்தானம் பெற்று உட்காருங்காலில் எனக்கு அவமானம் என்ன? (சிரிப்பு)



பிறகு, சாட்சி விசாரணை முடிந்ததும் ஸர் எட்வர்ட் கார்ஸன் மாக்மிலன் கம்பெனியாருக்கும் ஸர் வாலன்டையன் சிரால் அவர்களுக்கும் பலமாக வாதாடி ஸ்ரீ திலகரை மரியாதையின்றி இகழ்ச்சியாகக் கூறினார். அவர் பிரசங்கம் முடிந்ததும் ஸர் ஜான் ஸைமன் அவர்கள் வெகு அழகாகப் பேசினார். இருதிறத்து வக்கீல்மார்களும் பேசி முடிந்தபின்னர், 1919-ம் வருடம் பிப்ரவரிமாதம் மாலை 5. 50-க்கு ஜூரிகள் ஆலோசிக்கத் தங்கள் அறைக்குச் சென்று பிறகு 25 நிமிடங்கள் கழிந்தபிறகு சிரால் அவர்களுக்குச் சார்பாகத் தங்கள் அபிப்பிராயங்களைக் கொடுத்தார்கள். நீதிபதியும் அவ்வண்ணமே ஜூரிகளின் அபிப்பிராயங்களைக் கொண்டு ஸ்ரீ திலகருக்கு விரோதமாகத் தீர்ப்புசெய்து, வியாச்சிய செலவையும் சிரால் அவர்களுக்குக் கொடுக்கும்படியும் தீர்ப்புசெய்தார். பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு விரோதியெனப் பல தடவைகளில் அரசாங்கத்தார் பறைசாற்றித் தண்டித்தும், ஸ்ரீ திலகர் பிரிட்டிஷ் நீதியில் நம்பிக்கை வைத்திருந்தார். ஆனால், அவருடைய நம்பிக்கையை பிரிட்டிஷ் நீதிபதிகள் கெடுத்தது அவருடைய பிற்கால சந்ததியார்களுக்கும் தற்காலத் தலைவர்களுக்கும் ஒரு சிறந்த பாடமாக ஆயிற்று. ஸ்ரீ திலகர்மீது வீண்பழி சுமத்தினதை அரசாங்கத்தார் கண்டறிந்தும், சிரால் அவர்களெழுதிய புத்தகம் உண்மைக்கு மாறுபாடென்றறிந்தும், சிரால் எழுதிய புத்தகத்தையும் அவரையும் ஆதரிக்காமற் போனால், பிரிட்டிஷ் நீதிக்கும் பிரிட்டிஷ் பரிபாலன முறைக்கும் ஓர் அபகீர்த்தி யுண்டாகுமென்று கருதியே, பிரிட்டிஷ் அரசாங்கத்தார், சிரால் வியாச்சியமே தங்களுடைய வியாச்சிய மென்றும் சிரால் வெற்றியடைந்தால் அது தங்களுடைய வெற்றியே யென்றும், சிரால் தோல்வியடைந்தால், அது தங்களுடைய இழிவான தோல்வி

யென்றும் அறிந்தே பிரிட்டிஷ் நீதி மன்றத்திலும் ஸ்ரீ திலகருக்கு விரோதமாகத் தீர்ப்பு செய்யப்பட்டது. ஸ்ரீ திலகர் வெற்றி யடைந்தால், இந்தியாவிலுள்ள வைஸிராய் முதல் சாமானிய உத்தியோகஸ்தர்கள் வரை அவமான மடைய நேரிடும் என்று அறிந்தே நீதிபதி டார்லிங் அவர்கள் பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தின் கௌரவத்தைக் காப்பாற்ற ஸ்ரீ திலகருக்கு விரோதமாகத் தீர்ப்புசெய்தார். ஸ்ரீ திலகர் சிரால்மீது வியாச்சியந் தொடுத்தது அவிவேகத் தனமென்று சிலரும், பிரிட்டிஷ் நியாயந் தெரிந்தும் அவர் அவ்வண்ணம் வியாச்சியந் தொடுத்திருக்கக் கூடாதென்று சிலரும், ஸ்ரீ திலகருடைய வாழ்நாளில் இது ஒரு பெரிய தவறு என்றும் பலவிதமாகக் கூறினர். வழக்குத் தோல்வியுற்றதும் பலர் பலவிதமாகப் பேசுவது இயற்கையே. ஸ்ரீ திலகர் கடைசி வரையில் பிரிட்டிஷ் நீதியின் யோக்கியதையை உலகத்தாருக்கறிவிக்கப் பாடுபட்டார். பிரிட்டிஷ் நீதியின் நிலைமையும் உலகத்தாருக்கு நன்கு தெரிந்தது. பிரிட்டிஷ் நீதிமன்றங்களில் இந்திய னொருவனுக்கு நீதி கிடைக்காதென்பதை உறுதிப்படுத்த ஸ்ரீ திலகரின் வழக்குத் தக்க உதாரணமாக ஆயிற்று. ஆதலாற்றான், மகாத்மா காந்தியும் ஒத்துழையாமை இயக்கத்தில் பிரிட்டிஷ் நீதிமன்ற பகிஷ்காரத்தை ஏற்படுத்தியுள்ளார். இந்த வழக்கில் ஸ்ரீ திலகருக்கு மூன்று லட்சம் ரூபாய் நஷ்டமுண்டாயிற்று. ஸ்ரீ திலகர் அநேக இரவு பகலாக யோசித்துப் பல பிரபலமான சட்டவாதிகளுடன் கலந்து யோசித்து அவர்களுடைய அபிப்பிராயங்களை யறிந்து அவர்களுடைய சம்மதத்தின் பேரிலேயே இந்த வழக்குக்கு இறங்கினர். அபார சட்ட ஞானம் ஸ்ரீ திலகருக்கிருந்தும், மற்றும் சட்டஞானிகளை ஆலோசித்து வந்தும் ஸ்ரீ திலகர் அவிவேகத்தனமாக இந்த வழக்கில் இறங்கினர் என்றும், தவறு செய்துவிட்டா



ரென்றும் கூறுவது நம்முடைய அவிவேகத்தையே காட்டும். ஸ்ரீ திலகர், சிரால் வழக்கில் தோல்வி யடைந்தும், சற்றும் இளைக்காத யுத்தவீரனைப் போலத் தைரியங் கொண்டு இங்கிலாந்தில் 8 மாதகாலம் இடைவிடாமற்படி இராஜீய பிரசாரஞ் செய்து விட்டுத் தம் ஜன்மதேசத்துக்குத் திரும்பிவந்தார்.

## 14. திலகரும்—காந்தியும்

இங்கிலாந்தில் 1918-ம் வருடத்தில் நடந்த பார்லிமெண்ட் தேர்தல்களில் ஐயர்லாந்து குடியரசு கட்சியினர்களான ஸின்பீனர்கள் ஒருங்கே கலந்து பார்லிமெண்ட் சபைக்கு அங்கத்தினர்களாகச் சென்று ஆங்கு அவர்கள் செய்யும் வேலைத் திறத்தை ஸ்ரீ திலகர் கண்டு, அவ்வழியைப் பற்றுதலே இந்தியாவின் தற்கால நிலைமைக்கு ஏற்றதெனக் கொண்டார். ஸின்பீனர்கள் தாங்களே போட்டி கவரன்மெண்டொன்றை யேற்படுத்தவும், பார்லிமெண்ட் சபைக்குத் தேர்தல் பெற்றும் அங்கு ஸ்தானம் வகிக்காமல் பார்லிமெண்ட் சபை நடவடிக்கையொன்றும் சரிவர ஆகவொட்டாமற்படி முட்டுக் கட்டை போடவுமான வழியை ஸ்ரீ திலகர் அங்கீகரித்து அவ்வண்ணம் இந்தியாவிலும் செய்ய வேண்டுமென்று நிச்சயித்தார். இங்கிலாந்தில் ஸின்பீனர்களின் முறை வெற்றி பெறுவதைவிட இந்தியாவில் அம்முறை அதிகமான வெற்றியை யடையும் என்று அவர் அறிந்தார். இங்கிலாந்து இந்தியாவுக்கு அதிக தூரமாக யிருப்பதினாலும், இந்தியா தேசம் விசாலமான தேசமாக யிருப்பதினாலும் அம்முறை நன்கு வெற்றி பெறலாமென்னும் நம்பிக்கை ஸ்ரீ திலகருக்கு இருந்தது. பிறகு, ஸ்ரீ திலகர் இந்தியாவுக்குத் திரும்பிவந்ததும் மாண்டேகு சீர்திருத்தத்தில் ஜனங்களுடைய வெறுப்பையும் அதிருப்தியையுங் கண்டார். மிதவாதிகளும் பெஸண்டு கட்சியினர்களுமே குதூகலமாயிருப்பதையும் மற்றவர்கள் சீர்திருத்தத்தில் மிக்க ஏமாற்றத்தைத் தந்ததென்று கூறுவதையும் ஸ்ரீ திலகர் பெருமான் அறிந்தார். அரசருடைய ஸ்ரீமுகமொன்றையும் படித்தறிந்தார். உடனே, காங்கிரஸ் மகா சபை, அரசாங்கத்து சீர்திருத்தச் சட்டங்களைப் பூர்ணமாக அங்கீகரிக்காமல்



கூடிய வரை எந்தெந்த வழியில் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கலாமோ அந்தந்த வழியில் ஒத்துழைத்தும், எந்தெந்த வழியில் ஒத்துழைக்கமுடியாதோ அந்தந்த வழியில் அரசாங்கத்தைத் தாக்கி முட்டுக் கட்டை போடுவதுமாக இனி ஒரு முறையை யனுஷ்டிக்க வேண்டுமென்றும் ஸ்ரீ திலகர் தீர்மானித்தார். அமிர்தசரஸ் காங்கிரஸ் மகா சபை கூடிற்று. பண்டித மாளவியா, சித்தரஞ்சனதாஸ், விபினசந்திரபாலர், மகாத்மா காந்தி, ஸ்ரீ திலகர், முதலானோருக்கு சீர்திருத்தச் சட்டத்தின் விஷயமாக காங்கிரஸ் சபையில் பிரேரேபிக்கப் போகும் தீர்மானத்தைப்பற்றி அபிப்பிராய பேதமுண்டாயிற்று. ஸ்ரீ திலகரோ, சீர்திருத்தச் சட்டம் ஜனங்களுக்கு ஏமாற்றத்தையும், அதிருப்தியையும் கொடுத்ததென்றும், சீர்திருத்தம் போதுமான அளவு இல்லையென்றும், இந்தியர் சுய ஆட்சிக்குத் தக்ஷணமே யோக்கியதை யுள்ளதென்றும், நாம் [illegible] புதிய சீர்திருத்தச் சட்டங்களில் நம்மை நாம் கட்டுப்படுத்திக் கொள்ளக் கூடாதென்றும், அச்சட்டம் தோல்வியடையப் பாடுபட்டு மீண்டும் தீவிரமான சட்டமொன்றை யுண்டாக்கும்படி செய்வதே நோக்கமாக யிருக்கவேண்டு மென்றும் தெரிவித்தார். சீர்திருத்தச் சட்டம் எப்பொழுது திருப்தியற்றதென்றும் ஏமாற்றத்தைக் கொடுத்ததென்றும் கூறுகின்றோமோ அப்பொழுதே அச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு இந்தியாவில் பொறுப்பாட்சியை சீக்கிரத்தில் ஸ்தாபிக்க ஆதாரமாக்கிக் கொள்ளக்கூடாதென்றும் மகாத்மா காந்தி கூறினார். ஏமாற்றமும் அதிருப்தியும் ஒன்றாயிருக்க முடியாதென்னும் எண்ணத்தைக் கொண்டு மகாத்மா காந்தி அதன் இரகசியத்தை கீதா வியாக்கியான கர்த்தாவான ஸ்ரீ திலகரைத் தம் ஐயத்தைத் தீர்க்கும்படி கேட்டார். நம்மால் தடுக்க முடியாததொன்றை அங்கீகரித்துக் கஷ்ட

மான நிலைமையிலும் ஸ்வதர்மத்தைப் பற்றி அநுஷ்டான முறையைக் கொள்ளவேண்டுமென்பதே கீதையின் இரகசியம் என்று ஸ்ரீ திலகர் தெரிவித்தார்.

அமிர்தசரஸ் காங்கிரஸ் முடிந்த பிறகு ஜனவரி மாதம் 14-ந் தேதியில் வெளிவந்த 'யௌவன இந்தியா' பத்திரிகையில் மகாத்மா காந்தி அமிர்தசரஸ் காங்கிரஸில் நிறைவேறின சீர்திருத்தத் தீர்மானத்தைப்பற்றி எழுதுகையில் 'லோகமான்ய திலகர் ஸ்திரமான நோக்கத்தைக்கொண்ட ஓர் இராஜீய அபிப்பிராயத்தைக்கொண்டிருக்கிறார்; அதை அவர் ஒளிப்பதில்லை. இராஜீயப்போராட்டத்தில் எல்லா முறையும் நீதியானதென்றே அவர் கருதுகிறார்.' என்று குறிப்பிட்டிருந்தார். இதற்கு லோகமான்ய ஸ்ரீ திலகர் 1920 ஜனவரி மாதம் 28-ந்தேதி புனா நகரிலிருந்து மகாத்மாவுக்குப் பின்வருமாறு பதில் விடுத்தார்.

'சென்ற வாரத்தில் பிரசுரமான யௌவன இந்தியா பத்திரிகையில் சீர்திருத்தம் என்று மகுடமிட்டு வெளிவந்த வியாசத்தில் 'இராஜீயப் போராட்டத்தில் எல்லாமுறையும் நீதியானது' என்பதை நான் கடைப்பிடித்து வருவதாகத் தாங்கள் எழுதினதற்காக துக்கிக்கிறேன். என்னுடைய நோக்கம் சரியானபடி அதில் குறிக்கப்படவில்லையென்பதைக்கொண்டே இதை உங்களுக்கு நான் எழுதலானேன். இராஜீய போராட்டமானது உலகத்தோடொட்டியதாகும்; சம்சாரிகளுக்கேயல்லாது சாதுக்களுக்கல்ல. புத்தரால் உபதேசிக்கப்பட்ட "அக்கோதேன ஜினே கோதம்" என்ற நீதிதர்மத்தைக்காட்டிலும் ஸ்ரீ கிருஷ்ணபகவானால் உபதேசிக்கப்பட்ட "யே யதாமாம் பிரபத்யந்தே தாம்ஸ் ததைவ பஜாம்யஹம்" என்னும் நீதிதர்மத்தை அங்கீகரிப்பேன். இதுவொன்றே நமக்குள்ள எல்லா வித்தியாசத்தையும் விளக்கும். தவிர, நான் கூறும் 'பரஸ்பர ஒத்துழைமை' (Respon-



sive Co-operation) என்பதின் அர்த்தத்தையும் அது நன்கு புகட்டும். மேற்கூறிய இரண்டுமார்க்கமும் நீதியானவைகளுடன் தர்மமானவைகளேயாம். ஆனால் முதல் மார்க்கத்தைக்காட்டிலும் இரண்டாவது மார்க்கம் இக்காலத்திற்கு ஏற்றதாயிருக்கும். இதைக்காட்டிலும் அதிகமாகத் தெரிய வேண்டுமானால், எனது கீதாரகஸ்யத்திற் காணலாம்."

இதற்கு மகாத்மா காந்தி மீண்டும் பின்வருமாறு பதிலளித்தார்—

'மதசித்தாந்தங்களைப்பற்றிய விஷயங்களுக்கு வியாக்கியானஞ்செய்யும் முறைமையில் லோகமான்யருடன் சமமாகச் சேர்ந்து போட்டிபோடுவதென்பது என்னால் முடியாத காரியம். ஆனால் அம்மத சித்தாந்தங்களிலுள்ள விஷயங்களுக்குச் சிற்சில சமயங்களில் உண்டாகும் இயற்கையான உணர்ச்சியின் அர்த்தமே வியாக்கியானத்தைவிட சிரேஷ்டமாகிறது. லோகமான்யரால் குறிப்பிட்ட இரண்டு நீதிதர்ம ஸ்லோகங்களைப்பற்றி எனக்கு யாதொரு அபிப்பிராய பேதமுமில்லை. ஆனால், புத்த தர்ம ஸ்லோகமானது சநாதன தர்மத்தை நிர்ணயிக்கிறது. பகவத்கீதையின் ஸ்லோகம் எந்நாளும் அன்பினால் துவேஷத்தையும், சத்தியத்தால் அசத்தியத்தையும் வெல்லும் என்னும் தர்மத்தை விளக்குமென்பதை நான் அறியாதவனாயிருக்கிறேன். நாம் பிறருக்கு அளப்பதுபோல பகவான் நமக்கும் அம்மாதிரியாகவே அளப்பது உண்மையானால், பிறகு அதன் வழியாக நமக்குரிய தண்டனையை விலக்கிக்கொள்ள நாம் கோபத்திற்குப் பதிலாகக் கோபங்கொள்வதைத் தவிர்த்து நிற்பதுடன் கோபத்திற்குப் பதிலாக சாந்தத்தையே காண்பிக்கலாம். ஆகவே, இத்தர்மமானது கேவலம் சாதுக்களுக்கல்ல; முக்கியமாக சம்ஸாரிகளுக்கே அவசியமானது. உலகமானது சாதுக்களுக்கல்லவென்று நினைப்பது மகே

மாயையைக் காண்பிக்கிறது. இவ்விஷயத்தில் லோகமான்யரின் சொற்களை நான் அங்கீகரிக்க முடியாது. உலகத்திலுள்ள எல்லா மதங்களின் முக்கிய தர்மமானது புருஷார்த்தம். துணிகரமாக வைராக்கியத்துடன் சாதுவாவதே புருஷார்த்தம். அதாவது எல்லாவித தன்மையானும் மனிதன் புருஷாகாரத்தை யடைவதேயாம்.

லோகமான்யருடைய நோக்கத்தின்படி 'இராஜீயப் போராட்டத்தில் எல்லா முறையும் நீதியானது' என்னும் வாக்கியத்தை நான் எழுதினகாலத்தில், லோகமான்யர் அடிக்கடி கூறும் 'ஷத்தம் பிரதி ஷத்தியம்' என்னும் வாக்கியம் என் ஞாபகத்திற்கு வந்தது. அவ்வாக்கியம் அதர்மமென எனக்குப் புலப்படுகிறது. இது உண்மையில் 'ஷத்தம் பிரத்யாபி சத்யம்' என்பதாக யிருக்கவேண்டும்.

சீர்திருத்தச் சட்டத்தின் விஷயமாகப் பலமான அபிப்பிராயம் ஏற்பட்டு காங்கிரஸ் மகா சபைக்குள் பிரிவு உண்டாகுமோ வென்றும் எதிர்பார்க்கப்பட்டது. கடைசியாக, ஸ்ரீ திலகருடைய அபிப்பிராயமே வெற்றிபெற்றது. அமிர்தசரஸ் காங்கிரஸ் முடிந்ததும் பெஸண்டு ஸ்ரீ திலகர்மீது பாணம் தொடுத்தார். ஸ்ரீ திலகர் கபடமாகத் தம் காரியத்திற்காகவே தம்மை (பெஸண்டை) உபயோகப்படுத்தி வந்ததாகவும், 'மிதவாதிகளை ஸ்ரீ திலகர் ஏமாற்றச் செய்தாரென்றும், அங்ஙனம் ஏமாற்றச் செய்வதே இராஜதந்திரம்' என்றும் ஸ்ரீ திலகரே இங்கிலாந்தில் கடைசியாக ஓர் மிதவாத தலைவரிடம் சொன்னாரென்று அபாண்டமாக பெஸண்டு அம்மை தெரிவித்தார். தவிர, காங்கிரஸ் காரியதரிசிகளி லொருவரான கனம் படேல், கனம் கபர்டே, ஸ்ரீ திலகர் முதலானோர் பெஸண்டு அம்மைமீது பொய்க் குற்றங்களைச் சுமத்தி அவர் உண்மைக்கு மாறுபாடாக நடந்தாரென்று அவதூறு செய்ததாகவும், கனம் கபர்டே தம்மைப்



பூதனை என்று இழிவாகக் கூறினதாகவும் பெஸண்டு அம்மை ஸ்ரீ காசியில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு 1920 ஏப்ரல் மாதம் 7-ந் தேதி முறையீடொன்று அனுப்பினார். அதற்கு ஸ்ரீ திலகர் இங்கிலாந்தில் பெஸண்டு அம்மையார் மிதவாதி தலைவர்களான பூபேந்திரநாதவஸு சுரேந்திரநாத் பானர்ஜி முதலானோருடன் சேர்ந்து காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கு இடையூறு செய்ததைக் களைப்பற்றி விளக்கிப் பதிலனுப்பினர். பிறகு, ஸ்ரீ திலகர் இந்தியாவுக்குத் திரும்பி வந்து புனாநகர் சேர்ந்ததும் அவருக்குப் பொது ஜனங்களின் பெயரால் ஓர் உபசாரப் பத்திரிகை வாசித்துக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அதனால் சில மிதவாதிகள் அதற்கு விரோதமாகச் சூழ்ச்சி செய்தனர். கனம் பராஞ்சபே 'ஸ்ரீ திலகரின் குற்றங்கள்' என்று ஓர் அட்டவணையைப் பிரசுரித்து உபசாரப் பத்திரிகையை எதிர்ப்பதாகக் கூறினர். பராஞ்சபே அவர்கள் பத்திரிகையில் கூறியதேயன்றி, அவர் சொல்லிய வண்ணம் ஸ்ரீ திலகருக்கு உபசார பத்திரிகை கொடுப்பதாக ஏற்பட்ட மகா நாட்டில் தாம் எதிர்க்க முன் வராமல், அவர் தம் வீட்டிற்குள்ளேயே யிருந்து விட்டார். இங்ஙனம், ஸ்ரீ திலகருக்கு உபசாரப்பத்திரம் படித்துக் கொடுக்க விடாதபடி செய்ய வேண்டுமென்கிற பிரயத்தனம் பாழாகப் போகவே, மிதவாதிகள் வேறொரு சூழ்ச்சியைச் செய்யலானார்கள். புனாநகர முனிஸிபாலிடியில் திலக கட்சியைச் சேர்ந்தவர்களே பெரும்பாலார் அங்கத்தினர்களாக யிருந்தனர். புனாநகர் முனிஸிபாலிடியார் கட்டாயக் கல்வியை ஏற்படுத்த முன்வந்தனர். அதுகாலை கட்டாயக் கல்வியைப் பாலிகைகளுக்கே முதல் முதல் ஏற்படுத்த வேண்டுமென்று மிதவாதிகளும் பல ஆசார சீர்திருத்தக் காரர்களும் பலமான கிளர்ச்சியொன்றை யுண்டாக்கினர். புனாநகர் முனிஸிபாலிடியார்

முதல் முதல் பாலர்களுக்கு ஏற்படுத்திவிட்டுப் பிறகு பாலிகைகளுக்கு ஏற்படுத்தலா மென்றும், பாலர்களுக்கு ஏற்படுவதுபோல பாலிகைகளுக்கும் ஏற்பட வேண்டுமானால் 86500 ரூ. முனிஸிபாலிடிக்குக் கடன் சுமை யுண்டாகு மென்றும், தெரிவித்தார்கள். ஆனால், ஆசார சீர்திருத்தக் காரர்கள் முதல் முதல் பாலிகைகளுக்கே கட்டாயக் கல்வியை யுண்டாக்கிப் பிறகு பாலர்களுக்கு உண்டாக்கலா மென்று தெரிவித்தனர். நாகரிகம் நிறைந்த மேனாடுகளில் கூட கட்டாயக் கல்வி சாதாரணமாக பாலர்களுக்கு முதன் முதல் உண்டான பிறகே பாலிகைகளுக்கு ஏற்படுவது வழக்கம். கட்டாயக் கல்வியை யுண்டாக்கும் விஷயத்தில் பல்பாடு பட்ட காலஞ்சென்ற கோபால கிருஷ்ண கோகலே அவர்களும் முதன் முதல் பாலர்களுக்கு உண்டாக்கின பின்பே பாலிகைகளுக்குக் கொடுக்கலா மென்று கூறியுள்ளார். ஆனால், புனா மிதவாதிகளுக்குத் தீவிர கட்சியினர்களோடு வேடிக்கை செய்ய வேண்டு மென்பதே கருத்தாதலின் அதன் பொருட்டு வேடிக்கை கிளர்ச்சியையுஞ் செய்தார்கள். அது முடிந்தபிறகு, 1920-ம் வருடம் மார்ச்சுமாதம் ஆரம்பத்தில் ஜுன்னர் என்னுமிடத்தில் புனா ஜில்லா கான்பரன்ஸ் நடந்த காலத்தில் மிதவாதிகளிற் சிலர், ஏற்கனவே, தாங்கள் புதியசபை யொன்றை ஸ்தாபித்துப், சற்று வேடிக்கை செய்ய, விவசாய பிரதிநிதிகளை உள்ளே நுழைக்கப் பிரயத்தனஞ் செய்தார்கள். டில்லி காங்கிரஸ் மகாசபையிலும், அமிர்தசரஸ் காங்கிரஸ் சபையிலும் விவசாய பிரதிநிதிகளை ஆதரித்ததைக் கண்ட மிதவாதிகள் ஜில்லா கான்பரன்ஸில் அவர்களைப் பெருவாரியாக உள்ளே நுழைத்து காங்கிரஸ் தீர்மானங்களுக்கு விரோதமாகச் சில தீர்மானங்களைச் செய்யக் கருதினார்கள். வரவேற்பு அங்கத்தினர் தாலுக்கா ஒவ்வொன்றுக்கும் 5 விவசாய பிரதிநிதிகளே தான் வரக்கூடும்



என்று தீர்மானித்துவிட்டார்கள். மிதவாதிகள் தங்களா லியன்றளவு விவசாய பிரதிநிதிகளைக் கொண்டுவரப் பிரயத்தனஞ் செய்தும் ஒருவராவது அவர்கள் பக்கம் வரவில்லை. மிதவாதிகளின் தோல்வி மிகவும் பரிதாபகரமாயிருந்தது. இதற்கு, ஸ்ரீ திலகர் பரஸ்பர ஒத்துழைப்பு (Responsive Co-Operation) என்னும் ஒரு புதிய கொள்கையைக் கொண்டு பம்பாயில் நடந்த ஒரு பிரசங்கத்தில் அவர் பின்வருமாறு பேசியுள்ளார்.

* * * * * * *

"நாங்கள் ஒத்துழைக்கத் தயாராகவே யிருக்கிறோம்; ஆனால் ஒத்துழைக்க ஒன்றுமில்லையென்று கண்டால், நாங்கள் ஒத்துழைக்க மாட்டோம். மன்னர் பெருமான் ஜனங்களையும் பரஸ்பரம் ஒருவரோடொருவர் ஒத்துழைக்கும்படி கூறியுள்ளார். இந்தியாவின் நன்மைக்காக இந்தியர்கள் ஒத்துழைக்க முன் வரவில்லையென்று கூறுவது கேவலம் அப் பிரமாணிக்கமாகும். மன்னர் பெருமானுடைய வாக்கைக் கீழ்ப்படிவதென்பது இந்தியாவில் முதல் முதல் அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்து அல்லது அதிகாரிகளிடத்தில் பக்தி காட்டிப் பிறகு ஜனங்களிடத்தில் பக்தி காட்ட வேண்டுமென்பதாகிறது. நம்மோடு எந்தெந்த வழிகளில் அதிகாரிகள் ஒத்துழைக்கத் தயாராக யிருக்கின்றனரென்று கூறட்டும்; பிறகு, அவர்கள் நம்முடன் ஒத்துழைத்தால், நாமும் அவர்களோடு ஒத்துழைப்போம் என்று உறுதி கூறுவோம். ஒத்துழைப்பு பரஸ்பரமாகும்."

* * * * * *

இங்ஙனம் ஸ்ரீ திலகர் கூறின பிறகு பலர் அக்கொள்கையை யாதரிக்கலானார்கள். பஞ்சாப் சம்பவங்களின் காரணமாக ஏற்படுத்தப்பட்ட ஹண்டர் கமிட்டியின் தீர்மானங்களின் அநீதியையும், முஸ்லீம் சகோதரர்களின்

மனம் புண்படும் படியாக கிலாபத் விஷயத்தில் அரசாங்கத்தார் செய்த அநீதியையும் கண்ட மகாத்மா காந்தி ஒத்துழையாமை இயக்கத்தை முதல் முதல் ஆரம்பித்தார். ஸ்ரீ திலகர் தம்முடைய வாழ்நாட்களில் ஒத்துழையாமையையே கைக்கொண்டிருந்தனர் என்பது மிகையாகாது. அரசாங்கத்தாரால் கொடுக்கப்படும் பட்டங்கள், கௌரவங்கள் முதலியவைகளை அங்கீகரிக்கக் கூடாதென்று மகாத்மா காந்தி கூறினதை ஸ்ரீ திலகர் ஆதிமுதலே கூறிவந்துள்ளார். ஒத்துழையாமையின் முதல் பாகத்திலும் ஸ்ரீ திலகருக்கும் மகாத்மா காந்திக்கும் ஒருவித வித்தியாசமில்லை. இரண்டாவது பாகமாகிய பள்ளி பகிஷ்காரத்தையும் ஸ்ரீ திலகர் அங்கீகரித்தார். ஏனெனில், ஆதிகால் முதற்கொண்டே அரசாங்க ஆதரவின்றி ஜாதியகல்விச் சாலைகளை ஸ்தாபித்து ஜாதியக் கல்வியையே கொடுக்கவேண்டுமென்று லோகமான்யர் வற்புறுத்தி வந்ததுமல்லாமல், அதுகாரணமாகவே முதல் முதல் தட்சிண கல்விச் சங்கமொன்றை ஸ்ரீ திலகர் ஆரம்பத்தில் ஸ்தாபித்தார். ஆகவே, பள்ளிபகிஷ்காரத்திலும் ஸ்ரீ திலகருக்கும் [illegible] காந்திக்கும் வித்தியாசமில்லை. ஆனால், சில மகாராஷ்டிரர்கள்மட்டும் ஸ்ரீ திலகர் முதன்முதல் ஜாதிய கல்விச் சாலைகளை ஸ்தாபித்துவிட்ட பின்னரே பள்ளிபகிஷ்காரஞ் செய்ய மாணவர்களைத் தூண்டுவாரென்று கூறுகின்றனர். பள்ளி பகிஷ்கார விஷயமாக இருவர்களுக்கும் வித்தியாசமில்லை என்பதே எமது அபிப்பிராயம். மூன்றாவது பாகமாகிய நீதிமன்ற பகிஷ்காரத்தையும் ஸ்ரீ திலகர் தம்முடைய அனுஷ்டானத்திலேயே காண்பித்து வந்தார். மகாத்மா காந்தியாகிலும் நீதிமன்றங்களில் வக்கீலாக இருந்து வாதாடி வந்தார். ஸ்ரீ திலகரோ, வக்கீல் பரீட்சையில் தேறியும் ஆதி முதல் நீதிமன்றங்களில் வக்கீலாகயிராமல், தம்முடைய வாழ்நாட்களை தேசத்திற்காக இராஜீயத்துறையில் அர்ப்-



பணஞ் செய்தார். கோர்ட்டு பகிஷ்காரம் விஷயமாக லோகமான்யருக்கும் மகாத்மாவுக்கும் யாதொரு வித்தியாசமுமில்லை. ஸ்ரீ திலகர் இருந்திருந்தால், இராஜதந்திரத்தை முன்னிட்டு ஒரு காரியம் மட்டும் இவ்விஷயமாகச் செய்திருப்பார் என்றே பலர் கூறியுள்ளார். அதாவது, கோர்ட்டு பகிஷ்காரஞ் செய்யமுடியாத வக்கீல்கள் தங்கள் வரும்படி 10-ல் 1 பாகத்தையேனும் காங்கிரஸுக்குக் கொடுக்க வேண்டுமென்று கூறியிருப்பார் என்பதாம். இது நாட்டின் நிலைமையைப் பொறுத்தது. ஜனங்கள் தீவிரமாகயுள்ளார் என்பதை ஸ்ரீ திலகர் அறிந்தால், ஜனங்களைக்காட்டிலும் ஒருபடி தீவிரமாகப்போகும் இயல்பினைக் கொண்டவர். ஆகவே நாம் ஒத்துழையாமைப் படிகளின் விஷயமாக ஸ்ரீ திலகருடைய அபிப்பிராயங்கள் இன்னவையாகத்தானிருக்கவேண்டுமென்று கூறத் துணிதல் மிகையாகும். நிற்க, லோகமான்யருக்கு சட்டசபை பகிஷ்காரத்தைமட்டும் அங்கீகரிக்க இஷ்டமில்லையென்று அவர் கூறினதாகப் பல மகாராஷ்டிரர்கள் கூறியுள்ளார். ஐயர்லாந்து ஸின்பினர்களின் முறையைக்கொண்டு சட்டசபையிற் புகுந்து முட்டுக்கட்டையிடுவதே லோகமான்யரின் கொள்கை எனப் பலர் கூறியுள்ளார். இவ்விஷயத்தில் எமது அபிப்பிராயம் வேறாகவேயுள்ளது. லோகமான்யர் சட்டசபை விஷயமாகத் தம் அபிப்பிராயத்தைக் கூறினகாலத்தில் இருந்த நிலைமையைவிட பிறகு அந்நிலைமைமாறினதால், லோகமான்யர் ஜனங்களுடைய அபிப்பிராயங்களுக்கு மாறாகத் தம் கொள்கையே சிறந்ததெனப் பிடிவாதமாக யிருந்திருக்கமாட்டார். வட இந்தியாவிலுள்ள சில பத்திரிகைகள் லோகமான்யர் ஒத்துழையாமைக்கு விரோதமாக யிருக்கிறார் எனத் தெரிவித்தன. அவைகளுக்கு மகாத்மாகாந்தி பின்வருமாறு பதிலளித்தார்:—

'நாங்கள் அறிந்த மட்டில் ஒத்துழையாமை இயக்கத்தில் லோகமான்யர் திடமான அபிப்பிராயம் கொண்டிருந்தார். மௌலானா ஷவுகத் அலிக்கு அவர் வாக்குத் தத்தஞ் செய்துள்ளார். முகம்மதியர்கள் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்துழைத்தால், தம்முடைய கட்சியினர்களும் பொதுவாக இந்துக்களும் கட்டாயம் சேர்ந்து உழைப்பார்களென எங்களிடம் அவர் கூறினார். நானும் மௌலானா ஷவுகத் அலியும் பஞ்சாப் மகாநாட்டுக்குப் போவதற்கு முன் லோகமான்யரை 'ஸர்தார் கிரகத்'தில் கண்டோம். அப்பொழுது எங்களைப்பார்த்து 'முகம்மதியர்கள் சட்டசபைகளைப் பகிஷ்கரித்தால் நானும் என் கட்சியிற் சேர்ந்தவர்களும் கட்டாயம் சட்டசபை பகிஷ்காரஞ் செய்வோம்' என்று கூறினார். ஆகவே, லோகமான்யர் பூர்ண ஒத்துழையாமைக் காரரென்றே நாம் கூறலாம். ஆனால், பம்பாயில் பிரசுரமாகும் 'லோகமான்ய' என்னும் பத்திரிகையின் உதவிப் பத்திரிகாசிரியர் மண்டலிக் என்பவர் லோகமான்ய ஸ்ரீ திலகர் ஸர்தார் கிரகத்தில் 'சட்டசபைக்குட் சென்று அவசியமானபோது அவர்களுடன் கலந்து ஒத்துழைத்தும், அவசியமானபோது முட்டுக்கட்டையிட்டு ஒத்துழையாமலும் இருப்பது நன்மை என்பதாக நான் (ஸ்ரீ திலகர்) நம்புகிறேன்' என்று கூறினதாகத் தெரிவித்தார். பூரணமான அசாக்கிரதையுடன் ஒத்துழைக்கக்கூடா தென்னும் உணர்ச்சியை சனங்கள் கொண்டிருக்கிறார்களென்பதை லோகமான்யர் அறிந்தால், அவர் மகாத்மா காந்தியைவிட ஒருபடி அதிகமாகச்சென்று 'வரிசெலுத்தாமை,' 'சட்டங்களின் மறுப்பு' இவைகளை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வந்திருப்பார். ஆகவே, லோகமான்யர் சட்டசபை பகிஷ்காரத்திற்கு விரோதமாயிருந்தாரென்று கூறுவதை யாம் ஒப்புக்கொள்ளவில்லை. நிற்க, அமிர்தசரஸில் நடந்த காங்கி



ரஸ் மகாசபையில் தீர்மானமான தீர்மானங்களைக்கொண்டு லோகமான்யர் 1920-ம் வருடத்தில் ஷோலாபூரில் ஏப்ரல் மாதம், 2, 3, 4-ந் தேதிகளில் நடந்த பம்பாய் மாகாண கான்பரன்ஸில், அமிர்தசரஸ் காங்கிரஸ் தீர்மானங்களை அங்கீகரிப்பவர்களையே தேர்தல்களில் புதிய சட்டசபை அங்கத்தினர்களாகப் பொது சனங்கள் தெரிந்தெடுக்க வேண்டுமென்று ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தார். மிதவாதிகள் பலர் தட்சிண சங்கத்தின்மூலமாக ஏராளமான பிரதிநிதிகளை அனுப்பினார்கள். பெஸண்டு அம்மையும் சென்னையிலிருந்து வந்தார். அமிர்தசரஸ் காங்கிரஸ் தீர்மானத்தை எப்படியாகிலும் தோல்வியடைய வைத்து 'சட்டசபை தேர்தல்களில் சாமர்த்தியவான்களையே தெரிந்தெடுக்கவேண்டுமென்றும், அமிர்தசரஸ் தீர்மானம் அதற்குத் தடையாக விருக்கக்கூடாதென்னும்' தீர்மானத்தை அங்கீகரிக்கும்படி செய்யவேண்டுமென்று பெஸண்டும் மிதவாதிகளும் பலமான பிரயத்தனங்கள் செய்தனர். கடைசியாக ஸ்ரீ திலகரின் கட்சியினர்களே வெற்றி யடைந்தனர். இவ்வளவில் மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கமும் சட்டசபை பகிஷ்காரமும் உண்டாயிற்று. அதை விசாரிக்க விசேஷ காங்கிரஸ் சபையொன்றுகூட்ட ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், லோகமான்யர், 'காங்கிரஸ் ஜனநாயககட்சி' என்னும் ஓர் கட்சியையுண்டாக்கி அதன் நோக்கத்தைப் பிரசுரித்து அதை விசேஷகாங்கிரஸ் மகாசபையில் தீர்மானஞ்செய்ய எண்ணங்கொண்டிருந்தார். அவர் வெளியிட்ட யாதாஸ்து பின்வருமாறு :—

'மாண்டேகு சீர்திருத்தம் எவ்வளவுதூரம் பிரயோசனமோ அவ்வளவுவரை அதை உபயோகப்படுத்திக்கொள்ள இந்த கட்சி வேலைசெய்யும். பூர்ணபொறுப்பாட்சி ஏற்படுவதற்கும் அக்கட்சி அதை பிரயோசனப்படுத்திக்கொள்ளும்.

இதுகாரணமாக, இக்கட்சியினர் யாதொரு தடையின்றி ஜனங்களுடைய சம்மதத்தைக்கொண்டு ஒத்துழைக்கவோ, அல்லது சட்டநீதியாக எதிர்ப்பதோ அதை உசிதம்போலச் செய்யும்' என்பதே.

மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை திட்டத்தை எதிர்ப்பதற்காகவே லோகமான்ய ஸ்ரீ திலகர் தம்முடைய திட்டத்தைப் பிரசுரித்தாரென்று பலர் கூறினர். விசேஷ காங்கிரஸ் மகாசபையில் சட்டசபைப் பிரவேசத்தை ஆதரித்த காங்கிரஸ் கட்சியினர்கள் புதிய சட்டசபையிற் புகுந்து ஸின்பீன் கட்சியினர்களைப்போலசெய்து நாகபுரியில் நடக்கும் காங்கிரஸில் அரசாங்கத்திற்கு தாக்கீது கொடுக்கும்படியாகச் செய்யவேண்டுவதே, லோகமான்யரின் நோக்கமெனக் கூறப்படுகிறது: மகாத்மாகாந்தியும் லோகமான்யரும் விசேஷ காங்கிரஸ் சபையில் ஒன்றுகக் கூடியிருந்தால் நாட்டின் நிலைமை வேறுவிதமாகப் போயிருக்குமென்பதற்கு ஐயமேயில்லை. ஆனால் சகல கால சகலதேச வர்த்தமானங்களையும் நடக்கபோகும் காரியங்களையும் அறியும் பகவான் லோகமான்யருடைய வேலை இந்தியாவில் முடிந்துவிட்டது; இனி மகாத்மா காந்தியின் வேலை ஆரம்பம் என்று நினைத்தவராய்ப் பூர்வம் பரசுராமரிடமிருந்து ஸ்ரீராமபிரான் அவருடைய சக்தியைத் தாம் இழுத்துக்கொண்டவாறு மகாத்மா காந்தி லோகமான்யரின் சக்தியை ஆகர்ஷித்துக் கொண்டதற்கடையாளமாக லோகமான்யரை விசேஷ காங்கிரஸ் கூடுவதற்கு முன்னமே இம்மண்ணுலக வாழ்க்கையைவிட்டு சாயுஜ்ய பதவியை யடையும்படி பகவான் அழைத்துக் கொண்டார். ஒருவரை மற்றொருவரோடு ஒப்பிட்டு அவரை விட இவர் பெரியவர் என்று கூற யார்க்கும் எளிதல்ல. லோகமான்யரின் தேச சேவையும் தியாகமும் மிக்க அருமையானது. இராஜீயத் துறையில் அன்னிய அரசாங்கத்



தாரால் 40 வருடகாலம் பல விதத்திலும் துன்பப்பட்டுக் கடைசிவரை தம்முடைய கொள்கையை நிலை நிறுத்தின லோகமான்யர் போன்ற மகா தீரர் வேறெந்த நாட்டிலுமில்லையென்றே கூறலாம். லோகமான்யர் பட்ட கஷ்டங்களைப் போல ஐரோப்பா அமெரிக்கா தேசாபிமானர்களுங்கூட அவ்வளவு கஷ்டங்களைப் பட்டிருக்க மாட்டார்கள். லோகமான்யர் இராஜீயத் துறையில் இறங்கினது அகஸ்மாத்தல்ல. நன்கு ஆராய்ந்த பிறகே இத்துறையில் அவர் இறங்கினர். இராஜீயத் துறையில் உண்மையாக ஒருவன் உழைத்தால் லோகமான்யர் பட்ட கஷ்டங்களைப் போல படவேண்டுமென்பதை அவருடைய சரித்திரத்தால் நாமறியலாம். லோகமான்யர் இராஜீயத் துறையில் இறங்கின காலத்தில் வழிமுழுதும் முள்ளும் கல்லுமாக இருந்ததை நாம் அறியவேண்டும். பிரிட்டிஷ் அரசாங்கத்தினிடத்தில் அதிகமான விசுவாசமும், அதிகாரிகளிடத்தில் மிதமிஞ்சின பயமும், விபரீத எண்ணமும், உலக நடவடிக்கை யறியாத அஞ்ஞானமும் ஜனங்களுக்குள்ளே குடியிருந்தது. அந்த நிலைமையிலிருந்த ஜனங்களைச் சீர்திருத்த லோகமான்யர் முன்வந்தார். மகாத்மா காந்தியோ, தாம் பிழைப்பதற்காக ஓர் அன்னிய தேசம் சென்று, அங்கு ஆடம்பரமாய் வசித்துவந்த காலில், சொற்ப தொகையினர்களான இந்தியர்களைத் துன்புறுத்த நேடால் அரசாங்கத்தார் முன்வந்ததையும், அவ்வரசாங்கத்தாரின் கஷ்டங்களை யறிந்த இந்தியர்கள் புதிய உணர்ச்சியொன்றைக் கொண்டதையும் அறிந்தே சுதந்தரப் போர்புரிய முன்வந்தார். இராஜீயத் துறையில் இறங்கி ஜனங்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்னும் எண்ணம் மகாத்மாவுக்கு தட்சிண ஆப்பிரிக்கா போராட்டத்திற்கு முன் இருந்ததாகத் தெரியவில்லை. உலகத்தினர்களைப் போலத் தாம் பாரிஸ்டர்

வேலையில் பணம் சம்பாதித்து உயர்பதவியை யடைய வேண்டு மென்னும் எண்ணமே இவருக்கு அக்காலத்தில் இருந்தது. பிறகு, திடீரென்று சமயம் வாய்ந்தது. இவரும் அச்சமயத்தை யறிந்து போராட்டத்திற்கு இறங்கினார். பகவத் சங்கல்பத்தினால் இவர் பரம தியாகியாகிப் புருஷ சிரேஷ்டரானார்; லோகமான்யர் தம்முடைய ஸ்வதர்மத்தால் கஷ்டப்பட்டு சிறப்புற்றார்; மகாத்மாவோ தெய்வ சங்கல்பத்தால் ஓர் வழியிறங்கி அதில் கஷ்டப்பட்டு சிறப்புற்றார். லோகமான்யர் தம்முடைய பரிபக்குவத்தால் ஜனங்களைத் திருத்த முன்வந்தார். மகாத்மா ஜனங்களுடைய பரிபக்குவத்தை யுணர்ந்து ஜனங்களை வழியோடு திருத்த முன்வந்தார். லோகமான்யர் தம் ஜன்ம தேசத்தில் பரந்த பூமியில் கணக்கற்ற சனங்களின் வகுப்புப் பிரிவில் கலந்து சமூக ஊழியஞ்செய்தார். மகாத்மா அன்னிய தேசத்தில் நெருங்கின பூமியில் குறிப்பிட்ட ஒரே ஜனங்களுடன் கலந்து சமூக ஊழியஞ்செய்தார். லோகமான்யர் தாம் ஒருவராகத் தனி நின்றே அபிப்பிராயப் பேதங்களி னிடையே பாடுபட்டார். மகாத்மா பலரோடு சேர்ந்து அபிப்பிராய பேதங்களற்ற ஏகோபித்த நிலைமையில் பாடுபட்டார். நன்கு பலமாக ஸ்தாபிக்கப்பட்ட ஓர் அரசாங்கத்தின் மாறுதலுக்கே லோகமான்யர் பாடுபட்டார். குறித்த ஓர் அநீதியான உத்திரவை யொழிக்கவே மகாத்மா பாடுபட்டார். லோகமான்யர் முன்வந்த காலம் இருள்படர்ந்த காலம். மகாத்மா முன்வந்தகாலம் சூரியோதயமானகாலம். லோகமான்யருக்கு அவரைச் சேர்ந்த தேசத்தவர்களே பகைமையாக விருந்தார்கள். மகாத்மாவுக்கு அன்னிய தேசத்தவர்களும் சிநேகம் பாராட்டிக்கூட உழைத்தார்கள். லோகமான்யரின் உபதேசம் கற்றவர்களுக்கும் கல்லாதவர்களுக்கும் உணர்ச்சியைக் கொடுக்கும். மகாத்மாவின் உபதேசம்



சாமானிய ஜனங்களுக்கு அதிதீவிர உணர்ச்சியைக் கொடுக்கும். லோகமான்ய ஸ்ரீ திலகர் சிறந்த இராஜதந்திரி; தேசவிடுதலைக்குக் கால தேசவர்த்தமானங்களை யறிந்து தம் அனுஷ்டானத்தை மேற்கொள்ளும் இயல்பினை யுடையவர். மகாத்மா நீதிதர்மி. தேசவிடுதலைக்காக நீதி தர்மமொன்றையே பெரிதாகக் கருதி அவ் வனுஷ்டானத்தைச் சற்றேனும் மாற்றாமல் மேற்கொள்ளும் இயற்கையை யுடையவர். இருவரும் சிறந்த கர்மயோகிகள். பீஷ்மரைப் போன்றவர் லோகமான்யர்; ஜனகரைப் போன்றவர் மகாத்மா. ஜமதக்கினியின் புத்திரர் பரசுராமரைப் போன்றவர் லோகமான்யர்; கௌதமரின் புதல்வர் சிகாரியைப் போன்றவர் மகாத்மா. லோகமான்யர் அஹிம்ஸையையே முக்கிய இலட்சியமாகக் கொண்டவரல்லர்; மகாத்மாவோ அஹிம்ஸா தர்மத்தையே இலட்சியமாகக் கொண்டவர். ஆததாயி போன்றவர்களையும் ஆபத்து காலங்களில் ஆத்ம சம்ரட்சணார்த்தம் ஹிம்ஸை செய்வது உண்மையாக ஹிம்ஸை யாகாதென்னும் ஆபத்து தர்மத்தை யனுசரிப்பவர் லோகமான்யர்; ஆததாயிடமும், ஆபத்து காலங்களிலும் சதா அஹிம்ஸையையே கையாளும் வைராக்கிய தர்மத்தை யனுசரிப்பவர் மகாத்மா காந்தி. இராஜதந்திரத்தில் ஹிம்ஸையும் அஹிம்ஸையும் கலந்து இருக்குமென்பதே லோகமான்யரின் கொள்கை; இராஜதந்திரத்திலும் அஹிம்ஸையே கையாள வேண்டுமென்பதே மகாத்மாவின் கொள்கை. தேச நன்மைக்காகவோ அல்லது தேச விடுதலைக்காகவோ ஒருவன் ஆபத்து தர்மத்தைக்கொண்டு சகல காரியங்களையும் (கொலை, களவு, பொய்யாடல் முதலியவை) செய்யலா மென்பதே லோகமான்யரின் கொள்கை. பாண்டவர்களில் முன்னோனை யுதிஷ்டிரன் தங்கள் வெற்றிக்காக துரோணரிடம் பொய்யாக 'அஸ்வத்தாமா கொல்லப்பட்டான்' என்று உரைத்

தது போலவும், பீமன் அர்ச்சுனன் இவ்விருவரும் கிருஷ்ண
பரமாத்மாவுடன் கள்ளத்தனமாக இரவில் நகர்புகுந்து ஜரா
சந்தனைக் கொல்லச் சென்றதுபோலவும் என்பதே. இராஜ்
யம் இழந்தும், மனைவி யிழந்தும், புத்திரன் இழந்தும்,
தான் அடிமையாகி இருந்த காலத்திலும் பொய்யுரையாமல்
சத்தியமொன்றையே பெரிதாகக் கருதின அரிச்சந்திரனைப்
போன்ற மன வன்மையையுடையவர் மகாத்மா. இராஜ்யத்
திற் காகவேனும், சுதந்தரத்திற் காகவேனும் கொலை, களவு,
பொய்யாடல் முதலியவைகளையும் அனுஷ்டிக்கக் கூடா
தென்பதே மகாத்மாவின் கொள்கை. லோகமான்யர் சத்துவ
இராஜஸத் தன்மையுள்ளவர்; மகாத்மாவோ சுத்த சத்துவத்
தன்மையுள்ளவர். லோகமான்யரோ சாதாரண மனிதனைப்
போலவே பார்வைக்குத் தோன்றுவர்; மகாத்மாவோ
யோகியைப்போலவே தோன்றுவர். ஆகாரம், நியமம்
நடையுடை பாவனை முதலிய சகலமும் சந்நியாஸிக் கிருப்
பது போலவே மகாத்மாவுக்கு இருக்கும்; லோகமான்ய
ருக்கோ வேண்டுங் காலத்தில் சகல போகங்களையும் அனு
பவிப்பர். வேண்டாத காலத்தில் எல்லாவற்றையும் விலக்கு
பவர். ஆமையானது தன்னுடைய அவயவங்களை வேண்
டும்போது வெளிக்கு நீட்டிக் கொள்வதும் வேண்டாத
போது உள்ளுக்கு இழுத்துக் கொள்வதுபோலவும் லோக
மான்யர் வெளிப் பிரபஞ்சத்தினிடை யிருந்தார். லோக
மான்யரின் முறை எல்லோரும் கையாளக் கூடியதாகவே
யிருக்கும்; மகாத்மாவின் முறையோ எல்லாராலும்
எளிதில் கையாளக் கூடியதாக யிராது. லோகமான்
யரின் இயக்கம் ஆன்மசக்தி மிருகசக்தி இவ் விரண்டினை
யும் பற்றியதாகவே யிருக்கும்; மகாத்மாவின் இயக்கமோ
ஆன்மசக்தி யொன்றையே பற்றியதாக விருக்கும். லோக
மான்யர் வைதிக தர்மங்களாகிய சிராத்தம், பிதுர்தர்ப்



பணம், அக்கினிஹோத்திரம், சந்தியா வந்தனம், பிராயச்
சித்தம் முதலியவைகளில் நம்பிக்கை யுள்ளவர்; மகாத்மா
வுக்கோ அவையாவற்றிலும் நம்பிக்கையற்றவர். நம்பிக்கை
யுள்ளவரிடம் வெறுப்பேனும் அவர்கள் செய்வது நியாய
மல்லவென்றேனும் கூறார். லோகமான்யருக்குப் பூர்வ
மிருந்த அரசாங்க அமைப்பிலும் அதின் முறைகளிலும்
நம்பிக்கை யுண்டு. அரசாங்கம் இன்றி யமையாத தென்
பதே அவருடைய கொள்கை; மகாத்மாவுக்கோ அப்படி
யல்ல. அரசாங்கமெல்லாம் தீமை வடிவமென்பதேயாம்.

# 15. மஹா நிர்வாணம்

'ஜனங்கள் தூஷிக்கட்டும் அல்லது ஸ்தோத்திரம் செய்யட்டும்; இலட்சுமி (தனம்) உண்டாகட்டும் அல்லது போகட்டும்; இன்றைக்கு மரணம் வந்தாலும் அல்லது யுகாந்தரத்தில் வந்தாலும் வரட்டும். தீரர்கள் மட்டும் நியாயமான மார்க்கத்தை விடமாட்டார்கள்.' லோகமான்யர் அமிர்தசரஸ் காங்கிரஸ் தீர்மானத்தை நிறைவேற்றிச் சட்ட சபைகளின் புதிய தேர்தல்களுக்கு காங்கிரஸ் கட்சியினர்களே போகவேண்டிய விஷயமாகப் பல ஏற்பாடுகளைச் செய்யவும் பல காங்கிரஸ் தலைவர்களைக் காணவும் பம்பாய்க்குச் சென்றார். 1920-ம் வருடம் ஜுலை மாதத்தில் ஸ்ரீ திலகர் அடிக்கடி பம்பாய்க்குப் போவதும் வருவதுமாகவே யிருந்தார். ஜுலைமாதம் 23-ந் தேதி அவருடைய பிறந்த நாள் உற்சவத்தைப் பிரபலமாகவே பல இடங்களில் கொண்டாடப்பட்டு அவருக்கு வாழ்த்துப் பத்திரங்களும் அனுப்பப்பட்டன. ஒரு நாள் மாலை ஸ்ரீ திலகர் மோட்டாரில் ஏறிக்கொண்டு பம்பாய்க் கடலோரமாகச் சற்று சவாரி செய்து வந்தார். தம் ஜாகைக்கு வந்ததும் சற்று குளிர் உண்டாயிற்று. இது 23-ந் தேதி யன்று சம்பவித்தது. இரவு திடீரென்று குளிர் அதிகப்பட்டு சுரமுண்டாயிற்று. ஜுலைமாதம் 26-ந் தேதி திங்கட்கிழமை முதல் சுரம் வரவர அதிகப்படுவதும் குறைவதுமாகவே யிருந்து வந்தது. பிறகு அச்சுரம் சீதளமுண்டாக்கி நுரை யீரலைக் கெடுத்தது. செவ்வாயன்று அவருடைய தேகஸ்திதியைப் பற்றிய கவலை அதிகமாகவே யிருந்தது. மித்திரர்களும் பந்துக்களும் வந்து குழுமினர். புனாவிலிருந்து வந்த தம் குமாரனைப் பார்த்து, 'இந்த இரண்டுநாள் சுரத்திற்காகவா நீ எல்



லோரையும் அழைத்துக்கொண்டு அலங்கோலமாகப் புறப்பட்டு வந்தாய்' என்று ஸ்ரீ திலகர் வினவினார். அப்பொழுதும் அவர் தமக்கு முடிவுகாலம் சமீபித்ததைச் சற்றேனும் எண்ணவில்லை. 'நான் இன்னும் 5 வருடகாலம் சாகமாட்டேன்; நீங்கள் பயப்படாதீர்கள்' என்று சொல்லிக்கொண்டே வந்தார். கடைசியாக அவருக்கு மூளை சுரம் உண்டாயிற்று. புதன்கிழமை மீண்டும் அதிக சுரம் வந்து ஜன்னி கண்டது. பேச்சு நின்று ஸ்மரணையில்லாமற் போயிற்று. வயிற்றுச் சிக்கல் உண்டாயிற்று. பிரபல வைத்தியர்கள் அவருக்கு சிகிச்சை செய்த வண்ணமாகவே யிருந்தனர். வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு அவருக்கு ஆபத்தான நிலைமை ஏற்பட்டது. ஆனால் வைத்தியர்கள் அந்த ஆபத்து நிலைமையினின்றும் அவரைக் காப்பாற்றினார். வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் அவர் ஸ்மரணையற்ற நிலைமையிலேயே யிருந்தார். சனிக்கிழமை இரவு 10-30 மணிக்கு திடீரென்று அவர் கண் விழித்துக்கொண்டார். சுவாஸம் பலமாக வந்துகொண்டிருந்தது. ஒவ்வொரு நிமிஷமும் பெருங் கவலையாகவே யிருந்தது. பேச்சு நின்றுவிட்டது. ஆனால் அவருடைய நண்பர்கள் அவருக்கு உயிருக்குயிராயிருக்கும் பகவத்கீதையைக் கொண்டு வந்து வாசித்தனர். அவர் ஸ்மரணையோடிருக்கையில் பகவத்கீதையில் பகவான் கூறின,

யதா யதா ஹி தர்மஸ்ய க்லானிர் பவதி பாரத |
அப்யுத்தானம தர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம்யஹம் ||
பரித்ராணாய ஸாதூனாம் விநாசாய ச துஷ்க்ருதாம் |
தர்மஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே. ||

[அத். 4. ஸ்லோ 7-8.]

ஹே அர்ச்சுனா! எந்தெந்த காலத்தில் தர்மஹானி யுண்டாகுமோ அதர்மம் விருத்தியாகுமோ அந்தந்த காலங்களில்

பரமாத்மாவாகிய நான் தேகோற்பத்தி கொண்டு அவதரிப்பேன். தவிர, சாது சனங்களை இரட்சிக்கும் பொருட்டும் துஷ்டர்களை சிட்சிக்கும் பொருட்டும் (அழிக்கும் பொருட்டும்) தர்மத்தை இனிது நிலை நிறுத்தற்பொருட்டும் பரமேஸ்வரனாகிய நான் யுகந்தோறும் அவதரிப்பேன்.

இவ்விரண்டு ஸ்லோகங்களையும் தட்டுத் தடுமாறிக் கொண்டே லோகமான்யர் கூறினார். அடிக்கடி கல்கத்தா விசேஷ காங்கிரஸ் கூடப்போவதைப் பற்றிக் கூறுவார். 'ஸ்பெஷல் வண்டி ஏற்பாடாயிற்றா' — 'ஸ்ரீ படேலுக்குத் தந்தி கொடுத்தாயிற்றா' என்று அடிக்கடி கூறிவந்தார். ஸ்மரணையிலிருந்த காலங்களில் பஞ்சாப் சம்பவத்தைப்பற்றிக் கண்ணீர் சொரிந்த வண்ணம் கூறிவந்தார். ஒரு நாள் திடீரென்று 'ஐயோ பத்திராதிபருக்கு 500 ரூபாய் சம்பளமாம்—தவிர மோட்டார் வண்டிச் செலவு கூடவாம். அந்தோ, இந்த பிரபுத்துவமுள்ளவர்கள் நாட்டிற்கு என்ன ஊழியஞ் செய்ய முடியும்? என்று கூறினாராம். மற்றும் ஒரு சமயத்தில் 1818—1918—100 வருடம்—ஆகா! என்ன அடிமை வாழ்க்கை என்று கூறினாராம். ஜூலை மாதம் 29-ந் தேதி பகல் 1-மணிக்கு 'ஸ்வராஜ்யம் வந்தாலன்றி இந்தியா சிறப்புறாது; நாம் வாழ்வதற்கே ஸ்வராஜ்யம் வேண்டும்' என்று அவர் கூறினாராம். பிறகு பேச்சு நின்றுபோயிற்று. கடைசியாக சனிக்கிழமை இரவு 10-30-மணிக்கு சுவாஸம் வாங்க ஆரம்பித்தது. வரவர சுவாஸம் பலமாக வந்து 12-50-க்கு லோகமான்யர் இம்மண்ணுலகை விட்டு விண்ணுலகேறினார். 1920-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 1-ந் தேதி ஞாயிற்றுக் கிழமை விடியற் காலை, சற்றேறக்குறைய 1-மணிக்குப் பரம சாத்விக தியாகியும், பகவத்கீதா வியாக்கியான கர்த்தாவும், சிறந்த கர்மயோகியும், தீவிர இராஜ தந்திரியும், உத்தம தேசாபிமானியும், மஹா பண்டிதருமான லோகமான்ய பால



கங்காதர ஸ்ரீ திலகர் இக்கர்ம தேகத்தை யொழித்து ஞான தேகங்கொள்ள பரமபதம் அடைந்தார்.

ஸ்ரீ லோகமான்யரின் ஸ்திதியைப்பற்றி பம்பாய் நகரவாசிகள் இரவு 9-மணி வரை அடிக்கடி விசாரித்துக் கொண்டேயிருந்தனர். தொழிலாளர்கள், கடைக்காரர்கள், வியாபாரிகள், முதலாளிகள் மற்ற பலரும் லோகமான்யரின் தேகஸ்திதியைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டே தங்கள் தங்கள் இல்லஞ் சென்றார்கள். லோகமான்யர் இரவு பரமபத மடைந்த செய்தி விடியற் காலை 2-மணிக்கே காட்டுத்தீப்போல பம்பாய் நகரெங்கும் பரவிற்று. சனங்கள் கால் நடையாகக் கூட்டங் கூட்டமாக வந்து கொண்டேயிருந்தனர். சற்றே மழைத் துளியும் விழுந்து கொண்டேயிருந்தது. ஸ்ரீ லோகமான்யர் தாம் வழக்கமாகப் பம்பாயில் இறங்கும் * ஸிர்தார் கிரஹத்திற்குச் சனங்கள் வந்துவிட்டனர். லோகமான்யரின் தேகத்தைக் கடைசியாகப் பார்த்துவிட்டுப் போக எண்ணிறந்த மகாசனங்கள் ஸிர்தார் கிரகத்தின் வாயிலில் வந்து கூடினர். தொழிலாளர்கள் தங்கள் தொழில்களை யெல்லாம் விட்டுவிட்டு வந்தனர். மார்வாடிகள் தங்கள் பணப்பையையும் கணக்குப் புத்தகத்தையும் விட்டுவிட்டு வந்தனர். முகம்மதியர்கள், பாரஸீகர்கள், கிறிஸ்துவர்கள், ஆண் பெண் முதலான பலர் லோகமான்யரைக் கடைசியாகத் தரிசிக்கப் பெருங் கூட்டங் கூடினர். காலை 7, 8 மணிக்கு எள்ளு போட்டாலும் எள்ளு விழாத கூட்டம் கூடிற்று. கடைசியாக லோகமான்யரை அவர் இறந்த அறையினின்றும் நீக்கி வெளி முற்றத்திற்குக் கொண்டுவந்து சனங்கள் கண்ணுக்குப் புலப்படும்படியாக வைத்தனர். லோகமான்யரைத் தகனஞ் செய்ய பகல்

* ஸிர்தார் கிரஹம் என்பது ஒரு ஹோட்டல். அதில் தான் ஸ்ரீ திலகர் வழக்கமாக எப்பொழுதும் இறங்குவது.

1-மணிக்கு வீர்தார் கிரகத்தைவிட்டுப் புறப்படத் தீர்மானித்திருந்தும் முடியவில்லை. கூட்டம் அதிகப்படவே குறித்த காலத்தில் சாத்தியப்படாமல் 2-மணிக்கு லோகமான்யரின் தேகத்தை எடுத்துக் கொண்டு ஊர்வலமாகப் புறப்பட்டனர். ஊர்வலத்தில் சுமார் 2 அல்லது 2½ லட்சம் சனங்கள் கூடச் சென்றனர். லோகமான்யரை ஓர் சிறந்த பல்லக்கில் அமர்த்தினர். மகாத்மா காந்தி, ஷௌகத்அலி, டாக்டர் கிச்சுலு முதலானோர் சுமந்து சென்றனர். ஸ்ரீ திலகர் இறந்தும், அவருடைய சில மித்திரர்களும் பந்துக்களும் லோகமான்யரை ஸ்பெஷல் ரெயிலில் பூனாவுக்குக் கொண்டுபோய்த் தகனஞ் செய்ய வற்புறுத்தினர். ஆனால், பம்பாய் மகாசனங்கள் அதற்குச் சற்றேனும் சம்மதிக்கவில்லை. லோகமான்யரைத் தகனஞ் செய்யும் கடைசி பாக்கியமாகிலும் பம்பாய்க்கு இருக்கவேண்டுமென்று பிடிவாதஞ் செய்தனர். பம்பாய் நகர வாசிகளின் இஷ்டத்திற்கு விரோதமாகப் போகப் பூனாவாசிகள் சம்மதியாமல் இருந்துவிட்டனர். லோகமான்யரின் பிரேதம் செல்லும் வழியெல்லாம் தோரணங்களும், புஷ்ப வர்ஷங்களும் சொல்லமுடியாதபடி அவ்வளவு விமரிசையாக இருந்தன. லோகமான்யரின் தகனத்திற்காக, நல்ல சந்தனக் கட்டைகளைப் பார்ஸி வியாபாரிகள் விசேஷமாகக் கொடுத்தனர். சந்தனக் கட்டைகளை யடுக்கி லோகமான்யரின் தேகத்தைப்படுக்க வைத்துத் தீமூட்டினர். மாலை 6-மணிக்கு சூரியாஸ்தமனமானவுடன் லோகமான்யர் வெந்தணலில் வெந்து பிடி சாம்பலானார். லோகமான்யர் இறந்த வைபவம் இராஜாதி ராஜர்களுக்குக் கூடயிராது. பாரத தேசம் லோகமான்யரின் மரணத்திற்குக் கண்ணீர்விட்டு அழுதது. ஆனால் பம்பாய் கவர்ன்மெண்டும் ஒன்றிரண்டு ஆங்கிலோ இந்திய பத்திரிகைகள் மட்டும் லோகமான்யர் இறந்தும் அ[illegible]து வெறுப்பேகொண்டிருந்தன. பம்



பாய் சட்ட சபையில் திலகர் சின்னாள் அங்கத்தினராக விருந்ததுபற்றி பழைய மெம்பர் என்ற காரணத்தால் சட்ட சபையை அவர் மரணமடைந்ததற்காகச் சிறிதுகாலம் மூட வேண்டுமென்று 17 அங்கத்தினர்கள் சேர்ந்து கவர்னரை வேண்டியும், கவர்னர் இஷ்டப்படாமல் இருந்துவிட்டார். லோகமான்யர் இறந்ததற்குப் பலர் பலவிதமாக அவருடைய ஞாபகச் சின்னத்தை ஏற்படுத்தக் கூறினார்கள். மகாத்மா காந்தியோ அழியாத ஞாபக சின்னத்தை யுண்டாக்கி சாமான்ய சனங்களும் அறியுமாறு, 'ஸ்ரீ திலகர் ஸ்வராஜ்ய நிதி' என்று ஏற்பாடு செய்தார். மகாத்மா காந்தி லோகமான்யரின் பெயரால் 1 கோடி ரூபாய் திரட்டி காங்கிரஸ் மகா சபையைப் பிரகாசிக்கச் செய்தார். லோகமான்யர் இறக்குந் தருவாயில் அவருக்கு மூன்று குமாரத்திகளும் இரண்டு புத்திரர்களுமிருந்தனர். மூன்று குமாரத்திகளுக்கும் விவாகமாகி அவரவர்கள் தங்கள் தங்கள் கணவன்மார்களுடன் செவ்வனே இல்லறம் நடாத்தி வருகின்றனர். லோகமான்யர் மாண்டலே சிறையில் இருக்கையிலேயே அவர் தர்மபத்தினி 1912-ம் வருடம் இறந்தார். 1903-ம் வருடம் லோகமான்யரின் மூத்தபிள்ளை விஸ்வநாத் என்பவர் அகாலமரண மடைந்தார். அவர் இறந்த விஷயமாக ஸ்ரீ திலகர் மிக்க வருத்தப்பட்டாரேனும், பொதுக் காரியங்களை மகன் மரணத்திற்காக விட்டுவிடவில்லை. மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கம் ஏற்பட்டதும் பள்ளி பகிஷ்காரத்தை முன்னிட்டு லோகமான்யரின் புத்திரர்களிருவரும் கலாசாலைகளை விட்டுவிட்டனர். இப்பொழுதுள்ள மூத்த குமாரன் இராமசந்திராவும் இளைய குமாரன் ஸ்ரீதராவும் கேஸரி பத்திரிகை மராட்டா பத்திரிகைகளை நடத்திக் கொண்டு வருகின்றனர்.

லோகமான்யர் இறந்த செய்தியைக் கேட்ட பத்திரி

காசிரியர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பத்திரிகைகளில் ஸ்ரீ திலகரின் பெருமையைப்பற்றிப் புகழ்ந்து எழுதினர். இந்தியாவிலுள்ள சகலபத்திரிகைகளும் வெகு சிறப்பாகவே எழுதின. ஆனால் கல்கத்தாவிலுள்ள 'ஸ்டேட்ஸ்மன்' பத்திரிகையும், பம்பாயிலுள்ள 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகையும் லோகமான்யரைத் தூஷித்து பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஜன்மவிரோதி மாண்டார் என்று ஒவ்வொருவருடைய மனதும் புண்படும்படி அவ்விருபத்திரிகைகள் எழுதின. ஸ்டேட்ஸ்மன் பத்திரிகை எழுதின வியாசத்தைக்கண்டு வங்காளிகள் மனந்தாளாமல் பெரிய கிளர்ச்சியொன்றைச் செய்து அப்பத்திரிகையைப் பகிஷ்காரஞ் செய்தார்கள். பத்திரிகாசிரியரும் மன்னிப்பு கேட்டுக்கொண்டார். என்றாலும் ஜனங்கள் அப்பத்திரிகையை நாடெங்கும் பகிஷ்கரித்ததினால் அதற்குப் பெருத்த நஷ்டமுமுண்டாயிற்று. தவிர, தார்வார் முனிஸிபாலிடியார் லோகமான்யரின் மரணத்தைக்கேட்டதும் அவர்களுடைய ஆதீனத்திலிருந்த பள்ளிக்கூடங்களை மூடினார்கள். அதைக்காணச் சகியாத கலெக்டர் முனிஸிபாலிடி அக்கிராசனரைக் கண்டித்து 'பெயர்போன ஒரு குற்றவாளியின் மரணத்திற்காகப்பள்ளிக்கூடங்களை மூடினது' பெருங்குற்றம் என எழுதினார். முனிஸிபல் அக்கிராசனரும் கௌன்ஸிலர்களும் சேர்ந்து கலெக்டரின் வார்த்தையைக்கண்டித்து அவ்வார்த்தைகளை வாபீஸ் வாங்கிக்கொள்ளும்படி வற்புறுத்தினார்கள். இது விஷயமாய்ப் பெருங்கிளர்ச்சி ஏற்பட்டதைக்கண்ட கலெக்டர் உடனே மன்னிப்பு கேட்டுக்கொண்டார். பிறகு, லோகமான்யரைப்பற்றி பல பிரபல தனவான்களும், அவர் இருந்த காலத்தில் சதா அவரைத் தூஷித்துவந்தவர்களுமான அநேகர் ஸ்ரீ திலகரின் தேசாபிமானத்தைக் கொண்டாடினார்கள். கனம் பரஞ்சபே, சந்தாவர்க்கார், சிந்றைவிஸ்



பெஸண்டு, விட்ல்வாட் முதலானோரும் ரவீந்தரநாத தாகூர், ஆண்ட்ரூஸ், லாலாஜபதிராய், மாளவியா, பால்ரிச்சர்ட் முதலானோரும் பல ஆங்கில நண்பர்களும் முறையே பல கடிதங்கள் எழுதினார்கள். லோகமான்யருடைய உருவச் சிலை புனாவில் வைக்கப்பட்டுள்ளது. பல ஊர்களில் அவருடைய பெயரால் வாசகசாலைகள், பள்ளிக்கூடங்கள், சமாஜங்கள் பல ஸ்தாபிக்கப்பட்டன. லோகமான்யர் இறந்தும் அவர் நம்மிடையே பிரகாசித்து சூட்சும சரீரியாய் விளங்குகிறார். லோகமான்யருடைய பெயர் பாரதநாடு உள்ளளவும் அழியாமலிருக்கும்.

## 16. குறிப்புகள்.

1. 1896-ம் வருடத்தில் நான் (மகாத்மா காந்தி) தட்சிண ஆப்பிரிக்கா விஷயமாக இந்தியாவுக்கு வந்து புனாவில் ஸ்ரீ திலகரை முதல் முதல் கண்டேன். எனக்கு இயற்கையாயிருந்த கூச்சத்தையும் பயத்தையும் அவர் நீக்கினார்.

2. 1918-ம் வருடத்தில் டில்லி மாநகரில் மாண்டேகு வைக்காண ஸ்ரீ திலகர் போயிருந்தார். சாமானியஜனங்கள் 'ஆஜ் புனாகா ராஜா ஆனே வாலாஹை' ஸர்க்கார் ஹாஸிலி பஹுத்தர்த்திஹை: இன்று புனாராஜா வருகிறார்; சர்க்கார் அவரைக்கண்டு மிகவும் பயப்படுகின்றனர் என்று கூறினார்கள்.

3. திலகரை ஒரு நண்பர் பின்வருமாறு கேட்டார். ஐயா! பலவந்தால்! ஸ்வராஜ்யம் வந்தால் நீங்கள் எந்த உத்தியோகம் எடுத்துக்கொள்வீர்கள். நீங்கள் முதன் மந்திரியாக வருவீர்களா அல்லது அயல்நாட்டு விஷயங்களைக்கவனிக்கும் முக்கிய மந்திரியாவீர்களா? ஸ்ரீ திலகர் சிரித்து, ஐயா! அப்படியல்ல, ஸ்வராஜ்யத்தில் சுதேசி கலாசாலை யொன்றில் கணித ஆசிரியராக அமர்ந்து இராஜீய வாழ்க்கையை விட்டு விடுவேன், என்றார்.

4. புனாவில் முதல் முதல் ஸ்ரீ திலகர் முதலானோர் ஆங்கில கல்விச்சாலையை ஸ்தாபித்ததும் மந்தபுத்தியுள்ள பிள்ளைகளும் குறும்புத்தனமுள்ள பிள்ளைகளுமே படித்தனர். ஸ்ரீ திலகருடன் போதித்து வந்த ஆசாரியர் ஒருவர் அப்பிள்ளைகளின் மந்தபுத்தியைக்கண்டு வெறுப்பு அடைந்தார். அப்பொழுது ஸ்ரீ திலகர் வெகு நிதானத்துடன் 'நம்முடைய சாமர்த்தியம் இதில் தானுள்ளது. அவர்களைப்புத்திசாலித்தனமாக்குவதே நமது பரீட்சை என்றார்.



5. ஸ்ரீ திலகர் முதல் முதல் அப்பள்ளிக்கூடத்திலிருந்து மாதம் ரூ. 30 சம்பளம் பெற்றுவந்ததைக்கண்ட ஒருவர், ஐயா! இதில் எவ்வளவு ஜீவிக்கமுடியும்? தகனச்சடங்குக்கூட மிச்சம் இராமலிருக்குமே என்றார். ஸ்ரீ திலகர் அக்கவலை எனக்கேன்? நமது சமூகத்தின் கவலை அது; நாங்கள் இறந்தால் எங்களைத் தகனஞ்செய்யும் கவலை சமூகத்தைச் சேர்ந்தது. பிணத்தை வைத்திருக்க அவர்கள் சம்மதிக்கமாட்டார்கள்.

---

| | | | |
|---|---|---|---|
| 1820வரு | ஆகஸ்டு மீ | | ஸ்ரீ திலகரின் பிதா பிறந்தார். |
| 1856 ,, | ஜூலை ,, | 23வ | ஸ்ரீ திலகர் பிறந்தார். |
| 1866 ,, | மார்ச்சு ,, | | ஸ்ரீ திலகரின் தாய் இறந்தார் |
| 1871 ,, | மே ,, | | ஸ்ரீ திலகரின் விவாகம் |
| 1872 ,, | ஜனவரி ,, | | பிரவேசப் பரிட்சையில் தேறினார். |
| 1872 ,, | ,, | | ஸ்ரீ திலகரின் பிதா இறந்தார். |
| 1876 ,, | ஜனவரி ,, | | பி. ஏ. பட்டம் பெற்றார். |
| 1878 ,, | | | ஜன ஊழியஞ் செய்ய முன்வந்தார். |
| 1879 ,, | | | சட்டப்பரீட்சையில் தேறினார். |
| 1880 ,, | | | ஸ்ரீ திலகர் புதிய பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்தார். |
| 1882 ,, | ஜூலை மீ | 16வ | ஸ்ரீ திலகரின் முதல் தண்டனை. |
| ,, | அக்டோபர் | 26 | ,, விடுதலை |
| 1884 ,, | ,, | 24 | தட்சிண வித்யாசங்கத்தை ஸ்தாபித்தார். |
| 1887 ,, | அக்டோபர் | 22 | கேஸரிபத்திரிகை ஆசிரியரானார் |
| 1889 ,, | | | பாரத ஜனசபை பிரவேசம். |

| | | | |
|---|---|---|---|
| 1890 வரு | | | தட்சிண சங்கத்தினின்றும் நீங்கினார். |
| ,, ,, | நவம்பர் | | ஸ்ரீ திலகரின் ஆசார சீர்திருத்த கிடக்கனையை ஆலோசிக்கப் பொதுக்கூட்டம். |
| 1891 ,, | மார்ச்சுமீ | 2உ | டைம்ஸ் பத்திரிகைமீது பிராது செய்தார். |
| 1891 ,, | செப்டம்பர் | 3 | மராடா பத்திரிகை ஆசிரியரானார். |
| 1892 ,, | | | தேயிலைப்பான விஷயம். |
| 1893 ,, | | | முதற்புத்தகம் (மிருகசிருடம்) பிரசுரஞ்செய்தார். |
| 1894 ,, | ஜனவரி | | சர்வகலாசங்கத்தில் அங்கத்தினரானார். |
| 1895 ,, | மே | | முனிசிபாலிடி மெம்பர். |
| 1895 ,, | ஆகஸ்டுமீ | 7உ | சட்டசபை மெம்பரானார். |
| 1896 ,, | | | பஞ்சநிவாரணவேலை. |
| 1897 ,, | ஆகஸ்டு | | முனிசிபாலிடி இராஜீநாமா. |
| 1897 ,, | ஜூலைமீ | 27உ | இராஜ நிந்தனைக்காக கைதியானார். |
| 1897 ,, | ஆகஸ்டுமீ | 4உ | ஜாமீனில் விடப்பட்டார். |
| 1897 ,, | செப்டம்பர் | 14 | இரண்டாவது தண்டனை (18 மாதம் கடினகாவல்) |
| 1898 ,, | ,, | 6 | விடுதலை. |
| ,, | | | இரண்டாவது புத்தகம் எழுதியது. |
| 1902 ,, | ஏப்ரல்மீ | 4உ | தாய் மகாராஜா உயில் சாஸன விஷயமாக ஸ்ரீ திலகர் குற்றஞ் சாட்டப்பட்டார். |



| | | | |
|---|---|---|---|
| 1902 வரு | செப்டம்பர் | 15 | விசாரணை. |
| 1903 ,, | | | வேதங்களிலுள்ள ஆரியர்களின் துருவவாசம் பிரசுரமானது. |
| 1903 ,, | ஆகஸ்டு | 24 | ஸ்ரீ திலகரின் தண்டனை. (18 மாத காவல் 1000 - ரூ. அபராதம்) |
| 1904 ,, | ஜனவரிமீ | 8உ | விடுதலை. |
| 1905 ,, | | | தீவிரகட்சியினர் அமைப்பு. |
| 1906 ,, | ஜூலை | 31 | ஆப்பீலில் சாதகம். |
| 1907 ,, | டிசம்பர் | 28 | ஸ்ரீ திலகர் சூரத்பிளவை நிவர்த்திக்க எழுதின சமாதான கடிதம். |
| 1908 ,, | ஜூன் | 24 | நான்காவதுமுறை சிறைபட்டார். |
| 1908 ,, | ஜூலை | 22 | 6 வருட தீவாந்தர சிட்சை. |
| ,, | செப்டம்பர் | 13 | மாண்டலே சிறைமாற்றம். |
| 1910–11 | | | மாண்டலே சிறையில் கீதாரகஸ்யம் எழுதினார். |
| 1912 ,, | ஜூன்மீ | 6உ | ஸ்ரீ திலகரின் மனைவி இறந்தார். |
| 1914 ,, | ஜூன் | 16 | விடுதலை. |
| 1914 ,, | | | ஐரோப்பா யுத்தத்திற்கு உதவி செய்ய முன் வந்தது. |
| 1916 ,, | | | சுய ஆட்சி சங்கஸ்தாபனம். |
| 1916 ,, | ஜூலை | 23 | ஜன்ம தினம். |
| 1916 ,, | ஜூலை | | ஸ்ரீ திலகர் ஜாமீன் கேட்கப்பட்டார். |
| 1916 ,, | டிசம்பர் | | காங்கிரஸ் புனர் பிரவேசம். |
| 1918 ,, | | | இந்திய பாதுகாப்புச் சட்டப் பிரயோகம். |

| | | | |
|---|---|---|---|
| 1918 ௵ | | | இங்கிலாந்து யாத்திரை. |
| 1919 ,, | ஜனவரிமீ | 29உ | ஸ்ரீ திலகர் கிரால் விசாரணை. |
| 1919 ,, | ஆகட்டு | 6 | சீர்திருத்தக் கலப்புக் கமிட்டியின் முன்பாகச் சாட்சியம். |
| 1920 ,, | ஜனவரி | 28 | ஸ்ரீ திலகர் காந்தி வாதம். |
| 1920 ,, | ஜூலை | 31 | ஸ்ரீ திலகர் மரணம். |

அல்லது

ஆகஸ்டுமீ 1உ விடியற்காலை 1-மணி

முற்றிற்று

---

11979

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

தவணைத்தாள்.

சே எண் : ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| 4/8/94 | 11/8 | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 259A-6—1,00,000—30-1-84.